இந்தியப் பொருளாதார வளர்ச்சி
விஸ்வநாதன் (பதி)

இந்தியப்
பொருளாதார வளர்ச்சி

(பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்

பேராசிரியர் மு. விஸ்வநாதன், எம்.ஏ.,

முதல்வர்,

அ. வ. அ. கல்லூரி,

மாயூரம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி (க. வெ.) வரிசை எண்—340

இந்தியப் பொருளாதார வளர்ச்சி

(பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்
பேராசிரியர் மு. விஸ்வநாதன், எம்.ஏ.
முதல்வர்,
அ. வ. அ. கல்லூரி,
மாயூரம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition July 1972
T.N.T.B S. (C.P) No. 340

© **Tamil Nadu Text Book Society**

INDIAN ECONOMIC DEVELOPMENT

M. VISWANATHAN

Price Rs. 6-50

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Govern ment of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
M/s. INIYAN PRINTERS,
9, Rundals Road,
MADRAS-7.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினே ராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழி லேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுகு வகுப்பிலும் (P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கென்த் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகை யில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரி யர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெரு மு ற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்குமிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் ல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவர வியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகின்றது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியப் பொருளாதார வளர்ச்சி' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 340 ஆவது வெளியீடாகும். இதுவரை 375 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பக்கம்

1. பொருளாதார வளர்ச்சி ... 1

இந்திய இயற்கைச் செல்வ வளங்கள் — கிராமப் பொருளாதார மாற்றம் — பொருளாதார வளர்ச்சி என்ற கோட்பாடு — (அ) அரசும் பொருளாதார முன்னேற்றமும் — (ஆ) ஐந்தாண்டுத் திட்டங்கள் — வளர்ச்சிக் கோட்பாடுகளும் இந்தியப் பொருளாதாரமும் — பொருளாதார முன்னேற்றத்தில் மக்கள் பங்கு.

2. நாட்டு வருமானம் ... 58

நாட்டு வருமானக் கணக்கெடுப்பும் அதன் பயனும் — நாட்டு வருமானமும் விவசாயமும்.

3. விவசாயம் ... 66

நிலச் சீர்திருத்தம் — விவசாயத்தை இயந்திர மயமாக்கல் — விவசாய உற்பத்தித் திறன் — ஐந்தாண்டுத் திட்டங்களும் விவசாயமும் — சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் — உணவுப் பிரச்சினை — விவசாய விளைபொருள் விலைக் கொள்கை.

4. தொழில் வளர்ச்சி (1) ... 133

இந்தியத் தொழில் வளர்ச்சி — வரலாறு — தொழில் கொள்கை — தொழில் வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் — இரும்பு, எஃகு தொழில் — நிலக்கரித் தொழில் — சிமிண்டுத் தொழில்.

5. தொழில் வளர்ச்சி (2) ... 172

பருத்தி நெசவுத் தொழில் — காகித ஆலைத் தொழில் — சர்க்கரை ஆலைத் தொழில்.

6. தொழில் வளர்ச்சி (3) ... 191

சணல் ஆலைத் தொழில் — தேயிலைத் தொழில்.

பக்கம்

7. தொழில் வளர்ச்சி (4) ... 203

நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் விவசாயம் — தொழில் துறைகளின் கூட்டுப்பங்கு — தொழில் வளர்ச்சி - கட்டுப்பாடு ஆகியவற்றில் அரசின் கொள்கை — தொழில்களைத் தேசிய மயமாக்குதல் — சிக்கல்களும் வளர்ச்சி வாய்ப்புகளும்.

8. சிறுதொழில்களும் குடிசைத் தொழில்களும் ... 229

சிறுதொழில்கள் — குடிசைத் தொழில்கள்.

9. தொழில் நிதியம் ... 247

10. கூட்டுறவு ... 263

கூட்டுறவுக் கடன் — கூட்டுறவு முறையில் உற்பத்தி — கூட்டுறவு முறையில் விற்பனை.

11. போக்குவரத்து வசதிகள் ... 281

இரயில்வே முறை — சாலைப் போக்குவரத்து முறை — கப்பல் போக்கு வரத்து — விமானப் போக்குவரத்து.

12. வணிகம் ... 300

உள்நாட்டு வர்த்தகம் — இந்தியாவின் அயல் நாட்டுச் செலுத்து இருப்புநிலை.

13. மக்கள்தொகை ... 308

இந்தியாவில் மக்கள்தொகை அளவும் வளர்ச்சியும் — மக்கள் தொகைப் பெருக்கமும் பொருளாதார முன்னேற்றமும்.

14. தொழிற் சங்கங்கள் ... 315

15. Bibliography ... 332

16. கலைச்சொற்கள் ... 335

இந்தியப்
பொருளாதார வளர்ச்சி

1. பொருளாதார வளர்ச்சி

(1) இந்திய இயற்கைச்செல்வ வளங்கள்

இன்றைய இந்தியாவின் பொருளாதார நிலை போற்றுதற் குரியதா, தூற்றலுக்குரியதா என்ற ஐயப்பாடு ஒவ்வொரு இந்தியனிடமும் உள்ளது. நாள்தோறும் செய்யப்படுகின்ற குடும்பக் கட்டுப்பாடு அறிவிப்புகள், குடும்பக்கட்டுப்பாடு ஊக்குவிப்பு விழாக்கள், அரசியல் தலைவர்களின் அறிக்கைகள் ஆகியவற்றைப் பார்க்குங்கால் இந்திய மக்கள் தொகை தேவைக்குமேல் மிகுந்து விட்டதோ என்ற அச்சம் கலந்த ஐயம் எழுகின்றது. திட்டங்கள் வெற்றி பெருமைக்கும், உயர்ந்து செல்லும் விலைவாசிக்கும், குறைந்து செல்லும் மக்களின் தரத்திற்கும் காரணம் காட்டப் பொருளியல் நிபுணர்கள் முயலுகையில் அளிப்பிற்கு மேல் தேவை உள்ளதாகவே குறிப்பிடுகின்றனர். அவ்வாறாயின் அளிப்பு உண்மையிலேயே குறைவுதானா? பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் போதுமான இயற்கைச் செல்வங்கள் இல்லையா? ஜப்பான், குவெய்த், மலேஷியா போன்ற சிறிய நாடுகளைவிட நம்முடைய இயற்கை வளம் குறைந்ததுதானா? இதுபோன்ற பல கேள்விகள் பொருளியல் மாணவர்களுக்கு எழுவது நியாயமே. அம்மாணவன் இந்தியாவின் இயற்கைச் செல்வங்களை அறிந்திருத்தல் மிகவும் அவசியமான தொன்றாகும். பாகிஸ்தான் எதேச்சாதிகாரப் போக்கினை ஒடுக்கும் சக்தியினைப் பெற்றுள்ள இந்தியாவின் நிலைகண்டு வல்லரசுகளே அதிர்ச்சியடைந் திருக்கின்றன. ஒருசில பெரும் நாடுகள் ஆசியாவில் தங்களுடைய சக்தி செல்வாக்கு குறைந்து, இந்தியநாட்டின் சக்தி செல்வாக்கு பெருகிவிடுமோ என்று ஐயுற்று, இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னர் துணை நின்றது போய், இன்று தங்களுடைய அச்சத்தைப் போக்கிக் கொள்ள, பொருளாதார உதவியை நிறுத்தி

விடுவது என்று முடிவு செய்துள்ளன. 1971ஆம் ஆண்டில் இந்திய—பாகிஸ்தான் சண்டை இந்திய நாட்டின் வரலாற்றில் சிறப்பான ஆட்டத்தைப் பெற்றுள்ளது. இந்நிலையில்தான் பொருளாதாரத் தன்னிறைவு குறித்துப் பேசப்பட்டு வருகின்றது. அதனைச் செயல் படுத்துவதற்கு நம்மிடம் தகுதி உள்ளதா? செல்வங்கள் உள்ளனவா ?

நில அமைப்பும் பரப்பும்

இந்திய இயற்கை வளத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய முதல் உண்மை, இந்தியப் பகுதிகளின் தீவிரமான இயற்கை வேறுபாடுகளே. வடபாலுள்ள வானளாவும் பனி வரைகள், காலத்தால் முதிர்ந்த பழைய தக்கணமேட்டுச் சமவெளி, சிந்து கங்கை நதிபாயும் பரந்த வண்டற் சமவெளிகள், சோழ மண்டல, மலபார் கடற்கரைகளின் செழிப்பான தாழ்ந்து கிடக்கும் கடலோரத் துண்டு நிலங்களும் ஆற்றுக் கழிமுகங்களும்; இவையனைத்தும் இந்தியாவினுள் அடங்குகின்றன. இயற்கையமைப்பிலும், வெட்பதட்ப நிலையிலுமுள்ள வேறுபாடுகள் மக்கள் தொகைச் செறிவைப் பல்வகைப்பட்டதாக அமைத்துள்ளன. சில இந்திய மாவட்டங்கள் தாராளமான மழையைப் பெறுகின்றன. வேறு சில பகுதிகளில் ஆண்டுக்கு ஒன்றிரண்டு அங்குலத்திற்கு மேல் மழையில்லை. வேறு பல விரிந்த பகுதிகளிலோ மழையானது உறுதியற்றதா யுள்ளது.

இந்தியயூனியன் பரப்பளவு 12,69,640, சதுரமைல்கள். இது 8,200 மைல் நீளமுள்ள நில எல்லையையும், 3,500 மைல் நீளமுள்ள கடல் எல்லையையும் உடையது. நிலப்பரப்பின் அளவில் நோக்கின் உலகில் 7வது பெரியநாடு ஆகவும், இங்கிலாந்தைப் போல் 13 மடங்கும், ஜப்பானைப் போன்று 8 மடங்கும், ரஷ்யாவில் 7-ல் ஒரு பங்கும் அதிகப் பரப்பு உடைய நாடு. உலக நடுக்கோட்டின் வடக்கில் 8° லிருந்து 37° வரை பரந்து கிடக்கின்றது. தீர்க்கரேகைகள் 68° முதல் 97° வரை கிழக்கிலும் உள்ளது. தென்வடலாக இதன் தூரம் 2,000 மைல்கள்; கிழக்கு மேற்காக 1,700 மைல்கள்.

விவசாயத்திற்கான நிலம்

பெய்யும் மழையைப் பொறுத்தும், ஆவியாதலைப் பொறுத்தும் இந்நியாவில் உள்ள விவசாயத்திற்குரிய நிலங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். (1) ஆண்டு முழுமைக்கும் பெய்யும் மழை, அளவுக்கு மீறிப்பெய்து ஆவியாகிவிடாது இருக்கின்ற நிலம். இதன் காரணமாக நிலத்திலுள்ள இரசாயனப் பொருள்களான உப்புச் சத்துக்கள் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டு

கடலில் போய் விழுந்து வீணுகின்றது. நிலவளமும் குன்றி எவ்விதத் தொழிலுக்கும் பயனின்றிப் போய் விடுகின்றது. இப் பகுதிகளாவன: கேரளம், அஸ்ஸாம், மேற்குத்தொடர்ச்சி மலையின் சில பகுதிகள், இமயமலைச்சரிவு, பீகார், வங்காளம் முதலியன. (2) ஆண்டு முழுமையும் பெய்யும் மழை குறைவுபட்டு ஆவியாதல் அளவின்றி நடைபெறும் பகுதி. பெய்யும் மழை குறைவாக இருப்பதால் உடனே ஆவியாகிவிடுகின்றன. அல்லது தரை மட்டத்திலேயே உள்ள உப்புகளைக் கரைத்து மேற்பகுதியை, நல்ல உரமாக்குகின்றது. அப்பகுதிகளில் பலன் ஏதும் ஏற்படுவதில்லை. நீர் உப்புக் கலந்துள்ளதனுல் நிலம் பயிரிடப் பயன்படுவதில்லை. இராஜஸ்தான், குஜராத், உத்திரப்பிரதேசத்தின் சில பகுதிகள் ஆகியன இவ்வாறுள்ளன. (3) வறண்டதும், ஈரப்பசையுள்ளதுமான காலங்கள் மாறிமாறி வரும் நிலப்பிரதேசம், இவ்வாருனவை பஞ்சாப், தென்கிழக்கு உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், மத்திய இந்தியப்பகுதிகள்.

விவசாய உற்பத்தியைப் பரிசீலிக்கும்போது முதன்மையான இந்திய மண் வகைகளின் இயல்பைக் குறிப்பிட்டாக வேண்டும். இந்திய விவசாய அரசாணைக் குழு நான்கு வகைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. (1) வண்டல் மண்: இது குறிப்பாகக் கங்கை சிந்து, காவிரி ஆற்றுமுகங்களிலும், பொதுவாக ஆற்றுப் படுகைகள் அனைத்திலும் இயல்பாயுள்ளது. பொதுவாக தாவரமட்கும் நைட்ரஜனும் பற்றுக்குறையாகயிருப்பினும் இவை அளவிறந்த வளப்பமுற்றுள்ளன. (2) புகழ்பெற்ற தக்காணக் கரும் பருத்திமண். இம் மண்ணுனது குறிப்பாக நீண்ட இழைப் பருத்திச் செடிவளர்ச்சிக்கு மிகவும் உகந்ததது. புகையிலைக்கும் ஏற்றதாக உள்ளது. வறண்ட வானிலையின்போது மண் வெடித்து மழைநீர் உள்ளே நேராக இறங்க அது அனுமதிக்கிறது. ஈரப்பதனுனது இம்முறையில் மாதக்கணக்கில் காப்பாற்றி வைக்கப்படுகிறது. இதனுல் பயிர்களை வளர்ப்பதில் மிகச் சிறு கவனமே தேவை. (3) படிகப்பரப்பைச் சார்ந்த செம்மண். மிதமான வளமுடைய இம் மண் சென்னைப் பகுதியில் முதன்மையாகக் காணப்படுகிறது. (4) மேற்குத் தக்காணத்திலும், அதனையடுத்துள்ள சமவெளிகளிலுமுள்ள சரல் மண். அதிகமான வெப்ப மண்டல மழையால் ஏற்பட்ட மண் சிதைவால் ஏற்பட்டதே இம்மண். இவை வளப்பத்தில் பல வகைப்பட்டுள்ளன.

மொத்த நிலப்பரப்பில் 56.3 மில்லியன் ஏக்கர் பரப்பிற்கு தரிசு நிலமும், 47.1 மில்லியன் ஏக்கர் அளவிற்கு விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய, ஆனுல் தரிசாக உள்ள நிலமும் அடங்குகின்றன.

இந்நிலப்பரப்பைச் சாகுபடிக்குக் கொண்டுவருவது மிகவும் கடின மான தொன்றும். விவசாயம் செய்தலுக்குரிய, ஆனால் வீணே கிடக்கின்ற நிலப்பரப்பை அணைகள் பலகட்டி, வாய்க்கால்களை அமைப்பதன் மூலம் ஓரளவு மீட்கலாம். ஆனால் அதற்கு வருடங்கள் பல ஆகும். இன்றைய நிலையில் உடனடியாகப் பலன் தரும் திட்டங் களே தேவை. எனவேதான் தீவிர சாகுபடித்திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. விவசாயத்தின் கீழ் உள்ள நிலப்பரப்பினைப் புத்தி சாலித்தனமாக உபயோகிப்பதன் மூலமும், மண் அரிப்புகளைத் தடுப்பதன் மூலமும், பெருகிவரும் மக்கள் தொகையை எதிர் நோக்க இயலும்.

காடுகள் அளிக்கும் செல்வங்கள்

இந்தியக்காடுகள் எல்லாவிதமான கச்சாப் பொருள்களையும் கொடுக்கின்றன. குறிப்பாக மரம், மூங்கில், அரக்கு, பிசின் ஆகியவற்றைக் கூறலாம். நாட்டின் பாதுகாப்பிற்கும் போக்கு வரத்திற்குமான சாதனங்கள் காடுகளிலிருந்தே வருகின்றன. காடுகளில் ஆடு மாடுகள் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. காடுகள் நாட்டின் தட்ப வெப்பநிலையைச் சீராக்கி மழையைக் கொண்டு வருகின்றன. நீர் விநியோகத்தைச் சீர்படுத்தியும், வெள்ளப்போக்கினைத் தடுத்தும், நிலம் பள்ளமாகி வீணாகிப் போவதையும் தடுக்கின்றன. அவை காற்றின் கடுமையைத் தாங்கி உடைத்தும் பயிர்களைக்காப்பாற்றி, மனிதரையும் மிருகங் களையும் காப்பாற்றி வருகின்றன. நிலப்பாதுகாப்பிற்கும், அதனுடைய வளமையை அதிகரிக்கவும், மேடான வெளிகளை அழிந்து போகாவண்ணம் காக்கவும், காற்றினால் தாழ்ந்த சமவெளிப்பிரதேசங்கள் வறண்டு போகாமலும், அழிக்கப் படாமலும் தடுக்க முயல்கின்றன. டல்ஹௌசி பிரபு காலத்திற்கு முன்பு வரை நம் நாட்டில் இருந்த காடுகளை அழித்து வந்தனர். இதன் அவசியத்தை அறிந்த டல்ஹௌசி காடுகள் அழியாது பாதுகாக்கத் திட்டம் வகுத்தார். 1864ஆம் ஆண்டில் தனிப்பட்ட காட்டிலாகா நிறுவப்பட்டது. அன்று முதல் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட காட்டுக் கொள்கையை இந்திய அரசினர் கையாள ஆரம்பித்தனர்.

இந்திய யூனியன் பகுதிக்குள் அமைந்துள்ள காட்டின் பரப்பு சற்றேறக்குறைய 7.33 லட்சம் கிலோமீட்டர்கள் ஆகும். நம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சற்றேறக்குறைய 23 சதவீதம் காட்டுப்பிரதேசமாகும். வெப்பமண்டலத்தில் அமைந்துள்ள நாட்டின் தட்ப வெப்ப நிலையைச் சீராக வைத்திருப்பதற்கு நாட்டின் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காடாக அமைவது

அவசியமே. பிறநாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவான அளவுதான். இந்தியாவில் தலா நபர் காட்டுப்பரப்பு 0.14 ஹெக்டர்களாக உள்ளது. ஆனால் அமெரிக்காவில் இதுவே 1.8 ஹெக்டர்களாகவும், சோவியத்குடியரசில் 3.2 ஹெக்ேர் களாகவும் உள்ளது. நாட்டினுள்ளேயே மாநிலங்களின் காட்டுப் பரப்பு விகிதம் மிகவும் மாறுபாடுடையதாக அமைந்துள்ளது. பெரும்பாலான மாநிலங்களில் காட்டின் பரப்பு மக்களின் தேவையைவிட மிகவும் குறைவாகவே உள்ளது. காட்டுப் பரப்பு போதாமையின் காரணமாக எரிபொருள் பற்றுக்குறை ஏற்பட்டு, வறட்டி உபயோகம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வயல்களுக்குக் கிடைக்க வேண்டிய சாண உரம் வீணாகப்போய் விடுகிறது. ஒரிஸா, மத்திய பிரதேசம், அந்தமான், நிக்கோபார் தீவுகள், திரிபுரா மற்றும் அருணாசல பிரதேசம் ஆகியவைதான் காட்டுப் பகுதியின் தேவை அளவான 33 சதத்தைப் பெற்றுள்ளன எனலாம். பிற மாநிலங்களின் காட்டுப் பகுதி 9.5 சதத்திலிருந்து 27.1 சதம் வரை மாறுபடுகின்றது.

இந்திய அரசு 1952ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் தேதி தன்னுடைய காட்டுக்கொள்கையை விளக்கி அறிவித்தது. அத் தீர்மானமாவது : இந்திய நாடு முழுமையும் அதன் பரப்பில் மூன்றில் ஒரு பங்கைக் காட்டிலாக்கா அமைத்துக் காக்க வேண்டும். நிலப்பகுதிகள் வீணாவதைத் தவிர்க்க 60 சதவிகித நிலப் பரப்பு காடாக இருக்கலாம். குறிப்பாக இமயமலைப் பகுதியிலும், தக்காணத்திலும், மலைச்சாரலில் அழிவைக் குறைக்கும் நோக்கத் துடன் காடுகள் காப்பாற்றப்படவேண்டும். எங்கெல்லாம் சமவெளியில் நில அழிவு எவ்வளவு மோசமாக ஆவதில்லையோ அங்கெல்லாம் 20 சதவீத அளவில் காடுகள் வளர்க்கப்பட வேண்டும். விவசாயத்தின் ஈடுபாட்டையும் மனதிலிருத்தியே இந்த 20 சதவீத அளவைத் தீர்மானம் செய்ய வேண்டும். எங்கெல்லாம் விவசாயம் பலன் தரவில்லையோ, அங்கெல்லாமும் ஆற்றோரங்களிலும் மரங்களை வளர்த்துவிடவேண்டும்.

1952ஆம் ஆண்டின் காட்டுக்கொள்கை, கொள்கை அளவில் நிறைவு தருவதாக அமைந்த போதிலும், நடைமுறையில் பல வேறுபாடுகள் உள்ளன. திட்டக்குழு இந்நாட்டிலுள்ள வெற்றிடங்கள் அனைத்தையும் மேற்பார்வையிட்டுச் சீரிய முறையில் உபயோகப்படுத்துவதற்கான இரண்டு முறைகளைப் பரிந்துரைத் துள்ளனர். அவைகளாவன:

1. ஒவ்வோர் மாநிலத்துக்கும் காடுகள் அமைய வேண்டிய விகிதம் இவ்வளவு என்று முடிவு செய்யு முன்னர், மொத்த நிலப்

பரப்பில் மாநிலத்திற்கேற்ப தேவைகள் எவ்வளவு என்று முடிவு செய்தல் வேண்டும். நிரந்தரமாக விவசாயம் செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டால், அந்த மாநிலத்தில் வேறு பகுதியில் புதிய காட்டை உண்டு பண்ணி, நிலவிவரும் காட்டை அழிக்கலாம்.

(2) களரிடமாகவும் பயனற்றதாகவும் உள்ள நிலப்பரப்பில் புதிய காடுகளை வளர்க்க முயற்சி செய்தல் வேண்டும்.

திட்டக் கமிஷன் எல்லா இராச்சியங்களிலும் உள்ள காட்டிலாக்காக்கள் சீரமைந்த முறையில், மத்தியப் பொறுப்புடன் வேலை செய்யவேண்டும் எனக் கூறுகிறது. காட்டாராய்ச்சி இலாக்கா செய்யும் அரிய பணிகளை மத்திய பொதுமக்கள் தொடர்பு நல்லுறவு அதிகாரி மூலமும், திரைப்பட மூலமும் பொதுமக்களுக்கு விளக்கம் செய்தும், அதன் மூலம் தொழிலுக்கு எவ்வாறு பயனுள்ளதென்றும் விளக்கலாம். செய்தித்தாள் உற்பத்திச் சாலைகளுக்கு வேண்டிய மரக்கூழும், நெசவுக்கு உகந்த நார் போன்றதும், ரேயான் முதலியனவும் உற்பத்தி செய்தல் வேண்டும் என்றும் திட்டக் கமிஷன் வலியுறுத்தியுள்ளது.

திட்டக் குழுவின் பரிந்துரைகளை அரசும் இயன்றவரை நடை முறையில் செய்து வருகின்றது. விவசாய வளர்ச்சியுடன் காட்டு வளர்ச்சியின் அவசியத்தையும் உணர்ந்து, திட்டங்களில் காட்டு வளர்ச்சியும் இடம் பெற்றுள்ளது. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில், ரூபாய் 9.5 கோடிகள் காடு வளர்ச்சிக்காகச் செலவிடப் பட்டது. மாநில அரசுகள் காடுகளை ஏற்படுத்தல், காடுகளில் செய்தித் தொடர்பு, காட்டு நிர்வாகச் சீரமைப்பு, மற்றும் காடு, தோட்டங்கள் அமைத்தல் முதலியனவற்றை மேற்கொண்டன. சீரான முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும், அரசின் கொள்கை முற்றிலும் இத்திட்ட காலத்தில் நிறைவேறவில்லை.

இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மொத்தம் ரூபாய் 19.3 கோடிகள் செலவிடப்பட்டன. இத்திட்டகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாவன:

1. காடுகளை உண்டாக்குதல், பஞ்சையான பகுதிகளை விருத்தி செய்தல், காட்டுப் பரப்பை விரியச் செய்தல்; (2) காட்டுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் திறமையை மேம்படச் செய்தல்; 3) வாணிபம் மற்றும் தொழில்களுக்குத் தேவைப்படும் பொருள் களை உற்பத்தி செய்யும் தோட்டங்கள் அமைத்தல்; (4) வனவிலங்கு களைப் பாதுகாத்தல்; (5) காட்டு ஆராய்ச்சியை தீவிரமாக்குதல்; (6) தேர்ச்சி பெற்றவர்களை அதிக அளவில் காட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல்.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டம், காட்டு வளர்ச்சியில் மேலும் நாட்டம் கொண்டதாக அமைந்தது. இக்காலத்தில் காட்டிலாக்கா கொள்கை, நீண்டகால அளவிற்குப் பயனளிக்கும் வகையில் காட்டுப் பொருள்களை வளர்த்தல் என்ற ரீதியில் அமைந்தது. மரங்கள் வெட்டுவதில் புதிய முறைகள் கையாளப்பட்டன. காட்டுச் செய்தித் தொடர்பு வளர்ச்சியடைந்தது. காட்டுப் பொருள்களைப் பதனிடுவதிலும், பாதுகாப்பதிலும் புதிய முறைகள் அதிக அளவில் பயன்படுத்தப் பட்டன. இவைகளுக்காக இத் திட்ட காலத்தில் ரூ. 47கோடிகள் செலவிடப்பட்டன.

நான்காவது ஐந்தாண்டு திட்டம் காடுகள் குறித்த திட்டங்களுக்காக ரூ. 92.6 கோடிகள் ஒதுக்கியுள்ளது. இத் திட்டத்தில் காடு வளர்ச்சி குறித்த கொள்கைகளாவன : (1) காடுகளின் உற்பத்திச் சக்தியை அதிகரித்தல்; (2) காடுவளர்ச்சியை, காட்டுப் பொருள்களை ஆதாரப்பொருள்களாகக்கொண்ட தொழில்களுடன் இணைத்தல்; (3) காடுகளின் வளர்ச்சி, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு துணைநிற்கும்படிச் செய்தல்.

இன்றளவும் காடுகள் நாட்டு வருமானத்திற்கு அளிக்கும் பங்கு மிகவும் குறைவாக உள்ளது. 1967—68-ல் நாட்டின் மொத்த வருமானத்தில் காடுகளின் பங்கு 1.2 சதம்தான். நிலப்பரப்பில் 23 சதம் காடுகளாக இருந்தும், காடுகளின் பயன் குறைவாக உள்ளது. இந்நிலை மாற வேண்டும்.

கனிப்பொருள்கள்

நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மூலப்பொருள்களாக கனிப் பொருள்கள் அமைந்துள்ளன. நிலக்கரி, இரும்புத்தாது இவையிரண்டின் அளிப்பும் மிகுதியாகக் கிடைக்குமாயின் நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பிறநாட்டைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. நம் நாட்டில் இவ்விரண்டும் தேவையான அளவிற்குக் கிடைக்கின்றன. செம்பு, வெள்ளீயம், ஈயம், துத்தநாகம், கோபால்ட், மோலிப்டினம், டங்ஸ்டன், ஆன்மெனி, கந்தகம், பெட்ரோலியம், பாஸ்பேட், பொட்டாஷ், கிராபைட், ஆஸ்பெஸ்டாஸ் இவைகள் குறைவாக உள்ளன. அலுமினித் தாது, உலோகக் கற்கள் தேய்ப்புப் பொருள்கள், சுண்ணாம்புக்கல் இவைகள் வேண்டிய அளவு உள்ளன.

நாட்டின் விடுதலைக்கு முன்னர் நம் நாட்டில் எடுக்கப்பட்ட மூலத்தாதுக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்தப் படவில்லை. விடுதலைக்குப்

பின்னர் மூலத்தாதுக்களின் இன்றியமையாமையை அரசு உணர்ந்துள்ளது. மேலும் இத் தாதுக்கள் இயற்கையின் அளிப்பு ஆனதால், இவ்வளிப்பினை மேம்படுத்த இயலாது என்பதனையும், கிடைப்பதனை நெடுங்காலத்திற்குச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதனையும் அரசு உணர்ந்துள்ளது. இந்தியக் கனிப்பொருள் தொழிலின் குறை என்னவெனில் இதுகாறும் கனிப்பொருள்கள் முழு அளவில், விஞ்ஞான ரீதியில் தோண்டியெடுக்கப்படவில்லை. மேலும் அவைகள் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப் படவில்லை. வெட்டியெடுக்கப்பட்டவை பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது இந்தியாவின் பிற்கால வளர்ச்சியினைப் பெரிதும் பாதிக்கும் என்று அஞ்சப்படுகின்றது. நம்மிடம் இல்லாத கனிப்பொருள்களின் தேவையை நிறைவு செய்யவும் நாம் போதுமான முயற்சி செய்யவில்லை. கனிப்பொருள்கள் இதுகாறும் கச்சா நிலையிலேயே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளன. இதனால் நமக்குக் குறைவான விலையே கிடைத்து வந்துள்ளது. இனி தேவைக்கு மேல் மிகுந்துள்ள கனிப்பொருள்களை ஏற்றுமதி செய்யும்போது அவைகளைச் சுத்தம் செய்து, பக்குவப்படுத்தி, முடிந்தால் முடிவுற்ற பொருள்களாக (finished products) ஏற்றுமதி செய்வோமேயானால் நல்ல விலையினைப் பெறுவதோடு அந்நியச் செலாவணியும் அதிகமாகக் கிடைக்கும்.

மேற்சொன்ன குறைகளைப் போக்க, ஒரு திடமான கனிப்பொருள் கொள்கை பின்பற்றப்படுதல் வேண்டும். இது குறித்து ஜி. பி. ஜாதர், கே. ஜி. ஜாதர் என்ற பொருளியல் நிபுணர்கள், பின்பற்ற வேண்டிய கொள்கை யாது என்று தெரிவித்துள்ளனர். அவையாவன :

(1) மூலப் பொருள்கள் இருக்கும் இடங்களைத் திட்டம் வகுத்துக் கண்டுபிடிக்கச் செய்யவேண்டிய முயற்சிகள் ; (2) தேர்ந்த அனுபவம் பெற்ற தொழில் வல்லுநர்களைக் கொண்டு சுரங்க வேலை செய்தல்; தனிப்பட்டதும், குறிப்பிட்டதும் ஆன உயர்ந்த உலோகங்களை வெட்டி எடுத்தலைத் தற்காலம் நிறுத்தி வைத்தல்; (3) கந்தகம், டங்ஸ்டன், வெள்ளீயத்தாது, இவைகளின் தேக்கங்கள் எங்குள்ளன என ஆய்வு செய்தல்; (4) குறைந்த தரமுள்ள தாதுப்பொருள்கள் எவ்வளவு என்று ஆய்ந்து அவைகளைச் சுத்தமாக்கித் தொழிலுக்கு ஏற்ப அமைக்க ஏற்பாடுகள் செய்தல்; (5) ஏற்றுமதிக்குத் தகுதியான பொருள்களைச் செய்வினை முடிந்த பண்டங்கள் என்றும், முடியாத பண்டங்கள் என்றும் பகுத்து விடுதல்; (6) இந்நாட்டிலும் இதரநாடுகளிலும் உள்ள சுரங்கத் தொழிலினைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து, சுரங்கத்

தொழிலுக்கான திட்டங்களைத் தயாரித்தல் முதலியன. இவை தவிர அரசாங்கமே முழு அளவில் கனிப்பொருள்களை வர்த்தகம் செய்தலும், கனிப்பொருள்கள் ஆராய்ச்சியினை மேற்கொள்ளுதலும், மேலும் சுரங்கங்களை குத்தகைக்கு விடுவதில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தலும் தேவையாகும்.

நம் நாட்டில் கிடைக்கக் கூடிய கனிப்பொருள்களின் அளவுகளை முறையாகவும் விரிவாகவும் ஆய்வதற்கென, இந்திய அரசாங்கம் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 2.5 கோடி ஒதுக்கியது. மேற்கொண்ட விரிவான ஆராய்ச்சிகளின் விளைவாகக் கனிப் பொருள்கள்கள் வெட்டி யெடுப்பதில் பொதுவான முன்னேற்றம் காணப்பட்டது.

நாட்டின் தீவிர தொழில் வளர்ச்சித் திட்டங்களை மனதிற் கொண்டு, இரண்டாவது ஐந்தாண்டு காலத்தில் திட்டக்குழு, கனிப்பொருள்களை வெளிக்கொண்டு வருவதில் தீவிர கவனம் செலுத்தியது. எல்லையை நிர்ணயம் செய்தல், பொருளாதார ரீதியில் பயனுடையதா என்பதைத் தீர்மானித்தல், புதிய முக்கிய கனிப் பொருள்களின் கிடைப்பு அளவினை நிர்ணயம் செய்தல் முதலியனவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. இத்திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டு காலத்தில் தொடர்ந்து பின்பற்றப்பட்டன.

இந்திய நிலவள ஆராய்ச்சிக்குழுவினராலும் (Geological Survey of India), சுரங்க போர்டினராலும், தேசிய உலோக ஆய்வுக்கூட ஆராய்ச்சியாளர்களாலும் (National Metellurgical Laboratory), மத்திய கண்ணாடி பீங்கான் ஆராய்ச்சிக் கூடம், எரி பொருள் ஆராய்ச்சிக்கூடம் (Central glass and ceramic Research Institute & Fuel Research Institute) இவைகளாலும் அவ்வப்போது ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்திய அரசு, இரும்பு அல்லது உலோகத் தாதுக்களில் தன்னிறைவு பெறுவதில் முழு கவனம் செலுத்தி வருகிறது. அமெரிக்க, ருஷ்ய அரசுகளின் ஒத்துழைப்புடன் வானிலிருந்து ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. இமாலயப் பகுதியில் கிடைக்கக் கூடிய கனிப்பொருள்களை வெளிக் கொணருவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. 1958ஆம் ஆண்டு தேசிய கனிப்பொருள் வளர்ச்சிக் கூட்டமைப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனம் (The National Mineral Development Corporation Ltd.) அமைக்கப்பட்டு, எண்ணெய், இயற்கைவாயு மற்றும் நிலக்கரி ஆகியவற்றை வெளிக் கொணருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கென ஆண்டிற்கு 20 லட்சம் டன் அளவிற்கு இரும்புத் தாதுவினை அளிக்கும் கிரிபுரு சுரங்கங்கள் இக்

கூட்டமைப்பினுல் தோண்டப்பட்டுள்ளன. இதே நிறுவனம் பைலாதிலா என்னுமிடத்தில் ஆண்டிற்கு 40 லட்சம் டன்கள் கொடுக்கக்கூடிய சுரங்கங்களையும் வெட்டியுள்ளது. வரும் ஐந்தாண்டுத் திட்டங்களில் கனிவளர்ச்சி மேலும் கவனம் பெறும் என்று நம்பப்படுகிறது.

இனி நம் நாட்டில் கிடைக்கின்ற சில முக்கியமான தாதுக்களைப்பற்றிய விவரங்களைக் காண்போம்.

நிலக்கரி

இந்தியாவில் உற்பத்தியாகும் நிலக்கரியில் 82 சதவீதம் பீகாரிலும் மேற்கு வங்காளத்திலும் வெட்டியெடுக்கப்படுகின்றது. இவை தவிர, மத்தியபிரதேசத்திலும், ஒரிசா, ஆந்திரா, அஸ்ஸாம், நெய்வேலி–தமிழ்நாடு ஆகிய பகுதிகளிலும் நிலக்கரி கிடைக்கிறது. நாட்டில் கிடைக்கக்கூடிய நிலக்கரியின் அளவு 10,475 கோடி டன்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. காமன்வெல்த் கூட்டமைப்பில் நிலக்கரி உற்பத்தி செய்யும் நாடுகளின் வரிசையில், இந்தியா இரண்டாவது பெரிய நாடாகவும், உலகில் 9 ஆவது பெரிய நாடாகவும் உள்ளது. ஆயினும் கிடைக்கும் அளவு போதுமானதாக இல்லை. மேலும் அவைகளின் இடச்செறிவு தகுந்ததாக இல்லை. நிலக்கரியின் தன்மையும் திருப்திகரமாக இல்லை. நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஆங்காங்கு பல்வேறு மாநிலங்களிலும் நிலக்கரி கிட்டுமாயின் அது நலம் பயக்கும். ஆனுல் அந்நிலை இல்லை. எனவே உற்பத்தியுடன், நிலக்கரியினை எடுத்துச் செல்லும் போக்குவரத்துப் பிரச்சினையும் சேர்ந்துள்ளது. நிலக்கரியும் லிக்னைட்டும் கனிவாய்ப் பொருளில் அதிக நாட்டு வருமானத்தைச் கொடுப்பனவாக உள்ளன. 1967ஆம் ஆண்டில் மட்டும் நாட்டு வருமானத்தில் இவைகளின் பங்கு ரூ. 250.6 கோடிகளாகும். அதாவது கனிவள உற்பத்தியின், ஆண்டு உற்பத்தியின் 75 சதவீதம் இத்தாதுவின் மூலமே கிட்டியுள்ளது. 1968-69ஆம் ஆண்டில் லிக்னைட் நீங்கலாக நிலக்கரி உற்பத்தி 71.5 மில்லியன் டன்களாகும்.

'நிலக்கரிச் சுரங்கப்பாதுகாப்பும் தொழிலாளர் நலமும்' என்ற 1952ஆம் ஆண்டின் சட்டப்படி சேம முறைகளைக் கையாள வேண்டும். அதற்காக வரிதண்டுதலும் (Cess) கல்கரியாக மாற்றும் நிலக்கரியின் மீது வரிதண்டுதலும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. நிலக்கரி போர்டு ஒன்று நிறுவப்பட்டு அதன் மூலம் தீர்வை வசூலிக்கப்படுகின்றது.

1973-74ஆம் ஆண்டில், அதாவது நான்காம் ஐந்தாண்டு திட்ட முடிவில் நிலக்கரியின் மொத்தத்தேவை 93.5 மில்லியன் டன்களாக இருக்கும் என்றும், அவற்றில் 25.4 மில்லியன் டன்கள் கல்கரி யாகவும், 68.1 மில்லியன் டன்கள் பதப்படுத்தப்படாத கரியாகவும் இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய கல்கரி உற்பத்தி 17 மில்லியன் டன்கள்தான். எனவே நான்காம் திட்டம் கல்கரி உற்பத்திக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. பதனிடப்படாத கரியின் தற்போதைய மொத்த அளிப்பு 65.2 மில்லியன் டன்களாகும். நான்காம் திட்ட காலத்தில் நிலக்கரி உற்பத்தியினை அதிகப்படுத்த, மத்தியத்துறையில் ரூ110.5 கோடிகள் செலவிடுவது என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இரும்புத் தாது

ஒரு நாடு தன்னுடைய கட்டுமானத் திட்டங்களுக்கு அந்நிய நாட்டுகளை நம்பியிருக்காமலிருக்கப் போதுமான அளவிற்குக் கட்டு மானப் பொருள்களின் அளிப்பினை பெற்றிருக்க வேண்டும். இந்தி யாவின் இரும்புத்தாதுப் படிவங்கள் உலகிலேயே மிகவும் செழிப் புடையதாகக் கருதப்படுகின்றது. இந்தியாவின் இரும்புத்தாது இருப்பு 2,160 கோடி டன்கள். அதாவது உலகின் மொத்த இரும்புத்தாது இருப்பில் நான்கில் ஒருபங்கு என்று மதிப்பிடப் பட்டுள்ளது. தாதுவின் செழிப்பும், நிலக்கரிச் சுரங்களின் அருகாமையும் இந்தியாவில் குறைந்த செலவில் தேனி இரும்பு (Pig iron) உற்பத்தி செய்வதைச் செயல்படுத்த உதவுகின்றது.

பீகார், ஒரிசா, மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, மகாராட்டிரம் கோவா, மைசூர் ஆகிய பகுதிகளில் நல்ல உயர்ந்த ரக இரும்புத் தாது கிடைக்கிறது. இந்தியக் கனிவள பீரோ (Bureau) தமிழ் நாட்டில் சேலத்திலும், ஆந்திராவில் நெல்லூரிலும் தோண்டி யெடுக்க இயலாத அளவிற்கு இரும்புத்தாது இரும்பு உள்ளதாகக் கருதுகின்றது. ஆந்திரப்பகுதியில் குண்டூர், நெல்லூர் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் 389 மில்லியன் டன்கள் அளவிற்கு இரும்புத்தாது உள்ளதாகவும். இது சில நூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து இரும்பு கிடைக்க உதவும் என்றும் கணக்கிட்டுள்ளது சமீபத்தில் ராஜஸ்தானில் ஜெய்சல்மீர் பகுதியில் மிகவும் செழிப் புடைய இரும்புத்தாதுப் படிவங்கள் இருப்பது கண்டு பிடிக்கப் பட்டது. 1968-69ஆம் ஆண்டில் இரும்புத்தாது உற்பத்தி 28.1 மில்லியன் டன்களாகும். சமீப ஆண்டுகளில் இரும்புத்தாது ஏற்றுமதி மிகவும் முக்கியத்துவம் அடைந்துள்ளது. 1968-69ஆம் ஆண்டில் ரூ. 88.4 கோடிகள் மதிப்புடைய இரும்புத்தாது ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நான்காம்

திட்டம், 51.4 மில்லியன் டன்கள் இரும்புத் தாது உற்பத்தி செய்வதென்றும், அவற்றில் ஐந்தில் மூன்று பங்கினை அதாவது 31 மில்லியன் டன்களை ஏற்றுமதி செய்வது என்றும் குறியளவு நிர்ணயித்துள்ளது.

மங்கனீஸ் தாது

உலகில் இந்தத் தாது உற்பத்தியில் இந்தியாவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இந்தத் தாது பல உலோகங்களைப் பதப்படுத்துவதற்குத் தேவையான ஒன்றாக இருப்பதால், உலகில் இதன் தேவையும் மிகவும் அதிகமாக உள்ளது. இத்தாது எஃகு, எனாமல், பீங்கான் ரசாயனங்கள், பிளாஸ்டிக், வார்னிஷ், கண்ணாடி போன்ற பீங்கான் சாமான்கள், உலர் மின்சாரக்கலங்கள் மற்றும் பல பொருள்களின் உற்பத்திக்குத் தேவையாக உள்ளது. உலகில் சோவியத் ரஷ்யா, மற்றும் தங்கக்கடற்கரை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் அடுத்த இடத்தை மங்கனீஸ் உற்பத்தியில் இந்தியா பெற்றுள்ளது. மங்கனீஸ் தாது, முக்கியமாக மத்தியப் பிரதேசத்தில் உள்ள சுரங்கங்களில் மிகுதியாகக் கிடைக்கின்றது. ஒரிசாவும் மிகுதியாக மங்கனீஸ் தாது பெற்றுள்ளது. பிற மாநிலங்களில் மகாராட்டிரத்தையும், மைசூர், ஆந்திரப்பகுதிகளையும் குறிப்பிடலாம்.

1967ஆம் ஆண்டில் மங்கனீஸ்தாது உற்பத்தி 55.2 லட்சம் டன்களாகும். நாட்டின் இருப்பு 183 மில்லியன் டன்களாகும். சென்ற நாற்பதாண்டுகளாக இதன் உற்பத்தியளவு மிகவும் குறைவாக இருந்தது. பெரும்பாலான உற்பத்தி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. உள்நாட்டில் இது அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுவதில்லை. குறிப்பாக எஃகுத் தொழிலில் இது பயன்படுத்தப்படுகின்றது. உயர்ந்த ரகத்தின் இருப்பு மிகவும் குறைவாக இருக்கும் காரணத்தால் பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

மைக்கா

உலகின் தேவைகளில் 80 சதவீத அளவில் கொடுக்கவல்ல உயர்ந்த ரக மைக்கா அல்லது காக்காப்பொன் நம் நாட்டில் உற்பத்தியாகின்றது. இவை பீகார், இராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன. இந்தியாவின் உற்பத்தியில் 60 சதவீதம் பீகாரிலிருந்து கிடைக்கின்றது. ஏற்றுமதிக்கு உகந்த தரமுடையதாக இருப்பதால் இவற்றை வெட்டியெடுத்துப் பதம் செய்து வருகிறார்கள். உற்பத்தி பெருகினாலும்கூடப் பழங்கால முறையையே கையாண்டு வருகிறார்கள். சிறிய சிறிய

சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கின்றனர். தொழில் தெரிந்த நிர்வாகிகள் இல்லாமையாலும், மேற்பார்வைக் குறைவினுலும், பெரும்பாலும் சேதமாகின்றது. ஏற்றுமதித்துறையில் தரப்படுத்து தலும் ரகவாரியாக அமைத்தலும் இன்றியமையாதவை. இந்தியத் தர நிறுவனம் விஞ்ஞான முறையில் தரம் பிரிக்க ஒரு முறையை வகுத்துள்ளது. திட்டத்தின் பரிந்துரைகள் வருமாறு:– (1) பீகார், தமிழ்நாடு ஆகிய இடங்களில் உள்ள இருப்பினைப் பட மெழுதி அறிந்து கொள்ளுதல், இராஜஸ்தானத்தில் நிலப்பண்பு ஆராய்ச்சி நடத்தல்; (2) மைக்காவைப் பொடி செய்தலிலும், மைக்காநைட் தயாரித்தலிலும் தேசிய பௌதிக ஆய்வுக்கூடத்தின் துணைகொண்டு சுரங்க இலாக்காவின் மேற் ப்பார்வையில் மைக்காவைத் தரப் படுத்தச் செய்தல்; (3) கூட்டுறவு மூலமாகச் சிறிய உற்பத்தி யாளரை ஒன்று கூட்டுதல்; (4) மத்திய விற்பனை போர்டு ஒன்றை நிறுவி, இவர்களது மைக்காவின் விற்பனைக்கு வழிசெய்தல். 1968-69ஆம் ஆண்டில் ரூ. 13.5 கோடி மதிப்பிற்கு மைக்கா ஏற்றுமதி செய்யப்பட்டது.

பாக்ஸைட்

இருபதாம் நூற்றூண்டின் அதிசய உலோகம் எனப்படும் அலுமினியம் தயாரிக்க உதவுவது இந்தத் தாதுப்பொருளே. இவ்வுலோகம், பாத்திரங்களிலிருந்து விமானங்கள்வரை பலவகைப் பட்ட பொருள்களைத் தயாரிக்க உதவுகின்றது. இந்தியப் பெரும் பரப்பில், செழிப்பான உயர்ந்தரக பாக்ஸைட் படிவங்களைக் கொண்டுள்ளது. 1967ஆம் ஆண்டு இதன் உற்பத்தி 7.89 லட்சம் டன்களாகும். உயர்ரக பாக்ஸைட் படிவங்களின் இருப்பு 9.1 கோடி டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. பீகார் மாநிலம் மட்டும் நாட்டின் பாக்ஸைட் உற்பத்தியில் 50 சதத்தை அளிக் கின்றது. பிற மாநிலங்கள் குஜராத், மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு ஆகியனவாகும்.

குரோமைட்

இது யுத்தகாரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் முக்கியமான கனிப்பொருளாகும். தொழில் வளர்ச்சி போதுமான அளவு அடையாததால் நம் நாட்டில் இத்தாதுவின் தேவை குறைவாகவே உள்ளது. இது உள்ள இடங்கள் முறையே பீகார், மைசூர், பம்பாய், தமிழ்நாடு, மற்றும் ஒரிசா. இவை மிகவும் உயர்ந்த ரகமாகையால் பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. 1948–ல் உயர்ந்த ரக குரோமைட் 10,000 டன் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பின்னர் 1951-ல் ஏற்றுமதிக்குத் தடை செய்யப்பட்டது. மொத்தத் தாது இருப்பு 80 லட்சம்

டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1967–ல் உற்பத்தி 1,09,535 டன்களாகும். நம்முடைய சராசரி நுகர்ச்சி ஆண்டிற்கு 7,500 டன்கள்தான்.

ஜிப்சம்

சிந்திரியில் உரத் தொழிற்சாலை தோன்றியவுடன் ஜிப்சத்தின் தேவை அதிகரிக்க ஆரம்பித்தது. இது தென்னிந்தியாவிலும் இராஜஸ்தானத்திலும் வேண்டிய அளவு கிடைக்கிறது. இராஜஸ்தானத்தில் உள்ள இருப்பு மட்டும் 108.7 கோடி டன்களாகவும், மொத்த நாட்டு இருப்பு 117 கோடி டன்களாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. 1967ஆம் ஆண்டில் உற்பத்தியான ஜிப்சத்தின் அளவு 10.28 லட்சம் டன்களாகும். உரத் தொழிற்சாலை, சிமெண்டுத் தொழிற்சாலைகளுக்கு இது அவசியமான மூலப்பொருளாகும்.

செம்பு

இது கட்டுமானப் பொருள்களுள் மற்றொரு முக்கியமான உலோகமாகும். இது சோட்டா நாக்பூர், சிங்பூம், இராஜஸ்தானம், சிக்கிம், குலு, மற்றும் கார்வால் ஆகிய இடங்களில் கிடைக்கின்றது. இந்தியாவின் மொத்த செம்பு இருப்பு 25.5 கோடி டன்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1967ஆம் ஆண்டில் இந்திய செம்பு உற்பத்தி 4.59 லட்சம் டன்களாகும்.

தங்கம்

மிகவும் குறைந்த அளவில், தங்கப் படிவங்கள் நாடு முழுவதும் கிடைக்கின்றன. ஆற்று மணலிலும் தங்கத் துகள்கள் உள்ளன. ஆயினும் மைசூரில் உள்ள கோலார் தங்கச் சுரங்கத்தில் கணிசமான அளவில் இது கிடைக்கின்றது. 1967ஆம் ஆண்டின் தங்க உற்பத்தி 3,161 கிலோகிராம்கள் ஆகும். சிக்கனமற்ற உற்பத்தியின் காரணமாக இச் சுரங்கத்தினையும் மூடிவிடலாமா என்று அரசு யோசித்து வருகின்றது.

வெள்ளி

வெள்ளியின் நுகர்ச்சி இந்தியாவில் மிகவும் அதிகமாக உள்ளது. உலகிலேயே வெள்ளியின் நுகர்ச்சியில் இந்தியா முதலிடம் வகிக்கின்றது. கோலார் சுரங்கத்திலிருந்து ஓரளவிற்கு வெள்ளி கிடைக்கின்றது. 1967ஆம் ஆண்டின் வெள்ளி உற்பத்தி 3,170 கிலோகிராம்கள் ஆகும்.

ஈயம்

ஈயப் படிவங்கள் அதிகமாகத் தமிழ்நாட்டிலும், அடுத்து இமாலயப் பகுதிகள், இராஜஸ்தான், பீகார் ஆகிய பகுதிகளிலும்

கிடைக்கின்றன. ஈயத்தின் உள்நாட்டு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. வெளிநாடுகளிலிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகின்றது.

மீன்வளம்

இன்றைய உணவுப்பிரச்சினையினை ஓரளவிற்கு குறைப்பதற்கும், ஏற்றுமதியில் பங்கு வகிப்பதன் மூலம் அந்நியச் செலாவணியை அளிப்பதற்கும் மீன் வளம் உதவுகின்றது. உப்பில்லா நீர், கடல் நீர் இவைகளில் உற்பத்தியாகும் மீன்களை அதிகரிக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நீர்த்தேக்கங்களில் மிகவும் குறைந்த அளவிற்குத்தான் மீன் எடுத்து மக்களால் உபயோகிக்கப் படுகின்றது. தனி நபருக்கு ஆண்டு முழுமைக்கும் 3 4 அவுன்சு மீன் தான் கிடைக்கிறது எனலாம். சுமார் 1 மில்லியன் மக்கள் மீன் வளத்தை நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். மொத்த மீன் பிடிப்பான 1.4 மில்லியன் டன்களில் 1.1 மில்லியன் டன்கள் கடல் மீன்கள் மூலமாகவும், மீதம் 0.3 மில்லியன் டன்கள் உள்நாட்டு நீர் நிலைகள் மூலமாகக் கிடைக்கின்றது. நவீன சாதனங்கள் உபயோகப்படுத்தப்படுமாயின் மீன்பிடிப்பினை ஆண்டிற்கு 20 லட்சம் டன்களாக உயர்த்தலாம். செயற்கை முறையில் மீன் வளர்ப்புத் திட்டத்தை மேற் கொண்டால், மீன் உற்பத்தி அதிகரிக்கும். கடல் மீன் வளர்ப்புக்கு முதன்மையிடம் கொடுக்கும் படி திட்டக் கமிஷன் கூறுகிறது. அதன் பரிந்துரைகளாவன: (1) மீனவர்களுடைய இன்றியமையாத் தேவைகளைச் செய்து கொடுப்பது; (2) பழங்காலப் படகுகளில் இயந்திரம் அமைத்தல், அல்லது இயந்திரம் அமைத்த புதிய படகுகளை அளித்தல்; (3) விற்பனைச் சந்தையமைப்பது; (4) குளிர்சாதனமும், ஐஸ்பெட்டிகளும் வைத்து அவற்றின் மூலம் மீன்கள் கெடாமல் நீண்ட தூரம் எடுத்துச் செல்லும் வழியுடையதாக போக்குவரத்துக்கு வழி செய்வது; (5) கரையினின்றும் வெகு தூரத்தில் சென்று மீன் பிடிக்கும் மீன்கப்பல் கட்டியும், வலையமைத்தும் கொடுத்தல்; (6) துறைமுக வசதிகளைச் விரிவாக்குவது.

மிகுந்த வசதிகள் இருந்தும், இந்தியாவில் மீன் உற்பத்தி போதிய அளவு இல்லை. ஆசியாவின் மீன் உற்பத்தியில் 9 சதமே இந்தியாவில் கிடைக்கின்றது. ஜப்பான் நாடோ 43 சதம் உற்பத்தி செய்கின்றது. மீன் துறையின் மூலம் நாட்டு வருமானம் கிடைப்பது ரூ. 60 கோடிகளாகும். இது இரட்டிப்பாக்கப் படவேண்டும். 1968ஆம் ஆண்டில் மீன் மற்றும் மீன் சம்பந்த மான பொருள்களின் ஏற்றுமதியினால் ரூ. 20.2 கோடிகள் பெறப் பட்டன.

மின்வளம்

இந்தியாவில் நிலக்கரி இருப்பு ஒரு சில பகுதியில் மட்டும்தான் உள்ளது. அது மிகவும் குறைந்த அளவில் பரவிக் கிடக்கின்றது. மேலும் சிற்சில, இடங்களுக்கு, குறிப்பாகத் தொழிலிடங்களுக்கு இவைகளைக் கொண்டுபோக இயலவில்லை. நிலக்கரி உள்ள ஊர்களில் உஷ்ண முறையில் மின் அமைப்பு ஏற்பட்டுள்ளது. அவை சிற்சில சமயங்களில் அதிகப்படி செலவுள்ளதாக இருக்கின்றது. நீர் வீழ்ச்சியின் மூலம் பெருமளவில் மின்சாரம் எடுக்க வழியுள்ளது. இந்தியாவின் மொத்த நீர்வீழ்ச்சி மின்சாரத்தின் அமைப்பு 40 மிலியன் கிலேவாட் எனக் கணக்கிட்டுள்ளார்கள். முதல் ஐந்தாண்டு திட்டகாலத்தில் பற்பல நீர்வீழ்ச்சித் திட்டங்களை எடுத்துக் கொண்டனர். மின்சாரத்தின் தேவை எல்லையற்றதாக இருப்பதாலும், நாளுக்கு நாள் கூடுதலாகி வருகின்ற காரணத்தாலும், மின்சாரம் அதிக அளவில்பெற அணைகளுக்கும் நீர்த்தேக்கங்களுக்கும் நிலைமைக்கேற்பத் திட்டம் உருவாக்கப்பட்டது.

1925ஆம் ஆண்டில் மின்சாரத்தின் நிறுவப்பட்ட உற்பத்திச் சக்தி 16 லட்சம் கிலோவாட்டுகளாக இருந்தது. 1945ஆம் ஆண்டில் இது 9 லட்சம் வாட்டுகளாக உயர்ந்தது. 1951ஆம் ஆண்டு மின்சார உற்பத்தி 2.30 மில்லியன் கிலோவாட்டாகவும், 1966ஆம் ஆண்டு 10.17/மில்லியன் கிலோவாட்டாகவும். 1971ஆம் ஆண்டு 20 மில்லியன் கிலோவாட்டாகவும் உயர்ந்துள்ளது. ஆயினும் தலா நபர் மின்சக்தி உற்பத்திச்சக்தி அளவு 0.136 கிலோ வாட்டாகும். இது உலகிலேயே மிகவும் குறைந்தஅளவாகும். வரும் ஆண்டுகளில் கிராம மின்சக்தி மயமாக்கு நல் திட்டம் பேரளவில் நடைபெற உள்ளது. எனவே திட்டங்களில் மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுதல் வேண்டும். மூன்றும் திட்டத்தில் மட்டும் மின் உற்பத்திக்கென ரூ. 1,262 கோடிகள் ஒதுக்கப்பட்டது.

தற்போது அணுசக்தியின் துணை கொண்டு மின்சக்தி பெறவும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. 1971ஆம் ஆண்டு முடிவில் அணுசக்திவழி மின்சக்தி 5.8 லட்சம் டன்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்சமயம் தமிழ்நாட்டில் கல்பாக்கத்தில் அணுசக்தி மூலம் மின்சக்தி உற்பத்தி செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

(2) கிராமப் பொருளாதார மாற்றம்
(Transformation of Village Economy)

இருபதாம் நூற்றுண்டில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைச் சரிவர புரிந்து கொள்ளுவதற்கு, ஆங்கிலேயர் வருகைக்கு முன் இந்தியாவில் நிலவிய பொருளாதார அமைப்பை விவரிப்பது அவசியமாகிறது. தன்னிறைவு பெற்ற கிராமமே அன்றைய இந்தியாவின் முக்கிய அங்கமாக விளங்கியது. மொத்த மக்கள் தொகையில் 90 சதத்திற்கு மேல் இத்தகைய கிராமங்களிலேயே வாழ்ந்து வந்தனர். மக்கள் வாழ்கின்ற பகுதியும், அதைச் சுற்றிலும் அவர்கள் பயிர்த் தொழில் செய்கின்ற நிலங்களும் சூழ்ந்ததே அன்றைய கிராமம் என்று கூறலாம். நிர்வாகம், புனிதப் பயணம், வாணிகம், கைத்தொழில் ஆகியவைகளுக்கு இடமாக நகரங்கள் விளங்கின. ஆனால், இந்நகரங்களைவிடக் கிராமங்களே முக்கியத்துவம் வாய்ந்தனவாய் இருந்தன என்று கூறலாம். இத்தகைய தன்னிறைவு பெற்ற கிராமங்கள் தோன்றுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், மூன்று காரணங்களே தலையானவையாக இருந்தன.

1. காடுகளைத் திருத்திக் கழனியாக்குவதில் ஏற்பட்ட சில இடர்ப்பாடுகள் குறைவதற்காக ஆதிவாசிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குழுமி வாழ்ந்தனர்.

2. நிறைந்த நீர்ப்பாசன வசதி கிடைக்கக்கூடிய இடங்களில் பயிர்த் தொழில் செய்வதற்காக மக்கள் கூடினர்.

3. எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர்.

மேலும் அஞ்சல் வசதிகளோ, போக்குவரத்து வசதிகளோ இல்லாத நிலைமையைக் கிராமங்களின் தன்னிறைவுக்குக் காரணமாகக் கூறலாம். ஏனெனில் ஒரு கிராமம் சில பண்டங்களைச் செய்வதில் தேர்ச்சியடைந்து, மற்ற கிராமங்கள் தன்னுடைய தேவைக்காக அதனைச் சார்ந்து இருக்க முடியவில்லை. போக்குவரத்து அற்ற நிலையில் உபரியை விற்கவோ, தேவையானதை வாங்கவோ இயலாது. எனவே ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றதாய் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. "வெளிநாட்டு உறவு இன்றித் தனித்து, தனக்கு வேண்டியதைத் தானே உற்பத்தி செய்த சிறிய குடியரசுகளே கிராம சமுதாயம். வம்சத்திற்குப்பின் வம்சமாக வீழ்ந்தன. புரட்சிக்குப் பின் புரட்சிகள்

தோன்றின. இந்து, மொகலாயர், மகாராட்டிரர், சீக்கியர்கள், ஆங்கிலேயர்கள் முதலியோரால் ஆளப்பட்ட போதிலும், கிராம சமுதாயம் எவ்வித மாற்றமும் இன்றி இருந்தன'' என்று திரு. மெட்காப் கூறுகிறார்.

தன்மைகள்

1. ''சாலைகளும் புகைவண்டிப் பாதைகளும் நிறுவப்படுவதற்குமுன் வாழ்ந்த கிராமவாசிக்கு வெளி உலகத் தொடர்பே கிடையாது. எனவே தனித்து வாழ்ந்த மனிதர்களைக் கொண்ட கிராமமும் தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொண்டது. அதற்குத் தேவையான உணவு அங்கேயே உற்பத்தி செய்யப்பட்டது. கருவிகளைத் தயாரித்து கொண்டது. அதற்குத் தேவையான பாத்திரங்களைச் செய்துகொண்ட கிராமத்தின் மதகுருக்கள் அதன் சுவர்களுக்குள்ளேயே வாழ்கின்றனர். மருத்துவர் கிடையாது. விழாக்காலங்களில் அணிவதற்காக நேர்த்தியான ஆடைகளுக்காகவும் உப்புக்காகவும் வெளியுலகத்தைப் பார்க்கிறது,'' என்று அந்நாளைய கிராமத்தைப்பற்றி இபெட்சன் என்ற மேல்நாட்டு அறிஞர் குறிப்பிடுகிறார்.

பண்டைக் காலத்திலேயே தொழில் பிரிவு இருந்து வந்தது. குடியானவர்கள் நிலத்தை உழுதார்கள்; கால்நடைகளை வளர்த்தார்கள். இது போலவே நெசவாளிகள், தச்சர்கள், குயவர்கள் போன்றோரும் இருந்தனர். இத்தொழில்கள் எல்லாம் தந்தையால் மகனுக்குக் கற்பிக்கப்பட்டு, தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்தன. இவர்களுடைய சேவைகளுக்காக அறுவடை முடிந்தவுடன் விளைவில் ஒருபங்கு அளிக்கப்பட்டது.

அக்காலத்தில் இந்திய கிராமத்தில் மூன்று வகையினர் இருந்தனர் என்று கூறலாம். (1) விவசாயிகள், (2) கிராம அதிகாரிகள், (3) கைவினைஞர்கள். பண்டங்களை வாங்கவும், தொழிலாளிக்குக் கூலி கொடுக்கவும் நாணயங்களைக் குறைவாகவே பயன்படுத்தினார்கள். பொருள்கள் பண்டமாற்று முறையில் வாங்கப்பட்டன. தானியமாகக் கூலிகள் வழங்கப்பட்டன.

நிர்வாகம்

''கிராம நிர்வாகம் கிராம முதியோர்களைக் கொண்ட பஞ்சாயத்துகளால் நடத்தப்பெற்றது. நீதி வழங்குவதிலும் இச்சபையின் தீர்மானமே முடிவானது. கிராமப் பஞ்சாயத்தோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவோ நிர்வாகம் மற்றும் நீதி

அதிகாரங்களைப் பெற்றிருந்தது. இதன் அங்கத்தினர்கள் அரசு அதிகாரிகளால் கண்ணியமாக நடத்தப்பட்டனர்,'' என்று நேரு அவர்கள் எழுதுகிறார்கள்.

பழக்க வழக்கங்கள்

மக்கள் பழங்கால முறைகளில் நம்பிக்கை கொண்டவராய் வாழ்ந்தனர். கூட்டுக் குடும்ப வாழ்க்கையும், சாதி மத வேறுபாடுகள் மலிந்தும் இருந்ததால், பிறப்பின் காரணமாகத் தந்தையின் தொழிலையே மகனும் ஏற்று நடத்த வேண்டியிருந்தது. குத்தகை, கூலி, விலைகள் ஆகியவைகளை நிர்ணயம் செய்வதில் வழக்கமே பெரும் பங்கு கொண்டிருந்தது என்று கூறலாம். தேவைக்குமேல் நிலங்கள் இருந்ததால் பிரபுக்கள் நாணயமுள்ள குத்தகைக்காரரைத் தேடினர். அதே சமயத்தில் குத்தகைக்காரர்களை மாற்றுவதில் தடை ஏதும் இல்லாததால் நிலையான வருமானத்தைப் பெற வேண்டி, குத்தகைக்காரர்கள் குத்தகையை நாணயத்துடன் செலுத்தினர். கூலிகள் தானியமாகக் கொடுக்கப் பட்டதால் பணக் கூலிக்கும் (Money wage) உண்மைக் கூலிக்கும் (Real wage) தற்போது இருக்கும் வேறுபாடு காணப்படவில்லை.

கிராம அதிகாரிகள்

கிராமத் தலைவர் படேல் என்றழைக்கப்பட்டார். கிராமத்தின் அமைதி ஒழுங்குக்கு அவரே பொறுப்பு. வரி வசூலிப்பதும் அவரது வேலையாகும். அவருடைய இத்தகைய பணிகளுக்காகக் கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் 'கடன்' கொடுக்கப்பட்டது. வரிவசூல் கணக்குகளையும் ஏனைய குறிப்பேடுகளையும் பட்வாரி அல்லது 'குல்கர்னி' கவனித்து வந்தார். இவர்களைத் தவிர சௌக்கிதார் என்பவர் குற்றவாளிகளைப் பிடிப்பதில் காவலருக்கு உதவியாக இருந்தார்.

ஆங்கிலேயர் வருகைக்குப்பின் கிராம நிலை

ஆங்கிலேயப் பேரரசு இந்தியாவில் நிறுவப்பட்டபின் நிலையான அரசும், போக்குவரத்து வசதிகளில் புரட்சியும் தோன்றின. உள் நாட்டுத்தேவைக்காக ஏற்பட்ட விவசாயம், வியாபார நோக்குடன் செய்யப்பட்டது. சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டதாலும், இந்தியாவில் இரயில் பாதைகள் போடப்பட்டதாலும் உலகச் சந்தைக்கு இந்தியப் பண்டங்கள் விற்பனைக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. மேலும் பல விவசாயிகள் உணவுப் பொருள்களை விடுத்துக் கரும்பு, சணல், பருத்தி போன்றவைகளைப் பயிரிட ஆரம்பித்தனர். இதனால் ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு தானிய உற்பத்தியில்

தேர்ச்சி பெற்றது. இவ்வாறாகச் சணல் உற்பத்தியில் வங்காளமும், பருத்தி உற்பத்தியில் பம்பாயும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் மத்தியப் பிரதேசமும் தேர்ச்சி பெற்றன.

இரண்டாவதாக, விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் லேவாதேவிக்காரர்கள் எளிய விவசாயிகளைச் சுரண்டவும் வழி செய்தன. நில அபிவிருத்திகளுக்காகவோ அல்லது இதர செலவுகளுக்காகவோ விவசாயிகள் அதிகமாகக் கடன் வாங்கினர். இக் கடன்களை அவர்களால் திரும்பச் செலுத்த முடியாதபோது லேவாதேவிக்காரர்களிடம் நிலங்களைக் குறைந்த விலைக்குக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மூன்றாவதாக, ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் சொத்துரிமை உண்டு என்ற சட்டத்தின் காரணமாக நிலத்தைச் சார்ந்து இருப்போரின் எண்ணிக்கை அதிகமாகியது. மேலும், பெருகி வந்த மக்கள்தொகையின் காரணமாகவும் நிலங்கள் சிறு துண்டுகளாக்கப்பட்டன.

நான்காவதாக, விவசாயத்தில் மட்டுமல்லாமல் கிராமக் கைவினைஞர்களின் நிலைமையிலும் சில மாற்றங்கள் ஏற்படலாயின. குறைந்த விலையில் தொழிற்சாலையில் தயாரித்த பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டதால், கிராமத்தில் கையினால் செய்யப் பட்ட பொருள்களுக்குத் தேவை குறைந்தது. தேவை குறைவு, போட்டியிடும் சக்தி இல்லாதது ஆகிய இரு காரணங்களினால் கைவினைஞர்கள் இடையே வேலையில்லாத் திண்டாட்டம் தோன்ற ஆரம்பித்தது.

ஐந்தாவதாக, கிராமங்களின் தன்னிறைவுத் தன்மை மறையும் நிலைமை தோன்றலாயிற்று. பொருள் விற்பனையில் வெளிநாட்டுப் போட்டியினால், கிராமங்கள் தன்னிறைவை விடுத்துப் பிறநாடுகளைத் தம் தேவைகளுக்குச் சார்ந்து இருக்கலாயின.

இறுதியாக, கிராமங்களில் குறைந்த வருமானம் கிடைத்தாலும், போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட அபிவிருத்திகளாலும், அதிக வருவாய் தரக்கூடிய வேலைகளைத் தேடி நகர்ப்புறங்களுக்கு கிராமவாசிகள் குடியேற ஆரம்பித்தனர். மேலும் உபரியான இடத்திலிருந்து உணவுத் தானியங்களைப் பற்றாக்குறை இடத்திற்குக் கொண்டு செல்லும் வசதி ஏற்பட்டதால், இந்தியாவில் பஞ்சங்கள் தோன்றுவதும் குறையலாயின.

மாற்றங்களுக்கான காரணங்கள்

முதலாவதாக, ஆங்கிலேயர் வருகைக்கு முன் ஒவ்வொரு கிராமமும் நீதி, காவல், நிலவரி ஆகிய துறைகளில் பூரண அதிகாரங்கள் பெற்றிருந்தது. ஏனெனில் அக்காலத்தில் கோலோச்சிய அரச பரம்பரையினர் கிராம நிர்வாகத்தில் குறுக்கிட விரும்பவில்லை. அவ்வாறு விரும்பினாலும் போக்குவரத்து வசதிகள், அஞ்சல் வசதிகள் இல்லாத காரணத்தினால் அரசு அதிகாரிகளால் கிராமங்களுக்குச் சென்று அதிகாரம் செய்ய இயலவில்லை. ஆனால், ஆங்கிலேயர் வருகையுடன் போக்குவரத்து வசதிகள் பெருகியதால் கிராம அதிகாரங்கள் மத்திய அரசுக்கு மாற்றப்பட்டன.

இரண்டாவதாக, இருப்புப் பாதைகள், சாலைகள் ஆகியவற்றின் நிர்மாணிப்பால் போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட புரட்சி தனித்து வாழ்ந்த கிராமங்களைப் பிற இடங்களுடன் இணைத்தது.

மூன்றாவதாக, கல்வியறிவாலும் மேல்நாட்டு நாகரிகத்தாலும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை மாறி, தனித்து வாழும் நிலைமை தோன்றலாயிற்று. எனவே தனிமனிதனின் சுதந்திர உரிமைகள், அவ்வுரிமைகளை நிலைநாட்ட ஏற்பட்ட சட்டதிட்டங்கள் இந்தியாவின் பழைய கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்தன.

கைத்தொழில்

ஆங்கிலேயர் வருகைக்குப்பின் இந்தியக் கைத்தொழில்கள் நசித்துவிட்டதற்கான காரணங்களை மேலே கண்டோம். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பித்த வீழ்ச்சி 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தெளிவாகப் புலனாகியது. இதற்கு நாட்டின் போக்குவரத்துப் புரட்சி முக்கியக் காரணம் என்றாலும், வேறு சில காரணங்களையும் ஈண்டுக் காண்போம். இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்படுவதற்குமுன் இந்தியப் பொருள்கள், சிறப்பாகப் பருத்தி ஆடைகள் முதலியன, இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. இங்கிலாந்தின் தொழிற்புரட்சி இந்திய—வெளிநாட்டு வர்த்தகத்தைப் பெருமளவு பாதித்தது. ஆங்கிலத் தொழிற் சாலைகளின் உற்பத்திச் சக்தி அதிகமாகும்போது, இந்தியக் கச்சாப் பொருள்களும் அதிகமாகத் தேவைப்பட்டன. எனவே கச்சாப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரிக்க ஆரம்பித்ததும், இந்திய விவசாயம் வர்த்தக ரீதியில் சாகுபடி தொடங்கப் பெற்றது. அதற்குப் பதிலாக நுகர்வுப் பொருள்கள் இறக்குமதி செய்யப் பட்டதால் பாதிக்கப்பட்ட முதல் தொழில் நெசவுத் தொழி லாகும். அதன் பிறகு மற்றக் கைத்தொழில்களும் நசிந்துபோக

ஆரம்பித்தன. போக்குவரத்துப் புரட்சி இந்த அழிவை மேலும் துரிதப்படுத்தியது.

காரணங்கள்

ஆங்கிலேயர் வருகைக்குமுன் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆண்ட நவாப்புகள், குறுநில மன்னர்கள், பேரரசர்கள் ஆகியோரின் ஆதரவால் பல தொழில்கள் வளர்ந்தன. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்த ஆதரவு கிடைக்கவில்லை. அரசவையை அழகு படுத்தும் கலைப்பொருள்களைத் தயாரித்த கைவினைஞர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் பகைமைக் கொள்கை

ஆங்கிலேயர்கள் தங்கள் நலத்தில் நாட்டம் கொண்டு, அதற்கேற்ப கொள்கைகளை உருவாக்கினர். இக்கொள்கைகள் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சங்கள் அல்லது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிக் கவலை கொள்ள வில்லை. இங்கிலாந்தில் ஏற்படுகின்ற பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப இக்கொள்கைகளும் மாறின. எடுத்துக்காட்டாக 18ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இங்கிலாந்து, உள்நாட்டுக் கம்பெனி தொழிற்சாலைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, இறக்குமதி செய்யும் இந்தியக் கம்பளி ஆடைகளுக்கு இறக்குமதிவரி விதித்தது. ஆனால் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயத் தொழிற்சாலைகள் வளர்ந்தவுடன் தடையில்லா வர்த்தகக் கொள்கையை இங்கிலாந்து பின்பற்ற ஆரம்பித்தது. இவ்வாறாக ஆங்கிலேயர்களின் சுயநலக் கொள்கைகள் இந்தியத் தொழிற்சாலைகளை மிகவும் பாதித்தன.

இயந்திரத்தால் செய்யப்பட்ட பொருள்களின் போட்டி

தொழில் புரட்சியால் ஏற்பட்ட பேரளவு, உற்பத்திப் பொருள்களின் அடக்க விலையை மிகவும் குறைத்தது. சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டதால் போக்குவரத்துச் செலவு குறைந்தது. இதனால் இங்கிலாந்தில் இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் குறைந்த விலைக்கு இந்தியாவில் விற்பனை செய்யப்பட்டன. மேலும் இங்கிலாந்திலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டனவேயன்றி, இயந்திரங்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது. எனவே இந்தியர்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும் அயல்நாட்டுப் பொருள்களை வாங்கினர். இந்தியத் தொழிற்சாலைகள், சிறப்பாகப் பருத்தி ஆலைகள் நசித்துப் போயின.

மேல்நாட்டு நாகரிகத்தால் தேவையில் ஏற்பட்ட மாற்றம்

கல்வியறிவு அடைந்த மக்கள் மேல்நாட்டு உடை மற்றும் பழக்க வழக்கங்களை விரும்பிக் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். இதனால் அவர்கள் தேவைகளிலும் மாறுதல்கள் தோன்றின. சுதேசியப் பொருள்கள் பழங்காலத்தவையாய்க் கருதப்பட்டு மேல்நாட்டுப் பொருள்களுக்குத் தேவை பெருகியது. உள்நாட்டுக் கைத்தொழில் நசித்ததால் அதை நம்பி வாழ்ந்த கைவினைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். 1850ஆம் ஆண்டில் விவசாயத்தைச் சார்ந்து இருந்தோரின் விகிதம் மக்கள்தொகையில் 55 சதவீதமாக இருந்தது. 1901ஆம் ஆண்டில் 68 சதவீதமாகவும், 1931ஆம் ஆண்டு 72 சதவீதமாகவும் உயர்ந்தது. இதனால் நிலங்கள் துண்டுகளாக்கப்பட்டதில் வியப்பொன்றுமில்லை.

இருபதாம் நூற்றாண்டில் விவசாயம்

இந்தியா 1947-ல் விடுதலை அடைந்தபின் விவசாயத்துறையில் பயன்மிகு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கரும்பு, பருத்தி, சணல் போன்ற விவசாயக் கச்சாப் பொருள்கள் தற்போது இங்கிலாந்தின் தொழிற்சாலைகளுக்காக ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. நம் நாட்டிலேயே வளர்ந்து வரும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அளவுக்கு நாம் உற்பத்தி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. விவசாயத்தில் உணவு உற்பத்தியிலும், கச்சாப் பொருள் உற்பத்தியிலும் தன்னிறைவு பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, ஆங்கிலேயரால் பின்பற்றப்பட்ட ஜமீன்தாரிகள் முறை ஒழிக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் தங்கள் நிலவரியை நேரடியாக அரசுக்குச் செலுத்துவதால், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஊக்கம் எழுகிறது. மேலும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கும் நோக்கத்துடன் ஐந்தாண்டுத் திட்டங்கள்மூலம் அணைக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. குறுகிய கால, நீண்டகாலக் கடன் வசதிகளை விவசாயிகள் பெறப் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. சமீபகாலத்தில் 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கமே விவசாயத்திற்குத் தேவையான கடன் வசதி அளிக்கப்படவேண்டும் என்பதுதான். அரசு எடுத்துக்கொண்ட இத்தகைய முயற்சிகளின் விளைவாக, விவசாயத் துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பழங்கால விவசாய முறைகளை விடுத்து நவீன முறைகள் கையாளப்படுகின்றன. ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் குறுகிய காலப் பயிர்கள், வருடத்திற்கு

மூன்று முறை பயிரிடல் போன்றவை மூலம் உற்பத்தி பெருகி உள்ளது என்றே கூறலாம். நாடு தற்பொழுது உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் நிலையில் இருக்கிறது.

தொழில்மயமாக்கலில் மாற்றங்கள்

ஆங்கிலேயர் ஆட்சியில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட மாறுதல்களை 19ஆம் நூற்றாண்டின் தொழில் வளர்ச்சி என்றும், 20ஆம் நூற்றாண்டின் தொழில் முன்னேற்றம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். தனியார் துறையாலேயே பொதுவாகத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது என்று கூறுவது மிகையாகாது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுதேசித் தொழிற்சாலைகள் மறைந்து, பேரளவு உற்பத்தித் தொழிற்சாலைகள் தோன்றின. 1850-55-க்குள்ளாக முதல் பருத்தி ஆலையும், சணல் ஆலையும் நிறுவப்பட்டு. முதல் நிலக்கரிச் சுரங்கமும் பயன்படுத்தப்பட ஆரம்பித்தன. இதே காலத்தில்தான் முதல் இருப்புப்பாதையும் போடப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள்ளாக 194 பருத்தி ஆலைகளும், 36 சணல் ஆலைகளும் தோன்றின. இத்தகைய தொழில் வளர்ச்சிகள் ஏற்பட்ட போதிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரிசி, பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்கிற விவசாய நாடாக இந்தியா மாறிவிட்டது.

19ஆம் நூற்றாண்டின் தொழில் வளர்ச்சிக்கு ஆங்கிலேய முதலாளிகளே காரணமாவார்கள். தாய்நாட்டில் அவர்கள் அனுபவ அறிவு பெற்றுவிடுகிறபடியால், துணிந்து செயலாற்றும் திறனுடையவர்களாக இருந்தார்கள். பார்சி வகுப்பினர் ஆங்கிலேயருடைய வர்த்தக முறைகளைப் பின்பற்றிச் சில தொழிற்சாலைகளை ஆரம்பித்தனர். இருந்தும் இந்தியா தேவையான தொழில் வளர்ச்சியை அடைந்தது என்று கூறிவிட முடியாது. அதற்குத் தேவையான சூழ்நிலைகளும் இந்தியாவில் நிலவவில்லை. இங்கிலாந்து போன்ற நாடுகளில் வியாபாரிகளும் தொழிலாளிகளும் சேர்ந்து செயல்பட்டு, தொழிற்சாலைகளை ஆரம்பித்தார்கள். தேவையான முதல் போட்டு ஆரம்பிக்க வியாபாரிகளிடம் பணமும், உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்யவும் தொழிலாளர்களை நிர்வாகம் செய்யவும் திறனும் உடையவர்களாக இருந்தனர். கைதேர்ந்த தொழிலாளர்கள் தங்களிடம், முதல் இல்லாவிட்டாலும் தொழிற்சாலை சென்று வேலை செய்யும் மனமும் திறனும் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால் இந்தியாவில் வியாபாரிகளாக இருந்த 'பனியா' என்ற வகையினர் வியாபார

லாபத்தைக் கருதினரே ஒழிய, தொழிற்சாலை லாபத்தைக் கருதவில்லை. மேலும் இரயில், கப்பல் போன்ற போக்குவரத்து அபிவிருத்திகளில் அவர்களுடைய உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகமும் பெருகியது. இதுவன்றிக் கடன் கொடுப்பதன் மூலமும் இலாபம் அடைந்தனர். இவ்வாறாக அவர்களுடைய வழக்கமான லேவாதேவி மூலமாகவே இலாபம் பெருமளவுக்குக் கிடைத்ததால் தொழிற்சாலைகளைத் துவக்குவதில் அவர்கள் ஆர்வம் காட்டாதிருந்தனர்.

20ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் தொழில் வளர்ச்சி

1905ஆம் ஆண்டில் சுதேசி இயக்கம் ஆரம்பித்தது. இதனால் முதல் உலகப்போர் தொடங்கும் முன்பாக 70 புதிய பருத்தி ஆலைகளும், 30 சணல் ஆலைகளும் தோன்றின. போரின் காரணமாக இந்தியப் பொருள்களுக்குத் தேவை அதிகரித்தது. முன்போல் இங்கிலாந்திலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வது இயலவில்லை. எனவே இரும்பு, எஃகு, பருத்தி ஆடைகள், தோல் பொருள்கள் ஆகியவைகளின் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது. இந்திய ஆலைகள் முழுச்சக்தியையும் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கின. இருந்தும் கனரகத் தொழிற்சாலைகளோ அல்லது இயந்திரக் கருவித் தொழிற்சாலைகளோ இல்லாத காரணத்தினால், இந்தியத் தொழிற்சாலைகள் வேகமாக முன்னேற இயலவில்லை.

இதுவரையில் இந்தியத் தொழிற்சாலைகள் பிரிட்டிஷ் அரசின் ஒத்துழைப்பு இன்றி இயங்கி வந்தன. 1923ஆம் ஆண்டு முதல் நிதிக்குழுவின் சிபாரிசுகளை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு பல தொழிற்சாலைகளுக்குக் காப்பு அளித்தது.

இரண்டாவது உலகப்போரிலும் இந்தியப் பொருள்களுக்குத் தேவை அதிகமாகியது. வெளிநாட்டுப்பொருள்களை இறக்குமதி செய்ய இயலவில்லை. இதனால் 'போர்க் குழந்தைகள்' என்று அழைக்கப்பட்ட பல புதிய தொழிற்சாலைகள் தோன்றின. பழைய தொழிற்சாலைகளும் விரிவு படுத்தப்பட்டன. இருந்தும் இக்காலத்தில் ஏற்பட்ட தொழில் முன்னேற்றம் வியந்து பாராட்டும் அளவுக்கு இல்லை.

குறைவான முன்னேற்றத்துக்கான காரணங்கள்

1. இந்திய முதலாளிகள் தொழிற்சாலைகளை நிறுவி, நிர்வகிக்கும் திறனற்றவர்களாக இருந்தனர். லேவாதேவி,

வியாபாரம் மூலமாகவே மிக அதிகமான இலாபம் கிடைத்ததால் புதிய துறைகளில் இறங்க அவர்கள் விரும்பவில்லை. எனவே ஓரிரு தொழிற்சாலைகள் நிறுவிய ஆங்கிலேயர்களும் சுயநலத்துக்காக நிறுவினரேயன்றி, நாட்டு நலத்துக்காக அல்ல என்றே கூறலாம்.

2. இந்தியத் தொழிலதிபர்களிடம் தேவையான முதல் இல்லை. சிறுசேமிப்புகளை முதலீடாக மாற்றுகின்ற நிதிச் சுரங்கங்கள் இல்லை. மேலும் கடன்கள் விவசாயத்திற்கும் வர்த்தகத்திற்கும் மட்டுந்தான் அளிக்கப்பட்டன. தற்போது நாம் காண்பது போன்ற வங்கிகளும் இல்லை. 1870ஆம் ஆண்டில் 5 லட்சத்திற்கு மேற்பட்ட முதல்கொண்ட வங்கிகளின் எண்ணிக்கை இரண்டே யாகும்.

3. தொழிற்சாலைகளுக்கு அரசினுடைய ஆதரவு கிடைக்க வில்லை. தனியார் துறை வளர்ச்சி அடையத் தேவையான வசதிகளை பிரிட்டிஷ் அரசு செய்து தரவில்லை. பொருளாதாரக் கொள்கைகளில் இந்தியாவும் இங்கிலாந்தும் முரண்பாடு உடையனவாய் இருந்தன. இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப் பட்ட இந்தியப் பொருள்களுக்கு இறக்குமதி வரி விதிக்கப் படவில்லை.

சுதந்திர இந்தியாவின் தொழில் வளர்ச்சி

1948ஆம் ஆண்டு இந்திய அரசு ஒரு புதிய தொழில் கொள்கையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தது. அதன்படி தொழிற் சாலைகள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி போன்ற மிக முக்கியத் தொழிற்சாலைகள் அரசுக்கு உடைமையாகும். இத்தொழிற்சாலைகளைத் தனியார் துறை நிறுவ உரிமை இல்லை. இரண்டாவதாக, இரும்பு, எஃகு போன்ற கனரகத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, புதிய தொழிற் சாலைகளை நிறுவும் உரிமை அரசுக்கு மட்டுந்தான் உண்டு. தற் போது செயல்படுகிற தனியார் தொழிற்சாலைகளைப் பத்து வருடங்கள் கழித்து தேசிய மயமாக்கப்படுவது பற்றிப் பரிசீலனை செய்யப்படும். மூன்றுவதாகப் பருத்தி, கம்பளி ஆடைகள், சிமென்ட், சர்க்கரை போன்ற தொழிற்சாலைகளை மத்திய அரசு திட்டமிட்டுக் கட்டுப்படுத்தும். நான்காவதாக, எஞ்சிய தொழிற் சாலைகள் தனியார் துறையினருக்கு ஒதுக்கப்பட்டன.

இக்கொள்கையில் இருந்த சில குறைபாடுகள் காரணமாக 1956ஆம் ஆண்டில் இது சற்றுத் திருத்தி அமைக்கப்பட்டது. இதன் படி தொழிற்சாலைகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

இப்புதிய தொழில்கொள்கை தனியார் துறைக்குத் தேவையான ஊக்கத்தை அளித்தது. தற்போதைய இந்தியாவில் தனியாக்கமும், பொதுத்துறையும் சேர்ந்தே செயல்படுகின்ற கலப்புத் துறையே உள்ளது என்று கூறலாம்.

தொழிற்சாலைகளுக்கு நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்காகத் தொழிற்சாலை நிதிக் கார்ப்பொரேஷன், மாநில நிதிக் கார்ப்பொரேஷன் போன்ற நிதி உதவிச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொழிற் சாலைகளுக்கு முக்கியத்துவம் அளித்தது.

அயல்நாட்டு வாணிபத்தைப் பொறுத்தவரை நமது ஏற்றுமதியை உயர்த்தவேண்டித் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. மிக இன்றியமையாத பொருள்களை இறக்குமதி செய்து, எஞ்சிய பொருள்களை நாமே உற்பத்தி செய்து கொள்ளும் அளவு தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைந்துள்ளன.

பிரிட்டிஷ் இந்தியாவின் வறுமைக்குக் காரணம்

செல்வமும் மூலப்பொருள்களும் சுரண்டப்பட்டதால் பிரிட்டிஷ் இந்தியாவில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. உயர்ந்த வேலைகளில் ஆங்கிலேயர்களே அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் தங்கள் ஊதியத்தில் பெரும் பகுதியைத் தாய்நாட்டுக்கு அனுப்பினர். மேலும், பெரும்பாலான தொழிற்சாலைகளில் இங்கிலாந்து செல்வந்தர்களின் முதலே பெரும் பங்கு வகித்தது. இம்முதலுக்கு எல்லாம் இலாபத்தில் ஒரு பகுதியோ அல்லது வட்டியோ அளிக்க வேண்டியிருந்தது. இவைகளை ஏற்றுமதிகள் மூலமாக இந்தியா சமன் செய்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் காலத்தில் கம்பெனி ஈடுபட்ட போர்களுக்கான செலவுகூட இந்தியாவைச் சேர்ந்ததுதான். ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு இங்கிலாந்து படையெடுத்தபோதும், அதற்கான செலவுகளை இந்தியாவே ஏற்றது. இங்கிலாந்தின் முடியரசு கம்பெனியாரிடம் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டபோதும் இந்த நிலைமையே நீடித்தது. இந்தியாவிலிருந்து இவ்வாறு சுரண்டப்பட்டு இங்கிலாந்துக்குக் கொண்டு செல்லப்பட்ட செல்வம் மறுபடியும் இந்தியாவில் முதலீடாக மாற்றப்பட்டது. பிரிட்டிஷ் அரசும் தங்கள் நாட்டு முதலாளிகளுக்குப் பாதுகாப்பு அளித்து வளர்த்தது. இதனால் தொழிற்சாலை, வர்த்தகம் போன்ற துறைகளில் ஆங்கிலேயர் தனி உரிமை பெற்றனர். இவ்வாறு இந்தியா மேலும் மேலும் சுரண்டப்பட்டதால், ஆங்கிலேயர் ஆட்சியில் எவ்விதப் பொருளாதார முன்னேற்றமும் இந்தியாவில் ஏற்படவில்லை.

சாதி மத வேறுபாடுகள், ஆத்மீக சக்தியில் நம்பிக்கை என்று இந்தியாவில் தொன்றுதொட்டு வேரூன்றிவிட்ட சில நம்பிக்கைகள் காரணமாக இந்தியாவில் முன்னேற்றம் இல்லை என்று சில பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். முதலீடு செய்த ஒருசில இந்தியரும் அபாயமற்ற துறைகளில் முதலீடு செய்தனரே யொழிய, தொழிற்சாலை போன்ற புதிய துறைகளில் முதலீடு செய்ய முன்வரவில்லை. இக்கூற்றை டாக்டர் பிபின் சந்திரா என்பவர் ஆதாரமற்றது என்று மறுக்கிறார். இந்தியாவில் பொருளாதார மாற்றம் இருந்தது. ஆனால் அந்நிய நாட்டின் ஆட்சிக்கு உட்பட்ட பொருளாதார முன்னேற்றம் என்றே கூறலாம். இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டுத் தொழிற் சாலைகள் வளர்ந்ததுபோல் இந்தியத் தொழிற்சாலைகளும் வளர்ச்சி பெற்றன. ஆனால் அதன் நன்மைகள்தான் இந்தியாவைச் சேரவில்லை என்று டாக்டர் பிபின் கூறுகிறார். இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தின் சரித்திரத்தைக் கூர்ந்து கவனிப்போமானால் ஓர் உண்மை விளங்கும். மற்ற நாடுகளில் அயல்நாட்டு வர்த்தகம், முதலீடு போன்ற துறைகளில் இடர்ப் பாடுகள் ஏற்படும்போது, இந்தியா அத்துறைகளில் முன்னேற்றம் கொண்டது. இந்தியத் தொழிற்சாலைகளும் வளர்ந்தன. எடுத்துக்காட்டாக முதல் உலகப்போர் (1914-ல்), பொருளாதார மந்தம் (1929), இரண்டாவது உலகப்போர் (1939) ஆகியவற்றைக் கூறலாம். இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் பண்டங்களை ஏற்றுமதி செய்த ஜப்பான், இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள் போரில் ஈடுபட்ட காரணத்தினால், தனக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து கொண்டதுடன் ஏனைய நாடுகளுக்கும் இந்தியா ஏற்றுமதி செய்தது. மேலும் அமெரிக்கா போன்ற நேசநாடுகளும் தங்கள் தேவைக்கு இந்தியாவைச் சார ஆரம்பித்தன. இந்தியத் தொழிற்சாலை களுக்கு இயற்கைக் காப்பு (Natural Protection) அளித்தது.

எல்லாத் துறைகளிலும் ஆங்கிலேயர் துணிந்து முதலீடு செய்தனர் என்று கூறிவிட முடியாது. அரசு கொடுத்த உத்தர வாதத்தின் பேரில் இரயில்வே துறையிலும் மிக அதிகமான இலாபம் கிடைத்ததால் தேயிலை, காப்பி, சணல் போன்ற தொழிற்சாலைகளிலும் முதலீடு செய்ய முன் வந்தனர். மேலும் அக்காலத்தில் பின்பற்றப்பட்ட காப்புக் கொள்கையும் இந்தி யாவில் நிறுவப்பட்ட பிரிட்டிஷ் தொழிற்சாலைகளைப் பாது காப்பதே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. எனவே ஆங்கிலேயர் முதலீடு செய்வதில் துணிவுடன் செயல்பட்டதில் வியப்பேதும் இல்லை.

(3) பொருளாதார வளர்ச்சி என்ற கோட்பாடு
(The Concept of Economic Development)

பொருளாதார வல்லுநர்கள் உலகிலுள்ள நாடுகளை முன்னேறிய நாடுகள் (Developed Nations) என்றும், முன்னேறாத நாடுகள் (Under-Developed Nations) என்றும், அந்நாடுகளில் வாழும் மக்கள் பெறும் தலா சராசரி வருமானத்தையும் (per-capita) கொண்டு இருபெருங் கூறுகளாகப் பகுக்கின்றனர். இவற்றை நான்கு வகையாகப் பகுத்துக் கூறுவாரும் உளர். நாம் இங்கு இரண்டாவது பகுப்பு முறையைச் சற்று விரிவாகக் காண்போம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளின் தலா சராசரி வருமானம் 1,000 அமெரிக்க டாலருக்கும் அதிகமாக இருப்பதால், அந்நாடுகளை முன்னேறிய நாடுகள் எனப் பகுத்துள்ளனர். இங்கிலாந்து, ஸ்வீடன், டென்மார்க், பிரான்சு, ஜெர்மனி, நார்வே முதலிய நாடுகளின் தலா சராசரி வருமானம் 500—1,000 அமெரிக்க டாலருக்குள் இருப்பதால், (அவைகளை இடைப்பட்ட, முதல்தர நாடுகட்கு ஒப்பான முன்னேற்றமடையாத) முன்னேறிய நாடு என அழைக்கின்றனர். ஆசியாவில் உள்ள பெரும்பாலான நாடுகள், ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகள் 250—500 அமெரிக்க டாலர் தலா சராசரி வருமானம் பெறுவதால் அவற்றை முன்னேற்றமடையா நாடுகள் (Under-Developed Countries) என அழைக்கின்றனர். இறுதியாக 250 அமெரிக்க டாலருக்கும் குறைவாகத் தலா சராசரி வருமானமுடைய நாடுகளை முன்னேற்றமடையாத ஏழை நாடுகள் எனப் பகுக்கின்றனர். 1966-ல் இந்திய நாட்டின் தலா சராசரி வருமானம் 90 அமெரிக்க டாலர் ஆகும். எனவே இந்திய நாடு முன்னேற்றமடையாத நாடுகளின் அடிமட்டத்தில் இருப்பதை நாம் அறியலாம்.

இந்திய நாடு முன்னேற்றம் அடையாததன் காரணம் என்ன?

இந்திய நாட்டில் உள்ள மக்களில் பெரும்பாலோர் ஏழ்மையில் உழல்கின்றனர். அதே நேரத்தில் பயன்படுத்தாத இயற்கைச் சாதனங்களும் காணப்படுகின்றன. எனவே இந்தியப் பொருளாதாரத்தின் தன்மையை அறிதல் இன்றியமையாததாகின்றது.

இந்திய மக்களின் தலா சராசரி வருமானம்

இந்திய மக்களின் தலா சராசரி வருமானம் 90 அமெரிக்க டாலராகும். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்களின் தலா

சராசரி வருமானம், இந்தியத் தலா சராசரி வருமானத்தைவிட 40 மடங்கு அதிகமாகும். இந்திய நாட்டு மக்களின் தலா சராசரி வருமானம்மிகக்குறைவாக இருப்பதற்கு முக்கியக் காரணம் மக்கள் தொகைப் பெருக்கமே. சான்றாக, இந்திய நாட்டு வருமானம் 1948—49 முதல் 66—67 முடிய 73% உயர்ந்தது. ஆனால் தலா சராசரி வருமானம் 19% தான் உயர்ந்தது. இதற்குக் காரணம் இந்திய மக்கள்தொகைப் பெருக்கம் மேலே குறிப்பிட்ட கால எல்லைக்குள் 36% உயர்ந்ததுதான்.

பெரும்பாலோர் விவசாயத்தைச் சார்ந்திருத்தல்

நம் நாட்டில் 1960—61-ல் 72% மக்கள் விவசாயத்தை மேற்கொண்டு நாட்டு வருமானத்தைப் பெறுகின்றனர். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் 6, 9, 4 சதவிகித மக்கள் முறையே 3, 7, 3 சதவிகித நாட்டு வருமானத்தைப் பெறுகின்றனர். இதிலிருந்து 'முன்னேறாத நாடுகளில் விவசாயம், அதை நம்பியுள்ள மக்கள்தொகைக்கு அளிக்க வேண்டிய நாட்டு வருமானத்தைவிட மிகக் குறைந்த அளவில் அளிக்கிறது. சுருங்கக்கூறின், மக்கள் நாட்டு வருமான அளிப்பு விகிதம் முன்னேறாத நாடுகளில் குறைவாக உள்ளது' என்பதை நாம் அறியலாம். இதற்குக் காரணம் தனிமனிதனுடைய சராசரி உற்பத்தித்திறன் மிகக் குறைவாக இருப்பதே.

நம் நாட்டில் விவசாயத் துறையில் தேவைக்கும் அதிகமான விவசாயிகள் ஈடுபட்டிருக்கின்றனர். சான்றாக 3 பேருக்கே வேலையுடைய நிலத்தில் 6 பேர் பணி புரிகின்றனர். இவ்வாறு அதிகமாக உள்ள விவசாயிகளைக் குறைத்தாலும் அந்நிலத்தின் உற்பத்தி குறையாது. இந்த மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) ஒருபுறம். மறுபுறம் வேலையின்மையும் (Under-employment) நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

மூலதனப் பற்றுக்குறை

பொருளாதார முன்னேற்றத்துக்கு இன்றியமையாத தேவை முதற்கருவிப் பொருள்கள் (Capital goods) ஆகும். அமெரிக்க நாட்டிலும், இங்கிலாந்திலும் 1960ஆம் ஆண்டில் தலா சராசரி பதனிடா இரும்பு உற்பத்தி (Per capita Crude steel production) முறையே 618, 452 கிலோவாகும். ஆனால் இந்திய தலா சராசரி பதனிடா இரும்பு உற்பத்தி 13 கிலோவாகும். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் தலா மின் உற்பத்தி முறையே 5,937Kwh, 3,590Kwh ஆகும். ஆனால் அதே

ஆண்டில் இந்திய தலா சராசரி மின்சார உற்பத்தி 65Kwh ஆகும். இதிலிருந்து இந்திய நாட்டில் மூலதனப் பற்றுக்குறை காணப்படுகிறது என்பதை அறிகிறோம்.

மூலதனப் பெருக்கத்தின் தேவை

பேராசிரியர் கோலின் கிளார்க் (Prof. Colin Clark), 'சென்ற ஆண்டு இருந்த அதே வாழ்க்கைத் தரத்தை நிலைநிறுத்த, ஆண்டு ஒன்றுக்கு 1% மக்கள்தொகைப் பெருக்கமுள்ள நாடு 4% நாட்டு வருமானத்தை மீண்டும் முதலீடு செய்ய வேண்டு'மென்கிறார். இம் முறையில் கணக்கிட்டால் பிரதி ஆண்டும் 2.5% மக்கட் பெருக்கமுடைய நம் நாடு 10% நாட்டு வருமானத்தை, சென்ற ஆண்டு பெற்ற அதே வாழ்க்கைத்தரத்தை நிலைநாட்ட, மீண்டும் முதலீடு செய்ய வேண்டும். எனவே நாடு விரைவான பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டுமெனில் இன்னும் அதிக அளவு நாட்டு வருமானத்தை முதலீடு செய்ய வேண்டும். இதிலிருந்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மூலதனப் பெருக்கத்தின் இன்றியமையாமையை அறிகிறோம்.

மனித மூலதனம் (Human Capital)

முன்னேற்றமடையாத இந்தியா போன்ற நாடுகளில் கிடைக்கின்ற மனித மூலதனம் பொதுவாகத் தரம் குறைவாகவுள்ளது. எனவே இந்நாட்டின் அரசாங்கங்கள் மனித மூலதனத்தின் தரத்தை உயர்த்த உணவு, கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிற்கு அதிக அளவில் செலவு செய்ய வேண்டியுள்ளது. 'இந்திய நாட்டில் ஆரம்ப, உயர் கல்வி, ஆராய்ச்சி இவற்றிற்காக ஆகின்ற தலா சராசரிச் செலவு ரூ. 15 தான். இது மொத்த நாட்டு வருமானத்தில் 3% தான். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டில் தலா சராசரிச் செலவு ரூ. 2,000. இது அமெரிக்க மொத்த நாட்டு வருமானத்தில் 10% ஆகும்.'' (கல்விக்குழு அறிக்கை, 1964-66, கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

தொழில்நுட்பத் திறனில் பின்தங்கிய நிலை

இன்று நம் நாட்டில் பல தொழிலகங்களில் பழைய முறையும், புதிய முறையும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. ஆனால் பெரும்பாலான தொழிலகங்களில் பழைய முறையே பின்பற்றப் படுவதால் தொழிலாளர் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது.

இன்று நம்நாடு விவசாயப் பொருள்களையே மிகுதியாக உற்பத்தி செய்கின்ற நாடாகவும், குறைந்த தலா சராசரி வருமானம் உள்ள நாடாகவும், மக்கள் நெருக்கம் உள்ள

நாடாகவும், வேலையின்மையும் தகுதிக்கேற்ற வேலையின்மையும் உடைய நாடாகவும், தொழில்நுட்பத் திறனில் பின்தங்கிய நாடாகவும், இருப்பதால், நம்நாட்டின் பொருளாதாரம் முன்னேறாத நாடுகளில் காணப்படுகின்ற எல்லாக் குறைபாடுகளையும் கொண்டு, முன்னேறாத பொருளாதாரமாக இருக்கிறது.

(4) (அ) அரசும் பொருளாதார முன்னேற்றமும்

நாடு சுதந்திரமடைவதற்கு முன்பே மக்கள் பொருளாதார முன்னேற்றமடைய வேண்டும் என்ற வேட்கையைக் கொண்டிருந்தனர். அந்நாளில் நாட்டில் காணப்பட்ட ஏழ்மையையும் வருமான ஏற்றத்தாழ்வையும் சுயாட்சி இல்லாத காரணத்தால் தக்க பொருளாதார, சமூகக்கொள்கைகள்மூலம் நீக்க இயலவில்லை. ஆங்கில ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட கொள்கைகள், சட்டங்கள் எல்லாம் ஆங்கில நாட்டின் நலனுக்காகவே தீட்டப்பட்டன. சுதந்திரம் அடைந்த பிறகு நமதரசு திட்டமிட்ட கொள்கை அடிப்படையில் பொருளாதார முன்னேற்றமடையப் பெருமுயற்சிகளை மேற்கொண்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலேயே மக்களின் பொருளாதாரம் முன்னேற்றமடைய வேண்டும் என்ற வேட்கையை உணர்ந்து பின்வருமாறு கூறியுள்ளனர்.

1. நாட்டில் வாழும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நல்வாழ்வு அளிக்கத் தேவையான வசதிகளைப் பெற வகை செய்தல்.

2. நாட்டின் இயற்கை வளங்களின் உரிமையும், கட்டுப்பாடும், மக்கள் நலம் பெருகும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

3. செயற்படுகின்ற பொருளாதார அமைப்பினால் செல்வம் ஓர் இடத்தில் குவிந்தோ அல்லது உற்பத்திச் சாதனங்கள் குவிந்தோ மக்களுக்குத் தீமை பயக்கலாகாது.

எனவே, இந்திய அரசு, நாடு விரைவில் பொருளாதார முன்னேற்றமடையத் திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது.

நாட்டின் பொருளாதாரம் விரைவான முன்னேற்றமடைய வேண்டுமெனில் நாட்டின் வருமானப் பெருக்கம், நாட்டு மக்கள் தொகைப் பெருக்கத்தைவிட அதிகமாக இருக்கவேண்டும். எனவே மக்கள்தொகை பெருகி வரும் நமது நாட்டில், முன்னேற்

றத்தைக் குறுகிய காலத்தில் பெறுவது கடினமானது. நாட்டின் பொருளாதார நிலை விரைவில் முன்னேறுவதற்கு மக்கள் தொகையை விரைவில் கட்டுப்படுத்துவது அதிக முக்கியமான கடமையாகிறது.

(4). (ஆ) ஐந்தாண்டு திட்டங்கள்

நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே, மக்களிடையே நாடு விரைவான பொருளாதார முன்னேற்றமடைய திட்டங்கள் தேவை என்ற எண்ணம் இருந்தது. 1934ஆம் ஆண்டில் சர். எம். விஸ்வேஸ்வரையா "இந்தியாவிற்கு திட்டமிட்ட பொருளாதாரம்" ("Planned Economy for India") என்னும் நூலில், இந்தியாவின் வளர்ச்சிக்குத் திட்டத்தின் தேவையை வலியுறுத்தியுள்ளார். ஆசிய சோதி நேரு தலைமையில் 1937ஆம் ஆண்டில் தேசிய காங்கிரஸ், தேசிய திட்டக் குழுவை அமைத்தது. ஆனால் இந்தக் குழு அறிக்கையை 1949ஆம் ஆண்டில்தான் அளித்தது. இதைத் தவிர பாம்பே திட்டம் (Bombay Plan), மக்கள் திட்டம் (People's Plan), காந்தியத் திட்டம் (Gandhian Plan) எனப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால் இவையெல்லாம் செயல்படுத்தப்படவில்லை.

முதல் ஐந்தாண்டு திட்டம் (1951—1956)

நம் நாட்டில் முதன்முதலாக திட்டக்குழு, திட்ட அறிக்கையை 1951ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியிட்டது. ஆனால் இறுதியறிக்கை டிசம்பர் 1952-ல் வெளியிடப்பட்டது.

முதல் ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்கள்

(1) உலகப் போராலும், நாட்டுப் பிரிவினையாலும் சீரழிந்த இந்தியப் பொருளாதாரத்தை புனரமைத்தல்; (2) உணவு நெருக்கடியைத் தீர்த்தல்; (3) சணல், பருத்தி போன்ற மூலப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குதல்; (4) பொருள்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்துதல்; (5) சாலைகளை அதிகரித்தல், ரயில் பாதைகளை புதுப்பித்தல், புதிய எஞ்சின்கள் வாங்குதல்; நீர்பாசன வசதிகள், நீர்பாசனமும் மின்சார உற்பத்தியும் சேர்ந்த அணையமைப்புகள்; (6) வளரும் பாரதத்தின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளை செய்தல்; (7) அரசியலமைப்புச் சட்டத்தின்படி மக்களுக்குச் சமூக நீதி கிடைக்கச் செய்தல் ஆகியவை முதல் ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

முதல் ஐந்தாண்டு திட்டத்தில், முதலில் பொதுத் துறைக்கு (Public Sector) ரூ. 2,069 கோடி முதலீடு செய்ய உத்தேசிக்கப் பட்டு, மீண்டும் ரூ. 2,356 கோடியாக உயர்த்தப்பட்டது. ஆனால் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 1,960 கோடிதான்.

அதிக உணவு மற்றும் மூலப்பொருள்களின் உற்பத்தி தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என உணர்ந்ததால் முதல் திட்ட காலத்தில் விவசாயத்திற்கும், நீர்ப்பாசனம், மின்சக்தி உற்பத்தி ஆகியவைகளுக்கும் முன்னிடம் வழங்கப்பட்டது. இதனால் பெருந் தொழில் வளர்ச்சியில் அரசு, போதிய கவனம் செலுத்த முடிய வில்லை. பேரளவு நுகர்வோர் பொருள் உற்பத்தித் தொழில்கள் தனியார் துறைக்கு விடப்பட்டன. அரசு, முன்னேற்றம் விரைவு பெற இன்றியமையாத தேவையான போக்குவரத்துக்கும், செய்திப் போக்குவரத்துக்கும் ரூ. 523 கோடி செலவிட்டது. இது மொத்த முதலீட்டில் 27% ஆகும். மேலும் கல்வி, தொழில் நுட்பப் பயிற்சி, சுகாதாரம், அகதிகள் நிவாரணம் ஆகியவை களுக்கு ரூபாய் 459 கோடி செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டது.

இவைகளைத் தவிர தனியார் துறையில் முதல் திட்ட காலத்தில் ரூ. 1800 கோடி செலவு செய்யப்பட்டது.

நாட்டின் தேசிய வருமானம், தலா சராசரி வருமானம், உயர்வு கணக்கீடு கீழ்கண்ட எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது.

(1) முன்னேறிய நாடுகளான அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, நார்வே போன்ற நாடுகளில் மூலதன உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு, மூலதன உற்பத்தி விகிதம் 3.1 ஆக இருக்கும் என நிர்ணயிக்கப்பட்டது.

(2) முதலீட்டின் சராசரி லாபம் தராக் காலம் (Gestation Period) 3 ஆண்டுகள் என கணக்கிடப்பட்டது. அதிக உற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு பிறகு ஏற்படும் என நிர்ணயிக்கப்பட்டது.

(3) மக்கள் தொகை ஆண்டொன்றுக்கு 1.25 சதவீகிதம் உயருமென நிர்ணயிக்கப்பட்டது.

4. சராசரி சேமிப்புத் திறன் 5% சதவிகிதம் எனவும், இறுதி நிலை சேமிப்பு அளவு 20% எனவும் மதிப்பிடப்பட்டது.

முதல் ஐந்தாண்டு திட்டத்தின் சாதனைகள்

முதல் திட்டத்தில் நாம் குறித்த இலக்குகளைப் பல துறை களிலும் அடைய முடிந்தது. சில துறைகளில் சாதனை இலக்கு

களை விஞ்சி இருந்தது. தேசிய வருமானம் 18 சதவிகிதம் உயர்ந்தது. நாம் அடைய நினைத்ததோ 11 சதவிகிதம் உயர்வு தான். தலாசராசரி நுகர்வு 9 சதவிகிதம் உயர்ந்தது. 1950—51-ல் 5°/₀ ஆக இருந்த முதலீடு, 1955-56-ல் 7.3°/₀ உயர்ந்தது.

இவற்றைத் தவிர உணவு தானிய உற்பத்தி 20 சதவிகிதம் உயர்ந்தது. பருத்தி உற்பத்தி 45 சதவிகிதம் உயர்ந்தது. சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் 10 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கும், பெரிய முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் 6 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கும் ஆக 16 மில்லியன் ஏக்கர் நிலத்துக்கு, திட்ட காலத்தில் புதிய நீர்ப்பாசன வசதி கிடைத்தது. தொழில் உற்பத்திக் குறியீட்டெண் (1950–51=100) திட்ட இறுதியில் 139 ஆக உயர்ந்தது.

இவைகளைத் தவிர திட்டகாலத்தில் சமுதாய அபிவிருத்தி திட்டங்கள் நாடு முழுவதும் செயல்படத் தொடங்கின. இவை விவசாய உற்பத்தியையும் விவசாயிகளின் வாழ்க்கை தரத்தையும் உயர்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்டன. திட்டத்தில் மக்கள் தாங்களும் பங்கு பெறுகிறோம் என்ற எண்ணத்தை உருவாக்க கிராம பஞ்சாயத்துக்களும் கூட்டுறவுகளும் தோன்றின. திட்ட இறுதியில் கூட்டுறவு இயக்கம் 1,20,000 கிராமங்களில் செயல்படத் துவங்கியது.

திட்டகாலத்தில் இடைத்தரகர்கள் ஜமீந்தார்கள் ஆகியோர் ஒழிக்கப்பட்டு, உழுபவனுக்கும் அரசுக்குமிடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டது. பயிர் செய்வோர்க்குப் பாதுகாப்பு வழங்க பலதரப்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டன. விவசாயம், நீர்ப் பாசனம், சமூக சேவைகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் முதல் திட்டம் குறிப்பிடத் தக்க வெற்றியடைந்தது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்
(1956—57 முதல் 1960—61)

முதல் திட்ட இறுதியில் இந்தியப் பொருளாதாரம் ஸ்திரத் தன்மையைப் பெற்றது. விவசாய இலக்குகள் நிறைவு செய்யப் பட்டன. விலைவாசி குறைந்தது. எனவே பொருளாதார நிபுணர் களும் அரசியலாரும் விவசாயத்தில் அதிகம் முதலீடு செய்ய வேண்டியதில்லை என முடிவு செய்தனர். அடிப்படை, மற்றும் கனரகத் தொழில்களில் இரண்டாவது திட்டகாலத்தில் முதலீடு செய்ய முடிவு செய்தனர்.

இந்திய அரசு 1956ஆம் ஆண்டு தொழிற் கொள்கையின் மூலம் சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டு செயற்பட ஆரம்பித்தது. இதனால் தேசிய வருமான உயர்வும், பொருளாதார முன்னேற்றத்தால் ஏற்படும் பயனும் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கின்ற மக்களுக்கும் கிடைக்கவும், வருமானம், செல்வம், பொருளாதார ஆதிக்கம் இவை ஒருசிலர் கையில் குவியா வண்ணம் தடைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டது. இரண்டாவது திட்டத்தின் முக்கிய நோக்கம் தேசிய வருமானத்தை பெருக்கி, அவற்றைச் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கின்ற மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்கள்

இரண்டாவது திட்டத்தின் முக்கிய நோக்கம் ஐந்தாண்டுகளில் நாட்டு வருமானத்தை 25 சதவிகிதம் உயரச் செய்து, மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் தொழிலாளர் அளிப்பு அதிகரிப்பிற்கு வேலை வாய்ப்பளித்தலும், நாட்டைத் தொழில் மயமாக்குவதன் மூலம் நாட்டின் துரித வளர்ச்சிக்கு அடிப்படை அமைப்பதுமாம்.

இத்திட்ட காலத்தில் இரும்பு, எஃகுத் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஏனெனில் நாட்டின் துரித பொருளாதாரத் வளர்ச்சிக்குத் தேவையான இயந்திரங்களைத் தயாரிப்பதற்கு இரும்பும் எஃகும் மிக இன்றியமையாதன. மேலும் துரித வளர்ச்சிக்குத் தேவையான நிலக்கரி, சிமிண்டு, இரசாயனப் பொருள்கள் போன்ற அடிப்படைத் தொழில்களிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. அடிப்படைத் தொழில்களில் அதிக முதலீடு செய்வது நுகர்வோர் பொருள்களின் தேவையைப் பெருக்குகிறது. ஆனால் குறுகிய காலத்தில் நுகர்வோர் பொருள் உற்பத்தி பெருகுவதில்லை. மேலும் இம் முதலீடு அதிகமான தொழிலாளர்க்கு வேலை வாய்ப்பளிப்பதில்லை. எனவே மூல தனத்தைக் குறைவாகப் பயன்படுத்தி தேவை பெருகியுள்ள நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழில்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டது. தனியார் துறையில் ரூ. 2,400 கோடி செலவு செய்ய முடிவு செய்யப்பட்டது. இவ்விரண்டு துறைக்கும் சேர்த்து மொத்த முதலீடு ரூ. 6,200 கோடியாகும். ஆனால் இத் திட்டக்காலத்தில் ஆன பொதுத்துறைச் செலவு ரூ. 4,600 கோடிதான்.

நாம் இப்பொழுது முதல் திட்ட காலத்திலும் இரண்டாவது திட்டகாலத்திலும் ஏற்பட்ட பொதுத்துறைச் செலவை ஒப்பிட்டு நோக்குவோம்.

அட்டவணை 1

பொதுத்துறைச் செலவு பகிர்ந்தளிப்பு

துறை	முதல் திட்டம்		இரண்டாவது திட்டம்	
	செலவு	விகிதம்	செலவு	விகிதம்
1. விவசாயமும் சமுதாய முன்னேற்றமும்	291	15	530	11
2. பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனம்	310	16	420	9
3. சக்தி	260	13	445	10
4. கிராம, மற்றும் சிறு தொழில்கள்	43	2	175	4
5. தொழிற்சாலைகள், தாதுப் பொருள்கள்	74	4	900	20
6. போக்குவரத்தும் செய்திப் போக்கு வரத்தும்	523	27	1300	28
7. சமூகப்பணிகள், ஏனையவை	459	31	820	18

(ஆதாரம் மூன்ருவது ஐந்தாண்டு திட்டம், பக்கம் 33.

மேலும் இத்திட்ட காலத்தில் தொழிலாளர் செறிவுடைய தொழில்களைத் தோற்றுவிக்க வேண்டியது மிக அவசியமானது. ஏனெனில் வேலையில்லாமையை ஒழிக்காவிடில் சோஷலிஸம், திட்டம் என்பதெல்லாம் பயனற்றதாகி விடும். எனவே இரண்டாவது திட்டகாலத்தில் நகர்ப் புறங்களில் மட்டும் தொழிற்சாலைகளை உருவாக்காமல், கிராமப் புறங்களிலும் சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் உருவாக்கி வேலைவாய்ப்பைப் பெருக்க உத்தேசிக்கப்பட்டது.

மேலும் திட்டத்தால் ஏற்படுகின்ற நாட்டு வருமான உயர்வு ஒரு சில பெரும் பணக்காரர்களிடை குவியா வண்ணம் தடை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டாவது திட்டகாலத்தில் பொதுத் துறையில் ரூ. 4,800 கோடி செலவு செய்ய திட்டமிடப்பட்டது. இத்தொகையில் ரூ. 3,800 கோடி பொதுத் துறை முதலீட்டிற்கும் (Investment)

எஞ்சியுள்ள ரூ. 1,000 கோடி பொதுத்துறைச் செலவிற்கும் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டகாலத்தில் செலவழித்த தொகை (outlay) எல்லாத் துறைகளிலும் அதிகமாக இருந்த போதிலும், மொத்த முதலீட்டில் சதவிகிதமாக முதல் திட்டத்தோடு ஒப்பிட்டால், விவசாயமும் சமுதாய முன்னேற்றமும் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனம், சக்தி, சமூகப்பணி ஏனையவைகளில் முறையே 4, 7, 3, 5 சதவிகிதம் குறைந்துள்ளமையைக்காணலாம். இரண்டாவது திட்டகாலத்தில் கிராம மற்றும் சிறு தொழில்கள், தொழிற்சாலைகள், தாதுப் பொருள்கள் ஆகிய துறைகளின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டது என்பதை அறியலாம்.

இரண்டாவது திட்டத்தின் சாதனைகள்

1960—61 விலைவாசியைக் கொண்டு நாட்டு வருமான உயர்வைக் கணிப்போமானால், நம்முடைய நாட்டு வருமானம் இரண்டாவது திட்டகாலத்தில் 19.5 சதவிகிதம் உயர்ந்தது. தலா சராசரி வருமானம் 8 சதவிகிதம் உயர்ந்தது. இக்காலத்தில் நாட்டு வருமானமும், தலா சராசரி வருமானமும் எதிர்பார்த்த அளவுக்கு உயராததன் காரணம், மக்கள் தொகை 10.3 சதவிகிதம் உயர்ந்ததுதான். இரண்டாவது திட்டகாலத்தில் மூலதன உற்பத்தி விகிதம் 2:1 இருக்கும் என்று கணக்கிடப்பட்டது. ஆனால் மூலதன உற்பத்தி விகிதம் 3.86 : 1 ஆக உயர்ந்தது. இவ்வுயர்வுக்குக் காரணம் இரண்டாவது திட்டகாலத்தில் தொழிலாளர் செறிவுடைய தொழில்களில் அதிக முதலீடு செய்யாமல், மூலதனச் செறிவுடைய, நீண்டகாலத்தில் பயன் தரக்கூடிய, பெரும் தொழில்களில் முதலீடு செய்ததேயாகும்.

இரண்டாவது திட்ட காலத்தில் கனரக தொழிற்சாலைகள் பல நிறுவப்பட்டன. பெரும்பாலான தொகை அடிப்படைத் தொழில்களான இரும்பு, எஃகு, உரங்கள், கனரக பொறியியல் துறை, இரசாயனப்பொருள்கள், கனரக மின்சார சாதனங்கள் உற்பத்தி ஆகிய துறைகளில் முதலீடு செய்யப்பட்டது. இத்திட்டகாலத்தில் துர்க்காப்பூர், பிலாய், ரூர்கேலா ஆகிய மூன்று இடங்களில் இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் திட்டகாலத்தில் 139 ஆக இருந்த தொழில் உற்பத்திக் குறியீட்டெண் (Index of Industrial Production) 194 ஆக, திட்ட இறுதியில் உயர்ந்தது.

இரண்டாவது திட்ட காலத்தில் சிறு தொழில்கள் வளர்ச்சி போதுமானதாக இல்லை. இக்காலத்தில் தொழில் மூலப்

பொருள்கள், போக்குவரத்து வசதி ஆகிய துறைகளில் பற்றாக் குறை ஏற்பட்டது. பல துறைகளில் சம வளர்ச்சி ஏற்படவில்லை. அதனால் விலைவாசிகள் உயர்ந்தன.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் (1961-62 முதல் 1965-66)

இரண்டாவது திட்ட காலத்தில் நாட்டின் வறுமை சிறிதும் குறையவில்லை. வாழ்க்கைத் தரம் குறைந்தது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் பெருகின. இதற்கு முக்கிய காரணம் நாம் இரண்டாவது திட்டகாலத்தில் தொழில்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, விவசாயத் துறையில் போதிய கவனம் செலுத்தாததுதான் என்பதை உணர்ந்து, மூன்றாவது திட்ட காலத்தில் விவசாயத்திற்கு அதிக கவனம் செலுத்துவதென முடிவு செய்தனர்.

மூன்றாவது திட்ட காலத்தில் விவசாயத்திற்கு அதிமுக்கிய இடம் தந்த போதிலும், அடிப்படை மற்றும் கனரகத் தொழில் களையும் புறக்கணிக்கவில்லை.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்கள்

(1) திட்ட முதலீட்டின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 5% நாட்டு வருமான உயர்வு அடைந்து, இந்த நாட்டு வருமான வளர்ச்சியை, வரும் திட்டகாலங்களிலும் பெறும் வண்ணம் முதலீடு செய்தல்;

(2) உணவுத் துறையில் தன்னிறைவு அடைதல்; மேலும் தொழில்கள், ஏற்றுமதி ஆகியவைகளுக்கு தேவையான விவசாயப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குதல்;

(3) இரும்பு, இரசாயன தொழிற்சாலைகள், எரிபொருள்கள், சக்தி, இயந்திர கட்டுமானத் தொழில் ஆகிய அடிப்படைத் தொழில்களை விரிவடையச் செய்து, இந்தியாவைத் தொழில் மயமாக்குவதற்குத் தேவையான சாதனங்களை 10 ஆண்டுகளில் நாமே உற்பத்தி செய்யும் நிலையை உருவாக்குதல்;

(4) (அ) மனித சக்தியை முழு அளவுக்குப் பயன்படுத்துதல், கணிசமான அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்;

(ஆ) மேலும் 46 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, விவசாயத்தை சார்ந்துள்ள 70% மக்களை 60%க்கு குறைத்தல் முக்கிய நோக்கமாகும்;

(5) மக்களுக்குச் சம வாய்ப்பளித்து, வருமானம், செல்வம் இவைகளால் ஏற்படும் பெரிய ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, வருமான, செல்வ உயர்வைச் சமமாக பகிர்ந்தளித்தல்;

(6) இத்திட்ட காலத்தில் ஆண்டுக்கு 6 சதவிகிதம் குவிவு வளர்ச்சி (Cumulative Growth) அடைய திட்டமிடப்பட்டது.

அட்டவணை 2

மூன்றாவது ஐந்தாண்டு திட்ட செலவு

துறை	உத்தேசித்த செலவு மொத்தம்	உத்தேசித்த செலவு சதவீதம்	உண்மையான செலவு மொத்தம்	உண்மையான செலவு சதவீதம்
1. விவசாயமும் சமுதாய முன்னேற்றமும்	1,068	14	1.089	12.7
2. பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனம்	650	9	664	7.7
3. சக்தி	1,032	13	1,252	14.6
4. கிராம, மற்றும் சிறு தொழில்கள்	264	4	241	12.8
5. கட்டமைந்த தொழில்கள், சுரங்கத் தொழில்	1,520	20	1,726	20.1
6. போக்குவரத்தும் செய்திப் போக்குவரத்தும	1,486	20	2,112	24.7
7. சமூகப் பணிகள், ஏனையவை	1,500	20	1,493	17.4
	7,500	100	8,577	100.00

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் சாதனைகள்

மூன்றாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் நம் நாட்டு வருமானம், விவசாய உற்பத்தி, தொழில் உற்பத்தி, ஆகிய துறைகளில் எதிர்பார்த்த உயர்வு மிக அதிகமானவை என்று சொல்லலாம். எனவே நாம் எதிர்பார்த்த இலக்குகளைப் பல துறைகளில் பெற முடியவில்லை.

காட்டாக, நாம் ஆண்டு ஒன்றுக்கு 6 சதவிகிதம் குவிவு உயர்வு நாட்டு வருமானத்தில் அடைய எண்ணினோம். ஆனால் நாம் அடைந்ததோ 3.2 சதவிகித ஆண்டு உயர்வுதான். 1961-62ல் ரூ. 14,490 கோடியாக இருந்த நாட்டு வருமானம் 1965-66ல் ரூ.15,930 கோடியாக உயர்ந்தது. நாட்டு வருமானம் ஐந்தாண்டுகளில் 16 சதவிகிதம்தான் உயர்ந்தது. தலா சராசரி வருமானம் உயர்வதற்குப் பதிலாக உண்மையில் குறைந்து விட்டது.

உணவுதானிய உற்பத்தி 1961-62-ல் 79 மில்லியன் டன்னிலிருந்து 89 மில்லியன் டன்னுக 1964-65-ல் உயர்ந்தது. ஆனுல் திட்ட இறுதியில் உணவு உற்பத்தி 72 மில்லியன் டன்னுகக் குறைந்தது. உணவு தானிய உற்பத்தியில் எதிர்பார்த்த 6 சதவிகித ஆண்டு உயர்வுக்கு, நாம் பெற்றது 2°/₀ ஆண்டு உயர்வு தான். எண்ணெ வித்துக்களைப் பொறுத்தவரையில் நாம் எதிர்பார்த்தது 9.8 மில்லியன் டன்கள்; நாம் பெற்றதோ 7 மில்லியன் டன்கள்தான். சணல், பருத்தி ஆகிய துறையில் முறையே 5 மில்லியன், 5.2 மில்லியன் பேல்கள்தான் உற்பத்தி. ஆனுல் நாம் எதிர்பார்த்ததோ முறையே 6.2, 7.1 மில்லியன் பேல்களாகும்.

மூன்ருவது திட்டகாலத்தில் பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன வசதிகள் மூலம் நாம் நீர்ப்பாசன வசதி அளிக்க குறிக்கப்பட்ட இலக்கு 12.80 மில்லியன் ஏக்கராவாகும். ஆனுல் 5.50 மில்லியன் ஏக்கருக்குத்தான் புதிய நீர்ப்பாசன வசதி அளிக்க முடிந்தது. ஆனுல் சிறிய நீர்ப்பாசன வசதிகள் மூலம் நீர்ப்பாசன வசதி அளிக்க உத்தேசித்ததற்கு அதிகமாகவே நீர்ப்பாசன வசதி அளிக்க முடிந்தது. நில மீட்சியைப் பொறுத்தவரை நம் குறியீடு 3.60 மில்லியன் ஏக்கர்; ஆனுல் நாம் அடைந்ததோ 4.2 மில்லியன் ஏக்கராகும். இரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள் ஆகியவைகளை உபயோகிப்பதில் நாம் போதுமான முன்னேற்றம் அடைய முடியவில்லை.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தமட்டில் நாம் எதிர்பார்த்தது 12 மில்லியன் கிலோவாட்கள் ஆகும். ஆனுல் 1965-66-ல் நாம்பெற்றதோ 10.2 மில்லியன் கிலோவாட்கள்தான். கிராமங்களுக்கு மின்சாரம் அளிக்க உத்தேசித்த அளவு 43,000 மி.கி. தான். நாம் மின்சாரம் அளித்த கிராமங்களின் எண்ணிக்கை இந்த இலக்கையும் தாண்டி 54,500ஐ எட்டியது.

தொழில்கள், சுரங்கத் தொழில்களைப் பொறுத்த மட்டில் நாம் அடைய முடிவு செய்த வளர்ச்சி இலக்கு ஆண்டுக்கு 14% ஆகும். ஆனுல் நாம் பெற்றதோ 7% தான். இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் தொழில் மூலப்பொருள்களின் பற்ருக்குறை பெருகியதுதான். தோண்டி எடுக்கப்பட்ட இரும்புத் தாதுவின் அளவு 1960–61-ல் 11 மில்லியன் டன்னுக இருந்தது, 23 மில்லியன் டன்னுக 1965,66-ல் உயர்ந்தது.

இரும்பு உற்பத்தி 5.7 மில்லியன் டன்னுக 1960-61-ல் இருந்தது, திட்ட இறுதி ஆண்டான 1965-66-ல் 10 8 மில்லியன் டன்னுக

உயர்ந்தது. இராசயன உர உற்பத்தி 1960–61-ல் 153 ஆயிரம் டன்னிலிருந்து, 1965–66-ல் 844ஆயிரம் டன்னுக உயர்ந்தது. இதே காலத்தில் சிமெண்டு உற்பத்தி 8 மில்லியன் டன்னிலிருந்து .11 மில்லியன் டன்னுக உயர்ந்தது. உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரக் கருவிகளின் மதிப்பு இரண்டாவது திட்ட இறுதியில் ரூ. 7 கோடியாக இருந்தது, மூன்ருவது திட்ட காலத்தில், ரூ. 23 கோடியாக உயர்ந்தது.

ஆனுல் நுகர்வோர் பொருள்களைப் பொறுத்த மட்டில் மூன்ருவது திட்டகாலத்தில் இலக்கை அடைய முடியவில்லை.

போக்குவரத்தைப் பொறுத்த மட்டில் நாம் எதிர்பார்த்த அளவு சாலைகளை அமைக்க முடிந்தது. ஆனுல் தொழில் உற்பத்தி நாம் எதிர்பார்த்த அளவு ஏற்படாமையால் சாலைகள் பயன் படுத்தப்படாத நிலை ஏற்பட்டது.

மூன்ருவது திட்டகாலத்தில் மருத்துவ வசதிகள் பெருகின. டாக்டர்கள், தாதியர்கள் எண்ணிக்கை பெருகியது. குடும்ப நல மருத்துவ மனைகள் 1,649 ஆக 1961-ல் இருந்தது, 11,480 ஆக 1966-ல் அதிகரித்தது.

மூன்ருவது திட்ட காலத்தில் ஏற்பட்ட சீன, பாகிஸ்தான் போரினுலும், பருவ மழை பெய்யாத காரணத்தாலும் பல துறை களிலும் நாம் எதிர்பார்த்த பலனைப் பெற முடியவில்லை.

ஆண்டுத் திட்டங்கள் (Annual Plans)

மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்திற்கும் நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கும் இடைப்பட்டகாலத்தில், நான்காவது திட்டத்திற்குந் தேவையான அடிப்படையை உருவாக்குவது இந்த ஆண்டுத்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். இக்காலத்தில் விவசா யத் துறையில் துரித வளர்ச்சியடைய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அதிக உர உபயோகம், இயற்கை உரங்கள், விவசாயத்தில் விஞ்ஞானத்தை பயன்படுத்துதல் ஆகியவைகளின் மூலம் விவசாயப் புரட்சியை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள பட்டன. நான்காவது திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்பட் டுள்ள துறைகளுக்கு, ஆண்டுத் திட்டங்களில் முதலிடம் கொடுக் கப்பட்டது.

முதல் ஆண்டுத் திட்ட காலத்தில் பருவமழை சாதகமாக இருந்தமையால் உணவு தானிய உற்பத்தி 95.05 மில்லியன் டன்னுக உயர்ந்தது. இரண்டாவது ஆண்டுத் திட்டகாலத்தில்

94.01 மில்லியனுக் குறைந்து, 1969–70ஆம் ஆண்டில், அஃதாவது மூன்ருவது ஆண்டுத் திட்டகாலத்தில் 99.50 மில்லியன் டன்னுக உயர்ந்தது.

அட்டவணை: 3

ஆண்டுத் திட்டங்களில் முதலீடு (ரூபாய் கோடி கணக்கில்)

துறை	மூன்ருவது திட்டம்	1966–69	நான்காவது திட்டம்
1. விவசாயம், மற்றும் சார்ந்த துறைகள்	1,088.9	1,116.9	2,728.2
2. நீர்ப்பாசனம், வெள்ளத் தடுப்பு	664.7	457.1	1,086.6
3. சக்தி	1,252.3	1,182.2	2,447.6
4. கிராம, மற்றும்சிறு தொழில்கள்	240.8	144.1	293.1
5. தொழில்கள், தாதுப்பொருள்கள்	1,726.3	1575.0	3,337.6
6. போக்குவரத்தும் செய்திப் போக்குவரத்தும்	2,111.7	1,239.1	3,237.5
7. கல்வி	588.7	322.4	822.6
8. விஞ்ஞான ஆய்வு	71.6	51.1	140.3
9. சுகாதாரம்	225.9	140.1	433.5
10. குடும்ப நலத்திட்டம்	24.9	75.2	315.00
11. குடிநீர் வசதியும் துப்புரவும்	105.7	1 00.6	407.3
12. வீட்டுவசதி, நகர மற்றும் பிராந்திய வளர்ச்சி	127.6	3.	237.0
13. பின்தங்கியோர் நலம்	99.1	68.5	142.4
14. சமூக நலம்	19.4	12.1	41.4
15. தொழிலாளர் நலம், கைவினைஞர் பயிற்சி	55.8	35.5	39.9
16. ஏனைய திட்டங்கள்	173.1	123.5	192.3
	8,576.5	6,756.5	15,902,2

* (இறுதி கணக்கீட்டுக்குட்பட்டவை. நான்காவது ஐந்தாண்டு திட்ட சுருக்கம். 69—74. பக்கம்—20)

மேலும் இந்த இரண்டாவது ஆண்டுத் திட்டகாலத்தில் 12 சதவிகிதம் நாட்டு வருமானம் உயர நாம் திட்டமிட்டோம். ஆனல் 9 சதவிகிதந்தான் நாட்டு வருமானம் உயர்ந்தது. இந்த இரண்டாவது ஆண்டு ஏற்றுமதி ரூ. 1,275 கோடியாக உயரும் எனத் திட்டமிடப்பட்டது. ஆனல் ஏற்றுமதி ரூ. 1,197 கோடி அளவைத்தான் எட்டியது.

மூன்றுவது ஆண்டுத் திட்டம்

இக்காலத்தில் செலவழித்த மொத்த செலவு ரூ. 2,337 கோடியாகும். இக்காலத்தில் 5-லிருந்து 6 சதவிகித நாட்டு வருமான உயர்வு அடைய உத்தேசிக்கப்பட்டது. இத்திட்டகாலத்தில் திட்டச் செலவில் ரூ. 307 கோடி பற்றுக்குறை, நிதியாக்கத்தின் மூலம் சமாளிக்கப்பட்டது. மேலும் ரூ884 கோடி அயல் நாடுகளிலிருந்து உதவியாக எதிர்பார்க்கப்பட்டது.

இந்த மூன்று ஆண்டுத் திட்டங்கள் எதிர்பார்த்த பயனைத் தந்து, இந்தியா உணவில் தன்னிறைவு அடைய வழி செய்தன.

நான்காவது ஐந்தாண்டு திட்டம்

நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய நோக்கம் பொருளாதாரத்தை நிலைபேறுக்க அடையச் செய்து, நிலையின்மையை(Uncertanity) குறைத்து வளர்ச்சி, வேகத்தை உயர்த்துவதேயாகும். இத்திட்டகாலத்தில் உணவு உற்பத்திக் குறைவால் ஏற்படுகின்ற இடைஞ்சல்களையும், அந்நிய உதவி கிடைப்பதில் உள்ள நிலையின்மையையும் கருத்தில் கொண்டு திட்டமிடப்பட்டது. இத்திட்ட காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கி, உணவுக்கு அயல்நாடுகளை நம்பி வாழும் நிலையை அகற்ற முடிவு செய்யப்பட்டது. உள்நாட்டில், திட்டத்திற்குத் தேவையான மூலதனத்தை விலைவாசிகள் உயராவண்ணம் திரட்ட முயற்சிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. திட்டம் தொடங்கிய இரண்டு ஆண்டுகளில் பி. எல். 480 சட்டத்தின்கீழ் குறைந்த விலையில் இறக்குமதி செய்வதை நிறுத்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொருளாதாரத் துறையில் வலிவு பெற்று இந்திய நாடு தன்னைத்தானே சார்ந்துநிற்கும், நிலையை உண்டாக்குவதுதான். அதே நேரத்தில் தேவையான வளர்ச்சி, சோசலிச சமுதாயம் அமைக்கும் பாதையில் முன்னேற்றம், இவைகளும் இத்திட்டம் நோக்கங்களாகும்.

1. நாடு தன்னிறைவு பெற ஏற்றுமதி பெருகவும், இறக்குமதி குறையவும் விவசாயம், தொழில் உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. பற்றுக்குறை நிதியாக்கத்தைத் தவிர்த்து, விலைவாசி உயராவண்ணம் தடை செய்து, விலை நிலைபேறுக்கம் உண்டாக்க முடிவு செய்யப்பட்டது.

3. கிராம மக்களின் வருமானத்தை உயர்த்துவதற்கு விவசாய உணவுப் பொருள்களின் அளிப்பையும், விவசாய மூலப் பொருள்களின் அளிப்பையையும் உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

4. பெரும்பாலான மக்களுக்குத் தேவையான துணிகள், சர்க்கரை, மருந்துப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடப்பட்டது.

5. தன்னிறைவு குறிக்கோள் நிறைவேற, தொழில் துறையில் உரங்கள், பூச்சிக்கொல்லிகள், விவசாயக்கருவிகள், பம்புகள், டீசல் என்ஜின்கள், டிராக்டர் போன்றவை உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தத் திட்டமிடப்பட்டது.

6. தன்னிறைவு பெற இன்றியமையாத உலோகங்கள், இயந்திரங்கள், இராசயனப் பொருள்கள், சுரங்கத் தொழில்கள், சக்தி, போக்குவரத்துத் தொழில் ஆகியவைகளில் கையிலுள்ள திட்டங்களை உடனடியாக நிறைவேற்றவும், புதிய திட்டங்களைத் தேவையான பொழுது மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டது.

7. மக்கள் தொகை உயர்வைக் குறைத்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு குடும்ப நலத்திட்டத்தைப் பெருமளவில் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது.

8. மனித சக்தியைச் சீராகப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடிவு செய்யப்பட்டது.

அட்டவணை: 4

நான்காவது ஐந்தாண்டு திட்டச் செலவு விவரம்

துறைவாரி	பொதுத் துறை	தனியார் துறை	மொத்தம்
1. விவசாயம் மற்றும் சார்ந்தவை	2,118	3,600	3,718
2. நீர்ப்பாசனம் வெள்ளத்தடுப்பு	1,073		1,073
3. சக்தி	2,448	75	2,523
4. கிராம, மற்றும் சிறு தொழில்கள்	186	560	746
5. தொழில்கள், தாதுக்கள்	3,298	2,000	5,298
6. போக்குவரத்தும் செய்திப் போக்குவரத்தும்	3,197	920	4:117
7. சமுகப் பணிகள், மற்றவை	1,335	2,225	3,560
8. இருப்புக்கள்	—	1,600	—
	13,655	8,930	22,635

அட்டவணை 5

நான்காவது திட்ட இலக்குகள்

வகை	அளவு	1968—69 எதிர்பார்ப்பது	1973—74 இலக்குகள்
1. உணவு தானிய உற்பத்தி	மில்லியன் டன்னில்	98	129
2. பருத்தி	மில்லியன் பேல்களில்	6.0	8.0
3. அதிக விளைச்சல் ரக விளைச்சலில் உள்ள நில அளவு	மில்லியன் ஹெக்டேரில்	8.5	24.1
4. உர உபயோகம்	1000 டன்கள்	1,980	6,600
5. மொத்த நீர்ப்பாசன வசதியுடைய நிலம்	மில். ஹெக் டேரில்	36	43.1
6. உருக்கு	மில். டன்களில்	6.5	10.8
7. இயந்திரக் கருவிகள் :	ரூபாய் கோடிகளில்	24.7	65.0
8. துணி			
8.1 இயந்திர உற்பத்தி	மில்லியன் மீட்டர்களில்	4,400	5,100
8.2 செயற்கை இழைத் துணிகள்	,,	975	1,500
8.3 கைத்தறி, விசைத் தறி, காதி	,,	3,400	4,220
9. லிக்னைட் தவிர்ந்த கரி	மில்லியன் டன்களில்	69.5	93.5
10. சக்தி (நிறுவப்பட்ட சக்தி)	மில்லியன் கிலோ வாட் களில்	14.5	22.0
11. வாணிக ஊர்திகள்	1,000	380	585
12. கப்பல்-பளு தாங்கும் திறன்	மில்லி ஜி. ஆர். டி.	2.1	3.5

இந்த அட்டவணை திட்ட ஆரம்பத்தில் இருந்த நிலையையும், எதிர்பார்க்கும் இலக்கையும் காட்டுகிறது. 1972-ல் நடந்த பாகிஸ்தான்—இந்தியப் போரில் நம் நாடு அடைந்த மகத்தான வெற்றிக்குப் பிறகு உள்ள உற்சாக சூழ்நிலையில் நாம் நான்காவது

திட்டகாலத்தில் குறியீட்டை விஞ்சி பல துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்கி வளமான பாரதத்தை உருவாக்குவோம் என்பதில் ஐயமில்லை.

(5) வளர்ச்சிக் கோட்பாடுகளும் இந்தியப் பொருளாதாரமும்

பொருளாதார வளர்ச்சி

முன்னேற்றமடையாத பொருளாதாரத்தை வளர்ச்சியுடையச் செய்ய, பொருளியலார் இரு கொள்கைகளை வகுத்துள்ளனர். அவை சரிசம (நிலை) வளர்ச்சி(Balanced growth), சமனற்ற வளர்ச்சி (Unbalanced growth) எனப்படும்.

சமவளர்ச்சி (Balanced Growth)

விவசாயம், தொழில் போன்ற பொருளாதாரத்தின் பல அங்கங்கள் இணையான சம வளர்ச்சிபெற முயல்வதை பொருளியலார், சமவளர்ச்சி (Balanced Growth) என்பர். இதனைப் பேராசிரியர் W.A. லூயிஸ் (W.A. Lewis) பின்வருமாறு விவரிக்கிறார்: "தொழிலுக்கும், விவசாயத்துக்கிடையேயும், உள்நாட்டு நுகர்வுக்கான உற்பத்திக்கும், ஏற்றுமதிக்கான உற்பத்திக்கும் சமவளர்ச்சியை உண்டாக்க, நாட்டின் பல துறைகளுக்கான முன்னேற்ற திட்டங்கள் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்." சுருங்கக் கூறின் எல்லாத்துறைகளும் சீரான வளர்ச்சி அடைய வேண்டுமென்பதுதான் இம் முறையின் உண்மையான கோட்பாடாகும்.

சமனற்ற வளர்ச்சி (Unbalanced Growth)

இம்முறை வளர்ச்சியில் பல துறைகளிலும், சமவளர்ச்சி அடைய முடியாத வகையில் மூலதனப்பற்றாக்குறை, தொழில் திறமை குறைவு, தொழில் முனைவோர் பற்றாக்குறை போன்ற இடர்ப்பாடுகளை உடைய நாடுகள், ஒருசில அதி முக்கியத் துறைகளில் மட்டும் முதலீட்டைப் பெருக்கி அதனால் உந்தப்பட்டு மற்ற துறைகளையும் வளரச் செய்யும் விதமே (முறையே) சமனற்ற வளர்ச்சியாகும். இம்முறையில் நாட்டின் வளர்ச்சித் தேவையான சில அதிமுக்கியத் துறைகளில் முதலீட்டுப் பெருக்கம் எவ்வாறு வளர்ச்சிக்கு வழிகோலுகிறது என்பதைக் காண்போம். எடுத்துக்காட்டாக ஒரு நாட்டில் சமூகநல, பொது மூலதனம் (Social overhead Capital) அதிகரிக்கப்படுமானால், அங்கு மின்சக்தியும் போக்குவரத்து வசதியும் தேவைக்கு அதிகமாகப் பெருகும். இப்பெருக்கம்

புதிய உற்பத்தித் தொழில்கள் தோன்ற வழி வகுக்கும். அல்லது சில நாடுகளில் பொருள் உற்பத்தி முதலில் பெருகும். சமூகநல முதலீடு இல்லாததால் முதலில் மின்சக்தியும், போக்கு வரத்து வசதியும் போதுமான அளவிற்கு இருக்காது. உற்பத்தி பெருகப் பெருக, சமூகநல முதலீடும் பெருகும். எனவே இம்முறையிலும் இறுதியில் பலதுறைகளும் சமவளர்ச்சி அடையும்.

நம் நாட்டில் பொருளாதாரத்தை வளப்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும்முறை பலதுறை சம வளர்ச்சியும், ஒருங்கிணைந்த (Comprehensive) திட்டமும் ஆகும். முதல் ஐந்தாண்டு திட்டகாலத்தில் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் மின்சக்தி உற்பத்தி முதலியவற்றிற்கு முதலிடம் தந்தது. ஏனெனில் தொழில்கள், நாட்டில் போதுமான உணவு உற்பத்தி யின்றியோ மூலப் பொருள்கள் உற்பத்தியின்றியோ வளர்ச்சி யடைய முடியாது. பலவித செல்வங்கள் இயற்கையிலே மிகுந்துள்ள நம் நாட்டில் சமவளர்ச்சி அடைவதற்குத் தேவை யான எல்லா வசதிகளையும் பெற்றுள்ளது.

முதல் திட்டகாலத்தில் விவசாயம் தானே வளர்ச்சியடையும் அளவுக்கு வளர்ந்துவிட்டதாகக் கருதினர். ஏனெனில் உணவு உற்பத்தி முதல் திட்டகாலத்தில் குறியீட்டையும் தாண்டி, 669 மில்லியன் டன்னாக உயர்ந்தது. பருத்தி, முக்கிய எண்ணெய் வித்து உற்பத்தியும் முறையே 45%, 8% அதிகரித்தன.

விவசாயத்தில் முதல் திட்டகாலத்தில் உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டதால் இரண்டாவது திட்டகாலத்தில் அடிப்படை மற்றும் கனரகத் தொழில்களுக்கு முதலிடம் கொடுத்தனர். ருஷ்ய அனு பவத்தால் உந்தப்பட்டு மக்லானோபிஸ் மாடலைப் (Mahalanobis Model) பின்பற்றினர். இத்திட்ட காலத்தில் தொழில் வளர்ச்சிக்கு முதலிடம் தந்தாலும், நாட்டின் விரைவான பல துறைகளிலும் சமவளர்ச்சியை மையக் கொள்கையாகக் கொண் டிருந்தனர். ஆனால் எண்ணியபடி விரைவான சமவளர்ச்சியை அடைய முடியவில்லை. ஏனெனில் விவசாயம் எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சியடையவில்லை. இது மூலதனப் பற்றாக்குறை யால் ஏற்பட்ட தன்று. விவசாய வளர்ச்சிக்குத் தேவையான தரமான விதைப் பெருக்கம், உர உற்பத்தி, நீர்ப்பாசன வசதி, நிலப் பாதுகாப்பு போன்றவைகளில் போதுமான முதலீடு செய்யாமை காரணமாகும். இரண்டாவது திட்டகாலத்தில் நீர்ப் பாசனம், மழைநீர் கிடைக்கும் ஒவ்வோர் ஏக்கர் நிலத்துக்கும் தரமான விதையும் தேவையான உரமும் அளிக்கத்

திட்டங்கள் தீட்டியிருந்த போதிலும் இவைகள் நிறைவேற்றப் படாததும் விவசாய உற்பத்திக் குறைவுக்குக் காரணமாகும்.

தொழில் முனையில் திட்டமிட்ட முயற்சி இரண்டாம் திட்ட காலத்தில்தான் துவக்கப்பட்டது. தொழில்களுக்குக் கொடுக்கப் பட்ட முக்கியத்துவம் தவறானதாக இருந்ததால், எதிர்பார்த்த அளவு வளர்ச்சியைப் பெற இயலவில்லை. மகலானோபிஸ் மாடலில் (Mahalanobis Model) கனரகத் தொழில்களுக்கும் இரும்புக்கும் அதிக முதலீடு ஒதுக்கப்பட்டிருந்தாலும், இம்முறையில் இரும்பைப் பயன்படுத்துவதில் எத்தொழிலுக்கு முதலிடம் தர வேண்டும் என்பதைத் தெளிவாக்கவில்லை. இவ்விரும்பைச் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ள மிகச் சிலருக்குப் பயன்படும் நுகர்வோர் உறுதி நிலைப் பொருள்களை உற்பத்தி செய்யவோ (Consumer durable goods), அல்லது பெரும்பாலோருக்குத் தேவைப்படும் நுகர்வோர் பொருள்களை (Consumer goods) உற்பத்தி செய்யவோ பயன்படுத்தலாம். நம் நாட்டில் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ள மிகச் சிலருக்கே பயன்படும் நுகர்வோர் நிலைப் பொருள்களை உற்பத்தி செய்யவே இரும்பு பயன்படுகிறது. இந்த மூலப் பொருள்களை, மிகப் பெரும்பாலோருக்குப் பயன்படும் நுகர்வோர் பொருள்கள் உற்பத்தி செய்திருந்தால், நம் நாட்டில் அண்மைக் காலத்தில் காணப்பட்ட பற்றுக் குறையைப் போக்கியிருக்க முடியும் என்கிறார் பேராசிரியர் கே. என். ராஜ்.

மூன்றாவது திட்டகாலத்தில் விவசாயத் துறையில் எதிர் பார்க்கப்பட்ட வளர்ச்சி 5%; நாம் அடைந்ததோ 2.5%. தொழில் துறையில் நாம் எதிர்பார்த்த வளர்ச்சி 14%; ஆனால் அடைந்ததோ 5.7%.

நாம் மூன்று ஐந்தாண்டு திட்டங்களில் பின்பற்றிய முறை யால் இந்திய சிக்கலைத் தீர்க்க இயலவில்லை. இம்முறை நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதில் வெற்றியடையவில்லை. எனவே இனிவரும் திட்டங்களில் விவசாயத்துக்கோ, தொழிலுக்கோ மட்டும் முதலிடம் தந்தால் போதாது. இத்துறைகளில் உள்ள பலவேறுபட்ட கூறுகளிலும் (எடுத்துக் காட்டாக, நீர்ப்பாசனம், தரமான விதைப் பெருக்கம், உற்பத்திப் பெருக்கம் போன்றவைகளில்) வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு முறையாகச் செய்தால்தான் பலதுறை சமவளர்ச்சியை அடைய இயலும். எனவே இங்கு முதலீடு பற்றாக்குறை இல்லை. முதலீடு செய்கின்ற முறையில்தான் குறைபாடு. இக் குறைபாட்டைக் களைந்தால் நாம் பல துறைச் சரிசம வளர்ச்சி (Balanced Growth) அடைவது எளிதாகும்.

(6) பொருளாதார முன்னேற்றத்தில் மக்கள் பங்கு

பொருளாதார முன்னேற்றமென்பது தொழில் நுட்பத்திறன் முன்னேற்றத்தால் உற்பத்தியைப் பல துறைகளிலும் பெருக்கு வதைப் பொறுத்தேயுள்ளது. ஆனால் இதை வேறுநாடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட தொழில் நுட்ப அறிவை அப்படியே பயன் படுத்துவதால் பெறமுடியாது. நம் நாட்டுச் சூழ்நிலைக்கேற்ற வாறு அவைகளை மாற்றிப் பயன்படுத்தவேண்டும். பொருளாதார முன்னேற்றம் பொருளியல் காரணங்களை மட்டும் சார்ந்தது அல்ல. அது மக்களின் நோக்கம், செயல், சூழ்நிலை, ஏனையவை களையும் பொறுத்துள்ளது. மிக முக்கியமான தேவை யாதெனின் முன்னேற வேண்டும் என்ற அவா உடையவர்களாக மக்கள் இருக்கவேண்டும். மேலும் புதிய முறைகளைக் கண்டுப்பிடித்து, புதிய உற்பத்தியைப் பெருக்கவல்ல முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நாடு முன்னேற நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் எழவேண்டும். முன்னேறாத நாடுகளில் மக்களின் பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள், சாதிப்பிரிவுகள், கூட்டுக்குடும்ப முறை, சொத்துரி மைச் சட்டங்கள் ஆகியவை முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன எனப் பொருளியலார் கருதுகின்றனர். இவைகளில் மாற்றம் ஏற்பட்டாலன்றி நாடு முன்னேற இயலாதென்பது திண்ணம்.

மத நம்பிக்கையும் மக்கள் நடத்தையும்

பொருளாதார முன்னேற்றத்தில் மத நம்பிக்கையும் மக்கள் நடத்தையும் நேரடிப் பங்கு கொண்டுள்ளன. மதமறுமலர்ச்சியால் தோன்றிய மதப்பிரிவுகளான பியூரிட்டனிசம் (Puritanism), கல்வனிசம் (Calvanism) ஆகியவை மக்களிடையே ஒழுங்கு, கடின உழைப்பு, திறமை, நேர்மை, சேமிக்கும் பழக்கம் ஆகியவைகளை வலியுறுத்தின. பிராட்டெஸ்டென்டிஸம் (Protestantism) மக்களை உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய வழிகளில் கவனம் செலுத்தி, செல்வத்தைப் பெருக்கித் தங்கள் சமூக மதிப்பையும் பலத்தையும் பெருக்கிக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியது. இவை யெல்லாம் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத சூழ்நிலை யாகும். ஆனால் நம் நாட்டில் இந்து மதமோ, இதற்கு ஒவ்வாத ஒரு தத்துவத்தைப் பின்பற்றுகிறது. ‘உலகம் நிலையானது அல்ல. உலகப்பொருள்களில் உள்ள பற்றை விட்டொழிக்க வேண்டும். அதுவே இறைவனை அடைய வழி’ என்று வலியுறுத்துகின்றது. ஒரு இந்து தன்னுடைய இன்றைய வாழ்க்கை, தொழில், சாதி

செல்வம், அவன் உடைமைகள் அனைத்தும் தன்னுடைய 'கர்மா'வின் பயன் (முன்வினைப்பயன்) என்று ஏற்றுக் கொள்கிறான். இது அவனுடைய 'தலைவிதி, தலையெழுத்து; அதை இந்த ஜென்மத்தில் மாற்ற முடியாது' என்ற உறுதியான நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறான். இதற்கு மேல் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்ற தப்பெண்ணம் அவன் மனத்தில் வேரூன்றி விடுகிறது. இதனை மாற்றத் தமிழகப் பெரும் புலவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலவாம். உழைப்பால் உயரலாம் என்பதை மக்களுக்கு வலியுறுத்த எண்ணிய வள்ளுவர்,

> ''முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
> இன்மை புகுத்தி விடும்'' (616)
>
> ''தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
> மெய்வருந்தக் கூலி தரும்'' (619)

என்கிறார். மேலும் மதம் எவ்வெவ்வகையில் பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கிறதென்பதைக் காண்போம். முன் பெல்லாம் இந்துக்கள் அயல் நாட்டோரோடு தொடர்பு கொள்ளக் கூடாதெனவும் கடல் கடந்து செல்லக் கூடாதெனவும் தடை இருந்தது. இதனால் இயற்கையாகவே இந்துக்கள் அந்நிய மூலதனத்தையோ, தொழில் நுட்ப அறிவையோ பயன்படுத்த முடியவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அயல்நாட்டவர்தான் நம் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முன்னோடிகளாக விளங்கினர். அதன் பிறகு பம்பாயில் உள்ள பார்சி இனத்தவர்தான் மேல்நாட்டுத் தொழில் முறையைப் பின் பற்றி, புதிய தொழில்களை ஆரம்பித்தனர் என்று சொல்லலாம். இதனால் நாம் அறிவது யாதெனின் மதக்கட்டுப்பாடுகள் நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதே. ஆனால் நம் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நம் நாட்டின் மக்களிடத்தில் முழு அளவு மாற்றம் ஏற்பட்டால்தான் நாடு விரைவான முன்னேற்றம் அடைய முடியுமென்பதில் சந்தேகமில்லை. இதனை மிக அழகாகப் பேராசிரியர் W. A. லூவீஸ் என்பார் பின்வருமாறு கூறுகின்றார்: 'பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ள, பொறுத்துக்கொள்ள முடியாத, மதக் கோட்பாடுகளைப் பொறுமையாகக் கடைப்பிடிப்பதன்மூலம் நாட்டின் வளர்ச்சியைக் குன்றச் செய்யலாம். மாறாக வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஒளியாக அமைகின்ற புதிய நம்பிக்கைக்கு மாறி, பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கலாம்'.

இதனால் மதம் வளர்ச்சிக்கு வழியாகவும் இருக்கலாம்; தடையாகவும் இருக்கலாம் என்பது தெளிவாகும். எனவே நம் நாடு விரைவான வளர்ச்சி அடைய வேண்டுமானால் ஒழுக்கம், கடின உழைப்பு, திறமை, நேர்மை, சேமிக்கவேண்டும் என்ற எண்ணம் ஆகியவைகளை வலியுறுத்தும் வகையில் மதத்தின் பழக்க வழக்கங்கள் அமைய வேண்டும்.

சாதி முறை

சாதி என்பது பொதுவாகக் குறிப்பிட்ட தொழிலைச் செய்கின்ற பல குடும்பங்களின் கூட்டமேயாகும். அவர்கள் எல்லோரும் ஒரே சாதிப்பெயரைக்கொண்டு புராண காலத்தில் இருந்த இன்னார் எங்கள் முன்னோர் என்று கூறிக்கொண்டு வாழ்கின்றனர். நம் நாட்டில் ஒரு சாதியில் பிறந்தவன் இன்னொரு சாதியைச் சேர்ந்தவரோடு உறவு கொள்ள முடியாது. நம் நாட்டில் எண்ணிறந்த சாதிப் பிரிவுகள் உள்ளன. இன்று மதத்தில் பிறசாதியாரோடு கலந்துண்ணல், பிற சாதிகளில் மணம் புரிதல், இவையெல்லாம் தடை செய்யப்படுகின்றன. தடை மீறின், மீறியவனுக்குத் தண்டனை கொடுக்கும் முறையும் இருந்தது. சாதி விலக்கம் என்பது அந்தத் தண்டனைகளில் ஒன்று. இச் சாதிப் பிரிவால் சில நன்மைகளும் உள்ளன. முதலாவதாக, மக்கள் பல பிரிவுகளாக வேலையால் பிரிக்கப்படுவதால், சாதாரண உழைப்பு வேலைப்பிரிப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் குடும்ப வேலை ஒன்றிருப்பதால் வேறு வேலை தேடவேண்டிய அவசியமில்லை. ஒரு தொழில் செய்வோருக்கு மற்ற மக்களிடம் இருந்து போட்டி ஏற்படுவதைச் சாதிப் பிரிவு தடை செய்கிறது. ஆனால் சாதிப் பிரிவில்லாத நாடுகளில் மக்களிடையே போராட்டங்கள் ஏற்படுகின்றன. ''இல்லானுக்கும் உடையானுக்கும்'' இடையே நடந்த போராட்டமாகவே உலக வரலாறு கருதப்படுகிறது. ஆனால் நம் நாட்டில் மக்கள் தாங்கள் இவ்வாறு இருப்பதன் காரணம் தங்கள் கர்மாவே என நினைப்பதால் இங்கு போராட்டங்கள் இல்லை. நாளடைவில் இச் சாதிப்பிரிவுகள் வேலை காரணமாகப் பகுக்கப் படாமல், பரம்பரையாக ஆக்கப்பட்டன. இதனால்தான் சமூகப் பொருளாதார முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. சாதிப் பிரிவு முறையானது, ஒருவன் தன்னுடைய ஆயுள் முழுவதும் அதே தொழிலைச் செய்யத் தூண்டுவதால், குடும்பத் தொழிலைவிட்டுப் புதிய தொழிலை நாடிச் செல்ல முடிவதில்லை. இதனால் சாதிப்பிரிவு தொழிலாளியின் இடப்பெயர்ச்சியைத் தடை செய்கிறது. நம் நாட்டில் கைவினைஞர்களும் விவசாயிகளும் தங்கள் சொந்த மூலதனத்தைக்கொண்டே தொழில் செய்வதால், சாதிப்பிரிவு

மூலதன இடப்பெயர்ச்சியைத் தடை செய்கிறது. தொழிலாளரிடை இடப்பெயர்ச்சியின்மையால், ஆங்காங்கே போட்டியற்ற நிலைமையேற்பட்டு உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. சாதிப் பிரிவுகள், மூலதனம், உழைப்பு, நிர்வாகம் இவை நான்கும் இணைந்து கூட்டுறவு முறையில் செயல்படுவதைத் தடை செய்கின்றன. சாதிப் பிரிவு, மக்களை அவர்களுடைய வேலையை அவர்கள் திறமைக் கேற்றவாறு தேர்ந்தெடுத்துக்கொள்வதைத் தடை செய்கிறது. மக்கள் தங்கள் சாதிகளால் குலத்தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இவை முன்பு மட்டுமல்ல; இப்பொழுதும் உண்மையே. சான்றாக, கல்கத்தாவில் முன்பு நெசவுத்தொழிலில் ஈடுபட்டிருந்த நாமின்ஸ் (Nomins), டாண்டிஸ் (Tantis) போன்ற சாதியினர் பெரும்பாலும் நெசவாலைகளில் நெய்தல் பிரிவிலேயே வேலை தேடுகின்றனர். பின் தங்கிய மக்கள் தோல்பதனிடும் தொழிற்சாலையிலும், தோல் பொருள்கள் தொழிற்சாலையிலுமே வேலை தேடுகின்றனர். எனவே நம் நாட்டில் மக்கள் வேலையைத் தங்கள் திறமைக் கேற்றவாறு மேற்கொள்ளாமல் தங்கள் சாதிக்குரிய பரம்பரைத் தொழில்களிலோ, அதனையொத்த தொழில்களிலோ ஈடுபடுகின்றனர். இதையே நன்மையெனவும் கூறலாம். ஒரே தொழிலை ஒரு சாதியினர் செய்வதால் இனத்தாரோடு தொடர்பு கொள்ளவும், உழைப்பில் அவனுக்கு ஏற்படும் வெறுப்பையும், சக தொழிலாளிகளிடம் ஏற்படும் வெறுப்பையும் சாதிப்பிரிவு அகற்றுகிறது.

இச்சாதிப்பிரிவின் பெருங் கொடுமை யாதெனில் ஒரு சாரார் தீண்டத்தகாதவராக ஒதுக்கப்பட்டு, அவருக்குரிய வசதிகள் மறுக்கப்பட்டு வந்தன. அவருக்குப் போதுமான கல்வி அளிக்கப் படவில்லை. அவர்களை முன்னேற்றிக்கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்படாமலே இருந்தது. உயர் சாதி இந்துக்கள் தங்கள் விகிதத்திற்கு அதிகமாக உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்றனர். ஓரிரு பின்தங்கிய வகுப்பினர்கள் குமாஸ்தா, மேற்பார்வையாளர் உத்தியோகங்களைப் பெற முடிந்தது. அப்படி அவர்கள் பெற்ற பொழுது உயர்சாதியினர் எனக் கூறிக்கொள்ளும் சாதி இந்துக்கள், 'நாங்கள் கீழ் சாதிக்காரன் கீழ் வேலை செய்ய மாட்டோம்' என்றெல்லாம் வேதாந்தம் பேசினர்.

மேல் சாதி இந்துக்கள் உடல் கடின உழைப்பு என்பது தாழ்ந்த சாதிக்கே உரியது என எண்ணினர். அவர்கள் நிலங்களை உரிமையாகக் கொண்டிருந்தனர். அவர்களிடம் செல்வம் குவிந்தது. அவர்களே உயர் கல்வி பெற முடிந்தது. அவர்கள்

கீழ் சாதியினர் உழைப்பை உண்டு கொழுத்துத் திளைத்தனர். இதனால்தான் கீழ்ப்பட்ட மக்கள் உயர் சாதியினரை வெறுக்க ஆரம்பித்தனர்.

கீழ் சாதி மக்களின் வருமானம் மிகக் குறைவாக இருந்த படியால் நுகர்வும் குறைந்தது. இதனால் பொருள்களின் தேவை குன்றி, புதிய கண்டுபிடிப்புகள் தோன்றாமல் போயிற்று. மேல் சாதியினர் குமாஸ்தா வேலைதான் தேவலோகமென்று அதை நாடியதால் அங்கும் வருமானம் குறைந்தது. சாதிப்பிரிவுகள் எல்லா மக்களுடைய முன்னேற்றத்தையும் தடை செய்தமையால், பொருளாதார முன்னேற்றமும் தடைப்பட்டது.

சாதி அமைப்பின் சில பிற்போக்கான எண்ணங்களை ஒழித்துக் கட்ட, நாட்டின் சட்டப்படி அனைவரும் சரிநிகர் சமானமென்று வலியுறுத்தியும் உள்ளனர். இதனால் பல பழைய கட்டுப்பாடு களைத் தகர்த்துள்ளனர். கலப்பு மணம் சட்டப்படி செல்லும் என்பதன் மூலமும், கலப்பு மனம் புரிந்து கொள்வோருக்குப் பரிசுகள் வழங்குவன் மூலமும் சாதிப் பிரிவுகளையொழிக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தீண்டாமை முறையைக் கைக்கொண்டால் அதுவே தண்டிக்கப்படத்தக்க குற்றமெனச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. சாதிக்கேற்ற தொழில் என்ற முறை மாறி, யாரும் எத்தொழிலும் செய்யலாம் என்ற நிலையேற்பட்டு வருகிறது. சாதிக் கொடுமை களிலிருந்து விலக்குப்பெற மக்கள் நகரங்களை நோக்கிச்செல் கின்றனர். நகரங்களில் சாதித் திட்டங்களைக் கடைபிடிக்கத் தவறினால் தண்டனையுமில்லை; சமுதாயம் வெறுப்பதுமில்லை; ரெயிலிலோ, பஸ்ஸிலோ பயணம் செய்ய வேண்டியிருப்பதால் சாதிக் கோட்பாடுகள் தவிடு பொடியாகின்றன. இச்சாதிக் கொடுமைகளிலிருந்து விடுதலைபெற மக்கள் மதமாற்றங்கூடச் செய்யத் தயாராகிவிடுகின்றனர். ஆனால் இப்பொழுது இந்து மதத்தின் வேண்டாத கட்டுப்பாடுகள் குறைந்து வருகின்றன. ஆனாலும் சாதிகளை ஒழிப்பது இயலாத காரியம் என்பது, சாதி களுக்குள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்லும் பூசல் களால் அறியப்படுகிறது. மக்களில் சிலர், உயர் சாதிக்காரர்கள், அரசுப் பணிபெறவும் கல்விக் கூட்டங்களில் சலுகைகள் பெறவும், வேண்டுமென்று தங்களைப் பின்னடைந்த வகுப்பினர் என்று கூறிக் கொள்ள விரும்புகின்றனர். சாதித் திட்டம் ஏற்றத்தாழ்வினை நிலை நாட்டுகிறது.

சமூக சீர்திருத்தவாதிகள் இந்த வகுப்புப் பிரிவினையை ஒழித்துக்கட்ட முயன்றும், முடியாது அவதிப்படுகின்றனர். அரசினரும் தனியார்களுடன் சேர்ந்து இந்த முறையை மாற்ற நீண்ட உழைப்பை மேற்கொள்ள வேண்டும். இதில் காணும் அநீதிகளுக்கு எந்த நபரும் பொறுப்பில்லை. வரலாற்று வழியில் நெடுங்காலமாக வந்த சீர்கேடுதான் இது. இதற்கு எந்த மனி தரும், வகுப்பும் பொறுப்பில்லை எனக்கொள்ளுதல் வேண்டும். சீர் திருத்தத்தை நாம் விரும்ப வேண்டியதுதான். ஆனால் அதற்காகப் பிற வகுப்பினங்களின் மீது வெறுப்புக் காண்பித்து, தாக்குவது தவறானது. கிங்ஸ்லி டேவிஸ் மிக அழகாகப் பின்வருமாறு கூறு கிறார்: ''கிராமங்கள் மேலோங்கியிருக்கும்வரை சாதிப் பிரிவுகளை அகற்றுவது கடினம். ஏனெனில் சாதியானது இந்துக்களின் மதத் திலும் நல்ல நடத்தைக்குரிய விதிகளிலும் வேரூன்றிக் கிடக்கிறது.''

எனவே சாதிப்பிரிவுகள் அகல வேண்டுமெனில் நகரங்கள் எழவேண்டும் என அறிகிறோம். திட்டமிட்ட பொருளாதார முன்னேற்ற முயற்சிகள் சாதிப் பிரிவுகளை அறவே யொழித்து, புதிய சமுதாயத்தை உருவாக்கும் என நம்புவோமாக.

கூட்டுக் குடும்ப முறை

கூட்டுக் குடும்ப முறை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு முன்னோரை அடிப்படையாகக் கொண்ட பல உறவினர்கள் ஒன்று கூடி வாழ்தல் கூட்டுக்குடும்ப முறையெனப் படும்; அல்லது, அக்குடும்பத்தில் அநேக தலைமுறைகளும், அவற்றில் பிரிவுகளும் உண்டாகி ஒன்றாக வசித்து வரலாம். இம்முறையில் சொத்து குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும் பொதுவானது. எல்லோரும் இணைந்து செயல்பட்டனர். வருமானமும் செலவும் எல்லோருக்கும் பொதுவாக இருந்தன. மக்கள்தொகை குறை வாகவும், நிலப்பரப்பு அதிகமாகவும் இருந்த காலத்தில் இம்முறை தோன்றியதாகும். இம்முறை கூட்டுறவுக் கோட்பாட்டைப் பின்பற்றிய ஒரு ஸ்தாபனமாகும். நம் நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 70 சதவிகித மக்கள் பெரும்பாலும் கூட்டுக் குடும்ப மாகவே வாழ்ந்து வருகின்றனர். இம்முறையில் உற்பத்தியும் நுகர்வும் கூட்டுறவு முறையில் நடைபெறுகிறது. இம்முறையில் குடும்பத்தார் அவரவர் திறமைக்கேற்றபடி வேலை செய்து அதன் பயனைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதால் ஒழுங்கான உழைப்பு வேலைப்பிரிப்பு (Division of Labour) ஏற்பட்டு, உற்பத்தி சீராக இருந்தது. இங்கே சுயநலம் இல்லை. அவரவர் திறமைக்கேற்றபடி உழைத்துத் தேவையைப் பெறுகின்றனர். இக்கூட்டுக் குடும்ப முறை ஒரு காப்பாக அமைந்து வேலையற்றோர். இளைஞர்,

அநாதைகள், கை காலிழந்தோர், விதவைகள், வயதானவர்கள், செலவாளி அனைவரையும் காப்பாற்ற முடிந்தது. இம்முறையில் பொருளாதார சாதனங்கள் ((Economic Resources) வீணாவது தடை செய்யப்படுகிறது. இம்முறையில் குடும்பச் சாதனங்கள், பண்ணைக் கருவிகள் ஆகியவற்றின் செலவு மிகக் குறைவு. இவர்கள் தங்கள் குலப்பெருமையைக் காக்கவும் நிலைநாட்டவும் கடினமாக உழைத்துச் செல்வம் சேர்க்கின்றனர்.

பிழைப்புக்காகவே உள்ள பொருளாதாரத்தில் கூட்டுக்குடும்ப முறையில் சமூகப் பொருளாதாரப் பயன்பாடு உள்ளது. ஆனால் இதுவே தற்பொழுது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக நிற்கிறது. பொருளாதார வளர்ச்சி, கடினமான உழைப்பும் அதனால் கிடைக்கின்ற உற்பத்தியின் பயனை அனுபவிப்பதனால் மேலும் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தையும், ஊக்கத்தையுமே பொறுத்துள்ளது. கூட்டுக் குடும்ப முறை தனிப்பட்டோர் திறமைக்குத் தேவையான ஊக்கத்தை அளிப்ப தில்லை. ஏனெனில், அவன் உழைத்தாலும் உழைக்காவிட்டாலும் அவன் பங்கு கிடைக்கும் என்ற நிலையேற்படுவதால், தனி நபருக்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாவ தில்லை. அவனுடைய அதிக உழைப்பினால் கிடைக்கின்ற பயனை அவனே முழுதும் அடைய முடியாமல், அதனையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. இதனால் தனிப்பட்டோர் முயற்சி குன்றுகிறது, ஒரு குடும்பத்தில் சார்ந்துள்ளோருக்கும் வேலை செய்யாதவர்களுக்கும் வருமானத்தில் பங்கு உண்டு என்றால், உழைக்க வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டே போகும். இம்முறையினால் விளையும் முக்கிய குறை யாதெனின், குடும்பத்தார் அனைவருக்கும் பொருளாதார பாதுகாப்பளித்தது; ஆனால் அதே நேரத்தில் உழைத்துத் தங்கள் பொருளாதாரத் தகுதியை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமுடையோரின் உற்சாகத்தைத் தடை செய்கிறது.

கூட்டுக்குடும்ப முறை, பிறப்பு விகிதத்தைப் பெருக்குகின்ற முக்கிய காரணியாக உள்ளது. பெரிய குடும்பங்கள் விவசாயத்தை செய்யத் தேவைப்பட்டதால் இளம் வயதில் திருமணம் செய்து கொள்ளல், அதிகமான குழந்தைகளைப் பெறுதல், இவையெல்லாம் சாதாரணமாகக் கருதப்பட்டன. ஏனெனில் கூட்டுக் குடும்ப முறை உயிர் வாழ்வதற்குத் தேவையான குறைந்த பட்ச வசதி எல்லோருக்கும் கிடைக்கும் என்ற உறுதி இருப்பதால், யாரும் தங்கள் குடும்பப் பெருக்கத்தைப்பற்றிக் கவலைப்படாது

வாழ்ந்தனர். மக்கள் தொகை பெருகி, இன்றைக்கு நம் நாட்டில் வறுமை, மற்றும் பல பிரச்சினைகளுக்கும் இது அடிப்படையாக உள்ளது.

கூட்டுக்குடும்ப முறையில் நிலம் துண்டு துண்டாகப் பிரிக்கப் படுவது தடை செய்யப்படுகிறது. ஆனால் மேற்கத்திய நாகரிகம் நம் நாட்டில் வேரூன்றத் தொடங்கியதால் கூட்டுக் குடும்ப முறை கொஞ்சம் கொஞ்சமாகச் சிதறிச் சின்னாபின்னமாகி வருகிறது. இப்பொழுது நம் நாட்டில் பெரும்பாலும் திருமணம் ஆனவுடன் தந்தையை விட்டுப் பிரிந்து தனித்து வாழத் தொடங்குகின்றனர். மக்கள் தொகைப் பெருக்கத்தால் கூட்டுக் குடும்பத்தில் உள்ள வர்க்குப் போதிய வருமானம் கிடைக்காததால், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்கள் வேறு தொழில் தேடிச் செல்வதால் கூட்டுக் குடும்பம் சிதறத் தொடங்கியுள்ளது. போக்குவரத்தும், செய்திப் போக்குவரத்தும் வளர்ச்சியடைந்துள்ளதால் உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணமுடையோர், செயலாற்றல் படைத்தோர், குடும்பத் தொழிலை விட்டுப் புதிய தொழில்களை நாடிச்செல்வதாலும் கூட்டுக் குடும்ப முறை தன் முக்கியத் துவத்தை இழந்து வருகிறது. இப்பொழுது நாட்டில் பேரளவு உற்பத்தித் தொழில்கள், வெளி நாட்டினராலும் உள் நாட்டு மூல தனத்தைக் கொண்டும் தோன்றியதால் கிராமத் தொழில்கள் செயலற்றுப்போய் அதில் ஈடுபட்ட அனைவரும் கிராமங்களைவிட்டுத் தொழில் தேடி வெளியூருக்குக் குடியேற ஆரம்பித்துள்ளனர். கிராமங்களைவிட நகரங்களில் கூட்டுக் குடும்ப முறை நசித்து வருவதைக் கண்கூடாகக் காணலாம்.

நம் நாடு முன்னேற, நம் நாட்டு மக்களிடையேயுள்ள வேண்டாத—தேவையற்ற மதநம்பிக்கைகள், சாதிப்பாகுபாடுகள், கூட்டுக் குடும்ப முறை, இவைகளில் தேவையான தீவிர மாற்றம் ஏற்பட வேண்டும்.

2. நாட்டு வருமானம்

(1) நாட்டு வருமானக்கணக்கெடுப்பும் அதன் பயனும்

நாட்டு வருமான மதிப்பீட்டுக் குழு, 'நாட்டு வருமான மதிப்பீடு என்பது, அந்நாட்டில் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களையும் பணிகளையும் மறுமுறை எண்ணுமல் கணக்கிடப்பட்டது' என வரையறுக்கிறது. இதிலிருந்து நாம் மொத்த நாட்டு வருமானம் என்பது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற பொருள்களையும் பணிகளையும் குறிக்கிறது என அறிகிறோம். இது நாட்டின் செல்வத்தினின்றும் வேறுபட்டதாகும். நாட்டின் செல்வம், நாட்டு மக்களின் உடைமையாக இருக்கும் பொருள்கள் அனைத்தையும் குறிப்பதாகும். நாட்டு வருமானத்தை ஆண்டுக்கொருமுறை கணக்கெடுக்கின்றனர். சில நாடுகளில் நாள்காட்டி வருடத்தை, அஃதாவது சனவரி முதல் நாள் முதல் டிசம்பர் இறுதி நாள் வரை ஓர் ஆண்டு எனக் கணக்கெடுக்கின்றனர். சில நாடுகளில் பொருளாதார ஆண்டு (Financial Year), அதாவது ஏப்ரல் முதல் நாள் முதல் மார்ச்சு இறுதி நாள் வரை எனக்கொள்கின்றனர். நமது நாட்டில் நாம் இரண்டாவது கணக்கெடுப்பு முறையைப் பின்பற்றி வருகிறோம்.

நாட்டு வருமானம் கணக்கிடுவதன் பயன்

நாட்டின் பொருளியல் நிலையை நாட்டு வருமானம் காட்டுகின்றது. அதினின்றும் நாட்டு மக்களின் சராசரி வருமானம் என்ன என்பதை அறிய முடிகின்றது.

$$\text{தலா சராசரி வருமானம்} = \frac{\text{மொத்த நாட்டு வருமானம்}}{\text{மொத்த மக்கள் தொகை}}$$

நாட்டின் பொருளியல் வளர்ச்சியைத் திட்டமிட நாட்டு வருமான மதிப்பீடு இன்றியமையாதது. எதிர்காலத்தில் ஒரு வருமான

அளவைக் குறிக்கோளாகக் கொண்டே திட்டங்கள் வகுக்கப்படும். எனவே நாட்டு வருமான மதிப்பீட்டின் இன்றியமையாமையை அறிகிறோம்.

இந்தியாவில் நாட்டு வருமான மதிப்பீடுகள்

நாடு விடுதலை அடைவதற்கு முன் தாதாபாய் நௌரோஜி, வில்லியம் டிக்பி, பின்லே ஷிராஸ், ஷாவும் கம்பட்டாவும் 1921லும் V.K. R.V. ராவ் (1925—29)லும், 1931—32லும், R C. தேசாய் (1931—40லும்) நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்தனர். தனியார் இம்முயற்சியில் ஈடுபட்ட காரணத்தால் தேவையான எல்லாப்புள்ளி விவரங்களையும் சேகரிக்க இயலவில்லை. எனவே இம்முயற்சிகள் முழுப் பயனை அளிக்கவில்லை.

நாடு விடுதலை அடைந்த பிறகு, 1949ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் நான்காம் நாள் நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்ய பேராசிரியர் P.C. மக்லனோபிஸ், பேராசிரியர் D.R. காட்கில், டாக்டர் V.K.R.V. ராவ் ஆகிய மூவரடங்கிய குழு ஒன்றை இந்திய அரசு நியமனம் செய்தது. இக் குழு தனது முதலறிக்கையை 1951லும், இறுதியறிக்கையை 1954லும் வெளியிட்டது.

நாட்டு வருமானக் குழு அறிக்கையின் முக்கியாம்சங்கள்

நாட்டு வருமானக்குழு 1948—49, 49—50, 50—51 ஆண்டுகளில் வருமானத்தை அவ்வவ் ஆண்டுகளின் விலை விவரப்படிக் கணித்தது. கீழேயுள்ள அட்டவணை-6, பல தொழில்களும் நாட்டு வருமானத்தில் எவ்வளவு அளிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

நாட்டு வருமான மதிப்பீட்டுக்குழு அறிக்கையில் காணப்படும் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

1. விவசாயம் (கால் நடை, காடு, மீன் உட்பட) மொத்த நாட்டு வருமானத்தில் பாதியை அளிக்கின்றது.

2. சுரங்கத் தொழில், தொழிற்சாலைகள், சிறிய நிறுவனங்கள் நாட்டு வருமானத்தில் சற்றேறக்குறைய ஆறில் ஒரு பங்கை அளிக்கின்றன.

3. வாணிபம், செய்திப்போக்குவரத்து, போக்குவரத்துத் துறை 17-லிருந்து 19 சதவிகிதம் வரை நாட்டு வருமானத்தை அளிக்கிறது.

4. மற்றத்துறைகள் (தொழில்கள், அருங்கலைகள், நிர்வாகத் துறை, வீட்டு வேலை, வீட்டு மனைகள் ஆகியவை நாட்டு வருமானத்தில் 15 சதவிகிதத்தை அளிக்கின்றன.

5. பொருள் உற்பத்தி, (விவசாய சுரங்கத் தொழில், தொழில் நிறுவனங்கள், கைத்தொழில்) முதலிய துறைகள் மூன்றில் இரண்டு மடங்கு நாட்டு வருமானத்தை அளிக்கின்றன.

6. இவைகளிலிருந்து நாம் நாட்டு வருமானத்தில் பலதுறைகளின் பங்கைப் அட்டவணை—7 காட்டுகிறது.

அட்டவணை : 6

தொழில்கள் மூலம் கிடைக்கும் நாட்டு வருமானம்

	1950—51 நிகர உற்பத்தி	1949—50 நிகர உற்பத்தி	1948—49 நிகர உற்பத்தி
1. விவசாயம், மற்றும் அதனைச் சார்ந்தவை	4,890 (51.3)	4,490 (49.8)	4,250 (49.1)
2. சுரங்கத் தொழில், உற்பத்திக் கைத்தொழில்	1,530 (16.1)	1,500 (16.7)	1,480 (17.1)
3. வர்த்தக, செய்திப் போக்குவரத்தும், போக்குவரத்தும்	1,690 (17.7)	1,660 (18.4)	1,600 (18.5)
4. மற்றத் துறைகள்	1,440 (15.1)	1,380 (15.3)	1,340 (15.5)
5. நிகர உள்நாட்டு உற்பத்தி (காரணி அடக்க விலையில்)	9,550 (100.2)	9,030 (100.2)	8,670 (100.2)
6. அயல்நாட்டில் சம்பாதித்த நிகர வருமானம்	—20 (—0.2)	—20 (—0.2)	—20 (—0.2)
7. நாட்டு வருமானம்	9,530 (100.00)	(9,010 (100.00)	8,650 (100.00)
8. தலா சராசரி வருமானம் ரூ.	265.2	253.9	246.9

(அடைப்புக் குறிகளில் உள்ளவை மொத்த நாட்டு வருமானத்தில் அத்துறையின் அளிப்பு விகிதத்தைக் காட்டுகிறது.)

அட்டவணை 7

நிகர உள்நாட்டு உற்பத்தி சதவிகிதம்

	1950–51	1949–50	1948–49
1. சிறிய நிறுவனங்கள் (பெரும்பாலும் குடிசைத் தொழில்கள்)	65.8	64.9	64.4
2. பெரும் தொழில் நிறுவனங்கள்	10.7	10.7	11.0
3. வரையறுக்கப்படாத இனங்கள்	23.5	24.4	24.7

இதிலிருந்து இந்திய நாட்டில் சிறிய நிறுவனங்கள் சற்றேறக் குறைய மூன்றில் இரண்டு மடங்கு நாட்டு வருமானத்தை அளிக்கின்றன. ஆனால் பெரிய தொழில் நிறுவனங்களோ பத்தில் ஒரு பங்கு நாட்டு வருமானத்தையே அளிக்கின்றன. இதனால் இந்திய நாட்டில் அதிக உற்பத்தி சிறு நிறுவனங்களில் உற்பத்தியாகிறது என்பதை அறியலாம்.

அட்டவணை-8

பல துறைகளில் தலா சராசரி உற்பத்தித் திறன்

	வேலையில் ஈடுபட்டுள்ள மக்களின் சத விகிதம்	நாட்டு உற்பத்தியில் பங்கு	தலா சராசரி உற்பத்தித் திறன்
		(%)	ரூ
1. விவசாயம்	72.4	51.3	500
2. சுரங்கத்தொழில், உற்பத்தி மற்றும் கைத்தொழில்கள்	10.6	16.1	1,000
3. வாணிபம், போக்குவரத்தும், செய்திப்போக்குவரத்தும்	7.7	17.7	1,500
4. மற்ற துறைகள்	9.3	15.1	800

இந்த அட்டவணையிலிருந்து விவசாயத்தில் தான் சராசரி உற்பத்தித் திறன் மிகக் குறைவு என அறிகிறோம். சுரங்கத் தொழில், உற்பத்தி, கைத்தொழில்கள் ஆகியவற்றில் பெறும் தலா சராசரி உற்பத்தித் திறன், விவசாயத்தைப்போல் இரு மடங்காக உள்ளது. வாணிபம், போக்குவரத்து ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளோரின் தலா சராசரி உற்பத்தித்திறன், விவசாயத்தைப் போல் மூன்று மடங்காக உள்ளது. மற்ற துறைகளிலும் உற்பத்தித் திறன் விவசாயத்தைவிட 0.6 மடங்கு அதிகமாக உள்ளது தெரிகிறது.

பிற நாட்டு வருமானத்துடன் ஒப்பிடுதல்

மொத்த வருமானம், மக்கள் தொகையைச் சேர்க்காமல் கணக்கிடப்படுவது. எனவே பிறநாட்டு வருமானத்துடன் ஒப்பிடும்போது தலா வருமானத்தையே ஒப்பிட வேண்டும். இந்தியாவின் நாட்டு வருமானம் பெரிய தொகையாக இருக்கலாம். ஆனால் அதன் மக்கள் தொகையுடன் பார்க்கும்போது அது சிறிய தொகையே. இதனை உண்மை வருவாய் (real income) என்பர். அவ்வாறு நம் நாட்டு உண்மை வருமானத்தை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டால், அது மிகத்தாழ்ந்த நிலையில் உள்ளது என்பதைப் பொருளாதார முன்னேற்றம் பற்றிய பகுதியில் கண்டுள்ளோம்.

(2) நாட்டு வருமானமும் விவசாயமும்

இருபதாண்டு திட்ட மிட்ட தொழில் வளர்ச்சிக்குப் பின்னும், இந்தியாவில் விவசாயம் மிக இன்றியமையாத தொழிலாக இருக்கிறது. 70% மக்கள் இதனைச் சார்ந்துள்ளனர்.

நாட்டு வருமானத்தில் விவசாயத்தின் பங்கு

நாட்டு வருமானக் குழு மதிப்பீடுகளும், மையப்புள்ளி விவர அமைப்பின் மதிப்பீடுகளும் (Central Statistical Organisation), விவசாயமும் அதனைச் சார்ந்த துறைகளும் ஏறக்குறைய நாட்டு வருமானத்தில் பாதியை அளிக்கின்றன என்பதைக் காட்டு கின்றன.

அட்டவணை 9

சராசரி நிகர நாட்டு உற்பத்தி (NNP)

ஆண்டு	1948—49 (விலைப்படி) வழக்கமான தொடர்கள்	1960—61 (விலைப்படி) திருத்தப்பட்ட தொடர்கள்
1948—49	49.1	—
1950—51	49.0	—
1955—56	47.9	—
1960—61	46.4	51.3
1965—66	39.0	42.7
1966—67	38.0	42.2
1967—68*	41.6	45.7
1968—69*	—	44.6

* தற்காலிக மதிப்பீடு

மேலேகண்ட அட்டவணையிலிருந்து விவசாயம் நாட்டு வருமானத்தில் பெரும் அளவை அளிக்கின்றதென்றும், ஆனால் விவசாயத்தின் பங்கு நாளுக்குநாள் குறைந்து வருகிறது என்பதையும் அறிகிறோம்.

இனி நாம் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் நாட்டு வருமானத்தில் விவசாயத்தின் பங்கையும் வளர்ச்சியடையாத நாடுகளில் விவசாயம் ஏன் பெரும் பங்கை அளிக்கிறது என்பதைப் பற்றியும் இங்கு காண்போம்.

அட்டவணை 10

நாடு	நாட்டு வருமானத்தில் விவசாயத்தின் பங்கு %
இங்கிலாந்து	4%
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	5%
கனடா	7%
ஆஸ்திரேலியா	13%
இந்தியா	44%

இதிலிருந்து வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில் விவசாயம் மிகக் குறைந்த சதவிகித நாட்டு வருமானத்தையே அளிக்கிறது என்பதை அறிகிறோம். அந்நாடுகளில் விவசாயத்தைச் சார்ந்துள்ளோரும் மிகக் குறைவு. சான்றாக இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், மேற்கு ஜெர்மனி, கனடா போன்ற நாடுகளில் 20% மக்களே விவசாயத்தைச் சார்ந்துள்ளனர். சில வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் விவசாயச் சார்பு 5% க்குக் குறைவாக உள்ளது. வளர்ச்சியடையாத நாடுகளில்தான் விவசாயச் சார்பு அதிகமாகவுள்ளது. எடுத்துக் காட்டாக எகிப்து, மலேசியா, பிரேசில் ஆகிய நாடுகளில் 65, 64, 58 சதவிகித மக்கள் முறையே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். மக்கள் விவசாயத்தைச் சார்ந்திருக்கக் காரணம் ஏனைய தொழில்கள், பெருகும் மக்கள் தொகைக்கு வேலைவாய்ப்புத் தர இயலாததே காரணமாகும்.

தொழில் வளர்ச்சியில் விவசாயத்தின் பங்கு

முக்கியமான தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை விவசாயம் அளித்து வருகிறது. சான்றாகப் பருத்தி,

சணல், சர்க்கரை, வனஸ்பதி, தோட்டத் தொழில் ஆகிய வற்றிற்குத் தேவையான மூலப்பொருள்களை அது நேரடியாக அளிக் கிறது. பல சிறிய தொழில்களும், குடிசைத் தொழில்களும் தங்களுக்குத் தேவையான மூலப்பொருள்களுக்கு விவசாயத்தை நம்பியுள்ளன. இப்பொழுது நமது நாட்டில் திட்டங்களின் மூலம் விவசாயச் சார்பற்ற இரும்பு எஃகு தொழிற்சாலைகள், இயந்திரக் கருவிகள் உற்பத்தி நிறுவனங்கள் போன்றவை வளர்வதால் விவசாயத்தின் இன்றியமையாமை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. எனினும் இந்நாடு விரைவில் வளர்ச்சி அடைய தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருட்களை அளிப்ப தால், விவசாயம் இன்றியமையாததாகிறது.

விவசாயமும் பன்னாட்டு வணிகமும்

இந்திய நாட்டின் ஏற்றுமதி வணிகத்தில், விவசாயப் பொருள் களான தேயிலை, எண்ணெய் வித்துக்கள், புகையிலை, மிளகு போன்றவை முக்கியப் பொருள்களாக உள்ளன. விவசாயப் பொருள்கள் ஏற்றுமதி நாட்டின் உற்பத்திப் பொருள்களில் 50 சதவீதமாகும். ஏற்றுமதியாகும் உற்பத்தி பொருள்களில் விவசாய மூலப் பொருள்களின் மதிப்பு 20°/₀. ஆக 70°/₀ நாட்டின் ஏற்றுமதி வணிகம் விவசாயத்தைச் சார்ந்துள்ளது. சமீப காலத்தில் விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி பெருகி வருகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் தேவையான இயந்திரங்களையும் மூலப் பொருள்களையும் இறக்குமதி செய்வதற்கான அன்னிய நாணயச் செலாவணி பெற, ஏற்றுமதி பெருக வேண்டும். எனவே நாட்டின் தொழில் வளர்ச்சி விவசாயத்தைச் சார்ந்துள்ளது.

விவசாயமுனையில் குறியீட்டு உற்பத்தியை அடைய முடிய வில்லையெனில் திட்ட முறையே பயனற்றதாகி விடுகிறது. உணவுத் தானியங்களின் பற்றுக்குறை உள்நாட்டில் விலைகளை உயர்த்தி; மேலும், அதிகரித்த கூலி, மற்ற செலவுகளுக்கு வழி கோலுகிறது. வேளாண்மையில் நல்ல விளைவு ஏற்படும் எனில், அது விவசாயியின் வாங்கும் சக்தியை அதிகரிக்கிறது. அதனால் உற்பத்திப் பொருள் களுக்கான விவசாயியின் தேவை பெருகுகிறது. உற்பத்திப் பொருள்களுக்கும் நல்ல விலை கிடைக்கிறது. சுருங்கச்சொல்வோ மெனில் விவசாயிகளின் செழிப்பே, தொழில் செழிப்பிற்கு வழி கோலுகிறது. இறுதியாக, மாநில அரசின் வருமானம் விவசாயச் செழிப்பைச் சார்ந்துள்ளது.

இதிலிருந்து வேளாண்மை இந்திய நாட்டின் முதுகெலும்பாய் அமைந்துள்ளது புலனாகும். வேளாண்மை செழிக்குமெனில் நாடும்

செழிக்கும். நமது நாட்டில் தலா சராசரி வருமானம் மிகக் குறைவு. நாட்டில் உள்ளோர் பெரும்பாலும் (71%) விவசாயத்தை நம்பியுள்ளனர். பொருளியலார் இந்திய நாடு விவசாயத்தைச் சார்ந்துள்ளவரை தனி மனிதனின் சராசரி வருமானம் விரும்பும் அளவுக்கு உயராது என்ற எண்ணங்கொண்டுள்ளனர். பொருளாதாரத் துறையில் நம் நாடு பின் தங்கியிருக்க முக்கிய காரணம் பெரும்பாலோர் விவசாயத்தைச் சார்ந்திருத்தலேயாகும். ஆனல் சில பொருளியலார் 'பின் தங்கிய விவசாயம் என்பது பொருளாதாரப் பின்தங்கிய நிலேயே யன்றி, பின்தங்கிய விவசாயம் பொருளாதாரப் பின்தங்கிய நிலேக்கு காரணமில்லே' எனக் கருதுகின்றனர். எனவே நாடு வளர்ச்சியடைய வேண்டுமெனில் வேளாண்மை வளர்ச்சி யடைய வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

3. விவசாயம்

(1) நிலச் சீர்திருத்தம்

நம் நாட்டில் நிலச் சீர்திருத்தம் ஏன்?

திட்டக்குழுவினர் பல குறிக்கோள்களை நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமெனக் கருதுகின்றனர். அவையாவன: (1) அதிக அளவு உற்பத்தியைப் பெருக்குதல், (2) வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்குதல் மூலம் நிறைவுடை வேலைவாய்ப்பை (Full Employment) உருவாக்குதல், (3) பொருளாதார ஏற்றத்தாழ்வு களைக் குறைத்தல், (4) சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்குச் சமூக நீதி வழங்குதல் போன்றனவாம். இவைகளை அடைய நமது சமூக அமைப்பில் கிராம வளர்ச்சிக்குத் தடையாக உள்ளனவற்றை நீக்குதல் இன்றியமையாததாகும்.

விவசாய உற்பத்தி இரண்டு வகைக் காரணிகளைச் சார்ந் துள்ளது. ஒன்று நுட்பத் திறன் (Technology); மற்றொன்று (Institutional Setup) நிறுவக அமைப்பு முறை. நுட்பத்திறன் காரணிகள் என்பன, நில அமைப்பு முறையில் சீர்திருத்தம் ஏற்படா விட்டாலும் உற்பத்தியைப் பெருக்க வல்லவை. இரண்டாவது காரணி நில அமைப்பு முறை. இதில் சீர்திருத்தம் ஏற்பட்டால் அன்றி உற்பத்தியைப் பெருக்குவது கடினம். அவையாவன : நிலத்தை மறுபடியும் பகிர்ந்து உழுபவனுக்கே நிலத்தை உடைமை யாக்குதல், பயிரிடப்படும் நிலத்தின் அளவைப் பெரிதாக்குதல், குத்தகைக்குப் பயிர் செய்யும் விவசாயிகளுக்குப் பாது காப்பளித்தல், குத்தகை வாரத்தைக் கட்டுப்படுத்துதல் போன்றனவாம். இன்று நம் நாட்டு விவசாயத்தில் காணப்படும் சிறிய வயல்களும், நில உட்பிரிவுகளும், துண்டாக்கப்படுதலும், குத்தகைதாரனுக்குப் பாதுகாப்பு இல்லாமையும், அதிக வாரமும்தான் உற்பத்திக் குறைவிற்கு முக்கிய காரணங்களாகும்.

இதனால் விவசாயி நிதி சேமித்து உற்பத்தி பெருக முதலீடு செய்ய இயலவில்லை. இதனைச் சரிசெய்ய இருவகையான வழிகளை இரு சாரார் கூறுகின்றனர். சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் பெரிய நிலச்சுவான்தாரர்களும், குட்டி நிலச்சுவான்தாரர்களுமே இதற்கு முக்கிய காரணம் எனக் கருதுகின்றனர். மற்றுமொரு சாரார், 'உற்பத்திப் பெருக்கம், தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட பிரச்னை. எனவே சிறந்த விவசாய முறையைப் பின்பற்றினால் உற்பத்தியைப் பெருக்கலாம்,' எனக் கருதுகின்றனர். இப்பொழுது 'பொதுவாக நிலச் சீர்திருத்தமும், நுட்பத்திறனைப் பயன்படுத்தலும் தனித்தனியானவை அல்ல. ஒன்றோடு ஒன்று சார்புடையவை' எனக் கருதப்படுகின்றது.

எனவே நிலச் சீர்திருத்தம் செய்வதின் நோக்கம் இருவகைப்படும். முதல் நோக்கம் குறைந்த அளிப்புடைய நிலத்தைச் சிறந்த முறையில் சிறுவயல்களை இணைப்பதன் மூலமும், நில உடைமைக்கு உச்சவரம்பு விதிப்பதன் மூலமும் பயன்படுத்துவது ஆகும். இதன் மூலம் நிலம் பல உட்பிரிவுகளாகவும், துண்டுகளாகவும் இருப்பதனால் ஏற்படுகின்ற மூலதனமும் உழைப்பும் வீணாவதைத் தடை செய்யலாம். இரண்டாவது நோக்கம் நிலத்தை ஏழை மக்களுக்குக் கூடிய அளவு பகிர்ந்தளிப்பதும், மற்றும் விவசாயிகளை நிலச்சொந்தக்காரர்களின் சுரண்டலிலிருந்து காப்பதுமாகும்.

நிலச்சீர்திருத்தம் என்பது நிலம் ஒருவரிடமே சேராமல் மறுபடியும் பகிர்ந்தளித்தல் ஆகும். இது சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கின்ற மக்கள் உய்வுபெற உள்ள ஒரே வழியாகும். மற்றும் நிலத்தை, தற்போதுள்ள உட்பிரிவுகளை இணைத்துத் துண்டு துண்டாக உள்ள நிலையைப்போக்கி, உத்தம அளவு (Optimum Level) பயன்படுத்துவதற்கு நிலச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் குத்தகை எடுத்துள்ள விவசாயிகளுக்குப் பாதுகாப்பளித்தல், வாரத்தை நிர்ணயித்தல், சிறு விவசாயிகளுக்குப் பட்டா வழங்குதல் ஆகியவைகளை நிலச்சீர்திருத்தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. நிலச்சீர்திருத்தங்கள் அரசுக்கும் உழுபவனுக்கும் இடையே உள்ள இடைத்தரகர்களை (Middlemen) ஒழிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

நிலச்சீர்திருத்தம் ஐந்து வகைப்படும். அவையாவன :

(1) இடைத்தரகர்களை ஒழித்தல்; (2) குத்தகை உரிமைச் சீர்திருத்தம், அதாவது வாரத்தை ஒழுங்கு செய்தல், குத்தகைக்காரர்களுக்குப் பாதுகாப்பளித்தல்; (3) நில உரிமைக்கு உச்சவரம்பு விதித்தல், (4) நிலத்தை ஒருங்கிணைத்தல், உட்பிரிவைத்

தவிர்த்தல், துண்டு துண்டாக நிலம் பிரிபடுவதை இணைத்தல்; (5) கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்தல்.

(அ) இடைத்தரகர்கள் ஒழிப்பு

சுதந்திரத்திற்கு முன் இருந்த நில உரிமைச் சட்டம் உற்பத்தியைப் பெருக்க வசதியாக இல்லை. அதே நேரத்தில் செல்வம் ஓரிடத்தில் குவிந்து, ஏழை.பணக்காரர்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பெருக்க வகை செய்வதாக அமைந்திருந்தது. நிலச் சீர்திருத்தம் பற்றி ஆய்வதற்கு முன், சுதந்திரத்திற்கு முன் இருந்த நிலவுரிமை முறையை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

ஜமீன்தாரி முறை

இம்முறை காரன்வாலிஸ் பிரபுவால் 1793-ல் வங்காளத்தில் உருவாக்கப்பட்டது. இம்முறையில் நிலம் ஒருவருக்கோ அல்லது ஒரு சிலருக்கோ உரிமையாக இருந்தது. அவர்கள் அரசுக்கு நிலவரி செலுத்த வேண்டும். வரி வசூலிப்பவர்கள் நில உரிமையாளர்களாக இம்முறையில் மாற்றப்பட்டனர்.

ஜமீன்தாரி நிலவரி முறை இருவகைப்படும். அவையாவன : (1) நிரந்தர நிலவரித் திட்ட முறை, (2) தற்காலிக நிலவரித் திட்ட முறை என்பன.

நிரந்தர நிலவரித் திட்ட முறை

நிலவரி இம்முறையின்படி நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டது. இம்முறை வங்காளம், வடசென்னை, பனாரஸ் பகுதிகளில் பின்பற்றப்பட்டது. இம்முறையில் ஜமீன்தாரர்கள் முழு உரிமையாளர்களென்றும், அவர்களுடைய நிலப்பரப்பில் அவர்கள் வரி வசூலிக்க வேண்டியதென்றும், அவர்கள் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கடமைப்பட்டவர்களென்றும், அவர்கள் வசூலிக்கும் வரிப்பணத்தில் 1/11 ஐத் தாம் எடுத்துக்கொண்டு, மிகுதி 10/11ஐ அரசிடம் செலுத்தி வரவேண்டும் என்றும் முடிவு செய்தனர். இம்முறையால் விவசாயிக்கும் அரசுக்கும் இடையே ஜமீன்தார்கள் புகுந்து, அதிகக் குத்தகை பெற்றுப் பெருஞ் செல்வர்கள் ஆனார்கள்.

தற்காலிக நிலவரித் திட்ட முறையில் 20 லிருந்து 40 ஆண்டுக்கு ஒரு முறை வரி நிர்ணயம் செய்யப்பட்டது. இம்முறை கிழக்கிந்தியக் கம்பெனியால் வரியைத் தவறாது பெறவேண்டும் என்ற நோக்கத்தில்தான் உருவாக்கப்பட்டது. இம்முறையால் இந்திய விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

மகல்வரி முறை நிலவரித்திட்டம்

இம்முறையில் கிராம நிலம், கிராம மக்கள் அனைவருக்கும் சொந்தமாக்கப்பட்டது. கிராம மக்கள் அனைவரும் கூடித் தங்களில் மிகவும் கண்ணியமும் மதிப்பும் உடையவரை வரி வசூலிக்கும் அதிகாரியாக (Lumberdar) நியமித்து, அவரிடம் நிலவரியைக் கொடுத்தனர். அவ்வாறு நியமிக்கப்பட்டவர், நிலவரித்திட்டத்தை ஒப்புக்கொள்வதன் மூலம், பங்குதாரர்கள் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் நிலவரி விதிப்பிற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளுகின்றனர். இம்முறை முதன்முதலாக ஆக்ராவிலும், பின் அவுத், பஞ்சாபிலும் பின்பற்றப்பட்டது.

(ஆ) இரயத்துவாரி முறை

இம்முறையின்கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் நில அளவை நடத்தி, அதற்கான வரைபடம் வரைந்து, வயல்களின் இடத்தையும் எண்ணையும் பதிவு செய்து கொண்டு, அவற்றின் உற்பத்திக்கேற்ற முறையில் தரம் பிரித்து, பயிர் வகைகளின் உற்பத்தியை அனுசரித்து விளைச்சலைப் பண மதிப்பில் கணக்கிட்டு, (பஞ்சம் இல்லா) 20 ஆண்டுகளில் உண்டான விளைச்சல் மதிப்பீட்டில் சாகுபடிச் செலவைக் குறைத்து நிகரத் தொகை இவ்வளவு என்று முடிவு செய்யப்படும். இதில் பாதியை நிலவரியெனக் கணக்கிட்டனர்.

சுதந்திரத்திற்கு முன் ஒரு பக்கம் நிலமற்ற ஏழை விவசாயிகளும், மற்றொரு பக்கம் அதே நேரத்தில் பெரிய பண்ணையார்களும் இருந்தனர். பெரும் பண்ணையாளர்கள் அதிக வரி விதித்தல் மூலம் பெரும் பணக்காரர்கள் ஆனார்கள். இந்நிலையை மாற்ற நம் இந்திய அரசு சுதந்திரத்திற்குப் பிறகு பல நிலச் சீர் திருத்தங்களைச் செய்தது. அவைகளைப் பற்றிப் பின்வரும் பகுதியில் காண்போம்.

நிலக் கொள்கை

மத்திய தரகர் அல்லது இடையினர்களது உரிமையை ஒழித்தல்

நாடு சுதந்திரம் பெற்றபின் எல்லா மாநிலங்களிலும் மத்திய தரகர்களை (Middle-men) ஒழிக்கப் பல சட்டங்கள் இயற்றப் பெற்றன. இச்சட்டங்கள் ஜமீன்தாரர்களை ஒழித்து அரசையும் பயிரிடுபவர்களையும் நேரடித் தொடர்பின்கீழ்க் கொண்டு வந்தது. ஆனால் இச்சட்டங்கள் வாரம் வாங்கும் நிலக்கிழார்களைப் பாதிக்கவில்லை. இதனால் அரசின் நோக்கமான மத்திய தரகர்கள் ஒழிப்பு

முழுவதுமாக நிறைவேறவில்லை. முன்னதாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், சென்னை மாநிலம்தான் முதன்முதலாக 1948-ல் ஜமீன்தாரர்களை ஒழிக்கச் சட்டமியற்றியது. சென்னை மாநிலத்தைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், சௌராஷ்டிரா, பம்பாய் ஆகிய மாநிலங்கள் சட்டமியற்றின. இடையினர்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாநிலமான வங்காளத்தில் 1954–55-ல்தான் சட்டமியற்றப் பட்டது. இந்தச் சீர்திருத்தத்தால் 30.4 இலட்சம் குடியானவர் களும் பயிர் விளைவுகளைப் பங்கிட்டுக் கொள்வோரும் 62.2 இலட்ச ஏக்கர் நிலத்துக்கு உரிமையாளர்கள் ஆனார்கள். இந்நிலச் சீர் திருத்தங்களால் கொதிப்படைந்த ஜமீன்தாரர்கள் அதிக அளவுத் தொகையை ஈடாக அரசிடம் கேட்டனர். மேலும் நிலம் தங்கள் சொந்த சாகுபடிக்குத் தேவையெனக் கூறி விவசாயிகளை நிலத்தி லிருந்து வெளியேற்றினர். நிலச் சீர்திருத்தச் சட்டம் தங்களைப் பாதிக்காமல் இருக்க ஜமீன்தார்கள் கூட்டுறவுப் பண்ணைகளை நிறுவினர்.

நம் நாடு சுதந்திரம் பெற்ற குடியரசு நாடாகையால், ரஷ்யா, சீனா போன்று நிலத்தை அரசு நஷ்ட ஈடு கொடுக்காமல் எடுத்துக் கொள்ள இயலாது. நம் நாட்டில் நஷ்ட ஈடு கொடுப்பதா, வேண்டாமா என்ற பிரச்னை எழவில்லை. ‘எவ்வளவு கொடுப்பது? எப்படிக் கொடுப்பது? பணமாகக் கொடுப்பதா? அல்லது கடன் பத்திரங்களாகக் கொடுப்பதா?’ என்றே சந்தேகங்கள் எழுந்தன.

நமது அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் நஷ்ட ஈட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த போதிலும், நியாயமான சம நஷ்ட ஈட்டைப் பற்றித் தெளிவாகக் கூறவில்லை. ஜமீன்தாரர்கள் மாநிலச் சட்டங்களை எதிர்த்து மாநில உயர்நீதி மன்றங்களிலும், பின்னர் இறுதி தீர்ப்புக்கு மத்திய உயர்நீதி மன்றத்திலும் வழக் காடினர். நீதிமன்றம் அரசு நிலத்தை எடுத்துக் கொண்டதைச் சரியென்ற போதிலும், நியாயமான அளவில் நஷ்ட ஈடு தர வேண்டும் என்ற தீர்ப்பை வழங்கியது. இதனால் ஜமீன்தார்கள் அதிக அளவு பயனடைய வாய்ப்பு ஏற்பட்டது. நஷ்ட ஈட்டுத் தாகையை ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு ஒரிசா, மேற்கு வங்காளம், ஹைதராபாத் போன்றவை பணமாகவே கொடுத்தன. உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், பீகார், குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்கள் பண மாகவும் கடன் பத்திரங்களாகவும் நஷ்டஈட்டைத் தந்தனர். பெரும் நிலக்கிழார்களுக்குப் பத்திரங்களாகவும், சிறு நிலக்கிழார் களுக்குப் பணமாகவும் அளித்தனர். மொத்த நஷ்டஈடாகக்

கொடுக்கப்பட வேண்டிய தொகை ரூ. 570 கோடியாகும். இது வரை ரூ. 320 கோடி பணமாகவும், பத்திரங்களாகவும் கொடுக்கப் பட்டுள்ளன.

குடிவாரச் சீர்திருத்தம்

சிறு நிலக்கிழார்கள் தங்கள் நிலம் விவசாயத்திற்குப் போதிய தாக இல்லாமையால் அவர்களும், நிலமற்ற விவசாயிகளும், தலத்தில்லா நிலக்கிழார்களின் நிலங்களை வாரத்திற்குப் பயிரிடும் முறை நம் நாட்டில் வழக்கில் உள்ளது. (1) அனுபோக உரிமை யுள்ள குத்தகையாளர், (2) நிலக்கிழார் விரும்பும்வரை மட்டுமே பயிர் செய்து வாரம் தரும் குத்தகையாளர், (3) உட்குத்தகை யாளர் என மூவகையாக அவர்களைப் பிரிக்கலாம்.

அனுபோக உரிமையுள்ளவன் நிலத்தை நிரந்தரமாக வைத்துக்கொள்ளலாம். தன் சந்ததிக்கும் மாற்ற முடியும். அவர்கள் நிலச்சீர்திருத்தத்திற்கு, நிலக்கிழார்களிடமிருந்து நஷ்ட ஈடு பெறமுடியும். உண்மையில் அவர்களே நிலச்சொந்தக்காரர் களாக இருக்கிறார்கள். நிலக்கிழாருக்கும் அனுபோக உரிமையுள்ள குத்தகையாளனுக்கும் உள்ள ஒரே வேற்றுமை யாதெனில், நிலக்கிழார் அரசுக்கு வரி செலுத்துகிறார்; குத்தகை யாளன் நிலக்கிழாருக்கு வாரம் செலுத்துகிறான். இவர்களைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவுமில்லை. ஆனால் பாக்கியுள்ள இரு வகைக் குத்தகையாளர் நிலை மிகவும் பரிதாபகரமானது. அதிக அளவு வாரம் வாங்குவதன் மூலம் அவர்களை நிலக்கிழார்கள் சுரண்டுகின்றனர்; அடிக்கடி வாரத்தை உயர்த்துகின்றனர்; தர மறுத்தால் நிலத்தை விட்டு வெளியேற்றுகின்றனர். இதனால் அரசு இவர்களுக்கு நீதி வழங்கவேண்டிப் பல சட்டங்களை இயற்றி யுள்ளது. அவை குடிவாரச் சட்டங்கள் எனப்படும். (Tenanat Acts).

இந்தியாவில் குத்தகை முறையில் பயிர் செய்யப்படும் நிலங்கள் 11–லிருந்து 26 சதவிகிதமாகப் பல மாநிலங்களில் இருக்கிறது. அகில இந்திய சராசரி 20 சதவிகிதம் ஆகும். இதனால் ஐந்தில் ஒரு பங்கு நிலம் இம்முறையின் கீழ் வருவதால் குத்தகையாளரின் குறைகளைத் தீர்க்காமல் அரசு பராமுகமாக இருக்க இயலாது.

குடிவாரச் சீர்திருத்தத்திற்காக அரசு மேற்கொண்ட நட வடிக்கைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) வாரத்தைக் கட்டுப்படுத்தல், (2) நில உரிமைக்குப் பாது

காப்பு அளித்தல், (3) குத்தகையாளனுக்கு நிலத்தை உடைமை யாக்குதல் போன்றவையாம்.

வாரக் கட்டுப்பாடு

சுதந்திரத்திற்கு முன் அப்பொழுதுள்ள வழக்கப்படி நிர்ணயிக்கப்பட்டது. நிலத்தின் தேவை, நில அளிப்புச்சக்தி களால் வாரம் நிர்ணயிக்கப்பட்டது. நில அளிப்பு நிலையானது. ஆனல் மக்கள் தொகையோ நாளுக்கு நாள் பெருகியது. அதன் விளைவு வாரம் உயர்ந்து கொண்டே இருந்தது. கிராமத்தொழில் களின் வீழ்ச்சி நிலத்தின் தேவையை அதிகரிக்கச்செய்தது.

இதனுல் அதிகரித்துவரும் வாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகி, பல மாநிலங்கள் சட்டமியற்றத் துவங்கின. அப்பொழுது இருந்த வார அளவு மொத்த உற்பத்தியில் சற்றேறக் குறைய அரை மடங்கு இருந்தது. முதல் திட்டமும், இரண்டாவது திட்டமும், வாரம் 20°/ₒ அல்லது 25°/ₒக்கு மிகைப்படாமல் இருக்க வேண்டுமென வலியுறுத்தின. மாநிலங்களுக்கிடையே வாரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைப் பொறுத்தவரை பல வேறுபாடுகள். நம் தமிழகத்தில் 1970ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 6.25க்குக் குறைவாக உள்ள நிலமான 1.4 இலட்ச ஏக்கருக்கு வாரமில்லாமல் சட்டமியற்றினர். மாநில அரசுகள் விவசாயியின் துயர் துடைக்கப் பல சட்டங்கள் இயற்றிய போதிலும் அவையெல்லாம் காகிதச் சட்டங்களாகத் தான் உள்ளன. நிலத்தில் குத்தகைக் காரர்களிடையே உள்ள போட்டியினுல் நிலக்கிழார்கள் அதிக அளவு வாரத்தைப் பெற இயலுகிறது. இதனுல்தானே என்னவோ ஜப்பான் நாட்டில் நடந்த கருத்தரங்கில் 'இந்தியாவில் நிலச் சீர்திருத்தம் என்ருல் என்ன?' என்ற வினவிற்கு ''நிறைவேற்றப் படாமை'' எனப் பேராசிரியர் தன்ட்வாலா கூறியுள்ளார்.

இப்பொழுது வாரத்தை விளைபொருளாக அளிக்காமல் பண மாகக் கொடுக்கச் செய்ய வேண்டும் என்ற யோசனை எழுந்துள்ளது. இம்முறை சிறந்தது ஆகும். ஏனெனில் விவசாயி தன் சாகுபடிக்குத் தேவையானப் பொருள்களையும், தன் வாழ்விற்குத் தேவையான பொருள்களையும் பணம் கொடுத்தே வாங்கவேண்டியுள்ளது. இது கிராமப் பொருளாதாரத்தைப் பண்டமாற்று முறையிலிருந்து நாணயப் பழக்க முறைக்கு மாற்றத் தேவையான நடவடிக்கையாகும். நான்காவது திட்டம் குடிவாரச் சட்டத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது 'ஆந்திரப்பகுதி, ஜம்மு மற்றும் காஷ்மீர், தமிழ்நாடு, பஞ்சாப்,

மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் சட்ட மூலம் நிர்ணயிக்கப் பட்டுள்ள வாரம் இன்னும் அதிகமாக இருக்கிறது. அதனால் அம் மாநிலங்களில் திட்டக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்ட $\frac{1}{4}$ லிருந்து 1/5க்குக் குறைக்க வேண்டும். விளைபொருளாகக் கொடுக்கின்ற வாரத்தைக் கட்டுப்படுத்த முடியாததால் அவைகளை ஒழித்து, வாரத்தைப் பணமாகக் கொடுக்கச் செய்தால் ஆண்டு தோறும் வாரம் உயர்வதைத் தடுத்து, உழுபவன் அவன் முதலீட்டின் முழுப் பயனையும் அடைய முடியும்.'

நில உரிமை முறைப் பாதுகாப்பு

சர் ஆர்தர் யங், நில உரிமை முறையில் பாதுகாப்பு அளிக்க வேண்டியதன் அவசியத்தைப் பின்வருமாறு விளக்குகிறார்: 'ஒரு மனிதனுக்குக் கடின பாறையால் ஆன நிலத்தை, 'இது உன் முழு உடைமை என்று சொல்லுங்கள்.' அவன் அப்பாறை நிலத்தை நல்ல தோட்டமாக மாற்றுவான். ஒரு மனிதனுக்கு ஒரு நல்ல தோட்டத்தை ஒன்பதாண்டு குத்தகைக்கு விடுங்கள். ஒன்பதா மாண்டின் இறுதியில் அவன் அதைப் பாலைவனமாக மாற்றிவிடு வான்' என்கிறார். இதனால் நாம் விவசாயிக்கு நில உரிமைப் பாதுகாப்புத் தரவேண்டியதன் அவசியத்தை அறிகிறோம். நிலம் தற்காலிகமாகத்தான் விவசாயியிடம் இருக்குமென்றால் நிலத்தைப் பண்படுத்துவதிலோ, பணத்தை முதலீடு செய்து கிணறு, குழாய்க் கிணறு, நிரந்தரக் காப்பு ஆகியவைகளை உருவாக்குவதிலோ யாரும் கவனம் செலுத்தமாட்டார்கள். நாளையேகூட நம் நிலத்தை நிலக் கிழார் எடுத்துக் கொள்ளலாம் என்ற ஐயம் அவன் உள்ளத்து அரும்புகின்ற வளர்ச்சி முயற்சிகளையெல்லாம் குன்றச் செய்கிறது. இதனால் நில உரிமைப் பாதுகாப்புச் சட்டம் இயற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அச்சட்டங்களின் நோக்கம், நிலக்கிழார் விரும்பும் வரை பயிர் செய்யும் உரிமையுள்ள குத்தகையாளர்களை, நிரந்தரக் குத்தகையாளர்களாக மாற்றவேண்டும் என்பதுதான்.

சட்டங்கள் இயற்றும்போது கீழ்க்கண்ட மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

(1) குத்தகைக்காரர்களைப் பெரும் அளவில் நிலத்திலிருந்து வெளியேற்றுவதைத் தடை செய்ய வேண்டும். (2) நிலத்தைக் குத்தகைக்காரர்களிடமிருந்து நிலக்கிழார்கள் தங்கள் சொந்தச் சாகுபடிக்கு மட்டுமே எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். (3) சொந்தச் சாகுபடிக்கு நிலக்கிழார்கள் நிலத்தை எடுத்துக் கொள்ளும் பொழுது குறைந்த பட்ச நிலமாவது குத்தகை யாளரிடம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

நிலத்தைச் சொந்தச் சாகுபடிக்கு எடுத்துக் கொள்வதிலும் குத்தகை யாளனை வெளியேற்றுவதிலும் உள்ள பிரச்சினைகள்

நிலச் சீர்திருத்தம் துவங்கிய சில ஆண்டுகளில் சொந்தச் சாகுபடி என்பதைச் சரியாக வரையறுக்காததால், பல குத்தகை யாளர்கள் சொந்தச் சாகுபடிக்கு நிலம் எடுத்துக் கொள்வதன் மூலம் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். முதல் திட்ட காலத்தில் சொந்தச் சாகுபடி பின்வருமாறு வரையறுக்கப்பட்டது. (1) நிலம் விளையாமல் போனால் ஏற்படும் நஷ்டத்தை ஏற்றல், (2) சொந்த உழைப்பு, (3) நேரடி மேற்பார்வை. இவை மூன்றை யும் ஒருவனே ஏற்றுப் பயிர் செய்வதைச் சொந்தச் சாகுபடி என்று விளம்பினர். உழைப்பு என்பதை வரையறுக்கும் போது நிலக் கிழாரோ அல்லது நிலக்கிழாரின் குடும்பத்தில் ஒருவரோ உழைத் தால் அதைச் சொந்த உழைப்பாகக் கருதினர். நேரடி மேற்பார்வை செய்வதே சொந்த உழைப்பாகக் கருதப்பட்டது. சொந்தச் சாகுபடியின் பெயரால் பல குத்தகைக்காரர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆனால் இரண்டாவது திட்டகாலத்தில் சொந்தச் சாகுபடிக்குச் சொந்த உழைப்புக் கட்டாயம் தேவை என்ற கருத்தைப் பல மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதனால் சொந்தச் சாகுபடிக்கு நிலத்தைத் திருப்பியளிக்க கூடாது என்பது நமது கருத்தல்ல. சொந்தச் சாகுபடியின் பெய ரால் நிலக்கிழார்கள் ஏழைக் குத்தகைக்காரர்களைச் சுரண்ட அனுமதிக்கக்கூடாது என்பது தான் உண்மையான நோக்கம். சொந்தச் சாகுபடி என்ற சொல்லைச் சரியான முறையில் வரை யறுக்காததால் பல குத்தகைக்காரார்கள் பெருமளவு நிலத்தி லிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இரண்டாவது திட்ட காலத்தில் மாநில அரசுகள் நிலத்தைச் சொந்தச் சாகுபடிக்கு எடுத்துக் கொள்வது சம்பந்தமாக மூன்று வகைச் சட்டங்கள் இயற்றினர்.

1. எல்லாக் குத்தகைக்காரர்களுக்கும் பூரணப் பாதுகாப்பு அளித்து, நிலக்கிழார்கள் சொந்தச் சாகுபடிக்கு நிலத்தை எடுத்துக் கொள்வதைத் தடை செய்தல்.

2. குத்தகைக்காரர்களுக்குத் குறிப்பிட்ட நிலத்தைத் தந்து. நிலக்கிழார்களும் ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தைச் சொந்தச் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்தல்.

3. நிலக்கிழார்கள் ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தை, குத்தகைதாரனுக்குக் குறைந்த அளவு நிலமே இருந்தாலும் இல்லா விட்டாலும் எடுத்துக் கொள்ள அனுமதித்தல்.

முதல் வகையான சட்டங்கள் உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், டெல்லி ஆகிய மாநிலங்களில் இயற்றப்பட்டன. இரண்டாவது வகைச் சட்டங்கள் குஜராத், கேரளா, மத்தியப் பிரதேசம், மஹாராஷ்டிரா, ஒரிசா, இராஜஸ்தான், ஹிமாசலப் பிரதேசம், அஸ்ஸாம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் இயற்றப் பட்டன. மூன்றாவது வகையான சட்டங்களை ஜம்மு, காஷ்மீர், மணிப்பூர், திரிபுரா, மற்றும் மேற்கு வங்காளம் (பயிர் பங்கீட்டுக் கொள்வோர்கள்) ஆகிய மாநிலங்கள் இயற்றின. ஆனால் இரண் டாவது வகைச் சட்டங்களே பெரும்பாலான மாநிலங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

குத்தகையாளனுக்கு நில உரிமை வழங்குதல்

மிக முக்கியமான நிலச்சீர்திருத்தப் பிரச்சினை யாதெனில் குத்தகையாளனுக்கு நிலத்தை உரிமையாக்குதலாம். ஆனால் இதற்கு மாநில அரசுகள் நஷ்டஈடு நிலக்கிழார்களுக்குக் கொடுக்க இயலாது. நஷ்டஈட்டையும் அதற்கான வட்டியையும் பல தவணைகளாகக் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். சில மாநிலங் களில் குத்தகையாளர்கள் நிலக்கிழார்களிடமிருந்து தாங்கள் பயிர் செய்கின்ற நிலத்தை வேண்டுமானால் வாங்கிக் கொள்ளச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அவையாவன:– (1) குஜராத், கேரளா, மத்தியப்பிரதேசம், மஹாராஷ்டிரம், மைசூர், ஒரிசா, இராஜஸ் தான், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், மற்றும் யூனியன் பிரதேசங்களாகும். மூன்றாவது திட்டம் குத்தகையாளன் நிலத்தை வாங்கிக் கொள்ளலாம் என்பதை மாற்றிச் சட்டம் செய்யவேண்டும் என யோசனை தெரிவித்துள்ளது. அஸ்ஸாம், பீகார், ஜம்மு மற்றும் காஷ்மீர், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் குத்தகையாளன் விரும்பினால்கூட நிலத்தை வாங்கிக் கொள்ளச் சட்டமியற்றாதது பெரிய ஏமாற்றமாகும்.

நில உடைமைக்கு உச்ச வரம்பு

நிலம் இயற்கை அன்னை தந்த செல்வம். இச்செல்வம் ஒரு சாராரிடமே குவிந்து விட்டால் நாட்டுக்குப் பயனளிக்காது. இதனால்தான் பல மாநில அரசுகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நிலமுள்ளவரிடம் நிலத்தைப் பெற்று, நிலமில்லார்க்கும், போதிய அளவு நிலமில்லார்க்கும் வழங்கும் அரசின் நோக்கத்தைச் செயல்படுத்த விரும்புகின்றன. நிலம் இவ்வளவுதான் வைத்துக் கொள்ளலாம் என அரசு செய்யும் கட்டுப்பாட்டுக்கு உச்சவரம்பு என்று பெயர். மாநிலங்களில் நிலவுகின்ற நிலவுடைமை உச்ச வரம்பை பின்னுள்ள அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 11

மாநிலங்களில் இருக்கின்ற நிலவுடைமைக்கு உச்சவரம்பு

மாநிலம்	உச்ச வரம்பு அளவு (ஏக்கரில்)	அளவு நிலக்கிழாரா, நிலக்கிழார் குடும்பமா	கிடைத்த கருதப்பட்ட உபரி நிலம் (ஆயிரம் ஏக்கரால்)	பகிர்ந்து அளித்த உபரி நிலம்
ஆந்திரப்பிரதேசம்	27–324	நிலக்கிழார்	74	இல்லை
அஸ்ஸாம் (சட்டமன்றத்தில் நிறைவேற்ற அறிமுகம்செய்யப் பட்டுள்ளது)	50	,,	68	1
பீகார்	20–60	,,	இல்லை	இல்லை
குஜராத்	19–132	நிலக்கிழார் குடும்பத்தினர் அனைவருக்கும்	50	25
ஹரியானு	27–100	நிலக்கிழார்	170	65
ஜம்மு காஷ்மீர்	22–34	,,	450	450
கேரளா	6–20	குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும்	கிடைக்கவில்லை	கிடைக்கவில்லை
மத்தியப் பிரதேசம்	25—75	நிலக்கிழார்	84	13
மஹாராஷ்டிரா	18–126	,,	271	123
மைசூர்	27—216	குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும்	இல்லை	இல்லை
ஒரிசா	20–80	நிலக்கிழார்	இல்லை	இல்லை
பஞ்சாப்	27—100	,,	178	64
இராஜஸ்தான்	33–336	குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும்	இல்லை	இல்லை
தமிழ்நாடு (சட்டமன்றத்தில் அனுமதிக்க பட்டபடி)	12–60	,,	25	16
உத்திரப்பிரதேசம்	40—80	நிலக்கிழார்	241	121
மேற்கு வங்கம்	25	,,	79	கிடைக்கவில்லை
டெல்லி	24–60	குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும்	மிகக் குறைவு	இல்லை
ஹிமாசலப் பிரதேசம்	27–100	நிலக்கிழார்	7	மிகக் குறைவு

உச்சவரம்பு விதிக்க வேண்டியதன் காரணத்தைக் காண்போம்.

1. கிராமங்களில் பெரும்பாலும் நிலத்திலிருந்துதான் வருமானம் கிடைக்கிறது. ஒரு மனிதனை மதிப்பதே அவனுக்குள்ள நிலத்தைப் பொறுத்ததுதான். வருமானத்தின் அடிப்படையாக உள்ள நிலம் ஜமீன்தார்களிடமோ, பெரும் நிலக்கிழார்களிடம் மட்டுமோ குவிந்திருந்தால், சமுதாயத்தில் இன்றுள்ள பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் பெருகிக் கொண்டே இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்க ஒரு வழி, உச்சவரம்பு சட்டம் இயற்றுவதுதான்.

2. நிலம் பெரும் பண்ணைகளாக இருந்தால் இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேலையில்லாமை ஏற்படும் என்று கருதப்படுகிறது. அதனால்தான் இந்திய அரசு சிறு நிலக்கிழார்களை உண்டாக்க விருப்பம் கொண்டுள்ளது. ஆனால் இம்முறையில் வேலை வாய்ப்புப் பெருகினாலும், உற்பத்தியை இது பெருமளவு பாதிக்கும்.

ஆனால் சிறிய பண்ணைகளில் ஏக்கருக்கான மொத்த உற்பத்தி பெரும் பண்ணைகளின் உற்பத்தியைவிட அதிகமாக உள்ளது என்பது பண்ணை நிர்வாக ஆய்வு மூலம் கண்டறியப் பட்டுள்ளது, ஆகையினால், பெரிய பண்ணைகளில் உற்பத்தி பெருகுகிறது என்பது ஏட்டளவில்தான்! பேராசிரியர் லூயிஸ் என்பார் நில உற்பத்தியைப் பெருக்க அதிக நிலம் தேவையில்லையெனக் கருதுகிறார். மிகச் சிறிய நிலப்பரப்புகளைக் கொண்ட ஜப்பான் நாடு, விவசாயிகளை அதிக அளவில் பயன்படுத்தி ஏக்கருக்கு அதிக அளவு பயன் அடைந்துள்ளது. சான்றாக, ஜப்பான் நாட்டில் சராசரி நிலவுடைமை ஒரு ஹெக்டேர்தான். அங்கு ஹெக்டேருக்கான அரிசி உற்பத்தி 51 குவின்டால். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சராசரி நிலவுடைமை அளவு 40 ஹெக்டேர். அங்கு ஹெக்டேருக்கான அரிசி உற்பத்தி 46 குவிண்டால் ஆகும். இதனால் வரலாறு நமக்குக் காட்டுவதெல்லாம், நில அளவு குறைந்ததால் உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்படாது. ஆகவே உச்சவரம்புச் சட்டத்தை நிறைவேற்றி, வேலை வாய்ப்புகளைப் பெருக்கி, சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கின்ற மக்களுக்குச் சமூக நீதி வழங்கத் தூண்டுகிறது.

உச்சவரம்பை நிர்ணயிக்கும் முறை

முதல் திட்ட காலத்தில் உச்சவரம்பைக் குடும்ப நிலத்தின் இருமடங்காக நிர்ணயிக்க முடிவு செய்தனர். குடும்ப நிலத்தின் அளவு பின்வரும் இரு கோணங்களிலிருந்து கணக்கிடப்பட வேண்டும். (அ) பயிர் செய்யப் போதுமான நில அளவு, (ஆ) குறிப்பிட்ட

அளவு சராசரி வருமானத்தை ஈடுகட்டக்கூடிய நிலமாக இருத்தல் வேண்டும். நிலச் சீர்திருத்தக் குழு ரூ. 1600 மொத்தச் சராசரி வருமானம் வழங்கக் கூடிய நிலத்தைக் 'குடும்ப நில அளவு' என வரையறை செய்தது. இரண்டாவது திட்டகாலத்தில் நிலத்தின் தன்மை, நீர்ப்பாசனம், சூழ்நிலைகள் இவைகளை ஆய்ந்து குடும்ப நில அளவைப்போல் மூன்று மடங்கு நிலத்தை ஐந்து நபர் உள்ள குடும்பத்திற்கு உச்ச வரம்பாக்க வேண்டும் எனக் கருதினர். ஐந்துக்கு மேற்பட்டுள்ள நபர்கள் உள்ள குடும்பத்திற்கு மிக அதிகமாக 6 மடங்கு நிலத்தைக் குடும்ப நிலமாக மாற்றலாம் என்று கூறியது. பல மாநிலங்கள் குடும்பத்தை உச்சவரம்புக்கு அளவாக எடுத்துக் கொள்ளாமல் தனி நிலக்கிழாரையே எடுத்துக் கொண்டுள்ளன.

உச்சவரம்பு மேற்கொள்ளப்படாத நிலவகைகள்

இரண்டாவது திட்ட காலத்தில் பின்கண்ட வகை நிலங்களுக்கு உச்சவரம்பி லிருந்து விலக்களித்தனர். (1) தேயிலை காப்பி, இரப்பர் தோட்டங்கள்; (2) பழத்தோட்டங்கள்; (3) கால்நடை வளர்ப்பு, பால்பண்ணைத் தொழில், கம்பளி சேகரிப்பில் ஈடுபட்டுள்ள பண்ணைகள்; (4) சர்க்கரை ஆலையால் கரும்பு பயிர் செய்யப்படுகின்ற நிலங்கள்; (5) சிறப்பான நிர்வாகம் செய்யப்படுகின்ற பண்ணைகள். ஆனால், மஹாராஷ்டிரா மாநிலத்தில் சர்க்கரை ஆலையால் கரும்புப் பயிர்செய்யப்படுகின்ற நிலத்தையும் உச்ச வரம்பிற்கு உட்படுத்தினர். மற்ற மாநிலங்களில் விலக்கு அளித்துள்ளனர்.

ஆனால் உச்சவரம்புச் சட்டங்கள் நிலத்தைக் குடும்ப அங்கத்தினர்க்கு, மாற்றுதல் இல்லாத பெயருக்கு நிலத்தை மாற்றிப் பதிவு செய்தல் ஆகியவைகளுக்கு வழிகோலியுள்ளன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் கடந்த காலத்தில் நிலஉரிமை மாற்றங்கள் உச்சவரம்புச் சட்டங்களைப் பயனற்றதாக ஆக்குகின்றன என்பதை ஒப்புக்கொள்கிறது. எனவே நிலத்தை, உச்சவரம்பின் பெயரால் பெறும்பொழுது ஒரு குறிப்பிட்ட அளவு நஷ்டஈட்டைத் தரவேண்டியுள்ளது. உபரி நிலத்தை சிறு நில உடைமையாளர்களுக்கும், நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குத்தகையாளருக்கும், நிலமற்ற விவசாயிக்கும் வாங்கிய விலைக்குத் தருதல் வேண்டும். இந்தப் பிரச்சினை இரு வகைப்படும்.

(1) உபரி நிலத்தைப் பெற நிலக்கிழாருக்குத் தர வேண்டிய நஷ்டஈடு. (2) உபரி நிலம் பெற்றவர்களிடமிருந்து திரும்பப்பெறக் கூடிய தொகை.

உபரி நிலம் பெற்றவர்களிடமிருந்து தொகை பல ஆண்டுத் தவணைகளாகப் பெறவேண்டும். அது நஷ்ட ஈடு, வட்டி, நிலவரி ஆகியவை எல்லாம் சேர்த்து, நியாய வாரமெனத் திட்டத்தால் கூறப்பட்ட $\frac{1}{4}$ லிருந்து 1/5 பாக மொத்த உற்பத்திக்கு மேற்படக் கூடாது. நஷ்ட ஈடாக அளிக்க வேண்டிய மொத்தத் தொகையையும் உபரி நிலம் பெற்றவர்களிடமிருந்து பெறவேண்டும். இதனுல் அரசுக்கு எந்தவிதமான பொறுப்பும் இருக்கக் கூடாது,

இச்சட்டத்தால் பல மாநிலங்களில் நிலமற்றோரும், குறைந்த நிலம் உடையோரும் நிலம் பெற்றுள்ளனர். ஆனுல் இச்சட்டம் முழு வெற்றியைத் தராததற்குக் காரணம் சட்டங்களை நடைமுறையில் நிறைவேற்ருமையேயாகும்.

1969ஆம் ஆண்டு நடந்த மாநில முதலமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டம் இப்பிரச்சினை குறித்து மூன்று முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது.

1. உச்சவரம்பிற்குக் குடும்பமே அளவாகக் கொள்ளப்பட வேண்டும்.
2. உச்சவரம்பு 15-லிருந்து 25 ஏக்கருக்குள் நீர்ப்பாசனம் உள்ள நிலங்களுக்கும், 30-லிருந்து 50 ஏக்கருக்குள் மற்ற நிலங்களுக்கும் இருக்க வேண்டும்.
3. தாராளமாக உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விலக்கு வழங்குவதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இப்பொழுதுள்ள தேவை இதனை நிறைவேற்றுகின்ற நிர்வாக இயந்திரத்தைப் பலப்படுத்தலும், மாநிலங்களில் உச்சவரம்பை நிறைவேற்ற வேண்டுமென்ற தீவிர எண்ணமுந்தாம்.

நிலச் சீர்திருத்தம்: (2) பண்ணை அளவு

சீரான நிலவுடைமை என்ருல் என்ன?

நிலச் சீர்திருத்தக் குழு, குடும்ப நில அளவை, வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயித்தனர். நாட்டு வருமானக் கணக்கெடுப்பின்படி விவசாயியின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 500. ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திலும் 2 அல்லது 2.5 விவசாயிகள் எனக் கருதி, விவசாயக் குடும்பத்தின் ஆண்டுச் சராசரி வருமானத்தை ரூ. 1,290 இருக்கும் எனக் கருதினர். எனவே ரூ.1,200க்குக் குறைவான வருமானம் தருகின்ற நிலத்தைச்

சீரான நிலவுடைமை என்று கருத முடியாது. குடும்ப நில அளவைப் போல மூன்று மடங்கு நிலத்தை உத்தம நில வுடைமையாக வரையறுத்தனர்.

சீரான நிலவுடைமையைப் பொருளியலார் பலவிதமாக வரை யறுக்கின்றனர். கீட்டிங் என்பார் சாகுபடிக்கு ஆகின்ற செலவைத் நீக்கி, அவனது குடும்பம் நியாயமான வசதிகளுடன் வாழத் தேவையான உற்பத்தியை அளிக்கவல்ல நில அளவைப் பொரு ளாதார நிலவுடைமை என்கிறார். ஆனால் நியாயமான வசதி என்ன என்பது வரையறுக்கப்படாததால், இதனைப் பயன்படுத்திச் சீரான நிலவுடைமை அளவைக் கணிக்க இயலாது. பொரு ளாதார நிலவுடைமையைப் பின்வருமாறு வரையறுக்கலாம். பயிர் செய்வதற்கு உகந்தது எனக் கருதப்படும், அதிக அளவு உற்பத்தியைத் தருகின்ற, நில அளவைப் பொருளாதார நிலவுடைமை எனலாம்.

பொருளாதார நிலவுடைமை அளவை நிர்ணயிக்கும் காரணிகள்

நிலவளம்

நிலம் வளமுடையதாக இருந்தால் நியாயமான வாழ்க்கை வசதித் தரத்தை மிகச் சிறிய அளவு நிலமே அளிக்க இயலும். எனவே சில ஏக்கர் வளமுடைய நீர்ப்பாசன வசதி கொண்ட நிலம் பொருளாதார நிலவுடைமையாகக் கருதப்படும்.

பயிரிடும் முறை

விவசாயி டிராக்டர், கதிரறுக்கும் இயந்திரம் இவைகளைப் பயன்படுத்திப் பயிர்செய்தால் நிலம் நூறு ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்டு இருக்க வேண்டும். மாறாகப் பழைய சாகுபடி முறை யைப் பின்பற்றினால் விவசாயியினால் 15–20 ஏக்கருக்கு மேல் உழுது பயிர் செய்ய முடியாது.

பயிரின் தன்மை

பொருளாதார நிலவுடைமை, சாகுபடி செய்யும் பயிரின் தன்மைமையைப் பொறுத்தது. சான்றாகக் காய்கறி, பயிர் செய்தல் சிறந்தது. எனவே, 5 அல்லது அதற்குக் குறைந்த ஏக்கர் நிலமே ஒரு சராசரி விவசாயக் குடும்பத்திற்குத் தொடர்ச்சியான வேலை வாய்ப்பை அளிக்கும். கோதுமை பயிரிட 25 ஏக்கராவது தேவை. இதனால் பயிரின் தன்மையைக் குறித்துப் பொருளாதார நிலவுடைமை அளவு அமையும்.

இந்தியாவில் நிலவுடைமை அளவு

நம் நாட்டில் 50.76 மில்லியன் பயிரிடும் நிலப்பகுதிகள் உள்ளன. அவைகளின் மொத்தப் பரப்பு 329.6 மில்லியன் ஏக்கர்களாகும். அகில இந்தியச் சராசரி பயிடும் நில அளவு 6.49 ஏக்கர் ஆகும். ஆனால் அவை 5.66 துண்டுகளாகப் பிரிந்து காணப்படுகிறது. இந்தியாவின் பல மாநிலங்களுக்கிடையே நிலவுடைமை அளவில் உள்ள வேற்றுமையைக் காண்போம்.

அட்டவணை 12

சராசரி நிலவுடைமை அளவு 1961-62

மாநிலம்	சராசரி அளவு ஏக்கர்	மாநிலம்	சராசரி அளவு ஏக்கர்
இராஜஸ்தான்	13.7	ஒரிசா	4.9
மஹாராஷ்டிரா	11.5	உத்தரப் பிரதேசம்	4.4
குஜராத்	11.1	மேற்கு வங்காளம்	3.9
மைசூர்	10.2	பீகார்	3.8
மத்தியப் பிரதேசம்	9.9	தமிழ்நாடு	3.7
பஞ்சாப்	9.5	அஸ்ஸாம்	3.6
ஆந்திரப் பிரதேசம்	7.7	ஜம்மு மற்றும் காஷ்மீர்	3.5
அகில இந்தியா	6.5	கேரளா	1.8

அட்டவணை : 13

சில குறிப்பிட்ட நாடுகளில் சராசரி நிலவுடைமை

நாடு	அளவு ஆண்டு	ஹெக்டேரில்
நியூசிலாந்து	1959—60	231.6
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	1959	122.5
இங்கிலாந்து	1960—61	40.6
நார்வே	1959	17.5
ஜப்பான்	1960	1.2
இந்தியா	1961—62	2.6

குறிப்பு : 1 ஹெக்டேர் — 2.47 ஏக்கர்கள்.

கேரளாவில் நிலவுடைமை மிகக் குறைவாகவும் (1.8 ஏக்கர்), இராஜஸ்தானில் மிக அதிகமாகவும் உள்ளது. அகில இந்தியச் சராசரி நிலவுடைமையைவிட அதிகம் உள்ள மாநிலங்கள் மகாராஷ்டிரா, குஜராத், மைசூர், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், ஆந்திரப்பிரதேசம் ஆகியவையாம் (அட்டவணை 12).

அட்டவணை 13-லிருந்து இந்தியாவில் சராசரி நிலவுடைமை அளவு மிகக் குறைவு என அறிகிறோம்.

நிலவுடைமை சிறியதாக இருப்பதன் காரணங்கள்

1. பெருகுகின்ற மக்கள் தொகை

மக்கள்தொகை பெருகப்பெருக நிலம் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதால் நிலவுடைமை அளவு நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது.

2. முன்னோர் சொத்தைப் பகிர்ந்து கொள்ளச் செய்யும் சட்டம்

இந்து, முஸ்லீம் சட்டப்படி குடும்பத்தில் உள்ள மகன்களும், மகள்களும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற சட்டந் தான் நிலம் பல உட்பிரிவுகளாக முக்கிய காரணம்.

3. கூட்டுக்குடும்ப முறை இல்லாமை

கூட்டுக்குடும்ப முறையில் நிலம் குடும்ப அங்கத்தினர்களி டையே பிரித்துக் கொடுக்கப்படாமல் பொதுவாகவே இருந்தது. மேற்கத்திய நாகரிகமும் கல்வியும் பரவப்பரவக் கூட்டுக் குடும்ப முறை மறைந்ததால், நிலம் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டது.

கிராம மற்றும் கைவினைத் தொழில்களின் சீரழிவு

கிராம மற்றும் கைவினைத் தொழில்கள் முற்காலத்தில் பலருக்கு வேலைவாய்ப்பு அளித்து வந்தன. ஆலைத்தொழில் போட்டியால் கிராம மற்றும் கைவினைத் தொழில்கள் சீரழிந்தன. அத்தொழில்களில் ஈடுபட்டோரும் விவசாயத்தில் ஈடுபட்டமை யால் நிலம் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டது.

கிராமக் கடன்பாடும் கிராமக் கடன் கொடுப்போரும்

கிராமத்தில் விவசாயிக்குக் கடன் கொடுப்போரின் நோக்கம் எப்படியாவது நிலத்தைத் தன் வசப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். கடனுக்கு நிலத்தையே திருப்பித்தர வேண்டிய

நிலே விவசாயிக்கு ஏற்படுவதால் நிலம் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

நிலத்தின் மீது மக்களுக்குள்ள பெரு விருப்பம்

நிலத்தை இந்திய விவசாயி வாழ்க்கைக்கு ஊன்றுகோலாக மட்டும் எண்ணுது, அதைத் தனது மதிப்பின், கௌரவத்தின் அளவுகோலாகவும் கொள்வதால், விவசாயிகள் தங்கள் மூதாதையர் நிலத்தைப் பல துண்டுகளாகப் பிரித்துக்கொள்ள ஆசைப்படுகிருர்கள்.

உட்பிரிவுகளாகவும் பல துண்டுகளாகவும் நிலம் பிரிபடுவதால் ஏற்படும் பிரச்சினைகள்

நிலவுடைமைகள் சிறியனவாக இருப்பது மட்டுமல்ல; ஒரு விவசாயிக்குச் சொந்தமான நிலம் பல இடங்களில் சிறுசிறு துண்டுகளாகச் சிதறிக் கிடக்கின்றன. சான்ருக, 5 ஏக்கர் நிலமுடைய ஒரு கிராம விவசாயியின் நிலம் பல முனைகளில் இருக்கிறது. நாம் முன்பே நிலம் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதன் காரணத்தைக் கண்டோம். நிலம் பல துண்டுகளாக இருப்பதன் காரணம் நிலத்தைப் பகிர்ந்துகொள்வோர், முன்ஞேரின் எல்லாவகை நிலங்களிலும் தங்களுக்குப் பங்கு வேண்டும் என்று வற்புறுத்துவதேயாகும். இதனுல் நிலம் துண்டாடப்படுகிறது. சான்ருக, மகாராஷ்டிர மாநிலக் கிராமமொன்றில் ½ ஏக்கர் நிலம் 20 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே இவ்வாறு பல உட்பிரிவுகளாகவும், துண்டு துண்டாகவும் பிரிபடுவதைத் தடுக்காவிட்டால் விளையும் தீமைகளைக் காண்போம்.

உட்பிரிவாலும் துண்டாக்கப்படுவதாலும் விளையும் தீமைகள்

அது புதுமுறைகளைப் பின்பற்றுவதை இயலாததாக்குகிறது. நிலம் பல சிறிய துண்டுகளாக இருப்பதால், நிலச் சொந்தக்காரனுடைய வருமானம் மிகக் குறைகிறது. ஆகையால் சிறந்த விவசாய முறைகளை அவனுல் பின்பற்ற முடியவில்லை. பண்ணையைச் சீர்திருத்தம் செய்வதற்கு நிலம் சிறியதாக இருப்பதால் இடமில்லை. எடுத்துக்காட்டாக விவசாய இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கோ, கிணறுகளைத் தோண்டுவதற்கோ, பயிரைப் பாதுகாக்க வேலியமைப்பதற்கோ, வடிகால் வசதிகளை உண்டாக்குவதற்கோ நிறையப் பணமும் பெரிய நிலபரப்பும் தேவை. சிறிய நிலப்பரப்பில் இவைகளுக்கு இடமில்லை.

நிலம் மிகச் சிறியதாக இருப்பதால் நிலம், உழைப்பு, கால்நடைகள் ஆகியவைகளை முழு அளவுக்குப் பயன்படுத்த முடிய

வில்லை. மேலும் வரப்பு அமைப்பதில் பெருமளவு நிலம் வீணாக்கப் படுகிறது. பஞ்சாபில் 16% நிலம் வரப்பு அமைப்பினால் வீணாக்கப் பட்டுள்ளது என அறிகிறோம். நிலம் பல இடங்களில் இருப்பதால் விவசாயியிடம் இருந்து மற்றோர் இடம் செல்லவே காலத்தை வீணாக்க வேண்டியுள்ளது.

மேலும் நிலம் உட்பிரிவாகவும், துண்டுகளாகவும் இருப்பதால் நில அளவு எல்லையினால் தகராறுகள் ஏற்படுகிறது. பல இடங் களில் நிலம் இருப்பதால் நேரடி மேற்பார்வை செய்ய இயலாமல் போகிறது.

எனவே உட்பிரிவுகளாகவும், பல சிறு துண்டுகளாகவும் உள்ள நிலங்கள் சிறந்த முறையில் விவசாயம் செய்யப் பயனற்றதாக உள்ளன.

நிலம் பல உட்பிரிவாவதையும், பல துண்டுகளாவதையும் தவிர்ப்பது எப்படி?

நாடு முன்னேற விவசாய வளர்ச்சி மிக அவசியம். விவசாய வளர்ச்சி என்பது உற்பத்திப் பெருக்கத்தையே குறிக்கும். அரசு, உற்பத்தியைப் பெருக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டால்தான் உற்பத்தி பெருகும். உற்பத்தி பெருகச் "சீரான நிலவுடைமை" யின் பரப்பைப் பெருக்க வேண்டும். அவைகளைப் பெருக்க அரசு எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாவன:

1. நிலத்திற்கு உச்ச வரம்பு விதித்து, மிச்சமுள்ள நிலங்களைச் சீரான நிலவுடமை இல்லாருக்கு, அரசு பெற்றுப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

2. மிகச் சிறிய அளவு நிலமுடையவர்களை, விவசாயத்தை விட்டு வேறு தொழில்களில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

3. நிலமற்ற விவசாயிகளுக்கும், சிறு நிலவுடைமையாளர் களுக்கும் வேலையளிப்பதற்கு, கிராமப்புறங்களில் தொழிற்சாலை களை அமைத்தால் நிலத்திற்குள்ள தேவை குறையும். ஆனால் நம் நாட்டில் இம்முறையைப் பின்பற்றிச் சீரான நிலவுடைமைகளைப் பெருக்க முடியாது. ஏனெனில் சிக்கனமற்ற நிலவுடைமைகள் அதிக அளவில் உள்ளன. அதே நேரத்தில் ஏழைகள் தங்கள் சிறிய நிலத்தை விட்டுக்கொடுக்கவோ, பெரும் நிலக்கிழார்கள் தங்கள் உபரி நிலத்தைக் கொடுக்கவோ ஒப்புக்கொள்ள மாட்டார்கள். மேலும் இப்பொழுதுள்ள பாகப் பிரிவினைச் சட்டத்தை மாற்றி

நிலம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குறைந்து இருந்தால், நிலத்தைப் பாகப்பிரிவினை செய்யக்கூடாது எனத் தடைசெய்ய வேண்டும்.

இரண்டாவது வழி யாதெனில், கிராமங்களில் உள்ள எல்லோரும் நிலத்தை ஒருங்கிணைத்து அவரவர் அளவு நிலத்தைத் தொடர்ச்சியாக எடுத்துக்கொள்ளுதல் வழியாம். ஆனால் நிலம் பலதரப்பட்ட வளமுடைய தாகையால், இதனை விவசாயிகள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். சில மாநிலங்களில் நில ஒருங் கிணைப்புச் சட்டங்கள் உள்ளன. கிராமத்தின் 2/3 மடங்கு நிலத்தைப் பயிர் செய்கின்ற பாதி அளவு விவசாயிகள் ஒருங் கிணைப்புக்கு ஒப்புக்கொண்டு அரசுக்கு மனு செய்து, அரசு அதனை ஒப்புக்கொண்டால் மற்றும் உள்ளோரும் அதனை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சட்டமுள்ளது. பஞ்சாப்பிலும் ஹரியானா விலும் நில ஒருங்கிணைப்பு முடிந்து விட்டது. நான்காவது திட்ட காலத்தில் 28.35 மில்லியன் ஏக்கர் நிலத்தை ஒருங்கிணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவு விவசாயம்

நம் நாட்டில் நிலச்சீர்திருத்தங்களின் முக்கிய நோக்கமே கூட்டுப்பண்ணைகள் அமைத்து, கிராமக் கூட்டுப் பொருளா தாரத்தை அமைப்பதேயாகும். 'மகாத்மா காந்தி அடிகள் நாம் கூட்டுப்பண்ணை விவசாயத்தைக் கடைப்பிடிக்காத வரை விவசாயத்திலிருந்து முழுப்பயனை பெற இயலாது' எனக் கூறி யுள்ளார். அரசியல் சுதந்திரம் பெற்ற நம் நாட்டில், கூட்டுறவு இன்றைய நிலையில் முறை விவசாயத்தைப் பின்பற்ற முடியுமா ? பின்பற்றுவதால் நாடு அடையக்கூடிய நன்மைகள் யாவை? தீமைகள் யாவை? கூட்டுப்பண்ணை விவசாயம் நம் நாட்டின் விவசாயத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி உற்பத்தியைப் பெருக்குமா?

கூட்டுறவு விவசாய முறைகள்

கூட்டுறவுத் திட்டக் குழு, கூட்டுறவு விவசாயத்தை நான்கு வகையாகப் பகுத்துள்ளது.

1. குத்தகையாளர் கூட்டுப் பண்ணை

நிலவுடைமையாளர்கள் ஒருங்கிணைந்து நிலத்தைப் பல பிரிவு களாகப் பிரித்து, சங்கத்தின் உறுப்பினர்களுக்கு குறிப்பிட்ட நிலையான வாரத்திற்குக் குத்தகைக்குத் தந்து, அவர்களுக்கு வேண்டிய கடன், விதை, உரம் உழவுக் கருவிகளையும் தந்து அவர்

களின் முழு உடைமையான விளைபொருளையும் விற்றுத் தருகின்ற அமைப்புக்குக் குத்தகையாளர் கூட்டுப்பண்ணை முறையென்று பெயர்.

2. சமூக உரிமைக் கூட்டுறவு விவசாயம்
(Collective Co-operative Farming)

இம்முறையில் அங்கத்தினர்கள் நிலத்தைத் திரும்பிப்பெற முடியாத வகையில் சங்கத்திடம் ஒப்படைக்கின்றனர். நிலம், கால்நடைகள், ஏனைய கருவிகள் ஆகியவை அனைத்தும் எல்லோருக்கும் பொதுவாகும். உழைப்பு எல்லோருக்கும் பொது. பண்ணையின் நிர்வாகம், தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவால் செய்யப்படும். இம்முறையில் விவசாயி உழைப்புக்கு ஊதியமும், மிச்ச உற்பத்தியில் ஒரு பங்கும் பெறுவான். இம்முறையில் செய்யும் விவசாயம் முழுதும் இயந்திரங்களையும் மற்றக் கருவிகளையும் கொண்டு பெரிய அளவில் நடைபெறும்.

3. மேலான முறையில் பயிர் செய்யக் கூட்டுறவு

இம்முறையில் சில அல்லது எல்லா விவசாயிகளும் ஒன்று சேர்ந்து சீர்திருத்தப்பட்ட புதிய முறையில் பயிர் செய்வர். வயலை உழும் பொழுதும், களையெடுக்கும் பொழுதும், அறுவடை செய்யும் பொழுதும் அங்கத்தினர் அனைவரும் சேர்ந்தே செய்வர். ஆனால் இம்முறையில் விவசாயிகள் சுதந்திரமாக எப்பயிரை வேண்டுமானாலும் சாகுபடி செய்யலாம். நிலவுரிமையையும் அவர்கள் இழப்பதில்லை.

4. கூட்டுறவு முறை இணைந்த விவசாயம்
(Co-operative Joint Farming)

இம்முறையில் மிகச் சிறிய நிலமுடைய விவசாயிகள் தங்கள் சிறு துண்டுகளை ஒன்று சேர்த்துப் பெரிய நிலப்பரப்பாக்கி எல்லோரும் இணைந்து பயிரிடுவர். இம்முறையில் நிலம் இணைக்கப்படுகிறதே யன்றி, நிலவுரிமையை அங்கத்தினர்கள் இழப்பதில்லை.

குத்தகையாளர் கூட்டுப்பண்ணைமுறை, நிலமற்ற விவசாயிகள் இணைந்து செயல்பட ஏற்பட்டது. மீட்டுப் பயன்படுத்தப்பட்ட நிலங்களை நிலமற்றோர்களுக்கு, ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு அளித்து, இம்முறையில் பயிரிடச் செய்யலாம். இரண்டாவது முறையில் நிலக்கிழார், நிலமற்ற விவசாயியாக மாற்றப்படுவதால் இம்முறைக்கு நம் நாட்டில் பலத்த எதிர்ப்பிருக்கும்.

மூன்றாவது வகை நிலையானது அல்ல. எந்த அங்கத்தினரும் தான் நினைக்கின்ற பொழுது சேரலாம், விலகலாம் என்றிருப்பதால் இம் முறையும் பயன்படாது. நமது கிராமச் சூழ்நிலைக்கு ஏற்றது நான்காவது வகையான இணைந்த கூட்டுறவு விவசாயமே. அதன் சிறப்புகளை ஈண்டுக் காண்போம்.

(1) விவசாயிகள் கட்டாயத்தினால் அல்லாமல் தாங்களாகவே உறுப்பினராகின்றனர்.

(2) நிலத்தைப் பொதுவாகப் பயிரிட அளித்தாலும் நில வுரிமை விவசாயியிடமே இருக்கிறது.

(3) தங்களுடைய நிலம், கால் நடை ஏனையவைகளை ஒருங்கிணைக்கின்றனர்.

(4) எல்லா நிலமும் ஒரே பண்ணையாக நிர்வகிக்கப்படுகிறது.

(5) நிர்வாகக் குழு எல்லா உறுப்பினர்களாலும் தேர்ந் தெடுக்கப்படுகிறது.

(6) ஒவ்வோர் உறுப்பினரும் உழைப்புக்குத் தனி ஊதியமும், தாங்கள் அளித்துள்ள நிலத்தின் விகிதத்திற்கு ஏற்றவாறு உற் பத்தியில் பங்கும் பெறுகின்றனர். நம் நாட்டில் இம்முறை இணைந்த கூட்டுறவு விவசாயச் சங்கங்களையே நிறுவ விரும்பு கிறோம்.

இணைந்த கூட்டுறவு விவசாயமும் சமூக உரிமைக் கூட்டுறவு விவசாயமும் (Collective farming)

இரண்டு முறைக் கூட்டுறவுகளின் நோக்கமும் ஒன்றுதான். அஃதாவது உற்பத்தியைப் பெருக்குதலேயாம். ஆனால் அவை, பின்பற்றுகின்ற வழியில்தான் வேறுபாடு உள்ளது.

இணைந்த கூட்டுறவு முறை விவசாயத்தில் தன்னிச்சை யாகவே நிலமுடையோர் சேர்ந்து கூட்டுப்பண்ணை அமைக்கின் றனர். ஆனால் சமூக உரிமைக் கூட்டுறவு முறை விவசாயத்தில் அரசு தலையீட்டின் பேரில் நடுத்தர நிலக்கிழார்களை ஒழித்துக் கூட்டுறவு விவசாயத்தைத் தொடங்குகிறது. இம்முறையில் ஒரு விவசாயி உறுப்பினரானால் அவன் அதைவிட்டு வெளியேறுவது இயலாத காரியம். அவன் தன் நிலம், கால்நடை, உழவுக் கருவிகள் அனைத்தையும் இழந்து நிலமற்ற தொழிலாளியாகிறான்.

ஆனால் இணைந்த கூட்டுறவு விவசாயத்தில் தனிச் சொத் துரிமை மதிக்கப்படுகிறது. இம்முறையில் விவசாயி தான் அளித்த

நிலம், கால்நடை, கருவிகள் அடிப்படையில்தான் உற்பத்தியில் பங்கும், தான் உழைத்த நாட்களுக்கு ஊதியமும் பெறுகிறுன். ஆனுல் சமூக உரிமைக் கூட்டுறவில் அவன் செய்த வேலைக்குக் கூலியும், கூலியின் விகிதமாக மொத்த உற்பத்தியில் ஒரு பங்கும் பெறுகிறுன்.

. மனித நில விகிதம் குறைவாக உள்ள நம் நாட்டிற்கு இணைந்த கூட்டுறவு விவசாயமே ஏற்றது. நிலம் அதிகமாகவும், மக்கள் தொகை குறைவாகவும் உள்ள நாடுகட்குச் சமூக உரிமைக் கூட்டுறவு ஏற்றதாகும்.

'கூட்டுறவு விவசாயம் சிறந்தது. உற்பத்தியைப் பெருக்க ஒரே வழி' என ஒரு சாராரும், 'கூட்டுறவு முறை விவசாயம் பயனற்றது, உற்பத்தியைப் பெருக்காது' என ஒரு சாராரும் கூறி வருகின்றனர். நாம் இணைந்த கூட்டுறவு விவசாயத்திற்குச் சாதக பாதகமான வாதங்களை ஈண்டுக் காண்போம்.

நம் நாட்டில் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருகிக் கொண்டே வருகிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, மக்கள் தொகை பெருகும் என்பதையே காட்டுகின்றது. மக்கள் தொகை பெருகப் பெருக விவசாயத்தைச் சார்ந்துள்ள மக்கள் தொகையும் பெருகி நிலம் பல உட்பிரிவுகளாகவும், இன்னும் பல சிறு துண்டு களாகவும் சிதறி விடும். நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளோரில் 20% மக்கள் நிலமற்றோராக இருக்கின்றனர். 40% விவசாயிகள் சற்றேறக்குறைய 5 ஏக்கர் நிலமுடையோராக உள்ளனர். பத்து சதவிகிதப் பெருநிலக்கிழார்கள்தாம் 50-ம் அதற்கும் மேற்பட்ட ஏக்கர்களும் நிலமுடையோராக உள்ளனர். இக்குறைகளை நீக்க ஒரே வழி—மாற்று—இணைந்த கூட்டுறவு விவசாயமே.

கிராமப்புறங்களில் பலர் வேலையின்றியும் முழு அளவு வேலை யின்றியும் இருக்கின்றனர். ஆனுல் கிராமங்களில் வேலை வாய்ப்புகள் உள்ளன. அவைகளைத் தனிப்பட்ட விவசாயி மேற் கொள்ள முடியாது. விவசாயிகள் ஒருங்கிணைந்தால் செயற்கை முறையில் தண்ணீர் கொண்டுவர வகை செய்யலாம். நில அரிப்பைத் தடுக்கலாம். தரக்குறைவான நிலத்தைக்கூடப் பண் படுத்திப் பயிர் செய்ய முடியும். எனவே கூட்டுறவு வில்சாயம் வேலை வாய்ப்பைப் பெருக்கி, அதே நேரத்தில் உற்பத்தியையும் பெருக்க முடியும்.

விவசாயி தனித்து வேளாண்மை செய்யும்பொழுது ஒரு குறிப் பிட்ட அளவு நிலத்தை உணவு பயிர் செய்யவும், மிகக் குறைந்த

அளவு நிலத்தைத்தான் அதிக இலாபந்தரக்கூடிய வணிகப் பயிர் செய்யவும் பயன்படுத்த முடியும். ஆனால் இணைந்த கூட்டுறவு முறை விவசாயத்தில் நிலம் எப்பயிருக்கு ஏற்றதோ, அப்பயிரைப் பயிரிடலாம். மேலும் கால்நடைகள், உழவுக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவைகளை முழு அளவுக்குப் பயன்படுத்த முடியும்.

சிறிய அல்லது நடுத்தர விவசாயி புதிய இயந்திரக் கருவிகளைத் தனித்து வாங்க இயலாது. ஆனால் இணைந்த கூட்டுறவு விவசாயத்தில் இயந்திரக் கருவிகளைப் பெருமளவில் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும். இணைந்த கூட்டுறவு விவசாயத்தில், உறுப்பினர்கள் தாங்கள் அதிகம் திறன் பெற்ற வேலைகளைச் செய்யலாம். எடுத்துக்காட்டாக, சிலர் உழுதலில் திறன் பெற்றவராக இருப்பர்; சிலர் நடுதலில் திறன் பெற்றவராக இருப்பர். அவரவரும் தாம் திறன் அதிகம் பெற்ற வேலையைச் செய்ய முடியும். மேலும் சிலர் இணைந்த கூட்டுறவு விவசாயம் கிராமத்தில் இருக்கும் வேலை வாய்ப்புகளைக் குறைத்துவிடும் என்று கூறுகின்றனர். ஆனால் கூட்டுப்பண்ணைகள் நாளடைவில் கிராம மூலப்பொருள்களைக் கொண்டு, நுகர்வோர் பொருள்களையும் தயாரிக்கத் தொடங்கும். அதனால் வேலை வாய்ப்புப் பெருகுமேயன்றிக் குறையாது.

நாட்டின் துரித வளர்ச்சிக்கு தொழிலாளருக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்யவும் அதே போன்று தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும் இணைந்த கூட்டுறவு விவசாயத்தாலேயே முடியும். சிறு பண்ணைகளாக இருந்தால் போதிய அளவு உணவுப் பொருள் விற்பனைக்குரிய அளவில் கிடைப்பது சந்தேகமே. விற்பனைக்குரிய மிச்சத்தை அதிகரிக்கவும், மூலப்பொருள் உற்பத்தியைப் பெருக்கவும் சிறந்தது கூட்டுப்பண்ணை விவசாயமே.

நிலம் தனித்தனி விவசாயிகளிடம் இருக்குமானால் அரசு பண உதவி, விதைகள், உரங்கள் ஆகியவற்றை இலட்சக்கணக்கான விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ முடியாது. ஆனால் இணைந்த கூட்டுறவு விவசாய முறையில் எளிதாகவும் நேரடியாகவும் கூட்டுப் பண்ணைகளுக்குப் பண உதவி, விதைகள், உரங்கள் ஆகியவைகளை அளிக்க முடியும்.

இன்று நாட்டில் சாதி, மதங்களால் உள்ள வேற்றுமைகளை அகற்றி, கிராம மக்கள் இணைந்து வாழவும் இந்தக் கூட்டுறவு வேளாண்மை வகை செய்ய முடியும். ஆகவே கூட்டுப்பண்ணை விவசாயம் ஏற்றது மட்டுமல்ல, முக்கியத் தேவையும்கூட என்பது சான்றோர்களின் கருத்து.

இந்தியாவில் கூட்டுப் பண்ணை விவசாயத்தின் நிலைமை

இந்தியாவில் கூட்டுப்பண்ணை விவசாயம் இரண்டு வகைப் படும். (1) சேவைக் கூட்டுறவு (2) இணைந்த கூட்டுறவுப் பண்ணை. சேவைக் கூட்டுறவுகள் விதைகள், உரங்கள், சீர்திருத்தப்பட்ட கருவிகள், விளைபொருளை விற்பனை செய்யும் வசதிகள் ஆகியவைகளை அளிக்கின்றன. இவ்வகைக் கூட்டுறவுக்கு நம் நாட்டில் எதிர்ப்பில்லை. ஆனால் இணைந்த கூட்டுறவு விவசாயத்திற்கு எதிர்ப்பிருக்கிறது. இதனைச் சில அரசியல்வாதிகள் சமூக உடைமைக் கூட்டுறவிற்கு இது முதல் படியெனக் கூறி இதனை எதிர்க்கின்றனர். ஆனால் நிலச் சீர்திருத்தச் சட்டங்களி லிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே நம்நாட்டில் கூட்டுப் பண்ணைகளை அமைக்கின்றனர்.

கூட்டுப்பண்ணை விவசாயம் என்பது நம்நாட்டில் சிலர் நினைப்பதுபோல் புரட்சிகரமான தல்ல. நிலக்கிழார்களும், நில மற்ற விவசாயிகளும், பயிர் பங்கீட்டுக்கொள்வோரும் கூட்டுப் பண்ணை என்ற பெயரின்கீழ் வாழ்கின்றனர். மேலும் இங்கு விளை பொருளைப் பங்கிட்டுக்கொள்ளும் முறை தெளிவானதாக இல்லை. தேர்ந்தெடுக்கப்படுகின்ற மேலாளர் தான் மீண்டும் தேர்வுபெற வேண்டும் என்பதற்காக மற்ற அங்கத்தினர்களைக் கண்டித்து வேலை வாங்காதிருப்பதால் உற்பத்தி பெருகுவதில்லை. மேலும் கூட்டுப்பண்ணை விவசாயத்தில் உற்பத்தி பெருகுவதில்லை. ஆனால் கிடைக்கின்ற சராசரி வருமானம், உற்பத்திச் செலவு குறைவதால் அதிகரிக்கிறது. எனவே உற்பத்தியைப் பெருக்க சிறிய பண்ணை களே ஏற்றவை என்று கூறலாம்.

இந்தியாவில் கூட்டுறவு விவசாயம் எதிர்பார்த்த அளவு வெற்றியை அளிக்கவில்லை. 1968 மார்ச்சில் நம் நாட்டில் 8,582 கூட்டுறவுப் பண்ணைகளும், 2,14 இலட்ச விவசாயிகளுமே இருந் தனர். 0.2 சதவிகித விவசாயிகளே கூட்டுப்பண்ணைகளை அமைத்து 2.7 இலட்ச ஹெக்டேர் நிலத்தையே பயிர் செய்கின்றனர். எனவே கூட்டுப்பண்ணை விவசாயம் தனது நோக்கங்களை அடைய முடியவில்லை. கிராம மக்களிடையே உள்ள சாதி, மத, பொரு ளாதார வேறுபாடுகள் மறைந்தால்தான் உண்மையான கூட்டுறவு விவசாயம் வளர்ந்து, விவசாயப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். நாட்டில் பலதரப்பட்ட விவசாயிகள் இன்னமும் கூட்டுறவு இயக் கத்தின் உயர்ந்த இலட்சியத்தை நன்கு உணர்ந்தார்கள் இல்லை.

(2) விவசாயத்தை இயந்திரமயமாக்குதல்

இந்திய விவசாயிகள் பயன்படுத்தும் கருவிகளும், உபகரணங் களும் முரடானவை, பழமையானவை. ஆனால் மேல் நாடுகளில்

பயன்படுத்துகின்ற கருவிகள் நவீனமானவை. அவை உழைப்பைச் சிக்கனப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வல்லவை. மேல் நாடுகள் புதிய இயந்திரக் கருவிகளைப் பன்யபடுத்தி 18, 19ஆம் நூற்றாண்டுகளில் தொழிற்புரட்சிக்கு இணையான விவசாயப் புரட்சியின் மூலம் உற்பத்தியை ஏராளமாகப் பெருக்கிச் செலவைக் குறைத்தன. இதனால் மேலைநாட்டு விவசாயிகளின் இன்றைய வளர்ச்சி, பண்ணைகளில் பெருமளவு இயந்திரத்தைப் பயன்படுத்தியதால்தான் ஏற்பட்டது என அறிகிறோம். மக்களிடையே இயந்திரமாக்காமல் தீவிர விவசாயம் செய்ய முடியாது என்ற பொதுவான எண்ணம் உள்ளது.

விவசாயத்தில் வேலையாட்கள் மற்றும் கால்நடைகளின் உழைப்பிற்குப் பதில் இயந்திரங்களைக் கொண்டு வேலை செய்வது, விவசாயத்தை இயந்திரமாக்கல் என்று சொல்லப்படுகின்றது. அஃதாவது டிராக்டர் கொண்டு உழவைச் செய்தல், நடுதல், உரமிடுதல் ஆகியவைகளை டிரில் இயந்திரங்களைக்கொண்டு செய்தல், அறுவடையையும் போரடித்தலையும் இயந்திரங்களைக்கொண்டு செய்தல். இவைகளைத்தாம் நாம் இயந்திரமயமாக்கல் என்பதன் மூலம் குறிக்கின்றோம்.

விவசாயத்தை இயந்திரமயமாக்கினால்தான் உற்பத்தி பெருகும் எனக்கூறி இயந்திரமயத்தைச் சிலர் பலமாக ஆதரிக்கின்றனர். சிலர் இது வேலையின்மையைப் பெருக்கும்; இன்னும் பல பிரச்சினைகளை உருவாக்கும் என்று எதிர்க்கின்றனர். நாம் முதலில் இயந்திரமயமாக்குவதற்குச் சாதகமாகவுள்ள வாதங்களைக் காண்போம்.

பெருவாரி முறையில் உற்பத்தி செய்தால் கிடைக்கும் பலனைப் பெறவே விவசாயம் இயந்திரமயமாக்கப்பட வேண்டும் என்று கருத்துக் கொண்டுள்ளனர். இயந்திரங்கள் விரைவாகவும் திறமையாகவும் பணி செய்யும். மனித உழைப்பினால் குறைந்த அளவில்தான் உற்பத்திச் செய்ய முடியும். ஆனால் இயந்திரங்களின் துணைகொண்டு உழைத்தால் உற்பத்தி நிச்சயமாய்ப் பெருகும். உழவன் 10 நாட்களில் கால்நடையின் துணைகொண்டு செய்கின்ற உழவை டிராக்டர் ஒரே நாளில் செய்ய முடியும். பண்ணை இயந்திரங்கள் விவசாயியைக் கடின உழைப்பிலிருந்து விடுவித்து ஓய்வளிக்கக் கூடியது. இயந்திரங்களினால் உற்பத்தி பெருவாரி முறையில் நடப்பதால் நல்ல பலன் கிடைக்கிறது. பெரிய நிலப்பரப்பை உழுவதையும் அறுவடை செய்தலையும் அறுவடையான தானியங்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்

வதையும் இயந்திரங்கள் விரைவிலும், எளிதாகவும் செய்து முடிக்கும். இதனால் சராசரி நிலஉற்பத்தியும் தனி நபர் உற்பத்தியும் பெருகும். உற்பத்திச் செலவும் குறையும். இது நுகர்வோனுக்கும் பயனளிக்கும்.

மேலும், இயந்திர மயமாக்குவதால் தொழில் துறையிலும் போக்குவரத்துத் துறையிலும் வேலைவாய்ப்பு பெருகும். இயந்திரமயமாக்குவதால் வேலை இழக்கின்ற விவசாயிகளைப் புதிய தொழில்களில் ஈடுபடுத்த முடியும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவிடாது.

மேலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 12 சதவிகித மக்களே விவசாயத்தில் ஈடுபட்டுள்ள போதிலும், இயந்திர மயமாக்கப்பட்டதால் அந்நாட்டு விவசாயிகள் தங்கள் எச்ச விளைவை உலகில் உணவுத் தேவையுள்ள பல நாடுகளுக்கு வழங்க வல்லவர்களாக உள்ளனர். இதனால் நாம் அறியக்கிடப்பது யாதெனின் நாம் நம் விவசாயத்தை இயந்திரமயமாக்கினால் உற்பத்தி பெருகும். நம் உணவுப் பிரச்சினை ஆதவன் கண்ட பனிபோல் விலகும். எனவே இயந்திரமயமாக்கல் விவசாய வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையென ஒரு சாரார் கூறிவருகின்றனர்.

இயந்திர மயமாக்கக் கூடாது என விவசாயிகள் தடை கூறி வருகின்றனர். ஏனெனில் நம்நாட்டிலுள்ள சராசரி நிலவுடைமை அளவு 3 விருந்து 12 ஏக்கருக்குள் இருக்கிறது. ஆனால் இந்த நிலம் கூட ஒரே இடத்தில் இருப்பதில்லை. அவை பல துண்டுகளாகச் சிதறிக்கிடக்கின்றன. இயந்திரக் கருவிகளைச் சிறிய நிலங்களில் அரை ஏக்கருக்குக் குறைவான பகுதிகளில் பயன்படுத்த முடியாது. இயந்திரமயமாக்கப்பட்ட நாடுகளில் சராசரி நிலவுடைமை அளவு 145 ஏக்கராக அமெரிக்காவிலும், 234 ஏக்கராக கனடாவிலும் 1600 ஏக்கராக இரஷ்யாவிலும் உள்ளது. ஆனால் நிலம் பல உட்பிரிவுகளாகவும், பல துண்டுகளாகவும் பிரிந்துள்ள இந்தியாவில் விவசாயத்தை இயந்திரமயமாக்க முடியாது.

விவசாயத்தை இயந்திரமயமாக்கினால் பெரும்பாலான நிலமற்ற விவசாயிகள் வேலையிழப்பர். நம்நாட்டில் இயந்திரமயமாக்கினால் 3 அல்லது 4 மில்லியன் விவசாயிகள் வேலையிழப்பர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் கால்நடைகளின் அளிப்பையும் குறைக்க முடியாது. வேலையிழந்த, திறனற்ற விவசாயிகளுக்கு, விவசாயமற்ற தொழில்களில் வேலைவாய்ப்பு அளிப்பது கடினம். இது மக்கள் தொகை குறைந்துள்ள மேனாடு

களுக்கு ஏற்றதேயன்றி, நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருகி வரும் நம் நாட்டுக்கு ஏற்றதல்ல.

விவசாயிகள் இயந்திரக் கருவிகளை வாங்கப் பணமோ அதைப் பயன்படுத்தும் அளவுக்கு நுட்பக் கல்வியோ பெற்றிருக்கவில்லை.

பண்ணை இயந்திரக் கருவிகளை நாமே உற்பத்திச்செய்யும் நிலையிலும் நாமில்லை. இப்பொழுதுள்ள அன்னிய செலாவணிப் பற்றாக் குறை நிலையில் நம்நாடு போதிய அளவு விவசாயக் கருவிகளை இறக்குமதி செய்ய முடியாது.

இயந்திரமயமாக்கினால் விவசாய உற்பத்தி பெருகினாலும், பெரும்பாலான விவசாயத் தொழிலாளர் வேலையிழப்பர். ஆனால் நில உற்பத்தித் திறனை இது பெருக்காது. நாம் ஜப்பானியரின்செறிந்த வேளாண்மை முறையைக் கடைப்பிடித்து உற்பத்தியைப் பெருக்க முயல்வதே இயந்திர மயமாக்குதலை விடச் சாலச் சிறந்ததாகும்.

நம்நாட்டில் மத்திய அரசு ''மைய டிராக்டர் அமைப்பு'' என்ற ஒன்றைத் துவங்கி உலகபாங்கின் உதவியோடு 240 டிராக்டர்களை வாங்கி, பயனற்றிருக்கும் நிலங்களையும் வளமிழந்த நிலங்களையும் உத்தரப்பிரதேசத்திலும், மத்தியப்பிரதேசத்திலும், நிலமீட்சி செய்துள்ளது. மாநில அரசுகள் காடுகளைத் திருத்தி கழனியாக்கவும் விவசாயிகளுக்கு வாடகைக்குத் தரவும் டிராக்டர்களை வாங்கியுள்ளன. இப்பொழுது தமிழ் நாட்டிலும் ஒரிசாவிலும் இரண்டு நிறுவனங்கள் டிராக்டர் உற்பத்தி செய்யத் துவங்கியுள்ளன.

இயந்திரமயமாக்குவதற்கு நம்நாட்டில் தடையாக உள்ளவை சராசரி விவசாயியின் வறுமையும் அவர்களுக்குக் கல்வியறிவு இல்லாமையும், வயல்கள் சிறு துண்டுகளாக இருப்பதுமேயாகும்.

(3) விவசாய உற்பத்தித் திறன்

விவசாய உற்பத்தித்திறனை இருவகையாகப் பிரிக்கலாம்.

(1) நில உற்பத்தித் திறன். (2) தொழிலாளியின் உற்பத்தித் திறன். நில உற்பத்தித்திறன் என்பது ஓர் ஏக்கருக்கான விளைவைக் குறிப்பதாகும். தொழிலாளியின் உற்பத்தித்திறன் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயியின் உற்பத்தித்திறனைக் குறிப்பதாகும். நம் நாட்டில் நில உற்பத்தித் திறனும், விவசாயியின் உற்பத்தித்திறனும் மிகக் குறைவாகவே உள்ளன.

அட்டவணை 14

தேர்ந்தெடுத்த சில நாடுகளின் நில உற்பத்தித்திறன் (1966—67)

பொருள்	நாடு	ஹெக்டேருக்கு கிலோ கிராமில் உற்பத்தித் திறன்.
அரிசி	இந்தியா	1,290
	ஜப்பான்	5,090
	யு. எஸ். ஏ.	4,850
கோதுமை	இந்தியா	890
	இங்கிலாந்து	3,840
	பிரான்சு	2,830
சோளம்	இந்தியா	960
	யு. எஸ். ஏ	4,540
	பிரான்சு	4,000
பருத்தி	இந்தியா	110
	யு. எஸ். எஸ். ஆர்	830
	மெக்ஸிகோ	790
நிலக்கடலை	இந்தியா	600
	ஜப்பான்	2,140
	யு. எஸ். ஏ.	1,900

(Source: Indian Agriculture in Brief — 1968.)

மேலே கண்ட அட்டவணையிலிருந்து இந்திய நாட்டில் எல்லா வகையான விளை பொருள்களின் ஹெக்டேர் விளைதிறன் மிகக் குறைவாக உள்ளதை அறியலாம். மேலும் தனி மனிதனின் சராசரி உற்பத்தித்திறனும் மிகக் குறைவாகவே உள்ளதை அட்டவணை 15-ல் அறியலாம்.

இந்திய விவசாயியின் ஏக்கருக்கான உற்பத்தித் திறன் மிகக் குறைவாக உள்ளதென்பதை அட்டவணை 16-லிருந்து அறிகிறோம். டாக்டர் பல்ஜிட் சிங் என்பார் நம்நாட்டு விவசாயியின் ஆண்டு உற்பத்தித்திறனைப் பிற நாட்டு விவசாயத் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனோடு ஒப்பிட்டு, இந்திய விவசாயியின் உற்பத்தித் திறன் மிகக் குறைவு என்பதை இந்த அட்டவணை மூலம் தெளிவு படுத்துகிறார்.

அட்டவணை 15

இந்திய மாகாணங்களில் ஏக்கருக்கு மொத்த உற்பத்தியின் (56-57, 57-58 ஆண்டுகளில் சராசரி) குறியீட்டெண்

அகில இந்திய சராசரி குறியீட்டெண் = 100

அகில இந்திய சராசரிக்கு மேல் உற்பத்தியுடைய மாநிலங்கள்		அகில இந்திய சராசரிக்குக் குறைவான உற்பத்தியுடைய மாநிலங்கள்	
பஞ்சாப் (ஹரியானு உட்பட)	215.9	மத்திய பிரதேசம்	94.35
மேற்கு வங்காளம	144.15	மஹாராஷ்டிரம்	88.94
ஒரிசா	132.72	மைசூர்	88.71
அஸ்ஸாம்	111.49	ராஜஸ்தான்	88.24
தமிழ்நாடு	111.14	ஜம்மு காஷ்மீர்	66.10
கேரளா	110.06	பீகார்	62.83
குஜராத்	105.09		
ஆந்திரா	103.68		
உத்தரப் பிரதேசம்	101.11		

அட்டவணை 16

விவசாயியின் ஆண்டுச் சராசரி உற்பத்தித் திறன் (யு.எஸ். டாலரில்)

நாடு	சராசரி உற்பத்தித் திறன் (டாலரில்)
இந்தியா	105
நார்வே	973
இங்கிலாந்து	2,057
கானடா	2,126
ஜப்பான்	2,265
யு.எஸ்.ஏ	2,408
நியூஜிலாண்ட்	3,481
மேற்கு ஜெர்மனி	3,495

இந்த அட்டவணையிலிருந்து விவசாயியின் மிக அதிக உற்பத்தித் திறன் உடைய நாடான மேற்கு ஜெர்மனி இந்தியாவை விட 33 மடங்கு அதிக உற்பத்தித் திறன் பெற்றுள்ளதை அறியலாம்.

இந்திய நாட்டில் விவசாயியின் உற்பத்தித்திறன் குறைந்திருப்பதன் காரணம், விவசாயத்தை மிகப் பெரும்பாலோர் சார்ந்திருப்பதேயாம். இவர்களில் பலர் விவசாயத்தை விட்டகன்று வேறு தொழில் புரிந்தாலும் விவசாய உற்பத்தித்திறன் குறையாது. அஃதாவது இவர்களின் எச்ச உற்பத்தித்திறன் (Marginal Productivity) ஒன்றுமில்லை. எனவே இவர்கள் விவசாயத்தைச் சார்ந்திருப்பதால், மற்ற விவசாயிகளின் சராசரி வருமானம் குறைகிறது. இவர்கள் வேலையில் இருப்பது போல் தோன்றினாலும் உண்மையில் அவர்களால் உற்பத்திப் பெருக்கம் எதுவுமில்லை. இதனைப் பொருளியலார் "வேலையிலிருப்பதுபோல் தோன்றும் வேலையின்மை" (disguised Unemployment) என்பர். இது விவசாயியின் சராசரி வருமானம் மிகக்குறைவாக இருப்பதன் முக்கிய காரணமாகும். எனவே பொருளியல் வல்லுநர்கள் விவசாயிகளை விவசாயத்தை விட்டு வேறு தொழிலில் ஈடுபடச் செய்தால், அவர்களுடைய உற்பத்தித்திறன் விவசாயத்தில் ஒன்றுமில்லாததால், முதல் ஆக்கம் (Capital formation) பெருகுவதற்கு வாய்ப்புள்ளது எனக் கருதுகின்றனர்.

குறைந்த உற்பத்தித் திறனுக்கான காரணங்கள்

இந்திய நாட்டில் சராசரி ஏக்கர் உற்பத்தித்திறனும், விவசாயியின் உற்பத்தித்திறனும் மிகக் குறைவாகவே உள்ளது என்பதைக் கண்டோம். நம் நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக உற்பத்தியில் சற்று உயர்வு காணப்படுகிறது. ஆயினும் விவசாயம் முழு வளர்ச்சியடையாமலே பின் தங்கியுள்ளது. அதற்கான காரணங்களை நாம் ஈண்டுக் காண்போம்.

விவசாயத்தை நம்பிப் பலர் வாழ்தல்

உண்மையான சிக்கல், இந்திய விவசாயத்தைப் பொருத்த வரை, அதில் அதிகமான நபர்கள் சார்ந்திருத்தலேயாகும். 1901 ஆம் ஆண்டிலிருந்து விவசாயத்தைச் சார்ந்திருக்கும் மக்கள் தொகை 70% ஆகவே தொடர்ந்து இருந்து வருகிறது. விழுக்காடு ஒன்றாக இருந்தாலும், விவசாயத்தைச் சார்ந்துள்ள மக்கள் தொகை இந்த நூற்றுண்டுத் தொடக்கத்தில் 163 மில்லியனிலிருந்து, 1961-ல் 307 மில்லியனாக உயர்ந்துள்ளது. இவ்விதம் பெருகியுள்ள மக்கள்தொகை தொழில் துறையில் வேலை பெருகுவ

தற்கு வாய்ப்பில்லை. முன்பு கைவினைத் தொழில்களில் ஈடுபட்டோரும் ஆலைத்தொழில் வளர்ச்சியால் அதனைக் கைவிட்டு விவசாயத்தில் ஈடுபட்டனர். இதனால் இருக்கின்ற நிலத்தைப் பலர் பங்கிட்டுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பல (சிறு) துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு விவசாயிகளின் நிலம் பல இடங்களில் சிறுசிறு துண்டுகளாகச் சிதறிவிட்டது. விவசாயத்தை அதிகம் பேர் சார்ந்துள்ளதாலும் விவசாயியின் சராசரி நிலத்தின் பரப்பளவு மிகக் குறைந்து விட்டது. நிலத்தின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இவ்வளவு அதிகமான நபர் தேவையின்மையால், விவசாயத்தில் கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்க உற்பத்திப் பெருக்கம் ஏற்படவில்லை. மேலும் 1901ஆம் ஆண்டில் 103 செண்டாக இருந்த சராசரி நிலப்பரப்பளவு இப்பொழுது 74 செண்டாகக் குறைந்துள்ளது. இதனால் நாம் அறிவது யாதெனில் விவசாயத்தில் சார்ந்துள்ள மக்கள்தொகையைக் குறைத்தாலன்றி உற்பத்தியைப் பெருக்க இயலாது என்பதே.

இந்தியக் கிராமங்களின் சூழ்நிலையும் விவசாய உற்பத்திக் குறைவிற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. நம் நாட்டில் பெரும்பாலான விவசாயிகள் கல்வியறிவு அற்றவர்கள்; அறியாமையில் மூழ்கியவர்கள்; பழமை விரும்பிகள்; மற்றும் சாதிப்பிரிவு, கூட்டுக்குடும்பம் ஆகியவற்றில் இன்னும் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளவர்கள். 'விதி வலிது. விதியை மதியால் வெல்ல இயலாது' என்ற வேதாந்தம் பேசிக் கொண்டிருப்பவர்கள். விஞ்ஞான முறையையோ, புதிய விதையையோ சக விவசாயி பயன்படுத்தினால், அவனை ஒன்றும் அறியாதவன் முட்டாள் என்று எண்ணுகின்றனர். அவர்கள் விவசாயத்தைக் கொண்டு மிகுதியான பொருள் ஈட்ட எண்ணமில்லாதவர்களாக இருக்கின்றனர். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு விவசாய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது எனக் கருத இடமுண்டு.

இங்கு புரட்சி என்ற சொல்லை நாம் பயன்படுத்த முடியாது. ஏனெனில் முழு மாற்றம் இங்கே நடைபெறவில்லை. இங்கு புதிய விதைகள், புதிய சாகுபடி முறைகளில், இப்பொழுதுதான் கவர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இப்பழக்கம் எல்லாவிடங்களிலும் பரவுவதற்கான அறிகுறிகள் நன்கு தென்படுகின்றன. எனவே தமிழகம் உணவில் தன்னிறைவு பெற்று, அண்டை மாநிலங்களின் தேவையையும் நிறைவு செய்யும் என்பதில் ஐயமில்லை.

நமது நாட்டில் விவசாயிகளுக்குத் தேவையான கடன் வசதிகள், விற்பனை வசதி இவை பெருகாமையும் உற்பத்திக்

குறைவிற்கு மற்றொரு காரணமாகும். இவை யிரண்டும் உரிய நேரத்தில் சுலபமாகக் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் அடித்தளத்தில் இருக்கின்ற சிறு விவசாயிக்குக் கிடைப்பதில்லை. விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்குக் கிராம மார்வாரி அல்லது சவுக்காரைத்தான் இன்னும் நாட வேண்டியுள்ளது. அதற்கு அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டி விகிதம் மிக அதிகம் என்பது தெரிந்த விஷயமே. வட்டி விகிதத்தைக் கட்டுப்படுத்தப் பல சட்டங்களை அரசு இயற்றி யிருந்த போதிலும், கிராம மார்வாரிகள் பத்திரத்தில் வட்டி விகிதத்தைக் குறைத்து, கொடுக்கின்ற கடனை அதிகமாகக் காட்டி எழுதும் கொடிய பழக்கம் இன்னும் இருந்து வருகிறது. உதாரண மாக ஒரு விவசாயி ஆயிரம் ரூபாய் கடன் பெற்றால், அதற்கு அவன் 24 சதவிகித வட்டி செலுத்த ஒப்புக்கொள்கிறான். ஆனால் அரசு சட்டப்படி 12% மேல் வட்டி வாங்கினால் செல்லாது. எனவே கிராம மார்வாரி ஓர் ஆண்டுக்கு 24% வீதம் வட்டியைக் கணக்கிட்டு அந்த மிகை வட்டியை முதலோடு சேர்த்துப் பத்திரம் எழுதுகிறான். விவசாயி அறிந்தோ, அறியாமலோ வேறு போக்கிடம் இல்லாததால் அதிக வட்டி கொடுத்துக் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

கூட்டுறவுத் துறைக் கடன்களும், அரசுகடன்களும் போதுமான தாக இல்லை; வேண்டிய காலத்திலும் கிடைப்பதில்லை. குடியான வர்கள் தங்கள் பொருள்களைச் சேமித்து பத்திரமாக வைப்பதற்கு வசதியில்லாததால், பெரிய வியாபாரிகளும் கமிஷன் ஏஜெண்டு களும் அவர்களை ஏமாற்றிப் பெருமளவு இலாபம் பெறுகின்றனர். விவசாயம் பின் தங்கியிருப்பதற்கு இது மற்றொரு முக்கிய காரணமாகும்.

நம் நாட்டில் விவசாயியின் சராசரி நில உரிமைப் பரப்பளவு மிகக்குறைவாக இருப்பதும் உற்பத்திக் குறைவிற்கு மற்றுமொரு காரணமாகும். அவை சிறியனவாக மட்டுமல்ல; கிராமத் தின் பல இடங்களில் துண்டு துண்டாகவும் சிதறிக்கிடக்கின்றன. இவைகளில் சாதாரண உழவுக் கருவிகளைக் கூடப் பயன்படுத்த முடியாத அளவுக்கு மிகச் சிறியவையாக உள்ளன. எனவே இந் நிலங்களில் புதிய விதைகளையோ, புதிய உழவுக் கருவிகளையோ பயன்படுத்த முடியவில்லை. இவைகளைப் பயன்படுத்தினால்தான் உற்பத்தி பெருகும்.

நிலங்கள், பல உட்பிரிவுகளாகப் பல இடங்களில் துண்டு துண்டாகப் பிரிந்து கிடப்பதற்குக் காரணம், பெருகிவரும் மக்கள் தொகையும் குடும்ப நிலத்தை குடும்பத்தில் உள்ள எல்லாப்

பிள்ளைகளுக்கும் சமமாகப் பகிர்ந்துகொள்ள அனுமதிக்கும் சட்டமுமேயாகும்.

உழுபவனுக்கு நிலம் சொந்தம் இல்லை. உழுது பயிர் செய்பவன் ஒருவன். ஆனால் பயன் அடைவதோ நில உரிமையாளர். நம் நாட்டில் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டபோதிலும் சிறு விவசாயிகளுடைய நிலையில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை. உழுபவனுக்கு நிலம் சொந்தமில்லையெனில் உற்பத்தியைப் பெருக்க அவன் முயற்சி செய்ய இயலாது. ஏனெனில், நாளைக்கே நிலம் அவன் கையைவிட்டு மாறிவிடலாம் என்ற நிலை இருக்கும்வரை, உற்பத்திப் பெருக்கத்தை எதிர்பார்க்க முடியாது.

நமது விவசாயிகள் பழைய கருவிகளையும் பழைய பயனற்ற சாகுபடி முறைகளையுமே பின்பற்றி வருகின்றனர். அவர்கள் முன்னோரின் வழி முறைகளைப் பரம்பரையாகப் பின்பற்றுகின்றனர், மேலும் புதிய முறைகளைப் பின்பற்ற போதிய பணவசதி இல்லை. இப்பொழுதுதான் நம் நாட்டில் திட்டங்களின் பயனாக மிகச் சிறிய அளவில் புதிய கருவிகளையும் நவீன சாகுபடி முறையும் பின்பற்றத் துவங்கியுள்ளனர். உற்பத்தியைப் பெருக்க நல்ல உரமிடுதல் வேண்டும். ஆனால் நம் நாட்டில் இரசாயன அல்லது இயற்கை உர உபயோகம் மிக மிகக் குறைவு. சிறந்த பொறுக்கு விதைகளைப் பயன்படுத்தினால் உற்பத்தியை 10% லிருந்து 20% வரை உயர்த்தலாம். ஆனால் நம் விவசாயிகள் தரக்குறைவான விதைகளைத்தான் பயன் படுத்துகின்றனர். நம் நாட்டில் இப்பொழுது தேசிய விதை கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் நிறுவி, நாடு முழுவதற்கும் தேவையான, அதிக அளவு விளையக்கூடிய, நோய்களைத் தவிர்க்கக் கூடிய, விதைகளை உற்பத்தி செய்து பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

நிலத்தின் தரத்தை உயர்த்துதல், தரமுள்ள விதைகளைப் பயன்படுத்துதல், சிறந்த, புதிய, விவசாயக் கருவிகளைப் பயன்படுத்துதல் இவைகளையெல்லாம் செய்தாலும் நீர்ப்பாசன வசதியில்லையெனில் பயன் கிட்டாது. பெரும்பான்மையான விவசாயிகள் மழையையே நம்பியுள்ளனர். மிகச் சிலரே செயற்கை முறை நீர்ப்பாசனத்தை மேற்கொண் டுள்ளார்கள். இந்திய நாட்டின் சுதந்தரத்திற்குமுன் இந்தியாவில் 24% நிலம் நீர்ப்பாசன வசதி பெற்றிருந்தது. நாட்டின் பிரிவினைக்குப்பின் இது 19% ஆகக் குறைந்தது. இப்பொழுது நமது திட்டமிட்ட முயற்சியால். மொத்தம் உழுது பயிர் செய்கின்ற நிலத்தில், 22% நிலம், நீர்ப்பாசன வசதி பெற்றுள்ளது. இதனால் நாம்

செயற்கை முறை நீர்ப்பாசன முறையால் நாம் நீர்வளத்தைப் பெருக்க இயலும் என்பதை அறியலாம்.

நம்முடைய விவசாயிகளில் மிகப் பெரும்பாலோர் பருவக் காற்றை நம்பியுள்ளனர். இதனால்தான் இந்திய விவசாயம் பருவக் காற்றில் விளையாடப்படும் ஒரு சூதாட்டம் என்று கருதப் படுகிறது. பெரும்பாலான நிலங்கள் ஆண்டுக்கு ஒருமுறைதான் பயிர் செய்யப்படுகிறது.

மேலே கூறியவை அனைத்தும் விவசாய உற்பத்திப் பெருக்கத் திற்குத் தடையாக உள்ளன. இவைகளைக் களைந்தால் நாட்டின் உற்பத்தி பெருகும். இதனால்தான் அரசு விவசாயிகளுக்கு மாற்று வேலை வாய்ப்புக்களை உருவாக்கி விவசாயத்தைச் சார்ந் துள்ள மக்கள் தொகையைக் குறைக்க முயன்று வருகிறது. நில உரிமை முறையில் உள்ள குறைபாட்டை நீக்கி உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்க அரசு நிலச்சீர்திருத்தச் சட்டங்களை இயற்றியுள்ளது. புதிய கருவிகளையும், புதிய பொறுக்கு விதை களையும், நல்ல இரசாயன உரங்களையும் அரசு குறைந்த விலையில் அளிப்பதற்கு முன்வந்துள்ளது. இதனால் நம் நாட்டில் ஏக்கர் சராசரி உற்பத்தித்திறனும் விவசாயின் சராசரி உற்பத்தித்திறனும் பெருகும் என எதிர்பார்க்கலாம்.

(4) ஐந்தாண்டுத் திட்டங்களும் விவசாயமும்

முதல் திட்டத்திற்கு முன் விவசாயத்தின் நிலை

முதல் திட்டத்திற்கு முன் விவசாயம் நம்பிக்கை தளர்ந்து, சீரழிந்து இருந்தது. நம்முடைய விவசாயிகளில் மிகப் பெரும் பாலோர் கடனாளிகளாக இருந்தனர். அவர்கள் கிராம மார்வாரி களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கிப் பிறகு கடனையே தங்கள் (எச்சத்திற்கு) குடும்பத்திற்குச் சொத்தாக வைத்துச் சென்றனர். அவர்களுடைய நிலமோ பல உட்பிரிவாகப் பிரிக்கப் பட்டுப் பல துண்டுகளாகக் கிராமத்தில் பரவிக் கிடந்தன. அவர் களுக்குப் புதிய கருவிகள், பொறுக்கு விதை, இரசாயன உரங்கள் ஆகியவை பற்றி நன்கு தெரியாது. நம் நாட்டில் நிலச் சராசரி உற்பத்தித் திறனும், விவசாயியின் சராசரி உற்பத்தித் திறனும் உலகிலேயே மிகக்குறைவாக இருந்தது. இருந்தபோதிலும் 70% மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் நம் நாட்டில் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 25 லட் சம் டன் உணவுத் தானியங்களை இறக்குமதி செய்து வந்தோம்.

சுதந்திரத்திற்குப்பின் நம் நாட்டு விவசாயம் பெரிதும் பாதிக்கப் பட்டது. ஏனெனில் நாட்டுப் பிரிவினையில் இந்தியாவுக்கு 82% மக்களும், ஆனல் 69% நெல்விளை நிலமும், 65% கோதுமை விளை நிலமும், 75% பிறதானிய நிலமுமே கிடைத்தன. எனவே இந்திய நாடு பிரிவினையால் குறைந்த நிலத்தையும் அதிக மக்கள் தொகையையும் பெற்றது. நீர்ப்பாசன வசதியுடைய நிலங்களில் குறைந்த பரப்புடைய நிலத்தைத்தான் இந்தியா பெற்றது. பொதுவாகத் திட்டத்திற்குமுன் இந்திய விவசாயம் சீரழிந்து காணப்பட்டது.

விவசாயமும் முதல் திட்டமும்

முதல் திட்டக் காலத்தில் மொத்தத் திட்ட முதலீட்டில் அஃதாவது ரூ. 1960/- கோடியில், ரூ. 601 கோடி விவசாயத்தில் முதலீடு செய்யப்பட்டது. இது 31% ஆகும். அரசுத் துறையில் ரூ. 291 கோடி விவசாயத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் செலவு செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீதியுள்ள ரூ. 310 கோடி நீர்ப்பாசன வசதிக்காகச் செலவு செய்யப்பட்டது. இதன் விளைவாக 12 லட்ச ஏக்கரா நிலம் பண்படுத்தப்பட்டுச் சாகுபடிக்கு வரலாயிற்று. 14 லட்ச ஏக்கரா நிலம் நீர்ப்பாசன வசதி பெற்றது. ஜப்பானிய முறை சாகுபடித் திட்டம் செயலாக்கப்பட்டது. திட்டம் திட்டமிட்ட வகையில் செயல்பட்டதாலும், சாதகமான பருவங்கள் இருந்ததாலும், சில துறைகளில் திட்ட இலக்குகளை விஞ்சித் திட்டம் வெற்றியடைந்தது.

கரும்பு, பருத்தி, சணல் ஆகிய பயிர்களில் முதல் திட்டம் இலக்கை அடைய இயலவில்லை. திட்ட இறுதி ஆண்டான 1955–56–ல் உற்பத்திப் பெருக்கம் குறைவாகத்தான் இருந்தது. உணவுதானிய உற்பத்தி 1963–64–ல் 69 மில்லியன் டன்னுக இருந்தது: திட்ட இறுதியாண்டில் 65 மில்லியன் டன்தான். எண்ணெய் வித்து உற்பத்தி 1954-55-ல் 6.2 மில்லியன் டன்னுக இருந்தது. ஆனல் 1955-56-ல் 5.7 மில்லியன் டன்தான். கரும்பு உற்பத்தி, குறியிலக்கு உற்பத்தியை 1951-52-ல் அடைந்தது. பருத்தி உற்பத்தி 1954-55-ல் குறியிலக்கை அடைந்தது. சணல் மட்டும் குறியிலக்கு உற்பத்தியை அடைய முடியவில்லை. திட்ட இறுதியில் இந்தியா உணவில் தன்னிறைவு அடையவில்லை. இந்தியாவின் இறக்குமதி 0.59 மில்லியன் டன்னுக குறைந்தது. திட்ட ஆரம்ப காலத்தில் நம் இறக்குமதியின் அளவு 4.73 மில்லியன் டன்னுகும். இதனல் நாம் ஓர் அளவு தன்னிறைவு பெற்று, உணவு இறக்குமதியைத் திட்ட இறுதியில் குறைக்க முடிந்தது என்பதை அறிகிருேம். மேலும் விவசாயப் பொருள்

களின் விலை (1952-53-ல் 100) குறியீட்டெண் 92.8 ஆகக் குறைந்தது. மேலும் தானியங்கள் (cereal), பருப்பு வகைகள் (Pwlses), சர்க்கரை, மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் விலைக் குறியீட்டெண் முறையே 38,11,15 புள்ளிகள் குறைந்தன. முதல் திட்ட இறுதியில் உணவு உற்பத்திப் பெருக்கம் ஓரளவு விலை வாசி உயர்வைக் கட்டுப்படுத்தியது. இது பொருளாதாரத்தைச் சீரடையச் செய்து இரண்டாவது திட்டக் காலத்தில் அதிக அளவு முன்னேற்றத்திற்கான பாதையை உண்டாக்கியது.

அட்டவணை 17

முதல் திட்டத்தில் விவசாயத்தின் சாதனை

பயிர்	உற்பத்தி 1950–51	திட்ட இலக்கு 1955–56	உற்பத்தி 1955–56	நிறைவு அல்லது குறைவு
உணவு தானியங்கள் (மில்லியன் டன்கள்)	54.0	61.6	65.8	+4.2
எண்ணெய் வித்துக்கள் (மில்லியன் டன்களில்)	5 1	5.5	5.6	+0.1
இரும்பு	5.6	6.3	6.0	−0.3
பருத்தி (மில்லியன் பேல்கள்)	2.9	4.2	4.0	−0.2
சணல்	3.3	5.4	4.2	−1.2

இரண்டாவது திட்டமும் விவசாயமும்

இரண்டாவது திட்ட காலத்தில் தொழில் அடிப்படையை உருவாக்கத் திட்டமிடப்பட்டது. எல்லோருக்கும் சமவாய்ப்பும், குறிப்பாகச் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்கு அதிக வாய்ப்பளிக்கவும் திட்டமிடப்பட்டது. திட்டக்கமிஷன் விவசாய அடிப்படை வலுவாகிவிட்டது என எண்ணித்தொழில் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தத் திட்டமிட்டது. விவசாயத் திற்குத் திட்டக்குழு போதுமான கவனம் செலுத்தாமல் இல்லை.

குறைந்த முதலீடு அதிகப் பயனை விவசாயத்தில் தரும் எனக் கருதினர். திட்ட மொத்த முதலீடான ரூ. 4,000 கோடியில் ரூ. 950 கோடி விவசாயத்திற்காகச் செலவு செய்யப்பட்டது. இது மொத்த முதலீட்டில் 20% ஆகும். முதல் திட்டக் காலத்தில் மொத்த முதலீட்டில் 31% விவசாயத்திற்காகச் செலவழிக்கப் பட்டது.

மொத்த முதலீடான ரூ. 950 கோடியில் ரூ. 530 கோடி விவசாயத்திற்கும், ரூ 450 கோடி சிறிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் புதிதாக 21 மில்லியன் ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்யத் திட்டமிட்டனர். ஆனால் 16 மில்லியன் ஏக்கரைத்தான் சாகுபடிக்குக் கொண்டுவர முடிந்தது. அரசாங்கம் உருவாக்கிய உபரி நீர்ப்பாசன வசதிகளையும் விதைப்பண்ணைகளையும் சரியான முறையில் விவசாயிகள் முழு அளவில் பயன்படுத்தவில்லை எனத் திட்டக்கமிஷன் கூறியுள்ளது. மக்களின் ஒத்துழைப்பு, நிலப் பாது காப்பு முதலியவைகளில் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி கிடைக்க வில்லை. உரங்களைப் பயன்படுத்துவதிலும் எதிர்பார்த்த அளவுக்கு உயரவில்லை. பொதுவாக உற்பத்தியைப் பெருக்கப் பயன்படும் முறை குறிப்பிட்ட அளவுக்கு வளர்ச்சி அடையவில்லை.

கரும்பைத் தவிர மற்றப் பயிர்களின் உற்பத்தி திட்ட இலக்கை அடையவில்லை. திட்டக் கமிஷன் போதிய கவனம் விவசாயத்திற்குத் தரவில்லை. அதுவே தோல்விக்குக் காரணம் எனப் பொருளியலார் சாடத் தொடங்கினர். அப்படிச் சாடுவது பொருத்தமல்ல. ஏனெனில் திட்டக்கமிஷன் குறைந்த முதலீட்டில் அதிக உற்பத்தியைப் பெற இயலும் என எண்ணியது. விவசாய வளர்ச்சியில் அவர்கள் கொண்டிருந்த அக்கறையை நாம் அவர்கள் சொற்களாலேயே இங்குக் காண்போம். ‘உணவு உற்பத்திப் பெருக்கமும், மூலப்பொருள்களின் உற்பத்திப் பெருக்கமும் இரண்டாவது திட்டக்காலத்தில் மட்டுமல்ல, எப்பொழுதும் தொடர்ந்து இருக்க வேண்டும். ஏனெனில் தொழில் வளர்ச்சியை அடைய, மக்கள் வருமானம் பெருகி உணவு மற்றும் மூலப்பொருள் களின் தேவை பெருகும். எனவே தொடர்ந்து உணவு மற்றும் மூலப்பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்தின் முயற்சியில் தளர்ச்சி கூடாது’ என்று திட்டக் கமிஷன் கூறியுள்ளது.

இரண்டாம் திட்டக்காலத்தில் விவசாய உற்பத்திக் குறைவால் ஏற்பட்ட விளைவுகள்

இரண்டாம் திட்டக்காலத்தில் உற்பத்திக் குறைவினால் ஏற்பட்ட முக்கிய விளைவு எல்லாப் பொருள்களின் மொத்த

விற்பனை விலைக் குறியீட்டெண் 35 சதவிகிதம் உயர்ந்ததே. தானியங்களின் விலைக் குறியீட்டெண் 37% ஆக உயர்ந்தது. பருப்புகளின் விலைக் குறியீட்டெண் 50% ஆக உயர்ந்தது. எண்ணெய் வித்துக்கள் 75% ஆக உயர்ந்தது. சர்க்கரை 61% ஆக உயர்ந்தது. பொதுவாக எல்லாப் பொருள்களின் விலையிலும் குறிப்பிடத்தக்க விலை உயர்வு காணப்பட்டது. விலைவாசிகளின் உயர்வு, கூலி உயர்வுக்கு வழி கோலியது. கூலி உயர்வு மேலும் விலைவாசி உயரக் காரணமாகியது.

அட்டவணை 18

இரண்டாவது திட்டக்காலத்தில் விவசாயத் துறையின் சாதனைகள்

பயிர்வகை	உற்பத்தி 1955–56	குறியிலக்கு 1960–61	அடைந்த உற்பத்தி 1960–61	குறைவு அல்லது நிறைவு (–)
உணவு தானியங்கள் (மில்லியன் டன்னில்)	65.8	80.5	79.7	– 0.8
எண்ணெய் வித்துகள் ,,	5.6	7.6	6.5	– 1.1
கரும்பு ,,	.C	7.8	10.4	+ 2.6
பருத்தி (மில்லியன் பேல்களில்)	4.0	6.5	5.4	– 1.1
சணல்	4.2	5.5	4.0	– 1.5

முதல் திட்ட இறுதியில் தவிர்க்கப்பட்ட உணவு இறக்குமதியை மீண்டும் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்காக நாட்டுத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இயந்திரங்களையும் மூலப்பொருள்களையும் வாங்குவதற்காக ஒதுக்கியிருந்த அந்நியச் செலாவணியை உணவு இறக்குமதிக்குப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. விவசாய முனையில் ஏற்பட்ட தோல்வியே, இரண்டாம் திட்டம் வெற்றி பெற முடியாமற் போனதற்கு முக்கிய காரணமென்பதில் ஐயமில்லை.

மூன்ருவது திட்டமும் விவசாயமும்

மூன்ருவது திட்டக்காலத்தில் விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. உணவு உற்பத்தியில் தன்னிறைவும் தொழில் வர்த்தக வளர்ச்சிக்குத் தேவையான விவசாயப் பொருள்களைப் பெருக்குவதுமே முக்கிய குறிக்கோளாகும். திட்டத்தில் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டது ரூ. 1310 கோடி. ஆனல் நடைமுறைச் செலவு ரூ 1754 கோடி. இது மொத்தத் திட்ட முதலீட்டில் 20°/。 ஆகும். மூன்ருவது திட்டக்காலத்தில் உணவுப் பொருள் உற்பத்தியில் (food - crops) 30°/。 உயர்வும் மற்ற விவசாயப் பொருள்கள் (non - food crops) உற்பத்தியில் 30°/。 உயர்வும் எதிர்பார்க்கப்பட்டது.

திட்டக்கமிஷன் இந்த அளவு உற்பத்திப் பெருக்கம் அடைவதற்குப் பின் கூறியுள்ள வழிகளைப் பின்பற்ற விரும்பியது.

(1) நீர்ப்பாசன வசதி அதிகரித்தல், (2) நிலப்பாதுகாப்பு, புன்செய்ப் பயிர், நிலம் பண்படுத்துதல், (3) இயற்கை உர, செயற்கை உர உற்பத்தியைப் பெருக்குதல், (4) விதைப் பெருக்கமும் பகிர்ந்தளித்தலும், (5) பயிர்ப் பாதுகாப்பு, (6) நல்ல உழவுக் கருவிகளையும் திருந்திய விவசாயக் கருவிகளையும் அதிகமாகப்பயன்படுத்துதல்.

இந்தத் திட்டங்களை, மக்கள் மற்றும் பஞ்சாயத்துக்களின் உதவியோடு நிறைவேற்ற அரசு எண்ணியது. மூன்ருவது திட்டக்காலத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததன் காரணம் விவசாய வளர்ச்சி, நாட்டு வளர்ச்சிக்கு அத்தியாவசியத் தேவை என்பதை அரசு உணர்ந்ததேயாகும். ஆனல் இத்தருணத்தில் இந்தியா இரண்டு பெரும் படையெடுப்புகளைச் சமாளிக்க வேண்டிய கட்டாயமேற்பட்டது. 1962-ல் சீன நமது எல்லையை ஆக்கிரமித்தது. 1965-ல் பாக்கிஸ்தான் காஷ்மீரின் எல்லையை முற்றுகையிட்டது. இதனல் நாம் திட்ட முதலீட்டில் எதிர்பாராத திடீர் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. தொழில் போக்குவரத்து, மின்சார உற்பத்தி, விஞ்ஞான, தொழில் நுட்பத்திறன் வளர்ச்சி இவைகளில் அதிக முதலீடு செய்யவேண்டிய நிலையேற்பட்டது. விவசாயத்தில் உற்பத்தியைப் பெருக்க அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தச் சூழ்நிலை அடிப்படையில்தான் மூன்ருவது திட்ட விவசாய வளர்ச்சியை ஆராய வேண்டும்

அட்டவணை 19

மூன்றாவது திட்டக்காலத்தில் விவசாயப் பொருள்களின் உற்பத்தி

பயிர் வகை	அளவு	1960—61	1964—65	1965—66 குறியிலக்கு	1965—66 உற்பத்தி
உணவு தானியங்கள்	மில்லியன் டன்கள்	82.0	89.0	100.00	72.3
எண்ணெய் வித்துக்கள்	,,	9.0	8.5	9.	6.1
கரும்பு	,,	11.2	12.0	10,0	11.8
பருத்தி	மில்லியன் பேல்கள்	5.3	5.7	7.0	4.7
சணல்	,,	8.2	.6	6.2	4.5
விவசாய உற்பத்திக் குறியீட்டெண் அடிப்படை (ஆண்டு 1949-5C—100)		142	158	—	132

மூன்றாவது திட்டக்காலத்தில் இறுதியாண்டு விவசாய உற்பத்தியைப் பொருத்தவரை சிறந்த ஆண்டாகும். மூன்றாவது திட்ட முதல் நான்கு ஆண்டுகளில் விவசாயப் பொருளின் சராசரி உற்பத்தி உயர்வு 2.6°/₀. ஆனால் 1950-60 பத்தாண்டுகளில் உயர்வு 4°/₀ ஆகும். இதற்கு 1965-66 ஏற்பட்ட வறட்சி நிலையே காரணமாகும். இறுதியாண்டில் 17°/₀ உற்பத்திக்குறைவு ஏற்பட்டதால் குறியிலக்கான 100 மில்லியன் டன்னை அடைய இயலவில்லை. இதனால் உணவு இறக்குமதியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. 1961-66 வரை ரூ 1,100 கோடி பெறுமானமுள்ள இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று.

விவசாயமும் ஆண்டுத் திட்டங்களும்

நான்காவது திட்டம் தள்ளிப்போடப் பட்டதால் 1966-67 லிருந்து 1968-69 வரை ஆண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன

இக்காலத்தில் சிறு பாசனத் திட்டங்களிலும், அதிக விளைச்சல். விதை ரகங்கள், உர உபயோகத்திலும் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இதன் விளைவாகவும் நல்ல பருவ மழையாலும் 1967-68-ல் உணவு உற்பத்தி 95-6 மில்லியன் டன்னாக உயர்ந்தது. திட்ட இறுதியாண்டில் குறியிலக்கான 102

மில்லியன் டன்னை, சில பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்பட்டமையால், அடைய இயலவில்லை. ஆனாலும் 1968–69-ல் 95.6 டன்னில் நிலைநாட்டப் பெற்றது. 1967–68-ல் இரசாயன உர உபயோகம் 1750 ஆயிரம் டன்னாக உயர்ந்தது.

அட்டவணை 20

ஆண்டு திட்டங்களில் விவசாய முதலீடு

துறை வகை	ரூ. கோடி கணக்கில் மொத்தம் 1966—69	முதலீட்டில் சதவீதம்
விவசாயமும் முன்னேற்றத் திட்டங்களும்	1,167	17
நீர்ப்பாசனம்	497	7
விவசாயத்திற்கான மொத்த முதலீடு	1,624	24
மொத்தத் திட்டச் செலவு	6,757	100

அட்டவணை 21

ஆண்டுத் திட்டங்களில் விவசாய முன்னேற்றம்

பயிர்வகை	அளவு	1965–66 (அடைந்தது)	67—68 அடைந்தது)	68—69 (அடைந்தது)	69—70 (அடைந்தது)
உணவுத் தானியங்கள்	மில்லியன் டன்களில்	72.0	95.6	94.01	99.50
எண்ணெய் வித்துக்கள்	,,	6.4	8.2	6.85	7.61
கரும்பு	,,	12.1	10.0	12.83	13.44
பருத்தி	,,	4.8	5.6	5.14	5.23
சணல்	,,	4.5	5.4	2.93	5.61

விவசாயமும் புதிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும்

நான்காவது திட்டக் காலத்தில் விவசாயத்தில் செலவிட எண்ணியுள்ள தொகை ரூ. 3,817 கோடி ஆகும். இது மொத்த முதலீட்டில் 24% ஆகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் செறிந்த வேளாண்மையின் மூலம் திட்டக் குறியிலக்கை அடைய எண்ணியுள்ளது. உணவுப் பொருள்களைப் பொருத்தமட்டில் அதிக விளைச்சல் தரும் ரகங்களைப் பெருக்குதலும், ஆண்டில் பன்முறை பயிர் செய்வதற்கும் வழி வகுத்துள்ளது. வணிக விவசாயப் பொருள்களைப் பொருத்தமட்டில் உற்பத்திக் காரணிகளைப் பெருக்கியும், விவசாய முறையில் மாற்றம் செய்தும் திட்டக் குறியிலக்கை அடைய எண்ணியுள்ளது.

அட்டவணை 22

நான்காவது விவசாய உற்பத்தி திட்டக் குறியிலக்குகள்

பயிர்வகை	அளவு	அடிப் படை ஆண்டு உற்பத்தி	1973–74 குறியிலக்கு	உயர்வு சதவிகிதம்
உணவுத் தானியங்கள்	மில்லியன் டன்களில்	98.0	129.0	31
எண்ணெய் வித்துக்கள்	,,	8.5	10.5	24
கரும்பு	,,	12.0	15.0	25
பருத்தி	மில்லியன் பெல்களில்	6.0	8.0	33
சணல்		6.2	7.4	19
புகையிலை	கிலோ கிராம்	380	480	26

நான்காவது திட்டம் ஆண்டு ஒன்றுக்கு 5% வளர்ச்சிக்குத் திட்டமிட்டுள்ளது. நம் நாடு 1970-71-ல் நாம் எதிர்பார்த்த வண்ணம் உணவில் தன்னிறைவு பெற்றுவிட்டது. கோதுமைப்

பண்டங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(5) சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்

இந்திய மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் ஏழ்மையிலும் அறியாமையிலும் பொருளாதாரத்தில் பின் தங்கியும் வாழ்கிறார்கள். வாழ்க்கையில் புதுவழிகளையும் முறைகளையும் கடைப்பிடிக்காமலும், அறியாமை நோய், கல்வியறிவு இல்லாதிருத்தல் போன்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமலும் இருக்கின்றனர். இதற்கான பல திட்டங்களை அரசு வகுத்தாலும், மக்களின் ஒத்துழைப்பின்றி அவைகள் வெற்றியடைய மாட்டா. எனவே இத்திட்டங்களில் கிராம மக்களைப் பங்கு பெறச் செய்வதே சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும். சமுதாயத்தில் தற்போது நிலவுகின்ற ஏழ்மை, பிணி, அறியாமை ஆகிய மூன்று பிரச்சினைகளையும் ஒழிப்பதுதான் இத்திட்டத்தின் முக்கிய பணியாகும். சமுதாயத்தின் நோக்கங்களைத் தெளிவாக விளக்குவதும், முன்னேற்றப்பாதையில் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்குவதும், இதனை நடாத்திச் செல்ல சிறந்த தலைவர்களைத் தோற்றுவிப்பதும், அதற்குத் தேவையான நிதி வசதிகளை அளிப்பதும் அரசின் வேலையாகும். ஆனால் இத்திட்டங்களின் வெற்றி கிராமப் புனர் நிர்மாணத்தில் மக்கள் தரும் ஒத்துழைப்பையே சார்ந்திருக்கிறது.

ஐக்கிய நாடுகளின் அறிக்கையின்படி சமுதாய அபிவிருத்தித் திட்டம் என்பது சமுதாயத்தின் நாகரிக, சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்தவும், நாட்டு வாழ்வுடன் இச்சமுதாயங்களை ஒன்று படுத்தவும், தேசிய முன்னேற்றமடைய அரசு எடுக்கும் முயற்சிகளுடன் தங்கள் முயற்சிகளையும் ஒன்றுபடுத்தும் முறை ஆகும்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. குறைவான உற்பத்தித்திறனால் விவசாய வருவாய் குறைவாக உள்ளது. வேலைக் குறைவும் உள்ளது. பிழைப்புக்காக நடத்தப்படும் நிலையிலிருந்து முன்னேற்ற விவசாயமாக இது மாற்றப்பட வேண்டும். இவ்வாறு செய்வதற்கு உற்பத்தியின் நுட்ப வினை முறை விருத்தி செய்யப்படவேண்டும். உயர்ந்த ரக விதைகள், இரசாயன உரம் போன்ற நவீன விவசாய மாற்றங்களை பயன்படுத்திக் கொள்ளும்படி விவசாயி தூண்டப்படவேண்டும். நிலத்தை நம்பிவாழும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்

வகையில் குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். சுருங்கக் கூறின் வேலைக் குறைவையும், உற்பத்திக் குறைவையும் போக்குவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

2. கிணறுகள், கால்வாய்கள், குளங்கள் வெட்டுதல் போன்ற சிறிய நீர்ப்பாசன வேலைகள் மூலம் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல். பயிர் செய்யப்படும் நிலத்தில் 50 சதவீதத்தை இத்தகைய நீர்ப்பாசன வசதிகளின் கீழ்க்கொண்டு வருவதே முக்கிய நோக்கமாகும்.

3. விளைபொருள்கள் கிராமங்களிலிருந்து நகர மண்டிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அதிகவிலைக்கு விற்கப்படாமைக்கு முக்கிய காரணம் சாலைகள் இன்மையேயாம். எனவே கிராமங்களை நெடுஞ் சாலைகளுடன் இணைக்கும் சாலைகளைப் போடுவதும், கிராமத்தி னுள்ளேயே இருக்கும் சாலைகளைச் செம்மைப்படுத்துவதும் அவசியம்.

4. அறியாமையை அகற்ற முதல்நிலை, இடைநிலைக் கல்வி புகட்டுதலும், சிறு தொழிலில் ஈடுபட்டுள்ள நுட்பத் தொழில் வல்லுநருக்கும், கைவினைஞருக்கும் நவீன நுட்ப வினை முறையில் பயிற்சி அளிப்பதும்.

5. கிராமங்களில் பரவலாக இருக்கும் பிணிகளையகற்றுவதற்கு மருத்துவ நிலையங்களை ஏற்படுத்துவதுடன், கால்நடைகளுக்கு வேண்டிய கால்நடை மருத்துவ மனைகளும் நிறுவுதல். காலரா, மலேரியா போன்ற தொற்று நோய்களை அறவே ஒழிக்கத் தேவை யான நடவடிக்கைகள் எடுத்தல்.

அமைப்பும் நிர்வாகமும்

ஒவ்வொரு தொகுதியும் 60,000 முதல் 70,000 வரையான மக்கள் தொகையும், 100 கிராமங்களும் கொண்டமைய, ஒரு சமூகத் திட்டம் மூன்று தொகுதிகளைக் கொண்டு விளங்கியது. இவ் வளர்ச்சித் தொகுதிகள் ஒவ்வொன்றும் 5 கிராமங்களைக் கொண்ட தனிப்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டன. தொடக்கத்தில் 17 மில் லியன் மக்கள் தொகையும் 27,000 கிராமங்களும் கொண்ட 55 திட்டங்கள் தீட்டப்பெற்றன. இவற்றுள் ஏழு ஒதுக்கப்பட் டோருக்காக ஒதுக்கப்பட்டன. வேளாண்மை, நீர்ப்பாசனம், சாலைகள், கல்வி, உடல் நலம், வீட்டமைப்பு, சமூக நலப்பயிற்சி ஆகிய இன்னோரன்னவற்றில் சமுதாயத் திட்டம் ஆர்வம் செலுத்திச் செயல் புரிந்தது.

மத்திய அளவில்

உணவு, விவசாயம், சமுதாய அபிவிருத்தித் திட்டம், கூட்டுறவு ஆகியவற்றுக்கான அமைச்சு திட்டத்தின் மேற் பொறுப்புகளை ஏற்றிருக்கிறது.

பிரதம மந்திரி, திட்டக்குழு அங்கத்தினர் ஆகியோர் அடங்கிய குழு அடிப்படைக் கொள்கைகளை வகுக்கிறது.

மாநில அளவில், திட்டத்தை நிறைவேற்றுதல் மாநில அரசின் கடமையாகும். அபிவிருத்தி இலாக்காக்களின் அமைச்சர்கள், முதலமைச்சர் ஆகியோர் அடங்கிய மாநில அபிவிருத்திக்குழு ஒவ்வொரு மாநிலத்திலும் செயல்படுகிறது. இக் குழுவுக்கு அபி விருத்தி ஆணையர் செயலாளராக இருக்கிறார். அவரே நிர்வாகத் தலைவரும் ஆவார். மாவட்ட நிலையில் ஜில்லா பரிஷத்துக்கள் செயல்படுகின்றன. தொகுதி அளவில் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் அடங்கிய ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினால் திட்டங் கள் நிறைவேற்றப்படுகின்றன. வட்டார வளர்ச்சி அலுவலர் (Block Development Officer) நிர்வாக அதிகாரியாகவும் அவருக்கு உதவி புரிய சமூகக் கல்வி, பொது சுகாதார, கால்நடை வளர்ச்சி, கிராமத் தொழில், கூட்டுறவு, விவசாயம் போன்ற துறைகளில் தேர்ந்த எட்டு வளர்ச்சி அலுவலர்களும் (Extension Officers) பணி புரிகிறார்கள். கிராம அளவில் பஞ்சாயத்துக்கள் கிராம நலத்துக் கான திட்டங்களை அங்கீகரித்துச் செயல்படுத்துகின்றன. நிர்வாக வசதிக்காகக் கிராம சேவகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 4 அல்லது 5 கிராமங்களில் உள்ள குடியானவர்களை ஊக்கமூட்டி அவர்களது ஒத்துழைப்பைப் பெறுவது இவர்களது முக்கிய வேலை யாகும்.

திட்டங்களின் முன்னேற்றம்

நிர்வாக வசதிக்காக 1952ஆம் வருடம் 55 முன்னோடித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது படிப்படியாக இந்தியாவின் எல்லாக் கிராமங்களுக்கும் விரைவில் விஸ்திரிக்கப்பட்டது. இருந் தும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அபிவிருத்திக்காக ரூ. 15 இலட்சம் தேவைப்பட்டது. இந்தியா முழுதும் தோன்றக்கூடிய வட்டாரங்களுக்கு இவ்வளவு அதிகமான தொகை அளிக்கப்பட முடியாததால், சிறிது செறிவு குறைந்த தேசிய விரிவு சேவை (National Extension Service) மேற்கொள்ளப்பட்டது. கருத்தில் கொள்ளும் நோக்கங்களிலும், நீட்டும் திட்டங்களிலும், செயல் படுத்தும் முறைகளிலும் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களை ஒத்தே இத்திட்டங்களும் அமைந்துள்ளன.

வட்டாரங்களின் எண்ணிக்கை, முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் (1955–56) 1200. இவைகளில் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 300 வட்டாரங்களும், தேசீய விரிவுச் சேவையின் கீழ் 900 வட்டாரங்களும் இருந்தன. இத் திட்டங்களினுல் 1.23 இலட்சம் கிராமங்களும், 80 மில்லியன் மக்களும் பயனடைந்துள்ளனர்.

நிதி

திட்டங்களை நிறைவேற்றத் தேவையான நிதியை அரசும், மக்களும் அளிக்கின்றனர். மக்களைப் பொறுத்தவரையில் அவர்களே மனமுவந்து உழைப்பாகவோ, பொருளாகவோ, பணமாகவோ அளிக்கலாம். சிற்சில திட்டங்களை நிறைவேற்றுவதில் ஆகும் செலவை, மாநில அரசும் மத்திய அரசும் பிரித்துக் கொள்கின்றன. மீண்டும் மீண்டும் வரக்கூடிய செலவினங்களில் மத்திய, மாநில அரசுகள் தங்களுக்குள் சமமாகவும், மீண்டும் நேராதச் செலவினங்களை 3:1 என்ற வீதாசாரத்திலும் பிரித்துக் கொள்கின்றன. நீர்ப்பாசனத் திட்டங்கள், புதிய நிலங்களை விவசாயத்தின் கீழ்ப் கொணர்தல் போன்ற உற்பத்தித் திட்டங்களைப் பொறுத்தவரை தேவையான நிதியை மத்திய அரசு, மாநில அரசுக்குக் கடனுக வழங்குகிறது.

முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவு மொத்தத் தொகை ரூ. 233.1 கோடியாகும். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 287.7 கோடி ஒதுக்கப்பட்டது. 1968 மார்ச் 31ஆம் தேதியுடன் முடிந்த காலத்திற்கு, அரசுக்கு ஏற்பட்ட செலவு 571 கோடி; மக்கள் அளித்தது ரூ. 158.4 கோடி.

குறைவான முன்னேற்றத்திற்கான காரணங்கள்

1. திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பேற்று இருக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பள்ளிகள், மருத்துவ மனைகள் கட்டுதல், சாலைபோடுதல் போன்ற திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறுர்கள். உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை நிறைவேற்றுவதில்லை. மேலும் உற்பத்தித் திட்டங்களின் விளை பலனைக் காலப்போக்கில்தான் காணமுடியும். மூன்று வருடங்கள் என்ற கால வரையறையில். எந்தப் பயனையும் துய்க்க முடியாது. எனவே இத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படாததால் பொருளாதார வளர்ச்சி ஏற்படவில்லை.

2. உத்தரப்பிரதேசத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆராய்ச்சியின் படி திட்டங்களை நிறைவேற்றியதால் உண்டான நன்மைகளில்

70 சதவீதம், செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்க்கே சென்றடைகிறது. இம்மாதிரியான குடியானவர்கள் வட்டார அலுவலரை அணுகி அரசாங்க உதவிகளையும் பெறுகின்றனர். கைவினைஞர்களும், நிலமில்லாத உழைப்பாளிகளும், ஏழை குடியானவர்களும் இத்திட்டங்களால் எந்தவிதப் பலனையும் அடையவில்லை.

3. தரமான விதைகள், இரசாயன உரங்கள், பசுந்தாள் உரங்கள் போன்றவைகளைப் பயன்படுத்துவது திட்டமிட்ட அளவுக்கு நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் நைட்ரஜன் உரங்களில், திட்டமிட்டதில் 52 சதவீதமும், பாஸ்பேட் உரங்களில் 58 சதவீதமும்தான் பயன்படுத்தப்பட்டன. இதுபோலவே வெவ்வேறு துறைகளில் திட்டமிட்டதில் குறைவான அளவே நிறைவேற்றப்பட்டன.

4. மேலும் உற்பத்தியைப் பெருக்குதல், அறியாமையைப் போக்குதல், பிணி அகற்றுதல், பயிற்சி அளித்தல், கிராமப்புனர் அமைப்பு, பெண்கள் நலமுன்னேற்றம், குடிசைத்தொழில் போன்ற பல்வேறு துறைகளுக்கான திட்டங்களை நிறைவேற்றுவது இயலாததாய் இருக்கிறது.

5. திட்டங்களின் வெற்றி அதை நிறைவேற்றுகிற அலுவலர்களையே சார்ந்து இருக்கிறது. பெரும்பாலும் இந்த அலுவலர்கள் பயிற்சி பெறுதவராயும், இத்துறையில் ஆர்வம் இல்லாதவராயும் இருப்பதால் குறைவான முன்னேற்றத்தைக் காண்கிறோம்.

சிறப்பாகப் பணிபுரியச் சில யோசனைகள்

1. திட்டங்களின்படி கருதிய பயன்களை எய்தத் தொழில் நுட்ப இலாக்காக்கள் வலிமைப் படுத்தப்பட வேண்டும்.

2. ஆராய்ச்சி வசதிகளை விரிவுபடுத்துவதுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படும் இடத்திலிருந்து ஆராய்ச்சிக் கூடத்துக்கு அவ்வப்போது செய்திகள் அனுப்பப்பட வேண்டும்.

3. வட்டார, மாவட்ட நிலையில் பணியாற்றும் வல்லுநர்கள் எவருடைய ஆணைக்கீழும் இல்லாததால் சரிவரத் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. இக்குறை நீக்கப்படவேண்டும்.

4. கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய பெருகி வரும் பொறுப்புகளைச் சிறப்புற நிறைவேற்றத் தேவையான யோசனைகளை வட்டார அலுவலகத்திலிருந்து பெறவேண்டும்.

முடிவுரை

இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தைக் காணும்போது சிற்சில இடங்களில் குறைபாடுகள் இருந்தாலும், பொதுவாகச் சமுதாய நலத்திட்டங்கள் புரட்சிகரமான ஒரு மாறுதலை உண்டாக்கி இருக்கின்றன. குறைந்த கால அனுபவத்தைக் கொண்டு நோக்கும்போது, திட்டங்களைச் செயல்படுத்துவதில் சில மாற்றங்களைச் செய்யவேண்டிருக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதுதான் திட்டத்தின் முதற் குறிக்கோளாக இருந்தாலும், ஆரோக்கியமான, மகிழ்ச்சி நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதே சிறந்தது. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மக்களின் ஒரு மனதான ஒத்துழைப் பின்றி தீர்வு காண முடியாது. வளர்ச்சிக்கெனச் சொல்லப்பட்ட யாவும் செயல் படுத்தப்பட்ட பின்னரும், நம்முடைய நாட்டில் உருவாகும் உயர்ந்த தலைவர்களைப் பொறுத்தே சமுதாயத் திட்டங்கள் வெற்றி பெற முடியும். மக்களிடையே தோன்றும் இத்தலைவர்கள் தன்னம்பிக்கையில் தளரா உறுதியுடையவராய், மாறி அமையும் சமுதாய நிலைக்கு ஏற்பத் தேவைகளை நிறைவு செய்ய வழி காண்பவர்களாய் இருந்தால் மட்டுமே திட்டம் வெற்றி பெற முடியும்.

(6) உணவுப் பிரச்சினை

''தனி மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்ருர் புதுமைக் கவி. இதனுல் இப்பிரச்சினையின் தன்மையை அறிகிருேம். நம் நாட்டில் உணவுப் பிரச்சினை ஒரு தற்காலிக நெருக்கடியாக இல்லை. இது நீண்ட காலமாகவே தவிர்க்க இயலாத நோய்போல் இருக்கிறது. சாதாரண மனிதனுக்கு, இருபதாண்டுத் திட்டமிட்ட பொருளாதாரத்திற்குப் பிறகும் உணவு, தடங்கலின்றி நியாய விலையில் கிடைக்கவில்லையெனில், 'நமது ஐந்தாண்டுத் திட்டங்கள், பொருளாதார முன்னேற்றம் என்பதெல்லாம் வெறும் பேச்சா? நாம் முன்னேற்றமேயடையவில்லையா?' என்றெல்லாம் வினு மேல் வினு நம் உள்ளத்தே எழுகிறது. நாம் இப்பிரச்னையைத் தீர்க்காவிடில் நம்முடைய கனவுகளான மக்கள் நலம், சமூகநீதி வழங்குதல், ஜனநாயகத்தைக் காத்தல் என்பதெல்லாம் பகற்கனவாகி விடும். இதனுல் நாம் அறிவது யாதெனில் நாம் தீர்க்க வேண்டியது நெருக்கடியல்ல; நீண்டகாலமாகவே நம்மைப் பீடித்து வரும் நோய் என்பதை அறிகிருேம்.

சுதந்திரத்திற்குமுன் உணவுப் பிரச்னை

உணவுப் பிரச்சினை, நம் நாடு பர்மாவிலிருந்து ஏப்ரல் 1937-ல் பிரிந்த பொழுதே தோன்றிவிட்டது. பர்மா நம்மை விட்டுப்

பிரிந்தமையால், தேவையைச் சமாளிக்கவும், விலையைக்கட்டுப் படுத்தவும் 15லிருந்து 20 லட்சம் டன் வரை அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமையேற்பட்டது. பர்மாவை ஜப்பான் கைப் பற்றிய பொழுது நம் நாட்டில் முதலாவதாகப் பெரிய உணவு நெருக்கடி தோன்றியது. இதைத் தொடர்ந்து 1943-ல் தோன்றிய வங்காளப் பஞ்சம் (Bengal Famine), உணவு உற்பத்தியில் இந்தியாவின் நிலையை" உணர்த்தியது. முயற்சிகள் பல மேற்கொண்டு, 1947-ல் நம்நாடு உணவில் தன்னிறைவு அடைந்தது. ஆனல் "பட்ட காலிலியே படும், கெட்ட குடியே கெடும்" என்ற முதுமொழிக்கிணங்க இந்தியா, இருபிரிவுகளாகத் துண்டிக்கப்பட்டமையால் உணவுப் பற்றுக்குறை மறுபடியும் ஏற்பட்டது. ஏனெனில் இந்தியா 82 சதவீதம் மக்களையும், ஆனல் 68 சதவீத நெல் விளை நிலத்தையும், 69.7 சதவீத கோதுமை விளை நிலத்தையும், 75 சதவீத நவதானிய விளை நிலத்தையும், 69 சதவீத நீர்ப்பாசனமுள்ள நிலத்தையுமே பெற்றது. அதிக மக்கள் தொகையைக் காப்பாற்ற வேண்டிய நிலை; ஆனல், பெற்ற நிலமோ விகிதத்தை விடக் குறைவு. பத்து முதல் பன்னிரண்டு இலட்சம் டன் உபரி தானியம் வழங்கிய தானியக் களஞ்சியமான மேற்குப் பஞ்சாபும், சிந்துவும் பாக்கிஸ்தானத்துடன் சேர்ந்தமையால் நாம் உணவுக்கு அயல் நாடுகளை நம்பி யிருக்க வேண்டிய நிலையேற்பட்டது. பர்மாவின் பிரிவு, இந்தியாவை உணவு இறக்குமதி செய்யச் செய்தது. பாக்கிஸ்தான் பிரிவு, இந்தியாவை கோதுமைக்குக்கூட அயல்நாடுகளை நம்பியிருக்க வேண்டிய நிலைமைக்கு உள்ளாக்கியது.

உணவு நெருக்கடிக்குக் காரணங்கள் மூன்று ஆகும். 1920க்குப் பிறகு விரைவான மக்கள்தொகைப் பெருக்கம், பர்மா பிரிவினை, பாக்கிஸ்தான் பிரிவினை ஆகியவைகளாகும். இக்காலத்தில்அடிக்கடி இயற்கையின் சதியால் பயிர்களும் பொய்த்துப் போயின.இரண்டாம் உலகப்போருக்குப் பின், அதுவும் வங்காளப் பஞ்சத்திற்குப் பிறகுதான் அரசு, 'அதிக உணவு உற்பத்தி இயக்கம்' என்ற ஒன்றைத் துவக்கி, உணவுப் பிரச்சினையை முதன்முதலாகத் தீர்க்கமுயன்றது.

உணவுப் பிரச்சினை—1950க்குப் பிறகு

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன் நம் நாட்டில் பெரும் உணவுப்பற்றுக்குறையும், உணவுப் பொருள்களின் விலை மிக அதிகமாகவும் இருந்தது. உணவுப் பொருள்களின் விலை இரண்டாவது உலகப்போருக்கு முந்திய விலையைவிட நான்கு மடங்காக இருந்தது

விலை உயர்வுக்குக் காரணம் உள்ளூறைப் பணவீக்கமும், கோரியாப் போரும், உள்நாட்டில் உற்பத்திக் குறைவுமேயாகும். உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசு நாடு முழுவதும் கட்டாயக் கொள்முதல் செய்து பகிர்ந்தளித்தது. ஆனால் திட்டக் காலத்தில்தான் ஓரளவு பிரச்னைக்குத் தீர்வு காண முடிந்தது.

முதல் திட்டக்காலத்தில்தான் அரசின் விலைக்கட்டுப்பாடு முயற்சிகள் வெற்றியடைந்தன. 1952-53ல் உணவு உற்பத்தி 50-51 ஐவிட 12°/。க்கு மேல் பெருகியதாலும். அரசாங்க இருப்பிலிருந்து உணவு தேவைபட்ட பொழுது அளித்ததாலும், கடின பணவாக்கக் கொள்கைகளைப் (Monetary Policy) பின்பற்றியமையாலும் விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டது. 1953—54-ல் தானியங்கள் உற்பத்தி பெருகியமையால் தானியங்களின் விலை குறைந்தது. 1952-53-லிருந்து 1953-54ல் உணவு உற்பத்திக் குறியீட்டெண் 101லிருந்து 120 ஆக உயர்ந்தது. உணவு உற்பத்தி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டமையாலும் விலை வீழ்ச்சியுற்றதாலும் உணவின் மீது இருந்த கட்டுப்பாடு எடுக்கப்பட்டது. உணவு இறக்குமதி 1951-ல் 47 லட்சம் டன்னிலிருந்து 1955-ல் 6 லட்சம் டன்னாகக் குறைந்தது. முதல் திட்டக் காலத்தில் உணவுப் பொருள்களின் விலை 23 சதவிகிதம் வீழ்ச்சியடைந்தது. ஆனால் இதே காலத்திய தொழிற் பொருள்களின் விலை 3.5 சதவிகிதமே குறைந்தது. உணவு உற்பத்தியில் திருப்தி கொண்ட திட்டக் கமிஷன் உணவு உற்பத்திப் பெருக்கம் பணவீக்கத்தைப் போக்கி, பொருளாதாரத்தை நிலைப்படுத்தி, இரண்டாவது திட்டக் காலத்தில் அதிக அளவு முன்னேற்றம் அடைவதற்கான பாதையை வகுத்துள்ளது எனக் கூறியது.

இரண்டாவது திட்டக் காலத்தில்

அக்டோபர் 1955ல் இருந்து உணவுத் தானியங்கள் விலை உயரத் தொடங்கியது. ஆரம்பத்தில் விலை மெதுவாக உயர்ந்தது. விரைவில் அதிகமாகத் தொடங்கியது. நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட வறட்சி, வெள்ளம், புயல் இவைகளால் இராஜஸ்தான், பம்பாய், பீகார், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஆங்காங்கே சில பகுதிகளில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. 1956-ல் விலை மிக அதிகமாகியது. 1958-59-ல் உணவுப் பிரச்சினை பெரும் நெருக்கடியாக மாறியது. ஆனால் (இரண்டாவது திட்டக் காலத்தில்) இக்காலத்தில் உற்பத்தி பெருகிக்கொண்டே இருந்தது. இதற்கு முந்திய காலங்களில் உள்நாட்டில் உணவு உற்பத்தி குறைந்து, அயல் நாடுகளிலிருந்து உணவு இறுதிமதி செய்ய வேண்டிய நிலை இருந்தது. ஆனால் இக்காலத்தில் உள்நாட்டு

உற்பத்தியும் இறக்குமதியும் 1959-ல் 77 மில்லியன் டன்கள் இருந்தன. இது 1955-ல் இருந்ததைவிட 10 மில்லியன் டன் அதிகம். 1955-ல் உணவு நெருக்கடி இல்லை. ஆனால் 1959-ல் உணவு நெருக்கடி தோன்றியது. திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் உணவுப் பொருள்களின் விலை 41% சதவிகிதம் உயர்ந்தது. விலை உயராது உணவுப் பொருள் கிடைத்தவரை, உணவுப் பிரச்னை எதுவுமில்லை எனக் கருதப்பட்டது. ஆனால் போதுமான அளவு இருப்பு இருந்த பொழுதும் விலை உயர உயர மக்கள் அச்சங்கொண்டனர். உணவுப் பொருளின் விலை உயர்வுக்குக் காரணங்கள் பின்வருமாறு:—

(1) திட்டக் காலத்தில் மக்களின் வாங்கும் சக்தி பெருகியது.

(2) முக்கியப் பயிர்கள் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது.

(3) அரசிடம் போதுமான இருப்பு இல்லை.

(4) உற்பத்தியாளர்களும், மொத்த வியாபாரிகளும் அதிக இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்தனர்.

உணவு நிலைமையைச் சமாளிக்க அரசு இறக்குமதியை அதிகரித்தது. அதிக அளவு தானியத்தைத் தன் இருப்பிலிருந்து அளித்தது. நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டன. ரிசர்வ் பாங்க் "தேர்வுக் கடனளிப்புக் கட்டுப்பாட்டை" (Selective Credit controls) முதன் முதலில் கடைபிடித்துப் பதுக்கலைத் தடுக்க முயற்சியை மேற்கொண்டது.

உணவுப் பிரச்சினை : மூன்றாவது திட்ட காலத்திலும் அதற்குப் பிறகும்

மூன்றாவது திட்டத்தின் தொடக்கத்திலிருந்து, உணவு உற்பத்தி நிலையாக இருந்தது. ஆனால் தேவை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போயிற்று.

1961-62-ல் முந்திய ஆண்டை விட 1 மில்லியன் டன் உற்பத்தி அதிகமாயிற்று. ஆனால் 1962-63-ல் உணவுத் தானிய உற்பத்தி 4 மில்லியன் டன் குறைந்தது. 1964-65-ல் உணவு உற்பத்தி 89 மில்லியன் டன் ஆகியது. இது ஒரு சாதனை ஆண்டாகும். ஆனால் 1965-66-ல், திட்ட இறுதியாண்டில், உணவு உற்பத்தி, 1957-59-ன் உற்பத்தி அளவுக்கு 72 மில்லியன் டன் அளவுக்குக் குறைந்தது. 1966-67-ல் உணவு உற்பத்தியில் மாற்றம் இல்லை. மூன்றாவது திட்டக் காலத்தில் உணவு உற்பத்தி திருப்திகரமாகவில்லை. ஆனால் இக்காலத்தில் பெருமளவில் உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் பதுக்கி வைக்க ஆரம்பித்தனர். அதே நேரத்தில் பணப்பெருக்கத்தாலும் மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் உணவுத் தேவை

பெருகியது. விளைவு; பீகார், உத்தரப்பிரதேசம், ஒரிசா, இராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டன. 1967-68-ல் உற்பத்தி புதிய சாதனையை ஏற்படுத்தி, 95 மில்லியன் டன்னுக உயர்ந்தது. 1968-69-ல் உணவு உற்பத்தி 94 மில்லியன் டன்னுகக் குறைந்தது. 1969-70-ல் 99.5 மில்லியன் டன்னுக உயர்ந்தது. கடைசி இரண்டு ஆண்டுகளில் உணவுப் பிரச்சினை உற்பத்தியால் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனாலும் உணவுத் தானியங்கள் விலை மிக அதிகமாகவே இருந்தது.

அட்டவணை 23

உணவுப் பொருள்களின் உற்பத்தி (மில்லியன் டன்களில்)

	1960—61	64—65	65—66	67—68	68—69	69—70
எல்லாத் தானியங்கள்	69.3	76.6	62.6	83.0	83.6	87.5
எல்லாப் பருப்பு வகைகள்	12.7	12.4	10.0	12.0	10.4	12.0
எல்லா உணவுத் தானியங்கள்	82.0	89.0	72.3	95.0	91.0	99.5

நாம் இப்பொழுது மூன்றாவது திட்டக் காலத்திலும் அதற்குப் பின்னும் இருந்த உணவு தானியங்களின் விலையைப் பற்றிக் காண்போம்.

அட்டவணை 24

மொத்த விற்பனை விலைக் குறியீட்டெண் (1961-62 = 100)

ஆண்டு	உணவுப் பொருள்கள்	எல்லாப் பொருள்கள்
1961–62	100	100
1965–66	150	138
1967–68	194	160
1969–70	200	176
1971 (ஜனவரி)	201	183

மூன்ருவது திட்டக் காலத்தில் உணவுப் பொருள்களின் மொத்தவிலை குறியீட்டெண் 1961-62-ல் 100 லிருந்து, 1971 ஜனவரியி 201 ஆக உயர்ந்ததுள்ளதை. மேலுள்ள அட்டவணை காட்டுகிறது சமீப காலத்தில் உற்பத்தி பெருகிய போதிலும் விலை குறையாது, அரசிற்குப் பெருங்கவலை அளித்து வருகிறது.

உணவுத் தானியங்களின் விலை உயரக் காரணங்கள்

நம் நாட்டில் உணவுப் பிரச்சினை என்பது உள்நாட்டு உற்பத்தியைப் பற்றியது அல்ல. உயர்ந்து செல்லும் உணவுத் தானியங்களின் விலைகளைப் பற்றியது. நியாயமான விலைகளில் உணவுப் பொருள்கள் கிடைக்கும்வரை மக்கள் நாட்டில் உணவுப் பிரச்னையில்லை என்ற எண்ணங் கொண்டிருந்தனர். விரைவாக உயர்ந்து நின்ற உணவுப் பொருள்களின் விலைதான் பீதியை உண்டாக்கியது. நாம் முன்பே குறிப்பிட்டுள்ளபடி 1959–ல் ஒரு பெரும் உணவு நெருக்கடி தோன்றியது. இதற்குக் காரணம் உணவுத் தானியங்களின் விலைக்குறியீட்டெண் 1955-56-லிருந்து 1958-59 வரை சற்றேறக் குறைய 40 சதவிகிதம் உயர்ந்தது. மீண்டும் 1964க்கும் 1967க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தானியங்கள் மற்றும் எல்லா உணவுப் பொருள்களின் விலையும் உயர்ந்தது. (இதனுல் பொருள்களின் விலையும் உயர்ந்தது). இதனுல் பொருளாதாரமே சீர்குலைந்து விடுமோ என்ற ஐயம் ஏற்பட்டது.

உணவுப் பொருள்களின் விலையேற்றத்திற்கான காரணங்களை மூவகையாகப் பகுக்கலாம்: (1) உணவுத்தானியங்களின் தேவையைப் பெருக்கும் பொதுவான காரணிகள், (2) உணவுத்தானியங்களின் தேவையைப் பெருக்கும் தனிப்பட்ட காரணிகள், (3) அளிப்பைக் கட்டுப்படுத்தும் காரணிகள்.

நான்கு பொதுக் காரணிகள் விலை உயர்வுக்குக் காரணங்களாகும். அவையாவன: (1)1955–ல் இருந்து அதிகரிக்கப்பட்ட முதலீடு (2) பற்ருக்குறை நிதியாக்கம், (3) பாங்கு கடன் அதிகரிப்பு (4) மக்கள் தொகைப் பெருக்கம்.

1. திட்டமிட்ட முதலீடு

திட்ட முதலீடு 1951 லேயே துவங்கிய போதிலும், 1955க்குப் பிற்பட்ட முதலீடுதான் விலைகள் உயரக் காரணமாகியது. சான்ருக

ரூ. 340 கோடியாக 1953-54-ல் இருந்த ஆண்டு முதலீடு, மூன்றுவது திட்டக் காலத்தில் ரூ. 2,000 கோடியாக உயர்ந்தது. அதிகரித்த முதலீடு, வருமானத்தைப் பெருக்கி, மக்களின் வாங்கும் சக்தியைப் பெருக்கியதால், உணவுப் பொருள்களின் விலை உயரத் தொடங்கியது.

2. பற்றுக்குறை நிதியாக்கம்

முதலீடு அதிகரிக்க அதிகரிக்க, நாட்டில் பற்றுக்குறை நிதியாக்கமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. சான்முக, முதல் திட்டக் காலத்தில் ரூ. 320 கோடியாக இருந்த பற்றுக்குறை நிதியாக்கம், இரண்டாவது திட்டக்காலத்தில் ரூ. 954 கோடியாகவும், மூன்றுவது திட்டக்காலத்தில் ரூ. 1,150 கோடியாகவும் உயர்ந்தது. 1965–66லிருந்து ஒவ்வோர் ஆண்டும் பற்றுக்குறை நிதியாக்கம் சற்றேறக்குறைய ரூ. 250 கோடியாக இருந்தது. இவ்வகை நிதியாக்கம் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாகிறது.

3. பாங்குக் கடனும் பண அளிப்பும்

திட்டக் காலத்தில் வர்த்தக பாங்குக் கடன் பெருக்கம் 1951-52-ல் ரூ. 580 கோடியிலிருந்து, 1960-61-ல் ரூ 1,320 கோடியாகவும், 1967-68 ல் ரூ. 2,000 கோடியாகவும் உயர்ந்தது. 1951க்கும் 1967க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் பாங்குக் கடன் பெருக்கம் 350 சதவிகிதம் ஆகும். பற்றுக்குறை நிதியாக்கமும், பாங்குக் கடன் பெருக்கமும் மக்களிடையே பணப் புழக்கத்தைப் பெருக்கின. 1951-52-ல் பண அளிப்பு ரூ. 1 850 கோடி; ஆனல், இது 1960-61-ல் ரூ. 2,870 கோடியாக உயர்ந்தது. 1968-69-ல் பண அளிப்பு ரூ. 5,780 அளவை எட்டியது.

4. மக்கள் தொகைப் பெருக்கம்

1951-ல், 361 மில்லியனுக இருந்த மக்கள் தொகை, 1961-ல் 439 மில்லியனுக உயர்ந்தது. இது 22% சதவிகித உயர்வு. இதனுல் நாம் ஆண்டு ஒன்றுக்கு 15 லிருந்து 20 மில்லியன் மக்களுக்கு, உணவு அதிகமாக அளிக்க வேண்டியிருப்பதாலும், இருக்கின்ற மக்களுக்கும் உயர்ரக தானியங்களை வழங்க வேண்டியிருப்பதாலும் உணவுத் தேவை பெருகுகிறது. ஆனுல் உற்பத்தியானது மக்கள் தொகை பெருகும் அளவிற்கு உயராததால் விலைகள் உயர்கின்றன.

தனிப்பட்ட காரணங்கள்

(1) மக்களிடை பண அளிப்புப் பெருக்கத்தால், மக்கள் வாங்கும் சக்தியில் ஏற்பட்ட சீரான உயர்வு.

(2) நாட்டு வருமான பகிர்ந்தளிப்பில், குறைந்த வருமான முடையவர்கள் இப்பொழுது சற்று அதிக அளவு வருமானத்தைப் பெற்றுர்கள். அதனை அவர்கள் முக்கியத் தேவையான உணவுப் பொருள்களில் செலவழிக்க ஆரம்பித்ததால் உணவுப் பொருள் களின் தேவை பெருகி விலை உயர்ந்தது.

(3) இறுதி நிலையில் வாழ்கின்ற பெரும்பாலான இந்திய மக்களின் உணவுத் தானியங்களின் வருமானத் தேவை நெகிழ்ச்சி மிக அதிகமாக உள்ளதால் வருமானம் பெருகப் பெருக, உணவுத் தானியங்களின் தேவை பெருகுவதால் விலை உயர்கிறது.

(4) உணவு வகை, அளவு, நுகர்வு ஆகியவைகளில் ஏற்பட்ட மாற்றத்தால் மக்கள் சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய தானியங் களை விட்டுக் கோதுமை, அரிசியை சாப்பிடத் தலைப்பட்டனர். அது தேவையைப் பெருக்கி விலை உயரக் காரணமாகியது.

(5) மக்கள் தொகைப் பெருக்கமும் தொழில் வளர்ச்சியால் ஏற்பட்ட நகர் வாழ்க்கைப் பெருக்கமும் ஒரு காரணமாகும்.

(6) உற்பத்தியாளர்கள், வணிகர்கள், நுகர்வோர்கள் ஆகி யோர் அதிக இருப்பு (பதுக்கி வைத்தல்) வைத்துக் கொண்ட தாலும் விலை உயர்ந்தது.

(7) உணவுப் பொருள்களின் பற்றுக்குறையும் அதனுல் ஏற் பட்ட விலை உயர்வும் வணிகர்களை உணவுத் தானியத்தில் ஊக வணிகம் மேற்கொள்ளத் தூண்டியதால் விலை உயர, அதுவும் காரணமாகியது.

அளிப்பைக் கட்டுப்படுத்தும் காரணிகள்

(1) உற்பத்தி

நம் நாட்டில் உணவுத் தேவை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே வருகிறது எனக் கண்டோம். ஆனுல் அதே நேரத்தில் உணவு உற்பத்தி பெருகவில்லை. 1962–63ஆம் ஆண்டுகளில் பருவமழை பெய்யாததால் உற்பத்தி 78 மில்லியன் டன்னுகக் குறைந்தது. 1964–65–ல் உணவு உற்பத்தி 89 மில்லியன் டன்னுக உயர்ந்த போதிலும், அடுத்த இரண்டாண்டுகளில் அது முறையே 72, 74 மில்லியன் டன்னுகக் குறைந்தது. தேவைப் பெருக்கம் ஒரு புறம்; உற்பத்திக் குறைவு மறுபுறம். விளைவு: உணவு நெருக்கடி. 1967-68–ல் உணவு உற்பத்தி 96 மில்லியனுக உயர்ந்தமையால் உணவு முனையில் சிறிது முன்னேற்றம் காணப் படுகிறது.

(2) விற்பனைக்குரிய எச்சம் (Marketable – Surplus)

உற்பத்தி பெருகினால் மட்டும் போதாது. உற்பத்தியில் மிகுந்த அளவு விற்பனைக்குரிய எச்சமாகச் (Marketable Surplus) சந்தைக்கு வருதல் வேண்டும். ஆனால் விவசாயிகள் அதிக விலைக்கு விற்கவேண்டும் என்ற எண்ணத்தால் பெரிய அளவில் இருப்பு வைப்பதால், விற்பனைக்குரிய எச்சம் குறைந்து அளிப்பு குறைகிறது. விளைவு: விலை உயர்கிறது.

3) இறக்குமதி

உணவுப் பொருள்களின் பற்றாக்குறையைத் தவிர்க்க, இறக்குமதி மேற்கொள்ளப்பட்டது. 1961–ல் 35 லட்சம் டன்னாக இருந்த இறக்குமதி, 1966-ல் 104 லட்சம் டன்னாக உயர்ந்தது. உணவு உற்பத்தியில் ஏற்பட்ட பெருக்கத்தால் இறக்குமதி 1967–ல் 87 லட்சம் டன்னாகக் குறைந்தது. 1968-ல் இறக்குமதி 65 லட்சம் டன்னாகக் குறைந்துள்ளது.

(4) உணவுப் பிரச்சினையைத் தீர்க்க வழிகள்

முன்பே நாம் உணவுப் பிரச்சினை ஒரு நெருக்கடியல்ல; தீராத வியாதியாக இருந்து வருகிறது எனக் கண்டோம். இதனைத் தீர்க்க நாம் மூவகை வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை யாவன: (1) உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகள், (2) விநியோகிக்கும் முறையில் மாற்றம், (3) விலையை நிலைப் படுத்துவதற்கான (Stabilise) முயற்சிகள்.

உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகள்

தொழில் நுட்பத்தில் தேவையான மாற்றம்

உணவு உற்பத்தி பெருக தரமான விதைகள், உரங்கள், நீர்ப்பாசன வசதி ஆகியவைகளைத் தேவையான அளவுக்கு, குறித்த காலத்தில் விவசாயிக்கு அளிக்க வேண்டும். நம் நாட்டில் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் கீழ், கலப்பின விதைகள் (hybrid Varieties) பெருக்கம், நீர்ப்பாசன வசதிகள், உர உபயோகம் ஆகியவைகள் பெருகி வருகின்றன. மேலும் பரந்த விவசாயத்தின் மூலமும் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலச் சீர்திருத்தம்

இப்பொழுதுள்ள நிலவுரிமை முறை உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தடையாக உள்ளது. இப்பொழுது சில பல உட்பிரிவு

களாகவும், துண்டு துண்டாகவும் பிரிந்துள்ளமையால் நிலம் சீரான நில அளவை (Economic Holding) குறைந்திருப்பதால் உற்பத்தி குறைகிறது. எனவே நிலச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு நில அமைப்பிலுள்ள குறைபாடுகளைக் களைந்தால் உற்பத்தி பெருகும்.

மேலும் விவசாயத்திலுள்ள பெருங்குறை விவசாயிக்குத் தேவையான உரங்கள், தரமான விதை, நீர்ப்பாசன வசதிகள், பூச்சிக்கொல்லிகள், ஆகியவை தேவையான பொழுதும் வேண்டிய அளவிலும் கிடைப்பதில்லை. எனவே இவைகளை விவசாயிக்கு அளிக்கின்ற அரசாங்க நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பஞ்சாயத்துக்கள், சமூக நலத்திட்டங்கள் ஆகியவை சீரான முறையில் செயல்பட்டு விவசாயியின் தேவையை யுணர்ந்து செயற்படுமாயின் உற்பத்தி பெருகும் என்பதில் ஐயமில்லை.

விநியோக முறையில் மாற்றங்கள்

இப்பொழுது பற்றுக்குறையுள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு தனது இருப்பிலிருந்து தேவையான அளவுக்கு உணவுப் பொருள்களை வழங்கிப் பற்றுக்குறையை நிவர்த்தி செய்கிறது. இதற்காக அரசு இந்திய உணவுக் கார்ப்பரேஷன் மூலம் பெருமளவில் கொள்முதல் செய்து தேவையான மாநிலங்களுக்கும் தேவையான பொழுது அளிக்கிறது.

உணவு தானிய விலையை நிலைப்படுத்துதல்

உணவுக்கொள்கையின் முக்கிய நோக்கமே உணவுத்தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்துவது ஆகும். அரசு விலையைக் கட்டுப்படுத்த இறக்குமதியைப் பெருக்கியும், உள்நாட்டுக் கொள்முதலைப் பெருக்கியும், நியாய விலைக்கடைகள் மூலம் விற்பனை செய்வதற்கான தானியக்கொள்முதலைப் பெருக்கியும் தற்காலிக முயற்சிகளை மேற்கொண்டது. பதுக்கலையும் அதிக இலாபம் பெறுவோரையும் சட்டங்கள் மூலம் கட்டுப்படுத்த அரசு முயன்றது. உணவுப் பொருள்களுக்கு உச்ச விலை நிர்ணயம் செய்தது. ஆனால் இந்த முயற்சிகள் எதிர்பார்த்த அளவு பயனைத் தரவில்லை. அசோக் மேத்தா கமிட்டி (The Food Graines Enquiry Committee) உணவுத்தானியங்களின் விலையை நிலைப்படுத்த, விலை நிலைப்படுத்தும் குழு அமைக்கவேண்டுமென யோசனை கூறியது. இதன் விளைவாக மத்திய அரசு விவசாயப்பொருள்களுக்குக் கொள்முதல் விலை நிர்ணயிக்கவும், கொள்முதல் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறவும், ''விவசாய விலைக் கமிஷனை'' அமைத்துள்ளது (Agricultural Prices Commision).

விலையின் மூலம் விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்க அளிக்க வேண்டிய ஊக்கம்

விவசாயப் புரட்சி என்பது விவசாயப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்தைத் துரித காலத்தில் உண்டாக்குவதுதான் என்ற கருத்தை இந்திய நாட்டுப் பொருளியல் வல்லுநர்களும், அயல் நாட்டுப்பொருளியல் வல்லுநர்களும் கொண்டுள்ளனர். விவசாயப் பொருள்களின் விலை உயர்வதால், அதுவே செறிந்த விவசாய முன்னேற்றத்திற்கு வழியென அமெரிக்க வல்லுநர்கள் கருத்துக் கொண்டுள்ளனர். ஆனால், இப்பொழுதுள்ள மாநிலங்களைத் தனி உணவு மண்டலமாகப் பிரிக்கின்ற முறையினால் அதிக உற்பத்தி செய்கின்ற மாநிலங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தில் புதிய முறைகளைக் கையாண்டு உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ள முடியவில்லை. நிலத்தில் முதலீடு செய்தால் அவனுக்கு அதிகபட்ச விலை கிடைக்க வேண்டும். ஆனால் இப்பொழுதுள்ள தனி மண்டல முறை ஒழிந்தால்தான் விவசாயி அதிக பட்ச விலை பெற முடியும். மேலும் இப்பொழுதுள்ள குறைந்த பட்ச விலை நிர்ணயம், விவசாயப் பொருள் உற்பத்தி பெருகி, தெவிட்டு நிலை (glut) நிகழும் பொழுதுதான் பயனளிக்கிறது. ஆனால் குறைந்த விலை நிர்ணயம், தேவை அளிப்பால் (Demand & Supply) நிர்ணயிக்கப்படும் விலையை விடப் பெரும்பாலும் குறைவாகவே உள்ளது.

எனவே நம்முடைய உணவுக் கொள்கையில் காணப்படும் குறைகளைக் களைந்து, உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிக்கு அதிக பட்ச விலை அளிப்பதன் மூலம், அவனை அதிக உற்பத்தி செய்ய ஊக்க மூட்டி, விநியோக முறையில் தக்க மாற்றம் செய்தால் உணவில் இந்தியா விரைவில் தன்னிறைவு அடையும் என்பதில் ஐயமில்லை.

பசுமைப்புரட்சி (Green Revolution)யில் இந்தியா இப்பொழுது தான் ஓர் அடி எடுத்து வைத்திருக்கின்றதே தவிர, முழுப்புரட்சி இனிமேல்தான் ஏற்படவேண்டுமென்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

(7) விவசாய விளைபொருள் விலைக் கொள்கை
(Agricultural Price Policy)

விவசாய விளைபொருள்களின் விலைகள் ஒரு நாட்டின் பொருளாதாரத்துடன் நேரடியாகப் பிணைக்கப் பட்டுள்ளன. விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்ட நாடுகளில் இதன் முக்கியத்துவம் அதிகம். விவசாயப் பண்டங்களின்

விலையில் தொடர்ந்து ஏற்றம் இருந்தால் மற்றப் பண்டங்களின் விலைகளும் அதிகரிக்கின்றன. இதனால் பணத்தின் மதிப்புக் குறைகிறது. விவசாயப் பண்டங்களின் விலைகள் குறைந்தால் குடியானவர்கள் அதிக அளவு உற்பத்தி செய்ய உற்சாகமற்றவர்களாக இருப்பார்கள். இதனால் மொத்த அளிப்பு (Aggregate Supply) குறைகிறது. தேசிய வருமானமும் குறைகிறது. எனவே இந்தியாவில் விவசாயப் பண்டங்களின் விலையை நிலை பெறச் செய்வது, பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமாகும்.

மற்ற பண்டங்களின் விலைகளைப்போலவே, அளிப்பும் தேவையும் விவசாயப் பண்டங்களின் விலையை நிர்ணயம் செய்கின்றன. உணவுக்காகவும், தொழிற்சாலைக்கான கச்சாப் பொருள்களுக்காகவும் விவசாயப் பண்டங்கள் தேவைப்படுகின்றன. உணவுக்காக ஏற்படும் தேவை நெகிழ்ச்சியற்றதாய் (unelastic) இருக்கிறது. ஆனால் கச்சாப்பொருள்களுக்கு ஏற்படும் தேவை நெகிழ்ச்சி (elastic) உள்ளதாய் இருக்கிறது. உற்பத்தியை நோக்கும் போது காலத்தினாலும், விவசாயிக்குக் கட்டுப்படாத 'காரணங்களாலும் உற்பத்தியில் வேறுபாடுகள் இருக்கின்றன. எனவே விளைபொருள்களின் அளிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், அவைகளின் விலையிலும் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்துகின்றன.

விலைகளின் ஏற்ற இறக்கங்களுக்குக் காரணங்கள்

1. பொதுவாக, விளைபொருள் உற்பத்தி வெள்ளம், மழையின்மை போன்றவைகளால் பாதிக்கப்படுகிறது. இதுபோன்று இன்னும் விவசாயிக்குக் கட்டுப்படாத இயற்கையின் சீற்றங்களாலும், விவசாயத்தின் கீழ் இருக்கும் நிலப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களாலும் உற்பத்தியின் அளவு வேறுபடுகிறது.

2. முக்கியமாக, தேவைக் கேற்ப விவசாயிகள் தங்கள் அளிப்பைச் சரிசெய்து கொள்ள முடிவதில்லை. விலை உயரும் போது இலாபமடைய வேண்டும் என்ற நோக்குடன் உற்பத்தியை விவசாயி அதிகமாக்குகிறான். இதனால் அளிப்பு அதிகரித்து மார்கெட்டில் தெவிட்டு நிலை ஏற்படுகிறது. விலைகள் குறைய ஆரம்பிக்கின்றன. விவசாயப் பண்டங்களைப் பொறுத்தவரை, குறுகிய காலத்தில் தேவைக்கு ஏற்ப அளிப்பைச் சரிசெய்ய முடியாது.

3. விவசாய உற்பத்திச் செலவுக்காகக் கடன் வாங்கிய விவசாயி அறுவடை முடிந்தவுடன் பண்டங்களை விற்க வேண்டியவனாகிறான். கடனை அளித்த கிராம லேவா தேவிக்காரனே தானியங்களை வாங்குவோனாகவும் செயல்படுகிறான். இதனால்

விலை குறைகிறது. அறுவடைக்குமுன் உள்ள மாதங்களில் விலை அதிகரிக்கிறது.

4. பணவாக்கக் கைக்கோளினாலும் அரசிறைக் கைக்கோளினாலும் (Fiscal Policy) விலைகளில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. புழக்கத்தில் இருக்கும் பணத்தின் அளவு அதிகரித்தால் பணவீக்கம் ஏற்படுகிறது. இதனாலும் விலைகள் ஏறுகின்றன.

5. விவசாயிகளே சிற்சில சமயங்களில் விலைகளின் ஏற்ற இறக்கங்களுக்குக் காரணமாகிறார்கள். வாணிக விளைபொருள்களான கரும்பு போன்றவைகளின் விலையில் ஏற்றம் இருந்ததால் நெல் பயிரிடும் நிலங்களைக் கூட மாற்றிக் கரும்பு பயிர் செய்கிறார்கள். இவ்வாறு பெரும்பாலான விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருளை மாற்றும்போது, அதற்கேற்ப விலைகளிலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

விலைகளின் ஏற்ற இறக்கங்களின் விளைவுகள்

தொழிற்சாலைகளில் பல தங்களது கச்சாப்பொருள்களுக்காக விவசாயத்தை நம்பி இருக்கின்றன. இம்மாதிரியான பண்டங்களின் விலைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், இத்தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பண்டங்களின் விலைகளிலும் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்குகின்றன. நிலையான வெளிப்பாடும் இருக்காது.

விவசாயப் பண்டங்களின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களால் விவசாயியினுடைய வருமானம் நிலையற்றதாய் இருக்கிறது. விலைகள் குறையும்போது உற்பத்தியைப் பெருக்குவதற்குக் குடியானவனுக்கு எந்த உற்சாகமும் இல்லை. இந்த விலை இறக்கம் அறுவடையைத் தொடர்ந்து வரும் ஓரிரு மாதங்களில் நிலவுகிறது. இந்த மாதங்களில்தான் குடியானவனும் தன் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக விளைபொருளை விற்க வேண்டியவனாகிறான். சந்தையில் நிலவும் விலை உற்பத்திச் செலவைக்கூட ஈடு செய்யும் அளவுக்கு இல்லை. இழப்படையும் விவசாயி உற்பத்தியைப் பெருக்குவதற்கும் முடிவதில்லை.

விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் விவசாய விளைபொருள்களின் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் ஏனைய பொருள்களிலும் மாறுதலை உண்டாக்குகிறது.

விவசாய விளைபொருள் விலையின் போக்கு

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் உற்பத்தியின் அளவு அதிகரித்ததால் விலையில் இறக்கம் இருந்தது. 1952-53ஆம்

வருடத்தை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, உணவுப்பொருள் களின் குறியீட்டெண் 100 எனக் கொண்டு பார்த்தால், 1956ஆம் ஆண்டு உணவுப்பொருள்களின் குறியீட்டெண் 95 ஆகவும் தானிய வகைகளுக்கு 88 ஆகவும், பருப்பு வகைகளுக்கு 77 ஆகவும் குறைந்து இருப்பதைப் பார்க்கலாம். இரண்டாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் உணவுத் தானியங்களின் விலை 1952–53ஆம் வருட விலையைவிட 2 சதவீதம் அதிகரித்தது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் வருடத்தில் (1961-62) விலைகளில் எந்த மாறுதலும் இல்லை. ஆனால் 1962-ல் ஏற்பட்ட சீனப்படையெடுப்பாலும், அதற்காக இராணுவச் செலவுகள் அதிகரித்ததாலும் விலைகள் ஏற ஆரம்பித்தன. விவசாய விளைபொருளின் உற்பத்தியும் திட்டமிட்ட முதலீட்டுக்குத் தகுந்தாற்போல் இல்லை.

அட்டவணை 25

1952—53 = 100

வருடம்	உணவுப்பொருள்கள்	பருத்தி	சணல்
1960–61	120	112	210
1961–62	120	109	178
1964–65	160	126	164
1965–66	169	129	219

1968-69–ல் நடத்திய பொருளாதாரக் கணிப்பின்படி (Survey) இந்த வருடங்களில் அளிப்பும் தேவையும் சமமாகவே இருந்து வந்தன. உற்பத்தி பெருகிய அளவுக்குப் பண அளிப்பும் அதிகரித்ததால், விலை குறையாமல் இருந்தது. கச்சாப்பொருளின் விலை முந்தைய வருடத்தைவிட 7.5% சதவீதம் அதிகரித்தது. மேற்கூறிய விவரங்களிலிருந்து உணவுப் பொருள்களின் விலையிலும் கச்சாப் பொருள்களின் விலையிலும் ஏற்ற இறக்கம் இருப்பதைக் காண்கிறோம்.

விலை ஏற்ற இறக்கத்தால் ஏற்படும் விளைவுகளைக்கருதி இந்திய அரசு அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கும் வகையில் விவசாய விலைக் கொள்கைக்கு ஐந்தாண்டு திட்டங்களில் முக்கிய இட

மளித்திருக்கிறது. முதல் ஐந்தாண்டு திட்டக் காலத்திலும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் முற்பகுதியிலும் அரசுக்கு நிலையான கொள்கை இல்லை. சில சமயங்களில் முழுக் கட்டுப்பாடும், சில சமயங்களில் முழுமையற்றக் கட்டுப்பாடும் இருந்தது.

உணவு தானிய விசாரணைக் குழு

1. உணவுப் பண்டங்களின் விலையில் உள்ள ஏற்றத்திற்கான காரணங்களைப் பரிசிலனை செய்வது.

2. அடுத்த சில வருடங்களில் உணவு தானியத் தேவையில் ஏற்படக் கூடிய மாற்றங்களையும் அளிப்பு நிலைமையையும் ஆராய்ந்து, உற்பத்தியாளனுக்கு ஊக்கமும், நுகர்வோனுக்குத் திருப்தியும் அளிக்கும் வகையில் இருக்கக் கூடிய விலை நிலவரத்தைச் சிபாரிசு செய்தல் ஆகியவை உணவுத் தானிய விசாரணைக் குழுவின் முக்கிய பணியாகும்.

நிலைமையை நன்கு ஆராய்ந்த குழு முழுமையான கட்டுப்பாட்டுக்கும், கட்டுப்பாடு இல்லாத அளிப்புக்கும் இடையில்தான் தற்போதைய உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று கூறியது. நுகர்ச்சி, உற்பத்தி, வியாபாரம் ஆகிய மூன்றையும் ஒழுங்குபடுத்துவதுதான் கட்டுப்பாடாகும். போர்க்காலங்களில் தனிமனிதனின் தேவை அரசினுல் நிர்ணயம் செய்யப்படுகிறது. அமைதியான காலங்களில் அதுபோன்ற கட்டுப்பாடு இல்லாவிட்டாலும், நுகர்ச்சியை ஒழுங்குபடுத்தி, அதற்கேற்ப உற்பத்தியை வழிப்படுத்த வேண்டும். அதுவே சிறந்த பயன்களைத் தரும் எனக் குழு சிபாரிசு செய்தது.

இதர சிபாரிசுகள்

1. உணவு தானிய விலை நிர்ணயக் குழு:– (Food grains Stabilisation Organisation) ஏற்படுத்தப் படவேண்டும். உணவுப் பொருளின் விலை சரியும்பொழுது பண்டங்களை வாங்கிச் சேமித்து வைத்தும், விலைகள் ஏறும்பொழுது பண்டங்களை விற்பனைக்குக் கொண்டு வந்தும் விலையைக் கட்டுப்படுத்துவதே இதன் வேலை.

2. விலைகட்டுப்படுத்தும் சபை: விலையைச் சமநிலையில் வைக்கும் கொள்கையைத் தெளிவுபடுத்துவதே இந்த சபையின் வேலையாகும். இந்தக் கொள்கையை அவ்வப்போது செயற்படுத்தும் முறையையும் அது வகுக்கும்.

3. உணவு விவசாய அமைச்சுக்கும், விலைகட்டுப்படுத்தும் நிர்வாக சபைக்கும் உதவி செய்ய ஒரு மத்திய ஆலோசனைக் குழு (Central Advisory Council) ஏற்படுத்தப்பட வேண்டும்.

4. தேவையான விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

5. தொழிலாளர் கட்டமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், நியாய விலைக்கடைகள் மூலமாக உணவுத் தானியங்களை விற்க வேண்டும்.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்கால விலை நிர்ணயக் (Price-Policy) குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே உருவாக்கப் பட்டது. இரசாயன உரம், டிராக்டர் போன்ற கருவிகள், உயர்ந்த ரக விதைகள் முதலிய நவீன விவசாய முறைகளைப் பின் பற்றினுல்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். இதற்குத் தேவையான முதலீடுகள் செய்ய விவசாயியை ஊக்க மூட்டுகிற அளவில் உணவுத்தானியங்களின் விலைகள் இருக்க வேண்டும். அறுவடை நடக்கும் மாதங்களில் தெவிட்டு நிலை (glut) உண்டா வதைத் தடுக்கும் வகையில் அதிகச் சேமிப்பு (Buffer stock) வைக்கும் முறை பின்பற்றப்பட வேண்டும். அதே சமயம் நுகர் வோனும் உணவுத்தானியங்கள் குறைந்த விலையில் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். நாட்டின் பல்வேறு இடங்களில் நிலவும் விலைகள் மாறுபடுவதால் குறைந்த விலைகள் உள்ள இடத்தில் வாங்குதலும், ஏறும் விலைகள் உள்ள இடத்தில் விற்பனையும் நடை பெறவேண்டும்.

இக்குறிக்கோள் வெற்றியடைய குடியானவனுக்கு அருகில் உணவு தானியங்கள் வாங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களும், அரசு நிறுவனங்களும் இருத்தல் வேண்டும். மொத்த விற்பனை யாளருக்கு அனுமதி வழங்குதல், சில்லறை விற்பனை நிலையில் அரசும் கூட்டுறவு நிறுவனங்களும் செய்துகொள்ளும் ஏற்பாடுகள், விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் குறைத்து, விலைகளை நிலை பெறச் செய்யும்.

விற்பனை மண்டலங்கள் (Marketing Zones)

உணவுத் தானியங்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டே சென்றதால், 1957ஆம் வருடம் முதன்முதலாக மண்டல முறையை அரசு ஆரம்பித்தது. இதன் மூலம் உபரி மாநிலங்களி லிருந்து பற்றுக் குறை மாநிலங்களுக்கு உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்து அனுப்பப்பட்டது. ஆரம்பத்தில் மூன்று கோதுமை மண்டலங்களும், ஓர் அரிசி மண்டலமும் தோற்றுவிக்கப்

பட்டன. 1961 மார்ச்சு மாதம் மண்டலக் கட்டுப்பாடுகள் ரத்து செய்யப்பட்டன. ஆனால் 1964 ஜூலை மாதம் மண்டல முறை மறுபடியும் புகுத்தப்பட்டது. தற்போது ஒவ்வொரு மாநிலமும் தனி மண்டலம் ஆகும். மாநிலங்களுக்குள் தனியார் எவரும் தானியங்களை அனுப்பவோ, விற்கவோ முடியாது. உபரி மாநில அரசு, மலிவான கொள்முதல் விலையில் தானியங்களை வாங்கிச் சேமித்து (Stock) வைத்துக் கொள்கிறது. பற்றுக்குறை மாநிலங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை அதிகரிக்கும் போது, தானியங்களை வெளிக் கொணர்ந்து நியாய விலைக் கடைகள் மூலம் மக்களுக்குக் கிடைக்கச் செய்கிறது.

மண்டல முறையினால் மேற்கூறிய நன்மைகள் இருந்தாலும் சில குறைகளும் இருக்கின்றன. உணவுத் தானியப் பற்றுக்குறையுள்ள மாநிலங்களில் மக்களின் தேவை முழுதும் பூர்த்தி செய்யப் படும் அளவுக்கு அளிப்பு இருப்பதில்லை. இதனால் விலைகள் அதிகரித்தே இருக்கின்றன. மேலும் உபரி உள்ள மாநிலத்தில் விலைகள் குறைவாக இருப்பதால் விவசாயி உற்பத்தியைப் பெருக்கு வதற்கு எந்த முயற்சியும் எடுப்பதில்லை. தானியக் கட்டுப்பாடு இருப்பதால் பதுக்கலும் கறுப்புச் சந்தையும் தோன்றுகின்றன. மேலும் நிலங்கள் அவைகளுக்குத் தகுந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுவதில்லை. வாணிகப் பயிர் விளைவிக்கக் கூடிய நிலங்களில் உணவுத் தானியங்கள் பயிரிடப்படுகின்றன. இதனால் உற்பத்தித் திறன் குறைவதுடன், விளைபொருளின் மொத்த உற்பத்தி அளவும் குறைகிறது. பற்றுக்குறை மாநிலத்தில் அதிக விலை நிலவுவதால் அதற்கேற்றபடி உற்பத்திக் காரணிகளுக்கு ஊதியமும் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாடு முழுவதும் ஒரே ஊதியம் நிலவுவதில்லை.

இத்தீமைகளால் மண்டலமுறை ரத்துச் செய்யப்பட வேண்டும் எனச் சிலர் வாதாடுகின்றனர். சிறப்பாகப பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான் போன்ற உபரி மாநிலங்கள் தங்களுடைய விளைபொருள்களின் விலை மண்டல முறையினால் குறைவாக இருக்கிறது என்று கூறுகின்றன. மகாராஷ்டிரம் போன்ற பற்றுக் குறையுள்ள மாநிலங்கள் மண்டல முறையினால்தான் விலைகள் அதிகமாக உள்ளன என்றும், சந்தையின் இயற்கையான போக்குக்கு விடப்பட்டால் அளிப்பு அதிகரித்து, விலைகள் குறையும் என்றும் சாதிக்கின்றன. ஆனால் அரசு மண்டல முறையை ரத்து செய்வதை ஆதரிக்காமல் வடக்கு மண்டலத்தை மேலும் விரிவு படுத்தியுள்ளது.

இந்திய உணவுக் கார்ப்பொரேஷன்

உணவுத் தானியங்களை வாங்கி வைத்திருந்து தேவை எழும் போது விற்பனை செய்வதற்காக 1965ஆம் வருடம் டிசம்பர் 29ஆம் தேதி இந்திய உணவு கார்ப்பொரேஷன் நிறுவப்பட்டது. உணவுப் பண்டங்களையும், உணவுத் தானியங்களையும் பக்குவப் படுத்தும் தொழிற்சாலைகள், அரிசி மாவு மில்கள் போன்றவைகளை நிறுவுவதற்குத் துணைபுரிதல், உற்பத்தியைப் பெருக்குதல் ஆகிய பணிகளை இக்கார்ப்பொரேஷன் செய்கிறது. வருடந்தோறும் இக் கார்ப்பொரேஷன் பணிகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. இதுசெயற்படும் பகுதியின் பரப்பும், கையாளுகின்ற பண்டங் களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றன. 15 மாநிலங் களிலும், மத்திய அரசு ஆளுகையிலுள்ள பகுதிகளிலும் அதன் அலுவலகங்கள் மூலமாக நிர்வாகத்தை நடத்துகிறது. 1967 ஜனவரி முதல் ஷில்லாங்கில் ஒரு பிராந்திய அலுவலகம் செயற் படத் துவங்கியிருக்கிறது.

உணவுத் தானியங்கள் மட்டுமின்றி வாணிக விவசாயப் பொருள்களான கரும்பு, பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள் போன்றவைகளின் விலையையும் கட்டுப்படுத்துவதற்குத் தேவை யான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. மேற்கூறிய பொருள்களின் விலையில் கட்டுப்பாடு சிறிது தளர்த்தப்பட்டிருப் பதால், உணவுத் தானிய விலைகளைவிட ஏற்ற இறக்கம் அதிக மாகவும், அடிக்கடியும் ஏற்படுகின்றன. இப் பண்டங்களின் விலையில் ஏற்றம் இருக்கும் போது, ஏற்றுமதியில் கட்டுப்பாடு, தேர்வுக்கடனளிப்புச் கட்டுபாடு (Selective Credit Control) போன்ற நடவடிக்கைகள் மூலமாக விலை ஏற்றம் கட்டுப்படுத்தப்படுகிறது. அதுபோல் விலை குறையும் போது ஏற்றுமதியை அதிகரிப்பது மூலமாகவும், இறக்குமதியைக் குறைப்பது மூலமாகவும் இப்பண்டங்களின் விலை கட்டுப்படுத்தப் படுகிறது. எடுத்துக்காட்டாக, பருத்திக்கு 1943ஆம் வருடம் உயர்ந்த பட்ச, குறைந்த பட்ச விலைகள் அரசினால் நிர்ணயிக்கப் பட்டன. 1967-68-ஆம் வருடத்தில் இச் சட்டபூர்வமான விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. சமீப காலத்தில் பருத்தி விலையில் ஏற்றம் இருப்பதால் பி.எல். 480 சட்டத்தின் கீழ்ப் பருத்தி இறக்குமதி செய்ய அரசு ஆலோசித்து வருகிறது. சணல் விலையைக் கட்டுப்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது, சணல், பருத்தி, கரும்பு முதலியன தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருள்களாகப் பயன்படுவதால், அவைகளின் விலையில் செயல் படுத்தப்படுகின்ற கட்டுப்பாடு, விளைபொருளை விளைவிப்போனுக்

கும், விளைபொருளை வாங்குகிற தொழிலதிபருக்கும் நன்மை தரக்கூடியதாய் அமையவேண்டும். மேலும் நிலையான அளிப்பு மூலம் விலை கட்டுப்படுத்தப்படுகிறது.

விவசாய நிலைக் குழு

விவசாயப் பண்டங்களின் விலைக் கொள்கை பற்றி அரசுக்கு ஆலோசனை கூற 1965ஆம் வருடம் ஜனவரி மாதம் விவசாய விலைகள் குழு நியமிக்கப்பட்டது. உற்பத்தியாளர், நுகர்வோர், நாட்டின் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நெல், அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி, சணல் போன்ற விளைபொருள்களுக்குக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைக் கொள்கையை நிர்ணயிக்க வேண்டியது இக் குழுவின் வேலையாகும். 1967-68-ல் குழுவின் சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டு நெல்லுக்கு ரூ. 42 முதல் ரூ. 44 வரை குறைந்த பட்ச விலையாக நிர்ணயித்தது. இதுபோலவே மற்றைய உணவு தானியங்களுக்கும், பணப்பயிர்களில் கரும்பு, பருத்தி, சணல் ஆகியவற்றுக்கும் குறைந்த பட்ச விலைகள் நிர்ணயிக்கப்பட்டன, இப்பொருள்களை உற்பத்தி செய்வோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் குறைந்த பட்ச விலைகள் முந்திய வருடத்தைவிடச் சிறிது அதிகமாகவே இருந்தன.

விவசாய விலைகள் குழு குறைவான கொள்முதல் விலையைச் சிபாரிசு செய்திருக்கிறது. இருந்தும் அரசு அதை ஏற்றுக் கொள்ளாமல், குறைந்த பட்ச விலையைச் சிறிது அதிகமாகவே நிர்ணயித்திருக்கிறது. இதன் விளைவாக அரசாங்கக் கிடங்குகளில் கோதுமையின் இருப்பு அதிகமாக உள்ளது.

கோதுமையைப் பொறுத்தவரை இவ்வாறு இருந்தாலும் இது தாற்காலிகமானதே. உணவுத் தானியங்களுக்கு அரசு கட்டுப்பாடுகள் விதித்து, விலை ஏற்ற இறக்கங்கள் இல்லாமல், விலை நிலை பேறுக்கம் செய்யப்படுவதுதான் சிறந்த முறையாகும், இதனால் நுகர்வோருக்கு மலிவான விலையில் உணவுப் பண்டங்கள் கிடைக்கின்றன. சிறப்பாக, பற்றாக்குறையுள்ள மாநிலங்களில் உள்ள நுகர்வோர் பயனடைகின்றனர். மேலும் மாநிலங்களிடையே உணவுத்தானியப் பங்கீடு, இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் மூலம் நடைபெறுவதால் நியாய விலை நிலவுகிறது. விலைக் கொள்கை மூலம் பணப் பயிர்களின் விலையும் நிலை பேறுக்கம் செய்யப்படுவதால் பொருளாதார வளர்ச்சி எவ்வித இடையூறும் இன்றிச் செவ்வனே நடைபெறுகிறது.

4. தொழில் வளர்ச்சி

(1) இந்தியத் தொழில் வளர்ச்சி—வரலாறு தொழில் கொள்கை

இந்தியத் தொழில்களின் வளர்ச்சி பிற நாடுகளின் வளர்ச்சிக்கு இணையாகவே இருந்து வந்துள்ளது. இடைப்பட்ட சில ஆண்டுகளில் அரசின் கொள்கை காரணமாக வளர்ச்சியின் வேகத்தில் சிறிது தடை ஏற்பட்டிருப்பினும், ஒரே சீரான வேகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 'உற்பத்தியின் மூலம் செழிப்பைப் பெறுவோம்' (Prosperity through Productivity') என்ற கொள்கைக்குரல் மூலம் வளர்ச்சி தூண்டப்பட்டது. 1956ஆம் ஆண்டின் புதிய தொழிற் கொள்கை, தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக அமைந்தது. சுதந்திர அரசின் நடுநிலைமைக் கொள்கையின் காரணமாக வளர்ச்சி பெற்ற நாடுகளின் தொழில் அறிவையும், முதலையும் பெற முடிந்தது. இவை யாவற்றின் காரணமாக இன்று இந்தியா உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதித்தரத்திலும், ஏற்றுமதியிலும் சிறப்புற்று விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

முற்காலத்தில் இந்தியத் தொழிலின் நிலை

1918ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற 'இந்தியத் தொழில் துறைக்குழு'வின் அறிக்கை, 'மேலை நாட்டு வணிகரெல்லாம் முதன் முதலாக இந்தியாவில் காலடி எடுத்து வைத்த மிகப் பிற்காலத்தில் கூட, இதன் தொழில் வளர்ச்சி, முன்னணியில் இருந்த இதர பல ஐரோப்பிய நாடுகளின் தொழில் வளர்ச்சிக்கு எவ்வகையிலும் தாழ்ந்திருக்கவில்லை' எனச் சிறப்புத் தருகிறது. பருத்தித் தொழிலின் தாயகமாக இந்தியா நெடுங்காலம் நியாயமான முறையில் கருதப்பட்டு வந்தது. இரும்புக் கருவிகளை இதர பல நாடு

கட்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு இந்த நாட்டின் இரும்புத் தொழில் சிறந்த வளர்ச்சி பெற்றிருந்தது. கிராமங்களின் தொழில் தேவைப் பொருள்களைக் கருமானும் மரத்தச்சனும் வழங்கினர். பொதுத் தேவை தொழில்களைத் தவிர சில நுணுக்கத் தொழில்களும் அமைந்திருந்தன.

1914ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசின் கொள்கை

சூயஸ் கால்வாய் திறக்கப்பட்ட பின்னர், பிரிட்டிஷ் உற்பத்திப் பொருள்கள் இந்தியாவிற்குள்ளும், இதர கீழை நாடுகட்குள்ளும் பெரிய அளவில் இறக்குமதியாயின. இங்கிலாந்து, உலகத்தின் தொழிற்சாலையாகவே உருமாறிவிட்டது. தொழில் நுணுக்க மாறுதல்களால் போக்குவரத்து, செய்திச் செலவு ஆகிய துறை களில் ஏற்பட்ட அபிவிருத்திகள் இதர நாடுகளின் பொருளாதார ஒதுக்கத்தைக் குலைத்து ஒன்றுக இணைத்தன. இந்திய நெசவுத் தொழில் புதிய தொழில் நுணுக்கத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. காலத்திற் கொவ்வாத பழங் கருவிகளைக் கொண்டு உற்பத்தி செய்து, உள் நாட்டு அங்காடியில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளப் போரிட நேர்ந்தது. தொழில் நுணுக்க அபிவிருத்தி யுகத்துடன் இந்தியாவும் போட்டியிட்டு முன்னுக்கு வரவேண்டுமானுல், அது மாறியுள்ள புதிய சூழ்நிலைக் கேற்பத் தனது புராதன பொருளாதார அமைப்புகளையும் மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனுல் பழைய பொருளாதார அமைப்பைக் குலைக்கும் செயல் 19ஆம் நூற்ருண்டின் முற்பகுதியிலேயே எவ்விதத் தடையுமின்றித் தொடங்கப் பெற்ருலும், புதிய சூழ்நிலைக் கேற்ப அவற்றை மாற்றியமைக்கும் முறை மேற்கொள்ளப்பட வில்லை. இந்நிலையில் இரயில் பாதைகளின் அமைப்பு, இராணுவப் போக்குவரத்து கொள்கைகள் காரணமாக இந்தியாவின் பொருளாதார வாழ்வில் இணக்கத்தை ஏற்படுத்தவும், விவசாய வளங்களை வாணிக நிலைப் படுத்தவும், தொழில் வாய்ப்புகளைப் பெருக்கவும் தவறியது.

கடந்த நூற்ருண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பொருளா தார மாறுதல்களைத் தொழிற் புரட்சி என்பதைவிட, வாணிகப் புரட்சி எனக் கூறுவது மிகவும் பொருத்தமாயிருக்கும். நாட்டின் பரப்பு, மக்கள் தொகை இவற்றின் அளவோடு ஒப்பிடுகையில் தொழில் வளர்ச்சி மிகக் குறைவே. இரயில் பாதை அமைப்பிற்கு முன்னர் விவசாயக் கச்சாப்பொருள்கள் எல்லாம் உள்நாட்டுத் தொழிலாளர்களால் ஆக்கப்பட்டு, அந்தந்தக் கிராமங்களிலேயே நுகரப்பட்டன. ஆனுல் இப்பொழுது அவை சிறப்புத்தேர்ச்சி முறையில் நன்கு பயிரிடப்பட்டு, வெளி நாட்டு ஆலைப் பொருள்

களுக்கு மாற்ருக ஏற்றுமதி செய்யக்கூடிய தரத்தை அடைந்து விட்டன. சுய தேவையைப் பூர்த்தி செய்து வந்த உள் நாட்டுப் பொருளாதாரம், பன்னுட்டுச் சிறப்புத் தேர்ச்சியாலும், வாணிபத்தாலும் மாற்றியமைக்கப்பட்டது. இதனுல் இந்தியத் தொழில் செய்வோனுக்கு இன்னும் இடர்ப்பாடுகள் மிகுந்தன.

முற்காலத்தில், கைத்தொழிலாளர்கட்கும் வினைஞர்கட்கும் கிராமப் பொருளாதார வாழ்வில் தனி இடம் இருந்தது. அவர்கள் தாம் செய்த பொருள்களுக்குப் பதிலாக உணவு, கச்சாப் பொருள்கள் முதலியவற்றைப் பண்ட மாற்ருக நடைமுறையில் பெற்றுக் கொண்டனர். இங்ஙனம் விவசாயப் பொருள்களுக்கும் வேறு துறைப் பொருள்களுக்கும் இடையில் ஒரு சமநிலை ஏற்பட்டிருந்தது. இச்சம நிலையை சிறப்புத் தேர்ச்சி முறையில் ஆக்கப்பட்ட விவசாய உற்பத்திப் பொருள்கள் குலைத்துவிட்டன. இப்பொருள்கள் உள்நாட்டுப் பரிவர்த்தனைக்குப் பதிலாக வெளிநாட்டு ஏற்றுமதிக்காகவே பெரும்பாலும் பயிரிடப் பெற்றன. இயந்திரங்களால் தயாரிக்கப்பட்ட மலிவான பண்டங்களின் இறக்குமதியால், இந்தியாவின் சிற்றளவுத் தொழில்களுக்குச் சாதகமான விளைவுகள் எவையும் ஏற்படவில்லை. சிறுசிறு வீட்டு வசதிச் சாமான்கள் எல்லாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்று, உள் நாட்டு அங்காடியில் தாராளமாக விற்பனையாயின. இதனுல் ஏற்கனவே இத்தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய கிராமப்புறக் கைவினைஞர்கள் வேலை இழந்தனர். நிலமற்ற உழவர்களாக மீண்டும் நிலங்களைச் சார்ந்தே வயிறு வளர்க்க வேண்டிய இடர்ப்பாட்டிற்கு ஆளாயினர். 1951 குடிக் கணக்கின்படி இந்தியாவில் வியசாயத்தைச் சார்ந்திருப்போரின் தொகை 1931-ல் 66.7 சதவிகிதமாக இருந்ததி லிருந்து 1951-ல் 68.7 சதவிகிதமாக உயர்ந்து விட்டது. 1770–1870 ஆண்டுகட்கு இடையே ஆன இந்தியாவின் பொருளாதார வரலாற்றை, அதன் சமநிலைப் பொருளாதார அமைப்பின் சீர்குலைவு வரலாறு என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம். இந்தியாவின் மக்கள் தொகை கிராமங்களில் செறிவுற்றது. அதன் கைத்தொழில்களும், கிராமத் தொழில்களும் நசிவுற்றன. இதன் பழைய தொழில் அமைப்பு, புதிய நிறுவனத்தால் சீர் செய்யப்படாமல், சிதைந்து நொறுக்கப்பட்டது எனச் சுருங்கச் சொல்லலாம்.

கிழக்கிந்தியக் கம்பெனி, தொடக்கத்தில் இந்தியாவில் தன்னுடைய நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சிக்குத் தேவையான தொழில்களைத் துவக்கியது. ஆயினும் பின்னர் தாய்நாட்டில் இந்திய தொழில் வளர்ச்சிக்கு இருந்த எதிர்ப்பின் காரணமாக

அது தன்னுடைய கொள்கையை மாற்றிக்கொள்ள நேரிட்டது. இந்திய நாடு, இங்கிலாந்துக்குக் கச்சாப் பொருள்களை அளிக்கும் நாடாக மாறியது. இந்நிலை 1858-க்குப் பிறகும் நீடித்தது. பின்னர் இக்கொள்கையே, தன்னிறைவு பெறுவதே, பின்னர் அரசின் தலையீடின்மைக் (Laissez – faire) கொள்கையாக இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பின்பற்றப்பட்டது. 1860-1900-க்கு இடையில் அயல்நாட்டு வாணிபத்தில் ஏற்பட்ட மிகுந்த வளர்ச்சிக்குக் காரணமாகத் தடையிலா வாணிப அமைப்பை ஓரளவு சொல்லலாம். நாடு முழுவதும் இரயில் பாதைகளை அமைத்துத் தொடர்பு ஏற்படுத்தியமை, நாணய அடிப்படையில் கிராமப்புறங்களில் பொருள்களை வாங்கும்படியாக மக்களின் பழக்க வழக்கங்களை மாற்றியமை ஆகியவற்றைப் பிற காரணங்களாகக் குறிப்பிடலாம். 1905-ல் ஏற்பட்ட சுதேசி இயக்கம், அரசியல் சார்புடையதாயினும் இது பொருளாதார வளர்ச்சிக்கும், குறிப்பாகத் தொழில் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியது. அரசின் கொள்கையிலும் சிறிது மாற்றம் ஏற்பட்டது. இதன் முதல் அறிகுறியாக, லார்ட் கர்சனின் தூண்டுதலால், ஒருதனி தொழில் துறை அமைக்கப்பட்டது. இதனிடையில் மாநில அரசுகள் தத்தம் தொழிற் கொள்கைகளை வெளியிட்டுச் செயற்படுத்தத் தொடங்கின. இக்கொள்கைகள் அரசின் நெருங்கிய ஒத்துழைப்பையும், உதவியையும், ஆதரவையும் அறிவித்தன. சென்னை மாநிலத்தில் 1906ஆம் ஆண்டில் தொழில் துறை அமைக்கப்பட்டது. இடையில் சில காலம் ஆங்கில அரசினர் இதனை முழுதும் ஆதரிக்கா விட்டாலும் 1912ஆம் ஆண்டில் இது வலுப்பெற்றது. முதல் உலகப்போர் வரை நமது தொழில் வளர்ச்சிப் போக்கினைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 26

	பருத்தி நெசவுத் தொழில்			சணல் ஆலைத் தொழில்		
	1879-80	1900-01	1913-14	1879-80	1900.1	1913-14
ஆலைகள்	58	194	264	22	36	64
வேலைபார்த்தோர்	39,537	1,56,335	2,60,847	27,494	1,14,705	2,16,288
கதிர்கள்	1,407,830	4,942,290	6,620,576	70,840	331,382	744,289
விசைத் தறிகள்	13,307	40,542	96,688	4,946	16,119	36,050

(SOURCE : Gadgil Industrial Evolution of India)

முதல் உலகப் போரும் தொழில் வளர்ச்சியும்

உலகப்போர் இயற்கையாகவே, இந்தியாவில் இயந்திரப் பொருள்களுக்கான தேவையை வளர்த்தது. கப்பல்கள் போரில் ஈடுபட்டிருந்தமையால் ஐரோப்பாவி லிருந்து இறக்குமதியும் குறைந்து விட்டது. நேச நாடுகளின் தேவைகளும் அதிகரித்தன. எனவே வெளிநாட்டுப் போட்டி முற்றிலும் மறைந்த நிலையினாலும், நேசநாடுகளின் போர் ஈடுபாட்டினாலும் இந் நாட்டில் ஓர் அருமையான சூழ்நிலை உருவாயிற்று. ஆனால் இந் நிலைமையை, அரசு நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது. ஆயினும் பிரிட்டிஷாரின் இந்தியப் பிரதிநிதிகள் ஓரளவு தொழில்வளர்ச்சியில் ஆர்வம் காட்டினர். மேலும் போரில் வெற்றிபெற, பல பொருள்களை இங்கிலாந்தில் மட்டும் உற்பத்தி செய்து, தேவையை நிறைவு செய்ய இயலாது என்ற நிலையும் ஏற்பட்டது. போர்க்காலத்தில் ஒவ்வொரு பெரிய மாநிலத்திலும் தொழில் துறைகள் அமைக்கப்பட்டன. ஆதார மான கனரகத் தொழில்களை இந்தியாவில் நிறுவத் தவறியதும், இராணுவத் தளவாடங்களையெல்லாம் நெடுங்கடல் கடந்து பெற வேண்டிய இடர்ப்பாட்டு நிலையும், பிரிட்டனின் பேராற்றலைக் குன்றச் செய்தன. இந்தியத் தொழில்களுக்குச் சலுகை அளிக்கப் படும் என்று உறுதி கூறி, போருக்கு இந்திய முதலாளிகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகள் நடந்தன. 1917ஆம் ஆண்டில் போர்க் கருவிச் சேகரிப்புக் குழு (Munitions Board) அமைப்பும், 1916-ல் தொழில் வளர்ச்சிக்குழு நியமனமும், அரசின் சில முக்கிய நடவடிக்கைகள் ஆகும். போர்ச் சமயத்தில் பருத்தி, சணல் ஆலைகள் முழுத்திறனுடன் வேலை செய்து பெரும் இலாபங் களை அடைந்தன. எஃகு உற்பத்தியும் பத்துமடங்கு உயர்ந்தது. இந்தியத் தொழில் வளர்ச்சிக் குழு இந்தியாவைத் தன்னிறைவு பெறச் செய்ய வேண்டும் என்று கொடுத்த பரிந்துரைகளை, போர்க்காலத்தில் அரசு ஓரளவு ஏற்றுக் கொண்டமையால் தொழில் வளர்ச்சி ஊக்குவிக்கப் பெற்றது. ஆயினும் போர் முடிந்தவுடன் இந்தியத் தொழில் ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் எல்லாம் மூலையில் முடக்கப்பட்டு விட்டன. எனவே முதல் உலகப்போர், ஏற்கெனவே நிலை பெற்றிருந்த சில தொழில் களுக்குத் தற்காலிக நலன்களை அளித்ததேயன்றி, நாட்டைத் தொழில் மயமாக்கும் பாதையில் உறுதியாக ஓரடி கூட எடுத்து வைக்க உதவி செய்யவில்லை. 1918-க்குப் பின்னர் போரின் காரண மாகத் துவக்கப் பட்டிருந்த ஒரு சில தொழில்களும் தேக்கமுற்றன; அல்லது நசித்துப் போயின. வளர்ச்சியுற்ற பிற தொழில்துறை நாடு

களின் ஆற்றல் வாய்ந்த போட்டிக்கு முன்னால் அவற்றால் காலூன்றி நிற்க முடியவில்லை*.

1919ஆம் ஆண்டின் சீர்திருத்தமும் போர் இடைக்கால வளர்ச்சியும்

இதனிடையில் பிரிட்டிஷ் அரசு 1917-ல் வெளியிட்ட உறுதி மொழியின் காரணமாக அதிகாரத்தைப் பரவலாக்கும் (Decentralisation) கொள்கையை அமுல் செய்ய வேண்டிய தாயிற்று. 1919ஆம் ஆண்டின் அரசியல் சீர்திருத்தங்களில் ஒன்றாகத் தொழில்துறை, மாகாண ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. ஆயினும் மாகாணங்களின் பொருளாதார வலுவின்மையும், தொழில் நுணுக்கக் கருவிகளின் குறைந்த அளிப்பும் தொழில் வளர்ச்சிக்குத் தடையாகவே இருந்தன. 1920 வரை செழிப்பான நிலைமை நாட்டில் இருந்தமையால் இக் குறைகள் தெரியவில்லை. 1920-ல் பொருளாதாரத் தேக்கம் ஏற்படத் துவங்கியது. ரூபாயின் வெளிமதிப்பு பெரிதும் குறைந்ததும், வெளிநாட்டுப் போட்டியின் தீவிரமும், பல நாடு களின் நாணய மதிப்புக் குறைவும், கடைசியாக 1929-ல் நியூயார்க்கில் ஏற்பட்ட பொருளாதார முறிவும் இந் நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தன. இதனிடையில் 1911-ல் அரசிறைக்குழு (Fiscal Commision) பாகுபடுத்தப்பட்ட பாதுகாப்பைத் தொழில்களுக்கு வழங்கும் கொள்கையைப் (Policy of Discriminating Protection) பரிந்துரைத்தது. இதனை 1923-ல் அரசு ஏற்றுக் கொண்டது. பெரிதும் இடித்துரைக்கப் பட்டாலும் பல தொழில்களுக்கு இக்கொள்கை கைகொடுத் தது. பொருளாதாரத் தேக்கத்தைத் தொழில்கள் தாண்டிச் செல்ல முடிந்தது. 1932-க்குப் பிறகு தேக்கத்திலிருந்து மீட்சிக் கான அறிகுறிகள் தென்பட்டன. நிலக்கரி தவிர மற்ற தொழில் களின் உற்பத்தி பெருகிற்று. 1937, 1938ஆம் ஆண்டுகளில் பேரரசுச் சலுகை (Imperial Preference) என்னும் இந்திய இறக்கு மதித் தீர்வை முறையில் ஏற்பட்ட மாறுதலால் தொழில்கள் சிறிது இன்னலுற நேர்ந்தது. பிற நாடுகளைவிட நிறைந்த மக்கட் செல்வத்தையும், கனிவளத்தையும், மேலும் பல நலன்களையும் கொண்டிருந்த இந்தியப் பெருநாடு ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் தனது மக்களின் இரண்டு சதவீதத்தினரைத் தொழில்துறை வாயிலாக ஆதரித்து வந்தது என்று திரு. புச்சனன் வருத்தத்துடன் இந்தக் காலப்பிரிவின் நிலையைக் குறிப்பிடுகின்றார். நமது கச்சாப் பொருள் உற்பத்திகளில் பெரும்பகுதியை ஏற்றுமதி செய்தனுப்பு

* Lokanathan – 'Industrialisation'– Oxford Pamplets on Indian affaris No. 10, 1943)

வதற்காகப் பல அயல்நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய அவசிய நிலை இன்னும் நீடித்து வந்தது. நமக்கு வேண்டிய இயந்திரங்கள் பிற முதற்கருவிப் பொருள்கள் ஆகியவற்றைப் பெறுவதற்காக நாம் இன்னும் அயல்நாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை இருந்தது.

இரண்டாம் போரும் அதன் விளைவுகளும்

இரண்டாம் உலகப்போரின் போது, இந்தியா கிழக்கு நாடுகளின் இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்து வந்தது. ஜப்பானும் போரில் ஈடுபட்டதால், இந்தியாவை நட்பு நாடுகளுக்குரிய தொழில்துறைப் படைக்கலசாலையாக, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக வளர்ச்சியடையச் செய்வதற்கான நிலைமை பன்மடங்கு அவசியமாயிற்று. இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் போருக்கு வேண்டிய பொருள்களை அளிக்கும் நிலைக்களன்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. தீவிர இறக்குமதிக் குறைப்பும், இந்தியாவின் பாதுகாப்புக் கருவிகளின் வளர்ச்சியும், இன்ன பிற காரணங்களும், தொழில் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்தன. எஃகுத் தொழில் மிக வேகமாக முன்னேறித் தனக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. போரின் காரணமாகப் பொறியியல் துறைத் தொழில்கள், குறிப்பாக இயந்திரக்கருவிகள், சிறு படைக்கருவிகள் உற்பத்தி ஆகியன நன்கு வளர்ந்தன. ஆனால் நெசவு, காகிதம் மற்றும் தோல் தொழில்கள் வளர்ச்சி, போதுமான இரசாயனம், பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து கிடைக்காமையால் பெரிதும் தடைப்பட்டது. போர் முடிவின்போது பெரும்பாலும் எல்லாத் தொழில்களும் செழிப்புற்று இருந்தன. கூட்டுப்பங்குக் கம்பெனிகளின் செலுத்தப்பட்ட மூலதனம் 1939-40-ல் ரூ. 290.4 கோடியாயிருந்தது, 1945-46-ல் ரூ. 424.2 கோடியாக உயர்ந்தது. எஃகு, துணிகள் உற்பத்தி உள்நாட்டுத் தேவையில் சுமார் முக்கால் பகுதியை நிறைவு செய்வதாக இருந்தது. சர்க்கரை, சோப்பு, சிமெண்ட் ஆகியவற்றில் நாடு தன்னிறைவு பெற்றது. சணல், சணல் பொருள்கள் உற்பத்தியில் இந்தியா சற்றேறக்குறைய உலகச் செல்வாக்கினைப் பெற்றதென்று கூறலாம்.

உலகப் போருக்குப் பின் இந்தியத் தொழில்கள் மிகவும் நெருக்கமான சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தன. பல தொழிற்சாலைகளின் இயந்திரக் கோப்புகள் எல்லாம், தேய்ந்து நலிந்து விட்டன. போர்க்காலச் செழிப்பின் பின்னர், போர்ப்பிற்காலத் தேக்கம் ஏற்படுமோ என்ற அச்சம் தோன்றத் தொடங்

கியது. தொழில்துறை வளர்ச்சிக்குரிய நீண்டகாலக் காரணிகள் இதுவரை புறக்கணிக்கப்பட்டன. சிறந்த இடத்தில் தொழிற் சாலைகள் அமைத்தல், அங்காடி அமைப்பு, நிதிவசதி, தொழில் நுணுக்க நிறுவன அமைப்பு ஆகிய எல்லா நீண்டகாலக் காரணி களும் போர்க்காலத்து பணவீக்க நிலையில் புறக்கணிக்கப் பட்டமையால், போர்ப் பிற்காலத்தில் இவற்றின் எதிர் விளைவுகள் கடுமையாக இருந்தன. இதன் காரணமாகப் புதிய தொழிற் சாலைகள் துவங்குவதிலும், உள்ள தொழில்களை விரிவு செய்வதிலும் முதலீடு செய்வது குறையத் தொடங்கியது. எனவே உற்பத்தி குறைந்தது. கச்சாப்பொருள்கள் குறைவாகத்தான் கிடைத்தன. உற்பத்தி விலை மெல்ல உயர்ந்தது. பண வீக்கத்தினால் விலைவாசி உயர்ந்து, வாழ்க்கைச் செலவு அதிகரித்து, தொழிலாளர் அமைதி யின்மை (Unrest), மேலும் நடுத்தர வகுப்பினரின் வறுமை முதலியன நாடு எங்கும் பரவியது. இந்நிலையில் இந்தியா தன் னுரிமை நாடாகியது. ஆனால் தீவினைப் பேற்றினால், நாட்டின் பிரிவினை சில தொழில்களை மிகவும் கடுமையாகத் தடைப்படுத் திற்று. எடுத்துக்காட்டாக பம்பாய், ஆமதாபாத் பருத்தி நெசவு ஆலைகள் பாகிஸ்தானை கச்சாப்பருத்திக்காக எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சணல் ஆலைகள் எல்லாம் கல்கத்தாவில் அமைந் திருந்தன. ஆனால் கச்சா சணல் உற்பத்தி அனைத்தும் கிழக்கு வங்காளத்தில் பிரிந்து விட்டன.

இச்சூழ்நிலைகளில், ஒரு தீர்வு காண்பதற்காக 1947ஆம் டிசம் பரில் இந்திய அரசாங்கம், தொழிலக வளர்ச்சிக்காக ஒரு முக்கூட்டு மகாநாடு கூட்டியது. இது இந்தியத் தொழில்துறைப் பிரச்சினை களை ஆராய்ந்து, அரசாங்கக் கொள்கைப் போக்கையும் வகுத்துக் கொடுத்தது. உடனடியான தீர்வுபெறச் சில குறுகியகால வழி முறைகளை அரசு பின்பற்றியது. அவையாவன:

(1) குறைந்த அளிப்புள்ள கச்சாப்பொருள்களை அரசே பங்கிட்டு அளிப்பது;

(2) இன்றியமையாத உற்பத்திக் கருவிகளையும் நல்ல போக்கு வரத்து வசதிகளையும் அளிப்பது;

(3) தொழிலாளர் தகராறுகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வது.

பின்னர் அரசாங்கம் 32 தொழில்துறைகளைப் பற்றிய திட்டங் களை வகுத்து அவற்றைச் செப்பனிடத் தீர்மானித்தது. 1948 ஏப்ரல் 6-ல் இந்திய அரசாங்கம் தனது முதலாவது தொழில்

கொள்கைத் தீர்மானத்தை (Industrial Policy Resolution) வெளியிட்டது.

தொழிற் கொள்கைத் தீர்மானம் (1948)

போர்ப் பிற்காலத்தில், அரசின் தொழிற் கொள்கை எப்படி இருக்குமோ என்று மிகவும் கவலையுற்றிருந்தனர். சமதர்ம வாதிகளும் காங்கிரசுக் கட்சியின் இடதுசாரிப் பிரிவினரும் தொழில்களை தேசிய மயமாக்க வற்புறுத்தினர். தொழிற் கொள்கை என்று ஒன்று இல்லாமையால் தொழிலாளர் தலைவர்கள் எல்லாத் தொழில்களையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று கோரியபோது, தொழில் அதிபர்களும் வணிகர்களும் தனியார் துறையின் சுதந்திரத்தை வலியுறுத்தினர். இன்னும் சில அரசியல் தலைவர்கள் இந்நாட்டில் உள்ள வெளிநாட்டினரின் முதல், தொழில்கள் ஆகியவற்றை அரசு கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்றும் பேசத் தொடங்கினர். தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியத்தையும், மேலாண்மையில் (Management) பங்கும் கோரினர். இத்தகைய எதிர்வாதங்களால் தொழில்துறை உலகம் குழம்பி நிற்கவே, முதலீட்டை விரிவுபடுத்தவும் குழப்பங்களைப் போக்கவும், அரசின் தொழிற் கொள்கையைப் பற்றி அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏப்ரல் 6-ல் வெளியிடப்பெற்ற தொழிற் கொள்கைத் தீர்மானம் அரசாங்கம் தொழில்துறைகளைப் பெருக்குவதில் பெரும் பங்கு கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியது. அரசு தன்னுடைய நோக்கம், உற்பத்தியைப் பெருக்குவதே என்பதையும் தொழில்துறையில் எவ்வெவற்றை அரசு நடத்துவது என்பதையும் எவ்வெவற்றைத் தனியார் துறையில் நடத்துவது என்பதையும் அறிவித்தது. இக்கொள்கையே கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy) என்று சொல்லப்படுவது. அதாவது நாட்டு வளங்களின் பொருளாதார முன்னேற்றம் தனியார் துறை, பொதுத் துறை ஆகிய இரண்டினாலும் மேம்படுத்தப்படும், அரசின் கொள்கை மூன்று கோட்பாடுகளைக் கொண்டிருந்தது. அவையாவன: (1) தொழில்திட்டம், (2) தொழில்களை ஒழுங்குபடுத்தல், (3) தொழில் வளர்ச்சிக்கான பாதுகாப்பு.

மேற்சொன்ன அடிப்படையின் மேல், அரசு தொழில் துறையினை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்தது.

(அ) போர்க்கருவிகள் உற்பத்தி, அணுசக்தி உற்பத்தி மற்றும் கட்டுப்பாடு, இரயில் போக்குவரத்து உரிமை, மற்றும் மேலாண்மை ஆகியன முற்றிலும் மத்திய சர்க்காரின் பேராட்சிக்கு (Monopoly)

உட்பட்டதாகும். நெருக்கடி காலங்களில் நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையான எந்தத் தொழிலையும் புதிய அரசு தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர அதிகாரம் உண்டு.

(ஆ) இரண்டாவது பிரிவு நிலக்கரி, இரும்பு மற்றும் எஃகு, விமான உற்பத்தி, கப்பல் கட்டும் தொழில், டெலிபோன் கருவி உற்பத்தி, தந்தி மற்றும் கம்பியில்லாத் தந்திக் கருவிகள் (வானொலிப்பெட்டி உற்பத்தி) தவிர, மற்றும் கனிவள எண்ணெய்த் தொழில்கள் (Mineral oil) ஆகியவற்றை உட்கொண்டது. இத் தொழில்களில் இனி புதிய நிறுவனங்களை மாநில அரசுதான் மேற்கொள்ள முடியும். இப்பிரிவில் தற்போதுள்ள தனியார் நிறுவனங்களை மாநில அரசு கைக்கொள்ள அதிகாரம் உண்டு. மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கும் ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டு மாநில அரசுக்குத் தனியார் துறையின் ஒத்துழைப்பு எத்தொழில்களில் தேவைப்படுகின்றதோ, அத்தொழில்களில் மாநில அரசு, தனியார் துறையுடன் ஒத்துழைக்கலாம். தற்போதுள்ள நிறுவனங்கள் மேலும் பத்தாண்டு காலத்திற்கு நீடிக்க இசைவளிக்கப்படும். அக்காலத்தில் அவைகளின் திறமையான உற்பத்திக்கும் போதுமான அளவு விரிவுபடுத்துவதற்கும், போதுமான எல்லா வசதிகளும் அவைகளுக்கு அளிக்கப்படும். பத்தாண்டு முடிவில், சூழ்நிலைக்கேற்ப அத்தொழில்களின் முழு விவரமும் ஆய்ந்திடப் பெற்று முடிவெடுக்கப்படும். ஈட்டுத் தொகை கொடுக்காமல் எந்த நிறுவனமும் தேசியமயமாக்கப் படமாட்டாது.

(இ) மத்திய அரசு, கட்டுப்படுத்தவும் திட்டமிடவும் நினைக்கின்ற அடிப்படைத் தொழில்களைக் கொண்டது மூன்றாம் பிரிவு. எவ்வெத் தொழில்களின் இருக்குமிடம் (Location) இந்தியா முழுதும் பொருளாதார முக்கியத்துவம் பெற்றுள்ளதோ அல்லது எவை எவைக்குப் பெரும் முதலீடு தேவையாக உள்ளதோ அல்லது தொழில் நுணுக்க அறிவு பெரிதும் தேவையாக உள்ளதோ, அவை மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கும் சீர்ப்படுத்துவதற்கும் உட்பட்டதாகும். உப்பு, மோட்டார் டிராக்டர்கள், மின்சாரப் பொறியியல், கனரக எந்திரங்கள், இயந்திரக் கருவிகள், கனரக இரசாயனங்கள், உரங்கள், மின் ரசாயனத் தொழில்கள், துருவேறு உலோகங்கள், ரப்பர் உற்பத்தி, சக்தி மற்றும் தொழில் சாராயம் (Power and Industrial alchohal), பருத்தி, கம்பள நெசவுத் துணிகள், சிமென்ட், சர்க்கரை, காகிதம் மற்றும் பத்திரிகைக் காகிதம், ஆகாய கடல் போக்குவரத்து, தாதுப் பொருள்கள், பாதுகாப்பு சம்பந்தமான தொழில்கள் ஆகியன இதில் அடங்கும்,

கடைசியாக இது முற்றுப்பெருத அட்டவணையென்றே குறிப்பிட வேண்டும்.

(ஈ) நான்காம் பிரிவாக, மீதமுள்ள தொழில்கள் தனியார் துறைக்கு விடப்பட்டன. இவை தனியாராலோ அல்லது கூட்டுறவு நிறுவனங்களாலோ நடத்தப்படும்.

தனியார் துறை, பொதுத்துறைக்கான தொழில்களைச் சுட்டிக் காட்டியதுடன் வேறு பல பிரிவுகளிலும் அதாவது குடிசைத் தொழில்கள் சிறு தொழில்கள், ஆலைத்தொழிலாளரும் சமூக நீதியும், வெளிநாட்டு முதலைப் பற்றிய கருத்து ஆகியவற்றைக் குறித்தும் இத்தொழிற் கொள்கைத் தீர்மானம் குறிப்பிட்டுள்ளது.

1. குடிசை மற்றும் சிறு தொழில்களின் பணி; தொழிற் கொள்கைத் தீர்மானம் குடிசை மற்றும் சிற்றளவுத் தொழில்கள் தேசியப் பொருளாதாரத்தில் ஆற்ற வேண்டிய முக்கிய பங்கினைக் குறிப்பிடுகையில், அவைகள் தனிமனிதர்கள், கிராமம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு நம்பிக்கையூட்டுவதாகவும், திக்கற்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வாழ வழி செய்து கொடுப்பதாகவும் கூறுகின்றது.

2. தொழிலாளர்களுக்குப் பரிசு மற்றும் தொழிலாளி—முதலாளி உறவு: தொழிலாளி — முதலாளி உறவு நல்ல முறையில் சுமுகமாக அமைந்திட — தொழிலாளர் நலன் பாதுகாத்திட வேண்டியதன் அவசியத்தினை இத்தீர்மானம் சுட்டிக்காட்டுகின்றது. உற்பத்தியின் உச்ச அளவை எட்டிட, தொழிலாளர் மேலாண்மை அடைய முழு ஒத்துழைப்பு மிக அவசியம். இதைத் தொழில் தகராறுகளுக்கான காரணங்களைக் குறைப்பதன் மூலம் அடையலாம் என்பதனையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன் விளைவாகத் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைத்திட வழி செய்ய வேண்டும் என்பதும் உணரப்பட்டுள்ளது. எனவே தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் முறையே நியாயமான கூலியும், நியாயமான ஊதியமும் கிடைக்கத் தகுந்த (Suitable) ஒரு அமைப்பையும் ஏற்படுத்தக் கருதியுள்ளது. தொழிலாளர்களும் மேலாண்மையில் பங்குபெற வேண்டிய அவசியம் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

3. வெளிநாட்டு முதல் குறித்து கருத்து: வெளிநாட்டு முதலையும், வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற வேண்டிய தேவையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அப்பொழுது

தான் தொழில் நுணுக்கங்களையும் அறிவையும் பெற்று, இந்தியப் பொருளாதாரத்தில் தொழில் வளர்ச்சியின் வேகத்தை விரிவுபடுத்திட முடியும். ஆயினும் வெளிநாட்டு முதலைப்பெறும் போது நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு அவைகளை ஒழுங்கு படுத்தல் வேண்டும். ''பெரும் தொழில்களின் உரிமை, கட்டுப் பாடு ஆகியன இந்தியர்களின் கையில் தான் இருத்தல் வேண்டும் என்பதனைத் தீர்மானம் தெளிவாகக் கூறுகின்றது. இந்தியர்களும் தீவிர தொழிற் பயிற்சி பெற்றுக் கடைசியில் வெளி நாட்டினருக்குப் பதிலாக மாற்றப்படல் வேண்டும் என்றும் கூறுகின்றது. முடிவாக வெளிநாட்டின் முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், விரைவாக அவை இந்திய மயமாக்கப்பட வேண்டும் என்பதனைத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

வெளிநாட்டுப் போட்டிக்கு எதிராகக் காப்பு அளிக்கப்படும் என்று அரசு இந்தியத் தொழில்களுக்கு உறுதி அளித்தது. அரசின் புதிய தொழில் கொள்கை, உற்பத்தியை அதிகரிக்கவும், உற்பத்தி யாளர்களின் தரம், திறமை ஆகியவற்றை வளர்ப்பதாகவும் அமைந்தது. இந்நோக்கங்களை நிறைவேற்ற, சில அதிகாரங்களை மாநில அரசிடமிருந்து மத்திய அரசுக்கு மாற்றியது. இதற்காக 1949ஆம் ஆண்டின் இந்திய அரசாங்க (திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது. தொழிற்சாலைகளின் (வளர்ச்சி, ஒழுங்குமுறை) சட்டம் 1951 (Industries Development and Regulation) Act 1951) என்பது 1952மே 8-ல் அமுலாக்கப் பட்டது. இச்சட்டம், தோட்டத் தொழில் தவிர ஏனைய எல்லாப் பெருந் தொழில் களையும் அரசாங்க மேற்பார்வைக்குள் கொண்டு வந்தது. வளர்ச்சித் திட்டங்களை இணைத்துச் செயல் படுத்துவதற்காகத் தேசிய வளர்ச்சிக் குழு (National Development Council) ஒன்றும் அமைக்கப் பெற்றது. தனியார் துறை, பொதுத்துறை ஆகிய இரண்டின் இடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்காக வளர்ச்சிக் குழுக்களை அமைத்தற்கும், அவற்றின் மூலமாக ஐந்தாண்டுத் திட்டத்தின் பொது நோக்கிற்குத் தக்கவாறு தனியார் துறை வளர்ச்சிக்கு உறுதியளிப்பதற்கும், சில வழிதுறைகளை மேற்குறித்த சட்டம் வகுத்துத் தந்தது. 1958-ல் திருத்தப்பட்ட சட்டப்படி இதன் ஆட்சி விளிம்பிற்குள் இன்னும் பல தொழில்கள் கொணரப் பட்டன. ஏற்கெனவே இருந்த தொழில்களில் சில இச்சட்டத்தின் கீழ்த் தங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டன. புதிய தொழில் துறைகளைத்துவக்குவதற்கும் பழைய தொழில்களை விரிவடையச் செய்வதற்கும் உரிமம் (Licence) பெறவேண்டுமென விதிக்கப்பெற்றது. வகைப்படுத்தப் பெற்ற தொழில்களில் ஒழுங்கைப் பேணுதல், வளர்ச்சியடையச் செய்தல் ஆகியவற்றில்

அரசாங்கத்திற்கு நெறியைக் கூறுவதற்காக 1952-ல் மத்திய ஆலோசனைக்குழு (Central Advisory Council) ஒன்று அமைக்கப் பெற்றது. சம்பந்தப்பட்ட அமைச்சு தன் துறை அதிகாரிகளையும் (Departmental Officers) திட்டக் கமிஷன் உறுப்பினர்களையும் கொண்ட உரிமம் வழங்கும் குழு (Licensing Committee) ஒன்றும் 1951ஆம் ஆண்டு சட்டப்படி அமைக்கப்பட்டது.

புதிய தொழிற் கொள்கை

1954, டிசம்பரில் பொருளாதார, சமுதாயக் கொள்கைக்குரிய நோக்கமாக சோசலிச அமைப்புச் சமுதாயத்தை மேற்கொள்வதாக ஒரு தீர்மானத்தைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. இதனால் அரசாங்கத்தின் தொழிற்கொள்கை பற்றிப் புது அறிக்கையொன்றை வெளியிட வேண்டியது அவசியமாயிற்று. திருத்தப்பட்ட தொழிற் கொள்கைத் தீர்மானம் 1948ஆம் ஆண்டின் தீர்மானத்தை மாற்றி அமைத்துள்ளது. இந்த எட்டாண்டுக் காலத்தில் இந்தியாவில் குறிப்பிடத்தக்க மாறுதல்களும், முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. புதுக்கொள்கைத் தீர்மானம் இவ்வெல்லா அம்சங்களையும் கருத்தில்கொண்டு நிறைவேற்றப் பட்டுள்ளது.

நோக்கம்: தொழிற் கொள்கையின் பரந்த நோக்கங்கள், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதாகவும், தொழில் வளர்ச்சியை விரைவு படுத்துவதாகவும், குறிப்பாகப் பொதுத் துறையில் கனரகத் தொழில்களையும் இயந்திர உற்பத்தித் தொழில்களையும் வளர்ப்பதாகவும் அமைந்துள்ளது. பிற நோக்கங்களுள், பெரிய, வளரும் கூட்டுறவுத் துறையை வளரச் செய்து மக்களின் வருமானம், செல்வம் ஆகியவற்றுள் உள்ள வேற்றுமையைக் குறைப்பது. தனியார் சர்வாதீனத்தை அடக்குவது; மற்றும் சில நபர்களிடையே பொருளாதார சக்தி குறையாவண்ணம் காப்பது ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இக்கொள்கைகள் நிறைவேற்றப் படுமாயின் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும், வாழ்க்கைத் தரம் உயரும். மற்றும் மக்களின் உழைப்பதற்கான சூழ்நிலை வளம் பெறச்செய்யப் பெறும். மாநில அரசுகள், புதிய தொழில் நிறுவனங்களை அமைக்கவும், போக்குவரத்து வசதிகளைப் பெருக்கவும், முக்கியமான நேரடிப் பொறுப்புகளை மேற்கொள்ளவும் அரசு வாணிகம் பரந்த அளவில் நடைபெறவும் வழி செய்யப் பட்டுள்ளது. இத்தீர்மானத்தின்படி தனியார் துறை திட்டமிட்ட தேசிய முன்னேற்றத்திற்கு ஒரு கருவியாக அமையும். ஆயினும் வளரும் அதன் நடவடிக்கைகள் கூட்டுறவுத் துறைக்குப் படிப்படியாக மாற்றப்படும்.

சிறப்புகள்: இத்தீர்மானம், முன் தீர்மானத்தைப் போன்றது. தொழில்களை மூன்று வகைப்படுத்துகின்றது. சில மாறுதல்கள் இருப்பினும், அடிப்படைக் கொள்கையிலும், நோக்கத்திலும் மாறுதல் ஏதும் இல்லை. அரசு எந்தத் தொழில் உற்பத்தியையும் ஏற்று நடத்த முழு உரிமை பெற்றுள்ளது. தீர்மானத்தின் அம்மூன்று பிரிவுகளாவன.

(அ) அட்டவணையில் தொகுக்கப்பெற்ற சில பொதுப் பயன் துறைகள் உட்பட 17 தொழில்களின் அபிவிருத்தி, அரசாங்கத்தின் முழுப்பொறுப்பைச் சார்ந்தது.

(ஆ) அட்டவணையில் தொகுக்கப்பெற்றுள்ள 12 தொழில்கள் நாளடைவில் அரசாங்கத்திற்கே உடைமையாகிவிடும் என்றாலும் கூட, அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் துணைபுரியும் வகையில் தனியார் துறைகளுக்கும் வாய்ப்பளிக்கப் பெறும்.

(இ) அட்டவணையில் எஞ்சியுள்ள (மேல் இரு அட்டவணைகளில் சேராத) இதர தொழில்களின் எதிர்கால வளர்ச்சி, பொதுவாகத் தனியார் துறைக்கே விடப்படும். என்றாலும் அரசாங்கம் விரும்பினால் எந்தத் தொழிலையும் எப்பொழுது வேண்டுமானாலும் பொதுத்துறைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

முதலாவது 'அ' பிரிவின் கீழ் 17 தொழில்கள் உள்ளன என்று பார்த்தோம். அவையாவன: போர்க்கருவிகள் போர்க்கருவிகளுக்கான மருந்துகள், அணுசக்தி, இரும்பு மற்றும் எஃகு, பெரும் வார்ப்புகள், பெரும் இயந்திரங்கள், கனரக மின்சாரத் தொழில்கள், நிலக்கரி, எண்ணெ, இரும்புத்தாது மற்றும் முக்கியமான தாதுக்களான செம்பு, ஈயம், காரீயம், வான ஊர்தி, ஆகாயப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, டெலிபோன், தந்தி மற்றும் வானொலிப் பெட்டி, மின் உற்பத்தியும், பங்கீடும் முதலியன. 1948ஆம் ஆண்டுத் தொழிற் கொள்கையைக் காட்டிலும் விரிவான அட்டவணையை இது கொண்டுள்ளது. இரண்டாவது 'ஆ' பிரிவின் கீழ் உள்ள 12 தொழில்களாவன: முதல் அட்டவணையில் சேராத மற்ற சுரங்கத் தொழில்களான அலுமினியம், மற்ற துருப்பிடிக்காத உலோகங்கள், இயந்திரக்கருவிகளுக்கான எஃகு, இரசாயனத் தொழில், ஆன்டிபயாடிக்ஸ் மற்றும் முக்கிய மருந்துகள், உரங்கள், செயற்கை ரப்பர், நிலக்கரியைக் கரியாக்குதல் (Carbonisation of Coal), இரசாயன மூலிகைகள், சாலைப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து முதலியன. மூன்றாவது 'இ' பிரிவு அட்டவணையும்

அரசாங்கத்தின் சமூகப்பொருளாதாரக் கொள்கைக்குப் பொருந்து வதாகவும், தொழிற்சாலை (அபிவிருத்தி, ஒழுங்கு முறை) சட்டம் 1951-ன் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகவும் அமையும்.

இத்தீர்மானத்தின் சிறப்பு, தொழிற் பிரிவுகள் தனித்தனிப் பிரிவுகளாகக் கருதப்பட வேண்டியதில்லை. இவற்றிலும் சில நீக்குப் போக்குகள் (Exceptions) இருக்கலாம். ஏதாவதொரு தனியார் துறையைச் சார்ந்த ஒரு தொழிற்சாலை தன்னுடைய தேவைக் காகவோ அல்லது துணை பொருளாகவோ 'அ' அட்டவணையில் உள்ள பொருள்களைத் தயாரிக்கலாம். மேலும் பொதுத்துறையில் உள்ள கனரகத் தொழில்களுக்குத் தேவையான சிறு துணைப் பொருள்களைத் தனியார் துறை மூலமும், அவ்வாறே தனியார் துறை தனக்குத் தேவையான பெரும் பாகங்களைப் பொதுத்துறை யினிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். எனவே தனியார்துறை பொதுத்துறையிடையே இனிய நல்லுறவு ஏற்பட வாய்ப்புண்டு. நாட்டின் தேவையினைக்கருதி அரசு புதுத்தொழில்களை ஆரம் பிக்கும் பொழுது, தனியார்துறையின் ஒத்துழைப்பை நாடும். அச் சமயங்களில், அரசு அதிகமாக மூலதனத்தில் பங்கு பெறு வதாலோ அல்லது அதிகாரத்தில் அதிக பங்கு பெறுவதன் மூலமோ, அந்நிறுவனத்தினை ஒழுங்கான முறையில், தொழிற் கொள்கைக்கு ஏற்பவும், நாட்டு நலனுக்கேற்பவும் நடத்திச் செல்ல அதிகாரம் பெறும்.

இக் கொள்கையின் மற்றொரு சிறப்பு, அரசு தனியார் துறைக்குக் கொடுக்கும் நியாயமான, பாகுபாடில்லாத மதிப்பு, தனியார்துறை நம்பிக்கையுடனும், திறமையுடனும் வேலை செய்ய வும், அத்துறையில் தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தவும் ஐந்தாண்டுத் திட்டங்கள்படி வளர்ச்சி பெறவும் அரசு போக்கு வரத்தினை விருத்திசெய்தும், மின்சாரசக்தி மற்ற பணிகளை அதிகரித்தும், பொருளாதாரக் கொள்கை வழிமுறைகளாலும் உதவிபுரிகின்றது. அரசு கூட்டுறவுத் துறையில் தொழில் வளர்ச் சியை ஊக்குவிக்கத் தொடர்ந்து நிதி உதவியும், சிறப்பு உதவி களும் செய்து வரும். தேவையானபோது தனியார் துறைக்கும் இவ்வசதிகள் கிடைக்கும்.

இக் கொள்கைக்கேற்ப அரசாங்கம், கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் வளர்ச்சிக்காகப் பெரிய அளவு தொழில்களின் உற்பத்தியைக், கட்டுப்படுத்தி இத்தொழில்களுக்குத் தொடர்ந்து தனது ஆதரவை அளிக்கும். மாறுபட்ட விகிதங்களுடைய வரி விதிப்பு முறையும், உதவித்தொகை (Subsidies) அளிப்பதும் பிற

ஆதரவுகளாகும். ஆனுல் இவைகள் போதா. இத்தொழில்கள் பெருந்தொழில்களுடன் போட்டியிடும் வண்ணம், சிற்றளவுத் தொழில்களை வளர்ச்சியுறச்செய்து அவைகளை உற்பத்தி முறையில் புதுமைகளைப் புகுத்த வகைசெய்ய வேண்டும். தொழில் கூட்டுறவுகளை அமைப்பதன் வாயிலாகவும் அவைகளின் போட்டி யிடும் சக்தியை வளர்க்க முடியும். இச்சிறு தொழில்கள்தான் பெரிய அளவில் வேலை வாய்ப்பினையும், தேசிய வருமானத்தை நியாயமான முறையில் பங்கிடவும், மற்றும் பயன்படுத்தாமல் இருக்கும் திறனுள்ள உழைப்பாளர், முதலீடு ஆகியன இடம் பெயரவும் குவியவும் வகை செய்கின்றன. எனவே இத்துறையினை வளர்ப்பது அரசின் கடமை எனக் கொள்கை அறிவிக்கின்றது.

இக் கொள்கை நாட்டின் பல பகுதிகளிடையே வளர்ச்சியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதன் அவசியத்தை வலியுறுத்து கின்றது. சில பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான கச்சாப்பொருள்கள் இல்லாத காரணத்தாலோ அல்லது வேறு இயற்கை வளங்கள் இல்லாமையாலோ, தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கலாம். தேசியத் திட்டக்குழுவின் பணி மெல்ல மெல்ல இப்பகுதிகளுக்கு இவ்வசதிகள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று இக் கொள்கை பரிந்துரைத்துள்ளது. ஒவ்வொரு பகுதியிலும், விவசாயம், தொழில் ஆகியவற்றில் சமநிலை வளர்ச்சி பெறுவதன் வாயிலாகவே நாடு முழுவதும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் பெறமுடியும் என்பதனை இத் தீர்மானம் முழுதும் ஆதரிக் கின்றது.

நாடு தொழில் வளர்ச்சியுறுங்கால் மேலாளர், தொழில் வல்லுனர்கள் ஆகியோரின் தேவையும் விரிவு பெறும் என்பதையும் இத்தீர்மானம் கருத்தில் கொண்டுள்ளது. பொதுத்துறை வளர்ச்சி யினுலும், கிராம, குடிசை, சிறுதொழில்களின் வளர்ச்சியினுல் அதிகரிக்கின்ற மேற்சொன்னவர்களின் தேவையை நிறைவு செய்ய வகை செய்யப்படுதல் வேண்டும். இதற்கான தொழிற் பயிற்சி யினைப் பெரிய அளவில் பொதுத்துறையிலும், தனியார்துறை யிலும், பல்கலைக்கழகங்களிலும் அதிக அளவில் அளிக்க வேண்டும் என்பதனைத் தொழிற் கொள்கை வலியுறுத்துகின்றது.

இவை எல்லாவற்றையும்விட, தொழிலாளர்களின் வசதி களையும், ஊக்குவிப்பு ஊதியத்தினையும் (Incentive Bonus) விரிவு படுத்த வேண்டியது அவசியம். சமதர்மக் குடியரசு நாட்டில் தொழிலாளி, நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பங்காளி. ஆகையால், தொழிலில் அமைதியை ஏற்படுத்துதல் மிகவும் அவசி

யம். வேலை செய்வதற்கான சூழ்நிலை, தொழிலாளியின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை வளரச் செய்து உயர்த்துதல் வேண்டும். தொழிற்சாலைகளில் கூட்டு யோசனை முறை கிடைப்பதற்கு (Joint Consultation) வகை செய்தல் வேண்டும். இவையெல்லாம் நிறைவேற, பொதுத்துறை மற்ற துறைகளுக்கு எடுத்துக்காட்டாக இயங்க வேண்டும் என்று தொழிற்கொள்கை வலியுறுத்துகின்றது.

(2) தொழில் வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும்

முன்னுரை

வளமை வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில் வளர்ச்சி ஒரு முக்கியக் கருவியாக இருந்து வருகின்றது. உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்போமேயானால் இன்று நல்ல வளர்ச்சி பெற்று பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று பிற நாடுகளுக்கும் பெரிதும் உதவுகின்ற இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் மிகவும் பிற்போக்கான நிலையில்தான் 18ஆம் நூற்றாண்டின் இறுதிவரை பொதுவாக இருந்து வந்தன என்று கூறலாம். இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி உலக நாடுகள் யாவற்றுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. அடிமைப் பட்டுக் கிடந்த அமெரிக்கா இன்று நிலாவிற்குச் சென்றுவரத் தக்க வகையில் தொழிலில் நுண்ணறிவு பெற்று விளங்குகின்றது. ருஷ்ய நாடு அக்டோபர் புரட்சிக்குப் பின் பல தடைகளையும், இரண்டு உலகச் சண்டைகளையும் அதனால் ஏற்பட்ட பொருளாதார சேதங்களையும் சமாளித்து, இன்று உலகிலேயே ஒரு வல்லரசாக அமைந்து கிடக்கின்றது. ஆயினும் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த பழங்குடி நாடாகிய நமது நாடு ஏன் இன்னும் பொருளாதாரத் தன்னிறைவு பெறவில்லை என்பது ஆராயத் தக்கது.

பொருளாதார அமைப்பு

இந்தியாவைப் போன்ற வளர்ச்சி யடையாத நாடுகளில் பொருளாதார அமைப்பு திட்டமான இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. முதலாவது, கட்டுக்கோப்பான ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதி அல்லது முதலாளித்துவ பகுதி எனலாம். (Organised Sector or Capitalist Sector). இக் கட்டுக்கோப்பான ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதி புதுமைகள் பலவும் தன்னிடம் கொண்டிருப்பினும், பொருளாதாரத்தில் ஒரு சிறு பகுதியையே

கொண்டுள்ளது. இது தனியார் அல்லது பொதுத்துறை தொழில்களைக் கொண்டுள்ளது. இரண்டாவது தன் வாழ்க்கைக்குப் போதுமானவற்றை மட்டும் உற்பத்தி செய்கின்ற பகுதி. இப்பகுதி ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதியினைவிடப் பெரிதாக அமைந்துள்ளது. பழமையான இப்பகுதியில் தான் நாம் சிறிய அளவு விவசாயத்தினையும் இன்னும் பல ஒழுங்கு படுத்தப்படாத பொருளாதார நடவடிக்கைகளையும் காண்கிறோம். இப்பகுதியில் சேமிப்பு என்பது இல்லாத ஒன்றாக அல்லது மிகவும் குறைந்த அளவினதாக இருக்கின்றது. வாழ்வதற்குப் போதுமான அளவு மட்டுந்தான் பொருள் கிடைக்கின்றது. என்றாலும் இப்பகுதியினர் பிற துறைகளுக்குச் செல்ல விரும்புவதில்லை. புதுமையான, ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதியே சேமிப்பிற்கு முக்கிய ஆதாரமாக அமைந்துள்ளது. ஏனெனில் சராசரி மனிதனின் வருமானமும், கூலியும் மற்ற துறைகளைவிட மிகவும் அதிகமாக அமைந்துள்ளது. அதிக வருமானமும், அதிக இலாபமும் பெரிய அளவில் சேமிப்புக்கு வழி செய்கின்றன. இங்கேதான் எச்சம் கிடைக்கின்றது. வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைச் சுலபமாகத் தூண்ட வேண்டுமாயின், ஒழுங்குபடுத்தப்பட்ட, கட்டுக்கோப்பான பகுதியை வளர்ப்பதும் விரிவாக்குவதும் மிகவும் அவசியம்.

முதலாளித்துவப் பகுதி பொதுவாக, வளர்ச்சி பெற்ற வங்கி வசதியைப் பெற்றிருக்கின்றது. இப் பகுதியில்தான் தொழில் துணிவோன் புதிய தொழில் நுணுக்கங்களையும், புதிய இயந்திரக் கருவிகளையும் எளிதாகவும், விரைவாகவும் பொருத்த இயலுகின்றது. எனவே முதல் திரட்சி (Capital formation)யும், தொழில் நுணுக்க வளர்ச்சி வேகமும் மிகவும் அதிகமாக இருக்கின்றது. சுருங்கக்கூறின் குன்றிய வளர்ச்சி நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான கூறுகள் அமைந்து கிடப்பதால், பொருளாதாரம் ஒரு தேக்க நிலையை அடையாமல் காக்க முடிகின்றது. பெற்ற வளர்ச்சியினை ஒரு சில முதலாளிகள் மட்டும் அனுபவிப்பதே இப்பகுதியின் குறைபாடு என்று கூறலாம். அக்குறையினைப் போக்கவே பொருளாதாரக் கொள்கைகள் அமைந்துள்ளன.

தொழிலும் வேலையில்லாப் பிரச்சினையும்

பிழைப்புப் பகுதியின் முக்கியத் தொழில் முறையாக விவசாயமும், கட்டமைந்த பகுதியின் முக்கியத் தொழில் முறையாக (Occupation) தொழிலும் அமைந்துள்ளது. ஆயினும் வளர்ந்து வரும் மக்கள் தொகையாலும், மாற்று வேலையின்மை காரணமாகவும், நிலத்தின்மீது மக்கட் சுமையின் அழுத்தம் மிகவும்

அதிகமாக இருக்கின்றது. பெரும்பாலானோர் விவசாயத்தையே நம்பி உள்ளனர். சிறிய அளவில் விவசாயம் செய்வது இப் பிரச்சினையை மேலும் அதிகமாக்குகின்றது. மூதாதையரின் நிலங்களை உழுதே பல குடும்பங்கள் பிழைத்து வருகின்றன. குடும்பத்தில் உள்ள யாவரும் நிலத்தில் பாடுபடுகின்றனர். வருகின்ற வருமானத்தை அனைவரும் பங்கிட்டுக்கொள்கின்றனர். எனவே எல்லாருடைய வருமானமும் குறைவாக உள்ளது. குறைந்த பரப்புள்ள நிலத்தில், விவசாய முறையில் மாறுதல் இன்றிப் பலர் பாடுபடுகின்ற நிலையில், விவசாயத்தின் மூலம் கிடைக்கின்ற வருமானம் குறைவாக இருப்பதிலும், குறைந்து கொண்டே போவதிலும் வியப்பேதுமில்லை. குறைந்து செல் விளைவு விதி இந்திய விவசாயத்திற்காகவே எழுதப்பட்டது போன்றே தோன்றுகிறது. தேவைக்கு அதிகமானவர்கள் ஈடுபடுவதால் சராசரி மனிதனின் வருமானமும் குறைகின்றது; மொத்த உற்பத்தியும் குறைகின்றது. இவ் விசித்திரப் போக்கினையே 'ஒளிந்திருக்கும் அல்லது மறைந்திருக்கும் வேலையின்மை' என்பர். இவ்வாறு மறைந்திருக்கும் வேலையில்லாதோரின் எண்ணிக்கையைத் துல்லியமாகக் கணக்கிடுவது இயலாத ஒன்று. ஆயினும் உலக நாடுகள் சபையின், 'வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகள்' என்ற அறிக்கையிலிருந்து இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் பகுதிகள் மற்றும் இந்தோநேசியா ஆகிய நாடுகளில் உபரி விவசாய மக்கள் தொகை 20 சதவிகிதத்திலிருந்து 25 சதம் வரை இருப்பது தெரிகின்றது. இம் மறைந்திருக்கும் வேலையில்லாதோரை வேலையில் அமர்த்தவும், அவர்கள் வருமானம் ஈட்டச் செய்யவும் (Disguised Unemployed) சேமிக்கவும் வகை செய்யக்கூடியது தொழில் வளர்ச்சியே.

இந்தியாவின் வேலையின்மைப் பிரச்சினை மற்ற வளர்ச்சி பெற்ற நாடுகளிலிருந்து வேறுபட்ட ஒன்றாகும். பொருளாதார அறிஞர் கேயின்ஸ், வளர்ச்சி பெற்ற நாடுகளின் வேலையின்மைப் பிரச்சினைக்கு நுகர்தல் தேவைக் குறைவே காரணமென்று குறிப்பிட்டுள்ளார். பொருள்களின் நுகர்தல் தேவை குறையும்பொழுது, உற்பத்தி குறைந்து, அதன் காரணமாக ஆட்கள் தேவையும் குறைகின்றது. இத்தகைய வேலையின்மை பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினாலும், வியாபார வட்டச் சுழற்சிகளாலும் ஏற்படலாம். இத்தகைய நிலை 1930-ல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தால் இந்தியாவிலும் ஏற்பட்டது. அவ்வாறே இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகும் ஒரு முறை நேரிட்டது. 1950க்குப் பிறகு தொழில் சீரமைப்புகளாலும் (Rationalisation) தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். பொருளாதார வளர்ச்சி பெற்ற நாங்கள்

தங்கள் பொருளாதாரக் கொள்கையினுல் இத்தகைய தற்காலிக வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடிந்தது. ஆனல் இந்தியா போன்ற வளரும் நாடுகளின் நிலைமையே வேறு தொழில் சீரமைப்புகளால் ஏற்பட்ட மிகவும் நெருக்கடியான வேலையின்மைப் பிரச்சினையைப் போக்க முடியாமற் போகவே, இந்திய அரசு பருத்தி, சணல் தொழில்களின் சீரமைப்பினுல் தொழிலாளர் நீக்கப்பட நேரிடின், சீரமைப்பே தேவையில்லை என்று தடை விதிக்க நேரிட்டது. எனவே இங்கு வேலையின்மைச் சிக்கலை தீர்ப்பது மிகவும் கடினமானதொன்றாக உள்ளது. இயந்திரங்களின் எண்ணிக்கையையும், உற்பத்திக் கருவிகளின் எண்ணிக்கையையும் கூட்டி மேலும் பலருக்கு வேலையளிப்பதே தொழில்களின் கொள்கையாக இருக்க நேரிட்டுள்ளது.

தேசிய வருமானத்தில் தொழிலின் பங்கு

வளர்ச்சியுற்ற நாடுகளின் தலா வருமானமும் (per capita income), வளரும் நாடுகளின் தலா வருமானமும் மிகவும் வேறுபடுவதற்கான காரணம் பொருளாதார அமைப்பில் உள்ள வித்தியாசமே. வளர்ச்சியுற்ற நாடுகள் பெரும்பாலும் தொழிற் பொருளாதாரத்தையும், பிற்பட்டவை விவசாயப் பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. தலா வருமானம் $ 125க்கு குறைவாக உள்ள நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 47 சதம் மூலப்பொருள் உற்பத்தி (Primary Production)யாகவும் 20 சதத்திற்கும் குறைவாகவே தொழில் பொருள் உற்பத்தியும் இருக்கின்றது. வளர்ச்சியுற்ற நாடுகளில் அதற்கு மாறாகத் தொழில் மொத்த உற்பத்தியில் சுமார் 49 சதத்திற்கு அதிகமாகவும், மூலப்பொருள் உற்பத்தி 13 சதவீதமாகவும் உள்ளது. கீழ்வரும் அட்டவணை தலா வருமானத்திற்கும், தொழில் உற்பத்திக்கும் உள்ள தொடர்பினை விளக்குகின்றது. சில நாடுகள் மூலப்பொருள் உற்பத்தியினுல் நல்ல வளம் பெற்றுள்ளன என்பதில் ஐயமில்லை. உதாரணமாக குவயத் நாடு இன்று பெட்ரோலிய உற்பத்தியின்காரணமாக உலகநாடுகளில் வளம் பெற்ற நாடாக அமைந்திருக்கின்றது. இதுபோன்று ஒன்று, இரண்டு நாடுகள் இருக்கலாம். ஆனல் பொதுவாகத் தலா வருமானம் அதிகரிக்கத் தொழில் உற்பத்தி அதிகரிப்புதான் முக்கிய காரணமாக இருக்கின்றது என்பது வல்லுநர்களின் முடிவு.

19ஆம் நூற்றாண்டில், தொழில் வளர்ச்சி பன்னுட்டு வணிகத்துடன் இறுகிய தொடர்பு கொண்டிருந்த நிலையில், மூலப்பொருட்களின் 'வணிக மூலமான வளர்ச்சி' அடிப்படையில் பொருளாதார

அட்டவணை 27

மொத்த உள் நாட்டு உற்பத்தியின் தொழிற் பங்கீடு நாடுகளின் சராசரி நிலை, தலா வருமான நிலை கொண்டு வகுக்கப்பட்டது — 1950—59 (சதவிகிதம்)

தலா வருமானப் பிரிவு	சரக்குகள் மற்றும் அடிப்படைத் துணை நலங்கள் தொழில்				மூலப்பொருள் உற்பத்தி	சேவை	கூடுதல்
	கூடுதல்	ஆக்கத் தொழில்	துணை நலங்கள்	கட்டுமானம்			
வளர்ச்சியுறு நாடுகள்							
1. 125க்கும் கீழ்	19	11	5	4	48	33	100
2. 125லிருந்து 249	25	14	6	5	40	35	100
3. 250 லிருந்து 374	26	16	6	4	29	45	100
4. 375க்கும் அதற்கு மேலும்	28	17	6	5	27	45	100
மிகுந்த வருமானமுள்ள தொழில் வளர்ச்சிபெற்ற நாடுகள்	49	32	11	6	13	38	100

ஆதாரம் :- U. N. World Economic Survey, 1961, P.I

வளர்ச்சி ஏற்பட்டது உண்மை. இது எவ்வளவு பெறப்பட்டது எனில், முதலாவதாக முன்னதாக போக்குவரத்து உயர் செலவு காரணமாகவும், மற்ற தடைகளாலும் பிற நாடுகளினின்றும் தனித்து நின்ற சில நாடுகள், தனிப்பண்பு வளர்ச்சி (Specialization) யில் ஆர்வம் காட்டின. இரண்டாவதாகப் பொருளாதார வளர்ச்சி, சுற்றியுள்ள நாடுகளுக்கும் வணிகத்தினுல் பரவிற்று. ஏனெனில் தொழில் வளர்ச்சியுறும் நாடுகளின் மூலப்பொருட்கள் தேவை, சுற்றியுள்ள நாடுகளினுலேயே இயல்புடையதாயிற்று. மூலப்பொருட்களின் தேவை அதிகரித்த பொழுது அவைகளின் பொருளாதாரம் ஊக்கம் பெற்று வளர்ச்சியுறத் தொடங்கியது. ஆனுல் தற்போது பழைய கொள்கையான 'வணிக மூலமான வளர்ச்சிக் கொள்கை' காலத்திற்கு ஒவ்வாத ஒன்ருகும். வளரும் தலா நுகர்ச்சி விகிதம், பொருட்களின் தேவையினையும் சேவையின் தேவையையும் மாற்றி விட்டது. தொழில் நுணுக்க வளர்ச்சி, பொருட்களைச் சிக்கனமாக உபயோகிக்கும் முறையினையும், புதிய மூலப்பொருட்களையும், பதிலி அல்லது செயற்கை மூலப்பொருட்களையும் அளித்துள்ளது. எனவே வளர்ச்சியுற்ற நாடுகளின் மூலப் பொருட்களின் தேவை வேகமும், இறக்குமதி தேவை வேகமும் மிகவும் குறைந்துள்ளன. வளர்ச்சியுரு நாடுகளின் ஏற்றுமதி அளவு ஆண்டிற்கு 3.6 சத வேகத்திலும், வளர்ச்சியுற்ற நாடுகளின் ஏற்றுமதி அளவு 6.2 சத வேகமாகவும் தற்போது உள்ளன. ஏற்றுமதிக் குறைவுடன் வணிக பேர எல்லைகளின் வீழ்ச்சியும் இணைந்து கொண்டது. எனவே உலகச் சந்தையில் மூலப்பொருட்களுக்கான தேவை குறைந்த நிலையில், மேலும் குறைந்து வருகின்ற நிலையில், வளர்ச்சி குன்றிய நாடுகளின் சிக்கல்கள் யாவும் தீர திட்டமான பதில் தொழில் வளர்ச்சியே. அந் நாடுகள், வளர்ச்சிக்கு இனியும் வணிகத்தை நம்புவதில் எவ்விதப் பயனும் இல்லை. தங்கள் பொருளாதாரத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கி, வளர்ச்சிக்கான தீவிர கூறுகளைத் தூண்டுவதே சிறப்பாகும்.

வணிகத்துறையினுள் உள்ள தேக்கத்துடன்கூட வளர்ச்சியுரு நாடுகள், பெருகிவரும் மக்கள் தொகையினையும், அதனுல் ஏற்படுகின்ற குறைந்து செல்கின்ற விவசாய விளைச்சல்களையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் வளமை, பெருகும் உற்பத்தியினைப் பொறுத்தது என்பதும், வறுமையைப் போக்க உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதும், உழைப்பினைக் குறைந்த உற்பத்தி தரும் வேலைகளிலிருந்து அதிக உற்பத்தி தரும் வேலைகளுக்கு மாற்றுதல் வேண்டும் என்பதும், பொருளாதார இலக்கணங்களாகும். பொதுவாகத் தனி மனிதனின் உற்பத்தியின் இறுதி மதிப்பு விவசாயத்தினைவிட, தொழில் துறையில் அகச்

சிக்கனமும், புறச்சிக்கனமும் மற்ற துறைகளைவிட அதிகமாகவும், குறிப்பாக விவசாயத்தைவிட அதிகமாகவும் அமைந்துள்ளது. தொழில் வளர வளர இச்சிக்கனங்களும், இடைத்தொழில் உறவுகளும் (Inter Industrial linkage) வலுப்பெறுகின்றன. மேலும் தொழிலதிபர்கள் சேமிப்புகளைப் பெருக்கி, அதனை மீண்டும் தொழில்களில் முதலீடு செய்ய அதிக வாய்ப்பளிக்கின்றது.

தொழில்துறை, மற்ற துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் அதிக இறுதிநிலை சேமிப்பு தன்மையும் (marginal propensity to save), அதிக இறுதிநிலை முதலீட்டு மனப்பாங்கினையும் பெற்றுள்ளது. இவ் விரண்டும் தன்னிறைவுப் பொருளாதாரத்தை அடையும். அதிக முதலீட்டைப் பெறவும், மிகவும் அதிக வளர்ச்சி விகித வருமானத்தைப் பெறவும், வேலைப் பிரச்சினையைப் போக்கும் தொழில்வளர்ச்சியைப் பெறவும் வகை செய்கின்றது. தொழில் வளர்ச்சி, அறிவைப் பெறவும், தொழில் நுணுக்க ஆர்வமும் வளர்ச்சியும் பெறவும், நிர்வாக வளர்ச்சி பெறவும், மற்றும் நாகரிக காலத்துக்கேற்ற, தேவையான பிற வளர்ச்சிகள் பெறவும் உதவுகின்றது. இவ்வளர்ச்சிகள் காரணமாகப் பின்னல் விவசாயம், வாணிபம், பங்கீடு மற்றும் நெருங்கிய துறைகள் யாவும் வளரவும் வாய்ப்புள்ளது.

இதன் விளைவாக, விவசாயத்திலிருந்து தொழில்துறைக்கு உழைப்பாளர்கள் மாறுவதாலும் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்றது. எனவே தொழில் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததாகவும், நிதானமான வளர்ச்சிக்குத் தேவையானதாகவும் உள்ளது. ஏனெனில் இது வருமான அதிகரிப்பினல் ஏற்பட்ட விளைவாகவும், அதே சமயம் அதிக வருமானம் பெற வழியாகவும் அமைந்துள்ளது. மக்களின் வருமானம் வளர வளர அவர்கள் மேலும் உணவுப் பண்டங்களைக் காட்டிலும் மற்ற பண்டங்களின் மேல் செலவு செய்கின்றார்கள். இவ்வாறு தொழில் வளர்ச்சி பலவகையிலும் பொருளாதார முன்னேற்றம் பெற உதவுகின்றது என்பது தெளிவு.

(3) இரும்பு, எஃகுத் தொழில்

முன்னுரை

ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமானதும் முக்கியமானதுமான தொழில், இரும்பு, எஃகுத் தொழில். இங்கிலாந்து நாடு தொழிற் புரட்சிக்கு முன்னோடியாக விளங்கக் காரணமாக

இருந்தது. அந்நாட்டில் இத்தொழிலின் வளர்ச்சியே. இயந்திரங்களை உற்பத்தி செய்ய இரும்பும் எஃகும் தேவை. உற்பத்தி, செய்த பொருள்களை பல இடங்களுக்கும் ஏற்றிச்செல்லும் இருப்புப் பாதைகளை அமைக்கவும் இது தேவை. உற்பத்திக்கும் வணிகத்திற்கும் ஆதாரமாக இருப்பதே இத் தொழிலின் வளர்ச்சிக்குக் காரணமாகும். இந்தியாவில் இதன் அருமை முன்னரே உணரப்பட்டிருந்தும், பெருத்த மூலதனம் தேவைப் படுவதன் காரணமாக ஓரளவுதான் வளர வாய்ப்பு இருந்தது. ஐந்தாண்டுத் திட்டங்கள் இத்தொழில் வளர்ச்சிக்கு வகை செய்தன எனலாம். வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குக் கருவாக அமையும் இத்தொழிலுக்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரிதும் வழி செய்தன எனலாம்.

வளர்ச்சி வரலாறு

இரும்பும் எஃகும் பண்டைக் காலத்திலிருந்தே ஆயுதங்கள் செய்யவும் பிறவற்றிற்கும் பயன்பட்டு வந்துள்ளன. உயர்ந்த ரக எஃகு உற்பத்திக்குப் பல்லாண்டுகட்கு முன்பே இந்நாடு புகழ் பெற்றது. புகழ்பெற்ற டமாஸ்கஸ் கத்திகள் (Blades) இந்திய எஃகினால் ஆக்கப் பெற்றவையே. உலகப் புகழ்பெற்ற குதுப்மினர் ஸ்தூபியும் இந்திய இரும்பின் புகழைப் பரப்புவதாக உள்ளது. 6 டன் எடையுள்ள இத்தூணை கி.பி. 415லேயே எவ்வாறு உருவாக்க முடிந்தது என்று பலரும் இன்றும் வியக்கின்றனர். மேலைநாட்டு முறையில் இரும்பை உருக்கித் தயாரிக்கும் முறையை முதன் முதலாக, 1830ஆம் ஆண்டில் சென்னையில் மேற் கொண்டனர். விறகுக் கரிக்குப் பதிலாக நிலக்கரியைப் பயன் படுத்தி இரும்பை உருக்கும் முயற்சிகள் 1875-ல் கையாளப் பெற்றன. இதற்கான ஒரு நிறுவனம் இராணிகஞ்ச் நிலக்கரிச் சுரங்கத்துக்கருகில் வங்காள இரும்புக் கம்பெனியால் துவக்கப் பெற்றது. இலாபம் இன்மையால் அரசிற்கு இக்கம்பெனி விற்கப் பட்டது. பின்னர், அரசும் தனியார் துறையிடமே திரும்பி விற்று விட்டது. பின்னர் 1919-ல் இந்திய இரும்பு எஃகுக் கம்பெனி என்ற புதிய நிறுவனம் துவக்கப்பெற்றது. புத்தம் புதிய அமெரிக்கத் தளவாடங்களுடன் இக்கம்பெனி நிறுவப்பெற்றது.

டாடா இரும்பு எஃகு கம்பெனி 1907-ல் நிறுவப்பட்டு, ஐந்தாண்டுகட்குப் பின்னர் இயங்கத் தொடங்கியது. இரும்புச் சுரங்கங்கள், சுண்ணும்புக்கல் தோண்டுமிடங்கள் (Quarries), மாக்னசைட் படிவப் பகுதிகள், நிலக்கரிச் சுரங்கங்கள் ஆகியவற்றைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டு இக் கம்பெனி தொழிலைத் தொடங்கியது. இதன் தோற்றுவாய் இரும்பு, எஃகு

வரலாற்றிலேயே புதிய மாற்றத்தை உண்டாக்கியது. 1913-ல் முதன்முதலில் வெற்றி காணும் வகையில் இந்தியாவில் எஃகு உருவாகியது. முதல் உலகப்போரினால், இத்தொழில் நிறுவனம் வலிமையடைந்து, புதிய முறைகளில் விரிவு செய்தது. இவ்வெற்றியின் காரணமாக இம்மாதிரியான புது நிறுவனங்கள் தோன்றின. 1918-ல் ஹிராபூரில் (Hirapur) இந்தியன் இரும்புக் கம்பெனி, பர்ன் கம்பெனியால் தொடங்கப்பெற்றது. 1936-ல் அதே கம்பெனியார் 'ஸ்டீல் கார்பொரேஷன் ஆப் பெங்கால்' என்ற கம்பெனியைத் தொடங்கி, 1952-ல் இவ்விரு கம்பெனிகளையும் ஒன்றாக இணைத்தனர். இன்னொரு முக்கியமான இரும்புத் தொழிற்சாலை, மைசூர் இராச்சிய இரும்புத் தொழிற்சாலை என்ற பெயரில் பத்திராவதியில் 1923-ல் துவக்கப்பட்டது.

1916ஆம் ஆண்டிலிருந்து எஃகு உற்பத்தி முன்னேற்றமடையத் தொடங்கியது. 1921ஆம் ஆண்டு நெருக்கடிக்குப் பின்னர், இந்திய எஃகுத் தொழில் வெளிநாட்டு இறக்குமதி அதிகரித்ததால் வியாபாரிகளுடன் போட்டியிட நேர்ந்தது. இந்தியச் சுங்க ஆய்வுக் குழு (Tariff Board) நிறுவப்பட்டதும், 1924-ல் உற்பத்தித் தற்காப்புக் கொள்கையை ஒட்டி முதன் முதலில் இரும்பு எஃகுத் தொழிலுக்குத்தான் காப்பு அளிக்கப்பட்டது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தேனிரும்பு உற்பத்தி (Pig iron) 35,000 டன்னாக இருந்தது, 1938-39-ல் 15,76,000 டன்களாகப் பெருகியது. இதில் மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதியாகியது. இந்தியத் தேனிரும்பு பிற நாட்டு உற்பத்திகளுக்கு எந்த வகையிலும் தாழ்ந்ததன்று. இந்திய இரும்பு எஃகுத் தொழில் வளர்ச்சியைப் பின்வரும் அட்டவணையிலிருந்து இனிது அறியலாம்.

அட்டவணை 28

உற்பத்தி அளவு (மில்லியன் டன்களில்)

உலோகம்	1932–33	1942–43	1950–51	1960–61	1965–66
தேனிரும்பு (Pig iron)	·88	1.6	1.7	4.3	7.1
எஃகுப் பாளங்கள்	·59	1.3	1.5	3.4	6.5
இரும்புத் தகடுகள்	·35	.9	1.0	2.4	4.5

அடிப்படைத் தொழிலாகிய இரும்பு-எஃகுத்தொழில் வளர்ச்சியடையத் தொடங்கியதும் அதைத் தொடர்ந்து பல துணைத் தொழில்களும் கிளைத்தன. பொறியியல் கருவிகள், ரெயில் பெட்டிகள், தண்டவாளங்கள், இரும்புக் கம்பி, ஆணி, வேளாண்மைக் கருவிகள் முதலியன அவற்றுள் சில. இத்தொழிலோடு தொடர்புடைய கிளைத் தொழில்கள் பெருகவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. உதாரணத்திற்கு மாக்னசைட்டு, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், கலப்பு உலோக எஃகுக் கருவிகள் (Alloy and tool Steels) ஆகியவை தயாரிப்பதற்கு நிறுவப்பட்ட உற்பத்தி நிலையங்களைக் குறிப்பிடலாம். இந்தியாவில் இத்தொழில் பெருகுவதற்கான அடிப்படை வாய்ப்புகள் பலவும் உள்ளன. கச்சாப் பொருள்களையும், சிறப்பாக உயர்ந்த ரக இரும்புக் கனிப்பொருள்களையும் பொறுத்தவரை இயற்கையான நன்மைகள் மிகுதியாக இருக்கின்றன. துணைப்பொருள்கள் உற்பத்தி பெருகிய பின்னர் இரும்புக்கு அதிகமான தேவையும் இருந்து வருகின்றது. எனவே ஐந்தாண்டுத் திட்டங்களில் இத் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

முதலாவது திட்டத் தொடக்கத்தில் பல வளர்ச்சித் திட்டங்கள் மேற் கொள்ளப்பெற்றன. அவற்றுள் முதன்மையானது டாடா இரும்பு எஃகுக் கம்பெனியைப் புதுப்பித்து நவீன முறையில் விரிவு படுத்தியது. இரண்டாவது, இரும்புக் கம்பெனிகளின் இணைப்புச் சட்டப்படி (1952) இந்திய இரும்பு எஃகுக் கம்பெனி (I. I. S. Co) வங்காள எஃகு நிறுவனத்துடன் (Steel Corporation of Bengal) இணைக்கப்பட்டது. இதன் ஆலை இலாபகரமாக இயங்க, உலக வங்கி இதற்கு 15 கோடி ரூபாய் கடனளித்தது. ஆனால் 1948ஆம் ஆண்டுத் தொழிலகக் கோட்பாட்டுத் தீர்மானப்படி, இரும்பு எஃகுத் தொழில், பொதுத்துறையைச் சார்ந்த தொழிலாகக் கருதப்பட்டது. எனவே இதன் பின் வளர்ச்சி பொதுத்துறையில் ஏற்பட்டது.

தேவைக்கேற்ற அளவு அளிப்பு இன்மையால் முதலாவது திட்டக்குழு, அரசாங்கத் துறையில் இரும்பு எஃகு இணைப்பாலை (Integrated Iron and Steel Works), 80 கோடி ரூபாய் மொத்தச் செலவில், ஆறு ஆண்டுகளுக்குள் உற்பத்தியும் தொடங்க வேண்டும் எனத் திட்டமிட்டது. 1954ஆம் ஆண்டு பொதுத் துறையில் முதன் முதலாக எஃகு ஆலையை நிறுவும் முயற்சி எடுக்கப்பட்டது. இதற்கென ஜெர்மனியில் உள்ள க்ரப்-டெமாக் (Krupp–Demag) என்ற கம்பெனியுடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஆலை ரூர்கேலாவில் 1 மில்லியன் டன் எஃகுப் பாளங்கள் தயாரிக்க நிறுவப்பட்டுள்ளது. ரூர்கேலா

திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் 300 கோடி ரூபாய் மூலதனத்துடன் தொடங்கப் பெற்றது.

இரண்டாவது திட்டக் காலத்தில் எஃகுக்கான மொத்தத் தேவை 17 மில்லியன் டன்களாகும். ஆனால் இரண்டாவது திட்டப்படி எஃகின் மொத்த உற்பத்தி 10.5 லிருந்து 11.5 மில்லியன் டன்களாகும் என மதிப்பிடப்பட்டது. எனவே பிலாயில் எஃகுத் தொழிற் சாலையை அமைப்பதற்கான தொழில் நுட்ப நிதி உதவிக்காக 1955-ல் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்யப் பட்டது. பிலாய் ஒப்பந்தம் ஒரு மில்லியன் டன் எஃகுப் பாளங்கள் செய்வதற்கானதாகும்.

துர்காபூரில் ஆலை அமைப்பதற்காக இங்கிலாந்துடன் மற்றோர் ஒப்பந்தம் 1956-ல் செய்து கொள்ளப்பட்டது. இம்மூன்று ஆலைகளுக்குமான உத்தேசச் செலவு — போக்குவரத்துச் செலவு நீங்கலாக—353 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது.

இவ்வாறு தனித்தனியே ஒரு மில்லியன் டன் எஃகுப் பாளங்கள் உற்பத்தி செய்ய மூன்று புதிய ஆலைகள் நிறுவியதன் மூலம், குறைந்த தொழில் வளமும், குறைந்த மூலதனமும், தொழில் அறிவும் உடைய இந்தியா ஒரு பெரிய சாதனையை நிகழ்த்தியது என்றே கூறலாம். மற்றும் பிற நிறுவனங்களையும் புதுமைப்படுத்தி உற்பத்திச் சக்தியை மிகவும் அதிகரித்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியமான கருவாக இத் தொழில் அறிவிக்கப்பட்டாலும் உண்மையில் எஃகு உற்பத்தியில் எதிர்பார்த்த வேகமில்லை. உற்பத்தி, குறித்த எல்லையை விட (Target) குறைவாகவே இருந்தது. 1960-61 க்கான குறித்த எல்லை (Target) 4.3 மில்லியன் டன்களாக இருந்தபோது, உண்மையில் உற்பத்தி 2.4 மில்லியன் டன்களேயாகும்.

மூன்றாவது திட்டம் எஃகுத் தகடுகளின் உற்பத்தி (Finished steel Productiton) எல்லை 6.8 மில்லியன் டன்களெனக் குறிப்பிட்டிருந்தது. 1965–66-ல் உண்மை உற்பத்தி 4.5 மில்லியன் டன்களேயாகும். எஃகுப் பாளங்களின் (Steel ingots) உற்பத்தியும் குறித்த எல்லையான 9.3 மில்லியன் டன்களுக்குக் கீழேயே இருந்தது. இரண்டாம் திட்டத்தின் இலக்கையும் குறைகளையும் மூன்றும் திட்டம் போக்கவில்லை எனலாம். உற்பத்தியாளர் வரிசைப்படி எஃகு உற்பத்தியைக் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

1973–74ஆம் ஆண்டின் எஃகுத் தகடுகள் மற்றும் இரும்புப் பாளங்கள் ஆகியவற்றின் தேவை முறையே 7.12 மில்லியன் டன்களாகவும், 1.95 மில்லியன் டன்களாகவும் இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தேவையினை நிறைவு செய்ய எஃகு உற்பத்திச் சக்தி 1968-69ஆம் ஆண்டில் 9.0 மில்லியன் டன்களிலிருந்து 1973–74-ல் 12.0 மில்லியன் டன்களாக உயர்த்தப்படல் வேண்டும். இரும்புப் பாள உற்பத்தியும் அந்த ஆண்டில் 3.8

அட்டவணை 29

உற்பத்தியாளர் வரிசைப்படி எஃகுத் தகடுகளின் உற்பத்தி 1964)

துறை வகை	உற்பத்தி (1000 டன்களில்)	மொத்தத்தில் சதவீதம்	
அ. தனியார்துறை	2630	60.6	
	1068	24.6	39.6
	649	15.0	
துணை உற்பத்தியாளர்களும் பதிவு செய்த உருட்டாலைகளும்	792	18.2	21.0
ஆ. பொதுத்துறை	1711	39.4	
	40	0.9	
பிலாய்	661	15.6	
ரூர்கேலா	562	12.9	
துர்காபூர்	448	10.3	
மொத்தம்	4341	100.	

ஆதாரம் : Eastern Economist, Annual Number 1966

மில்லியன் டன் குறி இலக்கிற்கு உயர்த்தப்படல் வேண்டும். அந்த ஆண்டில் எஃகுத் தகடுகள் ஏற்றுமதி சுமார், 1 மில்லியன் டன்களாகவும் இரும்புப்பாள ஏற்றுமதி சுமார் 1.5 மில்லியன் டன்களாகவும் உயர்த்தப்படுதல் வேண்டும். இந்த இலக்குகளை நிறைவு செய்ய நான்காவது திட்டம் பிலாய் எஃகு ஆலையின் சக்தியை 2.5 மில்லியன் டன்களிலிருந்து 3.2 மில்லியன் டன்களுக்கு உயர்த்த வழி செய்துள்ளது. இதனுடன் பொதுத்துறையின் நான்காவது உருக்காலையாக, அமெரிக்க, உதவியுடன் நிறுவப்பட்டுள்ள பொகாரோ உலையின் முதல் கட்டம் 1.7 மில்லியன்

டன்கள் பாள உற்பத்தியுடன் முழுமையடையும். உருக்கு ஆலை களின் உற்பத்திச் சக்தியை அதிகரிக்கவே நான்காவது திட்டத்தில், மொத்தம் ரூபாய் 818 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் ரூபாய் 520 கோடிகள் இப்போது இருந்து வரும் ஆலைகளை விரிவு படுத்தவும் ரூபாய் 298 கோடிகள் புதிய திட்டங்களுக்கும் பயன் படுத்தப்படும். இதற்கு மேலும் சில சிறப்பு வகை எஃகினை உற்பத்தி செய்யவும் திட்டம் வகை செய்கின்றது. 1973-74-ல் கலப்பு (alloy) மற்றும் சிறப்பு (special) எஃகின் தேவை 2.94 லட்சம் டன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கெனத் துர்காபூர் ஆலை மைசூர் ஆலை ஆகியவற்றை விரிவுபடுத்த எண்ணி யுள்ளனர்.

இரும்பு எஃகுத் தொழிற் சிக்கல்கள்

நாட்டின் சுதந்திரத்திற்குப்பின் இந்திய எஃகுத் தொழிலின் வளர்ச்சி வியப்பூட்டும் வண்ணம் உள்ளது. ஜப்பான், ரஷியா ஆகிய இரண்டு நாடுகளைத் தவிர, மற்ற நாடுகளில் இத்தொழிலின் வளர்ச்சி வேகத்திற்கு நம் நாடு சற்றும் குறைந்ததன்று. 1954-55-லிருந்து 1960-61க்குள் எஃகுப் பாளங்கள் (Ingots) உற்பத்தி நான்கு மடங்காகப் பெருகியுள்ளது. இவற்றுள் பெரும் பகுதி பொதுத்துறையின் வளர்ச்சியினால்தான் என்பது குறிப்பிடத் தக்கது. மொத்த இரும்பு எஃகு உற்பத்திச் சக்தியான 9 மில்லியன் டன்களில், பொதுத்துறை 6 மில்லியன் டன் உற்பத்திச் சக்தி உடையதாகவும், தனியார்துறை 3 மில்லியன் டன் உடைய தாகவும் இருக்கின்றது. ஆயினும் குறி இலக்கை இவ் விரு துறை களும் எட்டவில்லை. இதற்குக் காரணங்கள் பல.

முதலாவதாக, 1965-66ஆம் ஆண்டில் நான்காவது திட்டம் துவங்கப்படாமல், நிறுத்தப்பட்டதன் காரணமாக, பல பெரிய திட்டங்களை நிறைவேற்றுதலும் தள்ளிப்போட வேண்டிநேர்ந்தது. இரயில்வேக்களின் வளர்ச்சிக்குக் குறைவான நிதி ஒதுக்கப்பட்ட தன் காரணமாக, இரயில்வேயின் எஃகுத் தேவை குறைவாகவே இருந்தது. எனவே எஃகு உருக்காலைகள் தங்கள் சக்திக்குக் குறை வாகவே வேலை செய்தன. தொழில் வளர்ச்சியும் தற்காலிகமாகத் தடைப்பட்டது. பிலாய், துர்காப்பூர் ஆலைகள், 40 சதவீத சக்தியைத்தான் பயன்படுத்திக் கொள்கின்றன. இதனைப் பின் பற்றி, தனியார்துறையும் தங்கள் வளர்ச்சித் திட்டங்களை, நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று.

இரண்டாவதாக எஃகுத் தொழிலைப் பற்றிய அரசின் விலைக் கொள்கை (Price Policy) இத் தொழிலுக்கு ஒரு பெரிய முட்டுக்

கட்டையாக உள்ளது. எஃகு ஓர் ஆதாரத் தொழில் கனிவளம் (Basic Industrial Mineral) ஆதலின் அரசு வேண்டுமென்றே, எஃகின் விலையை மிகவும் குறைவான நிலையில் வைத்துள்ளது. 1940-க்கும் 1964-க்கும் இடையே எஃகு ஒரு கட்டுப்பாடு செய்யப்பட்ட பொருளாக இருந்தது. விலை ஏற்றங்கள் பின் தேதியிலிருந்து (Retrospective effect) கொடுக்கப்பட்டு வந்தன. இதற்கான ஈட்டுப்பணம் எஃகு சம ஈட்டுக்காப்பு நிதியிலிருந்து (Steel Equaliszation Fund) உருக்காலைகளுக்கு ஒதுக்கி வைக்கப் பட்டது.

ஆனால் 1964-ல் எஃகு மீதிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டமை யால், இக் காப்பு நிதியும் நீக்கப்பட்டது. கட்டுப்பாடு நீக்கப்பட்ட தன் காரணமாக நிறுவனங்கள், தங்கள் உற்பத்திச் செலவிற் கேற்ப, விலையையும் உயர்த்திச் செல்ல அரசு இணங்கவில்லை. உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்த, அரசால் இயலாததால் ஓரளவு விலை உயர்வு அனுமதிக்கப்பட்ட போதும், இலாப ஈவு குறைவாகவே இருந்தது. எனவே தனியார்துறைக்கு ஊக்க மளிக்காததோடு, பொதுத்துறையில் இழப்பையும் தேடித் தந்தது. எனவே எஃகின் விலையை உயர்த்த வேண்டியது மிகவும் இன்றி யமையாத ஒன்றாகும்.

முடிவுரை

தற்போது இரும்பு உற்பத்தியின் அளவு போதுமானதாக அமையாததற்கான காரணங்களைக் கண்டோம். இந் நாட்டின் வளர்ச்சிக்கு கமி முக்கிய தொழில் நலிந்தால், நிச்சயமாக நாட்டின் பொருளாதாரமும் நலிவு காணும். தலா உற்பத்தி இவ்வளவு எஃகு என அளவிட்டால் அதனைக் கொண்டு இந் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறியலாம். அதன்படி நம் நாட்டில் தலா 12 பவுண்டும், இங்கிலாந்தில் 630 பவுண்டும், அமெரிக்காவில் 1300 பவுண்டும் உற்பத்தி எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இதிலிருந்து தொழில் வளர்ச்சியில் நாம் எவ்வளவு பின் தங்கியுள்ளோம் என அறியலாம். இத் தொழிலின் வளர்ச்சி அரசுத்துறையில் எஃகுத் தேவையின் வளர்ச்சியளவைப் பொறுத் தது. எனவே அரசு தன்னுடைய திட்டங்களினால் எஃகுத் தேவையை வளர்க்கவும், அதே சமயத்தில் எஃகிற்கு ஒரு நியாய மான விலை உயர்வை அளிக்கவும் முன்வர வேண்டும். இது நம் ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றியைப் பொறுத்தது. சிறப்பு மற்றும் கலப்பு எஃகின் தேவை மிக அதிகமாக உள்ளது. இந் நிலையில்தான் ஐந்தாவது உருக்காலை தமிழ் நாட்டில், சேலத்தில் நிறுவப்பட உள்ளது. இதற்கான முன்னோடி வேலைகள் நடை

பெற்று வருகின்றன. இவ்வாலையும், இதற்குப் பின்னர் புதிதாக நிறுவப்பட இருக்கும் ஆலைகளும் சிறப்பு மற்றும் கலப்பு உலோக உற்பத்தியில் ஈடுபட்டால் நாட்டின் தேவை நன்கு நிறைவு பெற வாய்ப்புள்ளது. மற்ற தொழில்களைப் போலல்லாது, இத் தொழிலுக்கு மிகவும் அதிகமான மூலதனம் தேவைப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் இத் தொழில் தனியார்துறையில் வளர வழியில்லை. மேலும் சமதர்ம சமுதாயத்தை அமைக்கப் பாடுபட்டு வரும் நமது அரசு இனியும் தனியார்துறைகளில் பெரும் முதலீடு உடைய தொழில்களை நடத்த இசைவு வழங்காது என்றே நம்பலாம். தற்போதுள்ள ஆலைகள் திறம்பட, தம் முழு உற்பத்திச் சக்தியுடன் இயங்குமேயானல் இன்றைய பொருளாதார நிலையில் நம் நாட்டின் எஃகுத் தேவையினை இனிது நிறைவு செய்யும்.

(4) நிலக்கரித் தொழில்

இந்திய நிலக்கரிச் சுரங்கத் தொழில் 1774 முதலே இயங்கி வருகின்றது. ஆரம்பத்தில் இத் தொழிலில் ஈடுபட்டோருக்கு அவ்வளவாக ஆர்வமில்லை. இதற்குக் காரணம், இந்தியாவில் சுரங்கத்திலிருந்து நிலக்கரியை எடுப்பதைக் காட்டிலும், இங்கிலாந்திலிருந்து கடல் வழியாக நிலக்கரியைக் கொணர்வது மலிவானதாக இருந்தது. 1914-ல் ராணிகஞ்ச் என்னுமிடத்தில் நிலக்கரி வெட்டப்பட்டது. நிலக்கரி வயல்களைப் பற்றிய புவி இயல் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. 1854ஆம் ஆண்டில் இரயில்வே பாதை அமைக்கப்பட்ட பிறகு நிலக்கரியின் தேவை அதிகரித்தது. புதிய ரகங்கள் தோண்டப்பட்டன. பெரும்பாலான சுரங்கங்கள் கூட்டு வணிகக் கழகங்களினல் நடத்தப்பட்டு வந்தன. 1868ஆம் ஆண்டு நிலக்கரி உற்பத்தி 5 லட்சம் டன்களாக இருந்தது, 1880-ல் 10 லட்சம் டன்களாகவும் 1890 ஆம் ஆண்டு 22 லட்சம் டன்களாகவும், மேலும் 1900ஆம் ஆண்டு 61 லட்சம் டன்களாகவும் உயர்ந்தது.

இத் தொழிலின் குறிப்பிடத் தக்க வளர்ச்சி, 1930 முதல் 1955 வரையிலான 25 வருடங்களில்தான். இப் பருவத்தில் 24 மில்லியன் டன்களாக இருந்த நிலக்கரி உற்பத்தி 38 மில்லியன் டன்களை எட்டியது. 1962ஆம் ஆண்டு நிலக்கரி உற்பத்தியின் அளவு 54 மில்லியன் டன்களாகும். இதனுள் 45 மில்லியன் டன்கள் தனியார் துறையிலிருந்தும், 15 மில்லியன் டன்கள் பொதுத் துறையிலிருந்தும் கிடைத்தன. இத் துரித வளர்ச்சிக்குக் காரணம் இரயில்வேக்களின் விரிவும் ஆலைத் தொழில்களின் வளர்ச்சியுமாகும். திருத்தப்பட்ட நவீன இயந்திரங்களும், நிலக்

கரியை வெட்டியெடுக்க உதவியமையால் இவ்வளர்ச்சி ஏற்பட்டது எனலாம். நிலக்கரி எடுக்கப்படும் உலக நாடுகளின் வரிசையில் இந்தியா 7வது இடம் பெற்றுள்ளது. தோண்டி எடுக்கப்படும் கரியில் மூன்றில் ஒரு பாகம் இரயில்வேயால் பயன்படுத்தப்படுகிறது. வெட்டியெடுக்கப்படும் மொத்தக் கரியில் 15 சதவீதத்தை இரும்பு, எஃகுத் தொழில் பயன்படுத்திக் கொள்கிறது. ஏறத்தாழ 3.5 மில்லியன் டன் வீடுகளில் எரிபொருளாக உபயோகப்படுத்தப் படுகிறது. நம் நாட்டு மக்கள்தொகைப் பெருக்கத்தைப் பார்க்கையில் இது மிகவும் குறைவே. பல்வேறு தொழில்களின் கரி நுகர்ச்சி கீழ்க்கண்டவாறு உள்ளது.

அட்டவணை 30

தொழில்களின் கரி நுகர்ச்சி சதவிகிதம்

தொழில்	சதவிகிதம்
இரயில்வேக்கள்	36
இரும்பு, எஃகுத் தொழில்	15
மின்சாரத் தொழில்கள்	16
சிமிண்ட் தொழில்	5
செங்கல் சூளைத் தொழில்	5
இரசாயனத் தொழில்	3
ஏற்றுமதி	1

இத்தொழிலின் குறைகள்

மிகவும் விரைந்து வளர்ந்த இத்தொழில் தற்போது உற்பத்திச் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் 60 மில்லியன் டன்கள் நிலக்கரி வெட்டி எடுப்பது என இலக்கு வைக்கப்பட்டது, ஓரளவிற்கு இவ்விலக்கை 1961ஆம் ஆண்டு எட்டிய போதும் திட்ட முடிவில் உற்பத்தி 54 மில்லியன் டன்கள்தான். 6 மில்லியன் டன்கள் குறைவாகத்தான் நிலக்கரி எடுக்கப்பட்டது இதற்கான காரணம் நிலக்கரி உபயோகத்தின் அளவு குறைந்ததே. தேவை குறையவே அளிப்பும் குறைந்தது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டக் காலத்

திற்கு 90 மில்லியன் டன்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆயினும் 1965–66–ல் 68 மில்லியன் டன்கள் தான் உற்பத்தியாகியது. நான்காவது திட்ட முடிவில் 106 மில்லியன் டன்கள் நிலக்கரி உற்பத்தி செய்வது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலக்கை அடைய முடியாவண்ணம் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. நிலக்கரியைப் பெருமளவில் உபயோகித்து வந்த இரயில்வேயும் மற்ற போக்குவரத்துச் சாதனங்களும், தற்போது மின்சாரம், டீசல், பெட்ரோல் ஆகியவற்றை உபயோகிக்கத் தொடங்கி விட்டன. ஏற்றுமதியாகும் நிலக்கரியின் அளவும் குறைந்து விட்டது.

இத் தொழிலின் வளர்ச்சிப் போக்கைக் கீழ் வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 31

நிலக்கரி உற்பத்தி (லட்சம் டன்களில்)

ஆண்டு	உற்பத்தி	ஆண்டு	உற்பத்தி
1920	179.0	1960–61	555
1930	238.0	1961–62	552
1940	250.5	1963–64	663
1950	320.0	1965–66	68/
1955	390.0		

இத்தொழிலின் மிகப் பெருங்குறை நிலக்கரி உற்பத்திச் செலவில் அடங்கியுள்ளது. உற்பத்திச் செலவு அதிகரிக்குமாயின் பிற தொழில்களின் நிலக்கரி நுகர்ச்சி அளவு குறைந்துவிடும். இதற்காக வேண்டி உற்பத்திச் செலவைக் குறைக்கத் தொழிலாளர்களின் கூலி மிகவும் குறைவாக வைக்கப்பட்டுள்ளது. முக்கிய நிலக்கரி வயல்களில் வேலை பார்க்கும் ஒரு தொழிலாளரின் கூலி ஐந்து நாள் வேலை வாரத்திற்கு ஐந்து ரூபாய் அளவில்தான் உள்ளது. அதாவது நாள் ஒன்றிற்கு ஏறத்தாழ ஒரு ரூபாய்தான். பயிற்சி பெறாத தொழிலாளர்களின் நிலைமை இதைவிட மோசமாக உள்ளது. இதற்குக் காரணம் தொழிலாளர்களிடையே பேரம் பேசும் சக்தி குறைந்து இருப்பதே. இது ஒருபுறமிருக்க நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் அடிக்கடி இடம் விட்டு

இடம் பெயர்ந்து செல்லக் கூடியவர்கள் என்பதையும். வேலை யில் நீடித்திருப்பதில்லை என்பதையும் காரணமாகக் கூறி அவர் களுக்கு முதுமைக் காலம், தளர்ச்சி நிலை ஆகிய சமயங்களில் கிடைக்கக்கூடிய நன்மைகளைக்கூட மறுத்து விடுகிறார்கள். தொழி லாளர் நட்ட ஈட்டுச் சட்டப்படியோ, மகப்பேறு நலச் சட்டப் படியோ குறிப்பாக, சிறிய சுரங்கங்களின் உரிமையாளர்கள் நடந்து கொள்வதில்லை. இதன் காரணமாகத் தொழிலாளர்களின் திறமைகுன்றியுள்ளது. அடிக்கடி வேலை நிறுத்தங்கள், கதவடை புகள் நிகழ்கின்றன. இவைகள் உற்பத்திச் செலவை அதிகரிக்கச் செய்கின்றன.

அதிகரித்து வரும் நிலக்கரி உற்பத்திச் செலவைக் கட்டுப் படுத்த வேண்டி அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரசால் நியமிக்கப்பட்ட நிலக்கரித் தொழில் 'செயற் குழு' 1951ஆம் ஆண்டு பின்வருவனவற்றைப் பரிந்துரைத்துள்ளது. (1) இயந்திர மயமாக்குதல்: திட்டமிட்டபடி பேரளவு உற்பத்தி யைப் பெறவும், விரைவில் தேவையான நிலக்கரியைப் பெறவும், நிலக்கரி வெட்டியெடுக்கும் பணியை இயந்திர மயமாக்குதலை உடனடியாக செயற்படுத்தல் வேண்டும். ஆயினும் குறைந்த அளவாக மாதத்திற்கு 10 ஆயிரம் டன்கள் நிலக்கரி வெட்டியெடுக் கப்படும் சுரங்கங்களில்தான் இது இயலுமாதலின், சிறிய நிலக் கரிச் சுரங்கங்களின் உரிமைகளை ஒன்றுபடுத்தல் வேண்டும். நிலக்கரிச் சுரங்க இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் தொழில் இந்தியாவில் வளரச் செய்யவேண்டும். (2) உலோகத் தொழிற் சாலைக்குறிய நிலக்கரியை பாதுகாத்தல்: உலோக உருக்கிற்குத் தேவையான தரமுடைய நிலக்கரி மிகவும் குறைவாகக் கிடைப்ப தால் இத்தகைய நிலக்கரியைச் சேமிக்க வேண்டி 1949 ஆம் ஆண்டு உலோக தொழிற்சாலைக்குரிய நிலக்கரிச் சேமிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் குழுவின் பரிந்துரையின்படி 1952ஆம் ஆண்டு 'நிலக்கரிச் சுரங்க' (சேமிப்பு மற்றும் பாது காப்பு) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி உலோக உருக் கிற்குரிய நிலக்கரியை வெட்டியெடுப்பதைத் தடுக்க அரசிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (3) வட்டார உற்பத்தி: நாட்டின் பல பகுதிகளிலும் கிடைக்கும் எல்லா நிலக்கரியையும் வெட்டியெடுத்து அப்பகுதிகளிலேயே பங்கீடு செய்வதன் மூலம் போக்குவரத்துச் செலவினைக் குறைக்க இயலும்.

நிலக்கரிச் சுரங்க இயந்திரங்கள் உற்பத்தி செய்ய வெளி நாட்டு உதவியுடன் 'துர்காபூர்' அருகில் ஒரு தொழிற்சாலை துவங்கப்பட்டுள்ளது. தனியார்துறையில் உள்ள சுரங்கங்கள்

தங்களுக்குத் தேவையான இயந்திரங்கள், உதிரி உறுப்புகள் ஆகியன இறக்குமதி செய்து கொள்ள 'உலக வங்கி' சில ஆண்டு களுக்கு முன்னர் சுமார் 35 மில்லியன் அன்னியச் செலாவணி ஒதுக்கியுள்ளது. மிகவும் குறைந்த நிலையில் இருக்கும் நிலக்கரி விலையையும் உயர்த்த வேண்டி ஒரு குழு பரிந்துரைத்துள்ளது. இக் குழுவின் பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1962ஆம் ஆண்டு அரசு நிலக்கரியின் நிர்ணயித்த விலையை உயர்த்தியுள்ளது. இத்துடன் நில்லாது சுரங்கங்களை புதுமைப்படுத்த அரசு இயன்ற முயற்சிகளை மேற்கொள்ளுமாயின் இத்தொழிலுக்கு அதுவே பேருதவியாகும். நிலக்கரியை உபயோகிக்கும் ஏனைய தொழில் களும் இதனால் பயனுறும் என்பதிலும் சுரங்கத் தொழிலாளர் நலன் வளம்பெறும் என்பதிலும் ஐயமில்லை.

(5) சிமெண்டுத் தொழில்
(Cement Industry)

நம் நாட்டின் முக்கியமான ஆதாரத் தொழில்களில் சிமிண்ட் தொழிலும் ஒன்று. 1940ஆம் ஆண்டிலேயே இதற்கு என சிறு தொழிற்சாலை நிறுவப்பட்ட போதிலும், இத்தொழில் 1912க்கு பின்புதான் உண்மையிலேயே வேரூன்றியது. எத்தகைய தொழிற் காப்பையும் பெறுமலே போரிடைக் காலத்தில் தானகவே உயர்ந்து ஓங்கி நல்ல நிலையை அடைந்துள்ளது. இத்தொழில் 58,000 நபர்களுக்கு வேலை அளித்து, சுமார் ரூ. 110 கோடி மதிப்பிற்கு உற்பத்தி செய்கிறது. நேரடியான வரிகளின் மூலம் இத்தொழில் அரசிற்கு, ஆண்டிற்கு ரூ. 28 கோடியை அளிக் கின்றது. தேசிய வருமானத்திற்கு இத்தொழிலின் அளிப்பு ஆண்டிற்கு சற்றேறக்குறைய ரூ. 45 கோடிகளாகும்.

வளர்ச்சி வரலாறு

1914–ல் வெளிநாடுகளில் இருந்து 1,50,000 டன் சிமிண்ட் இறக்குமதியாக்கப்பட்டது. ஆனல் 1938–39–ல் 29 ஆயிரம் டன் மட்டுமே இறக்குமதியாயிற்று. உற்பத்தி பெருகப்பெருக உள் நாட்டுப் போட்டி அதிகரித்தது. எனவே, பல சிமிண்ட் கம்பெனிகள் 'அசோசியேட்டட் சிமிண்டுக் கம்பெனி லிமிடெட்' என்ற பெய ருடன் ஓர் அமைப்பில் இணைந்தன. இந்தப் புகழ் பெற்ற தொழிலின் வரலாற்றிலும், வளர்ச்சியிலும் இது முக்கியமான தொரு நிகழ்ச்சியாகும். பின்னர் ஏற்பட்ட நிறுவனங்களில் மிகப் பெரியதும், குறிப்பிடத்தக்கதுமான ஒன்று 'டால்மியாசிமிண்டுக் கம்பெனி'. இவ்வணிகக் கழகத்தின் துரித வளர்ச்சியால் மிகுதி யான உற்பத்தியும் கடும் போட்டியும் ஏற்பட்டன. இரண்டாவது

ஐந்தாண்டு திட்டக்கால முடிவில் சிமிண்ட் உற்பத்தி 1937ஆம் ஆண்டினைவிட எண்மடங்கு உயர்ந்தது. இதற்குக் காரணம் ஆலைகளின் உற்பத்தி சக்தி உயர்வே. உற்பத்தி சக்தி 15 லட்சம் டன்களாக இருந்தது 94 லட்சம் டன்களாக உயர்ந்தது. அவ்வாறே உற்பத்தியும் ஐந்தாண்டு திட்ட முடிவில் 11 லட்சம் டன்னிலிருந்து 80 லட்சம் டன்களாக உயர்ந்தது. இவ்வாறே மூன்ருவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் ஆலைகளின் உற்பத்தி சக்தியை முழுதும் பயன்படுத்தியமையால் பெரிதும் உயர்ந்தது எனலாம். இத் தொழில் த[illegible]பொன் விழாவை 1965ஆம் ஆண்டில் கொண்டாடிய[illegible]வது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இதன் வளர்ச்[illegible] அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் தேவைகளும், பொதுமக்களின் தேவைகளும் உயர்ந்து கொண்டே செல்வதால் இத்தொழிலிற்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு.

அட்டவணை 32

இத் தொழிலின் வளர்ச்சிப் பாங்கினை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

ஆண்டு	ஆலைகளின் மொத்த உற்பத்தி சக்தி லட்சம் டன்களில்	ஆலைகளின் மொத்த உற்பத்தி
1914	0.1	0.1
1937	15.0	11.0
1946	26.0	20.0
1951	33.0	27.0
1955–56	49.0	46.0
1960–61	94.0	79.0
1965–66	116.0	108.0
1968–69	154.0	124.0
1969–70	165.0	136.0

குறைநிசயங்களும் குறைகளும்

இந்தியாவின் ஏனைய தொழில்களைக் காட்டிலும் இத்தொழில் தான், 'தொழில் உடைமைக்குவிப்பு' (Centralizalion of ownership) அதிகமாக உள்ளது. மொத்தமுள்ள 29 சிமிண்ட் ஆலைகளில் 13 ஆலைகள் 'ஏ.சி.சி.' குழுவினைச் சார்ந்ததாகவும் 6 ஆலைகள் 'டால்மியா' குழுவினைச் சார்ந்ததாகவும் உள்ளன. இவ்வுரிமைக் குவிப்பின் மூலம் பொருளாதார நிர்வாக இணைப்புக்களை ஆலை களிடையே ஏற்படுத்தி ஒவ்வொரு ஆலையும் சிறப்புற இயங்கச் செய்ய இயலுகின்றது. 30லிருந்து 60 ஆயிரம் டன்கள் வரை உற்பத்தி சக்தி கொண்டதாகத் தொடங்கப்பெற்ற ஆலைகள் இன்று 70லிருந்து 200 ஆயிரம் டன்கள் உற்பத்தி சக்தி கொண்ட தாக வளர்ச்சி அடைந்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் உரிமைக் குவிப்பே.

சிமிண்ட் ஆலைகளின் வளர்ச்சியின் காரணமாக வெளிப் பாட்டின் ஒவ்வொரு அளவுக்கும் (Unit) தேவையான முதலின் அளவும் அதிகரித்து வருகிறது. 1937–45–ல் முதல் வெளிப்பாடு விகிதம் (Capital-output ratio) 2.8 ஆக இருந்தது, தற்போது இவ் விகிதம் 3.8 ஆக உயர்ந்துள்ளது. ஆயினும் இங்கிலாந்தைக் காட்டி லும் இந்தியாவில் இத் தொழிலின் மீது இடும் முதலீடு குறைவு தான். இங்கிலாந்தில் தலா தொழிலாளியின் 'நிலை முதல்' ரூ. 41 ஆயிரம் ஆகும். இந்தியாவிலேயே இத்தொகை ரூ. 25 ஆயிரம் தான்.

இத்தொழிலில் உரிமைக் குவிப்பு இருந்தபோதிலும் ஆலை களைப் பொறுத்தவரையில் இந்தியாவெங்கும் (அஸ்ஸாம், மேற்கு வங்காளம், காஷ்மீர் தவிர) பரவி அமைந்துள்ளன. இதற்குக் காரணம் போக்குவரத்துச் செலவைக் குறைக்கவேண்டிய கச்சாப் பொருள் கிடைக்கு மிடத்திலேயே கச்சாப்பொருளான சுண்ணாம்புக் கற்கள் நாடெங்கிலும் கிடைப்பதால் ஆலைகளைப் பரவ அமைப்பதில் அல்லல் ஏதுமில்லை.

இத்தொழிலிலுள்ள முக்கியமான சிக்கல், இத்தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களைப் பெறுவதில்தான் உள்ளது. குறைந்த அன்னியச் செலாவணி இருப்பின் காரணமாக, அரசு இயந்திர இறக்குமதியை எவ்வளவு குறைக்க இயலுமோ, அவ்வளவு குறைக்க ஆவலாக உள்ளது. இச்சிக்கலைப் போக்க வேண்டி உள்நாட்டிலேயே ஆறு புதிய வணிகக் கழகங்கள் சிமெண்ட் உற்பத்தி இயந்திரங்களை உற்பத்தி செய்யத் தொடங்கி யுள்ளன. உள்நாட்டு இயந்திரங்களின் விலை, இறக்குமதியாகும்

இயந்திரங்களை விட அதிகமாக உள்ளது. எனவே, சிமிண்ட் உற்பத்தியாளர்கள் வெளிநாட்டு இயந்திரங்களையே விரும்புகின்றனர். சிமிண்ட் உற்பத்தியாளர்களை நிறைவடையச் செய்ய, இறக்குமதியை அனுமதித்தால், இயந்திர உற்பத்தியாளர்கள் அல்லலுறுவர். அவ்வாறின்றி இயந்திர உற்பத்தியாளர்களை அதிகரித்து இறக்குதிமதியைத் தவிர்ப்பின் சிமிண்டு உற்பத்தியாளர்கள் அல்லலுறுவர். எனவே இடைப்பட்ட ஒரு கொள்கையாக இயந்திர உதிரிகளை மட்டும் இறக்குமதி செய்யலாம் என்று அரசு முடிவெடுத்துள்ளது.

இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் சிமிண்ட் இறக்குமதிகள் நின்றுபோயின. இராணுவத்திற்காக அதிக அளவு சிமிண்டுத் தேவைப்பட்டது. 1942–ல் அரசாங்கம் கட்டுப்பாட்டை விதித்து நாடு முழுவதும் ஒரேமாதிரி அடிப்படையில் விலையை நிர்ணயித்தது. உற்பத்தியில் 90 சதவிகிதம் போர்க் காரியங்களுக்கு ஒதுக்கப்பட்டது. எஞ்சிய 10 சதமே பொதுமக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. போர் முடிவுற்ற பின்னர் பொதுமக்களுக்குரிய கோட்டா அளவு உயர்த்தப்பட்டது. 1951–ல் 40 சதமாகச் குறைந்த பொதுத்துறை நுகர்ச்சி, 1956–ல் 80 சதமாக உயர்ந்தது. அரசே முக்கியமான வாங்குபவராக இருந்தமையால் சிமிண்ட் விலையும் கட்டுப்பாடு செய்யப்பட்டது. விலைக் கட்டுப்பாட்டினுல் முதலீட்டிற்குத் தகுந்த அளவு ஆலைகளுக்கு இலாபம் கிடைக்கவில்லை. இந்திய மத்திய வங்கியின் கணக்கின்படி 1961–63–ல் இலாப விகிதம் 9.4 சதமே. ஆழ்ந்த முதலீடு உடைய(Capital intensive) ஏனைய தொழில்களுடன் ஒப்பிடுங்கால், இந்த இலாப விகிதம் மிகவும் குறைவே. சந்தைக் கட்டுப்பாடும் இத்தொழிலின் மேல் முதலீடு வரை சுருக்கியது. இக்குறைகளை உணர்ந்து 1968ஆம் ஆண்டு சிமிண்ட் கட்டுப்பாட்டை அரசு நீக்கியுள்ளது.

மூன்றுவதாக, பங்கீட்டு முறையில் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படாமையால் நுகர்வோருக்கு பெருந்துன்பம் நேரிட்டது. சிமிண்ட் கிடைக்காத சூழ்நிலையினுல் நுகர்வோர் தங்களுடைய உண்மையான தேவைக்கு அதிகமாகவே தேவைகளைத் தெரிவித்தனர். இதன் காரணமாகப் பற்றுக்குறையை மிகுதிப்படுத்திக் கட்டுப்பாட்டு கருப்புச் சந்தைகள் வளரத் தொடங்கின. எனவேதான் 1968–ல் சிமிண்டின்மேல் உள்ள பங்கீட்டுக் கட்டுப்பாடும், விலைக் கட்டுப்பாடும் நீக்கப்பட்டன. அரசு தனக்குத் தேவையான சிமிண்டை பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்ட விலையில் வாங்கிக் கொள்கிறது. இந்தப் புதிய முறையினுல் இத்தொழிலின்மேல் முதலீடு அதிகரிக்கச்

செய்யும் என்று நம்பப்படுகிறது. இந்தப் புதிய வழியினுல் கறுப்புச் சந்தையும் ஒழிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

தற்போதைய சிமிண்டின் தலா நுகர்ச்சி 22 கிலோ கிராம்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் குறைவான ஒன்ருகும்.

அட்டவணை 33

சிமிண்டின் தலா நபர் நுகர்ச்சி (1966)

நாடு	தலா நபர் நுகர்ச்சி (கிலோ கிராம்களில்)
சுவிட்சர்லாந்து	715
மேற்கு ஜெர்மனி	563
பிரான்ஸ்	457
இத்தாலி	426
ஜப்பான்	385
அமெரிக்கா	342
இங்கிலாந்து	305
இந்தியா	22

தற்போது சிமிண்ட்டின் தேவை வளர்ந்து வருகிறது. இதற்குக் காரணம் ஒரு பக்கம் விவசாயத் துறையின் வளர்ச்சியும் மறுபக்கம் தொழில்துறையின் வளர்ச்சியும் ஆகும். நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதனுல் சிமிண்டின் தேவையும் அதிகரிக்கும். நீண்டகாலத் தேவை, வளர்ச்சியை முன்னதாகக் கணக்கிட்டு அதற்கு ஏற்றவாறு ஆலைகளின் சிமிண்டின் உற்பத்தி சக்தியை வளரச் செய்வது நாட்டுப் பொருளாதாரத்திற்கு நலம் பயக்கும்.

5. தொழில் வளர்ச்சி (2)

(1) பருத்தி நெசவுத் தொழில்

முன்னுரை

இந்தியாவில் கட்டமைப்புடைய தொழில்களில் மிகப் பழமை யானதும், நன்கு நிலைத்து நிற்பதும் பருத்தி நெசவுத்தொழில் ஆகும். இந்தியாவில் பருத்தி நெசவுத்தொழில் பெரும்பான்மை உற்பத்தி முறையில் நடக்கிறது. இத்தொழில், தனது நூற்றாண்டு விழாவைப் பதினேழு ஆண்டுகட்கு முன்னரே (1954) கொண்டாடியது எனில், இதன் சிறப்பை உணரலாம். இத் தொழில் தற்போது ரூபாய் 900 கோடியைச் சொத்தாகவும். ரூ. 165 கோடி செலுத்தப்பட்ட மூலதனமாகவும் (Paid-up Capital) கொண்டுள்ளது. தற்போது இத் தொழிலைச் சேர்ந்த 635 ஆலைகள் 17 மில்லியன் கதிர்களையும், 2 லட்சம் தறிகளையும் கொண்டுள்ளன. இவ்வாலைகள் ரூ. 520 கோடி மதிப்புள்ள துணிகளையும் ரூ 260 கோடி மதிப்புள்ள நூல்களையும் உற்பத்தி செய்கின்றன. இவ்வாலைகள் செலவழித்த பஞ்சின் மதிப்பு ரூ. 418 கோடியாகவும் அளித்த ஊதிய மதிப்பு ரூ. 200 கோடி யாகவும் உள்ளது. இவ்வாலைகளில் வேலை செய்வோர்களின் எண்ணிக்கை 9 லட்சத்திற்கும் மேற்பட்டதாகும். ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் இந்தியா இத் தொழிலில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது.

தொழிற் செறிவு

இந்தியாவின் தொன்மைப் பஞ்சாலைத் தொழிலுக்குச் சிறப்பு டைய வரலாற்றுப் பின்னணி உண்டு. பண்டைக் காலங்களில் இருந்தே மேலை நாட்டவரின் நெஞ்சைக் கவர்ந்த பல பொருள் களில் நமது பருத்தி ஆடையும் ஒன்றாகும். சிறந்த தரமுடைய

இழைகளைக்கொண்டு கண் கவரும் மென் துகில்கள் இந்தியாவில் தான் முதன் முதலில் நெய்யப் பெற்றன. 1854ஆம் ஆண்டு பம்பாயில் முதன் முதலாக ஒரு நெசவாலை நிறுவப்பட்டது. இதுவே முதன்முதலாக இந்தியாவில் பருத்தி இயந்திர நெசவுக்கு ஆரம்ப காலம் எனலாம். மூலதனக் கடன் வசதிகளும், ஈரப்பசையுள்ள தட்பவெப்ப நிலையையும் ஒட்டி இத்தொழிலில் பம்பாயைப் புகலிடமாகக்கொண்டது. இயந்திர சாதனங்களை எளிதில் இறக்குமதி செய்யவும், பலதரப்பட்ட தேவைப்பொருள்களைக் கொண்டு வரவும், நிலக்கரி பெறவும் வசதியாகப் பம்பாய் அமைந்திருந்தது. ஆயினும், நாட்டு மூலதனக்காரர்கள் அதிகப்படியாக முன்வரவில்லை யாதலாலும், சணல் நெசவுத்தொழில் மிகவும் செழுமையாக வளர்ச்சி பெற்றதாலும் 1905ஆம் ஆண்டு வரை கல்கத்தா வட்டாரத்தில் பருத்தி நெசவு ஆலைகள் தோன்றவில்லை. 1877முதல் உள்நாட்டுப் பகுதியான நாகபுரி, ஷோலாப்பூர் முதலிய இடங்களில் பருத்தி நெசவு ஆலைகள் ஏற்பட்டன. தென்னாட்டில் பக்கிங்ஹாம் & கர்னாடிக் மில்கள் ஏகபோக உரிமையான முறையில் போட்டியின்றி வளர்ந்து வந்தன. ஆயினும், பின்னர் மதுரை, கோவை முதலிய இடங்களிலும் நெசவாலைகள் தோன்றின. கோவை ஆலைகள் பைகாரா நீர் வீழ்ச்சியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. அவ்வாறே மண்டியில் மின்சார உற்பத்தி ஆரம்பித்த பின்னர் தான் அமிர்தசரசில் நெசவாலைகள் உண்டாயின.

இவ் உள்நாட்டுப் பகுதிகளில் இத் தொழில் முன்னேற்றமடையப் பின்வருவனற்றைக் காரணங்களாகக் கூறலாம். 1. உற்பத்திக்கான கச்சாப்பொருள்கள் மிகவும் மலிந்து கிடத்தல், 2. எண்ணற்ற தொழிலாளர்கள் கிடைத்தல், 3. உள்நாட்டுச் சந்தை. சுதேசி இயக்கத்தின் பின்னர் இந்நாட்டில் உற்பத்தியாகும் நூல் அனைத்தும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாவதில்லை. அவை உள்நாட்டிலேயே பயன்பெற்று விடுகின்றன.

வளர்ச்சி வரலாறு

திரு. புச்சனன் கூறுவது போலப் பஞ்சாலைத்தொழில் என்பது இந்தியாவின் முன்னாள் பெருமைக்கு முடிவாகத் திகழ்ந்தது. இடைக்காலத்தில் எவ்வளவு இன்னலுற்றாலும், எதிர்கால நம்பிக்கையாக இயங்கப் போவதும் இதுதான். ஆரம்ப காலத்தில் நமது பருத்தி நெசவாலைத் தொழிலைப் பொறுத்த வரையில், லங்காஷயரின் ஆதிக்கம் ஓரளவு மிகுதியாகவே உணரப் பட்டது. 1895ஆம் ஆண்டில் எல்லாப் பருத்தி ஆடைகளுக்கும், 20-ஆம் எண்ணுக்கு மேற்பட்ட எல்லா நூல்களுக்கும் விதிக்கப்

பட்டிருந்த 5 சதவிகித இறக்குமதித் தீர்வையுடன், இந்தியாவில் $3\frac{1}{2}$ சதவீத ஈடுசெய் ஆயத்தீர்வையும் (Counter Vailing Excise Duty) அவற்றிற்கு விதிக்கப் பெற்றது. 1925 டிசம்பரில் இத்தீர்வை நீக்கப்பட்டது.

இந்திய பஞ்சாலைத் தொழிலை வளர்ச்சியுறச் செய்வதில் இந்திய அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே கவனம் செலுத்தி வந்தது. 1917-ல் இந்திய அரசாங்கம் ஒரு குழுவை நியமித்து, இங்கேயே நீண்ட இழைப் பருத்தியைப் பயிரிடுவதற்கு உரிய வாய்ப்புகளை ஆராய்ந்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டது. குழு பத்தாண்டுகளில் வாணிப அளவில் விளைச்சலைப் பெருக்கு வதற்கான வாய்ப்புகளைத் தெரிவித்தது. 1926-ல் மொத்த உற்பத்தியில் 6 சதவித அளவிற்கு நீண்ட இழைப் பருத்திகளை விளைவிக்க முடிந்தது. இந்திய நூற்பாலைகள் குறிப்பிட்ட அளவில், சற்று நீண்ட இழைப் பருத்தியை எகிப்திலிருந்தும், உகாண்டாவிலிருந்தும் இறக்குமதி செய்து கொண்டன. பிரி வினைக்குப் பின்னர் ஏற்பட்ட கட்டாய நிலை காரணமாக, சமீப காலங்களில் நீண்ட இழைப் பருத்தி விளைச்சலில் ஓரளவு குறிப் பிடத்தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1954-55-ல் மொத்தப் பருத்தி விளைச்சல் நிலங்களில், 34 சதவிதத்தில் நீண்ட இழைப் பருத்தி பயிரிடப் பெற்றது. 1947-48-ல் மொத்தப் பருத்தி விளைச்சல் நிலங்களின் பரப்பு 10.66 மில்லியன் ஏக்கர் களாக இருந்தது. தற்போது இப்பரப்பு சுமார் 20 மில்லியன் ஏக்கராக வளர்ந்துள்ளது. கச்சாப் பருத்தியின் உற்பத்தியும் 87 சதவீதம் அதிகரித்துள்ளது. போர்த் தொடக்கம், துணி உற் பத்தித் தொழிலுக்குப் பெருக்கம் அளித்தமையால், 1944-ல் உச்ச நிலையை அடைந்தது. அதன் பின்னர் 1950 வரை உற்பத்தி குறைந் தது. நாடு சுதந்திரமடைந்த பின்னர் 1953 ஜூலையில் அரசாங்கம் துணிகளின் மீதான விலைகள், பகிர்வு ஆகிய கட்டுப் பாடுகளை நீக்கி விட்டபடியால் போட்டிச் சந்தையில் தனது பொருள்களை விற்பனை செய்யும் வாய்ப்பு இத் தொழிலுக்கும் ஏற்பட்டது. தற்போது இத் தொழிலுக்கு உள்நாட்டிலேயே மிகப் பரந்த சந்தை வாய்ப்புகள் உள்ளன. ஆயினும் வேறு பல இடர்ப்பாடுகள் இத்தொழிலின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளன. அவ்விடர்ப்பாடுகளைப்பற்றி ஆராய்வது நலம். பின்வரும் அட்டவணைகள் இந்திய பஞ்சாலைத் தொழிலின் வளர்ச்சியை எளிதில் உணரும் வகையாக அமைந்துள்ளன.

அட்டவணை 34

இந்தியாவில் பஞ்சாலைத் தொழில் வளர்ச்சி

ஜனவரி முதல் தேதி இருந்த நிலை	ஆலைகளின் எண்ணிக்கை	நிறுவப்பட்ட கதிர்கள் (மிலியன்களில்)
1948	356	10.1
1951	378	11.0
1956	412	12.1
1961	479	13.7
1966	575	16.1
1968	635	17.1

அட்டவணை 35

துணியின் தலா நபர் கிடைப்பு (Per capita availablity of Cloth)
(மீட்டர்களில்)

ஆண்டு	பருத்தித் துணி	செயற்கை இழை ஆடைகள்	மொத்தம்
1951	10.99	—	10.99
1956	14.71	—	14.71
1961	14.74	1.15	15.89
1966	13.78	1.63	15.41
1967*	13.37	1.72	15.09

*உத்தேசமானது

பஞ்சாலைத் தொழிலை எதிர்நோக்கியிருக்கும் சிக்கல்கள்

முதலாவதாக மாறி வரும் தேவைக்கேற்ப (changing demand pattern) உற்பத்தியை விருத்தி செய்யும் சிக்கல். இரண்டாவது

திட்டக் காலத்தில் உற்பத்தி அமைப்பில் சில மாறுதல்கள் நிகழ்ந்தன. குட்டை இழைப் பருத்தியிலான ஆடைகளின் உற்பத்தியில் குறைவும், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நீண்ட இழைப் பருத்தியிலான ஆடைகளின் உற்பத்தி அதிகரிப்புமே அம் மாறுதல்களாகும். மெல்லிய, பளபளப்பாக்கப்பட்ட ஆடைகளின் நுகர்ச்சி அதிகரித்து, முரட்டு மற்றும் நடுத்தரத் துணியின் நுகர்ச்சி குறைய ஆரம்பித்தது. உற்பத்தியைப் பொறுத்த வரையில் தற்போது இரண்டு பெரும் பிரச்சினைகள் உள்ளன; ஒன்று, இயந்திரங்களின் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்திச் சக்திக்குள்ளடங்குமாறு எவ்வாறு உற்பத்தியைப் பெருக்குவது? இரண்டு, உற்பத்தி முறையில் உள்ள மாறுதல்களை எவ்வாறு நிறைவு செய்வது? திட்டக் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்திச் சக்திக்குள் ஓரளவு உற்பத்தியை அதிகரிக்க வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாவது சிக்கல், நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப எவ்வாறு உற்பத்தி முறையை (pattern of production) எவ்வாறு மாறுதல் செய்வது என்பதேயாகும். தற்போது கலப்பு இழை ஆடைகளின் (Mixed fabrics) நுகர்ச்சி அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. எனவே நெசவாலைத் தொழில், அதன் உற்பத்தி முறைகளைத் தேவையின் மாறுதல்களுக்கேற்ப மாற்றிக்கொள்ள, செயற்கை இழைகளை உள்நாட்டிலேயே கிடைக்கச் செய்யவேண்டும்.

மூன்றாவது சிக்கல், உலகச் சந்தையில் இந்திய நெசவுத் துணிகளுக்கு உள்ள போட்டியாகும். இப் போட்டி அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றது. விரிந்த உற்பத்திச் செலவு காரணமாக, உலகச் சந்தையில் இந்தியத் துணிகள் மிகவும் அதிகமான விலைகொண்டதாக உள்ளது. 1957ஆம் ஆண்டு இந்தியாவின் ஏற்றுமதி 881 மில்லியன் சதுர கெஜங்களாக அதாவது மொத்த நாடுகளின் ஏற்றுமதியில் 14.8 சதமாக இருக்கிறது. இது 1959–ல் 850 மில்லியன் சதுர கெஜங்களாகவும் (14.2%), 1960-ல் 723 மில்லியன் சதுர கெஜங்களாகவும் (உலக நாடுகளின் மொத்த ஏற்றுமதியில் 10 சதம்) குறைந்து கொண்டே வந்துள்ளது. நம்முடைய ஏற்றுமதியில் பெரும் அளவு பிரிட்டனுக்கும், அடுத்து அமெரிக்காவுக்கும் செல்கின்றது. நம்முடைய நடுநிலைக்கொள்கையில் மாறுதல்கள் ஏற்படும்போல் தோன்றினால் உடன் அமெரிக்காவின் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது. இப்போது பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியப் பருத்தி இறக்குமதிக்கு இதுவரை அளித்து வந்த சலுகைக் கோட்டாவை நிறுத்திவிட யோசித்து

வருகின்றது. அதனோடு தீர்வையும் அதிகரிக்க எண்ணியுள்ளது. அவ்வாறு அது முடிவெடுக்குமாயின், இந்தியத் துணி ஏற்றுமதி பெரிதும் பாதிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், இந்தியாவின் துணி ஏற்றுமதியில் சுமார் 50 சதம் பிரிட்டனுக்கே அனுப்பப்படுகிறது. நூல் ஏற்றுமதியின் அளவும் குறைந்து கொண்டே வந்துள்ளது. பருத்தி விலையில் உள்ள ஏற்றமும், தொழிலாளர் கூலி உயர்வும், இயந்திர உதிரிகளின் விலை ஏற்றமும், உற்பத்திச் செலவை அதிகரிப்பும் ஏற்றுமதிக் குறைவிற்குக் காரணம் எனக் கூறலாம். ஆனால், இப்போது மீண்டும் நிலைமை திருந்தி வருகின்றது. இறக்குமதியாகும் நூலின் அளவிற்கேற்ப, இந்திய நூலை ஏற்றுமதி செய்ய ஆலைகளை அரசு வற்புறுத்தி வருகின்றது. இதனால், 100ஆம் நெ. 80ஆம் நெம்பர் நூல்கள் உள்நாட்டு ஆலைகளுக்குப் போதுமான அளவில் கிடைப்பதில்லை. தென்னிந்தியாவில் தொழிலாளர் தகராறுகள் காரணமாகப் பல நூல் ஆலைகள் மூடப்பட்டுள்ளன. சீர்திருத்தங்கள் செய்யப்படாவிடில் மேலும் ஆலைகளை மூடநேரும் வாய்ப்பும் உள்ளது.

நான்காவதாக, ஏற்றுமதிச் சக்தியை அதிகரிக்க நெசவாலைகளைப் புதுமைப்படுத்தும் (Modernisation) அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆனால், தற்போது தங்கள் இயந்திரங்களைப் புதுப்பிக்கும் அளவிற்கு அல்லது புதிய உற்பத்தி முறைகளைக் கையாள்வதற்கு வேண்டிய அளவில் இந்திய ஆலைகளுக்கு இலாபம் கிட்டுவதில்லை. விற்பனையில் மொத்த இலாபத்தின் (Gross Profit) சதவீதம் 1960ஆம் ஆண்டில் 9.2 சதம் தான். ஆனால், பிற துறைகளைப் பார்க்குங்கால் இவ்வளவு கம்பளி, மற்றும் பட்டு நெசவாலைகளில் 22 4 சதமாகவும், இரப்பர் தொழிலில் 22.4 சதமாகவும், காப்பித் தோட்டத் தொழிலில் 28.4 சதமாகவும் உள்ளன. இதற்குக் காரணம் நெசவாலைத் தொழிலாளர் கூலி மிகவும் அதிகமாக உள்ளதும், இறக்குமதிப் பருத்தியின் அதிக விலையும், அரசு வரிகளும் ஆகும். பழைய இயந்திரங்களை நீக்கிவிட்டுப் புதிய தளவாடங்களைப் பொருத்திக் கொள்வதென்றால், இன்றுள்ள விலைவாசியில் ஒரு சில ஆலைகளிடமே போதுமான காப்புநிதி இருக்கின்றது. இதுவரை தனியார் துறையில் ஆலைத்தொழில் தேய்மானம், புதுப்பித்தல் முதலிய அவசிய தேவைகட்குக்கூடக் காப்புநிதியை ஒதுக்காமல் (தனது பங்குதாரர்களுக்கு மிகுதியான இலாப ஈவுகளை வழங்கி வந்ததனால்), ஊதாரித்தனமாகத் தனது வளங்களையெல்லாம் வீணாக்கி விட்டது. இப்போது இந்திய நெசவுத்தொழில் உடனடியாகப் புதுமைப்படுத்த அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆனால், அதற்குப் போதுமான நிதி தேவை. சுமார்

500 கோடி ரூபாய் இதற்குத் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொகையை அரசு ஆலைகளுக்கு நீண்ட காலக் கடனாகக் குறைந்த வட்டிக்கு அளிக்க வேண்டும். அரசு அதற்கான முயற்சி களை எடுத்துக் கொண்டுள்ளது.

இதனுடன் இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் வெளிச் செலாவணிப் பிரச்சனையும் உள்ளது. போதுமான வெளிச் செலாவணியும் இதற்கு அவசியம். கடைசியாக இதற்குத் தொழிலாளரின் ஒத்துழைப்பும் தேவை. வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் தொடர்ந்து நடக்குமேயானால் என்ன முயற்சி செய்தாலும் இத்தொழில் வளர்ச்சியடைய இயலாது.

ஐந்தாவதாக, போதுமான அளவிற்கு, தடையற்ற சக்தி அளிப்பு (Power Supply) இத் தொழிலுக்குத் தேவை. நிலக்கரிப் பற்றாக்குறை இத்தொழிலின் வளர்ச்சியை நாட்டின் மேற்கு, தெற்கு பகுதிகளில் பாதித்துள்ளது. சில ஆண்டுகள் முன்வரை மின்சக்திப் பற்றாக்குறை தென்னிந்தியாவில் இருந்து வந்தது. இப்போது மின்சக்திக் குறைவு ஏற்பட வாய்ப்பு இல்லை.

கடைசியாக, மூலப்பொருளின் தடையற்ற அளிப்பின்மையும் இத்தொழிலுக்குப் பிரச்சனையாக உள்ளது. மூலப்பொருளின் அளிப்பே நூலின் விலையினையும், துணியின் விலையினையும் தீர்மானிப்பதால், உறுதிப்படுத்துவதால் இதில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்வளவு முக்கியமான ஒரு தொழில் பல ஆண்டுகள் கடந்தும் தடையற்ற மூலப்பொருள் அளிப்புக் கிடைக்காது துன்புறுவது வியக்கத்தக்கது. மூலப் பொருள் அளிப்பில் பெரிய மாறுதல்கள் ஏதும் இல்லை. நாடு பிரிவினையானதன் பின், வளமான பகுதிகள் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டன. ஆயினும், பருத்தி விளையும் நிலங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. 1947–48–ல் 10.66 மில்லியன் ஏக்கராக் களில்தான் பருத்தி பயிரிடப்பட்டது. 1957–58-ல் இது 20 மில்லியன் ஏக்கராவை எட்டியது. அதன் பின்னர் பெருகவில்லை. கச்சாப் பருத்தியின் உற்பத்தி 1950–51-ல் 2.88 மில்லியன் பேல் களாகவும், 1964–65-ல் 5.41 மில்லியன் பேல்களாகவும் இருந்தன. இருந்தபோதிலும், பருத்தி விளைச்சலைப் பொறுத்தவரையில் ஏக்கர் இந்திய சராசரி விளைச்சல் உலகிலேயே மிகவும் குறைவான ஒன்றாகும். ஏக்கர் சராசரி விளைச்சல் 1950–51-ல் 78 பவுண்டாய் இருந்தது. 1960–61-ல் 112 பவுண்டாய் உயர்ந்தது. ஆனால், அமெரிக்க அராபிய நாடுகள், ரஷ்யா ஆகியவற்றில் விளைச்சல் 500லிருந்து 600 பவுண்டாக உள்ளது. எல்லாவற்றையும்விட உயர்ந்த தரமுடைய நீண்ட இழைப் பருத்தியின் விளைச்சல் இங்கு

மிகவும் குறைவு. நீண்ட இழைப் பருத்தியின் தேவை அதிகரித்து வருவதால் இதனைப் பெரிய அளவில் பயிரிடுதல் அவசியம். தன்னிறைவு பெறும் வரை அரசு இதற்கான முயற்சிகளைத் தீவிர மாகச் செய்தல் நலம்.

இப்பொழுது இந்தியப் பஞ்சாலைகள் மிகவும் நெருக்கடியில் உள்ளன. 1963–68க்குள் பஞ்சின் விலை 40 சதமும், கூலி சுமார் 60 சதமும் உயர்ந்துள்ளன. பஞ்சின் விலையும், கூலியும் மட்டும் மொத்த உற்பத்திச் செலவில் 75 சதமாக உள்ளது. மொத்த உற்பத்திச் செலவு சுமார் 40 சதம் உயர்ந்துள்ள பொழுது, துணி விலை சுமார் 18 சதம்தான் உயர்ந்துள்ளது. எனவே, இலாப மிச்சம் குறைந்துகொண்டே வருகின்றது. இதன் காரணமாக 1967–68-ல் மட்டும் 80 ஆலைகள் மூடப்பட்டு, நிறுவப்பட்ட உற்பத்திச் சக்தியில் 10 சதம் குறைந்து, 83,000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். உற்பத்திச் செலவின் உயர்வு, மிகவும் அதிக மான தீர்வை ஆகியவை பெரும் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளன. இத்தொழில் சிக்கல்களைப் போக்க, உடனடியாக ஆலைகளைப் புதுமைப்படுத்த, அரசு உதவுதல் வேண்டும். தீர்வை வரி குறைக்கப்படல் வேண்டும். கடைசியாகச் சராசரிப் பருத்தி விளைச்சல் அளவை அதிகரிக்கவும், மொத்த பருத்தி உற்பத்தியை அதிகரிக்கவும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். 1966 நாணய மதிப்புக்குறைப்பின் பின்னர், ஊக்குவிப்புத் திட்டம் மேற் கொள்ளப்படாமையால், துணி ஏற்றுமதி 1966-ல் 224 மில்லியன் மீட்டர்களாகவும் 1967-ல் 410 ஆகவும், 1968-ல் 400 மில்லியன் மீட்டர்களாகவும் குறைந்துவிட்டது. பெரும் நெருக்கடியில் உள்ள இத்தொழிலைச் சீரமைத்து, வளம்பெறச் செய்வது அரசின் கடமையாகும்.

(2) காகித ஆலைத்தொழில்

இந்தியக் காகித ஆலைத்தொழில் முதன் முதலாக 1835ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த செராம்பூர் என்னு மிடத்தில் துவக்கப்பட்டது. ஆனால், ஆரம்பத்தில் பெரிதான முன்னேற்றமில்லை. 1867ஆம் ஆண்டு வங்காளத்திலேயே மற்றொரு ஆலை துவங்கப்பட்டு இத் தொழிலின் வளர்ச்சிப் போக்கினைக் காட்டியது. இதன் பின்னர், 1882ஆம் ஆண்டு லக்னோவிலும், 1884ஆம் ஆண்டுக் கல்கத்தாவிலும் சில ஆலைகள் மேலும் தோன் றின. 1912ஆம் ஆண்டு மொத்தம் ஐந்து காகித ஆலைகளே நாட்டில் இருந்தன. இதற்கு முக்கிய காரணம் இத்தொழி லுக்குத் தேவையான கச்சாப்பொருள் கிடைக்காமையே. சில

வகை புற்களைக் கொண்டு காகிதம் தயாரிக்கப்பட்ட போதிலும் சுதேசி காகிதம் இறக்குமதியான காகிதத்தின் தரத்திற்கு இணையாக இல்லை. 1912ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பலனாக முதன் முதலாக மூங்கில் இலையைக் கச்சாப் பொருளாகக் கொண்டு காகிதம் தயாரிக்கப்பட்டது. முதல் உலகப் போரின்போது இறக்குமதி தடை செய்யப்பட்டதால் இத் தொழில் நன்கு வளர்ந்தது.

போரின் பின்னர் மீண்டும் இறக்குமதியினால் போட்டி ஏற்படவே இத் தொழில் நெருக்கடியை எதிர்நோக்க நேரிட்டது. 1924ஆம் ஆண்டு நாட்டில் மொத்தம் ஒன்பது ஆலைகள் 33,000 டன்கள் உற்பத்திச் சக்தி உடையதாக அமைந்திருந்தன. அந்த ஆண்டே போட்டியிலிருந்து காப்பு வேண்டுமென்று இத் தொழில் முறையிட்டது. சுங்க வரிக்குழு, மூங்கிலை கச்சாப்பொருளாகக் கொண்ட ஆலைகளுக்குத்தான் 'வளர்ச்சியுற வழி உள்ளது' என்று கருதியது. அதனுடைய பரிந்துரையின்படி சட்டம் இயற்றப்பட்டு இறக்குமதியாகும் காகிதத்திற்கு இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. காப்பு வரி விதித்ததிலிருந்து தொழில் நம் நாட்டில் வலுவாகக்கா லூன்றஉதவியது என்று சொல்லலாம். இரண்டாவது உலகச் சண்டையானது இத் தொழில் நிலைபெறவும் வளர்ச்சி பெறவும் மேலும் உதவியது. 1939 ஆம் ஆண்டு 67,000 டன்களாக இருந்த காகிதம், மற்றும் காகித அட்டை உற்பத்தி 1945ஆம் ஆண்டு 98,000 டன்களை எட்டியது. சவ்வுத்தாள், விமான அஞ்சலுக்கு ஏற்ற தாள்கள், வங்கிகளுக்கான கெட்டித்தாள்கள், வெடிமருந்து சுற்றுவதற்கான தாள்கள், மேலும் அட்டைப் பெட்டி செய்வதற்கான தாள்கள் ஆகிய எல்லாம் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யத் தொடங்கின. ஆனால், சண்டைக்குப் பிறகு உற்பத்தி, குறைந்த விகிதத்தில் வளரத் தொடங்கியது. 1951ஆம் ஆண்டு காகித, காகித அட்டைகளின் உற்பத்தி 1,14,000 டன்களாகும். அப்பொழுது காகித இறக்குமதியின் மதிப்பு ரூ. 14 கோடியாகும்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் காகித, காகித அட்டையின் உற்பத்தி சுமார் 80,000 டன்கள் அளவிற்கு உயர்ந்தது. இதனை ஆதாரமாக இரண்டாவது ஐந்தாண்டு திட்டமுடிவில் 3,50,000 டன்கள் உற்பத்தி செய்வது எனக்குறி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. புதிய ஆலைகள் துவங்குவதற்கும், இருந்து வரும் ஆலைகளை விரிவு செய்து கொள்ளவும் உரிமைகள் வழங்கப்பட்டன. அன்னிய செலாவணிச் சிக்கல் காரணமாக உற்பத்தி சக்தியினை எதிர்பார்த்தப்படி விரிவுபடுத்த முடியவில்லை. இரண்

டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் காகித ஆலைகளின் நிறுவப்பட்ட சக்தி 4,10,000 டன்களாகவும் உற்பத்தி 3,50,000 டன்களாகவும் இருந்தன. மூன்றாவது, ஐந்தாண்டுத் திட்டத்தில், நிறுவப்பட்ட சக்தி 8,20,000 டன்களாக உயர்த்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம், காகிதத்தில் தன்னிறைவு பெறலாம் என்றும் நம்பப்பட்டது. ஆயினும், 1965–66ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சக்தி, உற்பத்தி ஆகியன முறையே 6,80,000 மற்றும் 5,50,000 டன்களாகவும் இருந்தன. திட்டமிட்டபடி உற்பத்தி அதிகரிக்கவில்லை. 1969-70ஆம் ஆண்டில் காகித உற்பத்தி 7,06,000 டன்களாக உயர்ந்து, நிறுவப்பட்ட சக்தியில் 90 சதவிகிதத்தைப் பயன் படுத்தியுள்ளது.

இத்தொழிலின் வளர்ச்சியினைக் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 36

இந்தியக் காகிதத் தொழில் வளர்ச்சி

ஆண்டு	நிறுவப்பட்ட சக்தி (1000 டன்களில்)	உற்பத்தி (1000 டன்களில்)	நிறுவப்பட்ட சக்தியில் உற்பத்தியின் சதவிகிதம்
1937	58.6	53.8	92
1946	105.0	106.0	100
1951	137.0	131.0	96
1955–56	210.0	200.0	95
1960–61	418.0	350.0	84
1965–66	680.0	558.0	82
1966–67	711.0	580.0	81
1967–68	730.0	620.0	85
1968–69	750.0	640.0	85
2969–70	768.0	706.0	90

காகித நுகர்ச்சி நம் நாட்டில் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. எழுத்தறிவு வளர வளர காகிதத் தேவையும் அதிகரிக்

கிறது. உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பகுதி அச்சடிப்பு வேலைக்குப் பயன்படுத்தப்படுகிறது. தொழில் வளர வளர பொருள்களை அடைப்பதற்குத் (Packing) தேவையான அட்டைப் பெட்டிகள் மிகவும் தேவைப்படுவதால் அதற்கான காகிதமும் பெரிய அளவில் உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. தற்போதைய காகித நுகர்ச்சி ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவாகவே உள்ளது. அதனைக் கீழ்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 37

காகிதத்தின் தலா நபர் நுகர்ச்சி

நாடு	தலா நபர் நுகர்ச்சி பவுண்டுகளில்	நாடு	தலா நபர் நுகர்ச்சி பவுண்டுகளில்
அமெரிக்கா	530	அரபுக் குடியரசு	17
இங்கிலாந்து	265	சைனு	10
மேற்கு ஜெர்மனி	225	இலங்கை	8
ஜப்பான்	176	பாகிஸ்தான்	2
சோவியத் ரஷ்யா	46	இந்தியா	3

குறைகள்

இத் தொழிலின் முக்கியமான குறை கச்சாப் பொருள் பற்றாக் குறையே. தற்போது மூங்கிலும், ‘சபாய்’ என்னும் ஒரு வகைப் புல்லும் முக்கிய கச்சாப் பொருள்களாகப் பயன்படுத்தப்படு கின்றன. இவைகள் குறைந்த விலையில் தரமுடையதாகக் கிடைக் கின்றன. ஆயினும், இக்கச்சாப் பொருள்கள் குறைந்த அளவி லேயே விளைகின்றன. எனவே, இத் தொழிலுக்குத் தேவையான மாற்றுக் கச்சாப் பொருளைக் கண்டுபிடித்தல் மிகவும் முக்கியமான ஒன்ருகும். கரும்புச் சக்கையிலிருந்தும் (Bagarse) காகிதம் தயாரிக்கலாம் என்று இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தற்போது சர்க்கரை ஆலைகளில் சுமார் மூன்று மில்லியன் டன்கள் கரும்புச் சக்கை எரிபொருளாக வீணடிக்கப்படுகிறது. இதனில் பாதியளவாவது காகித உற்பத்திக்குக் கிடைக்குமாயின் மேலும் 80,000 டன்கள் காகித உற்பத்தி செய்யலாம். கந்தைகளையும், கழிவுத்தாள்களையும்கூடக் காகித உற்பத்திக்குப் பயன்படுத்தலாம்.

காடுகளே காகித ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களைப் பெருமளவில் அளிக்கின்றன. காடுகள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. மாநில அரசினால் காடுகளைக் குத்தகைக்கு விடுவதில் பின் பற்றப்பட்ட கொள்கைகள் காகிதத் தொழிலுக்கு உதவியாக இல்லை. காடுகள் பொதுவாக வருவாயைக் கருத்தில் கொண்டு ஓராண்டிற்கோ அல்லது இன்னும் குறைவான காலப் பகுதிக்கோ குத்தகைக்கு ஏலம் விடப்படுகின்றன. இதன் காரணமாக ஆலைகள் தொடர்ந்து தடையற்ற கச்சாப் பொருளைப் பெற இயலாது போகின்றது. இனியாவது மாநில அரசுகள் தங்களுடைய வருவாயை மட்டும் கருத்தில் கொள்ளாது, நாட்டின் முக்கியமான தொழிலான காகிதத் தொழிலின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, காடுகளைக் குத்தகைக்கு விடுமாயின், இத் தொழிலும் வளம் பெறும், நம் நாடும் வளம் பெறும்.

(3) சர்க்கரை ஆலைத்தொழில்

தொழிற்காப்பு அளிக்கப் பெற்ற இந்தியத் தொழில்களில் சர்க்கரை ஆலை சிறப்பிடம் பெறுகிறது. தேசிய வருமானத்திற்கு, உற்பத்தித் துறையினால் அளிக்கப்படும் இறுதி மதிப்பீட்டை (net-value) பொறுத்தவரையில் இத்தொழில் மூன்றாவது பெரிய தொழிலாக அமைந்துள்ளது என்பதால் இதன் சிறப்பை நன்கு உணரலாம். நாட்டில் எல்லாத் தொழில்களிலும் ஈடுசெய்துள்ள முதலில், இத்தொழிலின் பங்கு 5.8 சதம் ஆகும். சுமார் 2,50 000 நபர்களுக்கு நேரடியான வேலை வாய்ப்பை அளிப்பதுடன், மறைமுகமாகவும் கரும்பு சாகுபடியில் சர்க்கரைப் பங்கீட்டுத் துறையில், மற்றும் மிட்டாய் தொழில் போன்ற துணைத் தொழில்கள் ஆகியவற்றிலும் வேலை வாய்ப்பினை எண்ணற்றோர்க்கு அளிக்கின்றது. மத்திய அரசிற்கு ஆண்டுதோறும் சுமார் 100 கோடி வரை இத்தொழிலின் மூலம் தீர்வை வரியாகக் (Excise-duty) கிடைக்கின்றது.

வளர்ச்சி வரலாறு

இத்தொழிலின் வளர்ச்சி வியக்கத் தக்க வகையில் அமைந்துள்ளது. 1932ற்க்கு முன்னர் சுமார் 30 ஆலைகள் 1.6 லட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்தன. 1932ஆம் ஆண்டில் இத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இப் பாதுகாப்பு பெற்ற ஒரு சில ஆண்டுகளுக்குள் நாட்டின் வருடாந்திர நுகர்வு அளவை மிஞ்சும் அளவில் இத்தொழில் முன்னேறத் தொடங்கியது.

உள்நாட்டுத் தேவைக்குமேல் உற்பத்தி செய்யும் திறனுடைய புதுமாதிரிக் கரும்பு பிழியும் இயந்திரங்கள் பூட்டப்பட்ட ஆலைகள் நாடெங்கும் நிறுவப்பட்டன. 1937 ஆண்டில் சர்க்கரை உற்பத்தியில் ஈடுபட்ட ஆலைகள் 137 ஆகவும், ஆலைகளில் வேலை செய்வோரின் எண்ணிக்கை 75,000 நபர்களுக்கு மேல் உயர்ந்தும், உற்பத்தியின் அளவு 10 லட்சம் டன்னாகவும் அமைந்தது. இத்தொழிலின் வளர்ச்சியைக் கீழுள்ள அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 38

சர்க்கரை ஆலையின் உற்பத்தி வளர்ச்சி

வருடம்	கரும்பிலிருந்து உற்பத்தியான சர்க்கரை லட்சம் டன்னில்
1931-32	1.6 (உத்தேச மதிப்பீடு)
1935-36	9.3
1939-40	12.0
1950-51	11.3
1955-56	18.9
1960-61	30.3
1965-66	35 1
1968-69	35.6
1969-70	42.6
1970-71	45.0

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலம்வரை வளர்ச்சி

உலக மகா சண்டைகளின் காரணமாக, சர்க்கரையின் தேவை அதிகரித்து, இறக்குமதி குறைந்தது. சர்க்கரை விலையின் உயர்ந்து செல்லும் போக்கும், துரித இலாப வளர்ச்சியும் இத்தொழிலின் உற்பத்தி விஷயத்தில் அரசு கட்டுப்பாட்டைக் கொண்டு வரத் தூண்டியது. இதனால், விரைந்து வளர்ந்த உற்பத்தி 1943-44ஆம் ஆண்டில் 12 லட்சம் டன்னிலிருந்து

1946-47-ல் 9 லட்சம் டன்னுகக் குறைந்தது. 1951ஆம் ஆண்டில், கரும்பிற்குக் குறைந்த விலையையும் சர்க்கரைக்கு உயர்ந்த விலையையும் நிர்ணயித்ததின்மூலம் அரசு இத் தொழிலுக்கு ஒரு தூண்டுதலை அளித்தது. எனவே, உற்பத்தி 1951-52ஆம் ஆண்டில் 15 லட்சம் டன்னுக உயர்ந்தது. சர்க்கரைப் பங்கீடு (Sugar-rationing) முறை எடுபட்டது. ஆயினும், கரும்பின் குறைந்த விலை காரணமாகக் கரும்பு பயிரிடும் நிலத்தின் அளவு குறைந்தது. இம் முரண்பட்ட கொள்கையின் காரணமாகச் சர்க்கரைப் பற்றுக்குறை அதிகரித்தது. சர்க்கரை நுகர்ச்சிக் கட்டுப்பாடு எடுபட்டதால், நுகர்ச்சி அதிகரித்தது. கரும்பு விலை குறைப்புக் காரணமாக, கரும்பு உற்பத்தி குறைந்தது. இப் பற்றுக்குறையைப் போக்க, 1953ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இறக்குமதித் தீர்வை 50 சதமாகக் குறைக்கப்பட்டது. பற்றுக்குறை அநேகமாகத் தீர்ந்த நிலையில், அரசு மீண்டும் 1954ஆம் ஆண்டில், கரும்பு விலையைப் பெருக்கிக் காப்புக்கொள்கையை மேற்கொண்டது. இதன் விளைவாக, சர்க்கரை உற்பத்தி 16 லட்சம் டன்னுக உயர்ந்து, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில், இறக்குமதிக்குத் தேவையில்லாமல் போய்விட்டது. எனவே, போர்க்குப் பிற்காலத்தில் அரசின் கரும்பு விலைக் கொள்கை காரணமாகவும் சர்க்கரை விலைக் கொள்கை காரணமாகவும் சர்க்கரை உற்பத்தி விலைக் கட்டுப்பாட்டிற்கேற்ப வளர்ச்சியுற்றுள்ளது எனலாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால வளர்ச்சி

சர்க்கரை, ஆலைத்தொழில் அரசின்கொள்கைகளின்விளைவாகக் கட்டுப்பாடு — கட்டுப்பாடு நீக்கம் — மீண்டும் கட்டுப்பாடு — உற்பத்தியில் ஏற்பட்ட ஸ்திரமற்ற தன்மை காரணமாக, மிகவும் பாதிக்கப்பட்டது எனலாம். 1957-58ஆம் ஆண்டு வரை நுகர்ச்சி, உற்பத்தி இரண்டுமே உயர்ந்து சென்று, இரண்டும் 2 லட்சம் டன்களை எட்டியது. 1957-58-ல் மீண்டும் கட்டுப்பாடு காரணமாக, உற்பத்தி குறைந்தது. அரசின் ஊக்குவிப்பால் 1960-61-ல், 30.3 லட்சம் டன்களை எட்டியது. 1961-ல் கட்டுப்பாடு எடுக்கப்பட்டது. 1962-63-ல் உற்பத்தி அளவு 21.5 லட்சம் டன்கள்தான். ஆனால், நுகர்ச்சியின் அளவோ 25 முதல் 26 லட்சம் டன் வரை இருந்தது. அளிப்பின் குறைவு காரணமாகச் வாங்கும் விலை சர்க்கரையின் உள்நாட்டில் உயர்ந்தது. மேலும், ஏற்றுமதியின் அளவும் குறைந்தது. கட்டுப்பாட்டுத் தளர்ச்சியின் காரணமாக ஆலைகளும், பற்றுக்குறையைப் பயன்படுத்திக் கொண்டு நுகர்வோரிடம் அதிக விலையைப் பெற முயன்றது.

மூன்றாவது ஐந்தாண்டுக் கால வளர்ச்சி

ஏற்றுமதியைப் பெருக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டுக், கட்டுப்பாடுகள் இறுக்கப்பட்டன. 1931ஆம் ஆண்டு வரை ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக ரூபாய் 15 கோடி மதிப்புள்ள 10 லட்சம் டன்கள் சர்க்கரையை இறக்குமதி செய்துவந்த இந்தியா, ஆண்டு ஒன்றுக்கு 3.5 லட்சம் டன்கள் ஏற்றுமதி செய்து சுமார் ரூபாய் 28 கோடி வரை அந்நியச் செலாவணி ஈட்டத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது. 1965–66-ல் சர்க்கரை உற்பத்தி 35.1 லட்சம் டன்கள் ஆகும். இக்காலத்தில்தான் உள்நாட்டுத் தேவைக்கு, ஏற்றுமதித் தேவை ஆகியன பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும், சர்க்கரை அதிக சேமிப்பு (Buffer Stock) முறை பின்பற்றப்பட்டது. இதன் மூலம், அளிப்பு குறையுங் காலங்களில், விலை உயர்வு ஏற்படாவண்ணம் தேவைகளைப் பூர்த்தி செய்வது சாத்தியமாயிற்று.

தற்கால நிலை

1968-69 லிருந்து சர்க்கரை உற்பத்தி சீராக வளர்ச்சி பெற்று வருகின்றது. சர்க்கரை உற்பத்தி 1968–69-ல் 35.6 லட்சம் டன் களாகவும் 69-70-ல் 42.6 லட்சம் டன்களாகவும் 70-71-ல் 45.0 லட்சம் டன்களாகவும் அமைந்துள்ளது. உள்நாட்டு நுகர்ச்சியும் 68-69-ல் 26 லட்சம் டன்களாக இருந்தது. 70-71-ல் 37 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. அதிகரித்த உற்பத்தியின் காரண மாகவும் வெளி நாட்டு வியாபார மந்தத்திலும் சர்க்கரையின் சேமிப்பு இருப்பு 1971 செப்டம்பர் மாதம் 19 லட்சம் டன்களாக உயர்ந்துவிட்டது. இந்நிலையினை எதிர்பார்த்து அரசும் சர்க்கரைக் கட்டுப்பாட்டை நாடெங்கும் மே 1971 ஆம் ஆண்டு அகற்றிவிட்டது. தற்போது சேமிப்பு இருப்பு விரைவாகக் குறைந்து வருகின்றது. உள்நாட்டு விலையும் உயர்ந்து வருகின்றது.

இத்தொழிலின் சிக்கல்கள்

சர்க்கரை இருப்பு அதிகரிக்கும் போதெல்லாம் அரசின் கொள்கை உற்பத்தியில் கட்டுப்பாடு, ஏற்றுமதி தூண்டுதல் என்றிருப்பதால் விலை உயர்வு ஏற்படுகின்றது. இது நுகர்வோரை மிகவும் கடுமையாகப் பாதிக்கின்றது. ஆழ்ந்து யோசனை செய்த பின்னர், இடைக்காலக் கொள்கைகளையும் செயல்களையும் மேற் கொள்ளாமல், தீர்க்க தரிசனத்துடன் நீண்டகாலக் கொள்கைகளை அரசு மேற்கொள்வது இத்தொழிலுக்கு நன்மை பயக்கும்.

அரசின் கொள்கையோடு கைத்தொழிலாகச் செய்யப்படும் நாட்டு வெல்லத்தின் நிலைக்கும், கரும்பு விலைக்கும் உள்ள நல்ல தொடர்பின் காரணமாகவும், சர்க்கரை உற்பத்தி பாதிக்கப் படுகின்றது. கரும்பு உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில் கரும்பினை, சர்க்கரை உற்பத்திக்கோ அல்லது வெல்ல உற்பத்திக்கோ அளித்திடலாம். சர்க்கரையின் நுகர்ச்சியோ வெல்லத்தின் விலையைப் பொறுத்துள்ளது. கரும்பிற்கு ஆலைகள் அளிக்கும் விலையை அரசு சட்டுப்படுத்தும்போது, இயற்கையாகவே வெல்ல உற்பத்திக்கு அதிக கரும்பு செலவழிக்கப் படுகின்றது. சர்க்கரை விலையை அரசு கட்டுப்படுத்த முயன்றும், வெல்ல விலையை விட அது அதிகமாகவே உள்ளது. எனவே, 'சர்க் கரைஉற்பத்தியை விட, வெல்ல உற்பத்தி நம் நாட்டில் அதிகமாக உள்ளது' எனலாம். அதாவது உற்பத்தியாகும் கரும்பின் பெரும் பகுதி வெல்ல உற்பத்தியில் செலவிடப்படுகின்றது. ஆனால் இது, பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. எவ்வாறெனில், வெல்ல உற்பத்தியைவிடச் சர்க்கரை உற்பத்தியில் கழிவு குறைவு. கரும்பினை, வெல்ல உற்பத்திக்குப் பயன்படுத்தினால் கிடைக்கும் வெல்லத்தை விட, சர்க்கரை உற்பத்திக்குப் பயன்படுத்தினால் கிடைக்கும் சர்க்கரையின் கூடுதல் அளவு 30 சதம் ஆகும். 1969ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெல்லத்தின் சராசரி விலை குவிண்டாலுக்கு ரூபாய் 140/–லிருந்து, ரூபாய் 88க்கு வீழ்ச்சி அடைந்தது.

எனவே, கரும்பினை வெல்ல உற்பத்திக்குப் பயன்படுத்து வதால் கிடைக்கும் எச்சம் குறைந்து கொண்டே வந்தது. கரும்பினை வெல்ல உற்பத்திக்குப் பயன்படுத்துவதில் எவ்வித பலனும் கிட்டாது. சிலர் நட்டமும் அடையத் தொடங்கினர். சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வரத்து மிகவும் அதிகமாகியது. சர்க்கரை ஆலைகளும் இந்த அதிகரித்த கரும்பு அளிப்பினை உபயோகிக்க வேண்டிக் கடும் கோடையிலும் வேலை செய்தனர். இதன் காரணமாகச் சுமார் 6 லட்சம் டன்கள் அந்த ஆண்டு மட்டும் அதிகமாக ஆலைகள் உற்பத்தி செய்தன. இவ்வாறு சர்க்கரை உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டிராவிட்டால், அதிகரித்து உற்பத்தியான சர்க்கரையில் 30 சதம் வெல்ல உற்பத்தி யின் குறைந்த எடுப்பின் காரணமாக வீணாகியிருக்கும். அதாவது சுமார் 2 லட்சம் டன் சர்க்கரை வீணாகியிருக்கும். 4 லட்சம் டன்கள் வெல்லம் மட்டுமே கிடைத்திருக்கும். சர்க்கரையின் சராசரி விலையான குவிண்டால் ரூபாய் 175/– என்ற வீதத்தில் கணக்கிட்டால், அதிக உற்பத்தியின் (சர்க்கரையின்) மதிப்பு ரூபாய் 3.5 கோடியாகியது. இந்தச் சேமிப்பு அலட்சியப்படுத்தக் கூடியது அல்ல. தற்போது ஆலைகள் தங்களுக்கு வேண்டிய

கரும்பினைத் தாங்களே பயிரிட்டுக்கொள்கின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விவசாயிகள் அமைத்து வருவதாலும் அதிகக் கரும்பு வெல்ல உற்பத்திக்குப் போகாமல் தடுக்கப்படுகின்றது.

சர்க்கரை ஆலைத்தொழில், கரும்பு கிடைப்பதைப் பொறுத்து வட்டார வளர்ச்சித் தன்மையுடையதாக உள்ளது. கரும்பிலிருக்கும் இனிப்பு நீர் (Surcose) கரும்பை வெட்டியவுடன் வற்றிவிடத் தொடங்குவதால், கரும்பை வெட்டியவுடன் ஆலைக்கு எடுத்துச் செல்லவேண்டியுள்ளது. ஆலைகளும் கரும்பு விளைநிலம் அருகே அமையுமாயின் தொடர்ந்த கரும்பு அளிப்பைப் பெறஇயலும். எனவே இத்தொழில், கச்சாப்பொருள் செறிவுடையதாக, (Raw-material localised) உள்ளது. பெரும்பாலான ஆலைகள் உத்தர பிரதேசத்திலும், பீகாரிலும் அமைந்துள்ளது. இவை இரண்டு மாகாணங்கள் மட்டும் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 55 சதத்தைத் தருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தற்காலம், தமிழ்நாடு, பம்பாய், மற்றும் பஞ்சாப் மாகாணங்கள் இத்தொழிலில் ஆர்வம் காட்டித் தொழிலை வளர்த்து வருகின்றன. ஓரிரு மாகாணங்களில் குவிந்து கிடந்த இத்தொழில் பரவலான வளர்ச்சி பெறுவது, நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக அமையும் எனலாம்.

தொழில் அனுமதி (Industrial Licence) அளிப்பதிலும் சில முரண்பாடுகள் உள்ளன. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில், அதாவது 1973-74-ல் சர்க்கரை உற்பத்தி இலக்கு 48.5 லட்சம் டன்களாக இருத்தல் வேண்டும் என்பது அரசின் கொள்கை. திட்டக்குழு உறுப்பினர்கள், பொருளாதார அலுவல் துறை நிபுணர்கள், உணவுத்துறை வல்லுநர்கள் ஆகியோர் கொண்ட ஒரு சிறப்பு சர்க்கரை வளர்ச்சிக் குழுவினரால், முதலில் 45 லட்சம் டன்கள் உற்பத்தி செய்ய முடிவெடுக்கப்பட்டது. இதனுள் ஏற்றுமதிக்கான 5 லட்சம் டன்களும் அடங்கும். ஆனால், பின்னர்புதிய பன்னாட்டுச் சர்க்கரை ஒப்பந்தத்தினால் (International Sugar Agreement) ஏற்றுமதி அளவு 3.5 லட்சம் டன்களாகச் சுருங்கியது. எனவே, உற்பத்தி 43.5 லட்சம் இருந்தால் போதுமானது. ஆயினும், இதற்கு மாறாக அரசு 48.5 லட்சம் டன்கள் என இலக்கு குறித்துள்ளது. தற்போதைய ஆலைகளின் உற்பத்திச் சக்தி 40 லட்சம் டன்கள் (உண்மையில் 44.5 லட்சம் டன்கள்) எனவும் மதிப்பிடப்பட்டு, மேலும் 8.5 லட்சம் டன்களுக்குப் புதிதாக உரிமம் வழங்கப்பட்டுள்ளது. புதிதாக வழங்கப்பட்டுள்ள உரிமங்களில் பழைய ஆலைகள் தங்கள் உற்பத்தியைப் பெருக்க 1.43 லட்சம் டன்கள் அளவிற்குத்தான் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

பிற புதிய ஆலைகளுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ளன. இச்செயல் சர்க்கரை வளர்ச்சிக் குழுவின் பரிந்துரைக்கு முரண்பாடானது. மேலும், உயர்ரகக் கரும்பினை ஆலைகள் பயன்படுத்தத் தொடங்கிய பின்னர், கரும்புச் சாற்றிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் அளவு அதிகரித்துள்ளது. இது சர்க்கரை மொத்த உற்பத்தியினை அதிகரிக்கும் என்பதிலும், இதன் விளைவாக நுகர்வு, ஏற்றுமதி முதலியன போக, சர்க்கரை இருப்பு அதிகரிக்கும் என்பதிலும் ஐய மில்லை. ஆலைகளின் பொருளாதாரம் இதனால் பெரிதும் இன்னலுறும் என்றும் அஞ்சப்படுகின்றது. இச்சிக்கலைப்போக்கத் தற்போது அரசு சர்க்கரைக் கட்டுப்பாட்டை, 1971 மே மாதத்திலிருந்து நீக்கியுள்ளது. ஓரளவிற்குப் பொதுச் சந்தையின் சர்க்கரையின் விலையும் உயர்ந்து வருகின்றது.

சர்க்கரை ஆலைத்தொழிலின் வளர்ச்சியைத் தடை செய்யும் மற்றொரு காரணியாகக் கரும்பின் தலா ஏக்கர் விளைச்சல் அமைந்துள்ளது. உற்பத்தியின் தடை செய்யும் மற்றொரு காரணியாகக் கரும்புச்சாறு சதவீதம் உள்ளது. இந்தியாவைப் பொறுத்த வரையில் இரண்டுமே குறைவாயுள்ளன. இந்தியாவில் 100 டன் கரும்பிலிருந்து 10 டன்கள் சர்க்கரையே கிடைக்கின்றது. இது மற்ற நாடுகளைவிட மிகவும் குறைவாகும். வெல்லம் உற்பத்தி, செய்தால் இன்னும் குறைவாக (7 டன்கள்தான்) கிடைக்கின்றது. எனவேதான், கரும்பிற்கு ஆலை விலையும் குறைவாக உள்ளது. அரசின் முயற்சியினால் கரும்பின் ஆலைவாய் விலை குவின்டாலுக்கு ரூபாய் 8.50ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆலைகளைப் பொறுத்த வரையில் இது உயர்ந்த விலையே. மேலும் கரும்பில் பொரில்லா போன்ற பூச்சித் தாக்குதலினால் கரும்புச்சாறு அளவு குறையும் போது ஆலைகள் இவ்விலையைக் கொடுப்பின் நஷ்டமடைய நேரிடும் என்பது வருந்துதற்குரியது.

இத்துணை இடர்ப்பாடுகளுடைய சர்க்கரை ஆலைத் தொழிலைத் தேசிய மயமாக்க வேண்டும் என்று உத்தரபிரதேச மாகாணத்தில் அரசியல் கட்சிகள் முயன்று வருகின்றன. இது பிற மாநிலங்களுக்கும் பின்னர் விரிவுபடுத்தக்கூடும். 1956ஆம் ஆண்டின் தொழிற் கொள்கையின்படி, அரசு சர்க்கரை ஆலைகளைத் தனியார் துறையில் நடத்த ஒப்புக்கொண்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்துள்ள இத் தொழிலை, தேசிய மயமாக்க முயல்வதனால், சமூகத்திற்குப் பெருந் தொண்டு புரிந்துவிட முடியாது. அதற்கு மாறாகக் கரும்பு உற்பத்தியாளர்களும், நுகர்வோரும் பெரிதும் அல்லல் உறுவர் என்பதில் உண்மை இருக்கின்றது. தற்போதுள்ள அரசுக் கட்டுப்பாடுகளின் ஊடே

ஆலைகள் தாங்களாகவே எதுவும் செய்ய முடியாது. கரும்பின் விலையும் சர்க்கரையின் விலையும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட பிறகு, தவறுதல்களுக்கு இடமில்லை. எனவே தேசியமயமாக்குவதன் மூலம், இத்தொழிலின்மீது இனிச் செய்ய இருக்கும் முதலீடு பெரிதும் தடைப்பட அரசு முயல்வது நன்மை பயக்காது. சர்க்கரை ஏற்றுமதியை விரிவுபடுத்தி, உள்நாட்டு நுகர்வும் வளர்ச்சியுற வழி வகை கண்டு, ஆலைகளின் சர்க்கரை இருப்பைக் குறைக்க முயல்வதே அரசின் கொள்கையாக இருந்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைய முடியும்.

6. தொழில் வளர்ச்சி (3)

(1) சணல் ஆலைத்தொழில்

முன்னுரை

நம் நாட்டின் மிகவும் முக்கியமான கட்டமைப்புடைய தலைமைத் தொழில்களில், சணல் ஆலைத்தொழிலும் ஒன்று. இதனுடைய முக்கியத்துவத்திற்குக் காரணம் நம் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நிய செலாவணியே. 1967-68ல் சணல் பொருள்களின் ஏற்றுமதி ரூ. 199 கோடியாக இருந்தது. 1955-ல் வங்கப் பகுதியில் சிராம்பூர் அருகில் உள்ள ரஷ்ராவில், முதன்முதலாகச் சணல் நெசவாலைத் துவக்கப்பட்டது. தற்போது 112 ஆலைகள், 72960 தறிகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றுள் 45 சதவிகிதம் கித்தான் உற்பத்தியிலும், 55 சதவிகிதம் சாக்குத்துணி உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளன. இவ்வாலைகளின் மொத்த சக்தி ஆண்டிற்கு 1.3 மில்லியன் டன்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

வளர்ச்சி வரலாறு

1855 லிருந்து முதல் முப்பது ஆண்டுகள் இதன் வளர்ச்சி மிகவும் நிதானமாகவே இருந்தது. 1868–73 வரை இதன் வளர்ச்சி அதிக லாபமுள்ளதாக அமைந்திருந்தது. இந்தத் தற்காலிக லாபத்தையும் மேம்பாட்டையும் கண்ணுற்று அநேகர் அதிகப்படியான நெசவாலைகளைத் திறந்து, பலத்த போட்டியில் இறங்கினர். அதன் விளைவாக இலாபம் குறைந்தது எனலாம். முடிவாகப் பயனற்ற நெசவாலைகள் மூடப்பட்டன. 1881–ல் இத்தொழிலில் சுமார் 5000 விசைத்தறிகள் இருந்தன. இரண்டு உலகப் போரினாலும், இத்தொழில் வெகுவாக முன்னேறியது. போர் இடைக்காலத்தில் (1929–ல்) நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை காரணமாக, ற்ற ஆலைகளைப் போலவே, சணல்

ஆலைகளும் பாதிக்கப்பட்டன. ஆனால், செம்மையான முறைகளாலும், காப்பு நிதியினாலும் தேவைக்கேற்பக் குறுகிய காலத் தொழில் அமைப்புகளாலும் அந்த நிலைமையை நன்கு சமாளிக்க முடிந்தது.

நாட்டுப்பிரிவினை ஏற்பட்டதும், சணல் விளையும் பகுதியில் பெரும்பாகம் கிழக்கு வங்காளத்துடன் சேர்ந்து விட்டன. ஆனால், சணல் ஆலைகள் மட்டும் இந்திய யூனியனில் தங்கிவிட்டன. உலகின் சணல் அனைத்தையும் கோரும் நாடு இந்தியா எனினும், உலக உற்பத்தியில் முதலிடம் பெறுவது பாகிஸ்தானே. பெரும் அளவு சணல்நாரைப் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. 1949-ல் இந்தியா தனது ரூபாயின் மதிப்பைக் குறைத்ததால், இரு நாடுகளுக்கும் இடையே வியாபார முட்டு நிலையும் நெருக்கடி நிலையும் ஏற்பட்டன. இந்தியா, சுயதேவைப் பூர்த்திக்காக அதிகப்படியான சணல் பயிர் செய்ய முயன்று வருகின்றது. அதில், ஓரளவு வெற்றியும் 1951-53-ல் பெற முடிந்தது. ஆயினும், அதில் இரு இடர்ப்பாடுகள் உள்ளன. ஒன்று, உணவு உற்பத்திக்கு குந்தகம் ஏற்படுமளவில்தான் சணல் பயிரிட முடியும். இரண்டாவதாக, கிழக்கு வங்கத்தில் பயிராகும் சணலைப் போன்ற துல்லியமானவகை வேறெங்கும் உற்பத்தி செய்யப்படவில்லை. எனவே, இன்னும் சில ஆண்டுகளுக்குப் பாகிஸ்தானிடம் சணல் நார் பெறவேண்டியிருக்கும். இதற்கிடையில் பாகிஸ்தானிலும் சணல் நெசவாலைகள் தோன்றி வருகின்றன. ஆயினும், உள்நாட்டு அமைதியின்மை காரணமாகவும், பணவசதியின்மையாலும், மின்விசை போதுமான அளவு இல்லாத காரணத்தாலும் அங்கு நெசவாலைகள் மிகவும் மெதுவாகத்தான் முன்னேறும் எனலாம்.

இத்தொழிலின் பிரச்சனைகள்

நாட்டின் பிரிவினைக்குப் பின்னர் கச்சாச் சணல் பற்றாக்குறையின் காரணமாக, இத்தொழில் பெரும் நெருக்கடியை நோக்க நேர்ந்தது. 70 சதத்திற்கும் மேலான விளைச்சல் நிலங்கள் பாகிஸ்தானுக்குத் தரப்பட்டதே இதற்குக் காரணம் எனலாம். எனவே, சணல் உற்பத்தியில் கட்டுப்பாடு மேற்கொள்ள வேண்டி நேர்ந்தது. பெரும் அளவில் சணல் உற்பத்தி இயந்திரங்கள், கச்சாச் சணல் இன்றி, வீணே கிடக்க வேண்டியுள்ளது. 1951ஆம் ஆண்டில் இயந்திரங்கள் முழுத்திறனுடன் இயங்க, 7.2 மில்லியன் பேல்கள் தேவைப்பட்டன. ஆனால், கச்சாச் சணல் உற்பத்தியோ 3.3 மில்லியன் பேல்கள்தான். இந்த இடைவெளியை மூடச் செறிந்த சாகுபடித் திட்டங்களும் (Intensive) விளை நிலப்பரப்பைப் பெருக்கும் திட்டங்களும் (Extensive illivation) முதல் இரண்டு

1936-37லிருந்து இந்த யூனியனில் சணல் உற்பத்தி அளவு பற்றிய கணக்கினைப் பின்வரும் அட்டவணை 38-ல் காணலாம்.

அட்டவணை 39

ஆண்டு	விளைச்சல் 1000 பேல்கள் ஒவ்வொன்றும் 400 இராத்தல்கள்
1936–37	2,234
1940–41	2,773
1944–45	1,164
1947–48	1,658
1950–51	3,301
1955–56	4,137
1959–60	4,500
1961–62	6,400
1967–68	6,400

திட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஏற்பட்ட பலனை மேலேயுள்ள அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மூன்றாவது திட்டத்தில் சணல் உற்பத்தி குறி இலக்கு 6.2 மில்லியன் என, நிர்ணயிக்கப்பட்டபோதும், மழையின்மை காரணமாக 1965–66-ல் 4.5 மில்லியன் பேல்களே உற்பத்தியாயின. ஆயினும், பின்னர் நிலைமை திருந்தித் தற்போது 6.8 மில்லியன் பேல்களாகி உள்ளன. இது ஓரளவிற்குத் தன்னிறைவைக் கொடுத்துள்ளது எனலாம்.

இரண்டாவதாக, கச்சாச் சணலின் பற்றாக்குறை காரணமாக நமது உற்பத்திப் பெருக்கம் குறைந்து, உலக சந்தையில் நமது போட்டியிடும் சக்தி மிகவும் குறைந்து விட்டது. தற்போதுள்ள முக்கியமான பிரச்சனை நமது சணல் ஆலைகள், பாகிஸ்தானுடன் போட்டியிட்டு உலக சந்தையில் முன்பிருந்த நிலையைத் தங்க வைத்துக்கொள்ள முடியுமா என்பதே.

அட்டவணை 40

உலக சணல் ஏற்றுமதி பங்கீட்டுச் சதவீதம்

காலம்	உலக சணல் ஏற்றுமதியில் பங்கு		
	இந்தியா	பாகிஸ்தான்	இதர நாடுகள்
1951—60 சராசரி	80.9	6.7	12.4
1961	73.1	19.7	7.2
1964	64.8	16.5	18.7
1965	69.4	21.1	9.5
1966	60.1	29.2	10.7
1967	61.0	28 9	10.1
1968	55.0	37.0	8.0

ஆதாரம்:- Central Statistical Office, Karachi

மேற்கண்ட அட்டவணையிலிருந்து, பாகிஸ்தான் விரைவான முன்னேற்றத்தையும், அதனால் நம் நாட்டின் ஏற்றுமதி எவ்வாறு பாதிக்கப்பட்டு வருகின்றது என்பதனையும் காணலாம். சிறுகச் சிறுக இந்தியா தனது சந்தையைப் பாகிஸ்தானிடம் இழந்து வருகின்றது. மேலும் முந்திய நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், இதுகாறும் நமக்கு இத்தொழிலில் இருந்த ஏகபோக உரிமை மறைந்து போய் விட்டது எனலாம். அமெரிக்காவிற்குத் தேவைப்பட்ட சணல் வாணிகத்தில் இதற்கு முன்னர் ஐரோப்பிய உற்பத்தியாளர்கள் 3.8 சதவீதமே முன்பு அளித்து வந்தார்கள். 1951-ல் தமது உற்பத்தியை 16.8 சதவீதமாகப் பெருக்கிக் கொண்டார்கள். கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்கா, பெல்ஜியன், காங்கோ, பிரேஸில் போன்ற நாடுகளில் சணலுக்குப் பதிலாக வேறு நார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், அமெரிக்காவிலும் உருளைக்கிழங்கு, பால்பவுடர் மற்றும் சில பொருள்களை அனுப்புவதற்குச் சாக்குப் பைகளுக்குப் பதிலாகக் காகிதப்பைகளையும் உபயோகிக்கத் தொடங்கிவிட்டனர். ஏற்றுமதியைப் பெருக்க, உற்பத்திச் செலவைக் குறைத்துப் போட்டி விலையில் விற்க ஆலைகள் முன் வரவேண்டும்.

வளர்ச்சிக்குள்ள இடையூறுகளைப் பார்க்கும்போது வளர்ச்சி விரைந்து ஏற்படக் காரணமான ஒன்றையும் குறிப்பிடுதல் அவசியம். இந்தியாவில் உள்ள தறிகளின் எண்ணிக்கை 72,960. அதாவது உலகில் உள்ள தறிகளின் எண்ணிக்கையில் 50 சதம். ஆனால், பாகிஸ்தான் நாட்டிலோ 8,726 தறிகள், 6.85 சதத்தை குறிப்பிடுகின்றன. மற்றொரு முக்கியமான குறிப்புப்பெரும்பாலான இந்திய சணல் ஆலைகள், பிரிட்டிஷ் மேலாண்மை பதிலாள் ஸ்தாபனங்களால் (British Managing Agency Houses) உருவாக்கப் பட்டு, வளர்க்கப்பட்டு உயர்த்தப்பட்டவை. எனவே, இவைகள் யாவுமே மிகவும் திடமாகவும், பெரிய அளவிலும் வளர்க்கப் பட்டன. சணலின் பன்னாட்டுத் தேவை (International Chracter) காரணமாகத் தேவை வளர்ந்து, அதன்காரணமாக இத்தொழிலும் பெரிய அளவில் வளர வாய்ப்பு ஏற்பட்டது. நிதி, மேலாண்மை, அதிகாரம் ஆகியவற்றின் இணைப்புக் காரணமாகவும் (Finance, Managerial, Administrative) இத்தொழிலில் உள்ள ஆலைகளின் அளவு பெருகியது எனக் கூறலாம். இத்தொழிலில் கட்டுப்பாடு, மேலாண்மை ஆகியவற்றின் குவிப்பு (Centralisation) காரண மாகவும் சிக்கனமும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. நாட்டில் உள்ள மொத்தம் 82 சணல் ஆலைகளில் கிட்டத்தட்ட 32 ஆலைகள், நான்கே மேலாண்மைப் பதிலாள்களிடம் இருந்து வருகின்றது என்பதால் இதனை உணரலாம். எனவே, இவ்வாலைகள் பேரளவு உற்பத்தியின் சிக்கனத்தையும் இலாபத்தையும் நன்கு பெற வாய்ப்பு ஏற்பட்டது.

இந்தப் பன்னாட்டு குணாதிசயமும் (International Chracter) பேரளவு உற்பத்தியும் இத்தொழிலுக்கே பின்னர் இடையூறாக நேர்ந்தது வியப்பிற்குரியதே. ஒரு தொழிலை வளர்ப்பது கடினம். வளர்த்த பின்னர் அதன் வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்ளல் அதனினும் கடினம். எவ்வாறு எனில், தொழிலை வளர்க்க அதிக மூலதனம் தேவைப்படுகின்றது. தேர்ச்சியுற்ற ஆட்கள் தேவைப் படுகின்றார்கள். தொழில் நுணுக்கங்கள் தேவைப்படுகின்றன. போதுமான அளவு கச்சாப்பொருள் தேவைப்படுகின்றது. இவை யாவற்றையும் கடந்து அத்தொழில் நிலைப்பட்டு வரும்போது, தன்னுடைய முழு உற்பத்தி சக்தியுடனும் அத்தொழில் இயங்க, அப்பொருளின் தேவை குறையாது சீராக ஒரே நிலையில் இருத்தல் அவசியம். இங்குத்தான் நமது சணல் தொழில் தடுமாறுகின்றது. பன்னாட்டுக் குணாதிசயம், வாணிகம் காரணமாக, அடிக்கடி இப்பொருளின் உலக வர்த்தக அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படு கின்றன. விலையிலும் பெரும் ஏற்றத்தாழ்வுகள் அடிக்கடி ஏற்படு கின்றன. அதனால், உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுகின்றது.

எனவே, 1920க்குப் பின்னர், அதிக உற்பத்தியின் காரணமாக ஏற்படும் விலைவீழ்ச்சிகளைத் தடுக்க, உற்பத்திக் கட்டுப்பாடு, உற்பத்தித்தடை முதலிய திட்டங்கள் இடப்பட்டு நிறைவேற்றப் பட்டு வருகின்றன. இந்தக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி, கூட்டு ஆலைகளின் (Association Mills) ஒரு சமரச ஒப்பந்தப்படி, தறிகளின் சில சதவீதம் மூடப்பட்டுள்ளன. இன்னும் சில ஆலை களில் வேலைநேரம் குறைக்கப்பட்டுள்ளது. எனவே, உற்பத்திச் சக்திக்கும், உண்மையான உற்பத்திக்கும் வேறுபாடுள்ளது.

இத்தொழிலில் வருங்கால வளர்ச்சியிலும் மாறுபாடான போக்கு காணப்படுகின்றது. வங்காளத்தில் உள்ள ஆலைகள் விரைவான வளர்ச்சிப் போக்கினையும் விரிவிற்கான வகைகளையும் உடையதாகக் காணப்படும். அதேசமயத்தில், நாட்டில் பிற பகுதிகளில் உள்ள இத்தொழிலில் ஆலைகள் குறைந்த அளவை உடையதாகவும் வளர்ச்சிப்போக்கு இன்றியும் காணப்படுகிறன. இதற்குக் காரணம் கச்சாப்பொருளின் அருகாமையே. எனவே, இனி வளர்ச்சி என்பது வங்காளத்தில்தான் காணமுடியும் ஆனால், இங்குத் தான் தொழிலமைதி யின்மையின் காரணமாக ஆலைகள் அடிக்கடி மூடப்பட்டு உற்பத்தி தடைபடுகின்றது. வெளிநாட்டு ஏற்றுமதியையும் இழந்து அரிதான அந்நிய செலாவணியுமே கிடைப்பதும் கடினமாகின்றது. பாகிஸ்தானுடன் ஒப்பிடுகையில், உற்பத்திச் செலவும் நமக்குக் கூடுதலாக ஆகின்றது. பாகிஸ்தா னில் ஆலைகள் சுமார் $2\frac{1}{2}$ ஷிப்டுகள் வீதம் வேலை செய்கின்றன. இந்தச் சணல் ஆலைகள் 1 ஷிப்டு அளவுதான் வேலை செய்கின்றன. எனவே, பாகிஸ்தான் ஆலைகளில் தறிகள் நம்முடையதைவிட 30 சதம் கூடுதலான சக்தியுடையதாய் உள்ளன. இவை யாவற்றுக்கும் சிகரம் வைத்ததைப்போல், நம்முடைய அரசுக்கு ஏற்றுமதிக்கு, ஒரு டன்னுக்கு, ரூபாய் 1500/-ம் சாக்கிற்கு ஒரு டன்னுக்கு ரூபாய் 350/-ம் ஏற்றுமதிவரி விதிப்பதால் ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்படுகின்றது.

'தற்போது நிலைமை மிகவும் திருந்தியுள்ளது' என்று கூறலாம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, நமது ஆலைகள் பழைய தறிகளை ஒதுக்கிவிட்டுப் புதிய தறிகளை அமைப்பதனுல், ஆலைகளின் உற்பத்தி சக்தி அதிகரித்துள்ளது. அடுத்ததாக அமெரிக்க நாட்டில் சணல் விரிப்புகளுக்கு (Jute carpet) ஏற்பட்ட புதிய தேவையை நமது ஆலைகள் முற்றிலும் கவர்ந்து அதற்கு ஏற்றாற்போல் தங்களுடைய உற்பத்தியினை மாற்றி அமைத்துக் கொண்டன. 1955-ம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவில் விரிப்புகள் நெய்யும் தறிகள் 2300 நிறுவப்பட்டுள்ளன. நான்காவது

ஐந்தாண்டுத்திட்டத்தின் இறுதிக்குள் மேலும் இத்தகைய 1500 தறிகள் நிறுவப்படலாம். இப் பொருளின் உற்பத்தி ஆண்டிற்கு 1,12,000 டன்கள். அதாவது, இத் தொழிலின் மொத்த உற்பத்தியில் 9 சதவீதம் விரிப்புகள் உற்பத்தியே. மொத்த விரிப்பு உற்பத்தியும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவற்றை வாங்குவோரில் முதன்மையிடம் அமெரிக்காவையே சாரும். எனவே, புதிய உற்பத்தியும், உற்பத்தி முறையும், மேலான சந்தையும் இத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பவையாய் உள்ளன. இத்துடன் பருத்தித்துணி இணைந்த, பாலிதீன் என்னும் பிளாஸ்டிக் தான் இணைந்த, காகிதம் இணைந்து, சாக்குத் துணிகள் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. தற்போது நடை பெற்றுவரும் கிழக்கு வங்க உள்நாட்டுப் போரின் காரணமாக அந்நாட்டின் ஏற்றுமதியும் உற்பத்தியும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந் நிலைமை திருந்தக் குறைந்தது 3, 4 ஆண்டுகள் ஆகும். இதனிடையில் இந்தியா தனது உற்பத்தியைப் பெருக்கி, ஏற்றுமதியை அதிகரிப்பித்து, உலக சந்தையைத் தன்வயப்படுத்திக் கொள்வது எளிது.

தற்போது ஏற்பட்டுள்ள அதிகரித்த தேவையை நிறைவேற்ற கச்சா சணல் உற்பத்தியும் அதிகரிக்க வேண்டும். 1958–59ஆம் ஆண்டில் கச்சா சணல் உற்பத்தி ஒரு ஹெக்டேருக்கு 1280 கிலோ வாக இருந்தது, 1967-68-ல் 1295ஆய் உயர்ந்தது. இது போதாது. எனவே, விஞ்ஞான முறையில் விரிவான வளர்ச்சிக்கு, சணல் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை (The Jute Agricultural Research Institute) ஒரு புதிய, விரைந்து வளரும் ஒட்டு விதையை அளித்தது. இப் புதிய வகை ஒருஏக்கருக்கு 6.3 பேல் கச்சா சணலை விளைவிக்க வல்லது. தற்போது மேற்கு வங்கத்தில்தான் பெரும்பான்மை யான சணல் விளைகின்றது. இதற்கு அடுத்தாற்போல் அஸ்ஸாமிலும், பீகாரிலும் விளைகின்றது. இவைகள் போதாது. அதிக விளைச்சல் தரும் சணலை நாட்டின் பிற பகுதிகளில் விளைவிக்க வேண்டும். இத்தொழிலுக்குப் பிரகாசமான எதிர்காலம் இருப்ப தாலும், நாட்டிற்கு மிகவும் முக்கியமான அந்நிய செலாவணியைத் தேடித் தருவதாலும், இத்தொழிலின் வளர்ச்சியில் அரசு முக்கிய கவனம் செலுத்துவது மிக அவசியமானது.

(2) தேயிலைத் தொழில்
(Tea Industry)

இந்தியத் தேயிலைத் தொழில், ஐரோப்பாவிலிருந்து வந்த ஒன்றாகும். இதனுடைய வரலாறும் தனிப்பட்ட ஒன்றாகும். இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனி காலூன்றியபோது, இங்குத்

தேயிலைத் தோட்டங்கள் கிடையா. அக்கம்பெனி, சைனு விலிருந்து தேயிலையை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்து ஏராள மான பணம் சேர்த்து வந்தது. இந்நிலையில் சைனுவையே நம்பிக் கொண்டிராமல், 'மாற்று ஏற்பாடு ஒன்று செய்வது நலம்' என்ற பொதுக்கருத்து நிலவியது. 1834-ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங்க் பிரபுவின் முயற்சியினுல் அரசாங்கமே சைனு நாட்டுத் தேயிலை விதையைக் கொண்டு, ஒருதேயிலைத் தோட்டத்தை அஸ்ஸாம் மாநிலத்தில் அமைத்தது. ஐந்து ஆண்டுகள் கழித்து அஸ்ஸாம் கம்பெனி என்னும் வணிகக் கழகம் இத்தோட்டத்தை வாங்கி, 1839ஆம் ஆண்டுத் தேயிலையை இங்கிலாந்திற்கு அனுப் பியது. இலண்டன் மாநகரில் இத்தேயிலை பவுண்டு ஒன்று 34 ஷில்லிங் என்ற வீதத்தில் ஏலத்தில் விற்கப்பட்டது. முடிவாக, 1852-ஆம் ஆண்டு இந்தியத் தேயிலை மற்றநாட்டுத் தேயிலைக்கு, குறிப்பாகச் சைனு நாட்டுத் தேயிலைக்கு இணையானது என்று கண்டு, தேயிலைத் தோட்டங்கள் பேரளவில் வளர்க்கப்பட்டன.

இத்தொழிலின் ஆரம்பக் காலத்தில் தேர்ச்சியுள்ள வேலை யாட்கள் கிடைக்காமையால் அல்லலுற்றது. பண்ணை அடிமைகள் முறை பின்பற்றப்பட்டு இச்சிக்கலுக்குத் தீர்வு காணப் பெற்றது. 1871ஆம் ஆண்டிற்குப் பிறகு இத்தொழில் விரைந்து வளர்ந்தது. நாட்டின் பிறபகுதிகளிலும் இத்தொழில் பரவியது. 1890-ஆம் ஆண்டில் இந்தியத் தேயிலை சைனுவின் தேயிலை ஆதிக்கத்தை இங்கிலாந்து சந்தையிலிருந்து முற்றிலும் விலக்கியது. 1903-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மொத்தத் தேயிலை இறக்குமதியில் இந்தி யாவின் பங்கு 51 சதம் ஆகும். ஆனுல், உடனடியாக ஏற்பட்ட விலை வீழ்ச்சியினுல் அத்தொழில் அல்லலுற்றது. புதிய சந்தை களாக, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா முதலியன ஏற் பட்டன. முதலாவது உலகப் போரின்போது, ரஷிய சந்தையை இந்தியா இழக்கநேரிட்டது. ஆயினும், விலை உயர்வும் இங்கிலாந்து சந்தையின் வளர்ச்சியும் கொண்டு இந்தியாவால் அந்நிலைமையைச் சமாளிக்க முடிந்தது. 1931-ஆம் ஆண்டுப் பொருளாதார மந்தத்தினுல் தேயிலையின் விலை குறைந்தபோது, 'பன்னுட்டுத் தேயிலை வணிக ஒப்பந்தம்' 1933-ஆம் ஆண்டு மேற்கொள்ளப் பட்டு, தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் முடக்கப்பட்டன. பிற்காலத்தில் ஏற்பட்ட தேயிலைத் தொழிலின் வளர்ச்சியைப் பின் வரும் அட்டவணை 40-ல் காணலாம்.

தேயிலைத்தொழில் ஒரு முக்கியமான தோட்டத் தொழிலாகும். இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முதலீடு ரூபாய் 120 கோடிக்கும் மேலாகும். 10 லட்சம் நபர்களுக்கு இத்தொழில் வேலையளிக்

அட்டவணை 41

தேயிலைத் தோட்டத்தொழில்-பரப்பு. உற்பத்தி மற்றும் சராசரி விளைச்சல்

ஆண்டு	பரப்பு (000 ஹெக்டேரில்)	உற்பத்தி மில்லியன் கிலோகிராமில்	சராசரி விளைச்சல் ஏக்கருக்கு கிலோகிராம்களில்
1950	315.7	278.2	881
1953	330.2	307.7	961
1960	330.7	321.1	971
1963	334.0	346.4	1,037
1964	337.9	372.5	1,102
1965	341.6	364.9	1,068

கின்றது. அரசிற்குப் பலவிதமான வரிகள் மூலம் குறிப்பாகத் தீர்வை வரிமூலம் ரூபாய் 16 கோடியும், விற்பனை நிலவரிகள் மூலம் ரூபாய் 4 கோடியும் வருமானம் கிடைக்கின்றது. இத்துடன் இத் தொழிலின் இலாபத்தில் 50-லிருந்து 60 சதவீதம், மத்திய வருமான வரியாகவும், மாநில விவசாய வருமான வரியாகவும், அரசாங்கத்திற்குச் செல்கின்றது. உள்நாட்டுத் தேயிலை நுகர்வு 250 மில்லியன் பவுண்டுகளாக உள்ளது. அனேகமாக 60-லிருந்து 70 சதவித உற்பத்தி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. உலக மொத்த தேயிலை ஏற்றுமதியில், இந்திய தேயிலை ஏற்றுமதியின் பங்கு 40 சதவீதம் ஆகும்.

இந்தியத் தேயிலைத்தொழில் ஏற்றுமதிக்கெனவே உள்ள தொழிலாகும். ஆதலின், தேயிலை ஏற்றுமதி வளர்ச்சியைப் பின் வரும் அட்டவணை 41-ல் காணலாம்.

தேயிலையின் ஏற்றுமதி குறைந்து கொண்டே வருகின்றது. இதற்குக் காரணம், பிறநாடுகளின், குறிப்பாகச் சிலோன் நாட்டின் போட்டியே. இந்திய அரசின் தீர்வை வரியின் காரணமாகத் தேயிலை விலை உயர்ந்ததும் மற்றொரு காரணமாகும். 1967-68-ல் நாணய மதிப்புக் குறைவின் காரணமாக ஏற்றுமதி அதிகரித்தது. தேயிலை உற்பத்தியாளர்களும் நல்ல தேயிலை ஏற்றுமதி பெருக, தேயிலையின் தரம் உயர வேண்டும். அரசும், வரி விதிப்பதில் சற்று மதியூகத்துடன் நடந்து கொள்ளுதலும் வேண்டும்.

அட்டவணை 42

தேயிலை ஏற்றுமதி

ஆண்டு	அளவு (மில்லியன் கிலோகிராம்களில்)	மதிப்பு (கோடி ரூபாய் களில்)
1958	229.5	136.5
1960	193.1	119.9
1962	211.9	123.5
1964	210.5	124.9
1965	199.4	114.6
1967–68	252.3	......

தொழில் குறை

முதலாவது குறை மிகவும் உயர்வான உற்பத்திச் செலவு. பொதுவாக விலையேற்றத்தின் காரணமாகவும் அரசின் தூண்டுதலினால் ஏற்படுத்தப்பட்ட தோட்டத் தொழிலாளர் நலத் திட்டங்களினாலும், தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியம் உயர்ந்து கொண்டே வருகின்றது. இத்தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களின் விலையும் மிகவும் உயர்ந்து விட்டது. இத்தொழிலுக்குத் தேவையான இன்றியமையாத உரம் அமோனியம் சல்பேட். இவ்வுரத்தின் விலையும் அண்மை ஆண்டுகளில் உயர்ந்து விட்டது. இவ்வாறு தேவையான எல்லாப் பொருள்களின் விலையும் கூலியும் உயர்ந்து விட்டமையால், தேயிலை விலையினையும் உயர்த்துதல் அவசியமாகி விட்டது. ஆயினும், தற்போது தீர்வை வரி உயர்வின் காரணமாகத் தேயிலையின் விலை உயர்ந்து, உள்நாட்டு நுகர்ச்சியை ஓரளவிற்குக் குறைத்துள்ளது. இதன் காரணமாக, பிற பானங்களை நுகர்வோர், நாடத் தொடங்கியுள்ளனர். எனவே, உற்பத்திச் செலவைச் சரிக் கட்ட வேண்டிய தேயிலையின் விற்பனை விலையை உயர்த்த வழியில்லை.

தற்போது நம்நாட்டுத் தேயிலை, உலகச் சந்தையில் சிலோன், இந்தோனேசியா மற்றும் ஐப்பான் நாட்டுத் தேயிலைகளுடன் தீவிரமாகப் போட்டியிட வேண்டிய நிலையில் உள்ளது. இந்நிலையில் தேயிலையின் விலையை உயர்த்தாது, மேலாண்மைச் செலவுக் குறைப்பு, புதுமை முறைகளைக் கையாளுதல் ஆகிய

..RA PUB..

வற்ருல் உற்பத்திச் செலவைக் குறைப்பதே அறிவுடைமையாகும். அஸ்ஸாம் மாநிலத்தில் தேயிலைக்குச் சுமைத்தாக்கு வரியும், மேற்கு வங்காளத்தில் நுழைவு வரியும் (Entry Tax) விதிக்கப்படுகின்றன. 'இவ்வரிகளை எடுத்து விடவேண்டும்' என்று தோட்டத் தொழில் விசாரணைக் குழு பரிந்துரைத்தபோதும் இவ்வரிகள் எடுக்கப்பட வில்லை இது வருந்துதற்குரியது.

இரண்டாவது குறை, நம் தொழில் இலண்டன் நகர ஏலத்தை மிகவும் நம்பி யிருத்தலாகும். இலண்டன் ஏலச் சராசரி விலையினை ஒட்டி, தேயிலையின் விலையை நிர்ணயிப்பது, நம் நாட்டுத் தேயிலை உற்பத்தியாளருக்கும் நன்மை பயக்கவில்லை; நுகர்வோருக்கும் நன்மை பயக்கவில்லை. தற்போது விலை நிர்ண யிக்கும்போது, 'இலண்டன், கல்கத்தா மற்றும் கொச்சி ஏல விலை களை ஒட்டித் தேயிலையின் சராசரி விலையை நிர்ணயிக்க வேண்டும்' என்ற கருத்து நிலவுகின்றது. இது ஒரு நல்ல முயற்சியாகும். இந்திய மத்திய அரசும், தேயிலை ஏலக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, இலண்டன் தேயிலை ஏலத்திற்கு நேரடியாக எடுத்துச் செல்லப்படும் தேயிலையின் அளவைக் குறைத்துள்ளது. இது ஒரு நல்ல ஆதரவாகும். இதனுல் கல்கத்தா, கொச்சின் ஏலச் சந்தைகளும் முக்கியத்துவம் அடைந்து வருகின்றன.

மூன்ருவது குறை, இந்திய நாணய மதிப்பின் குறைப்பினுல் ஏற்றுமதியில் ஏற்படும் மாற்றங்களைத் தழுவியது. 1966-ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் தேதி இந்திய ரூபாயின் மதிப்பு 36.6 சதம் முன் மதிப்பை விடக் குறைந்தது. ஆயினும், நாணயமதிப்புக் குறைப்புடன், தேயிலைக்குக் கிலோவுக்கு ரூபாய் இரண்டு ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டது. இந்த வரி விதிப்பு, மலிவுவிலைத் தேயிலை யின்மேல் சுமத்தப்பட்ட பெரும் பகுதி ஆகும். சாதாரண மற்றும் நடுத்தரத் தேயிலைகள், நாணய மதிப்புக் குறைப்பினுல் பலனடைய முடியவில்லை. உண்மையில் 1966ஆம் ஆண்டு அக்டோபரில் இந்த ரகத் தேயிலைகளின் சராசரி ஏற்றுமதி, 1965 ஆம் ஆண்டு இதே பருவத்தில் செய்யப்பட்ட ஏற்றுமதியை விடக் குறைவாகும். இக்குறையினை உணர்ந்த மத்திய அரசும் 1966 நவம்பரில் இவ்வரியைத் தேயிலை மதிப்பிற்கேற்றவாறு மாற்றி அமைத்தது. பின்னர் 1967-68ஆம் ஆண்டு, 1969-70 ஆண்டு வரவு செலவுத் திட்டங்களில் படிப்படியாகத் தேயிலை ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டு 1970-71ஆம் ஆண்டிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது.

தற்கால நிலை

இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர், அரசும் தொழிலாளர் நலத்திலும் – குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர் நலத்திலும் அக்கறை காட்டி அவர்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகின்றது. 1957ஆம் ஆண்டு ஜூலை மாதம், அரசும், தோட்டத் தொழில் விசாரணைக்குழுவின் யோசனையான, தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களின் நலனை அதிகரிக்க ஒப்புக் கொண்டுள்ளது. அண்மையில் நிறுவப்பட்ட தேயிலைக் குழுக்கள் (Tea-councils) இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, மேற்கு ஜெர்மனி மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளில், தேயிலை நுகர்ச்சியை விரிவுபடுத்த நல்ல பணி செய்து வருகின்றன. அவைகளின் பணம் மேலும் விஸ்தரிக்கப் படுமாயின், நாணய மதிப்புக் குறைப்பை முற்றிலும் பயன்படுத்திக் கொண்டு தேயிலை ஏற்றுமதியைப் பன்மடங்கு பெருக்க முடியும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேயிலை உற்பத்தியை 1000 மில்லியன் பவுண்டிற்கு உயர்த்துவது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேயிலை உற்பத்தி அளவினை உயர்த்திணல் மட்டும் நிறைவு பெறுது. தேயிலையின் தரம் உயர்த்தப்படுதல் வேண்டும். அப்போதுதான், ஏற்றுமதிச் சந்தையில், அல்லலின்றி நல்ல விலைக்கு நாம் தேயிலையை விற்க முடியும். தேயிலைக்கு நல்ல விலையைப் பெறுவதன்மூலம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நலனிலும் முன்னேற்றம் காண முடியும். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தேயிலையின் நுகர்ச்சி அதிகரிக்கப் பரந்த அளவில் பிரசாரம் செய்யப்படுதல் வேண்டும். தற்போது உலகத் தேயிலைச் சந்தை நல்ல தேயிலை அளிப்புடையதாக உள்ளது. எனவே, கடும் போட்டியும் இப்பொழுது நிலவுகின்றது. உண்மை என்னவெனில், தற்போது உலக முழுவதும் கிடைக்கின்ற தேயிலையின் அளிப்பு, போதுமான நுகர்விற்கு அல்லது தேவைக்கு அதிகமாகவே இருக்கின்றது. தேயிலைத் தேவையினை அளிப்பிற்கேற்றவாறு திருத்தி அமைக்க வேண்டியுள்ளது. உணவு, மற்றும் விவசாய நிறுவனம் (The Food and Agriaultural organisation) 1971ஆம் ஆண்டு, 'உலகில் சுமார் 100 மில்லியன் கிலோ கிராம் அளவிற்குத் தேயிலை எச்சம் இருக்கலாம்' என்று தற்போதைய நுகர்ச்சியையும் அளிப்பையும் கொண்டு அறிவித்துள்ளது. சீரான விட்டம் நல்லதொரு பரந்த பிரசாரம், உயர் தரமுள்ள தேயிலையினை அதிகம் உற்பத்தி செய்தால், மேலும் தேயிலையினை அமைத்தல், பங்கீடு செய்தல் ஆகியவற்றில் மேலும் கவனம் செலுத்துதல் நலம்.

7. தொழில் வளர்ச்சி (4)

(1) நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் விவசாயத் தொழில் துறைகளின் கூட்டுப் பங்கு

பொருளாதார வளர்ச்சிக்கான வழிகளில் நாம் எந்நாட்டு முறையைப் பின்பற்ற வேண்டும் என்று தெரிந்து கொள்ள எல்லோரும் ஆவலாக உள்ளனர். நம் நாடு பின் தங்கிய நாடு. வளர்ச்சியடையாத அல்லது வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் ஒன்று என்பதனையும், பின்தங்கியமைக்கான காரணங்களையும் யாவரும் அறிவர். 'நம் நாடு ஏன் ஏழ்மையாக இருக்கின்றது' என்று கேட்டால், 'ஏழை நாடு நம் நாடு' என்றுதான் சொல்வார்களே தவிர, 'இந்த ஏழ்மையினைப்போக்க என்னவழி?' என்று கேட்டால், ஒரு தெளிவான விளக்கம் தர ஒருசிலரே முன் வருகின்றனர். குறை கூறுவது என்பது மிகவும் எளிது. ''அமெரிக்காவைப் பாருங்கள், ஜப்பானைப் பாருங்கள்; சோவியத் ரஷ்யாவைப் பாருங்கள்: அவைகள் எவ்வளவு வேகமாக வளர்ச்சியடைந்துள்ளன. சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகள் ஆகியும் முன்னேற்றமே இல்லை'' என்று சிலரும், இன்னும் சிலர், எவ்வழியிலும் செல்லாமல், எக்கொள்கையையும் ஆதரிக்காமல் நடுநிலைமையைப் பின்பற்றுவதனால்தான் நாம் பின்தங்கி இருக்கின்றோம் என்று பறை சாற்றுவார்கள். அமெரிக்கா நாடும், ரஷ்யா நாடும் கூடத் தங்களுடைய பொருளாதார வளர்ச்சியின் முதல் கட்டத்தில் மிகவும் அல்லலுற்றனர் என்பது அவர்களுடைய பொருளாதார வரலாற்றில் தெரிய வருகின்றது. முதல் கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்திற்கு வருவதுதான் மிகவும் கடினமான வேலையாகும். இதனை உந்து நிலை (Tabe-oft Stage) என்று கூறுவர் விமானம் தரையில் வேகமாக ஓடி, தரையை விட்டு உயரக் கிளம்பும்போது தரையை அழுத்தமாக உந்தி, சட்டென்று ஓரடி இரண்டடி என்று உயர்ந்து கொண்டே செல்லும்.

அவ்வாறு குறிப்பிட்ட இடத்திலும், நேரத்திலும், அது தரையி லிருந்து கிளம்பாவிட்டால் மீண்டும், மீண்டும் தரையிலேயே சுற்றிக்கொண்டுதான் இருக்கவேண்டும்; அல்லது தரையிலிருந்து கிளம்பிப் பறக்க முடியாது. இதுபோலவே, நம்முடைய பொருளா தாரமும் முதல் கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்திற்கு உயர்த்தப்படும் நிலையில் உள்ளது.

பேராசிரியர் W. W. ரோஸ்டோ, அமெரிக்க நாடு இவ்வுந்துக் கட்டத்தை 1860ஆம் ஆண்டு தாண்டியது என்றும், அதன் பின்னர் தன்னுடைய எச்சமான முதலைக்கொண்டும், பன்னாட்டு முதலீட்டைக்கொண்டும், பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொண்டது என்று கூறுகின்றனர். அதாவது, இதுகாறும் வெளிமுதலைக்கொண்டு, பொருளாதாரத்தை வளர்த்து வந்தது. தன்னுடைய முதலைக்கொண்டே, பின்னர்ச் சீரான வளர்ச்சியைத் தொடங்கியது என்கிறார். இந்தியாவின் நில அளவைப்போல் மூன்று மடங்கு நில வளமும், இந்திய மக்கள் தொகையில் பாதிக்கும் குறைவான மக்கள் தொகையும் கொண்ட அமெரிக்க நாடு, வெளிநாட்டு முதலீட்டையும் தொழில் நுணுக்க அறிவையும் பெற்றதால், முதல் கட்டத்தைச் சுலபமாகத் தாண்ட முடிந்ததில் வியப்பு ஏதுமில்லை. இந்நிலை ருஷ்ய நாட்டில் 50 ஆண்டுகள் கழிந்து ஏற்பட்டது. அதாவது 1890-ம் ஆண்டிற்கும் 1914-ம் ஆண்டிற்கும் இடையில் ஏற்பட்டது. ருஷ்ய நாட்டின் இரண் டாவது கட்டத்தை அடைவதற்கு 1895-ம் ஆண்டு ஏற்பட்ட தானியங்களின் உலகவிலை அதிகரிப்பு ஒருகாரணமாகும். முதல் உலகப்போரின்போது ஏற்பட்ட இரயில்வேக்களின் வளர்ச்சி, போக்குவரத்து வசதியை அதிகரிக்கச் செய்து உந்து கட்டத்தைச் சுலபமாகச் செயல்படுத்த உதவியது. அமெரிக்காவைப் போன்றே ருஷ்ய நாடும், மக்கள் தொகையை ஒப்பிட்டுப் பார்க்கையில் ஏராளமான கனிவளத்தினையும் பிற இயற்கை வளங்களையும் பெற்றிருந்தது. அமெரிக்க நாட்டின் நிலவளம் இங்குக் கவனித்தற் குரியது. கன்னி நிலமாக இருந்தமையின் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டவுடன், நல்ல பலனைக் கொடுத்தது. தேவைக்குமேல் விளைந்தவற்றை ஏற்றுமதி செய்யவும் முடிந்தது. 1860-க்கு முன்னால் விவசாயம் ஒரு முக்கிய தொழிலாக இருந்தது என்பதனை யும், அமெரிக்காவின் தென்பகுதி உள்நாட்டுப் போருக்கு முன்னால் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்குக் காரணம் விவசாயம் என்பதனையும் நினைவிற்குக் கொண்டு வரவேண்டும். விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்தே, தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்து கொண்டனர். சோவியத் ருஷ்ய நாடும், 1917-ம் ஆண்டுப் புரட்சிக்கு முன்னர், தொழில் வளமடையாத நாடு அல்ல. இங்கிலாந்து, பிரான்சு

நாட்டின் தொழில் நுணுக்க, மூலதன உதவியுடன் ஓரளவிற்குத் தொழில் வளர்ச்சிக்கான விதை ஊன்றப்பட்டுவிட்டது. 1917-ம் ஆண்டிற்குப் பின்னரே வெளி முதல் கிடைக்கவில்லையே தவிர, முன்னர் கிடைக்கப் பெற்றிருந்தது. 1914-ம் ஆண்டிலேயே உந்து கட்டத்தைத் தாண்டியதற்கான காரணம் விவசாயம், தொழில் ஆகிய இரண்டின் வளர்ச்சியே ஆகும்.

பெரும்பாலானோர் நினைத்துக்கொண்டிருப்பதுபோல, நாம் இயற்கை வளங்களை (அமெரிக்க, ருஷ்ய நாட்டு வளங்களைப்பிடுகையில்) பெற்றிருக்கவில்லை. எனவே, அமெரிக்க நாட்டைப் போல, ருஷ்ய நாட்டைப்போல, நாம் ஏன் வளர இயலவில்லை என்பது தெளிவு. அமெரிக்க ருஷ்ய நாட்டுடன் நம் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிட்டுப்பார்ப்பது பொருந்தாது. நாம் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளக் கூடிய ஒரே நாடு சீனு தான். இரண்டு நாடுகளிலும் மக்கள் தொகை மிகவும் அதிகம். தொழில் வளர்ச்சியை ஆதரிப்போர், பெரும் மக்கள் தொகை தேவை என்றும் அப்பொழுதுதான் உள்நாட்டுச் சந்தையின் அளவு பெரிதாக இருக்கும் என்றும் கூறுகின்றனர். உள்நாட்டுச் சந்தை பெரிதாவதற்கு மக்களின் வாங்கும் சக்தி உயர வேண்டும். ஆனுல், பொருள்களை வாங்கும் இந்தச் சக்தியை ஓரநாளில், மந்திரத்தால் திடீரென்று வளர்த்து விட இயலாது. நிலத்தில் உழைப்போரின் எண்ணிக்கை குறைந்தது. அதாவது தேவைகட்குமேல் நிலத்தில் பாடுபடும் உழைப்பாளிகளின் எண்ணிக்கை குறைந்து, உற்பத்தி அதிகரிக்க வேண்டும். ஆலையில் வேலை செய்வோருக்கும். நிலத்தில் வேலை செய்வோருக்கும் தேவையான அளவிற்கு அல்லது போதுமான அளவிற்கு விவசாய உற்பத்தி இருத்தல் வேண்டும். அப்போதுதான், விவசாயி வாங்கும் சக்தியினைப்பெற்று, ஆலைகளில் உற்பத்தியாகும் நுகர்வுப் பொருள்களை வாங்க முடியும்; உள்நாட்டுச் சந்தையும் வளர இயலும். உணவு உற்பத்திப் பெருகாவிட்டால் இந்தியாவில் தொழில் வளர்ச்சியினுல் மட்டும் பொதுப் பொருளாதார வளர்ச்சியைப் பெறமுடியாது. ஏனெனில், இந்திய ஆலைப்பொருள்களுக்கு உலகச் சந்தையில் அவ்வளவு வரவேற்பு இல்லை. உலகச் சந்தையில் தொழிற் பொருள்களுக்கு ஜப்பான்' அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகியவற்றின் தீவிரமான, போட்டி உள்ளது. நம்மை விடப் பல ஆண்டுகளுக்கு முன்பே தொழிற்புரட்சியை இந்நாடுகள் கண்டுவிட்டமை, தொழில் திறன் மிகுந்தும் பேரளவு உற்பத்தியின் காரணமாகக் குறைந்த உற்பத்திச் செலவிலும் சாமான்களை அளிக்கின்றன. ஆலைப்பொருள்களின்மூலம் நமது ஏற்றுமதியைப் பெருக்கி, அதனுல் பொருளாதாரத் தன்னிறைவினையும், பொருளாதார வளர்ச்சியினையும்

பேரளவிலும் பெற முடியும் என்பதும் கனவாகவே முடியும். முதலில் நமது இறக்குமதிகளைக் குறைக்க முயற்சி செய்தல் வேண்டும். குறிப்பாக உணவுப் பொருள்களின் இறக்குமதியைத் தவிர்க்க வேண்டும். உணவுப் பொருள்களின் அதிக உற்பத்தியின் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்க முயல வேண்டும். அப்போது தான் ஆலைப் பொருள்களுக்கு உள்நாட்டுச், சந்தையை விரிவு படுத்தித் தேசிய வருமானத்தைப் பெருக்கமுடியும். தலாநபர் வருமானமும் உயரும்.

தொழில் வளர்ச்சிக்கு, முதல் திரட்சியின் இன்றியமையாமை அறிந்ததே. முதல் திரட்சிக்குக் கம்யூனிஸ்ட் சீனாவில் பின்பற்றிய முறை நம்முடைய சிக்கலுக்கு வழிகாட்டியாக அமையும். விவசாயக் கூட்டுறவுகளின் நோக்கத்தை அறிவிக்கையில், 'உணவுத் தானியங்கள் சந்தையில் விற்கக் கூடியஅளவிற்குப் பெருக்கி, அதன் மூலம் முதல்திரட்டித் தொழில் வளர்ச்சியை மேற்கொள்ளவேண்டும்' என்று சீனா கூட்டாட்சி கூறியுள்ளது. சாங்-சிங்-தாய் என்பார் 'நாட்டைத் தொழில் மயமாக்க விவசாயக் கூட்டுறவுகள் மூலம் முதல் திரட்டுங்கள்' என்று 1955-ல் ஒரு கட்டுரையில் கூறியுள்ள கருத்துக்கள் போற்றுதற்குரியன. நமக்கும் எடுத்துக்காட்டாக உள்ளன. 'நம்முடைய தொழில் வளர்ச்சி முக்கியமாகக் கனரகத் தொழில் வளர்ச்சிக்குக் கணக்கிலடங்கா முதல் தேவையாக உள்ளது. இம்முதலைத் தகுந்த கால அளவில்தான் ஈட்ட முடியும். 'தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதல் நம்நாட்டுக்குள் ஏற்படும் முதல் திரட்சியினால் வர இயலும்' என்பது நம் யாவருக்கும் தெரிந்ததே. விவசாயத்துறையில் முதல்திரட்சி முக்கியமான தொன்றாகும். நம்முடைய தொழில் நுணுக்க அறிவுக் குறைவால், புதுமையான இயந்திரங்கள் இயந்திரக்கருவிகள், மேலும் கனரக அல்லது நுண்ணிய கருவிகளை நம்நாட்டிலேயே உற்பத்தி செய்ய இயலாது இருக்கின்றது, இவைகளைப்பிற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய வேண்டி உள்ளது. இவைகளை இறக்குமதி செய்ய முதலாவது நம்முடைய ஏற்றுமதியை ஒழுங்கு படுத்தி அதிகரிப்பித்தல் வேண்டும். தற்சமயம் நம்முடைய தொழிற்சாலைகள் பின்தங்கிய நிலையில் இருக்கையில் நம்முடைய பெரும்பான்மையான ஏற்றுமதி விவசாயப் பொருள்கள், உள்நாட்டுப் பொருள்கள் மற்றும் தாதுப்பொருள்களாகவே உள்ளன. இவற்றிலிருந்து நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பெருக்க உற்ற துணையாக, விவசாய உற்பத்தி வளர்ச்சி இருக்க வேண்டுமென்று தெரிகின்றதல்லவா?

(Chang-Ching Tai—"Develop Agricultural Co-operation to Accumulate Capital for the Industrialisation of the State' dated December 2—1955.

சீனாவைப்போல் நாம் கூட்டுறவு விவசாயத்தைக் கண்டிப்பாகப் பின்பற்ற நம்முடைய அரசியல் சட்டமும், அரசியல் அமைப்பும் இடம் தரவில்லை. மேலும், சீனாவில்கூட, கூட்டுறவுப் பண்ணைகள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி யளிக்கவில்லை என்பதனை, 1959ஆம் ஆண்டு சோவியத் ருஷ்யாவின் அரசியல் தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற நிகிட்டரங் குருஷ்சாவ், தன்னுடைய சைன நாட்டுப் பயணத்திற்குப் பின்னர் கூறியுள்ளார். ஆயினும், விவசாய வளர்ச்சி, தொழில் வளர்ச்சிக்கு நிச்சயம் உதவியாக உள்ளது. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றைப் போன்று, நமக்குப் போதுமான வளங்கள் இல்லை. நம்முடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காலனிகளும் இல்லை. நம்முடைய விவசாயம் மற்றும் தொழில்களின் இணைந்த வளர்ச்சி (தொழிலாளர்களுக்கு அவர்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பாதிக்காத வகையில் அமைதல் வேண்டும்). வெளி நாடுகளிலிருந்து முதல் பெற இயலும். வெளி நாட்டு முதல்கொண்டு செயல்படும் திட்டங்கள் வட்டியைச் சம்பாதிக்கும் அளவிலாவது திறம்படச் செயல்பட வேண்டும். பாசனத் திட்டங்கள், அணை கட்டுதல் போன்ற விவசாயத் திட்டங்களுக்கு இக்கடன்கள் மிகவும் தேவையாக உள்ளன. ஆயினும், இத்திட்டங்களின் பலன் உடனடியாகக் கிட்டாது. கிடைக்கும் பலன்களும் விவசாயிகளின் உணவுத்தேவை அதிகமாக இருப்பதால், விவசாயிகளினாலேயே, உபயோகிக்கப்பட்டு வருகின்றன. திட்டமிட்டபடி, இறக்குமதியைக் குறைக்கவோ, அல்லது ஏற்றுமதிக்கு உதவியோ, வெளி நாடுகளுக்கு நாம் தரவேண்டிய தொகையைக் குறைக்க இயலவில்லை. எவ்வாறாயினும், வெளிநாட்டு உதவியை நாடியே நாம் பொருளாதார வளர்ச்சியை எப்போதும் பேண இயலாது. வெளி நாட்டு உதவி ஒரு துணையாகத்தான் இருக்கமுடியும். வேண்டிய முதலை, ஏற்றுமதியைக் கொண்டே பெருக்க இயலும். எனவே, தொழில் வளர்ச்சி என்பது திடீரென்று ஏற்படுத்தக்கூடியதன்று. விவசாய மிச்சத்தின் மூலமே, சிறிது சிறிதாகத்தான் தொழில் வளர்ச்சி அடைய இயலும்.

'பொதுப் பொருளாதார வளர்ச்சிக்கு, மக்கள் தொகையின் அளவு நம்நாட்டில் ஒரு தடையாக உள்ளது' என்பது யாவரும் அறிந்ததே. அதிகமான கிராமப்புற மக்கள் தொகையினால், மறைமுக வேலையின்மை நிலை (Disgursed Unemployment) கணிசமான அளவுக்கு இருப்பதனையும் பொருளாதார அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இத்துடன் தேவைக்குமேல் வேலையில் அமர்ந்திருப்பவர்களும் விவசாயத்துறையில் உண்டு. மினகல் மனாயிலெஸ்கோ (Minail Monoilesco) என்னும் ருமேனிய நாட்டுத் தொழிலதிபர், தம்முடைய ஆராய்ச்சி ஒன்றில் இருபத்திரண்டு

நாடுகளில் மொத்த வருமானத்தில் விவசாயத்தின் வருமானப் பங்கு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டுள்ளார். இருபத்திரண்டு மொத்த நாடுகளில் நாட்டு வருமானத்தில் 20 சதத்தை, மொத்தத் தொழிலாளிகளில் 52சதம் உள்ள விவசாயிகள் உற்பத்தி செய்கின்றனர். மொத்த நாட்டு வருமானத்தில் மீத மான 80 சதத்தை, விவசாயிகள் அல்லாத 48 சத தொழி லாளர்கள் உற்பத்தி செய்கின்றனர் என்று ஆராய்ந்துள்ளனர். எனவே, எவ்வளவுக் கெவ்வளவு தொழிலாளிகள் விவசாயம் தவிர பிற துறைகளில் ஈடுபடுகின்றனரோ அந்த அளவிற்குத் தேசிய வருமானமும் அதிகரிக்கும் என்பது தெளிவு. இந்தியத் தொழிலாளி களில் 72 சதம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்; 12 சதமே தொழிற் சாலைகளில் ஈடுபட்டுள்ளனர். ஐக்கிய அமெரிக்க நாட்டில் இவ் விதம் முறையே 53-22 ஆகவும், ஜப்பானில் 55-21 ஆகவும் உள்ளது. எனவே, நம் நாட்டிலும் இவ்விதத்தை மாற்றியமைக்க, தொழில்துறை வளர்ச்சி அத்தியாவசிய மாகிறது. மக்களில் பெரும்பகுதியினர் விவசாயத்தை நாடியுள்ளனர் என்றால், அதற்கு விவசாயத்தின்மேல் உள்ள ஆவல் காரணமன்று. வேறு வழி யின்றி விவசாயத்தைச் சார்ந்துள்ளனர். மக்களுடைய தேவை களைப் பார்க்கும்போது உணவு அவசியமான தேவையாக இருப் பினும், அதற்கு ஓர் எல்லை உண்டு. ஆனால், பிற தேவைகள், குறிப்பாக ஆலைப் பொருள்களின் தேவைக்கு எல்லையே இல்லை.

எனவே, ஆலைப்பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவையும் விவசாயத்தை நாடி இருப்போரை மற்ற தொழில்களுக்கு மாற்ற வேண்டிய அவசியமும் உள்ளது. இந் நிலையில்தான் ஆலை உற்பத்தி வளர்ச்சி மிகவும் அவசியமான தொன்றாயுள்ளது. விவசாயம் இயற்கையைப் பெரிதும் நாடி யிருப்பதால், செயற்கைச் சக்திகள்மூலம் உற்பத்தியை அதிகரித் துத் தேசிய வருமானத்தைப் பெருக்க இயலாது இருக்கின்றது. ஆனால், தொழிலிலோ, செயற்கைச் சக்திகளின் மூலம், இயந்திரங் களின் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, தேசிய வருமானத்தைப் பெருக்க இயலும். எக்பர்ட்டிவ்ரைஸ் என்பார் தம்முடைய அறிக்கை ஒன்றில் கூறுகின்றார். தலா நபர் உண்மை வருமானத் தில் ஏற்படும் ஒவ்வொரு 10 சத ஏற்றத்திற்கும் விவசாயத்தினால் தேசீய வருமானத்திற்குக் கிடைக்கும் பங்கு 1,5 சதம் குறைந்து கொண்டே செல்கின்றது. அதாவது தேச மொத்த வருமானம் அதிகரிக்கும்போது, விவசாய வருமானத்தின் பங்கு குறை வாகவே அதிகரிக்கின்றது. அதே சமயம் விவசாயமல்லாத பிற துறைகளின் வருமானத்தின் பங்கு மொத்த வருமான அதிகரிப்பில், விவசாய வருமான அதிகரிப்புச் சதத்தை விட அதிக மாகவே உள்ளது.

For every 10 percent in per capita real income, the fraction of national income arising from agriculture drops by 1.5 percentage points. As per capita out-put rises, the out-put of agriculture rises less than in proportion to total national out-put While the out-put of industry and the non-agricultural part of the economy, generally rises faster than overall out-put — Vide The Balance between Agriculture and Industry in Economic Development.

மேற்சொன்ன வாதங்களிலிருந்து, விவசாயத் தொழில்களின் சமநிலை வளர்ச்சி பொதுப்பொரு ளாதார வளர்ச்சிக்குதவும் என்பது விளங்கும்.

இந்தியாவைப் பொருத்தவரையில், பொதுவாகச் சுதந்திரத் திற்குப்பின்னர், தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டு வருகின்றது. இதே சமயம் விவசாய வளர்ச்சியும் புறக் கணிக்கப்படவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டம் விவசாய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாய் இருந்தது. நான்காவது ஐந்தாண்டுத்திட்ட முடிவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும் என்பது நிச்சயம். அதனுல், நம்முடைய உணவுப் பொருள் இறக்குமதி நிற்பதோடு ஏற்றுமதியும் ஆரம்பமாகும். அதனுல், மூலதனச் சிக்கலும் தீர வாய்ப்புண்டு. இத்துடன் அல்லது சில தொழில்களில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சியை நம்பியுள்ளதையும் இங்குக் குறிப்பிடுதல் அவசியம். உதாரண மாகப் பருத்தி நெசவுத் தொழில், பருத்தி விளைச்சலை நம்பி யுள்ளது. நம் நாட்டில் இதுகாறும் குட்டை இழைப்பருத்தியே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. உற்பத்தியின் அளவும் குறை வாகும். நீண்ட இழைப் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளது. கச்சாப் பருத்தியின் குறைந்த அளிப்பினுல் பருத்தித் தொழில் எவ்வளவு தொல்லையடைகின்றது என்பதனை, பருத்தி நெசவுத் தொழிலை விளக்கும்போது கூறியுள்ளோம். பருத்தி விளைச்சலைக் குறிப்பாக நீண்ட இழைப்பருத்தியினை அதிகம் விளை விப்பதன்மூலம் நம்நாட்டுப் பருத்தி நெசவுத் தொழிலையும் வளரச் செய்ய முடியும். இறக்குமதியைக் குறைத்து அந்நிய செலாவணியைச் சேமிக்கவும் இயலும். பருத்தி நூல் உற்பத்தி அதிகரிப்பின் எண்ணற்ற கைத்தறி நெசவுத் தொழிலாளிகள், நல்ல நிலையை அடைய இயலும். அரசாங்கம் இதனை உணர்ந்து, பருத்தி விளைச்சலை அதிகரிக்க முயற்சி எடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிலும் பரவலாகப் பருத்தி விளைவிக்க முயன்று வருகின்றனர்.

இவ்வாறே நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் முக்கிய தொழில்களில் ஒன்று சணல் ஆலைத்தொழில். இத் தொழிலும் சணல் விவசாயத்தை நம்பியுள்ள தொழில்தான். உயர் தரச் சணலை விளைவிக்க முயற்சி செய்தால், இத் தொழிலின் சிக்கல் தீரும். அடுத்துச் சர்க்கரை ஆலைத்தொழில், கரும்பு விளைச்சலையும் சர்க்கரைச் சாறு அதிகம் உள்ள உயர்ரகக் கரும்பு விளைச்சலையும் பொறுத்து இத்தொழிலின் வளர்ச்சி இருக்கிறது. ஏற்றுமதிக்கு உதவும் தொழில் வரிசையில் இதுவும் ஒன்றாகும். சோப்பு, வார்னிஷ், எண்ணெய் முதலிய பொருள்களைப் பெரு மளவில் தயாரிப்பதற்குப் பலவித எண்ணெய் வித்துகளை உற்பத்தி செய்வதைப் பொறுத்திருக்கிறது. இவ்வாறே விவசாயத்தை, நம்பியுள்ள தொழில்கள் எண்ணற்றவையாகும். அதுபோலவே, தொழில் உற்பத்தியை நம்பி விவசாயமும் உள்ளது. தற்போது இந்தியாவில் கால்நடைகளின் தரம் குறைவாக இருக்கிறது. கால்நடைகளின் மூலம் உழுவது சிக்கனமும் அல்ல. ஓரளவு உற்பத்திக்கு டிராக்டர்கள் தேவைப்படுகிறது. இந்தியாவில் டிராக்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மூன்றே மூன்றுதான் உள்ளன. ருஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் விவசாய வளர்ச்சிக்கு, டிராக்டர்கள் ஒரு முக்கிய காரணம் என்பதனை நினைவில் கொண்டால், டிராக்டர் தயாரிப்புத் தொழிலின் முக்கியத்துவம் புலப்படும். குறைந்த உழு நிலப் பரப்பு கொண்ட இந்தியாவில், உற்பத்தி அதிகரிக்க, தீவிர சாகுபடித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். நமது வயல் களுக்கு மாட்டுச் சாணி உரம்மட்டும் போதாது. உற்பத்தி அதிகரிக்கச் செயற்கை உரங்கள் தேவை. செயற்கை உரத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் போதுமான அளவில் தொடங்கப் பெறல் வேண்டும். பூச்சிகளினால் வீணாகும் தானிய அளவைக் குறைக்கப் பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிப்புத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்.

விவசாயம், தொழில் ஆகிய இரண்டும் நாட்டின் இரு கண்கள் ஆகும். 'எது முக்கியம்? எது வளர்ந்தால் தேசிய பொருளாதாரம் வளர்ச்சியடையும்' என்று கூறுவதில் பயனில்லை. இரண்டின் வளர்ச்சியும் சேர்ந்தாற்போல், ஒட்டியும் சமநிலையிலும் வளர்ந் தால்தான், நாட்டின் மொத்தப் பொருளாதாரநிலை உயர வாய்ப்புண்டு. ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் துறையும் விவசாயமும் இணையாகப் பங்கு கொள்ளு வனவேயன்றி, இவை தம்முள் முரண்பட்டு நிற்பன அல்ல என் பதை மீண்டும் கூறுகிறோம். இவ்விரண்டில் ஏதாவது ஒன்றினை மட்டும் போற்றி முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்க்க

வேண்டும். 'நீண்ட காலத் திட்டங்களில், விவசாய வளர்ச்சியும், தொழில் மயமாக்குதலும், தனித்தனியானவை என்றோ தம்முள் முரண்பட்டவை என்றோ நினைப்பது சரியன்று. குறிப்பிடத்தக்க அளவில் நிலையான பொருளாதார அபிவிருத்தியும், தொழில் மய மாக்குதலும் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க இயலாதவை. ஏனென்றால், தொழில் மயமாக்குவது என்பது மக்களது உயர்ந்த வருமானங்களின் விளைவால் ஏற்படுவது. மக்கள் உற்பத்திப் பண்டங்கள், பணிகளுக்காக மிகுதியாகவும் உணவுக்குத் தராதர மாக்கக் குறைவாகவும் செலவிடுவர். மேலும் இது, மக்களிடையே அதிக உற்பத்தித் திறத்திற்கு ஒரு தூண்டுகோலாகும். கிராமப் புறங்களில் விவசாயத்தைச் சார்ந்த மிகையான மக்களை இடம் பெயர்த்து மற்ற தொழில்களில் ஈடுபடச் செய்வதன்மூலம் விவசாயத் தொழில் திறனை உயர்த்தலாம்'—டாக்டர் ஸ்டாலே.

(2) தொழில் வளர்ச்சி — கட்டுப்பாடு ஆகியவற்றில் அரசின் கொள்கை

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் தொழிலின் முக்கிய பணியினைச் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம். மக்களது வாழ்க்கைத் தரம் உயர, தொழில் வளர்ச்சியின் இன்றியமை யாமையைக் கண்டோம். இங்கு மேற்கொள்ளக்கூடிய தொழில் மய முறையானது கவனத்துடன் செய்யவேண்டிய ஒன்றாகும். கட்டுப்பாடற்ற தனியார் துறையின் காரணமாக, அமெரிக்க நாட்டில், 1929-ம் ஆண்டு துவங்கிய பெரும் பொரு ளாதார மந்தம், தொழில் வளர்ச்சியிலும் தனியார் துறை வளர்ச் சியிலும் ஒரு கசப்பை ஏற்படுத்தி விட்டது. 'பொருளாதார மந்தத் திற்கு, மிகையான தொழில் வளர்ச்சி மட்டும்தான் காரணம், என்று கூற இயலாது; மிகையான தொழில் வளர்ச்சியும் ஒரு காரணம் என்று கூறலாம். எனவே, சில மேலை நாடுகளில் ஏற்பட்ட கடுமையான சர்வாதீனப் போக்கைப்போல, நமது தொழில்மய முறை அமைய வேண்டிய அவசியம் இல்லை. சர்வாதீனச் சந்தை கள் அமைவதையும் தடுக்க வேண்டும். நம் மக்கள் நலமாக வாழ் வதற்குரிய வசதிகளை அமைத்துத் தருதல், புதிய இயந்திரக் கருவி களது துணைகொண்டு தொழிலாளர் ஆக்க வன்மை பெறும் வாய்ப்புகளையும் ஓய்வையும் அளித்தல் ஆகிய நோக்கத்துடனேயே நம் நாட்டுத் தொழில் வளர்ச்சிக் கொள்கை அமைதல் வேண்டும். பொருளாதாரத் தன்னிறைவு ஏற்படுத்துவதே அரசின் கொள்கை யகா இருத்தல் வேண்டும்.

நமது தொழில் வளர்ச்சிக் கொள்கை இப்படி அமைய வேண்டியதன் அவசியம் யாது? நமது தொழில் வளர்ச்சிக்கு ஆரம்பக் கட்டங்களில் பெரிதும் துணையாக இருந்தவர்கள் மேலாண்மை பதிலாளிகள் (Managing Agents). இந்தியாவின் புதிய தொழில் வளர்ச்சிக்கு மூலகாரணமாயிருந்த மேலாண்மைப் பதிலாளிகள் இருவகையினர். அவர்கள் முறையே (1) ஆங்கில வணிக நிறுவனங்களின் பிரதிநிதிகளாக இந்தியாவிற்கு வந்த ஆங்கில வணிகர்கள். (2) பம்பாய், ஆமாதாபாத் போன்ற இடங்களில் உள்ள வணிகர்கள். மேலாண்மைப் பதிலாளிகளால்தான் பல தொழில்கள் தோற்றுவிக்கப்பட்டும், நடத்தப்பட்டும் வந்தன. சணல் ஆலைகள், தேயிலைத் தோட்டங்கள் நிலக்கரிச் சுரங்கங்கள் போன்ற பல தொழில்களுக்கு இவர்கள் முன்னோடிகளாக இருந்தமையே, மேலாண்மைப் பதிலாள்முறை தோன்றக் காரணமாக அமைந்தது. அவர்கள் நல்ல பயிற்சியும் திறமையும் கொண்ட நிர்வாகிகள் தொடர்ந்து கிடைப்பதற்கும் பெருந்துணையாய் இருந்தார்கள், தொழில்களின் நீண்டகாலத் தேவைகளுக்கும் வங்கிகள் நிதி அளிக்க முன் வராததால், இவர்களே நிதி அளித்தார்கள். போதிய நிதிப்பலமும் தொழில் ஊக்கமும் கொண்ட நபர்களின் சேர்க்கையால் தோற்றுவிக்கப்பட்ட கூட்டு வியாபாரம் அல்லது பொறுப்பு வரையறுக்கப்பட்ட சொந்த நிறுவனம் (கம்பெனி) என்று நிருவாக ஏஜன்ஸி நிறுவனத்தை அழைக்கலாம்.

மேலாண்மைப் பதிலாளிகள், புதுத் தொழில்களை நிறுவுவதற்கு வேண்டிய ஆரம்ப வேலைகளைச் செய்து, கூட்டுக் கம்பெனிகளைத் தோற்றுவித்து, அவற்றில் தங்களது சொந்த மூலதனத்தைப் போடுவதல்லாமல் உத்தரவாதிகளாகவும் இருந்து, தொழிலுக்குத் தேவைப்படும் நிதிக்கு ஏற்பாடு செய்து, தொழிலை நிர்வகிக்கின்றனர். மேலும், அவர்கள் அந்நிறுவனங்களால் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கும், மூலப் பொருள்கள், துணைப்பொருள்கள், இயந்திரங்கள் முதலியவற்றை வாங்குவதற்கும் பிரதிநிதியாய் விளங்குகின்றார்கள். தாங்கள் மேலாண்மை செய்யும் நிறுவனங்களின் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் அவர்களே வாங்கிக் கொள்வதோடு மட்டுமன்றி, அப்பத்திரங்களையும் பொதுமக்களுக்கு விற்கவும் ஆவன செய்கிறார்கள். மேல்நாட்டில் இந்தப் பணியை உறுதியளிப்போரோ (Under writers) அல்லது தொழில் பாங்குகளோ மேற்கொள்ளுவது வழக்கம்.

மேலாண்மைப் பதிலாளி முறையின் சிறப்புகளைவிட அவற்றின் குறைகள் மிக அதிகமாகும். இந்திய மேலாண்மைப் பதிலாளி முறை இயல்பாகப் பாரம்பரியமாகத் தொடர்ந்து

வருகின்றது. இது பல சமயங்களில் திறனற்ற நிர்வாகத்திற்கே வழியமைக்கின்றது. இந்தியாவில் உள்ள தொழில், மேலாண்மைப் பதிலாளிகளின் நிதியினுல் பெரிதும் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றது. நிதியானது, 'தொழிலின் ஊழியனுக இராமல் அதன் முதலாளியாகவே ஆகிவிட்டது' என்று பி.எஸ். லோகநாதன் குறிப்பிடுகின்ருர். நிர்வாகமானது ஒருசிலர் கையில் குவியத் தொடங்கிவிட்டது. தொழிலுக்கு வேண்டிய நிதிவளம் இருக்கின்றது என்ற காரணத்தால் இவ்விதக் குவியல் ஏற்படலாயிற்று. இவ்வாறு நிர்வாகம் மாறுகையில் தொழில் திறமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை அடிக்கடி கைம்மாறும் பதிலாளி கூட்டத்தாரின் தொழில் திறமையின்மையே, பம்பாயில் உள்ள பஞ்சாலைகள் பல அழியக் காரணமாகும். ஒரு நிருவாகப்பதிலாளி நிறுவனம் பல நிறுவனங்களை நிருவகிக்கும் பொழுது, அவற்றுள் சில நிறுவனங்களில் ஏற்படும் சீரழிவுகள், எல்லாவற்றிலும் பிரதிபலிக்கின்றன. நல்ல உறுதிப்பாங்குடைய நிறுவனங்கள்கூட, நிருவாகப் பதிலாளிகளின் உறுதியற்ற நிலைமையினுல் இடர்ப்பட வேண்டிய சூழ்நிலை அடிக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஊக வாணிகப் போக்கின் காரணமாகவும் பல இன்னல்கள் தொழில்களுக்கு ஏற்படுகின்றன.

அட்டவணை 41

தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் 6 நிர்வாகப் பதிலாளிகளால் நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களில் எண்ணிக்கை:

	1911	1931	1951	1955
சணல்	22	31	38	40
நிலக்கரி	24	27	36	39
சர்க்கரை	6	9	30	32
தேயிலை	58	84	96	100
பொறியியல் தொழில்	6	15	21	34

Source: Dr. N. Das 'The Future of Industrial Enterprise in India.

நிர்வாகப் பதிலாளிகள் அடையும் வருமானங்கள் அண்மைக் காலத்தில் அதிகக் கண்டத்துக் குள்ளாயின. வருமானங்கள் முதன் முதலில், 'அலுவலகப்படி' என்ற பெயரில் கொடுக்கப்பட்டன. இவ்வாறு வாங்கும் தொகைமிகவும் அபரிமிதானது என்றும் குறை கூறப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்சத் தரகுத் தொகையினை நிறுவனங்களில் இலாபம் அடைந்தாலும் அடையாவிட்டாலும் நிர்வாகப் பதிலாளிக்குக் கொடுத்தே தீரவேண்டும். மேலும், பல நிறுவனங்களின் நிர்வாகங்களையெல்லாம் ஒரே ஒரு நிர்வாகப்பதிலாளி நிறுவனத்திடம் செறிவாகச் குவியும் போக்கும் 1927–லிருந்து தொடங்கியது. இவ்வாறு நிர்வாக அதிகாரங்களைக் குவித்துக் கொள்ளும் போக்கு ஐரோப்பிய, இந்திய நிர்வாகப் பதிலாளிகளாகிய இருசாராரிடமும் பொதுவாகக் காணப்பட்டது. 1931–லிருந்து 1955 ஆண்டுவரை ஏற்பட்ட நிருவாகக் குவிப்பை அட்டவணை 42-ல் விளக்கமாகக் காணலாம்.

ஒரு நிருவாகத்தின் கீழுள்ள பல நிலையங்களை ஒரே வகை நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதால், அவற்றின் நடவடிக்கைகளை ஒருமுகமாக்க முடியும். விற்பனை, வாங்கல், மேற்பார்வை செய்தல் ஆகியவற்றைச் சிக்கனமாகக் கையாள முடியும். தொழில் சேர்க்கை இன்றியும் தங்களது தனித்த அலுவல் முறை வாழ்க்கையை இழக்காமலும், தொழிலகங்களால், பேரளவு உற்பத்தி காரணமாக ஏற்படக்கூடிய சிக்கனங்களைப் பெற முடிகின்றது. ஆனால், இத்தகைய நிர்வாக ஆட்சிக் குவிப்பின் மூலம் பெறுவதைவிட, நெருங்கிய நேரிடைக் கண்காணிப்பின் மூலம் அடையும் சிக்கனங்களினால், இதைவிட மேம்பட்ட பயனைப் பெறலாம் என்று கூறப்படுகிறது. குவிக்கப்பட்ட ஆட்சிக் குழுவானது, கணக்கீடுகளில் மோசடிசெய்தல், மூலப்பொருள்களை நேர்மையின்றி வாங்குதல், வங்கிகளில் மோசடி வியாபாரம் செய்தல் முதலிய ஒழுங்கற்ற செயல்கள் தோன்றலாயின. பெருமளவில் மொத்தமாகப் பங்குகளை நிருவாக உரிமையோடு விற்றல் வாங்கல் முதலிய நேரடி நடவடிக்கைகளினால் சமீபகாலத்தில் பல கோடி மதிப்புள்ள சுமார் 50 தொழிலகங்கள் கைம்மாறின. நிர்வாக உரிமைகளில் பெரும் அளவில் வியாபாரம் நடந்ததால், பங்குதாரர்கள் நிர்வாகப் பதிலாளிகளின் கருணையில் இருக்க வேண்டியதாயிற்று. இவ்விதமாகத் தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் வகையில் நிர்வாகப் பதிலாளிகள் பங்குகளைக் கையாளுவது தீமையே தவிர, நன்மையல்ல என்று இப்பொழுது நன்கு நிரூபிக்கப்பட்டுவிட்டது. இவை தவிர, இன்னும் சில முறைகேடான நடவடிக்கைகளும் அண்மையில் வெளிக் கொணரப்பட்டன. அவையாவன நிர்வாகத்தில், டைரக்டர்களின் அதிகாரங்

களை முறைகேடாகக் கட்டுப்படுத்துதல், டைரக்டர் சபையில் தனது ஆட்களையே நிரப்புதல், கம்பெனிகளையும்பங்குதாரர்களையும் சொந்த நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டு தாங்கள் தங்களால் நியமிக்கப்படுவோரையே, கொள்முதல் விற்பனைத் தரகர்களாகவும் இடம் பெறச் செய்தல் முதலியன.

1949-50ஆம் நிதிக்கமிஷன் (Fiscal Commission), நிர்வாகப் பதிலாளி முறையைத் திருத்த வேண்டுமே தவிர, அதை ஒழித்துவிடக் கூடாது என்று எழுதியுள்ளது. திட்டக் கமிஷன் நாட்டின் இப்போதைய பொருளாதார அமைப்பில் நிருவாகப் பதிலாளி முறையைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல் நலந்தரும் என்று குறிப்பிட்டு, முறைகேடான நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகளைக் குறைக்கும் வகையில் இந்தியக் கம்பெனிச் சட்டத்தில் இது சம்பந்தமாக உள்ள ஷரத்துக்களைக் கடுமையாக்கும்படியும் சிபாரிசு செய்தது. பேராசிரியர் கே. டி. ஷா கூற்றுப்படி, இந்த முறை அடிமுதல் நுனிவரை அதாவது வேர், கிளை, இலை, பட்டை, பூ ஆகிய அனைத்தும் அப்படியே அழுகிப்போனதாகும். முதல் வாய்ப்பிலேயே இதை ஒழித்துவிட வேண்டும். இது தொழில் துறையில் நிலவும் படைமானிய முறையில் (Vestige of Sendolion) நினைவுச் சின்னமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். இவற்றிலிருந்து தொழில் வளர்ச்சிக்கு இது ஒரு வகையில் இடையூறாக இருக்கிறதே தவிர, ஆதரவாக இல்லை என்றும், தொழில்கள் இதை நம்பியிருப்பது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல என்றும் முடிவு கட்டலாம். பதிலாளி முறையை நீடிப்பது, நமது அரசியல் அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளுக்கே முரணான தாகும். பொருளாதார முறையின் இயக்கமானது, 'செல்வமும் உற்பத்தித் துறைகளும் பொதுநலத்திற்கு மாறாக, ஒரு சிலரிடமே குவியக்கூடாத வகையில் அரசாங்கம் பார்த்துக் கொள்ளவேண்டும்' என்று அரசியல் சாஸனம் கூறுகின்றது. ஆனால், பதிலாளி முறையோ, சிலரிடமே அதிகாரமும் செல்வமும் குவிவதற்குத் துணை செய்கின்றது.

பங்குதாரர்கள் சங்கம் செய்த கிளர்ச்சியின் பயனாக இந்தியக் கம்பெனிச் சட்டம் 1936-ல் திருத்தப்பட்டது. 1936-ம் ஆண்டுத் திருத்தச் சட்டம், கம்பெனிகளின் வளர்ச்சியிலும் நிர்வாகம் பதிலாளி முறையின் நடைமுறையிலும் இருந்த குறைகளைத் தடுக்கும் அளவிற்கு விரிவானதாக அமையவில்லை. 1950-ல் கம்பெனிச் சட்டக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டு, கம்பெனிச் சட்டத்தைத் திருத்துவதற்குச் சிபாரிசு செய்யும்படி கோரப்பட்டது. 1951-ம் ஆண்டில் இந்தியக் கம்பெனி (திருத்தச்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி நிர்வாகப் பதிலாளி உரிமைகளை

முறைகேடாகப் பயன்படுத்துபவரை, பல ஆண்டுகளாகப் புகழ் பெற்ற கம்பெனிகளின் நிர்வாக ஆட்சியைக் கைப்பற்றும் பொருட்டு வெளிச்சந்தையில் பங்குகளைச் சுயநலத்துக்காகத் தடுப்பதற்கு வகை செய்யப்பட்டது.

1953ஆம் ஆண்டுக் கம்பெனிச் சட்டக் கமிஷன் அறிக்கையின் அடிப்படை மசோதாவரை வென்று நாடாளு மன்றத்திற்குக் கொணரப்பட்டு, பல திருத்தங்களின் பின்னர் 1956 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து சட்டமாக அமலுக்கு வந்தது. இந்தச் சட்டம் மூன்று முக்கியமான கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவையாவன:-

(1) 1936-லிருந்து வெளிக்கொணரப்பட்ட முறைகேடான செயல்களே தகுந்த சட்டத்தை இயற்றித் திறம்பட அமல் நடத்துவதன் மூலம் ஒடுக்குதல்.

(2) பங்குதாரர்கள் பொதுமக்கள் ஆகியோரின் நலன்களைக் கம்பனிப் பொறுப்பாளர்களின் கொடுமையினின்று பாதுகாத்தல்.

(3) சமதர்ம சமுதாய அமைப்பை நிறுவும் நோக்கத்தை ஏற்கும் தனியார்துறை முயற்சிகளையும் ஏற்படுத்துதல். 1956 ஆகஸ்டு 15 முதல் எல்லாக் கம்பனிகளும், சிலவகைத் தொழில்களை, நிர்வாகப் பதிலாளிகளைக் கொண்டு, நிர்வகிப்பதை நிறுத்திவிடவேண்டும். எந்த நிர்வாகப் பதிலாளியையும் 15 ஆண்டுகளுக்கு மேல் நியமிக்கக் கூடாது. மறு நியமனக்காலம் 10 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. சட்டம் அமலான பிறகு எந்த நபரும் நிர்வாகப் பதிலாளியாக 10 கம்பெனிகளுக்குமேல் இருக்க இயலாது. ஏற்கெனவே, இருக்கும் பதிலாளிகள் 1960 ஆகஸ்டு 15க்கு முன் புதிய சட்டப்படி மறுநியமனம் செய்யப்பட்டா லொழிய அவர்களது பதிவிக்காலமும் அத்தேதியுடன் முடிந்துவிடும். திவாலாதல், தண்டனையடைதல், மோசடி செய்தல், நம்பிக்கைத் துரோகமாக நடத்தல், தீய நிர்வாகம் செய்தல் ஆகிய காரணங்களுக்காக, நிர்வாகப் பதிலாளியை நீக்கச் சட்டத்தில் இடம் உண்டு. நிர்வாகப் பதிலாளியின் ஊதியம் சாதாரணமாக, அவ்வாண்டின் நிகர இலாபத்தில் 10 சதத்துக்குமேல் போகக்கூடாது எனவும் விதிக்கப்பட்டுள்ளது. நிர்வாகப் பதிலாளிகளின் அதிகாரங்களுக்கும் பல கட்டுப்பாடுகள் ஏற்பட்டன.

இவ்வளவு விரிவாக இச்சட்டம் இயற்றப்பட்டதற்குக் காரணம் 1936ஆம் ஆண்டுச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத்

தடுப்பதற்கான முயற்சியின் விளைவேயாகும். நிர்வாகப் பதிலாளி முறைக்குப் புதிய குத்தகைத் தவணை தரப்பட்டிருப்பது, இந்த முறையைத் திருத்துவதேயன்றித் தள்ளிவிட வேண்டும் என்பதன்று. தொழிலதிபர்களையும் பத்திரிகைகளையும் இச்சட்டம் அடியோடு நீக்கிவிடவே அமைக்கப்பட்டுள்ளது என்றும், தேசீயமயமாக்கும் முறையைக் கொல்லைப்புற வழியாகச் செயற்படுத்தும் ஒரு குறுக்கு வழியென்றும் (ஈ. ஸ். ஸடார்ன் எக்கானமிஸ்ட் என்னும் வார இதழ்) எழுதலாயிற்று. திரு ஸி. டி. தேஷ்முக் கருத்துப்படி இச்சட்டத்தின் பொதுவான நோக்கம் தனியார் துறைக்கு வேலியிட வேண்டுமேயன்றி, அதற்கு விலங்கிடக்கூடாது என்பதே ஆகும். எவ்வாறாயினும், இச்சட்டம் தனியார் துறையின் குறைகளைப் போக்கும் வண்ணம் அமைந்திருப்பது உறுதி. மேலும், இச்சட்டம் திறமையாக நிர்வகிக்கப்படுவதில்தான், எதிர்பார்த்த நற்பயனைப் பெறமுடியும். இச்சட்டத்தின் பயனாகப் பங்குதாரர்கள் தங்களது சொந்த நலனைப் பாதுகாத்துக் கொள்வதில் விழிப்படைந்து விட்டார்கள் என்பதற்கு அறிகுறிகள் தென்படுகின்றன. இதற்குப் பம்பாயிலும் கல்கத்தாவிலும் உள்ள பங்குதாரர்கள் சங்கத்தின் நடவடிக்கைகளைச் சான்றாகச் சொல்லலாம்.

நிர்வாகப் பதிலாளிகளைக் கட்டுப்படுத்துவதோடு, அரசின் கொள்கை நிறைவடைந்து விடவில்லை. கலப்புப் பொருளாதாரத்தைப் பின்பற்றும் நம் நாட்டின் எவ்வளவு தாம் சர்வாதீனம் பரவியுள்ளது, இவ் வருமானம், செல்வம் பங்கீட்டில் உள்ள குறைகள் யாது? என்பன தற்போதைய பிரச்சனைகளாக இருக்கின்றன. பொருளாதார வளர்ச்சியுடன் குறிப்பாகத் தொழில் வளர்ச்சியுடன், வருமான செல்வப் பங்கீட்டில் ஏற்பட்டு வரும் வேறுபாடுகளையும் அரசு உணர்ந்துள்ளது. வருமானப் பங்கீடு மற்றும் வாழ்க்கைத்தர நிலைகளை ஆராய்வதற்கான குழு பேராசிரியர் பி.சி. மகலனோபிஸ் தலைமையில் 1964ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக் கமிஷன் 1951-58ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஏற்பட்ட பொருளாதாரக் குவிப்பை ஆராய்ந்து தன்னுடைய அறிக்கையை 1965ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சமர்ப்பித்தது. சர்வாதீன விசாரணைக் கமிஷன் அறிக்கையுடன் ஸ்ரீ. சுபிமல் தத் தலைமையில் அமைக்கப்பட்ட மற்றொரு கமிஷன் தொழில் உரிமை மற்றும் கொள்கை விசாரணைக் குழு தொழில் உரிமம் அளிக்கப்பட்டதன் காரணமாக எவ்வாறு பொருளாதாரச் சக்திக்குவிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஆராய்ந்துள்ளது. இக் குழுக்களின் அறிக்கையின்மேல் நாட்டு அரசியல் அமைப்புக் கொள்கைகள் சரிவர நடந்தேற அரசாங்கம் தன்னுடைய கொள்கைகளை மாற்றி அமைத்துக் கொண்டது. தொழில் உரிமம் மற்றும் கொள்கை

விசாரணைக் குழு தற்செயலாக, நாட்டின் தொழில் வளர்ச்சியில் மாநிலங்களிடையே உள்ள, ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிக் காட்டி யுள்ளது. நன்கு தொழில் வளர்ச்சியுற்ற சில மாநிலங்கள், புதிய தொழில்கள் பல தொடங்குவதற்கும் உரிமங்கள் பெற்றிருந்தன. இது திட்டக்குழுவினர், தொழில்கள் துவக்கப் புதிய இடங்களைத் தேர்ந்தெடுத்து, நாட்டின் பிராந்தியங்களிடையே ஏற்றத் தாழ்வு களைக் குறைக்க உதவியுள்ளது.

மகலனோபிஸ் கமிட்டியின் அறிக்கையிலிருந்து பொருள்கள் வாரியான குவிப்பை அளவிடுகையில், மூன்று தலைசிறந்த தொழிற் கூடங்களின் உற்பத்தி அளவு, மொத்த உற்பத்தியளவில் 75 சதம் இருக்குமாயின், அது அதிகமான குவிப்பு என்றும், 60 சதமும் அதற்கு மேலுமிருக்குமாயின், அது நடுத்தரமான குவிப்பு என்றும், 50 சதம் அதற்கு மேலும் இருக்குமாயின் அது குறைவான குவிப்பு என்றும் கணக்கிடப்பட்டது. அவ்வாறு பார்க்கையில், குழந்தை உணவு, மண்ணெண்ணெய், பெட்ரோலியம் (அழுத்த சக்தி உடைய) ஸ்டவ்கள், குழல் விளக்கு, உலர்ந்த செல்கள், தையல் இயந்திரங்கள் வீட்டு உபயோகத்திற்கான குளிர்பதன பெட்டிகள், டைப்ரைட்டர்கள், கடிகாரங்கள், பற்பசை, முகப்பூச்சு, வாசனைத் தூள்கள், முகச்சவரக்கத்திகள், சிகரெட்டு, மருந்துகள், கார்கள், வணிக ஊர்திகள், ஜீப்புகள், ஸ்கூட்டர்கள், டயர்கள் மற்றும் டியூப்புகள், பிஸ்டன்கள், ஸ்பார்க் ப்ளக்குகள், கூரைத் தகடுகள், மற்றும் கட்டட அட்டைகள் முதலியன அதிகக் குவிப் புடையனவாக இருந்தன. நடுத்தரக் குவிப்புடையனவாக, பிஸ்கட்டுகள், மின் விசிறிகள், மின் விளக்குகள், ரேடியோ பெட்டிகள், ஈரல் சேகரிப்பு, மிதிவண்டிகள், மிதிவண்டி சங்கிலிகள் மற்றும் சிமெண்டு ஆகியவற்றின் உற்பத்தி அமைந்திருந்தன. குறை வான குவிப்புடைய உற்பத்திப் பொருள்களாக, கம்பளி உடைகள் முறுக்கு நூல், அரிக்கென் விளக்கு, அச்சடிக்க-எழுத உதவும் காகிதம், பென்ஸில்கள், ஸ்டோன்வேர் பைப்புகள் முதலியன அமைந்திருந்தன. மேலும், நாடு முழுவதும் உள்ள வியாபார நிறுவனங்களில் 75 நிலையங்கள், 1536 கம்பெனிகளைக் கட்டுப் படுத்துவதும் தெரிந்ததே. தனியார் கூட்டமைப்புப் பிரிவின் செலுத்தப்பட்ட மூலதனம் 1963-64ஆம் ஆண்டு, ரூபாய் 1465 கோடி என்றும், சொத்துக்கள் மதிப்பு ரூபாய் 5,552 கோடிக்கும் மேல் என்றும் தெரியவருகின்றன.

இத்தகைய பொருளாதாரச் சக்திக் குவிப்பிற்குப் பெரிதும் காரணமானவர்கள் நிர்வாகப் பதிலாளிகளே ஆவர். பிற காரணங்களில், சில முன்பே நிலைபெற்ற, தொழிற்சாலைகள் தங்களு

டைய உற்பத்திச் சக்தியை விரிவுபடுத்திக் கொண்டமையும் புதிய ஆலைகளைத் திறந்தமையுமேயாகும். செல்வாக்கும், செல்வமும் உடையவர்கள் மீண்டும் மீண்டும், தொழில்களை விரிவுபடுத்திக் கொள்ளவும், புதிய தொழில்களைத் துவக்கவும், அரசின் தொழில் உரிமக் கொள்கை தடையாக இல்லை என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. தொழில் உரிமம் அளிக்கும் அதிகாரிகள் புதிய தொழில் உரிமங்களை, வியாபாரத்திறமை உடையவர்கள் என்று நிரூபித்தவர்களுக்குத் தான் அளித்து வருகின்றனர். எனவே, புதிதாகத் தொழில்களைத் துவக்க, புதிய தொழிலதிபர்களால் முடிவதில்லை. தொழில் உரிமம் என்பது தொழில்களைத் தனியார்துறை விருப்பம்போல் துவங்குவதைக் கட்டுப்படுத்துவதற்காகவே. ஆயினும், இக்கொள்கை புதிய தொழில் துணிவோர் (entrepreneurs) நுழைவதையே கட்டுப்படுத்தியது, வணிக சர்வாதீனம் ஏற்பட உதவியது. வெளிநாட்டுக் கூட்டுறவுகளும், சிறு தொழில்களுக்குக் கிட்டாது, வலிமையான பெரும் தொழிலதிபர்களுக்கே கிட்டியது. எனவே, பெரிய வியாபார நிலையங்களே பயன் பெற முடிந்தது. இறக்குமதித் தடைகளும், அந்நிய செலாவணிக் கட்டுப்பாடுகளும் பெரிய வியாபாரங்களுக்கு உதவியாகவே இருந்தன. சிறு தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. வங்கிகளிடமிருந்து கடன் வசதி பெறுவதிலும், நிறுவனங்கள் சிறு நிறுவனங்களைவிடச் சாதகமான நிலையிலேயே இருந்தன.

இந் நிலைமையினைப் போக்கச் சர்வாதீன உரிமைக் கமிஷன் (Monopolies Commission) சில பரிந்துரைகளை அளித்துள்ளது. சட்ட நடவடிக்கைகளாகச் சிலவும் சட்ட நடவடிக்கைகள் அல்லாதனவாகச் சிலவும் தரப்பட்டுள்ளன. சட்ட நடவடிக்கைகள் அல்லாதனவற்றில் குறிப்பிடத்தக்கன.

(1) சர்வாதீன மற்றும் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கவனிக்க ஒரு நிலையான அமைப்பினை ஏற்படுத்துதல்.

(2) நிர்வாக இயந்திரத்தில் இலஞ்சத்தை ஒழித்தல்.

(3) சிறு நிறுவனங்கள், சிறு தொழில்கள் பயன் பெறும் வகையில் தொழில் உரிமம் அளிக்கும் கொள்கையைத் தாராளமாக்குதல்.

(4) இறக்குமதிகளைச் சிலருக்கே அனுமதிக்காமல், இறக்குமதிப் பொருள்களை உண்மையாக உபயோகிக்கும்

யாவருக்கும், அந்நியச் செலாவணி இருப்பிற்கேற்பச் சமமான பங்கீட்டில் இறக்குமதி உரிமங்கள் அளித்தல்.

(5) பொதுத்துறையில் சில தொழில்களைத் துவங்கிச் சர்வாதீனத்தை முறியடித்தல் போன்ற சட்ட பூர்வமான நடவடிக்கைகள் சிலவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

(6) சர்வாதீன மற்றும் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கவனிக்கும் குழுவிடம் எல்லா நிறுவனங்களும் (வியாபார உரிமைகளைக் கட்டுப்படுத்தும்) பதிவு செய்து கொள்ளும்படி சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல், புதிய தொழில் உரிமம் வழங்குமுன், இக்குழுவினிடம் ஆலோசித்த பின்னர் உரிமம் வழங்குதல்.

சர்வாதீன விசாரணைக் கமிஷனின் அறிக்கை கிடைத்தவுடன், சர்வாதீன மற்றும் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள் மசோதா, 1967 ஆகஸ்டில் கொண்டுவரப்பட்டு, நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. சர்வாதீன மற்றும் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள் சட்டம், ஜுன் 1, 1970–ல் அமலுக்கு வந்தது. அரசின் துணிவான செயலுக்கும், கொள்கைக்கும் இது ஓர் உதாரணமாகும். நாட்டு நலன் கருதிக் கொண்டு வரப்பட்ட இச் சட்டம், பொருளாதாரச் சக்திக் குவிப்பைத் தடுக்கப் பெரிதும் உதவும். சர்வாதீன மற்றும் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கண்காணிக்கும் கமிஷன் ஒன்றும். (Monopolies and Reshictive Trade Practices Commission) நியமிக்கப்பட்டது.

திரு. சுமிமல் தத் குழுவின் அறிக்கையிலிருந்து நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே சீரான பொருளாதார வளர்ச்சியும் ஒரே சீரான தொழில் வளர்ச்சியும் ஏற்படவில்லை என்பது தெரிய வந்தது. இவ் விஷயத்தைப் பொறுத்தவரையில் அரசின் கொள்கை என்ன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். தொழில்களைப் பொறுத்த வரையில், அவைகள் மிகவும் திறமையான உற்பத்தி, பங்கீடு ஆகியவற்றிற்குச் சாதகமான வகையில், இடத்தைத் தேர்ந்தெடுத்து நடத்தப்படவேண்டும் என்பது தேவையான ஒன்றே. எந்தத் தொழிலும் சரியான இடத்தில் இல்லாவிட்டால் செழிப்புற்று வளர இயலாது. ஆயினும், இந்த ஒன்று மட்டுமே, தொழில்களைத் துவக்கப் போதாது. அவ்வாறு தேர்ந்தெடுத்தால் சமூக மற்றும் பொருளாதாரத் தொல்லைகள் ஏற்படலாம். எனவேதான், பெரும்பாலான நாடுகள் வட்டாரத்

தொழில் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி வருகின்றன. இத்தகைய வட்டாரத்தொழில் வளர்ச்சி, உற்பத்தி பங்கீடு ஆகியவற்றில் மேன்மையை எதிர்பார்ப்பதோடு, சமப்பொரு ளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் முதலியவைகளையும் கொண்டுள்ளது. இந்தியாவிலும் தொழில் வளர்ச்சிக்குத் திட்ட மிடுகையில் வட்டாரத் திட்டங்கள் வரையப்படுகின்றன. இவ் வட்டார வளர்ச்சியினைச் சற்று விவரமாகப் பார்க்கலாம்.

இந்தியத் தொழில் வளர்ச்சி, மிகவும் ஏறுமாறாக உள்ளது பல்வேறு காரணங்களுக்காகப், பேரளவுத் தொழில்கள் பம்பா யிலும், கல்கத்தாவிலுமே நிறுவப்பட்டன. மற்றைய பகுதிகள் நிராகரிக்கப்பட்டன. 1951ஆம் வருடத்திய மக்கள் தொகை கணக்குப்படி நாட்டின் மொத்த தொழிலாளர்களில் 63 சதவீதம் பம்பாயிலும் கல்கத்தாவிலுமே இருந்தன. பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் 42 சதம் இவ்விரு நகரங்களிலும் குவிந்திருந் தன. மொத்த ஆலை உற்பத்தியில் 66 சதமும் இங்கேயே உற்பத்தி ஆயின. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்பின்னர் நிலைமை சற்றுத் திருந்தியது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொழிற் சாலைகள் தோன்ற ஆரம்பித்தன. ஆயினும் பம்பாய், கல்கத்தா மற்றும் பீகாரின் முயக்கியத்துவம் சரிந்துவிடவில்லை. மற்ற பகுதியில் பொதுமக்களின் எதிர்ப்புகள் இத்தகைய வட்டாரச் சமநிலைமையின்மையால் கிளம்பின. தொழில் வளர்ச்சி அடைந்த பகுதிகளுக்கும், தொழில் வளர்ச்சி யடையாத பகுதிகளுக்கும் இடையே வருமானத்தில் ஏற்றத்தாழ்வு மிகுந்தது. பம்பாய், கல்கத்தா ஆகிய மாநிலங்களில் மக்கள் தொகை பெரிதும் பெருத்து, வீட்டு வசதிப் பிரச்சனையைப் பெரிதுபடுத்தியது.

இந்திய அரசு இச்சிக்கலை நன்கு உணர்ந்து இருந்தபோதிலும் உடனடியாக ஏதும் செய்ய இயலவில்லை. ஆயினும், மாநிலங்க ளிடையேயும் வட்டாரங்களிடையேயும் பொறுமை உணர்ச்சியும், காழ்ப்பு உணர்ச்சியும் ஏற்படாவண்ணம் காக்க, சில வகைத் தொழில்களைத் துவக்கும்பொழுது கவனத்துடன் ஈடுபட்டது. இரும்பு எஃகுத் தொழில், கனிவள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில், அணுச்சக்தி உற்பத்தி முதலியன கவனமுடன் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சமமாக வளரும் வண்ணம் நிறுவப் பட்டன. ஆயினும், அரசின் முயற்சிகள் சிக்கலைப் போதுமான அளவில் நீக்கத் தொழில்களின் வட்டார வளர்ச்சியில் சமநிலை கொண்டுவரத் தேசிய அபிவிருத்திக் குழு (National Development Council) தகுந்த நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகின் றது. திட்டக் கமிஷனும் (Planning Commission) நீண்டகால

இடை வெளியில் வட்டார வளர்ச்சியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்ற ஒப்புக்கொண்டுள்ளது. இங்கு அரசியல் தலையீடுகள் இல்லாது இருக்குமாயின், இக்கொள்கை, வெற்றியடைவதிலும் தொழில் வளர்ச்சி மேம்படுவதிலும் ஐயமில்லை.

(3) தொழில்களைத் தேசிய மயமாக்குதலில் சிக்கல்களும் வளர்ச்சி வாய்ப்புகளும்

தனி நபர் உரிமை என்பது, எப்போதுமே தாக்குதலுக்கு உரிய ஒன்றாக உள்ளது. பொதுவாக மற்றெல்லாத் துறைகளையும்விடப் பொருளாதாரத் துறையில் இத்தாக்குதலின் கடுமை அதிகமாக உள்ளது. இத்தகைய தாக்குதலை அமெரிக்க நாடு உட்பட எல்லாக் குடியாட்சி நாடுகளிலும் பார்க்க முடியும். கட்டுப்பாடற்ற வணிகம், தடையில்லாத் தொழிற்கூட வளர்ச்சி என்னும் கொள்கைகள் முன்பே இறந்து விட்டன. 'லாஸ்கி' என்பார், 1125–ல் வெளியிட்ட தன்னுடைய 'அரசியல் இலக்கணம்' என்னும் புத்தகத்தில் அரசினர் தலையீடின்மை என்னும் கொள்கை, 1914-ம் ஆண்டு முதல் உலகப்போர் தொடங்கிய உடனேயே முடிந்து விட்டது என்று கூறியுள்ளார். அரசு தலையீடின்மைக் கொள்கைக்கு வேண்டிய சூழ்நிலை மறைந்து விட்டதால், 'கெய்ன்ஸ்' என்னும் பொருளாதார அறிஞர், 1924-ம் ஆண்டு இக் கொள்கையைக் கைவிட்டார். தனி நபர் உரிமையினால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியின் பலன், சமூகம் முழுமைக்கும் கிட்டும் என்ற சித்தாந்தம் கைகூடவில்லை. ஒரு சில நபர்களின் கையில் குவியும்–தொழிலுரிமைக் குவிப்பினால் ஏற்படும் தீமை என்ன வென்றால், சில தொழில் சர்வாதிகாரிகள் வளர்ச்சியே! தனி நபர் நலனுக்காகத் திரும்பப் பெறமுடியாத இயற்கை வளங்களை வீணாக்கப்படுவதையெல்லாம் பார்த்த பின்னர் எவ்வாறு தனியார் துறையின் வளர்ச்சிக்குப் பெரும்பாலான மக்களுக்கு நன்மை யளிக்கும் என்ற தத்துவம் வெறும் கனவே என்பதை எல்லா நாட்டினரும் உணர்ந்துவிட்டனர்.

தனியார் துறைகளின் குறைகளைக் கண்டவுடன், மக்கள் பொதுவாகக் குடியாட்சியின்மீதும் சமதர்ம தத்துவத்தின்மீதும் நம்பிக்கை வைக்கத் தொடங்கினர். பொதுமக்களின் கருத்து முதலில் தொழில்களின் வளர்ச்சியில் அரசின் தலையீடு அவசியம் என்பதில் தொடங்கிப், பின்னர் அரசாங்கமே பெரிய தொழில்களை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதில் முடிந்துள்ளது. இங்கிலாந்து, ஸ்காண்டிநேவியா, மற்றும் இந்தியாவில் கலப்பு

பொருளாதாரநிலை நாட்டப்பட்டுவிட்டது அமெரிக்காவிலுங்கூட ஒருசில தொழில்களில் இக்கொள்கை பின்பற்றப்படுகிறது. சோவியத் ருஷ்யாவில் தொழில்கள் யாவும் அரசாங்க உடைமையாயும், அரசாங்கத்தின் கட்டுப்பாடுடையதாயும் இருந்து வருகின்றன. ஸ்பெயின், இத்தாலி மற்றும் ஜெர்மனியில் முதலாளித்துவத்திற்கு மாறாக 'ஆட்சி வல்லாண்மை முறை' (Faicims) கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, உலகின் எப்பகுதியிலும் இன்று கட்டுப்பாடற்ற முழுத் தனியார் துறையில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

1950ஆம் ஆண்டு பிரிட்டிஷ் தொழிற் கட்சிப் பொதுவுடமைத் தத்துவத்தை மேற்கொள்ளுவதற்கு வரையறுத்த விதிகள் பொதுவுடைமையின் அவசியத்தைத் தெளிவாக விளக்குகின்றது. 'பொதுவுடமை' என்பது, பொது மக்களை ஏகபோகத் தனி உரிமை உடையவர்கள் குறைபடாமல் தடுக்க ஒரு நிச்சயமான வழியாகும். பொது உடைமை என்பது, சமூகத்தின் பொருளாதார வாழ்க்கை வளர்ச்சி ஆகியவற்றிற்குத் துணையாக உள்ள ஆதாரத் தொழில்களையும், சேவைகளையும் கட்டுப்படுத்தும் வழியாகும். பொது உடைமை என்பது திறமையற்றுக் காணப்படும் தொழில் துறையை மாற்றியமைக்கவும், மாற்றங்கள் செய்ய முன் வராத தனி உரிமையாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் உள்ள சிறந்த வழியேயாகும்.

தனியார் துறையில் இருந்துவரும் இந்தியத் தொழில்கள் இங்கிலாந்து நாட்டினுடனோ அல்லது அமெரிக்காவுடனோப் பிடுகையில் எந்தச் சாதனையையும் செய்யவில்லை என்றே சொல்லலாம். இந்தியத் தொழில்கள், தொழில் நுணுக்க வளர்ச்சியில் முன்னேற்றம் காணவில்லை: புதிய பொருள்கள் கண்டுபிடிக்கப்படவில்லை; அல்லது குறிப்பிடத்தக்க வகையில் தயாரிப்பு முறையில் புதியதாக எதனையும் செய்யவில்லை என்றே கூறலாம். இந்தியத் தொழில் அதிபர்கள் இவையாவற்றையும் வெளிநாடுகளிடமிருந்து கடன் வாங்கியே திருப்தியடைந்து வருகின்றார்கள்.

இந்திய சமதர்ம வாதிகள் தேசிய மயமாக்குவதையே பெரிதும் ஆதரிக்கின்றனர். உதாரணத்திற்குப் பேராசிரியர் கே. டி. ஷா பின்வரும் காரணங்களுக்காகத் தேசிய மயமாக்குதலில் நம்பிக்கை வைத்துள்ளார்.

(அ) தேசிய மயமாக்கப்பட்ட தொழில் உரிமை மேலாண்மையின்கீழுள்ள தொழில்களிடையே பெரும் ஒத்துழைப்பும் பேரளவில் சிக்கனமும் இருக்கும்.

(ஆ) நாடு முழுவதும் தொழில்கள் பரப்பப்படுவதால் ஒவ்வோர் இடத்திலும் கிடைக்கும் தொழிலாளர்கள், மூலப் பொருள்கள், மற்ற சாதனங்கள் சுலபமாகப் பெறவும் நல்ல முறையில் பயன்படுத்தவும் இயலும்.

(இ) தேசிய மயமாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் இலாபம் பொதுக் கருவூலத்தின் உபயோகத்திற்குக் கிடைக்கும்.

(ஈ) தேசிய மயமாக்கப்பட்ட பொருள்கள் அல்லது சேவைகள் முக்கியமாகப் பொதுமக்களுக்குச் சேவையளிப்பதாகவே அமையும். தனியார் துறையினைப்போன்று இலாப நோக்கத்தோடு நடத்தப்படாது.

(உ) பொது உடைமை உற்பத்தியின் மூலம்தான் வயது வந்த ஒவ்வொருவருக்கும் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தேசிய உடைமையான தொழில்களின்பங்கு குறிப்பிடத்தக்கதாகும். திட்டமிட்டபடி பொருளாதார வளர்ச்சியடையத் தொழில்களைத் தேசியமயமாக்குதல் அவசியமாகும். சில முக்கிய தொழில்கள் கண்டிப்பாகப் பொது உடைமை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப் படுகின்றன. ஏனென்றால், அவ்வாறில்லாவிட்டால் பொருளாதாரம் சுமுகமாக இராது. விரைவான வளர்ச்சியும் இராது. ஆதாரமான தொழில்கள் தேசிய மயமாக்குவதன்மூலம் பொருளாதார வளர்ச்சி தூண்டப்படும். சில தொழில் துறைகள் ஆதாரமான தொழிலாகவும் பெரும் முதலீட்டைக் கேட்பனவாகவும் இருக்கும். ஆயினும், அவற்றிலிருந்து வரும் வருமானமோ பல ஆண்டுகள் கழித்துச் சொற்பமாகத்தான் கிடைக்கும். அத்தகைய தொழில் துறைகளில் தொழில் துணிவோர்கள் இறங்க முன் வரமாட்டார்கள். இத்தகைய தொழில்களை அரசுதான் துவங்க வேண்டும். இதற்கு உதாரணமாகப் பெரிய இரும்பு ஆலைத் தொழில், இயந்திரக் கருவி ஆலைகள், கப்பல் கட்டும் தொழிற் சாலைகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மேலும், தனியார்துறை திட்டக் குழுவின் வரையறுத்த வளர்ச்சி விகிதத்தில் வளர முடிவதில்லை. இத்துறைகளில் தொழில் வளர்ச்சியைப் பாதுகாப்பதற்கு அரசுத்துறை முன்வர வேண்டியுள்ளது. மேலும் குறிப்பிட்ட சில பேரளவுத் தொழில்களை மட்டும்தான் அரசு மேற்கொள்ள வேண்டும் என்றால் அரசின் வருமானம் தடைப்படுத்தப்படும்.

எல்லாத் தொழில்களையுமே அரசு மேற்கொண்டால், குறைவான இலாபம் வரும்; தொழில்களில் அதிகம் இலாபம் தரும்; தொழில்கள் சரிக்கட்டிவிடும்.

தேசிய மய மாக்குவதற்குப் பல காரணங்கள் கூறப்பட்ட போதிலும், நடைமுறையில் பார்க்கும்போது அவைகள் அவ்வளவு திறமை உடையனவாக இல்லை. சில பொதுத்துறைத்தொழில்கள் மேல்பார்வைக்குச் செழிப்புடையது போலவும், மிகுந்த திறன் உடையது போலவும் தோற்ற மளிக்கும். இதற்குக் காரணம் தனியார் துறைக்குக் கிட்டாத சில சலுகைகள் பொதுத்துறைக்குக் கிட்டுகின்றன. சில சமயங்களில் பொதுத் துறைத் தொழிலுக்கு நிலம் குறைந்த விலைக்கு அல்லது விலையேதும் கொடுக்காமலேயே கிடைக்கின்றன. எனவே, அவைகளின் உற்பத்திச் செலவு குறைவாகக் காணப்படுகிறது தனியார் துறையின் முக்கிய சிறப்பு அவர்கள் நெருக்கடியைத் தாங்க முன்வருவதே. பொதுத்துறைத் தொழில்களில் இத்தகைய நெருக்கடியை மேற்கொள்ளத் தயக்கம் ஏற்படுகிறது. பொதுத்துறையில் வழக்கமான முறைகளைத்தான் பின் பற்றுவார்களேதவிர, புதியமுறைகளைச் சோதித்துப்பார்க்க முன் வரமாட்டார்கள்.

குறைகள் பல இருந்தபோதிலும், சிலவகைத் தொழில்களில் பொதுத்துறையின் ஆட்சி மிகவும் முக்கியமானது. நுகர்வோர் சூறையாடப்படுவதைத் தவிர்க்கவும், பொதுத்துறையில் சில தொழில்களை நடத்த வேண்டியுள்ளது. பங்கீட்டு நீதியை வளர்க்கவும் தொழில்களைத் தேசிய மயமாக்குதல் மிகவும் அவசியமாகும். 1964ஆம் ஆண்டுப் பேராசிரியர் பி. சி. மகலனோபிஸ் தலைமையில் அமைக்கப்பட்ட ஏகபோகத் தனியுரிமை விசாரணைக் குழு தன்னுடைய அறிக்கையை 1965ஆம் ஆண்டுச் சமர்ப்பித்துள்ளது. இக்குழு, 'எந்தெந்தத் தொழில்களில் வருமான செல்வக் குவிப்பு உள்ளது' என்பதனையும், எந்த விகிதத்தில் உள்ளது என்பதனையும் எடுத்துக் காட்டியுள்ளது. இக்குழுவின் அறிக்கையினால் தனியார் துறையில் தொழில்கள் இருப்பதனால் நாட்டிற்கு ஏற்படும்தீமைகள் புலப்படுகின்றன.

சுதந்தரத்திற்குப் பின்னர் 1948-ம் ஆண்டு இந்தத் தொழிற் கொள்கைத் தீர்மானத்தின்படி மூன்று அரசாங்க ஏகபோக உரிமைகளே ஏற்படுத்தப்பட்டன. அவையாவன : போர்க் கருவிகள், மருந்துகள் உற்பத்தி, அணுச்சக்தி உற்பத்தி, மற்றும் கட்டுப்பாடு, இரயில்வே போக்குவரத்து உரிமை மேலாண்மையுமாம். ஆறு தொழில்களில் நிலக்கரி தாது

எண்ணெய், இரும்பு, எஃகு, விமானம் கட்டுதல், கப்பல் கட்டுதல் மற்றும் டெலிபோன் தந்தி ஆகியவற்றில் தற்போதுள்ள நிறுவனங்களே பத்தாண்டுகளுக்கு உற்பத்தியைத் தொடர்ந்து செய்தல் என்றும், பின்னர் புதிய ஆலைகளை இத்தொழில்களில் திறப்பது அரசின் முழுப்பொறுப்பு என்றும் கொள்ளப்பட்டன. ஏனைய தொழில்கள் தனியார் துறைக்கு விடப்பட்டன. 1956ஆம் ஆண்டின் புதிய தொழில் கொள்கைத் தொழில்களைத் தேசிய மயமாக்குவதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. எவ்வகைத் தொழில்கள் தனியார் துறைக்கு அளிக்கப்படவேண்டும் என்பதும், எவ்வகைத்தொழில்கள் தேசிய மயமாக்கப்படவேண்டும் என்பதும் தீர்மானிக்கப்பட்டது. எனவே, தொழில்களைத் தேசிய மய மாக்குதல் என்பது, சுதந்திர இந்திய அரசின் ஒரு கொள்கை யாகவே இருந்து வருகிறது.

தொழில்களைத் தேசிய மயமாக்குவதில் சில சிக்கல்கள் உள்ளன. குறிப்பாகச் சொல்லப்போனால் பொதுத்துறையில் தொழில் அமைப்புமுறை, விலைக் கொள்கை, தொழிலாளர் உறவு ஆகியவற்றில் சிக்கல்கள் உள்ளன. நிறுவன அமைப்பில் பல்வேறு வகைகள் உள்ளன. தொழிலுக்கு ஏற்றவாறு தனித்தனி யான நிறுவன அமைப்பைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் உள்ளன. விலைக்கொள்கையைப் பொறுத்தவரையில் விலையை நிர்ணயிக்கும் போது, ‘உற்பத்திச் செலவை மட்டும்தான் ஆதார விலையாய் கொள்வதா, இலாபம் பெறவேண்டாமா?’ என்ற சிக்கல் உள்ளன. சில தொழில்களில் இலாபம் பெறுவது நீதியாகும். எல்லாத் தொழில்களிலுமே இலாபம் பெற முயல்வது நீதியாகாது. அவ் வாறே தொழில்கள் தேசிய மய மாக்கப்பட்டால், ‘தொழிலாளர் நலம் எவ்வாறு இருக்குமோ?’ என்ற அச்சமும் எழுகின்றது. ஏனென்றால், அரசாங்கமே தனி உரிமையுடையது என்னும் பொழுது ஏகபோக உரிமையின் காரணமாகத் தொழிலாளர் நலன் பறிக்கப்பட்டுத் தொழிலாளர்-அரசாங்கத்தாரிடையே சுமுக மான உறவு இல்லாது போகலாம்.

தொழிற்சாலைகள் தேசிய மயமாக்கப்பட்டால் பொதுக் கூட் டமைப்பு அதிகாரத்தின்கீழ் வரவேண்டியிருக்கும். இப்பொதுக் கூட்டமைப்பு (Public Sector Corporation) மத்திய அமைச்சவை யின் விசாரணைகளுக்கு அப்பாற்பட்டதாகும். இது ஒரு தனியான அமைப்பாகும். இதற்கெனத் தனியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின் றனர். இப்பொதுக் கூட்டமைப்பு வணிக ரீதியில் செயல்பட் டாலும் இலாபம் அடைவதையே குறிப்பான கொள்கையாக மேற் கொள்வதில்லை. இத்தகைய கூட்டமைப்பின் மூலமாக அரசியல்

தலையீடு இல்லாத தொழிற் கூட்டங்களை அமைக்க முடியும். தனியார் துறையிடமிருந்து அர்சாங்கம் தொழில்களை மேற்கொள்கின்றது. இந்திய அரசாங்கம் இத்தகைய கூட்டுப் பங்கு நிறுவனங்கள் பலவற்றை நிறுவியுள்ளது. இத்தகைய நிறுவனங்கள் அமைப்பதில் உள்ள சிக்கல்கள் அரசு தலையீடு இல்லாமல் பார்த்துக்கொள்ளுதல், அவைகள் வளர்ந்து கொடுக்கும் தன்மை உள்ளன இருக்கும் வண்ணம் செய்தல், தொழிலில் திறமையுடைய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவற்றில் உள்ளன.

விலை நிர்ணயப்பதில் இறுதிநிலை உற்பத்திச் செலவை மட்டும் கொண்டு விலையை நிர்ணயம் செய்வது நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும். மிகுந்த உற்பத்திச் செலவும் சரியான விலைக் கொள்கையில்லாமையுமே இன்று இந்தியாவின் பொதுத்துறைத் தொழில் ஆலைகள் பல நட்டம் அடைந்து வருவதற்குக் காரணம் ஆகும். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக இந்தியாவில், பொதுத்துறைத் தொழில்களில் இலாபமுல் மக்களின் மேல் உள்ள வரிச் சுமையைக் குறைக்க இயலும். 'இலாபமில்லை நஷ்டமுமில்லை' என்ற கொள்கையை எப்போதுமே கண்டிப்புடன் பின்பற்ற இயலாது. அவ்வாறு பின்பற்றினால் தேசீய வருமானம் மிகவும் பாதிக்கப்படும். மேலும், பொதுத் தொழில்களில் இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை என்ற கொள்கையைப்பின் பற்றினால் மிச்சமேதும் இருக்காது. எனவே, பொதுத்துறைத் தொழில்கள் வளர்ச்சியடையவே வாய்ப்பின்றிப் போய்விடும். அடுத்துத் தனியார் துறையிடம் உள்ள முக்கியமான குறை தொழிலாளர் நலன் புறக்கணிக்கப் படுகின்றது என்பதே.

அவ்வாறு தொழிலாளர் நலன்கள் புறக்கணிக்கப்படுவதாலே, அல்லது அத்தகைய தொழிலாளர் நலன்களின் மீதுள்ள செலவைக் குறைப்பதனால்தான் தனியார் துறையில் உற்பத்திச் செலவு குறைகின்றது. அதே கொள்கையைப் பொதுத்துறை தொழில்களிலும் பின்பற்றுவது என்றால் பின்னர்த் தேசிய மயமாக்குவதில் பயனே இல்லை. எனவே, விலை நிர்ணயிக்கும் பொழுது தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கத் தேவையான நிதி கிடைக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்தல் வேண்டும். ஆயினும், எப்பொழுதுமே எல்லாத் துறைகளிலுமே இலாப நோக்கத்தோடு விலை நிர்ணயம் செய்தல் இயலாது. உதாரணமாக, இரும்பு எஃகின் விலை உயர்ந்திருக்குமானால் அதனால் பல்வேறு தொழில்கள் அல்லலுற நேரிடும். இது போன்றே நிலக்கரி விலை நிர்ணயம் செய்தல், பருத்தி நூலின் விலைநிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் மிகவும் கவனம் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இவற்றிலிருந்து நமக்குப் புலப்படும் உண்மையாவது எல்லாத் தொழில்

களுக்கும் ஒரே வகையான விலைக்கொள்கையைப் பின்பற்ற இயலாது. சில தொழில் தேசிய மயமாக்கப் படுதலின் காரணம், 'தனியார் துறையின் சுரண்டலை ஒழிக்க வேண்டும்' என்பதே. எனவே, அங்கு மிகுந்த இலாபத்தோடு விலை நிர்ணயம் செய்ய இயலாது. இன்னும் சில தொழில்களில், சார்ந்துள்ள தொழில் களின் நலம் கருத, 'இலாபமும் நட்டமும் இல்லை' என்ற கொள்கை யைப் பின்பற்றி விலை நிர்ணயம் செய்தல் வேண்டும்.

மூன்றுவது வகையான தொழில்களில், இலாபமே முக்கிய கொள்கையாக விலை நிர்ணயம் செய்தல் வேண்டும். 'எவ்வகைத் தொழில்களுக்கு எவ்வகை விலை நிர்ணயம் செய்தல் வேண்டும், என்று தீர்மானிப்பது அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பாகும்.

தொழிலாளர் நலன் முன்னேற்றமடையத் தேசிய மயமாக்கு தல் வேண்டும் என்று கண்டோம். தேசிய மயமாக்கிய பின்னர், தொழிலாளிகளின் போக்கு, நடத்தை எப்படி இருக்கும் என்று கூற இயலாது. 'எல்லாத் தொழிலாளிகளுமே நாட்டு நலம் கருதிச் சேவை செய்வார்கள்' என்று நம்ப முடியாது. தனியார் துறையைப் பொறுத்தவரையில் ஒரு நேரடியான தொடர்பு முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இருந்து வருகிறது. பொதுத் துறையாக்கப் பட்ட பின்னர், எல்லாருமே தொழிலாளிகள் என்ற நிலைமை ஏற் படுகின்றமையால் தொழிலாளர்களிடையே அலட்சியப் போக்கு காணப்படுவது இயற்கை. இந்தியாவைப் பொறுத்த வரையில் பெரும்பாலான பொதுத்துறைத் தொழில்களில் இப்போக்கும் காணப்படுகின்றது. இந்நிலை மாறவேண்டும். அப்போதுதான் தொழில்களைத் தேசிய மயமாக்குவதில் மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படும்.

'இந்தியத் தொழிற் கொள்கைத் தீர்மானத்தின்படி சில தொழில்கள் தேசிய மயமாக்கப்பட்டுள்ளன' என்று கண்டோம். தற்போது நம் நாட்டில் தோன்றியுள்ள புதிய விழிப்பின் காரண மாகப் பேரளவுத் தொழில்கள் யாவற்றையுமே தேசியமயமாக்கு தல் வேண்டும் என்று மக்களவையிவில் வலியுறுத்தப்பட்டு வரு கின்றது. மேலும், பலஆலைகளைத் தேசிய மயமாக்குவதற்கு முன்னர் நாம் சொன்ன சிக்கல்களை மனத்தில் கொள்ளவேண்டும். உடனடி யாக எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்குவதால் பொருளா தார வளர்ச்சி தடைப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு. எனவே, ஓர் அவசரப் போக்கினை மேற்கொள்ளாது நீண்டகால இடை வெளியில் தொழில்களைப் படிப்படியாகத் தேசியமயமாக்குவதன் மூலம் ஒரு சீரான தொழில் வளர்ச்சியைத் தடை ஏதுமின்றிப் பெற இயலும்.

8. சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும்

(1) சிறு தொழில்கள்

'சிறு தொழில் எது?' என்பதற்குப் பலவகையான இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன. இவ்விலக்கணங்கள், ஈடுபடுத்தப்படும் மூலதனத்தைக்கொண்டும், வேலையில் அமர்த்தப்படுவோரின் எண்ணிக்கையைக்கொண்டும், தொழில் அமைப்பு மற்றும் மேலாண்மையின் குணநலம் சிறு அளவுத்தொழில், பேரளவுத் தொழில், நடுத்தரத் தொழில் என்று பாகுபடுத்தப்படுகின்றன. ஒருகாலத்தில் அரசாங்கம் மின்சாரத்தை உபயோகித்து ஐம்பது நபர்களுக்குமேல் வேலையில் அமர்த்தியுள்ள தொழில்களையும், சக்தி உபயோகமின்றி நூறு நபர்கள்வரை வேலையில் அமர்த்தியுள்ள தொழில்களையும் சிறு தொழில்கள் என்று கருதியது. எல்லாச் சிறு தொழில்களும் அப்பொழுது 5 லட்சத்திற்கும் குறைவான மூலதனத்தையே ஈடுபடுத்தியிருந்தன. ஆயினும், வேலையாட்களின் எண்ணிக்கையைக் கொண்டு தொழிலைப் பாகுபடுத்துவது சரியான தொகுப்பன்று. அவ்வாறே, தொழிலமைப்பினையும் மேலாண்மையின் குணத்தினையும் கொண்டு பாகுபடுத்துவதும் சரியல்ல. தற்போது அரசினரால் ஏற்றுக்கொண்ட இலக்கணமாவது, இயந்திரங்கள் மற்ற கருவிகள் ஆகியவற்றின் முதலீடுபாட்டு மதிப்பு ரூபாய் 7.5 லட்சத்திற்கும் உட்பட்டு இருத்தல் வேண்டும். வேலையாட்களின் எண்ணிக்கை பொருட்படுத்தப்பட வேண்டியதில்லை.

வளர்ச்சி வரலாறு

இந்தியத் தொழில் வளர்ச்சியின் வரலாறே சிறு தொழில் வளர்ச்சியின் வரலாறாகும். தொடக்க காலத்தில் போக்குவரத்து, தண்ணீர், மின்சாரம், தேர்ந்த வேலையாட்கள், சந்தை

நிதி ஆகியவற்றின் வசதி எங்கு இருந்ததோ அங்கேயே சிறு தொழில்களும் நிலைபெற்றன. பொதுவாகப் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய பெரிய நகரங்களிலேயே சிறு தொழில்கள் வளர வாய்ப்பு இருந்தது. இவற்றில் பெரும்பாலான, நுகர்வோர் பொருள்களையே உற்பத்தி செய்து வந்தன. இரண்டாவது உலகப் போரின் போது ஏற்பட்ட தேவை வளர்ச்சியினால் அப்போதிருந்த சிறு தொழில்கள் வளரவும், புதிய உற்பத்தித் திட்டங்கள் ஏற்படவும் வாய்ப்பு அதிகரித்தன. இறக்குமதிக் குறைப்பும் பொறியியல், மின்சாரம், ரசாயனம், மருந்துகள் மற்றும் உலோகத் தொழில்கள் வளர வழி ஏற்பட்டது. இரண்டாவது, உலகப் போருக்குப்பின்னர் பரந்த அளவில் சிறு தொழில்கள் தோன்ற வாய்ப்புகள் அதிகமாயின என்று சொல்லக்கூடும்.

சிறு தொழில் வளர்ச்சியின் காரணமாகப் பெரும் எண்ணிக்கையில் வேலையாட்கள் தொழில் பயிற்சி பெறவும், தொழில் திறமை பெறவும் வாய்ப்பு எய்தினர். போர்க் காலத்துக்குப் பிறகு, பண வீக்கத்தின் தூண்டுதலினால் ஓரளவிற்குத் தனி நபர் சேமிப்பு மூலதனமாக முடக்கப்பட்டது. சிறு தொழில்கள் நுகர்வோர் பொருள்களைத் தயாரித்தும் அதற்கேற்ற சந்தையும், அப்பொருள்களுக்காகக் காத்திருந்தன. இலாபமும் இருந்தது. சுதேசி இயக்கம் நல்ல அரசியல் பின்னணியாக அமைந்து சிறு தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது.

பகைமை எண்ணங்கள் மறைந்த பின்னர் போரின் போது நிலவிய சாதகமான சூழ் நிலையும், செயற்கை வளப்பமும், அதீத தேவைகளும் மறைந்தன. அதுகாறும், வியாபாரிகளின் சந்தையாக இருந்த நிலைமாறி, வாங்குவோர் சந்தையாக நிலை மாறியது. சிறு தொழில் உற்பத்தியாளரிடம் போட்டி தோன்றி, போட்டிக்கு ஈடு கொடுக்க இயலாத உற்பத்தியாளர்கள் மறைந்தனர். உற்பத்திச் செலவும் உயர்ந்தது. இலாபம் குன்றியது. தொழிற்கூடங்கள் நிறுவப்பட்ட சக்திக்கும் குறைவாகவே உற்பத்தி செய்தன. இந்நிலை முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் வரை நீடித்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து அரசின் முயற்சியினால் மீண்டும் புத்துயிர் பெற்று வளர்ந்து வருகிறது.

சிறு தொழில்களின் இன்றியமையாமை

குடிசைத் தொழில்களைப் போலவே சிறு தொழில்களின் பொருளாதார வளர்ச்சிக்கான தேவை விவாதத்திற்கு உரியதாகவே இருந்து வந்துள்ளது. அரசியல்வாதிகளும், இன்னும்

சிலரும் சிறு தொழில்களைத் தீவிரமாக ஆதரிக்கின்றனர். ஆனுல், பொருளாதார வல்லுநர்களும், தொழில்துறைச் சிறப்பிகளும் சிறு தொழில் வளர்ச்சியை எதிர்க்கின்றனர். அவர்களின் வாதங்கள் ஆராயத்தக்கன. இந்திய தொழிற் கொள்கைத் தீர்மானம் 1956ஆம் ஆண்டுச் சிறு தொழில்களின் பணியினை வலியுறுத்திக் கூறுவதாவது:

''அவைகள் பெரிய அளவில் வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. அவைகள் தேசிய வருமானத்தைச் சமமாகப் பங்கிடுவதற்கும் திறமையான மூலதனம் மற்றும் கைத்திறமைத் திரட்சிக்கும் உதவுகின்றன. திட்டமிடப்படாத நகர்ப்புற வளர்ச்சியினுல் ஏற்படும் சில சிக்கல்களை நாடு முழுவதும் ஏற்படுத்தப்படும் சிறிய தொழிற்கூடங்கள் நீக்க உதவும்''. எனவே, தொழிற் கொள்கைத் தீர்மானம் சிறு தொழில் நிறுவனங்களுக்குச் சாதகமாக நான்கு வாதங்களை முன்வைக்கின்றது.

(அ) வேலை வாய்ப்பு வாதம்

வேலை வாய்ப்பு வாதத்தினை வலியுறுத்தி, 'கார்வே குழு' கூறுகின்றது: ''சுயமாக வேலையில் அமர்தல் என்ற கொள்கை குடியாட்சி வெற்றி பெறுவதற்கு, சுய ஆட்சி தேவை என்ற கொள்கை போலவே முக்கியமான ஒன்ருகும்''. இவ்விதமானது, சிறு தொழில்கள் தொழிலாளர் நிறைவு (Labour Intensive) உடையது என்னும் அனுமானத்தின் பேரில் எழுப்பப்படுகின்றது. எனவே, ஈடுபடுத்தப்படும் முதலின் ஒவ்வோர் அலகிற்கும் அதிகமாகவே வேலையில் அமர்வோர் உள்ளனர் என்று நம்புகின்றது. இத்தொழில்களில் மேலாண்மைச் செலவும், பேரளவு நிறுவனங்களோடு ஒப்பிடும்போது 'குறைவாக உள்ளது' என்று நம்பப்படுகின்றது. எனவே, மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் தான் அதிக மூலதனம் தேவைப்படுகிற அவைகளைப் பேரளவு உற்பத்தியிலும் 'நுகர்வோர் பொருள்' உற்பத்தியைக் குறைந்த மூலதனம் உடைய சிறு தொழில்களில் உற்பத்தி செய்யலாம் என்றும் வாதிடப்படுகிறது.

இந்த வாதத்தினை 'தாரும்', 'லிடாலும்' மறுத்துள்ளனர். வேலை அளிக்கவேண்டும் என்பதற்காக வேலை வாய்ப்புகள் துவங்கப்படுதல் கூடாது என்று அவர்கள் கூறுகின்றனர். ''அவ்வாறு செய்வதற்குப் 'பொருளாதார நீதி' வேண்டும். வேலை அளிக்கவேண்டுமென்ருல் சுலபமாக உற்பத்தி முறையில் எந்த நிலையிலும் ஆட்களை அதிகரித்துக்கொண்டே செல்வதன் மூலம் வேலை வாய்ப்பினை அதிகரிக்கலாம். நம் நாட்டில் உள்ள சிக்கல் எப்படித் தேங்கியுள்ள

செல்வங்களைப் பயன்படுத்துவது என்பதல்ல. எப்படி இனிதாகக் கிடைக்கும் செல்வங்களை நல்ல முறையில் பயன்படுத்துவது என்பதே! குறைந்த மூலதனம், குறைந்த தொழில் துணிவோர் கொண்டு உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது என்பதே நம்முன் உள்ள சிக்கல். 'தார்' என்பாரும் 'லிடாலும்' தங்களுடைய விசாரணையிலிருந்து பெரிய தொழிற்சாலைகள் இரண்டு அல்லது மூன்று ஷிப்டுகள் வேலை செய்கின்றன என்பதையும் சிறுதொழிற் சாலைகளில் அவ்வாறு இல்லை என்பதனையும் கண்டறிந்துள்ளனர். எனவே, முதல் பார்வைக்கே சிறுதொழிற் சாலைகள் குறைந்த மூலதனத்தைக் கொண்டு அதிக உற்பத்தி செய்வதுபோல் தோன்றின. உண்மையில் அவைகள் பெரும்பாலும், 'முதல் ஆழமுடைய' தொழில்கள் என்றும், ஐம்பது வேலையாட்களுக்கு மேலும் புதுமையான இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டாலும் முதலுக்கேற்ற உற்பத்தியில்லை என்றும் அவர்கள் கருதுகின்றனர். இத்துடன் சிறிய தொழிற்சாலைகளின் வருமானத்தின் பெரும் பகுதி கூலியாகக் கொடுப்பதால், சேமிப்பு போதுமான அளவு இருப்பதில்லை. கூலியாட்களின் இறுதி நிலை சேமிப்பு விருப்பம் குறைவாக உள்ளதால் சிறு அளவுத் தொழில்களை வளர்ப்பதால் நாட்டின் மொத்த சேமிப்புக் குறைந்து பொருளாதார வளர்ச்சி விகிதம் தடைபடும் என்றும் அஞ்சுகின்றனர்.

இவ்வச்சத்தினைப் போக்க, முன்னாள் திட்டக்குழு உறுப்பினர் பின்வரும் அட்டவணையின் மூலம் உண்மையினை விளக்குகின்றார்.

அட்டவணை : 42

முதல் வேலை வாய்ப்பும் உற்பத்தியும் (ரூபாய்களில்)

	மூலதன தொழிற் பகுப்புகள்		
	சிற்றளவு	நடுத்தரம்	பேரளவு
1. தலா நபரின் நிலை முதல்	2,018	4,044	17,753
2. வேலையில் அமர்த்தப்படும் ஒவ்வோர் அலகின் உற்பத்தியினால் அதிகரிக்கப் படும் மதிப்பு	2,359	3,815	5,217
3. நிலை முதலின் ஒவ்வோர் அலகும் உற்பத்தியினால் அதிகரிக்கும் மதிப்பு	1.17	0,94	0,29

இவ்வட்டவணையிலிருந்து சிறந்த தொழில்களின் வேலைவாய்ப்பினையும் வெளிப்பாட்டினையும் பேரளவு தொழிலுடன் ஒப்பிடும்பொழுது சிறிய முதலீட்டைக் கொண்டு அளிக்கின்றன என்பது தெளியப்படும். கொள்கையளவில் தாரின், லிடாலின் வாதம் சரியானதாகத் தோன்றிய போதிலும் உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்டு பார்க்கும்போது அவ்வாதம் நிலைக்கவில்லை. சிறிய முதலைக் கொண்டும் குறைந்த உழைப்பாளர் சக்தியைக் கொண்டும் பேரளவு உற்பத்தியைக் காட்டிலும் சிறிய தொழில்களில் முதலீடு வெளிப்பாடு விகிதம் அதிகமாக இருப்பது பாராட்டுதற்குரியதே.

(ஆ) சமதர்ம வாதம்

சிறு தொழிற் கூடங்களில் தோன்றும் வருமானமானது, சமூகத்தில் மிகவும் பரவலாகப் பரவுகின்றது. அவ்வாறு பரவுவது குறைந்த எண்ணிக்கையுள்ள பெரிய தொழிற் கூடங்களில் தோற்றுவிக்கப்படும் வருமானத்தின் பரப்பைவிட அதிகமாக உள்ளது. வேறுவிதமாகக் கூறின், சிறுதொழிற் சாலைகளின் வருமானத்தின் பலன் அதிகப்படியானமக்களுக்குக்கிடைக்கின்றது. ஆனால், பேரளவுத் தொழிற் கூடங்கள் பொருளாதாரச் சக்தியினை ஒரு சிலர் கையில் குவிப்பதற்கு உதவுகின்றன. இவ்வாறாகச் சிறு தொழிற் கூடங்களில் உற்பத்தியாகும் வருமானத்தைச் சமதர்ம முறையில் பங்கிடுவதற்குப் பெரிதும் உதவுகின்றன. இச் சிற்றளவுத் தொழிற் கூடங்கள் பெரும்பாலும் தனிபார் நிறுவனங்களாகவோ அல்லது கூட்டணி முறை நிறுவனங்களாகவோ இருப்பதால் தொழிலாளி உறவு பேரளவு தொழிற் கூடங்களைவிட மிகவும் சுமுகமாக இருக்கின்றன.

'தாரும், லிடாலும்', இதனைப் பொய்யானவாதமாகக் கருதுகின்றனர். பல நாட்டுப்புள்ளி விபரங்களையும் பார்க்கும் போது பொதுவான போக்கு எப்படி இருக்கிறது என்றால், பேரளவுத் தொழிற்சாலைகளைவிடச் சிறிய ஆலைகளில் வேலை செய்வோரின் கூலி குறைவாகவே உள்ளது. சிறிய தொழிற்சாலைகளில் தொழிற் சங்கங்கள் இன்மையால் முதலாளி சுலபமாகத் தொழிலாளியை நன்கு ஏமாற்ற முடிகிறது. எனவே, சிறிய ஆலைகளின் தொழிலாளிகள் பெரிய ஆலைகளின் தொழிலாளிகளைவிடப் பொருளாதார நிலையைப் பொறுத்த வரையில் அதிக பலனடைவதில்லை. அவ்வாறே சமூகக் காப்புத் திட்டங்களினாலும் பலன் பெற முடிவதில்லை. சிறுதொழில்கள் குறைந்த ஊதியத்தைக் கொடுத்துக் குறைந்த சேமிப்பையே ஏற்படுத்துகின்றது. குறைந்த

வருமானமே வரிகளின்மூலம் கிட்டுகின்றது. எனவே, வளர்ச்சிக் கரு திடமாக இல்லை.

'தார் மற்றும் லிடாலின் வாதத்தில் உண்மையில்லை' என்று மறுப்பதற்கில்லை. அதே சமயத்தில் இதுவும் உண்மை; அதாவது, வளர்ச்சி அடையாத நாடுகளில் தொழிலாளி, ஒன்று குறைந்த கூலியில் வேலையில் அமரவேண்டும்; அல்லது வேலை இல்லாது இருத்தல் வேண்டும். எனவே, சூழ்நிலையின் காரணமாகக் குறைந்த கூலி உடைய தொழிற் கூடங்களில் வேலையில் அமர நேரிடுகின்றது. ஆலைச் சட்டங்களை எல்லா வகைத் தொழிற் கூடங்களுக்கும் விரிவு படுத்துவதன்மூலம் அச்சட்டங்களைத் திறமையாக ஆள்வதன் மூலமும் குறைகளை நீக்கிவிடலாம். 'தார்' லிடாலின் வாதத்தில் உண்மை இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் நம்முடைய திறமையற்ற ஆட்சியும், ஊழல் மலிவும் காரணமாகும். எனவே, இக்குறைகளைப் போக்குவோமாயின், தானாகவே தொழிலாளியின் ஊதியம் உயரும். சிறிய தொழிற் சாலைகளில் வேலை செய்பவனுக்கும் சமூகக் காப்புத் திட்டங் களினால் பலனும் கிடைக்கும்.

(இ) மறைந்து கிடக்கும் வளங்களை வெளிக் கொணரும் -- என்ற வாதம்

சிறிய தொழிற்சாலை, 'மறைந்து கிடக்கும் செல்வம், தொழில் துணிவோர் திறமை ஆகியவற்றை வெளிக்கொணர வல்லது' என்பர் சிலர். இது குறித்து, தார், மற்றும் லிடால் கூறுகையில், 'அத்தகைய செல்வத்தை ஒரே முறைதான் வெளிக் கொணர முடியும்' என்று கருதுகின்றனர். ஆயினும், தேங்கிக் கிடந்த செல்வங்களை ஆற்றுப் படுத்தும்போது அவைகள் ஒரு தொடர்ந்த போக்கினை மேற்கொண்டு மேன் மேலும் செல்வம் எனும் ஆறாக ஓடத்தொடங்கிவிடுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு புதைத்து வைக்கப்பட்ட செல்வங்கள் வெளிப்படுகின்றதோ அவ்வளவிற்குச் சமூகத்திற்கு நன்மைதானே! மேலும் சிறு தொழில்கள் புதியவளர்ச்சி, ஆற்றல் பெற்ற தொழில் துணிவோர் களைச் சமூகத்திற்கு அளிக்கின்றது. 'தார்' மற்றும் 'லிடால்' இந்நாட்டில் தொழில் துணிவோர் கிடையாது என்பதில்லை என்று வாதாடுகின்றனர். ஆயினும், இது சரியான வாதமாகாது. சிறு தொழில் துணிவோர் வளர்வதற்கு நல்ல சூழ்நிலை தேவை. இந்தியச் சுதந்திரத்திற்கும் பின்னர்ப் போதுமான வாய்ப்பு, சூழ்நிலை, கடன் வசதி, சக்தியளிப்பு ஆகியவற்றால் பெருமளவில் சிறுதொழிற் சாலைகள் துவக்கப்பட்டிருப்பதைக் கவனித்தல் வேண்டும்.

(ஈ) தொழில்கள் பரவலாக இருத்தல் வேண்டும் -- என்ற வாதம்

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொழில்கள் சமமாகப் பரவி யிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட சில நகரங்கள் அல்லது பகுதி களில் மட்டும் தொழில்கள் அனைத்தும் குவிதல் அவ்வளவுவிரும்பத் தக்கது அல்ல. தேசப் பாதுகாப்பு நோக்குடன் பார்க்குங்கால் எதிரியின் விமான தாக்கலிலிருந்து நாட்டின் தொழில் வளத்தைக் கக்சாத் தொழில்கள் பரவலாக (பல பிராந்தியங்களில்) இருப்பதே நல்லது என்பது தெளிவு. நாட்டின் மூலைமுடுக்குகள் எல்லா வற்றிலும் புதிய புதிய தொழில்கள் துவக்கப்பட்டால்தான் நாமும் தொழில் மயம் அடைய முடியும். அதே சமயம் சிறிய தொழில்களைக் கிராமங்களில் துவங்க இயலாது என்பதும் உண்மை. ஆயினும், குறிப்பிட்ட சில கிராமங்களை ஒன்று சேர்த்துக்கொணடு அப்பகுதிகளில் தொழில்களைத் துவக்க முடியும். கிராமப்புற மக்களின் சேமிப்பைக் குவிக்கவும், அங்குக் கிடைக்கும் மூலப் பொருள்களைப் பயன்படுத்தவும் அங்குள்ள திறமையான தொழி லாளர்களுக்குத் தொழில் வாய்ப்பு அளிக்கவும், மேலும் பொருளா தாரத் தாழ்ச்சியடைந்த பகுதிகளை முன்னேற்றமடையச் செய்ய வும் பரவலான தொழில் வளர்ச்சி மிகவும் அவசியமாகும்.

சிறு தொழில்களின் குறைகளை நீக்க மேற்கொள்ள வேண்டிய திட்டங் களும் கொள்கைகளும்

பேரளவுத் தொழில்களைப் பார்க்குங்கால் சிறு தொழிற் கூடங்கள் போதிய வாய்ப்பின்றி அல்லலுறுகின்றன. பொதுவாக, அரிய மூலப்பொருள்கள் பங்கீடு நிதி வசதி ஏற்படுத்துதல், தொழில் நுட்பத் திறமை, மேலாண்மைத் திறமை மற்றும் சந்தை ஒப்பந்தங்கள் ஆகியவற்றில் இவ்விருவகை தொழிற்கூடங்களுக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. இவையாவும் பெரிய தொழில் களுக்கு ஆதரவாக உள்ளன. சிறிய தொழில்களும் சமநிலையில் பயன் பெற முயற்சி செய்யப்படுதல் வேண்டும்.

(1) மூலப்பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்ட உறுப்புகள் மற்றும் கருவிகள் ஆகியவற்றின் பங்கீடு

இறக்குமதி செய்யப்பட்ட இயந்திர உறுப்புகள் கருவிகள் மற்றும், அரிதாகக் கிடைக்கும் மூலப்பொருள்கள் ஆகியவற்றைப் பங்கிட்டு அளிக்கும் பொழுது சிறு தொழில்களுக்குக் குறைந்த அளவே கிடைக்கின்றது. உற்பத்திச் சக்திக்கு ஏற்றவாறு பங்கீடு நடைபெறுவதில்லை. மொத்த உற்பத்திச் சக்தியைக் கொண்டு ஒப்பிடுகையில் பேரளவு தொழிற் கூடங்களுக்குக் கிடைக்கும்

விகிதப் பங்கைவிடச் சிறு தொழிலுக்குக் குறைவான விகிதப் பங்கே கிடைக்கின்றது. இதற்கு அரசின் பாரபட்சக் கொள்கையே காரணம். சிறு தொழில்களின் எதிர்கால வளர்ச்சி பெரிய தொழிற் கூடங்களுக்குக் கிடைக்கும் அதே பங்கீட்டு விகிதத்திலேயே கிடைப்பதைப் பொறுத்துள்ளது.

(2) கடன் வசதியும், நிதி உதவியும்

சிறு தொழில்களில் நிதி வசதி குறைவாகவே உள்ளது. வியாபார நெருக்கடிக் காலங்களில் அவைகளின் சுய பண நிலைமை திருப்திகரமாய் இல்லை. இதன் காரணமாக வியாபாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டு இலாபத்திலும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. அவர்களுக்கு நிதி உதவி செய்ய, 'லேவா தேவிக்காரர்களே' முன் வருகின்றனர். ஏனெனில், அவர்கள் பொதுவாக வியாபார இலாப நஷ்டத்தைக் கவனிப்பதில்லை. ஈடு வைப்புகளைப் பொறுத்தும் பெரிதும் அக்கறை காட்டுவதில்லை. வட்டி மட்டும் தான் சிறிது அதிகம். இந்திய வணிக வங்கிகள் சுதந்திரத்திற்குப் பின்னர்கூடச் சிறுதொழில்களுக்கு நிதி உதவுவதில் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை. மேலும், நாடிச்செல்வோரிடம் கடன் அளவிற்குமேல் ஈட்டு வைப்புக் கேட்டும் அவர்களின் வியாபார இலாப நட்டக் கணக்கின்மேல் குறை கூறியும் கடன் அளிப்பதைத் தவிர்க்க முயன்றனர். 1967ஆம் ஆண்டு வணிக வங்கிகளினால் எல்லா வகைத் தொழிற் கூடங்களுக்கும் அளிக்கப்பட்ட மொத்தக் கடன் அளவு ரூ. 1748 கோடியாகும். இவற்றில் சிறுதொழிற் கூடங்கள் பெற்ற கடன் அளவு, ரூ. 178 கோடி மட்டும்தான். அதாவது, மொத்த கடன் வசதியில் 10.2 சதம் தான் சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டது. வணிக வங்கிகளின் கொள்கை மாற்றப்படுதல் வேண்டும். ஈட்டு வைப்பினையும், இலாப நட்டக் கணக்கையும் மட்டுமே தகுதியாகப் பார்க்காமல், நிறுவனங்களின் உற்பத்தி சக்தி, உற்பத்தி செய்யப்படும் பொருளுக்குள்ள சந்தை ஆகியவற்றைத் தகுதியாகக் கொண்டு கடன் வழங்குதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்திய மத்திய வங்கி, சிறு தொழில்களுக்குக் கடன் வசதியளிப்பதில் தற்போது மிகவும் கவனம் செலுத்தி வருகிறது. பல்வேறு கடன் வசதி நிறுவனங்களின்மூலம் நீண்ட கால, குறுகிய காலக் கடன்கள் அளிக்க முன்வந்துள்ளது. 1960ஆம் ஆண்டு இந்திய மத்திய வங்கி சிறு தொழில்களுக்கு உதவக் கடன் (திருப்பும்) உறுதித் திட்டம் ஒன்றைக் (Credit Guarantee Scheme) கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ்க் கடன் வசதி நிறுவனங்களிடமிருந்து நடை முதல் முதலுக்காக மட்டுமல்லாது,

நிலை முதலுக்காகவும் கடன் பெறலாம். எனவே, கடன் வசதி யளிக்கும் நிறுவனங்கள் தாங்கள் அளிக்கும் கடன்கள், திரும்புமோ, திரும்பாதோ என்ற அச்சம் அடையத் தேவை யில்லை. உயர்ந்த பட்சமாக ரூ. 2 லட்சம்வரை இவ்வுறுதியளிக் கப்படும். 1961–62–ல், 2285 விண்ணப்பதாரர்களும், 1968-69-ல் மொத்தம் 32,923 விண்ணப்பதாரர்களும் இத்திட்டத்தினால் பலன் பெற்றனர். 1964 ஜனவரி முதல், 1968 செப்டம்பர் முடிய மொத்தம் ரூ. 294 கோடி மதிப்புடைய 67820 உறுதிச் சான் றிதழ்கள் இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ளன.

(3) தொழில் நுணுக்க உதவி

தொழிற் கூடங்கள் பெரும்பாலும் போதிய கல்வியறிவு இல்லாதவர்உளர்; வெளி நாட்டு ஒத்துழைப்பின்றித், தொழில் முன்னறிவுமின்றிச் சுய அறிவினால், சந்தை வாய்ப்புகளை நம்பியும் தொடங்கப்படுவதால், தொழில் நுணுக்க இடர்கள் பல இத் தொழிற் கூடங்களுக்கு ஏற்படுகின்றன. நாட்டுப் பொருளா தாரத்தில் இத்தொழிலின் முக்கியத்துவம் கருதி இத்தொழிற் கூடங்களுக்குப் போதிய தொழில் நுணுக்க வசதி அளிப்பது அரசின் கடமை. தற்போது சிறு தொழில்களுக்கு இவ்வசதியினை அளிக்க மூன்று வகைத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. முதலாவதாக, மத்திய சிறுதொழில்கள் நிறுவனம், தன்னுடைய சேவை நிறுவனங்கள் மற்றும், 'வட்டார வளர்ச்சி மையங்கள்' (Service Institutes and Extenion centre) மூலமாகத் தொழில் திறமை மிக்க நபர்களைச் சிறு தொழில்களுக்கு ஆலோசனை உதவி செய்ய அளிக்கின்றது. 'இவ்வட்டார வளர்ச்சி மையங்கள்' சிறு தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக உள்ளன. இரண் டாவதாகப் பொதுமக்கள் வசதிக்காக நிறுவப்பட்டுள்ள பட்டறை கள் மிகவும் கடினமான வேலைப் பகுதிகளைச் செய்து கொடுக்கின் றன. அவ்வாறு செய்யும் பகுதிகள் உழைப்புக் கூலியை மட்டுமே பெற்றுக்கொள்கின்றன. பெரும்பாலான பட்டறைகள் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளப்படவில்லை. எனவே, இவைகள் தொழில் தேர்ச்சிமையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

(4) சந்தை வசதி

சிறு தொழில் நிறுவனங்களின் மற்றொரு குறை, அவைகள் தங்களுடைய பொருள்களைச் சந்தையில் திறம்பட விற்க இயலாமை. இதற்குக் காரணம், சிறு தொழிற் கூடங்களின் உற்பத்திப் பொருள்கள்தரக் கட்டுப்பாடு செய்யப்படாததே.

எனவே, அரசாங்கம் சிறுதொழிற் கூடங்களின் உற்பத்திப் பொருள்களைத் தரக் கட்டுப்பாடு செய்ய முயற்சிகள் எடுத்து வருகின்றது. விற்பனையை அதிகரிக்கவும், சிறு தொழிற் கூடங்கள் நிலையான சந்தையைப் பெறவும் அரசாங்கம் தன்னுடைய கொள் முதலைச் சிறுதொழில் நிறுவனங்களிடமே செய்கின்றது. பாதுகாப்புத் துறையின் கொள்முதல்கள் சிறு தொழிற் கூடங்களிடம் இருந்து மேற்கொள்ளத் ''தேசிய சிறு தொழில்கள் கூட்டமைப்பு'' (National Small Industres Corporation) என்னும் அரசு நிறுவனம் உதவுகின்றது. இந்நிறுவனம் இத்தொழிற் கூடங்களின் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்யவும் உதவுகின்றன.

(5) தொழிற் பேட்டைகள்

புதிதாகத் தொழில் வளம் பெற்ற நாடுகளில் சிறு தொழிற் சாலைகளை வளர்க்க உதவும் ஒரு கருவியாகத் தொழிற்பேட்டைகளை அமைப்பதில் இந்தியா முன்னோடியாக இருக்கின்றது. 'தொழிற் பேட்டை' என்பது குறைந்த வாடகையில் தொழிற்சாலைக்கு வேண்டிய இட வசதி, மற்றைய வசதிகளைத் தொகுப்பான சிறு தொழில் புரிவோருக்கு அளிக்கின்றன. இந்தியாவில் இத்திட்டம் முழுவெற்றி யடைய வில்லை. இதற்கு முதல் காரணம், தொழிற் கூடங்களைச் சரியான இடத்தில் அமைக்காமையும் தேவையற்ற அளவிற்கு, அல்லது தேவைக்கு ஏற்ற அளவில் கொட்டகைகளின் அளவு இல்லாமையும் உயர்ந்த கட்டுமான செலவுமே! எனவே, இனித் தொழிற் பேட்டைகள் அமைக்கும் போது இவைகளை மனத்தில் கொள்ள வேண்டும். தொழிற் பேட்டைகளைச் சந்தைக்கு அருகிலும் திறமையுள்ள தொழிலாளர்கள் உள்ள இடங்களிலும், தொழிலாளர்களுக்குப் போதிய இடவசதி உள்ள இடங்களிலும், மின்சாரம் போதுமான அளவில் கிடைக்கும் முறையிலும், மேலும் குறைந்த கட்டுமான செலவிலும் அமைத்தல் வேண்டும். இதற்கு ஒரு சுலபமான வழி, எங்குத் தொழில் மயம் வளம் பெற்றிருக்கின்றதோ, எங்குத் துணைத் தொழில்கள் தேவை இருக்கின்றதோ அங்குத் தொழிற் பேட்டைகளை அமைப்பதே. இப்பழக்கம் அண்மைக் காலங்களில்தான் பின்பற்றப்படுகின்றது. இத் தொழிற் பேட்டைகள் தொழில் துணிவோருக்கு ஆரம்பக் காலங்களில் உதவத்தான் நிறுவப் பட்டன. ஆனால், பெரும்பாலான தொழிற் பேட்டைகளில் உள்ள தொழிற் கூடங்கள் நிரந்தரமாக அங்கேயே இருந்து வருகின்றன. தொழிற் பேட்டைகள் கிராமங்களின் நாற்று வயலைப்போலத் தான் உதவ இயலும். தொழிற் கூடங்கள், தொழிற் பேட்டைகளில், சிறிது வளர்ச்சி அடைந்த பின்னர் வேறு இடங்களுக்கு

மாற்றிவிடுதல் வேண்டும். அப்போதுதான் மற்றும் புதிதாகத் தொழில் துவங்குவோர்க்கு உதவ இயலும்.

1969ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய, நம் நாட்டில் மொத்தம் 346 தொழிற் பேட்டைகள் இருந்தன. இவைகளில் உள்ள சிறு தொழிற் கூடங்கள் மொத்தம் 82,700 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. இத்தொழிற் பேட்டைகளில் உற்பத்தி மதிப்பு ஆண்டிற்கு ரூ. 99 கோடியாகும். ஆயினும், பல தொழிற் பேட்டைகள் இன்னும் முழு அளவில் செயற்படவில்லை.

(6) துணைத்தொழிலின் பிணைப்பு

சிறிய தொழிற்கூடங்கள் பெரிய ஆலைகளுக்குத் துணைத் தொழில் கூடமாக அமையுமாயின், இரண்டுமே நல்ல பலனடைய முடியும். இச்சிறு தொழிற்கூடங்கள் தங்களுக்குத் தேவையான மூலப்பொருள்கள், தொழில் நுணுக்க உதவி, சந்தை வசதி ஆகியவற்றைப் பெரிய தொழிற்கூடங்களிடமிருந்து சுலபமாக பெற இயலும். இவ்வாறு துணைத்தொழிற் கூடங்கள் அமைப்பதனல் பெரிய ஆலைகளும் தங்களுக்குத் தேவையான துணைப் பொருள்களைக் குறைந்த விலையில் பெற முடியும். இறக்குமதி களையும் தவிர்க்க இயலும். இவ்விதம் நாட்டுப் பொருளாதாரப் பொது வளர்ச்சியும் மேம்பாடடைய முடியும். சிறு தொழில்களின் முக்கிய பணியினைப் போற்றும் வகையில் அரசாங்கம் அவைகளின் குறைகளை நீக்கி, அவைகள் வளர சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துதல் வேண்டும்

(2) குடிசைத் தொழில்கள்

எந்தெந்தத் தொழில்களில் தன்னுடைய சொந்தக் கருவிகளைக் கொண்டு, தன்னுடைய சொந்த வீட்டில், தொழிலாளி தன்னுடைய குடும்பத்தில் ஒத்துழைப்புடன், அல்லது 'ஐந்து நபர்களுக்கு மேற்படாத கூலியாட்களைக்கொண்டு நடத்துகின்ற தொழில்கள் எல்லாம் குடிசைத் தொழில்களாகும்' என்று தேசிய திட்டக்குழு குடிசைத்தொழில் என்பதனை வரையறுக்கின்றது. பம்பாய் பொருளாதார-தொழில் விசாரணைக்குழு, குடிசைத் தொழில்களைப்பற்றிக் குறிப்பிடுகையில், 'எங்குச்சக்தி உபயோகிக் கப்படவில்லையோ, எங்கு உற்பத்தி தொழிலாளியின் வீட்டிலேயே நடத்தப்படுகின்றதோ, மற்றும் எங்கு வேலையாட்கள் 9 நபர் களுக்கு மேற்படாது இருக்கின்றனரோ, அங்கு நடைபெறும் தொழில் குடிசைத்தொழில்' என்கிறது. இவற்றிலிருந்து உரிமை

யாளனே மேலாண்மை செய்துவரும், மற்றும் உழைத்து வரும் தொழிற்கூடங்கள் குடிசைத்தொழில் என்பது தெளிவு; அதன் சிறிய முதலீட்டையும், சிறிதளவு வேலையாட்களையும் மேலும் தம் குடும்பத்தையும் நம்பியுள்ளான். குடிசைத்தொழில்கள் பொதுவாகக் கிராமப்புறங்களில் நடத்தப்படுகின்றன.

இந்தியாவில் இன்று குடிசைத்தொழில்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தங்கள் இல்லத்திற்கு வேண்டிய தேவைகளை நிறைவு செய்வதற்கும், சில சமயங்களில் வெளிச்சந்தையில் விற்பதற்கும் உழவர்களால் துணைத் தொழில்களாகக் கையாளப்பட்டுவரும் கிராமக் கைத்தொழில்கள்.

2. கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தச்சர்கள், கொல்லர்கள், குயவர்கள் முதலிய திறமை பெற்ற தொழிலாளர்களால் இயக்கப்படும் தொழில்கள்.

3. விரிவான சந்தைகளைக் கவரும் வகையில் கலைத்திற நோக்கோடு தனித் திறமையுடைய கைவினைஞர்களால் செய்யப்படும் கிராமக் கலைத்தொழில்கள்.

4. இன்றுவரை நீடித்து வாழ்வனவும், மேம்பட்ட திறமையைப் புலப்படுத்துவனவும் ஆகிய நகர்ப்புறங்களில் உள்ள கலைத் தொழில்களும், கைத்திறன் கலைகளும்.

(அ) விவசாயிகளுக்குத் துணைத் தொழில் அளிக்கும் கைத்திறத் தொழில்கள்

இந்தியாவில் விவசாயிகளுக்கு ஏறத்தாழ ஆறு, ஏழு மாதங்களே உழவு வேலை இருக்கின்றது. பிற மாதங்களில் அவன் சோம்பியிருக்க வேண்டியுள்ளது. உழவு வேலையுள்ள காலங்களிலும், ஓய்வு நேரம் மிக அதிகம். எனவே, இந்திய உழவாளி தன்னுடைய ஓய்வுக் காலங்களில் நூல் நூற்றல், ஆடை நெய்தல், கூடை முடைதல், பாய் பின்னுதல் ஆகிய துணைத்தொழில்களில் ஈடுபடுகின்றான். இத்துணைத் தொழில்களில் மிகவும் முக்கியமானது கைத்தறி நெசவுத் தொழிலாகும்.

கைத்தறி நெசவு

கைத்தொழிலாக நடத்தப்பட்டுப் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் ஒரு நல்லதொழில் கைத்தறி நெசவுத்

தொழிலாகும். இந்தியாவில் உபயோகமாகும் துணியில் மூன்றில் ஒரு பகுதி கைத்தறியினுல் நெய்யப்பட்டவை எனக்கூறப்படுகிறது. இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப் பெரிய அளவிலும், விரிவாகவும் நடத்தப்படுவது கைத்தறி நெசவுத் தொழில். பிரிவினையாகாத இந்தியாவில் இத்தொழிலை நம்பி யிருந்தோரில் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 10 மில்லியன் ஆகும். இன்னும் இந்த அளவிற்கு மக்கள் இதனை நம்பியுள்ளனர். அண்மைக்காலமாக இத்தொழிலை மேம்படுத்துவதற்காக அரசினர் பலபணிகளை மேற்கொண்டுள்ளனர். எறிநாடா (Fly Shuttle) என்னும் கருவி பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. புதுவித மான தறிகளை அமைப்பதிலும் புது மாதிரியான துணிரகங்களை உற்பத்தி செய்வதிலும் 'பாஸ்லே குழுவினர்' துணைபுரிந்துள்ளனர். கூட்டுறவு வங்கிகள் மூலம் 'நிதி வசதியும்' விற்பனை வசதியும் நெசவாளர்களுக்கு அளிக்கப்படுகின்றன.

மலிவான ஆலைத்துணிகளின் வருகையினுல் கைத்தறித் தொழிலின் எதிர்காலம் இருண்ட போதிலும் இத்தொழில் வளர அரசு ஆவன செய்தல் வேண்டும். கைத்தறித்தொழிலுக்குச் சிறு மூலதனம் மட்டும் போதும். தொழிலாளர்கள் மலிந்து இருக் கிருர்கள். கிராமப்புற மக்கள் தமது வருவாயை அதிகரித்துக் கொள்ள இத்தொழில் உதவுகிறது. மேலும், ஆலையில் நூற்கப் படும் நூல்களை உபயோகித்துக் கொள்வதில் கைத்தறி முன்னணி யில் நிற்கிறது. தற்போது கைத்தறி உடை அணிவது உலகெங்கும் நாகரிகமாகக் கருதப்படுவதால், இத்தொழில் நன்கு வளர்ச்சி பெற்று வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன் வரை அமெரிக்காவில் நவ நாகரிகமானவர்கள் என்று கருதப்பட்ட பலர் சென்னையில் தயாரிக்கப்பட்ட ப்ளீடிங் மெட்ருஸ் (Bleeding Madras) என்ற ஒரு நெசவுத் துணியைப் பெரிதும் விரும்பி அணிந்து கொண்டார்கள். இப்பொழுது நம் நாட்டுப் பட்டுப் புடவைகளுக்கு அயல்நாடு களில் நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

கைத்தறித் துணியைப் போன்றே கதர்த் துணியும் சுதந்திர இயக்கத்தின்போது நன்கு வளர்ச்சியுற்றது. இந்திய அரசாங்கம் 'திட்டக் குழுவின்' பரிந்துரைக்கு இணங்க 1953-ம் ஆண்டில் 'அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் கழகம்' என ஒன்றை நிறுவியது. கதர், கிராமக் கைத்தொழில் ஆகியவற்றில் வளர்ச்சி தொழிற் பயிற்சி அளித்தல், மூலப்பொருள் கிடைக்க உதவுதல், விற்பனை, தொழில் ஆராய்ச்சி ஆகியவற்றிற்கு வசதி செய்தல் என்பன இக்காலத்தின் பொறுப்புகளாகும். இத்தொழிலுக்கு நிதிவசதியளிப்பதற்காக அரசினர் கதர் நிதி ஒன்றினை ஏற்படுத்

தினர். இதன் பின்னர் கதர்உற்பத்தியும், விற்பனையும் திருப்திகர மான முன்னேற்றம் அடைந்துள்ளன. கதரின் தரம் சிறப்பாக முன்னேறியுள்ளது. 'கை ராட்டினமே' நாட்டின் உயிர் நாடி என்று காந்தியடிகள் மிகப் பொருத்தமாகக் கூறியுள்ளார்.

ஆக்ஸ்போர்டு பொருளாதாரத் துறையினைச் சேர்ந்த, பேராசிரியர் ஜி. டி. எச். கோல் என்பார் இதுபற்றிக் குறிப்பிடுவது ஆராயத்தக்க ஒன்று. 'உள்நாட்டில் இயங்கும்-கதர் முதலிய ஆடைத்தொழிலை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று காந்தியடிகளின் இயக்கம்—காலங்கடந்த பழந்தொழிலை உயிர்ப் பிக்கவேண்டுமென்ற ஆசை வெறியினால் ஏற்பட்டதன்று. அது இந்தியக் கிராமவாசியின் வறுமையை நீக்கி, அவனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்பெற்ற செயல் திறம் ஆகும்''.

(ஆ) பிழைப்பூதியம் தரும் கிராமத்தொழில்கள்

உழவோடு தொடர்பில்லாத சிலரும் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். கொல்லர், தச்சர், நெசவாளர், தோல் பதனிடுவோர், பானை வனைவோர் அனைவரும் கிராமக் கைவினைஞர்களே. இவர்கள் யாவருக்கும் சொந்தமாகச் சிறிதளவு நிலமிருக்கும். பண்டைக் காலத்துக் கிராமங்கள் அனைத்தும் தன்னிறைவு பெற்று விளங்க இக்கைவினைஞர்கள் உதவினர். கை நுட்பக் கைத்திறத் தொழில்கள் கிராமத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்தன. தற்போது கிராமப்புறங்களில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆலைகளின் பேரளவு உற்பத்தியுடன் கிராமக் கைவினைஞர்கள் போட்டியிட நேர்ந்தமையால், இத்தொழில்கள் நசிந்து, சிலர் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள நகர்ப்புறங் களை நோக்கி இடம் பெயர ஆரம்பித்து உள்ளனர். கிராமத்திற்கு அப்பாலுள்ள இடங்களில் இருந்தும் இவர்கள் அதேயளவு வரு மானத்தைப் பெற்று வருகின்றனர். இவர்களுடைய பொருள் களுக்கு இன்னும் நல்ல தேவை இருக்கின்றது. சில தொழில்கள் நிறைந்த மூலதனத்துடன் திறமையான கைத்திறத்தினால் செய்யப் படுவதால் நல்ல இலாபம் கிட்டுகின்றது. ஆலைகளில் வேலைக்கு அமர்ந்து பெறும் ஊதியத்தைவிட, இவர்கள் வருமானம் பெரும் பாலும் அதிகமாகவே உள்ளது. ஓரளவிற்கு நாட்டின் வேலை யின்மைப் பளுவினையும் இவர்கள் குறைக்க உதவுகின்றனர்.

இ) கிராமக் கலைத் திறத்தொழில்

இந்தியக் கிராமங்கள் பல கலைத்திறன் மிக்க பொருள்களைச் செய்யும் மையங்களாகத் திகழ்கின்றன. மொசுக்கட்டை மரங்கள்

அடர்ந்த பகுதிகளான வங்காளம், காஷ்மீர், மைசூர் போன்ற இடங்களில் பட்டுப்புழு வளர்ப்பும், பட்டு நெசவுத் தொழிலும் செழித்தோங்கி இருக்கின்றன. பீஹார், வங்காளம் ஆகியவற்றின் சில பகுதிகள் உலோகத் தொழிலில் சிறப்புற்று விளங்குகின்றன. உத்தரப் பிரதேச கிராமங்களில் ஏற்றுமதிக்கெனக் கண்ணாடி வளையல்கள் தயாராகின்றன இவ்வாறே சித்திரத் தையல் துணிகள், காஷ்மீரச் சால்வைகள், வேலைப்பாடுடையமண்பாண்டங்கள், விளையாட்டுப் பொருள்கள், பொம்மைகள், இன்னும் பல இன்றும் நல்ல முறையில் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகின்றன. இத்தொழில்கள் அனைத்தும் விவசாய வளத்தோடு மிகவும் இணைந்திருக்கின்றன. வேளாண்மையை வளர்க்கும் முயற்சிகள் அனைத்தும் இத்தொழில்களுக்குப் புத்துயிர் அளிக்கின்றன. இத்தொழிலின் குறை, வேண்டிய மூலப் பொருள்கள் வாங்கப் பணமின்மையும், அங்காடி வசதியின்மையுமாகும். நன்கு திட்டமிடப்பட்ட சரியான கொள்கையை மேற்கொள்ளுவதன் மூலம் இக்கலைப் பொருள்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வெளிநாட்டுச் செலாவணியைப் பெற முடியும்

(ஈ) நகர்ப்புறத்திலுள்ள கலை நுட்பக் கைத்திறத் தொழில்கள்

கிராமப் புறங்களைப் போன்றே நகர்ப்புறங்களிலும் சில கைத்திறத் தொழில்கள் நடைபெற்று வருகின்றன. சித்திரத்தையல், மணிபின்னல், சரிகை வேலைப்பாடு, கம்பளி நெசவு ஆகியன இவ்வகையைச் சார்ந்ததாகும். இப்பொருள்கள் பரவலான பெரிய சந்தைகளில் விற்கப்படுகின்றன. செல்வர்கள் அளிக்கும் ஆதரவு, சுக வாசிகளுக்குப் போகப் பொருளிடத்துள்ள ஆசை, சமயக் கோட்பாட்டையொட்டிச் சில குறிப்பிட்ட பொருள்களையே வாங்க வேண்டுமென்ற மரபு, குறிப்பிட்ட சாதியினர், அல்லது கூட்டத்தினரின் பரம்பரையான கைத்திற வன்மையைப் பாராட்டுதல் ஆகிய இவையனைத்தும், கைத்திறத் தொழில்களையும் போகப் பொருள்களையும் பெருகச் செய்திருக்கின்றன. ஆனால், இத்தகைய கைவினைக் கலைஞர்களின் பொருளாதாரநிலை மிகவும் மோசமாகிக் கொண்டே செல்கிறது. மூலப் பொருள்களின் விலை உயர்வு இத்தொழிலின் நசிவிற்குக் காரணங்களாகும். பெரும்பாலும் தரகர்களைக் கொண்டு மூலப்பொருள்களையும், மூலதனத்தையும் புகழ்கின்றனர்.

குடிசைத் தொழில்களை நோக்கியுள்ள சிக்கல்கள்

கைவினைஞர்கள் பெற்ற கூலிகள் பெரும்பாலும் மிகக் குறைவாகவே இருந்தன. வியாபார மந்தங்கள், தேவையில் ஏற்படும்

மாற்றங்கள், வெளிநாட்டுப் பொருள்களின் போட்டி, மக்களின் விருப்பு வெறுப்புகளில் மாறுதல்கள் ஆகியவற்றால் மிகுதியான இடையூறுகள் ஏற்படுகின்றன. மூலப்பொருள்கள் கிடைக்காமை, வங்கிகளிடமிருந்து கடன் பெற இயலாமை, கூட்டுறவுச் சங்கங்களின் குறைந்த உதவி தரகர்களிடமிருந்து தப்ப இயலாமை ஆகியவை பிற குறைகளாகும்.

மேனாடுகளில் கூட்டுறவு முறையும், வாணிப நிறுவனங்களும், சிறு ரகக்கலை நுட்பக் கைத்திறத் தொழில்களைக் காப்பதில் பேருதவி புரிகின்றன. இந்தியக் கூட்டுறவுக் கழகங்கள் கைவினைஞர்களுக்கு உதவியளிக்க முன்வராவிட்டால் இந்தியாவில் குடிசைத் தொழில்கள் நிலைத்திருக்கும் என நம்புவதற்கு இடமில்லை. கைவினைஞர்களுக்கு உதவக்கூடிய கூட்டுறவுக் கழகங்களை நிறுவும் பொறுப்பு மாநில அரசுகளைச் சார்ந்தது. அவை தனது தொழில் துறை மூலமாக அவசியமானால் கூட்டுறவுத் துறையின் துணையையும் சேர்த்துக் கொண்டு இக்கழகங்களை நிறுவலாம். அடுத்துக் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றி ஒவ்வொரு குறிப்பிட்ட தொழிலுக்கும் உரிய தொழிலாளர்களுக்காக அமைக்கப்படும் நிறுவன விரிவைப் பொறுத்து அமையும். அத்தகைய நிறுவனம் பெரும்பாலும் ஈண்டு இல்லை. குடிசைத் தொழிலுக்கு மறுவாழ்வு தருவதில் அரசாங்கத்திற்குள்ள பொறுப்பையும் மறந்து விடலாகாது.

குடிசைத்தொழில்களைப் பேணவேண்டிய அவசியம்

ஆலைகளின் பெரிய உற்பத்திக்குப் போட்டியாகக் குடிசைத் தொழிலைப் பேணுதல் விரும்பத்தக்கதா என்ற வினா அடிக்கடி கேட்கப்படுகின்றது. கைத்திறப்பொருள்களை அதிகவிலை கொடுத்து வாங்கவேண்டியதாய் உள்ளது என்று சிலரும், உழைப்பு அதிகம் விரையமாகின்றது என்று சிலரும் கூறுகின்றனர். ஆயினும், இயந்திர வருகையினால் வேலையிழந்த தொழிலாளர்களை மறப்பது நியாயமாகாது. இவ்வாறு வேலையிழந்தோருக்கெல்லாம், தொழில் மயம் பெருகப் பெருக வேலை வாய்ப்புத் தேடித்தரவேண்டிய அவசியம் அதிகரித்துக்கொண்டே செல்லும். கைத்திறத்தொழில்களின் செயல் முறைகளை வளரச் செய்யும் வழிகள் உள்ளன. பேரளவு உற்பத்தியே ஒரு நாட்டில் தொழில் திறமையைக் காட்டும் நிலையாகும் என நினைப்பதும் தவறாகும். நமது பாரம்பரியப் பொருளாதார அமைப்பு அளித்துள்ள வாய்ப்புகளைப் புறக்கணிப்பது தவறு.

'நுட்பத் தொழிலால் வேலையின்மை (Technological unemployment) என்ற நிலை மேல்நாடுகளில்கூட இன்று மிகப்பெரும் பிரச்சனையாகிவிட்டது. புதிய கண்டு பிடிப்புகளால் தொழி

லாளர் வேலையை இழக்கின்றனர். புதிய வேலை வாய்ப்புகளைப் பெறுவதும் கடினமாகி வருகிறது. ஒவ்வொரு புதிய 'தானியங்கி'யும், ஒவ்வொரு புதிய கண்டு பிடிப்பும் பேரளவில் மனித உழைப்பைத் தவிர்த்துப் புதிய சிக்கல்களை உண்டாக்கியுள்ளன. பேரளவுத் தொழில்களிலும் அடிக்கடி புதிய தொழில் நுட்ப முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுப் பழைய முறைகள் மாற்றியமைக்கப்படுகின்றன. விஞ்ஞானம் வளர வளரத் தொழிலாளர்களே தேவையில்லை என்ற நிலை பேரளவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் ஏற்படுவது உறுதி. எனவே, எவ்வளவுக்கெவ்வளவு பேரளவுத்தொழில்களின் உற்பத்தி பெருகுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு சிற்றளவுத் தொழில்கள், குடிசைத் தொழில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் புலப்படுகின்றது. இம்முறையினால்தான் நுட்பத்தொழிலால் வேலை இழந்தவர்களுக்கு வேலை கொடுக்கமுடியும்.

1934-ல் காந்தியடிகளின் முயற்சியினால் துவங்கப்பட்ட, 'அகில இந்தியக் கிராமத் தொழிற்கழகம்' பெற்ற சாதனைகளில்இருந்து நம் பொருளாதார அமைப்பில், குடிசைத் தொழிலுக்கு நிச்சயமான இடம் உண்டு என்று தெரிகிறது. இந்தக் கழகம் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயித்தது; கிராம அபிவிருத்தி, கிராம நலன் ஆகியவற்றிற்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறது. கைக்குத்தலரிசி, மாவரைத்தல், எண்ணெயாட்டுதல், பனைவெல்லம் தயாரிப்பு, தேனீ வளர்ப்பு, காகிதம், சோப்பு முதலியன செய்தல், தோலைப் பதனிடுதல், கயிறு பின்னுதல், பாய் கூடை முடைதல் முதலிய பல தொழில்கள் அவற்றிற்கேற்ற கிராமச் சூழ்நிலையில் வெற்றியடையும் வகையில் ஊக்கமளிக்கப்படுகின்றது. கிராமத் தொழில்களும், கிராமச்சமுதாய வேலைகளிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கக் கிராமச்சேவைப்பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்திய அரசு இத்தொழில்களுக்காக முதலாது ஐந்தாண்டுத் திட்டத்தில் 27 கோடி ரூபாய் ஒதுக்கியது.

1955ஆம் ஆண்டு, கிராமப் மற்றும் சிறுதொழில் (கார்வே) குழு தன்னுடைய அறிக்கை பரிந்துரைகளை அரசிற்குச் சமர்பித்தது. இக்குழு தன்னுடைய அறிக்கையில் தொழில் நுட்பவளர்ச்சியினால் ஏற்படும் வேலையின்மையைப் போக்கக் கிராமங்களும் சிறு தொழில்கள் வளர்த்தல் அவசியம் என்று கூறியுள்ளது. வேலையில்லாதோரில் பெரும்பாலோர் கிராமங்களில் உள்ளனர் என்று இக்குழு கருதியது. அவர்களுக்கு நிவாரணமளிக்க அவர்கள் எங்குப்பாரம்பரியமாகப் பயிற்சி அளிக்கப்பட்டனரோ அங்கு அவர்களை வேலையில் அமர்த்துவது நலம் என்று குழு கருதியது.

மேலும், அத்தொழில்களுக்குத் தேவையான கருவிகளையும் பிற சாதனங்களையும் அவர்கள் பெற்றுள்ளனர். எனவே, மூலதனச் சிக்கலோ, இயந்திரங்கள் இறக்குமதி செய்ய அன்னிய செலாவணிச் சிக்கலோ இல்லை என்பதையும் இக்குழு எடுத்துரைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளில் பின் வருவன கவனத்திற்கு உரியதாகும்.

(அ) மூலப்பொருள்களைத் திட்டமிட்டு அளிக்கப் பொதுக் கொள்முதல் மற்றும் விற்பனைக் கூட்டுறவுச் சங்கள்கள் அமைத்தல்.

(ஆ) கிராம மற்றும் சிறுதொழில்களின் பொருள்களை விற்பனை செய்யக் கூட்டுறவு வளர்ச்சி மற்றும் கிடங்கு அமைப்பில் (Co operative Development's Ware-housing Corporation) ஆவண செய்தல்.

(இ) மாநில நிதிக் கூட்டமைப்பு (State Finance Corpurations களில் கிராமத் தொழில் பிரிவு ஒன்றை ஏற்படுத்துதல்.

(ஈ) விவசாயக் கடன்கள் அமைப்பது போலவே, மத்திய வங்கி கிராமத் தொழில்களுக்குப் பண உதவி செய்ய வேண்டும்.

(உ) மத்திய அமைச்சரவையில் கிராமச் சிறு தொழில்களுக்குத் தனி இலாகா அமைத்தல் வேண்டும்.

(ஊ) பருத்தி நெசவு, மற்றும் அரிசியின் ஆலை அரைப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி அத்துறைகளில் கிராமத் தொழில்களை வளர்த்தல்.

(எ) ஆலையில் செய்யப்பட்ட பொருள்களுக்குத் 'தீர்வை வரி, விதிப்பதன் மூலம் கிராமத் தொழில் பொருள்களின் விலைக்கு ஈடு செய்தல்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 'கார்வே' குழுவின் பரிந்துரைகள் பல நிறைவேற்ற அரசு முயற்சி எடுத்துக் கொண்டது. இத்திட்டக் காலத்தில் கிராம மற்றும் சிறு தொழில்களுக்காக ரூ. 175 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் வேலை வாய்ப்பினை அதிகரிக்கக் கிராம மற்றும் சிறு தொழில்களுக்காக ரூ. 264 கோடி ஒதுக்கப்பட்டது. வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், நிலத்திற்குச் சுமையாக உள்ள தேவையற்ற வேலையாட்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு அளிக்கவும் இனி வரும் ஆண்டுகளில் அரசு கிராமக் கைத்தொழில்களை வளர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

9. தொழில் நிதியம்

(1) தொழில் நிதியர்

தொழில் வளர்ச்சிக்கு நிதி அளிப்பு ஒரு முக்கிய காரணியாக உள்ளது. தொழிற் கூடம், நிலப்பரப்பு, கட்டடங்கள், இயந்திரங்கள் இயந்திரக்கருவிகள், மின்சார உற்பத்திகள் முதலியன வாங்கவும், பிறகு விரிவு படுத்தவும் 'நிலே முதல்' வேண்டி உள்ளது. மூலப்பொருள்கள், துணைப்பொருள்கள். உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்தல் ஓரளவிற்கு உற்பத்தி முடிவுற்ற பொருள்களைச் சேமித்து வைக்கச் சம்பளம் கொடுக்க மற்றும் பல அன்றாடச் செலவுகள் ஆகியவற்றிற்கு 'நடை முதல்' நிதி தேவைப்படுகிறது. இவ்வாறு தேவைகளை 'நீண்டகாலக் கடன் தேவை' என்றும் 'குறுகிய காலக் கடன் தேவை' என்றும் குறிப்பிடலாம். இந்தியாவில் தொழில் வளர்ச்சி தடைப் பட்டதற்கு ஓரளவிற்குப் போதுமான முதல் கிடைக்காததே காரணம். இங்குத் தொழில் நிதியத்தின் சிக்கல்களையும் தொழில் நிதியம் அளிக்கின்ற நிறுவனங்களையும் பார்ப்போம்.

சிறு தொழில்கள் மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான நிதியம்

சிறு தொழில்களைப் பொறுத்த வரையில் கிராமப் புறங்களில் இருக்கின்ற தொழில்கள் தேவையான முதலைப் பெற இடலாது அல்லது மிகவும் அதிகமான வட்டி வீதத்தைக் கொடுத்தும் கடன் பெற வேண்டியுள்ளது. அவைகளுக்குள்ள ஒரே வழி லேவாதேவிக்காரர்கள்தான். நகர்ப் புறங்களைப் பொறுத்தவரையில், முதல் கிட்டுவது அவ்வளவு சுலபமாக இல்லை. நகர்ப்புறங்களில் தனி நபர் வங்கிகளும், கூட்டுப் பங்கு வங்கிகளும் ஓரளவிற்குச் சிறு தொழில்களுக்கும். நடுத்தரத் தொழில்களுக்கும் 9-லிருந்து 15 சதவிகித வட்டியளவில் கடன்கள் அளிக்கின்றன.

(அ) தொழிற் கூட்டுறவுகள்

அண்மைக்காலங்களில் குடிசைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் தொழிற் கூட்டுறவுகளின்கீழ் இயங்கி வருகின்றன. இத்தொழில் கூட்டுறவுகள் உறுப்பினர்களுக்கு நிதி, மூலப் பொருள்கள், தேவையான கருவிகளை அளிப்பதோடு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்யவும் உதவுகின்றன. கைத்தறி நெசவுத்தொழிலில் தொழிற் கூட்டுறவுகள், மட்பாண்ட உற்பத்தி, கயிறு உற்பத்தி, தோல் பதனிடுதல் ஆகியவற்றிற்கும் கூட்டுறவு பரவி வருகின்றன. இவைகள் தங்களுக்குத் தேவையான நிதியை மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறுகின்றன.

(ஆ) மாநில அரசுகள் அளிக்கும் உதவி

மாநில அரசுகள் சிறு தொழில்களுக்கு நிதி உதவியளிப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றன. 'மாநிலத் தொழில் நிதி உதவிச் சட்டங்கள்' எல்லா மாநிலங்களிலும் இயற்றப்பட்டு, மாநில தொழில்துறை சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் குடிசைத்தொழில்கள் ஆகியவற்றிற்குக் கடன் வசதிகள் அளித்து வருகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பொழுது மாநிலங்கள் சிறு தொழில்களுக்கு அளித்த உதவியின் அளவு ரூ. 13 கோடியாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வுதவிக்காக ரூ. 17 கோடிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

(இ) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவும் அதன் துணை வங்கிகளும்

சிறு தொழில்களுக்கு நிதி உதவியளிப்பதில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் பணி குறிப்பிடத் தக்கதாகும். ரிசர்வ் பேங்கின் ஆலோசனையின் மேல் சிறு தொழில்களுக்கு உதவ, ஒரு முன்னோடித் திட்டத்தை ஸ்டேட் பாங்க் கொண்டு வந்தது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்கள், வணிக வங்கிகள் மற்றும் மாநில நிதிக் கூட்டமைப்புகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளைத் தொகுத்துச் சிறு தொழில்களுக்குப் போதுமான நிதி வசதியளிப்பதே. இம்முன்னோடித் திட்டம் முதலில் ஒன்பது இடங்களில் பரிசோதிக்கப்பட்டுப் பின்னர்ப் படிப்படியாக விரிவடைந்து தற்போது நாடு முழுவதும் உள்ள எல்லா ஸ்டேட் பேங்க் கிளைகளிலும் செயல் பட்டு வருகிறது. சிறு தொழில்களுக்குத் தேவையான நடைமுதலைப் பெறவும் உற்பத்தியினை விரிவு செய்யவும் இத்திட்டம் உதவுகின்றது. 1968-69-ல் இத்தகைய உதவியின் அளவு ரூ. 54 கோடியாகவும், 1969-70ஆம் ஆண்டில் அது ரூ. 69 கோடியாகவும் வளர்ச்சியடைந்துள்ளது.

(ஈ) **வணிக வங்கிகளின் கடன் உதவி**

வணிக வங்கிகள் நீண்ட நாளாகச் சிறு தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் நிதி உதவ முன் வரவில்லை. 1960-ம் ஆண்டில்கூட வணிக வங்கிகள் சிறுதொழில்களுக்கு அளித்த அளவு ரூ. 28 கோடியாகும். ஆனால், அதன் பிறகு இவ்வுதவியின் அளவு அதிகரிக்க ஆரம்பித்தது. 1966 மார்ச்சு மாதம்வரை அளித்த உதவி ரூ. 90 கோடியாக உயர்ந்தது. ஆயினும், இவ் வளர்ச்சிப் போக்கினில் திருப்தியடையாது, அரசாங்கம் 1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 வணிக வங்கிகளைத் தேசிய மயமாக்கி யுள்ளது. இதனால், வணிக வங்கிகள் அளிக்கும் உதவி வளர்ச்சி யடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச்சு 1970 முடிய பதிவு செய்யப்பட்ட வணிக வங்கிகளின் கடன் உதவியளவு (சிறு தொழில்களுக்கு) ரூ. 472.4 கோடியாகும். தேசிய மயமாக்கப் பட்ட 14 வங்கிகள் அளித்த கடன் உதவியான ரூ. 393.4 கோடி யும் இதில் அடங்கும். நடை முதலுக்காக நிறுவனங்களின் வங்கிக் கணக்கில் இருப்பதற்கு மேல் முன்பணம் அளிக்கும் திட்டம் குறிப் பிடத்தக்க ஒன்றாகும்.

(உ) கடன் உத்திரவாதத் திட்டம்

சிறு தொழில்களுக்குப் பொதுவாகக் கடன் உதவியளிக்க நிதி நிறுவனங்கள் முன்வருவ தில்லை. இதற்கு முக்கிய காரணம் அளிக்கப்படுகின்ற கடன்கள் பெறும் நிறுவனங்களிடமிருந்து திரும்புமா என்ற அச்சமே. எனவே, நிதியளிக்கும் நிறுவனங் களுக்கு இக்கடன்கள் திரும்பக் கிடைக்கும் என்ற உத்திரவாதத் தினை அரசாங்கம் அளிக்க முன் வந்துள்ளது. இந்திய ரிசர்வ் பாங்க் அரசாங்கத்தின் பிரதிநிதியாக, கடன்கள் திருப்பித்தரும் உத்திரவாதத் திட்டத்தை நடத்தி வருகின்றது. 'உத்திரவாத நிறுவனம்' என்றும் ரிசர்வ் பேங்க் பெயரிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 95 கடன் வசதி நிறுவனங்கள் கொண்டு வரப் பட்டுள்ளன. சிறு தொழில்கள் வெறும் 7 ஆண்டுகளுக்கு மேற் படாத கடன்களுக்கு இந்த உத்திரவாதம் அளிக்கப்படும். உத்தர வாதம் அளிக்கும் நிறுவனத்திற்குக் கடன் பெறும் நிறுவனங்கள், கடன் தொகையில் $\frac{1}{4}$% கட்டணம் அளிக்க வேண்டும். 1969-70 ஆம் ஆண்டில் ரிசர்வ் பேங்க் இத்திட்டத்தின்கீழ் ரூ. 263 கோடி மதிப்புடைய 46,200 விண்ணப்பங்களைப் பெற்றது. ஜனவரி முடிய ரிசர்வ் பேங்க் ரூ. 773 கோடி கடன் அளவுடைய 152, 240 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது. அண்மைக் காலங்களில் இத் திட்டம் நல்ல வளர்ச்சி பெற்றது பாராட்டுவதற்குரியதாக அமைந்துள்ளது.

(ஊ) தேசிய சிறு தொழில் கூட்டமைப்பு நிறுவனம்

இந்நிறுவனம் ரூ. 206 இலட்சத்திற்கு அனுமதித்த முதலுடன் (Authorised Capital) 1955ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நிறுவப் பட்டது. இம்முதல் முற்றிலும் அரசாங்கத்தினுல் செலுத்தப் பட்டது. இதனுடைய நோக்கம் சிறு தொழில்களுக்கு உதவுதல் நிதி உதவியளித்தல், சாத்தல், மற்றும் வளர்ச்சி யடையச் செய்தல். இந்நிறுவனம் சிறு தொழில்கள் இயந்திரங்கள் மற்றைய கருவிகளைச் சுலபமான தவணை முறையில் வாங்கும் திட்டத்தைத் துவக்கியுள்ளது. 1966-69–ல் இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் மட்டும் ரூ. 3.9 கோடி மதிப்பிற்கு அளிக்கப்பட்டுள்ளன. தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளில் விசாரணைகள் நடத்தி அப் பகுதிகளுக்கு ஏற்ற தொழில்களைத் துவக்க ஆலோசனைகளும், பிற உதவிகளும் அளித்து வருகின்றன. இம்முயற்சியினுல் 1968-69ஆம் ஆண்டில் இப் பகுதிகளில் வழங்கப்பட்ட இயந்திரங்களின் மதிப்பு ரூ. 14.3 கோடியாகும்.

பேரளவுத் தொழில்களுக்கான நிதியம்

இந்தியாவில் உள்ள பெரும்பான்மைத் தொழில்கள் பொது மக்கள் அல்லது ஒரு சில தனி நபர்கள் ஆகியோரால் வாங்கி யிருக்கும் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தங்கள் மூலதனச் செல வினத்தைச் சரிகட்டிக் கொள்கின்றன. இந்தியத் தொழில் நிதியக் கூட்டமைப்பு (Industrial Finance Corporation of India) மாநில நிதியக் கூட்டமைப்புகள் முதலானவற்றின் மூலமும் நிலை முதலைப் பெறுகின்றன. நடைமுதல்கள் பொதுவாகப் பங்குகளை வெளியிடுவதன் மூலமும் நிர்வாகப் பதிலாளிகள் அளிக்கும் கடன் களினுலும் பொதுமக்களின் வைப்புக்களினுலும் (Deposits) வங்கி கள் அளிக்கும் கடன்களினுலும் பெறுகின்றன. பேரளவுத் தொழில்கள் நிதி உதவிபெறும் வசதிகளாவன.

(அ) பங்குகளும் கடன் பத்திரங்களும்

நம் நாட்டில் பேரளவுத் தொழில்கள் தங்களுடைய பெறும் பகுதி மூலதனத்தைப் பங்குகள் மூலம் பெறுகின்றன. ஒரு கம்பெனி அல்லது நிறுவனத்தின் உடமையில் உரிமை பெறுகின்ற ஒரு பகுதிக்கே பங்கு என்று பெயர். பங்குதாரர்களுக்குக் கம்பெனி யடையும் இலாபங்களிலும், கம்பெனியைக் கலைக்க நேர்ந்தால், அதன் உபரிச் சொத்துக்களிலும் பங்கு கொள்ளும் உரிமையினை இந்தப் 'பங்கு' வழங்குகிறது. முதலீடு செய்வோர் தாம் கடனுகக்

கொடுக்கும் பணத்திற்கு அடையும் உரிமையே கடன் பத்திரம் (Debenture) எனப் பெறுவது. இது ஒரு நிலையான வட்டியினை அளிக்கும் கடனாகும். கடன் பத்திரக்காரர்களுக்கு, கம்பெனியைக் கலைக்க நேர்ந்தால் அதன் சொத்துக்களின்மீது முதல் உரிமை உண்டு. கம்பெனி அடையும் நட்டங்கள் இவர்களைப் பாதிக்காது. கம்பெனி நடவடிக்கை நிர்ணயிப்பில் பத்திரக்காரர்களுக்கு எந்த வாக்குரிமையும் கிடையாது. இந்தியாவில் கடன்பத்திரங்கள் அண்மைக் காலம் வரை, தொழில் நிதியம் சம்பந்தப்பட்ட வரையில் அதிசப் பங்குக் கொள்ளவில்லை. அன்றும் இன்றும் பேரளவுத் தொழில்கள் தங்கள் தொழிலுக்குத் தேவையான நிலை முதலைப் பங்குகள், கடன்பத்திரங்கள் மூலமாகவே பெரும்பாலும் பெறுகின்றன.

(ஆ) நிறுவாகப் பதிலாளிகள்

பங்குகளின் மூலம் பெறப்பட்ட தொகைக்கு அடுத்தாற்போல் இந்திய தொழிற்சாலைகள் நிர்வாகப் பதிலாளிகளிடம்தான் பெருமளவிற்கு நிதி உதவி பெற்று வருகின்றன. இவர்கள் பெருமளவில் கடன்பத்திரங்களை வாங்கியும், பங்குகளைப் பெற்றும் நிதி உதவி செய்கின்றனர். இவர்களின் உதவி குறித்துச் சென்ற அத்தியாயத்தில் விரிவாகக் கண்டுள்ளோம்.

(இ) பொதுமக்களின் வைப்புகள்

பொதுமக்களின் வைப்புகளைக் கவரும் முறை பம்பாய், அகமதாபாத் பஞ்சாலைகளுக்கே உரிய தனிக்கலையாகும். நம் நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் இது நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. வங்கித் தொழில் அமைப்பின் குறைபாடுகளே இந்த முறையின் வளர்ச்சிக்குரிய முக்கிய காரணமாகும். மக்கள் தமக்கு நன்றாகத் தெரிந்தவர்களிடம் வங்கிகள் விதிக்கும் சம்பிரதாயங்கள் இல்லாமல் யாரிடம் பரிமாறிக் கொள்ள முடியுமோ அவர்களிடம் தங்களுடைய சேமிப்புகளை ஒப்படைத்தார்கள். பொதுவாக ஆலைகளும் குறைந்த வட்டியில் கடன் வாங்க இம்முறை மிகவும் உதவியாக இருந்தது. இம்முறையில் உள்ள குறை முதலீடு செய்வோர்கள் அச்சத்தின் காரணமாக திடீரெனத் தங்களது வைப்புகளைத் திருப்பிப் பெற முற்படுவோர்களேயானல் ஆலையின் நிதி பெரிய துன்பத்திற்குள்ளாகும். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இத்தகைய பொதுமக்கள் வைப்புகளின் அளவு மிகவும் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் ஆலைகளுக்கு வங்கிகளின் மூலம் சுலபமான நிதி கிடைப்பதே ஆகும்.

(ஈ) வங்கி கடன்கள்

ரிசர்வ் பேங்க், ஸ்டேட்பேங்க், கூட்டுப்பங்கு வங்கிகள், பரிவர்த்தனை வங்கிகள் ஆகியவற்றைக் கொண்டு அமைந்தது, நமது இந்திய வங்கித் தொழில் முறை. மத்திய வங்கியாகிய ரிசர்வ் பேங்கும், ஸ்டேட் பேங்கும் ஆறு மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கோ அல்லது ஸ்தாவர சொத்துக்களின் ஈட்டின் மேலோ கடன் கொடுப்பதில்லை. பரிவர்த்தனை வங்கிகள் (Exchange-Bank) தொழில் நிதியில் பங்கு கொள்வதேயில்லை. மற்றக் கூட்டுப் பங்கு வங்கிகள் குறுகிய காலத்திற்குக் குறிப்பிட்ட சில வகை ஈட்டின் பேரிலேயே கடன் கொடுக்கின்றன. கடன் வாங்குவோரின் தரம் அறிந்து தரந்த ஜாமீன் பேரில் அளிக்கப்படும் ரொக்கக் கடன் (Cash–credit) அல்லது எளிதில் விலை போகக் கூடிய பத்திரங்களின் மீது அளிக்கப்படும் கடன் ஆகிய இவ்விரண்டுமே இவ்வங்கிகளில் வாங்கக் கூடிய வழக்கமான கடன்களாகும். இந்தியாவில் நடைமுறையில் இருக்கும் இக்குறுகிய காலக்கடன்கள், கடுமைக்கும் கடுவட்டிக்கும் பெயர் போனவை. கடன்பத்திரங்களின் மேலும் இவ்வங்கிகள் முதலீடு செய்வதில்லை. இந்நிலைமை தற்போது மாறி வருகின்றது.

(உ) உள்நாட்டு ஷராப்புகள் [Indigenous shroffs]

நாட்டு ஷராப்புகள் ஒரு காலத்தில் இந்தியாவின் பொருளாதார வாழ்க்கையில் ஒரு முக்கியமான அங்கம் வகித்திருந்தார்கள். இவர்கள் தம்மிடம் கடன் கேட்போரின் தரமறிந்து, ஈடு எதுவும் கேட்காமலும், புரோ நோட்டில் துணை ஒப்பம் இன்றியும் பாண்டு பத்திரங்களின்மீது கடன் கொடுக்கிறார்கள். ஆனால், வாங்கும் வட்டி அதிகமாகத்தான் இருக்கும். இவர்கள் முக்கியமாகச் சிறு வியாபாரிகளுக்கே கடன் கொடுத்தாலும் நடுத்தர சிறுரகத் தொழில்களுக்கும் நடைமுதலை அளிக்கிறார்கள். பெரிய ஆலைகளில் சிலதான் இவர்களது உதவியைப் பெற்றுள்ளன. கூட்டு வங்கி முறை வளர்ச்சியினாலும் மாநில நிதி உதவிக் கூட்டமைப்பு நிறுவனங்கள் தோன்றியதாலும் இத்தகைய ஷராப்புகளின் செல்வாக்குக் குறைந்து விட்டது

(ஊ) தொழில் நிதியத்திற்கான புதிய நிறுவனங்கள்

மேற்சொன்ன கடன் வசதிகள் தற்போதுள்ள தொழிலின் நிறுவனங்களுக்கே போதாமையால் புதிதாகத் தோன்றும் ஆலைகளுக்கு உதவ வேண்டிச் சில புதிய தொழில் நிதி உதவி நிறுவனங்கள் ஏற்பட்டுள்ளன. இந்திய அரசாங்கம் 1948ஆம் ஆண்டு ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட முதலுடன் தேசிய நிதிக் கூட்

டமைப்பு (Industrial Finance Corporation) நிறுவியுள்ளது. 1955ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம், அமெரிக்க அரசாங்கம், உலக வங்கி ஆகியவற்றின் நிறுவனப் பிரதிநிதிகளிடையே நடந்த பேச்சு வார்த்தைகளின் பயனாக, 'இந்தியக் தொழிலகக் கடன் முதலீட்டுக் கூட்டமைப்பு' (The Industrial Credit and Investment Corporation of India) ரூ. 25 கோடி அனுமதிக்கப்பட்ட முதலுடன் துவக்கப்பட்டது. இவைகளுடன் இந்திய அரசு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியினையும் (Industrial Development Bank of India) 'யுனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா' போன்ற நிறுவனங்களை யும் அமைத்துள்ளது. தனியார் துறையைச் சார்ந்த நடுத்தரத் தொழில் நிலையங்களுக்கு இடைக்காலக் கடன் வழங்குவதற்காக மறுநிதிக் கூட்டமைப்பு (Refinance Corporation) ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. உலக வங்கியுடன் இணைக்கப்பெற்ற பன்னாட்டு நிதிக் கூட்டமைப்பு (International Finance Corporation) 1956ஆம் ஆண்டுத் துவக்கப்பட்டது. இந்திய ஆயுள் பாதுகாப்புக் கூட் டமைப்பும் தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது.

தொழில் நிதிக் கூட்டமைப்பு

மூலதனச் சந்தையிலிருந்து நிதிதிரட்ட இயலாத தொழில் களுக்கு இடைக்கால நீண்டகாலக் கடன்கள் வழங்குவதற்காக இந்திய அரசாங்கத்தால் தொழில் நிதிக் கூட்டமைப்பு ஸ்தாபனம் 1948-ல் நிறுவப்பட்டது. இதனுடைய, செலுத்திய மூலதனம் 5 கோடி ரூபாய். மத்திய அரசும், ரிசர்வ் பேங்கும் ஒவ்வொரு கோடி ரூபாய்க்குப் பங்குகளை எடுத்துள்ளன. மீதியில் பதிவு செய்யப்பட்ட வங்கிகள், இன்சுரன்ஸ் கம்பெனிகள், கூட்டுறவு நிறுவனங்கள், முதலீட்டு டிரஸ்டுகள் முதலியனவும் பங்குகளை எடுத்துள்ளன. இம்முதலீட்டைத் திரும்பப்பெறுவதற்கும், அதற்கு $2\frac{1}{2}\%$ குறையாத இலாப விகிதம் பெறுவதற்கும், மத்திய அரசாங்கம் உறுதியளித்திருக்கிறது. செலுத்தப்பட்ட மூலதனம், காப்பு நிதிகள் ஆகியவற்றின் கூட்டுத்தொகையைப் போல 10-மடங்குக்கு மேற்படாமல் கடன்வாங்குவதற்குக் கூட்டமைப் புக்கு உரிமையளிக்கப்பட்டிருக்கிறது. இதன் நிர்வாகம் 12 டைரக்டர்கள் கொண்ட சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களில் நால்வர் மத்திய அரசாங்கத்தாலும், இருவர் ரிசர்வ் பாங்கியினாலும் நியமிக்கப்படுவர். மற்றவர்கள் பிற பங்குதாரர் களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சரக்குகளை உற்பத்திச் செய்தல், சுரங்கத் தொழில் மற்றும் மின்விசைத் தொழில் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள பொதுக்

கம்பெனிகளுக்கும், கூட்டுறவுக்கழகங்களுக்கும் இந்தக்கூட்டமைப்பு நிதியளிக்கும். ஆனால், தனி நபர்களுக்கும் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனிகளுக்கும் நிதியளிக்காது. தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல், 25 ஆண்டுக்கு மேற்படாத சொத்து அடையாளக் கடன் பத்திரங்களை வாங்குதல், தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், பங்குத் தொகுப்புகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புறுதியளித்தல், தொழில்கள் தாங்கள் வாங்கும் 25 ஆண்டுகளுக்கு மேற்படாத கடன்களுக்கு உறுதியளித்தல் ஆகிய பணிகளைக் கூட்டமைப்புச் செய்யக்கூடாது. ஒரு தனிபட்ட நிறுவனத்திற்கு வழங்கும் கடன் தொகைக்கும் வரம்பு விதிக்கப்பட்டது. இந்த வரம்புக் கூட்டமைப்பின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10% அல்லது 50 லட்சம் ரூபாய் என்பதில் எது குறைவோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். அண்மையில் இந்த வரம்பு ஒருகோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. ஒரு நிறுவனத்திற்குக் கொடுக்கப்படும் கடனுக்கு அரசாங்கம் உத்திரவாதம் அளித்தல் 1 கோடி ரூபாய்க்கு மேலும் கூட்டமைப்புக் கடன் வழங்கலாம். இந்நிறுவனம் வசூல் செய்யும் தற்போதைய வட்டி வீதம் $7\frac{1}{2}\%$ ஆகும். ஆயினும் வட்டியும் தவணைத் தொகையும் உரிய நாட்களில் செலுத்தப்பட்டால் வட்டியில் $\frac{1}{2}\%$ தள்ளுபடியுண்டு. இந்நிறுவனத்தின் தொடக்கக் காலமான 1948ஆம் ஆண்டிலிருந்து, 1970 மார்ச்சு முடிய அளித்த நிதி உதவியின் மதிப்பு ரூ. 295 கோடிகளாகும். அனுமதியளித்த நிதியின் மதிப்பு ரூ. 332 கோடிகளாகும்.

1948-லிருந்து முதலீட்டுச் சந்தையில் மந்தமும், தேக்கமும் ஏற்பட்டிருக்கையில் இக்கூட்டமைப்பு அளித்த உதவியை உரிய காலத்தில் செய்த உதவியாகக் கருத வேண்டும். ஆயினும், இந்நிறுவனத்தின் செயல்முறை கடுமையான கண்டனத்திற்குள்ளானது. எனவே, இதனுடைய செயல்முறையை ஆராய திருமதி கிருபலாணியின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. கூட்டமைப்பின் நிர்வாகம் பாரபட்சமாக நடந்துகொண்டதாகச் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட போதிலும், சில வகைகளில் வழங்கப்பட்ட நிதி உதவிமுறை கேடானது என்றும் அவ்வகை உதவியளிப்புகள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அறிக்கை தெரிவித்தது. மற்றொரு குறிப்பிடத்தக்க குறை இதனுடைய உயர்ந்த வட்டி வீதம். ஆயினும், கடன் பத்திரங்களுக்கான வட்டி வீதத்தை நோக்கும்போதும், பொதுவாகச் சந்தையில் உள்ள வட்டி வீதத்தைப் பார்க்கும் போதும் இது அதிகமான வட்டி அல்ல என்று தோன்றுகிறது. அடுத்து நிதி உதவிக்கு ஒப்புதல் அளிக்கவும்

கடன்கள் நிறுவனங்களில் கைக்குக் கிடைப்பதிலும் பெரும் கால தாமதம் ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது. பொது நிறுவனம் ஆதலின், கடன்வழங்கும் முன்னர் வாங்குவோரின் தகுதி, கடன் உபயோகம், மற்றும் உள்நாட்டிலேயே இறக்குமதிக் கட்டுப்பாடின்றி உற்பத்தி செய்து கொள்ளக் கூடிய தகுதி முதலியன உள்ளனவா என்பதனைக் கூட்டமைப்புத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவேதான், கால தாமதம் ஆகிறது. நாளடைவில் இதனைக் குறைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடைசியாகக் கூட்டமைப்பு வழங்கிய கடன்களைத் தொழில் வாரியாகப் பார்க்கையில் சர்க்கரை ஆலைகளுக்கும், பருத்தி நெசவு ஆலைகளுக்கும், கடன் வழங்குவதில் இந்நிறுவனம் பெரிதும் அக்கறை காட்டியுள்ளது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. இதற்குக் காரணம் கூட்டுறவுக் கழகங்களுக்குத் தனி ஊக்கமளிக்கவேண்டும் என்ற மத்திய அரசின் கொள்கையே ஆகும். மற்றும் இது ஒரு பெரிய குறையல்ல. இந்நிறுவனம் ஒரு நிலையான முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது. இதுவரையில் சுமார் ரூ 800 கோடியளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளதையும் மனத்தில் கொள்ள வேண்டும். 1955-ல் திருத்திய சட்டத்தின்படி இந்நிறுவனம் பங்குகளை வாங்கியும், கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதி அளித்தும் வருகிறது. இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள் வருவதற்குக் காலதாமதமானால், காலதாமதமாகக் கடனைத் திரும்பச் செலுத்துதலுக்கும் உறுதியளிக்கிறது. இவைகளைப் பார்க்கையில் மனத்தை யீர்க்கும் வகையில் இதன் பணி இல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க பணியினைச் செய்திருப்பது தெரிய வருகின்றது

நில நிதிக் கூட்டமைப்புகள்

இந்தியத் தொழில் நிதியக் கூட்டமைப்பின் உதவியின் வரம்பு குறுகி இருப்பதனால் சிறு தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்கும் தேவையான நிதி உதவியை அளிக்க மாநில அரசுகள் மாநில நிதிக் கூட்டமைப்புகளை நிறுவ ஆவலுற்றன இந்திய அரசும் எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் 1951ஆம் ஆண்டு மாநில நிதியக் கூட்டமைப்புகள் சட்டத்தை நிறைவேற்றியது. ஒருமாநில நிதிக் கூட்டமைப்பின் அனுமதித்த முதலீடு மாநில அரசினால் ரூ. 50 லட்சத்திற்குக் குறையாமலும் ரூ 5 கோடிக்கு மேற்படாமலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மாநில அரசு பதிவு செய்யப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்ற நிதிஉதவி நிறுவனங்கள் இதன் பங்குகளை வாங்கியுள்ளன. பங்குகள் மாநில அரசினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டவை. இத்தகைய நிறுவனங்கள் பத்திரங்கள் வெளி

யிட்டு நிதிவசதியினைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆயினும் செலுத்தப்பட்ட மூலதனம், காப்பு நிதி ஆகியவற்றின் தொகையில் 5 மடங்குக்குமேல் இருத்தல் கூடாது. இந்தியத் தொழில் நிதியக் கூட்டமைப்புபோல் இதுவும் நிர்வகிக்கப்படுகிறது.

எல்லா வகைத் தொழில் நிறுவனங்களும் இக் கூட்டமைப்பி லிருந்து பண உதவி பெறலாம். இவ்வகையில் இதன் பணி இந்தியத் தொழில் நிதியக் கூட்டமைப்பை விடப் பரவலானது எனலாம். இதனுடைய பணிகளில் குறிப்பிடத்தக்கன. (1) தொழில் நிறுவனங்களின் 20 ஆண்டுகளுக்கு மேற்படாத புதுச் சந்தையில் வாங்கும் கடன்களுக்கு உத்தரவாதம் அளித்தல். (2) பங்குகள், பாண்டுகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புறுதியளித்தல் (3) தொழில் நிறுவனங்களுக்கு 20 ஆண்டு களுக்கு மேற்படாத கடன் அளித்தல். (4) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்தல்.

தற்போது இத்தகைய மாநில நிதியக் கூட்டமைப்புகள் 18 உள்ளன. ஒவ்வொரு மாநிலமும் ஒரு நிதியக் கூட்டமைப்பைப் பெற்றுள்ளது. 1968–69-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன் அளவு ரூ. 19.3 கோடிகளாகும். 1969–70 ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 32.5 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தியத் தொழிலகக் கடன் முதலீட்டுக் கூட்டமைப்பு

இழப்பு ஆபத்துகள் மிகுந்த தொழில்களில் சாதாரண பங்கு மூலதனத்தைப் பெறுவதற்குத் தனியார் துறை அடையும் அல்லல்களை யுணர்ந்து தொழில் நிதியும் அளிப்பதற்காக மூன்று புதியகூட்டமைப்புகளைஅரசாங்கம் நிறுவியது. 1953ஆம் ஆண்டின் இறுதியில் இந்திய அரசாங்கம், அமெரிக்க அரசாங்கம், உலக வங்கி ஆகியவற்றில் கூட்டு முயற்சியினால் நிறுவப்பட்ட இந்தியத் தொழிலகக் கடன் முதலீட்டுக் கூட்டமைப்பு (The Industrial Credit and Investment Corporation of India) என்பது அவற்றுள் ஒன்று. இது 1955 ஜனவரியில் பதிவு செய்யப்பட்டது. தனியார் துறை தொழில்களின் வளர்ச்சிக்கு உதவி புரிவதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனம் செலுத்தப்பட்ட மூலதனமாக ரூ. 5 கோடியுடனும், அனுமதிக்கப்பட்ட ரூ. முதலாக 25 கோடி யுடனும் துவக்கப்பட்டது. வங்கிகள் இன்சூரன்ஸ் ரூ. 25 கோடி பெறப்பட்டது. ஆங்கில முதலீட்டாளர்கள், ஒருகோடி ரூபாய்க்கும் அமெரிக்கர் ரூபாய் 50 லட்சத்திற்கும் இதன் பங்குகளை வாங்கியுள்ளனர். எஞ்சிய $1\frac{1}{2}$ கோடி ரூபாய்ப் பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. 1968–மார்ச்சு முடிய இக்

கூட்டமைப்பின் மொத்த நிதிவளம் (Total Resources) ரூ. 195 கோடியாகும். இவற்றில் ரூ. 141 கோடி அந்நிய பணக் கடனுகவும், மற்றும் ரூ. 24 கோடி இந்திய ரூபாய்களாகவும் இருந்தன.

இக் கூட்டமைப்பின் நோக்கம் புதிய தொழில்களைத் துவக்க உதவுதல், நடைபெற்றுவரும் தொழில் நிறுவனங்கள் விரிவு பெறவும் நவீனப் படுத்தவும் உதவிசெய்தல், உற்பத்தி பெருகத் தொழில் நுணுக்க நிர்வாக உதவிசெய்தல், மேலும் வேலை வாய்ப்பினை அதிகரித்தல். இக்கூட்டமைப்பு, நீண்டகாலக் கடன்களும் நடுத்தரக் காலக் கடன்களும் அளிக்கின்றது. கடன் பத்திரங்களுக்கும் பங்குகளுக்கும் ஒப்பு நிதியளிக்கிறது. மற்ற தனி நபர் நிதி உதவிகள் அளிக்கும் கடனுக்கு உத்திரவாதம் அளிக்கிறது. இக் கூட்டமைப்பு இதுகாறும் காகிதம், இரசாயனம், மருந்துகள் மின்சாரச் சாதனங்கள், துணிகள், சர்க்கரை, உலோகத்தாது, சுண்ணும்பு மற்றும் சிமந்து வேலைகள், கண்ணாடி ஆகியன உற்பத்தி செய்யும் தொழில்களுக்கு உதவியுள்ளது. இக்கூட்டமைப்புக் குறிப்பாகப் புதிய தொழில்களை வளர்க்கவும் வளர்ச்சியடையாத பகுதிகளில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தவும் ஆர்வம் கொண்டுள்ளது. இதனுடைய துவக்கத்திலிருந்து, 1970ஆம் ஆண்டு மார்ச்சு முடிய அளித்த நிதிஉதவி 548 நிறுவனங்களுக்கு ரூ. 265 கோடி மதிப்புடையதாகும். இவற்றுள் அந்நிய செலாவணியில் அளித்த கடன் ரூ. 153 கோடியும் அடங்கும்.

இக்கூட்டமைப்பு, தொழில் நிதியத்திற்கு உதவியபணி மிகவும் போற்றத் தக்கதாகும். அந்நிய செலாவணியில் அளித்த கடன்களினுல் இந்திய தொழில் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான– மிகவும் அவசியமான இயந்திரங்களையும் உதிரிகளையும் வெளி நாடுகளில் இருந்து பெறமுடிந்தது. இப்பணியில் இக் கூட்டமைப்பு உலக வங்கியிடமிருந்து கணிசமான உதவியைப் பெற்றுள்ளது.

இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கி (The Industrial Development Bank of India)

சுதந்திரத்திற்குப் பின்னர் தொழில்களுக்கு நீண்ட காலக் கடன்களை அளிப்பதற்கு நிறுவப்பட்ட சிறப்பு நிறுவனங்களுள் இந்திய தொழில் அபிவிருத்தி வங்கியும் ஒன்ருகும். தொழில் நிதியக் கூட்டமைப்பு மாநில நிதியக் கூட்டமைப்புகள் இந்திய தொழிலகக் கடன் முதலீட்டுக் கூட்டமைப்பு, தேசிய தொழில் அபிவிருத்திக் கூட்டமைப்பு (The National Industrial Development Corporation) மற்றும் மறுநிதிக் கூட்டமைப்பு முதலியன நேரடிக்

கடன்கள் வழங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் பல ஆண்டுகளாக இயங்கி வருகின்றன. இவைகள் அளிக்கும் நீண்ட காலக் கடன் உதவி போதுமானவையே என்றாலும், புதிய தொழில் நிறுவனங்களைப் பொறுத்த வரையில் இவைகள் போதாதென்றே சொல்ல வேண்டும். ஒருபக்கம் புதிதாக வளர்த்து வரும் தொழிற் சாலைகளுக்குப் பெருமளவில் நிதிஉதவ, ஒரு புதிய நிறுவனம் தேவைப்பட்டது. மற்றொரு பக்கம் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவிட எல்லா நிறுவனங்களையும் நடவடிக்கைகளையும் தொகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த இரு முனை நோக்கத்தை நிறைவேற்றவே இந்திய அரசாங்கம் 1964ஆம் ஆண்டு இந்திய தொழி லபிவிருத்தி வங்கியினை நிறுவியுள்ளது.

இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கி இந்திய ரிசர்வ்பாங்கியின் ஒரு துணை நிறுவனமாகும். இதனுடைய அனுமதிக்கப்பட்ட முதல் ரூபாய் 50 கோடியாகும். இதனை 100 கோடியாக உயர்த்திக் கொள்ளலாம். வெளியிடப்பட்ட முதலின் அளவு ரூ. 20 கோடியாகும். பொது மேற்பார்வை மேலாண்மை மற்றும் அன்றாட நடவடிக்கைகளைக் கவனிக்க டைரக்டர் சபை ஒன்று உள்ளது. அபிவிருத்தி வங்கியின் தலைவரே துணைத்தலைவர் ஆவார்.

தொழில் அபிவிருத்தி வங்கியின் முக்கிய பொறுப்பு ஆலை உற்பத்தி, சுரங்கவேலை, பதனிடுதல், கப்பல் கட்டுதல், ஏனைய போக்குவரத்துத் தொழில்கள் போன்ற ஹோட்டல் தொழில் ஆகிய தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவுவதாகும். தனியார் துறை, பொதுத்துறைத் தொழில் நிறுவனங்கள் இரண்டுமே இவ்வுதவியைப் பெறலாம். நிதி உதவி நேரடியாகவோ அல்லது குறிப்பிட்ட சில நிதி நிறுவனங்களின் மூலமாகவோ அளிக்கப்படும். தொழில் நிறுவனங்களின் பங்குகளை வாங்குவதன் மூலமாகவும் தொழில் நிறுவனங்கள் வெளியிடும் கடன் பத்திரங்களுக்குப் பங்குகளுக்கு ஒப்புறுதி அளித்தல் மூலமும் இது நேரடி உதவியைச் செய்கின்றது. தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பெற்ற வங்கிகளிடமோ மாநிலக் கூட்டுறவு வங்கிகளிடமோ தொழில் நிதிக் கூட்டமைப்பிலிருந்தும், மற்றும் சில குறிப்பிட்ட நிதி நிறுவனங்களிடமிருந்தும் பெறும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது. தொழில் நிறுவனங்களிடமிருந்தும் பெறும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறது. தொழில் நிறுவனங்களின் வணிக உண்டியல்களை வாங்குகின்றது. நேரடி உதவியைப் பொறுத்த வரையில் இதனுடைய உதவி தொழில் நிதிக் கூட்டமைப்பினையும், இந்தியத் தொழிலகக் கடன் முதலீட்டுக் கூட்டமைப்புகளையும் ஒத்து இருக்கின்றது. இவை தவிர, பிற நிதி

நிறுவனங்களின் மூலமும் மறைமுகமாக உதவுகின்றது. தொழில் நிதியக் கூட்டமைப்புகள், மாநில நிதியக் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு 3லிருந்து 25 ஆண்டுகளுக்குள் திரும்பிவரக் கூடிய நிதியினை அளிக்கிறது. இவ்வாறே வணிக வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிற்கும் உதவுகின்றது. மேலும், இவ்வங்கி மேற்சொன்ன நிதி நிறுவனங்களின் பங்குகள், பத்திரங்கள், ஆகியவற்றிலும் முதலீடு செய்து இந் நிறுவனங்களின் நிதி வளத்தைப் பெருக்கித் தொழில்கள் அதிக அளவு நிதி உதவி பெற வாய்ப்பளிக்கின்றது. இத்துடன் அபிவிருத்தி உதவி, காப்பு நிதி என்ற ஒரு சிறப்பு நிதியும் ஏற்படுத்தியுள்ளது. அதீத முதலீடு காரணமாகவோ அல்லது குறைந்த வருமான வீதம் காரணமாகவோ தொழில் நிறுவனங்கள் சாதாரணமான முறையில் கடன்பெற இயலவில்லை என்றால், இச்சிறப்பு நிதியின் மூலம் உதவி பெற முடியும். தொழிலபிவிருத்தி வங்கி போதுமான நிதி வளத்தினை கொண்டுள்ளது. இதனுடைய பங்குகளினால் பெறப்பட்ட முதல் ரூ. 10 கோடிகளாகும். 15 ஆண்டுகள் கழிந்து, 15 சம ஆண்டுத் தவணைகளில் திருப்பக் கூடிய வட்டியில்லாத கடனாக மத்திய அரசினிடமிருந்து மேலும் ரூ. 10 கோடிகளைப் பெறலாம். தொழிலபிவிருத்தி வங்கி ரிசர்வ் பாங்கினிடம் இருந்து குறுகிய கால, நடுத்தர – நீண்ட காலக் கடன்களையும் பெறலாம். கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலமும் நிதி மூலங்களைப் பெறலாம். பொதுமக்களிடமிருந்து ரிசர்வ் பாங்கின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட 12 மாத காலத்திற்கும் குறையாத வைப்புகளையும் பெற்றுக்கொள்ளலாம். வேறு உள்நாட்டு வெளி நாட்டு மூலங்களினாலும் கடன் பெறலாம்.

இதனுடைய துவக்கத்திலிருந்து, 1970-ஆம் ஆண்டு மார்ச்சு முடிய இவ்வங்கி ஒப்புதல் அளித்த நிதியின் அளவு ரூ. 317.1 கோடிகளாகும். உண்மையில் அளிக்கப்பட்ட தொகையின் அளவு ரூ. 260.4 கோடிகளாகும். 1969-70-ல் அளிக்கப்பட்ட உதவியின் அளவு மட்டும் ரூ. 53 கோடிகளாகும். பிற்பட்ட பகுதிகளில சிறு தொழில் நடுத்தரத் தொழில் திட்டங்களுக்கு உதவுவதற்காகக் குறைந்த வட்டி வீதத்தில் நீண்ட தவணையில், மேலும் இழப்பு ஆபத்து மிகுந்த பங்குகளில் முதலீடு செய்யவும் புதிய திட்டம் ஒன்றை இவ்வங்கி 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் அறிவித்துள்ளது. 1960-ஆம் ஆண்டு இவ்வங்கி மறு நிதிக் கூட்டமைப்பினை வாங்கிவிட்டது. 1966-ம் ஆண்டிலிருந்து ஏற்றுமதிக்கான கடன்களை அளிப்பதில் நீக்குப்போக்கான கொள்கைகளைப் பின்பற்றுகிறது. இந்த வங்கி 5 ஆண்டுக் காலமாகத்தான் இயங்கி வருவதால் நிதி உதவியளிப்பதில் இதனுடைய பணியினைத்

தற்சமயம் அளவிட இயலாது. ஆயினும், நடுத்தரக்கால அளவுடைய நீண்ட காலக் கடன் அளிப்பதில் இது சிறப்பான பணியினைச் செய்து வருகின்றது. சிக்கலான நிதி உதவித் திட்டங்களையும் வெற்றியுடன் செய்து வருகின்றது என்றே கூறலாம்.

யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா

நம் நாட்டிலுள்ள நடுத்தர வருமானம் உடைய மக்களின் சேமிப்பினை ஊக்குவிக்கவும் அச்சேமிப்புகளை நல்ல முறையில் முதலீடு செய்து அதன் பலனை அவர்களுக்கே அளிக்கும் திட்டம் தான் இந்திய அரசாங்கத்தினால் 1964-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் துவக்கப்பட்ட 'யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியா' ஆகும். இதனுடைய ஆரம்ப முதலீடு ரூ. 5 கோடிகளாகும். இத்தொகையினை பங்குகள் விற்பனையின் மூலம் ரிசர்வ் பேங்கிடமிருந்து ரூ. 2. 5 கோடியும், லைப் இன்சூரன்ஸ் கார்பரேஷனிடமிருந்து ரூ. 75 லட்சங்களும், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிடமிருந்து ரூ. 75 லட்சங்களும், பதிவு செய்யப்பட்ட வங்கிகள், நிதி நிறுவனங்களிடமிருந்து ரூ. 1 கோடியும் என்றும் பெறப்பட்டது. இதனுடைய பொது நிர்வாகம் காப்பாளர் சபையினால் (Board of Trustees) கவனிக்கப்படுகிறது.

இந்நிறுவனத்தின் இருமுனைக் கொள்கையாவன: (அ) குறைந்த நடுத்தர வருமான மக்களின் சேமிப்பைக் குவிக்கத் தூண்டுவது. (ஆ) அவர்களை விரைந்து வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியினால் ஏற்படும் செழிப்பிலும் நலத்திலும் பங்கு கொள்ளச் செய்தல் என்பன. இந்த இரு முனை நோக்கம் ஒரு மும்முனை வழியின் மூலமாக அடையப்படும்.

(1) நாடு முழுவதும் முதலீடு செய்ய நினைப்பவர்களிடம் யூனிட்டுகளை விற்பனை செய்தல்.

(2) விற்பனையான பணத்தினையும், ட்ரஸ்டின் முதலான ரூ. 5 கோடிகளையும் நல்ல முறையில் முதலீடு செய்தல்.

(3) யூனிட்டுகளை வாங்குவோர்களுக்கு இம்முதலீட்டினால் கிடைத்த இலாபத்தில் ஈவு பங்கு அளித்தல்.

1971 ஜூன் முடிய இந்நிறுவனம் 7 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. முதல் ஆண்டின் பெறப்பட்ட மொத்தவிண்ணப்பங்களின் எண்ணிக்கை 1, 35,000 ஆகும். இதனால் பெறப்பட்ட மொத்தத் தொகையின் அளவு ரூ. 19 கோடியாகும். இரண்டாவது ஆண்டில் யூனிட்டுகளின் விற்பனை சற்றே சரிந்த பின்னர் மூன்றாவது நான்காவது ஆண்டுகளில் மீண்டும் ஏறத்தொடங்கியது.

1970 ஜூன் முடிய ஓராண்டு யூனிட்டுகளின் விற்பனை ரூ. 22.8 கோடிகளாகும். 1970 ஜூன் முடிய பதிவு செய்யப் பெற்ற யூனிட்டுகள் வைத்திருப்போரின் எண்ணிக்கை 3,33,000 ஆகும். முதலீட்டின் அளவு ரூ. 77.4 கோடிகளாகும். பின்வரும் அட்டவணை நிறுவனத்தின் முதலீட்டுத் தன்மையைக் காட்டுகிறது.

அட்டவணை 43

யூனிட் ட்ரஸ்டு ஆப் இந்தியாவின் முதலீடுகள்

முதலீடுகள்	ரூபாய் (கோடிகளில்)	சதவிகிதம் %
1. சாதாரணப் பங்குகள்	29.2	34.5
2. சலுகைப் பங்குகள்	11.4	13.5
3. கடன் பத்திரங்கள்	34.4	40.7
4. பொதுக் கூட்டமைப்புகளின் பத்திரங்கள்	4.9	5.8
5. மற்ற வகை	4.7	5.5

இந்நிறுவனம் துவங்கப்பட்டதினால் இந்தியாவின் முதல் சந்தை மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது எனலாம். 'இந்நிறுவனம் சமூகத்தில் சேமிப்புகளைக் குவிப்பதிலும், அவற்றை முதலீடு செய்வதிலும் நல்ல பணியினைச் செய்து வருகின்றது' என்று பாராட்டப்படுகிறது. பொதுத்துறை நிறுவனமாக இருப்பதனால் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. மேலும், அரசாங்கத்தினிடமிருந்து பல வரிச் சலுகைகளையும் இந்நிறுவனம் பெற்றுள்ளது. யூனிட்டுகளில் முதலீடு செய்வது மிகவும் பத்திரமான வழியாகும். ஏனென்றால், யூனிட்டுகளை வைத்திருப்போர் எப்பொழுது வேண்டுமானாலும் யூனிட்டுகளைத் திருப்பி விட்டு ரொக்கம் பெறலாம். யூனிட்டுகளை வைத்திருப்போர்களும் நல்ல வருமானத்தைப்பெற்று வருகின்றனர். இந்நிறுவனத்தின் வளர்ச்சி, தொழில் நிதிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக அமையும்.

நாம் இதுகாறும் பார்த்த தொழில் நிதிய நிறுவனங்களைத் தவிர, இன்னும் சில உள்ளன. தொழில் நிதிய நிறுவனங்கள் அளித்த நிதி உதவியின் அளவினைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 44

தொழில் துறைக்குத் தொழில் நிதிய நிறுவனங்களின் உதவி

நிறுவனங்கள்	1969—70		1969—70	
	அனுமதி அளிக்கப்பட்டது	உண்மையில் அளிக்கப் பட்டது	அனுமதி அளிக்கப்பட்டது	உண்மையில் அளிக்கப் பட்டது
(ஐ.டி.பி.ஐ.) (I.D.B.I)	48.6	28.2	56.4	45.1
(ஐ.எப்.சி.ஐ.) (I.F.C.I.)	22.7	19.5	21.00	17.5
(ஐ.சி.ஐ.சி.ஐ.) (I.C,I.C.I.)	37.0	16.2	22.4	19.8
(எஸ்.எப்.சி'ஸ்.) (S.F.C.'S.)	19.6	18.4	[illegible].0	22.3
(எஸ்.ஐ.டி.சி'ஸ்.) (S.I.D.C.'S.)	4.4	3:5	17.1	9.3
(யு.டி.ஐ.) (U.T.I.)	10.3	10.3	10.0	8.1
(எல்.ஐ.சி.) (L.I.C.)	17.7	15.5	13.3	11,8
மொத்தம்	150.3	111.6	173.2	133.9

இந்நிறுவனங்களின் வளர்ச்சியினால் தொழில் நிதியம் பெரிதும் அபிவிருத்தியடைந்துள்ளது. தனியார் துறைக்குத் துணைபுரியவும் நிதிவசதியளிக்கவும் அமைக்கப்பட்ட எல்லா நிதிய நிறுவனங்களாலும் மூலதனச் சந்தை பெரிதாகப் பரவி விட்டது. ஆனால், இவற்றின் நடவடிக்கைகள் ஒன்றோடொன்று பிணைந்திருப்பதால் இவற்றையெல்லாம் ஒருமுகப் படுத்துவது மிகவும் அவசியம். உத்தரவாதம் அளிக்கப்பட்ட குறைந்த பட்ச இலாப ஈவுகள் அளிப்பதை ஆதரிப்பதும் அரசாங்கத்தைப் பெருமளவு நம்பியிருப்பதும் இந்த நிதி நிறுவனங்களிடம் காணப்படும் குறைகளாகும். ஆயினும், இந்தியாவில் தொழில் துறைக்குரிய நிதியம் போதாது என்றோ, குறைபாடுடையது என்றோ குறை கூற இடமில்லை என்றே சொல்ல வேண்டும்.

10. கூட்டுறவு

(1) கூட்டுறவுக் கடன்

ஒரு தொழிலதிபர்க்கு அவருடைய தொழில் வளர்ச்சிக்கு முதல் தேவைப்படுவதுபோல் விவசாயிக்கும் விவசாய வளர்ச்சிக்கும் முதல் தேவை. இந்த இன்றியமையாத தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்குக் கிராமத்தில் சேமிப்புகள் கிடையாது. ஏனெனில், நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் குறைவாகவே இருக்கிறது. சுயசேமிப்பு மூலம் உருவாகாத முதலை மற்றவர்களிடமிருந்து கடனாகப் பெறுகிறான்.

''விதை, உரம் வாங்குதல் போன்ற அவ்வப்போதைய விவசாயச் செலவுகளுக்காகவும், புதிய நிலங்கள், கால்நடைகள், விவசாயக்கருவிகள் போன்றவைகளை வாங்கவும் நீர்ப்பாசன வசதி, வடிகால் வசதி, களை எடுத்தல் போன்ற நில அபிவிருத்திக்கான நடவடிக்கைக்காகும் செலவுகளுக்கும் பழைய கடன்களைத் திரும்பச் செலுத்தவும், வீடு கட்டவும், புதுப்பிக்கவும், அரசாங்கத்துக்கு வரிப்பணம் செலுத்தவும் திருமணம் மற்றும் குடும்பச் சடங்குகளுக்குச் செலவிடவும் நீதி மன்றங்களில் வழக்குத் தொடரவும் விவசாயி கடன் பெறுகிறான் எனத் திரு. எப். நிக்கல்ஸன் கூறுகிறார்.

ஒரு விவசாயினுடைய நிதித்தேவை மேற்கூறிய உற்பத்திக்காகவும், நுகர்ச்சிக்காகவும் இருக்கலாம். காலத்தை அடிப்படையாகக் கொண்டு அதை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

குறுகிய காலக் கடன்

விவசாயிக்கு ஒரு வருடம் முதல் 15 மாதம் வரை நிகழ்கால உற்பத்திக்காகவும், தற்காலிக நீர்ப்பாசன வசதி, தொழிலாளிகளுக்குக் கூலி, சொந்தச் செலவு, நிலவரி போன்றவைகளுக்காக

நிதி தேவைப்படுகிறது. அறுவடை வரும்வரை ஆகும் செலவுகளுக்கும் பணம் தேவைப்படுகிறது. இதற்காக வாங்கப்படும் கடன்கள் அறுவடை முடிந்தவுடன் திரும்பச் செலுத்தப்படுகின்றன.

நடுத்தரக் காலக் கடன்.

இம்மாதிரியான கடன்களின் திருப்பிக்கொடுக்கும் காலம் 15 மாதங்களிலிருந்து 5 வருடங்கள் வரை இருக்கும். நிலத்தில் தற்காலிக அபிவிருத்திகள் செய்யவும், விவசாயக் கருவிகள், கால்நடைகள் வாங்கவும் நிதி தேவைப்படுகிறது. நடுத்தரக்காலக் கடன்கள் குறுகிய காலக்கடன்களை விடத் தொகையில் அதிகமாகவும், திருப்பிச் செலுத்தும் காலம் அதிகமாகவும் இருக்கின்றன.

நீண்ட காலக் கடன்கள்

திரும்பச்செலுத்த 5 வருடங்களுக்குமேல் ஆகும் கடன்கள் நீண்டகாலக்கடன்கள் என்று அழைக்கப்படுகின்றன. புதிதாக நிலம் வாங்கவும் நிலத்தில் நிரந்தர அபிவிருத்திகள் செய்யவும் பழைய கடன்களைத் திரும்பக் கொடுக்கவும், டிராக்டர் போன்ற விலை உயர்ந்த இயந்திரக் கருவிகளை வாங்கவும் நிதி தேவைப்படுகிறது. இதற்காக வாங்கப்படுகிற கடன்கள் பல வருடங்களில் சிறிது சிறிதாகத் திரும்பச் செலுத்தப்படுகின்றன.

இந்திய விவசாயிகளின்முதலிரண்டுவகை நிதித் தேவைகளைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், அரசாங்கம், லேவாதேவிக்காரர்கள் ஆகியோர் பூர்த்தி செய்கின்றனர்.

பின்வரும் அட்டவணை 45-ல் விவசாயிக்குத் தேவையான கடனைப் பல்வேறு நிறுவனங்கள் எந்த அளவுக்கு அளிக்கின்றன என்பதைக் காட்டுகிறது.

கிராம லேவாதேவிக்காரர்

கடன் கொடுப்பதை முதல் தொழிலாகக் கொண்டவர் என்றும், துணைத் தொழிலாகக் கொண்டவர் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். இடம் பெயராச் சொத்துக்கள் அல்லது நபர் உத்தரவாதத்தின் பேரிலோ கடன் அளிக்கப்படுகிறது. உற்பத்திக்கும், உற்பத்தியல்லாத காரியங்களுக்கும் லேவா தேவிக்காரர் கடன் கொடுப்பதால் பெரும்பான்மையான விவசாயிகள் அவர்களை நாடுகின்றனர். கடன் வாங்குபவரைப்பற்றி நேரடியாகத் தெரிந்து வைத்திருப்பதால், இருவரிடையே நெருக்கம் அதிகரிக்கிறது. கடன் வாங்கும் வழிகளும் எளிதாய் இருக்கிறது. தேவை

அட்டவணை 45

பல்வேறு நிறுவனங்கள் விவசாயிக்கு அளிக்கும் கடன் உதவி அளவு

	சதவீதம் 1951—52	சதவீதம் 1961—62
லேவா தேவிக்காரர்கள்	69.7	49.2
வியாபாரிகள்	5.5	8.8
உறவினர்	14.2	8.8
கூட்டுறவுக்கடன் சங்கங்கள்	3.1	15.5
அரசாங்கம்	3.3	2.6
இதர வழிகள்	4.2	15.1
	100	100

Source : All India Rural Debt and Investment Survey.

முழுதும் பூர்த்தியடையும் அளவுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இக்காரணங்களால் லேவாதேவிக்காரர் மிக அதிகமான நியாய மற்ற வட்டி வசூலிக்கின்றனர். மேலும் கடன் பத்திரத்தில் எழுதியுள்ள தொகை, கொடுக்கும் தொகையை விட அதிகமாகவே இருக்கிறது. பல சமயங்களில் நோட்டில் வரவுகள் பதியப்படுவதில்லை. கடனைத் திரும்ப வசூலிப்பதைவிட அடமானமாக வைக்கப்பட்ட நிலத்தைக் கவரவே நினைக்கிறார்கள். இத்தீமைகளை அகற்றும் நோக்குடன் பல மாநிலங்கள் பலசட்டங்களை நிறைவேற்றி யிருக்கின்றன. அச்சட்டங்களின் முக்கிய ஏற்பாடுகளாவன.

1. கடன் கொடுப்பவர்கள் அமைதி பெறுதலும் பதிவு செய்து கொள்ளுதலும்.
2. வழங்கிய கடன் சம்பந்தமான கணக்குகளைக் குறிப்பிட்ட முறையில் வைத்துக் கொள்ளுதல்.
3. கடனாளிக்கு ரசீதும் கணக்கு விவரமும் கொடுத்தல்.
4. அதிகபட்ச வட்டி நிர்ணயித்தல்.

5. கடனாளியின் சொத்துக்களில் சிலவற்றை ஜப்தி செய்யாதிருக்குமாறு விலக்களித்தல்

6 அடமானங்களை ஒழுங்குபடுத்தல்.

பல மாநிலங்களில் கூட்டு வட்டி தடை செய்யப்பட்டுள்ளது, ஆயினும் லேவாதேவிக்காரர் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடு பெரும்பாலும் மீறப்பட்டுள்ளது. மேற்கு வங்காளம், பீகார் ஒரிசா, மத்தியப்பிரதேசம் ஆகிய இடங்களில் 50 சதவீதத்திற்கு மேலும் வட்டிக்குக் கடன் வழங்கப்படுகிறது. மேலும், சட்ட விரோதமான வட்டிவிகிதப்படி கணக்கிட்டு, அதை முதலிலேயே பிடித்துக் கொள்கிறார்கள். ஆக, லேவாதேவிக்காரர்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் பெரும்பாலும் காகிதத்தில்தான் இருக்கிறது.

மேற்கண்ட குறைகளினால் லேவா தேவிக்காரர்கள் தவிர்க்கப்பட்டு, விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் பெறுவதுதான் சிறந்தது எனக் கருதி அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

குறுகிய காலக் கடன்களை அளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களை மூன்று வகையாக்கலாம். கிராம அளவில் முதல் நிலைக் கூட்டுறவு கடன் சங்கமும், மாவட்டங்களில் மத்தியக் கூட்டுறவு வங்கியும், மாநில அளவில் ஒரு மாநிலக் கூட்டுறவு வங்கியும் செயல்படுகின்றன.

முதல்நிலைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (Primary Coop.credit Societies)

கடன் தொல்லையிலிருந்தும், லேவாதேவிக்காரர்களிடமிருந்தும் மீளுவதற்கு ஒரேவழி கூட்டுறவு இயக்கம்தான். இந்திய அரசாங்கம் இதை உணர்ந்து 1904ஆம் வருடம் கூட்டுறவுக்கடன் சங்கங்கள் சட்டத்தை இயற்றியது. அதன்படி கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன.

பொதுவாக ஒரே கிராமத்தைச் சேர்ந்த 10 அல்லது அதற்கு மேற்பட்டோர் ஒன்று சேர்ந்து இச்சங்கங்களை ஆரம்பிக்கின்றனர். மிக ஏழ்மையான குடியானவர்கள்கூட அங்கத்தினர் ஆகும் அளவுக்குப் பங்குகளின் (Shares) மதிப்புக் குறைத்து வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய பங்குமுதலைக் கொண்டு குறுகியகாலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போதிய நிதிவசதி இல்லாததால் மாவட்டக் கூட்டுறவு வங்கியிடமிருந்து சங்கங்கள் கடன் பெறுகின்றன. அங்கத்தினர் பொறுப்புக்

கட்டுப்படுத்தப்பட்டதல்ல (Unlimited liability). இதனால் அங்கத்தினர்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து வைத்துக் கொள்வதுடன் பொறுப்புடன் செயலாற்ற வகை செய்கிறது. தலைவர், செயலாளர், பொருளாளர் அடங்கிய ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினால் சங்கம் நிர்வகிக்கப்படுகிறது. கடன் ஒரு விவசாயப் பருவத்துக்கு (Season) அளிக்கப்படுகின்றன. வட்டி 6 சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சங்கத்திற்குச் சேரும் இலாபம் அங்கத்தினர்களிடையே ஈவுபடுத்திக் கொடுக்கப்படுவதில்லை. பள்ளி நிர்வாகம், கிணறு வெட்டுதல் போன்ற கிராமப் பொது நலச் சேவைகளுக்காகச் செலவிடப் படலாம். இத்தகைய முதல் நிலைச் சங்கங்களின் நிலை கீழே கண்ட அட்டவணையின் மூலம் தெளிவாகிறது.

அட்டவணை 46

முதல் நிலைச் சங்கங்களின் நிலை

	1951-52	1967-68
சங்கங்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)	108	172
அங்கத்தினர்கள் (லட்சத்தில்)	48	281
பங்கு முதல் (ரூ. கோடியில்)	98	148
நடை முதல் (ரூ. கோடியில்) (Working Capital)	45	709

கூட்டுறவு மத்திய வங்கி

இது ஒரு மாவட்டத்திலுள்ள முதல் நிலைச் சங்கங்களின் கூட்டமைப்பே ஆகும். சில தனி மனிதர்களே பங்குதாரர்களாகவும் நிர்வாகிகளாகவும் இதில் செயல்படுகிறார்கள். இதற்கு மூன்று வழிகளில் முதல் சேருகிறது. (1) அதனுடைய பங்கு முதலும் காப்பு நிதியும் (2) பொதுமக்களிடமிருந்து வைப்புகள் (3) மாநிலக் கூட்டு வங்கியிடமிருந்து கடன். நிதிப் பற்றுக் குறையுள்ள முதல் நிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனுதவி அளிப்பதே இதனுடைய முக்கிய பணியாகும். இத்தகைய வங்கிகளின் நிலை பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 47

மத்திய கூட்டுறவு வங்கியின் வளர்ச்சி

	1951–52	1967–68
எண்ணிக்கை	509	344
அங்கத்தினர் (ஆயிரத்தில்)	231	356
நடை முதல் (ரூ. கோடியில்)	60	706
கொடுக்கப்பட்டிருக்கும் கடன்கள் (ரூ. கோடியில்)	106	986

மாநிலக் கூட்டுறவு வங்கி

ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டுறவு இயக்கத்தின் சிகரமாக இவ்வங்கிகள் விளங்குகின்றன. மாநிலத்திலுள்ள மத்திய வங்கிகளின் நடப்பைக் கண்காணிப்பதும், அவைகளுக்குக் கடனுதவியளிப்பதும் இதனுடைய பணிகளாகும். இந்த மாநில வங்கிகளுக்கே நிதிப் பற்றுக்குறை எழும்போது ரிசர்வ் பாங்கியிடமிருந்து கடன் பெறுகின்றன. எனவே, மாவட்ட வங்கிகளுக்கும் ரிசர்வ் பாங்கிற்கும் இடையில் இணைப்பாக இவ்வங்கிகள் பணியாற்றுகின்றன எனக் கூறலாம். மாநில வங்கிகளுக்கு நடைமுறை முதல் மூன்று வழிகளில் கிடைக்கின்றது. (1) பங்கு முதலும், காப்பு நிதியும். (2) பொதுமக்களிடமிருந்து வைப்புகள் (3) ரிசர்வ் பாங்கிலிருந்து கடனுதவிகள். பெரும்பாலான மாநில வங்கிகளின் நடைமுறை முதலின் 50 முதல் 90 சதவீதம் ரிசர்வ் பாங்கு அளிக்கும் கடனுதவியிலிருந்துதான் பெறப்படுகிறது. பின்வரும் அட்டவணை 45 மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் நிலையை எடுத்துக் காட்டுகிறது.

நில அடமான அல்லது நிறுவன வங்கிகள்

விவசாயிகளின் நீண்டகாலக் கடன்களை இவ்வங்கிகள் அளிக்கின்றன. மாநில அரசுகளும் கூட்டுறவு வங்கிகளும் லேவாதேவிக்காரரும் இத்தேவையை ஓரளவு பூர்த்தி செய்தாலும் அவை போதுமானதாக இல்லை. எனவே, சிறப்புடன் இதைச் செய்யக்கூடிய தனி நிறுவனங்கள் தேவைப்பட்டன. மேலும், கிராம அளவில் பணி புரியும் முதல் நிலைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நிதி பற்றுக்குறையாக இருக்கிறது. அடமானம் வைக்கும் நிலங்களை

அட்டவணை 48

மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி

	51—52	67—68
எண்ணிக்கை	16	25
அங்கத்தினர் (ஆயிரத்தில்)	23	214
பங்குமுதல் (ரூ. கோடிகளில்)	2	35
நடைமுதல் ,,	37	444
அளிக்கப்பட்டுள்ளகடன் ,,	55	651

மதிப்பீடு செய்யும் அதிகாரிகளும் இல்லை. ஜமீன்தாரிமுறை ஒழிக்கப்பட்டுவிட்டதாலும், லேவாதேவிக்காரர்கள், மகாஜன் ஆகியோர்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளாலும் விவசாயிகளுக்குக் கிடைத்து வந்த நிதி குறைந்து போயிற்று. நிலத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், வணிகப் பயிர்களைப் பயிரிடவும் மிக அதிகமான முதல் தேவைப்பட்டது. மேற்கூறிய காரணங்களால் நீண்டகாலக் கடன் கொடுப்பதற்கென நில அடமான வங்கிகள் தோற்றுவிக்கப்பட்டன.

முதல்நிலை நில அடமான வங்கிகள் தாலுகா அளவிலோ அல்லது மாவட்ட அளவிலோ பணிபுரிகின்றது. மத்திய நிலவள வங்கிகளுடன் அவைகள் இணைக்கப்பட்டுள்ளன. பழைய கடன்களைத் திரும்பச் செலுத்தவும் குத்தகை உரிமைகளை வாங்கவும் நில அபிவிருத்தி செய்யவும், டிராக்டர் போன்ற விவசாயக் கருவிகள் வாங்கவும் இவ்வங்கிகள் கடன் அளிக்கின்றன.

சில கருத்துக்கள்

நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. எந்த நோக்குடன் கடன் வாங்கப்படுகிறதோ அது முழு வெற்றி பெறும் வகையில் போதுமான அளவு கடன் வழங்கப்படவேண்டும்.

2. கடன் வாங்கி முதலீடு செய்ததிலிருந்து கிடைக்கும் இலாபத்தைக் கொண்டே கடனைத் திரும்பச் செலுத்தக் கூடிய தாய் வட்டியின் தவணை இருக்க வேண்டும். கடனைத் திரும்பச் செலுத்துவதற்காக விவசாயி வேறு புதிய கடன்களை வாங்கவோ, மற்ற சொத்துகளை விற்கவோ கூடாது.

சில மாநிலங்களில் முதல்நிலை நில அடமான வங்கிகளே இல்லை. ஆனால், அதற்குப் பதிலாக மத்திய நிலவள வங்கியின் கிளைகள் அவ்விடங்களில் பணிபுரிகின்றன. மத்தியபிரதேசத்தில் மாநிலக் கூட்டுறவு வங்கியே நிலவள வங்கியாகச் செயல்படுகிறது. ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மத்திய நில அடமான வங்கிகளே இருக்கின்றன. இது போலவே, பல மாநிலங்களில் முதல்நிலை நிலவள வங்கியின் அமைப்பில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஏனைய கூட்டுறவுக்கடன் நிறுவனங்களைப் போலவே, வங்கிக்கும் மூன்று வழிகளில் முதல் கிடைக்கிறது. (1) பங்குமுதலும் காப்பு நிதியும் (2) பொது மக்களிடமிருந்து வைப்பு (3) கடன் பத்திரங்கள் (Debentures) வழங்குதல் மூலம் நிதி சேகரித்தல். குறிப்பிட்ட காலத்துக்கு நிலையான வட்டிக்கு வங்கிக்கடன் பெறுவதற்கு இந்தக்கடன் பத்திரங்கள் உதவுகின்றன. மாநில அரசு ரிசர்வ்பாங்க், மாநிலக் கூட்டுறவு வங்கி முதலியன இப்பத்திரங்களை வாங்குகின்றன. பொதுமக்கள் இவைகளை வாங்குவதற்கு ஊக்கமும், நம்பிக்கையும் அளிக்கும் வகையில் மாநில அரசு அசலுக்கும் வட்டிக்கும் உத்தரவாதம் அளிக்கிறது. பொதுவாக, இக்கடன்களின் கால அளவு 20 வருடங்களாகும். 1957 முதல் நில அடமான வங்கிகள் 7 வருட காலம் கொண்ட பத்திரங்களையும் வழங்குகின்றன. ரிசர்வ் பாங்கு இத்தகைய பத்திரங்களை வாங்குவதற்கு ஒப்பியிருக்கின்றது. 1967-68-ல் மத்திய நில அடமான வங்கிகள் ரூ. 77.60 கோடி மதிப்புக்குப் பத்திரங்கள் வழங்கியிருக்கின்றன. 1967–68-ல் இதை ரூ. 80 கோடிக்கு உயர்த்தத் திட்டபட்டது.

கடன் வழங்கும் முறை

விவசாயச் சொத்துக்களின் உத்தரவாதத்தின் பேரில் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. நீண்ட காலத்தில் திருப்பிச் செலுத்தக் கூடிய கடன்கள் அளிக்கப்படுவதால், உத்தரவாதமாகத் தரப்படுகின்ற சொத்துக்களைப் பற்றிக் கடுமையான விதிகள் விதிக்கப்பட்டுள்ளன. சொத்துக்கள் வேறு எந்த வங்கியிலோ அல்லது தனியாரிடமோ அடமானமாக இருக்கக் கூடாது. மற்ற யாருக்

கும் உரிமைப்படாத சொத்துக்களாக இருக்க வேண்டும்; ஆனால், சிற்சில சமயங்களில் வில்லங்கப்பட்ட சொத்துக்களின் மேலும் கடன் வழங்கப்படுவதுண்டு. உத்தரவாதமாகத் தரப்பட்ட சொத்துக்களினுடைய மதிப்பில் 50 சதவீதம்தான் கடன் வழங்கப் படுகிறது. சொத்துக்களை மதிப்பிடுவதில் தேர்ச்சியுடையவர்கள் வங்கியில்பணிபுரிகின்றனர். மதிப்பிடும்போது நிலத்தின் அளவு அவைகளின் விற்பனை மதிப்பு, நிகர வருமானம், வாடகை, ஈட்டு மதிப்பு, நிலவருவாய் வரி, போன்றவைகளும் கவனிக்கப்படுகின் றன. வட்டி மிகக் குறைவாக இருப்பதால் 6 சதவீதம் ஏழ்மை யான குடியானவன் நீண்டகாலக் கடன் பெற வசதியாய் இருக் கிறது. கடன் வழங்கப்படும்போது உத்தரவாதமாகக் காட்டப் படும் சொத்துக்களின் மதிப்பு மட்டுமல்லாமல் விவசாயினுடைய கடனைத்திரும்பச் செலுத்தும் சக்தியும் கவனிக்கப்படுகிறது.

ஆரம்பக் காலத்தில் தனியாரிடம் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவதற்காக வங்கிகள் கடன் அளித்தன. ஆனால், தற்போது இவ்வகையான கடன்கள் அளிக்கப்படுவதில்லை. நில அபிவிருத்திக் கான திட்டங்களுக்காகவும், விலையுயர்ந்த விவசாயக் கருவிகள் வாங்கவும் கிணறு வெட்டவும் விவசாயிகள் கடன் பெறுகிறார்கள்.

அட்டவணை 49

நில வள வங்கியின் வளர்ச்சி

	மத்திய நிலவள வங்கி		முதல்நிலை நிலவளவங்கி	
	1951—52	1967—68	1951—52	1967—68
எண்ணிக்கை	6	19	289	731
அங்கத்தினர் (இலட்சத்தில்)	0.35	9.2	2.2	24.5
கடன் பத்திரங்களும் மற்ற கடன்களும் (ரூ. கோடியில்)	7.8	370.0	6.8	197.6
கடைமுதல் (ரூ. கோடியில்)	10.2	346.7	7.6	223.4
வழங்கப்பட்டுள்ள கடன் (ரூ. கோடியில்)	2.5	92.4	1.3	649

SOURCE : India 1970—Page 271.

கீழ்க்கண்ட அட்டவணை கடன் வாங்கிய நோக்கங்களையும் கடன் அளவையும் குறிக்கிறது.

அட்டவணை 50

நோக்கம்	தொகை (ரு. கோடியில்)	சதவீதம்
1. நில அபிவிருத்தி	31.4	55.7
2. விவசாயக் கருவிகள் வாங்க	16.1	28.6
3. பழைய கடன்கள் திரும்பக் கொடுக்க	3.4	5.9
4. இதர நோக்கங்களுக்காக	5.5	9.8
5. மொத்தக் கடன்கள்	56.4	100.0

கூட்டுறவுச் சங்கங்களின் குறைவான முன்னேற்றத்துக்குக் காரணங்கள்

குடியானவர்களுக்குத் தேவையான அளவுக்குக் கடன் வழங்கப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள.

1. கூட்டுறவுக் கோட்பாட்டின்படி அங்கத்தினர்கள் எந்தவிதத் தூண்டுதலுமின்றி மனமுவந்து ஒத்துழைப்பு நல்க வேண்டும். ஆனால், இந்தியாவில் கூட்டுறவு அரசாங்கத்தால் முழுதும் கட்டுப் படுத்திய ஓர் இயக்கமாக இருக்கிறது.

2. அங்கத்தினர் அறியாமையில் மூழ்கி இருப்பதால், கூட்டுறவின் முக்கியத்துவத்தை உணரவில்லை. அவர்களுக்கு அதில் ஆர்வமும் இல்லை.

3. சங்கங்களுக்குள்ள முதல் பற்றுக்குறைவுடையதாய் இருப்ப தால், கடன்களைத் தேவையான அளவுக்கும், விரைவிலும் அளிக்க இயலாததாய் இருக்கிறது.

4. இச்சங்கங்களை நிர்வகிக்கும் அதிகாரிகள் பயிற்சி பெறாதவர் களாய் இருக்கிறார்கள்.

5. எந்தவிதச் சட்டதிட்டமோ அல்லது சடங்குகளோ இன்றித் தேவையான அளவுக்கு விரைவில் கடன் அளிக்க நிறுவனங்கள் செயல்படுகின்றன.

6. வலிமை பொருந்திய செல்வர்களை எதிர்த்து வலிமை குறைந்த ஏழைக் குடியானவர் ஒன்று சேராத அளவுக்குப் பொருளாதார சமூக சூழ்நிலை பின்தங்கியதாக இருக்கிறது.

7. பல இடங்களில் செல்வாக்குடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இச்சங்கங்களில் அங்கத்தினர்களாகப் புகுந்து விடுவதால் கடன் வசதிகள் சில குடும்பங்களுடன் அடங்கிவிடுகிறது.

8. குறைவான நிலமுடைய குடியானவர்கள் கடன் பெறுவதில் ஒதுக்கப்படுகிறார்கள். மொத்தக் கூட்டுறவுக் கடனில் 3.5 சதவீதம் தான் இவர்களுக்குக் கிடைக்கிறது. பெரிய நிலச்சுவான்தாரர்கள் 53 சதவீதத்தை அடைகிறார்கள்.

9. கடன் பெற்றவர்கள் குறித்தகாலத்தில் திரும்பச் செலுத்தவில்லை. கொடுபடாத கடனில் தவணை கடந்த கடன் 1960–61–ல் 20 சதவீதமாய் இருந்தது. 1997–68-ல் 33 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. மத்தியக் கூட்டுறவு வங்கியில் 12.4 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது.

10. இறுதியாகக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தங்கள் நிதிப் பற்றாக்குறையினால் ரிசர்வ் பாங்கைச் சார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது. கடந்த சில வருடங்களில் சங்கங்கள் அளித்துள்ள கடன்களில் முக்கால் பாகம் ரிசர்வ் பாங்கு கொடுத்த கடன் தொகையிலேயே அளிக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் பாங்கிலிருந்து மாநிலக் கூட்டுறவு வங்கிகள் வாங்கிய கடன் 1960–61-ல் 89 கோடியாக இருந்தது. இது 1966–67-ல் கோடியாக அதிகரித்துள்ளது. சங்கங்கள் மாநில வங்கிக்குத் திரும்பச் செலுத்த வேண்டியது 1960-ல் 6.39 கோடியாக இருந்தது. 1964–65-ல் 97.90 கோடியாக அதிகரித்துள்ளது. மேலும், விவசாயிகள் வாங்கியுள்ள கூட்டுறவுக் கடனில் 28 சதவீதம் பயனற்ற செலவுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவுக்கு விளக்கம் கூறும்போது வேர்கள் மண்ணில் இறங்காததால் அரசாங்கத்தால் இரு கைகளாலும் உயரப்பிடித்து நிறுத்திவைக்கப்பட்டுள்ள செடிதான் கூட்டுறவு. கிராம இந்தியாவைப் பற்றி இருப்பது, தனியார் துறைப் பொருளாதாரத்தின் கைகளே என ரிசர்வ் பாங்கின் ஓர் அறிக்கை கூறுகிறது. கூட்டுறவு இந்தியாவில் தோல்வி அடைந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், நமது கிராமங்கள் மறுமலர்ச்சி அடைந்து நல்வாழ்வு பெற வேண்டுமென்றால் கூட்டுறவு இயக்கத்தைப்போல் சிறந்த சாதனம் வேறொன்றுமில்லை.

(2) கூட்டுறவு முறையில் உற்பத்தி

நாம் முன்பே, நம் நாட்டின் நில அமைப்பு முறைகளில் காணப்படும் குறைகளைக் களைந்து, உற்பத்தியைப் பெருக்கக் கூட்டுறவு விவசாயமே சிறந்ததெனக் கண்டோம் 'நாட்டில் பெருகிவரும் வருமான ஏற்றத்தாழ்வைப் போக்கவும், தொழிலாளிகளின் துயர்துடைக்கவும், நாடு முழுவதும் உற்பத்தியாளர் கூட்டுறவுகளையும் நுகர்வோர் கூட்டுறவுகளையும் பெருக்க வேண்டும்,' என்ற எண்ணம் மக்களிடையேயும் அரசிடமும் நிலவி வருகின்றது. நம் நாட்டில் சிறு தொழில்களைக் கூட்டுறவு முறையில் ஆரம்பிப்போர்க்கு அரசு பல வசதிகளையும், சலுகைகளையும் கொடுத்து வருகிறது. நம் நாட்டில் நெசவாளர் கூட்டுறவுகள் அரசின் ஆதரவால் சீரிய முறையில் செயல் பட்டுவருகின்றன. மேலும், நம் நாட்டில் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், தோல் பதனிடுவோர் கூட்டுறவு, கருமார் கூட்டுறவு, உற்பத்திச் சங்கங்கள், தச்சுத்தொழில் புரிவோர் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் தோன்றி வருகின்றன. ஆனால், உற்பத்திக் கூட்டுறவுகள் நாம் எதிர்பார்த்த அளவு வளர்ச்சியுறவில்லை; வெற்றி பெறவும் முடியவில்லை.

நம் நாட்டில் நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் இரண்டாம் உலகப் போரின் பொழுதும், அதற்குப் பிறகும் தோன்றின. அவை போர்க் காலத்தில் எளிதில் கிடைக்காத பொருள்களை, குறிப்பிட்ட விலையில் நுகர்வோருக்கு அளிக்க வேண்டும் என்ற நோக்குடன் நிறுவப்பட்டன. போர்க்காலத்தில், வணிகர்கள் பற்றுக்குறையை நன்கு பயன்படுத்திக் கொள்ள இலாபம் வைத்துப் பொருள்களைக் கருப்புச் சந்தையில் விற்றனர். இவர்கள்ளி கொடுமையிலிருந்து நடுத்தர வருமானமுடையோரையும் குறைந்த வருமான முடையோரையும் காக்கவே நுகர்வோர் சங்கங்கள் தோன்றின. ஆனால், மக்கள் கிடைக்காத பொருள்களைக் குறைந்த விலையிலே வாங்கமட்டுமே கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், நம் நாட்டில் சில நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படச் செயல்பட ஆரம்பித்துள்ளன. நுகர்வோர் கூட்டுறவு வளர்ச்சி அடையுமானால், சில்லறை வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடைவது குறைந்து, மக்கள் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதில் ஐயமில்லை.

இப்பொழுது நகர்ப்புறங்களில் வீடுகட்டும் சங்கங்கள் நடுத்தர வருமானமுடையோருக்கும், குறைந்த வருமானமுடையோருக்கும் குறைந்த வட்டியில் வீடு கட்டக் கடன் கொடுத்து உதவுகிறது.

இச்சங்கத்தின் உறுப்பினர் கடனைப் பல தவணைகளாகச் செலுத்தி, தங்கள் வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்கின்றனர். நம் நாட்டில் கூட்டுறவுத்துறையில், விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர் கூட்டுறவுகள் இருந்த போதிலும் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களே முக்கிய அங்கம் வகிக்கிறது.

(3) கூட்டுறவு முறையில் விற்பனை

விவசாயிகள் தங்கள் முக்கியத் தேவைகளை நிறைவு செய்யவே விவசாயத்தைச் செய்து வந்தனர். இது, 1850-க்கு முற்பட்ட இந்தியாவின் நிலை. அதற்குப் பிறகு விவசாயிகள் விவசாயத்தைப் பிழைப்புக்காக என்று மட்டும் கருதாமல், வணிக முறையிலே விவசாயம் செய்யத்தலைப்பட்டனர். விவசாயிகள் தம் குடும்பத் தேவைக்காக அரிசி, கோதுமை, சோளம் போன்ற தானியங்களையும், விற்பனைக்காகப் பணப்பயிர்களான பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள், கரும்பு ஆகியவைகளைப் பயிரிட்டனர். விவசாயிகள் வணிக முறையில் பயிர் செய்யத் தொடங்கியமையால் விற்பனைக்குரிய எச்சத்தைச் சந்தையிலே விற்க அவனுக்குச் சந்தை வசதிகள், போக்குவரத்துச் சாதனங்கள், பொருள்களை விஞ்ஞான முறையில் பாதுகாக்கச்செய்யும் கிடங்கு வசதிகள் ஆகியவை தேவைப்பட்டன. ஆனால், நம் நாட்டில் இந்தச் சந்தை முறையோ பழமையானது. அங்கே தரகர்களும், வணிகர்களும், விவசாயிகளுக்குப் பொருள்களுக்கு உரிய விலை தராது பெரும் இலாபம் அடைந்து வந்தனர்.

நாடு துரித வளர்ச்சி யடையவேண்டுமாயின், பெருகி வரும் நகர மக்களுக்கு அதிக அளவு உணவுப்பொருள்கள் தேவைப்படுகிறது. மேலும், தொழில்களுக்குச் சீரான தடையற்ற விவசாய மூலப்பொருள்கள் அளிப்பும் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாதது ஆகும்.

இதிலிருந்து நாம் அறிவது யாதெனின், உணவு மற்றும் விவசாயத் தொழில், மூலப்பொருள்களில் விற்பனைக்குரிய எச்சம் பெருக வேண்டும். சர்வாதிகாரம் பெற்ற நாடுகளாயின், அரசு எச்ச உற்பத்தியைக் கட்டாயக் கொள்முதல் செய்ய முடியும். ஆனால், நம் நாட்டில் மக்களாட்சி நடைபெறுவதால், நாம் மேற்கூறிய முறையைப் பின்பற்ற முடியாது. எனவே, விவசாயிகளை அவர்களின் பொருள்களுக்கு அதிக விலை கொடுப்பதன் மூலம்தான் அவர்களை விற்பனைக்குரிய எச்சத்தைச் சந்தைகளில் விற்கச்செய்ய இயலும். எனவே தான், உணவு தானிய விசாரணைக்குழு, நல்ல

முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட கட்டுப்பாடுள்ள சந்தைகள் இருந்தால்தான், சந்தைகளுக்கு வருகின்ற தானியங்கள் மற்றும் விவசாயத்தொழில் மூலப்பொருட்களின் அளவு அதிகரிக்கும் என்று கூறியுள்ளது.

விவசாயப் பொருள்களின் விற்பனை முறை

நம் நாட்டில் விவசாயிகள் தங்கள் எச்ச விளை பொருளைக் கிராமத்தில் கடன் கொடுத்துப் பிறகு தானியத்தை வாங்கும் கிராம மார்வாரியிடமே விற்கின்றனர். கிராம மார்வாரி (Village Money Lender) தன் கணக்கிலோ அல்லது நகரங்களில் உள்ள பெரிய உணவு தானிய வர்த்தகரின் முகவராய் இருந்தோ பொருள்களைக் கொள்முதல் செய்கிறான். உதாரணமாகப் பஞ்சாப் மாநிலத்தில் விவசாய விளைபொருள்களான கோதுமை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவைகளில் முறையே 60, 70, 35 சதவிகிதம் கிராமத்திலேயே விற்கப்படுகின்றன எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் விளை பொருளை வாரம் ஒரு முறையோ அல்லது இருமுறையோ கூடும் ஹாட் என்னும் சந்தைகளில் விற்கின்றனர். திருவிழாவையொட்டி முக்கிய நகரங்களில் நடைபெறும் வியாபாரச் சந்தைகளுக்குத் தங்கள் விற்பனைப் பொருள்களையும், கால் நடைகளையும் கொணர்ந்து விற்பனை செய்கின்றனர்.

விவசாயிகள் தங்கள் விளைபொருளைச் சிறிய, பெரிய நகரங்களில் உள்ள 'மண்டிகள்' மூலமாகவும் விற்பனை செய்கின்றனர். விவசாயிகளுக்கு அவர்கள் பொருள்களை 'அர்க்கத்தியாஸ்' என்று அழைக்கப்படும் மொத்த வியாபாரிகளிடம் விற்பனை செய்வதில் 'டலால்' என்றழைக்கப்படும் தரகர்கள் உதவி புரிகின்றனர்.

விவசாயப் பொருள்களின் விற்பனைக்குத் தேவையான வசதிகள்

1. தன் விளைபொருளைச் சேமித்து வைத்துக் கொள்ளக் கிடங்கு வசதி வேண்டும்.

2. விவசாயிக்கு விளை பொருளை இருப்பு வைத்துக் கொள்வதற்கான சக்தியிருந்தால்தான், அதன் விளைபொருள்களை அதிக விலை விற்கும் பொழுது விற்று, விலை உயர்வின் பயனை விவசாயி பெற முடியும்.

3. விவசாயிக்கு அவனுடைய விற்பனைக்குரிய விளைபொருளை நகரங்களுக்கு எடுத்துச் செல்வதற்குக் குறைந்த செலவில் போக்குவரத்து வசதி கிடைக்க வேண்டும்.

4. விவசாயி சந்தைகளின் நிலவரம், விலை ஆகியவற்றைப் பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

5. இடைத்தரகர்களின் எண்ணிக்கை குறைய வேண்டும். அப்பொழுதுதான், இலாபம் உற்பத்தியாளனுக்குக் கிடைக்கும். இப்பொழுது இலாபம் உற்பத்தி செய்பவனுக்குக் குறைவாகவும், அதை வாங்கி விற்கும் தரகர்களுக்கு அதிகமாகவும் இருக்கிறது.

விவசாயப் பொருள்களின் விற்பனையில் காணப்படும் குறைபாடுகள்

முன்பு கூறிய முக்கிய தேவைகளைக் கொண்டு நம்நாட்டின் தற்போதைய விற்பனை முறையை ஆய்ந்தால் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன. நம் விவசாயி ஏழை, எழுத்தறிவில்லாதவன்; அறியாமையில் மூழ்கியவன்: அவனுக்கு விற்பனை பற்றி எந்த விதத் தெளிவான சிந்தனையும் கிடையாது. அவனுக்கு விளைபொருளைச் சேமித்து வைக்கக் கிடங்கு வசதி இல்லை. நம் நாட்டின் விவசாயிகள் பெருங்கடனாளியாக இருந்து வருகின்றனர். இதனால், கடனை உடனடியாகச் செலுத்த வேண்டியிருப்பதால் அவன் நல்ல விலை கிடைக்கும் வரை காத்திருக்க முடிவதில்லை.

கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கிச் செல்லும் சாலைகள் மிக மோசமாக இருப்பதால் பெருஞ் செல்வர்கள் கூட, மண்டிக்கு எடுத்துச் சென்று விற்க விரும்புவதில்லை.

மண்டிகளில் உள்ள சூழ்நிலையைக் கண்டு விவசாயி அஞ்ச வேண்டியுள்ளது. ஏனெனில், அங்கே விற்பனை, 'டலால்' என்ற தரகர்மூலமே செய்ய வேண்டியிருப்பதால் அது விவசாயிக்குச் சாதகமாக இருப்பதில்லை.

டலால், அர்க்கத்தியாஸ்களோடு தங்களுடைய வியாபார (மறை) மொழியில் பேசி, மொத்த வியாபாரிக்குச் சாதகமாகவே விலை நிர்ணயம செய்கின்றனர். ஆனால், விவசாயி டலால் என்ற தரகர்களுக்குத் தரகுப்பணம் தரவேண்டியுள்ளது. விவசாயி மாதிரிக்காகத் தானியத்தை அளிப்பதனாலும், எடைகளில் ஏமாற்றப்படுவதாலும், 'தரம் குறைவு' என்று கூறி விலையைக் குறைப்பதாலும் அவனுக்கு மண்டிக்குச் சென்று விற்பனை செய்வதில் இழப்பே அன்றி இலாபமில்லை.

விவசாயிக்கும், நுகர்வோனுக்கு மிடையே பல இடைத் தரகர் இருப்பதால், இடைத்தரகர் இலாபமே மிகுதியாகவுள்ளது.

விவசாயிகள் பெரிய மார்க்கெட்டுகளில் உள்ள விலை நில வரத்தைப்பற்றி எதுவும் அறியாததால் வியாபாரிகள் சொல்வதை நம்பி விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

இக்குறைபாடுகளை நீக்க அரசு பல திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. பொருள்களின் தரத்தை உயர்த்த, விவசாயப் பொருள்களின் தரத்தைப் பரிசோதனை செய்து 'அக்மார்க்' வழங்க, 1912ஆம் ஆண்டு விவசாய விளைபொருள்கள் (விற்பனையும், தரமும்) சட்டத்தை (Agricultural Produce Marketing's Grading) Act.) இயற்றியது. இது தரமான பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகை செய்கிறது.

அடுத்து விவசாயிக்குச் சேமித்து வைக்கப் போதிய கிடங்கு வசதியை அளிக்க மத்திய அரசு அகில இந்திய கிடங்குக் கார்ப்பரேஷனையும் (All India ware-housing Corporation) மாநில அரசு மாநிலக் கிடங்குக் கார்ப்பரேஷனையும் நிறுவியுள்ளது. கிராமங்களில் கிடங்கு வசதிகளைப் பெருக்கக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கடனையும் தொழில் நுட்ப உதவியையும் அரசு அளிக்கிறது. விவசாயப் பொருள்களை விற்பனை செய்ய கூட்டுறவுச்சங்கங்களும், கூட்டுறவுப் பதனிடும் சங்கங்களும் துவங்கப்பெற்றுள்ளது. கிராமப் போக்குவரத்துச் சாலைகளைச் சீர்திருத்த ஐந்தாண்டுத் திட்டங்களில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. ஒழுங்கு செய்யப்பட்ட சந்தைகள் அமைக்கப்பட்டு விவசாயியின் நலத்தை அரசு கவனித்துக் கொள்கிறது. விலை மற்றும் சந்தை நிலவரங்களைப் பற்றியும் அரசு அகில இந்திய வானொலியின் மூலம் தினந்தோறும் அறிவிக்கிறது. விவசாயப் பொருள்களின் விற்பனையில் காணப்படும் குறைகளை நீக்கக் கூட்டுறவு விற்பனைச்சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

1954ஆம் ஆண்டுக்குமுன், தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களி லிருந்து பிரித்து அமைக்கப்பட்டன. ஆனால், 1954-க்குப் பிறகு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிக்குக் கடன்அளிக்கவும் அவர்களுடைய விற்பனைக்குரிய எச்சத்தை விற்பனை செய்யவும் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சங்க அங்கத்தினர்கள் தங்கள் எச்சத்தைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்பனை செய்ய ஒப்புக் கொள்கின்றனர். அவர்கள் தானியத்தைச் சங்கத்தில் கொடுத்தவுடன் ஒரு குறிப்பிட்ட தொகையை முன் பணமாகப் பெறுகின்றனர். அங்கத்தினர்,

அங்கத்தினராக இல்லாத கிராம விவசாயிகள் ஆகியோரிடம் உள்ள விற்பனைக்குரிய எச்சத்தை வாங்கிப், பதனிட்டுச் சந்தையில் விற்பனை செய்கின்றனர். இதனால், இடைத்தரகர்கள் பெறும் பெருலாபம் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்கிறது. இப்பொழுது உள்ளவிலை சாதகமானது அல்ல, எனக் கருதி, 'விலை பிறகு உயரும்' என்று எண்ணினால், பொருளைக் கிடங்கில் வைத்திருந்து அதிக விலை விற்கும் பொழுது விற்றும், பின் உடனடியாக விவசாயிக்கு மீதி பணத்தையும் கொடுக்கிறது. இப்பொழுது கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், சம்பளம் பெறும் அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு ஒரே சங்கம் பல கிராமங்களுக்குப் பணி செய்வதன் மூலமும் இவைகள் திறம்படச் செயலாற்றி வருகின்றன.

கூட்டுறவு விற்பனையால் ஏற்படும் நன்மைகள்

மேலை நாடுகளில், எடுத்துக்காட்டாக டென்மார்க்கில் பால் பண்ணைப் பொருள்களைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்வதன் மூலம் பெரும் வெற்றியடைந்துள்ளனர்.

கூட்டுறவு விற்பனையால், கூட்டுப்பேரத்தின் மூலம் தங்கள் விவசாய விளை பொருள்களுக்கு அதிகவிலை பெற முடிகிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் கடன் கொடுப்பதால் விவசாயிகள் தங்கள் பொருள்களை இருப்பு வைத்திருந்து விவசாய விற்பனைச் சங்கங்கள் மூலம் நல்ல விலை கிடைக்கும் பொழுது விற்க முடிகிறது. கூட்டுறவு விற்பனை சங்கங்கள் தங்களுக்கு விஞ்ஞான முறையில் சேமித்து வைக்கக் கிடங்கு வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வசதி செய்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் விரைவான மலிவான போக்கு வரத்து வசதிகளைப் பெற முடியும். சில நேரங்களில், அவர்களுக்குத் தேவையான லாரி முதலியவைகளைத் தாங்களே வாங்கவும் முடிகிறது. விவசாயிகள் கலப்படம் செய்வதைத்தடை செய்து. விவசாயப் பொருள்களின் தரத்தை உயர்த்த முடிகிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளிப்பைக் கட்டுப்படுத்தி விலையைக் கட்டுப்படுத்த முடியும். இவைகள் இடைத் தரகரை ஒழித்து, அவர்கள் பெறும் இலாபம் விவசாயியை அடையச் செய்கிறது. மேலும், கூட்டுறவு விற்பனைச்சங்கங்கள் விற்பனை செய்வதோடன்றி, முக்கிய தேவைகளான பொறுக்கு விதை, உரங்கள், கருவிகள், ஏனையவைகளையும் அங்கத்தினர்களுக்கு நியாய விலையில் அளிக்கிறது. எனவே, இப்பொழுது கிராமங்களில் விற்பனை முறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்கக் கூட்டுறவு முறை விற்பனையே சிறந்த வழியாகும்.

கூட்டுறவு விற்பனையை அபிவிருத்தி செய்வதற்கான வழிகள்

இப்பொழுதுள்ள கூட்டுறவு விவசாய மேம்பாட்டுச் சங்கம், நிதிச்சங்கம், விற்பனைச் சங்கம் ஆகியவைகளை ஒருங்கிணைத்து ஒரே சங்கமாக ஆக்குவது இன்றியமையாத தேவையாகும். இப்பொழுது ஒருங்கிணைந்த பல சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன

விவசாயப் பொருள்களை விற்பனைக்குமுன் பதப்படுத்தினால் பொருள்களை அதிக விலைக்கு அவர்கள் விற்க முடியும். விற்பனைச் சங்கங்கள் விவசாயப் பொருள்களை நேரடியாக நுகர்வோர்க்கு விற்பனை செய்தால், இடைத்தரகர்கள் பெறும் பெரும் இலாபத்தைக் குறைக்கலாம். அரசு நிதி அளிப்பதன் மூலமும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா கடன் அளிப்பதன் மூலமும் விவசாயப் பொருள்களை விஞ்ஞான முறையில் காக்கக் கிடங்கு வசதிகள் பெருக உதவ வேண்டும். இந்திய உணவுக் கார்ப்பரேஷன் மூலம், உணவுப் பொருள்கள் கொள்முதல் செய்யும் பொழுது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. போக்குவரத்து வசதிகள்

ஒரு நாட்டின் வளமை, விவசாயத் தொழில் வளர்ச்சியினுல் மட்டும் முழுமை யடைவதில்லை. விவசாயத் தொழில் வளர்ச்சிகளும், பெரிதும் நம்பியிருப்பது போக்குவரத்து வசதிகளையே ஆகும். போக்குவரத்து வசதிகளின் வளர்ச்சியேயாகும். கப்பல் போக்குவரத்து வசதியின் வளர்ச்சியின் காரணமாகவே நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் தீவிரமடைய முடியும். அவ்வாறு தீவிரமும் அடைந்துள்ளன. உதாரணமாக, இங்கிலாந்து நாடு தொழில் வளர்ச்சியில் முன்ஞேடியாக அமைந்ததற்குக் காரணம் அந்நாட்டின் போக்குவரத்து வசதியின் காரணமாக வெளிநாடுகளுடன் சுலபமாக வணிகம் செய்ய முடிந்தது. வெளி நாட்டு வணிகம் மூலமாகச்-சுலபமாக-கச்சாப் பொருள்களைப் பெறவும், செய்த பொருள்களைத் தூரதேசங்களில் விற்கவும் இயன்றது. பல நாடுகளைத் தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொணரவும் முடிந்தது. உள்நாட்டிலும், பொருள்களைக் கொண்டு செல்லும் வசதி பெருகியதன் காரணமாகவே, உள்நாட்டுச் சந்தையும் வளர்ச்சியுற்றது. சோவியத் ருஷ்ய நாடு, தன்னுடைய பொருளாதார வளர்ச்சியின் முதல் கட்டத்தைத் தாண்டுவதற்குப் பெரிதும் உதவியாசு, அந்நாட்டின் இரயில்வே வளர்ச்சி அமைந்தது. முதல் உலகப் போரின்போது, பொருள்களை விரைவாக இடம் நகர்த்துவதற்கு இரயில்வே உதவியது. அப்பொழுது ருஷ்ய இரயில்வே பாதையின் அளவு இங்கிலாந்தைவிட மூன்றுமடங்கு அதிகமாகும். பரந்த எல்லையைக் கொண்ட அந்நாட்டில், போக்குவரத்து வசதிகள் பெருகாதிருந்திருக்குமாயின், உள்நாட்டுச் சந்தை வெளிநாட்டுச் சந்தைகள் வளர்ச்சி தடைபட்டுப் பொருளாதாரமே சீர்குலைந் திருக்கும். ஜப்பான் நாடு இவ்வளவு தொழில் வளர்ச்சி அடைந்திருக்கின்றது. மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது என்ருல், அதற்குக் காரணம் அந்நாட்டின் போக்கு வரத்து வசதிகளே. இன்று மணிக்கு 300 மைல் வேகத்தில் செல்லக்கூடிய இரயில்களும் உண்டு. அவ்வளவிற்கு மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது என்று கூறலாம்.

போக்குவரத்து வளர்ச்சியினுல், சந்தை பரந்து வளர்ச்சியடைவதால், பெரிய அளவில் உற்பத்தியினைத் தொடங்கித் தொழிற் பகுப்பினை (Divison of Labour) மேற்கொள்ள முடியும். நாட்டின் பேரளவுத் தொழில்களுக்கான துணைப்பொருள்களை நாட்டின் பல பகுதிகளில் தனித்தனியே உற்பத்தி செய்து, இணைப்பை ஓரிடத்தில் செய்துகொள்ள இயலும். உற்பத்தி இடங்களுக்குத் தேவையான கச்சாப் பொருள்களைக் கொண்டு செல்ல இயலும். விவசாயத்தைப் பொறுத்தவரையில், நாட்டின் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற இரசாயன உரங்கள், விவசாய இயந்திரங்கள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவற்றை விளை நிலங்கள் அருகே கொண்டு வரவும், உற்பத்தியான பொருள்களைத் தொழிற் சாலைகள் நிறைந்த பல நகரங்களுக்கும் எடுத்துச் செல்லவும் போக்குவரத்து வசதிகள் உதவுகின்றன. கிராமங்கள், முற்காலங் களில் வளர்ச்சியின்றி மிகவும் பிற்போக்கான நிலையில் அமைந் திருந்ததன் காரணம், மற்றக் கிராமங்களுடனே, நகரங்களுடனே போக்குவரத்துத் தொடர்பின்மையே, இன்றும் சில கிராமங்கள் நம் நாட்டிலும் தனித்துப் பிற பகுதிகளுடன் தொடர்பு கொள்ள வசதியின்றி அமைந்துள்ளன. இந்நிலை மாறப் போக்குவரத்து வசதிகள் பெருக வேண்டும். நம் நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணி, பெரும் அளவில் வெளிநாடுகளில் இருந்து பொருள்களைக் கொண்டு வருவதிலும் அந்நியநாட்டுக் கப்பல் களுக்குக் கட்டணம் அளிப்பதன் மூலமும் வீணுகிக் கொண்டிருக் கின்றது. எனவே, போதுமான அளவிற்குக் கப்பல்களைக் கட்டி நம் அந்நிய செலாவணியைச் சேமிக்க முடியும். நமது நாடு, எப்பொழுதும், அந்நியர் தாக்குதலை எதிர்நோக்கிப் படை பலங் களைப் பெருக்கிக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது இப்படை கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகரவும் படை களுக்குத் தேவையான பொருள்களை அளிக்கவும், போக்குவரத்து வளர்ச்சி மிகவும் அவசியமாக உள்ளது.

(1) இரயில்வே முறை

ஆங்கிலேயர்களின் ஆட்சியினுல் நம் நாடு அடைந்த முக்கிய பலன்களுள் ஒன்று இரயில்வே முறைப்போக்குவரத்து வளர்ச்சி. நம்மை ஆண்ட ஆங்கிலேயர்களின் நோக்கம் எவ்வாறிருப்பினும், போக்குவரத்து முறையை ஊக்குவித்திருப்பவர்கள் அவர்களே. இந்திய ரயில்வேயின் வரலாறு மிகவும் பழமையானதொன்றாகும். 1853ஆம் ஆண்டு, டல்ஹெளசி பிரபு, தம்முடைய அறிக்கை ஒன்றில், எல்லாத் தலை நகரங்களையும் மாகாணப்பகுதிகளையும்

இணைக்கத்தக்க இரயில் பாதைகள் போடவேண்டும் என்றும், தலை நகரங்களையும் துறைமுகங்களையும் இணைத்து அதன்மூலம் வர்த்தகத்தைச் செம்மைப் படுத்தலாம் என்றும் கண்டிருந்தார். முதன் முதலாகப் பம்பாய்—தாணு இடையே 22 மைல்களுக்கு இரயில்வே பாதை அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டே கல்கத்தாவில் புதிய பாதை ஒன்று அமைக்கப்பட்டது. இந்தியத் தொழில் வளர்ச்சிக்கேற்ப இரயில் பாதை வளர்ச்சி அமைந்தது சிறப்பான தொன்றாகும். 1853லிருந்து 1900 ஆம் ஆண்டுவரை அமைக்கப்பட்ட இரயில்வே பாதையின் அளவு சுமார் 25000 மைல்களாகும். 1905ஆம் ஆண்டு வரை மராமத்து இலாக்காவின் கீழ்க் கவனிக்கப்பட்டு வந்த ரெயில்வேக்கள், தனியே ரெயில்வே போர்டின் கண்காணிப்பின் கீழ் வந்தன. 1900ஆம் ஆண்டிலிருந்து இரயில்வே நிறுவனத்திற்கு இலாபம் நிறையக் கிடைத்தது. 1913-14-ல் இரயில்வே மைல்கள் 34,656 ஆக அதிகரிக்கவும் செய்தது. ஆயினும், முதல் உலகப் போரின் காரணத்தாலும், அதன்பின் விளைவாக இரயில்வேக்கள்மீது பெரும் சுமையான போக்கு வரத்துக்கள் நிகழ்ந்ததாலும் இரயில்வேக்கள் வெகு விரைவிலேயே பழுதடைந்துவிட்டன. இரயில்வே நிறுவனத்திற்குத் தேவையான கருவிகள் கிடைக்காமையால் புதிய இரயில்வேக்களை அமைக்கவும் முடியவில்லை. பழைய இரயில்வேக்களைப் பழுதின்றி வைத்துக்கொள்ளவும் இயலவில்லை. இரண்டாம் உலகப்போரின்போது நிலைமை இன்னும் மோசமடைந்தது. இரயில்வேக்களில் இலாபம் கிட்டவில்லை. போர்க்காலத்தின் போது இந்திய இரயில்வேக்கள், என்சின்கள் வாகன்கள் இவைகளைப் போக்கேந்திரங்களாகிய மத்திய கிழக்குப் பகுதிக்கு அனுப்பும் படி தேச நாடுகள் கோரின. ஏறத்தாழ 26 கிளை இருப்புப் பாதைகளை அடியோடு எடுத்து அந்த இருப்புப் பாதைகளை, இந்திய இரயில்வேக்கள் அனுப்பிவைத்தன. இவற்றின் காரணமாக இந்திய ரெயில்வேக்கள் சீர்குலைந்து போனதுடன், பழுது பார்ப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் அளவு கடந்த செலவு ஏற்பட்டது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்ததும் நாடு துண்டிக்கப்பட்டது. இதன் விளைவாக எதிர்பாராத இடர்ப்பாடுகள் பல ஏற்பட்டன. ஆயினும், தேவையான பொருள்களையும் பண்டங்களையும் நாடு முழுவதும் அனுப்புவதற்கும், ரயில்வேக்கள் பயன்பட்டன என்பதில் ஐயமில்லை. நாட்டுப் பிரிவினையின் காரணமாக இரயில்வே பாதைகளின் நீளமும் குறைந்தது. 1950ஆம் ஆண்டு, சுதந்திர இந்தியாவில் அமைந்திருந்த இரயில்வே பாதையின் நீளம் சுமார் 34000 மைல்கள்தான். நாட்டுப் பிரிவினையின் பின்னர், தொழில் வளர்ச்சி அதிகரித்தது. நாட்டின் மக்கள் ஏராளமாகப்

பிரயாணம் செய்யத் தொடங்கினர். சரக்கும் போக்குவரத்தும் அதிகரிக்க ஆரம்பித்தது. இவ்வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க, இரயில் வேக்களிலும் பெரிய ஆக்க வேலைகளும், புதிய பாதை அமைப்பு களும் தொடங்கப்பட்டன. தற்போது இந்திய ரெயில்வேக்கள் இந்திய அரசின் சுமார் ரூ. 4000 கோடி முதலீட்டுடன் பெரிய பொதுத்துறை நிறுவனமாக அமைந்துள்ளது.

மிகவும் மோசமான நிலையில் இருந்த இந்திய இரயில்வேக்கள் தற்பொழுது பிற நாடுகளுடன் ஒப்பிடும் வகையில் வளர்ந்துள்ளது போற்றத்தகுந்ததாகும். இரயில்வேக்கள் முக்கியமான போக்கு வரத்துச் சாதனமாக இருப்பதனால் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியினைக் கருதி இந்திய அரசாங்கமும் ஐந்தாண்டுத் திட்டங் களில் இரயில்வே வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்து வருகின்றது. திட்ட காலத்தில் இரயில்வேக்களின் வளர்ச்சியினைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 51

இரயில்வேக்களின் மீதான செலவும், திட்டங்களில் இரயில்வேயின் பங்கும்

ரூபாய் கோடிகளில்

	முதல் திட்டம்	இரண்டாவது திட்டம்	மூன்றாவது திட்டம்	நான்காவது திட்டம்
1. இரயில்வேக்களின் மீது திட்ட முதலீடு	423	1044	1686	1526
2. திட்டங்களில் இரயில்வேயின் பங்கு	280	465	541	525

SOURCE: India 1970, Page 397, and IVth Plan (1970)

பொதுத்துறைக்கான மொத்த முதலீட்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்பொழுது இரயில்வேக்களின் மீதான முதலீடு 21.6 % ஆகும். இது இரண்டாவது திட்டத்தின் பொழுது 22.3% ஆகவும், மூன்றாவது திட்டத்தின் பொழுது 19.5% ஆகவும் அமைந்தது. இந்திய இரயில்வேக்களின் இன்றைய நிலை அடுத் துள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 52

இன்றைய இந்திய இரயில்வே

	அலகு	
1. தினசரி வருமானம்	ரூபாய் கோடிகளில்	2.5
2. முதலீடு	ரூபாய் கோடிகளில்	3500
3. சம்பளப்பட்டியலில் உள்ளவர்கள்	இலட்சம் மனிதர்கள்	13
4. ஆண்டுதோறும் பொது வருவாய்க்கு அளிக்கும் பங்கு	ரூபாய் கோடிகளில்	150
5. பிரயாணிகள் போக்கு வரத்து	இலட்சம் மக்கள்	62
6. சரக்குப் போக்குவரத்து தினந்தோறும்	1000 டன்களில்	550
7. நீராவி இஞ்சின்கள்	ஆயிரம்	12
8. கோச்சுகள்	ஆயிரம்	33
9. வேகன்கள்	ஆயிரம்	484

SOURCE : Commerce, Annual Number, 1969.

இவற்றிலிருந்து இந்திய இரயில்வேக்களின் வளர்ச்சி நன்கு விளங்கும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இரயில்வே வளர்ச்சித் திட்டங்களுக்காக அரசாங்கம் ரூபாய் 100 கோடிகளை ஒதுக்கியுள்ளது. அத்துடன் இரயில்வேக்கள் தங்களுடைய சொந்த (நிதியிலிருந்து ரூ. 525 கோடிகளைச் செலவிடும். இத்திட்டங்கள் நிறைவேறுமானால் இந்தியப் போக்குவரத்து) வசதிகளில் இரயில் வேக்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமையும். இப்பொழுது கூட, இரயில்வேக்கள் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது நல்ல வளர்ச்சியினை அடைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

இரயில் பாதைகளை அமைப்பதனாலும், வளர்ச்சியடையச் செய்வதனாலும் சமூகம் பல நன்மைகளைப் பெற்றுள்ளது; பெற்று வருகின்றது. முதலாவதாக இந்திய இரயில்வேக்கள் தொழிற் சாலைகள் பல அமைக்கப் பெரிதும் உதவி உள்ளன. பம்பாய்ப் பருத்தி நெசவுத் தொழில், வங்காளத்துச் சணல் தொழில், பீஹாரில் நிலக்கரித் தொழில், அஸ்ஸாம் வங்காளத்தின்

அட்டவணை 53

பல நாடுகளில் இரயில்வே போக்குவரத்து 1966 (மில்லியன்களில்)

நாடுகள்	பிரயாணிகள் போக்கு வரத்து (கிலோமீட்டர்களில்)	சரக்குப் போக்குவரத்து நிகர டன் (கிலோமீட்டர்களில்)
ஜப்பான்	2,58,277	54,988
சோவியத் ரஷ்யா	2,19,404	20,16,031
இந்தியா	1,02,564	1,00,230
பிரான்சு	38,400	64,000
மேற்கு ஜெர்மனி	36,483	56,681
இங்கிலாந்து	29,697	24,184
அமெரிக்கா	27,620	16,90,162

SOURCE: United Nations, Statistical Year Book 1968.

தேயிலைத் தோட்டத் தொழில் ஆகிய இவையாவும் வளர்ச்சியடைய இரயில்வேக்கள் பெரிதும் துணைபுரிந்துள்ளன. இரண்டாவதாக, இந்திய இரயில்வேக்கள் விவசாயத்திற்கு உதவியுள்ளன. இரயில் பாதைகள் வருவதற்கு முன்னால் இந்திய விவசாயிகள் உள்ளூர்ச் சந்தைகளையே நம்பியிருந்தனர். தற்பொழுது சந்தை பெருகவும் எல்லா மாநிலங்களிலும் ஒரே அளவான விலையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் பற்றுக்குறைப் பகுதிகளுக்கு, மிகுதியுள்ள மாகாணங்களிலிருந்து ஏற்றுமதி செய்யவும் இரயில்வேக்கள் பெரிதும் உதவியுள்ளன. மூன்றாவதாக, தனித்து நின்ற கிராமங்களையும் பிராந்தியங்களையும் மற்றும் சில சமூகங்களையும், பிற பகுதிகளுடன் இணைக்கவும், 'இந்திய இரயில்வேக்கள்' உதவியுள்ளன. நாட்டை ஒருமைப்படுத்த இரயில்வேக்கள் பெரிதும் உதவியுள்ளன என்றால், அது மிகையாகாது. நான்காவதாக, இரயில்வேக்கள் வாணிப வளர்ச்சியினைத் தூண்டியுள்ளன. இரயில்வே முறை இறக்குமதி ஏற்றுமதிகளுக்குப் பெரிதும் துணையாய் இருந்தது. முடிவாக, அரசியல் மற்றும் நிர்வாக நலன்களை இரயில்வேக்கள் நாடு முழுவதும் அளித்துள்ளது. பெரிய நிலப் பரப்புடைய நம் நாட்டினை நிர்வகிப்பதற்கு இரயில்வேக்களின் பணி, ஒத்துழைப்புக் குறிப்பிடத் தக்கதாகும்.

இந்திய இரயில்வேக்கள் வளர்ச்சியடைய இன்னும் பல வாய்ப்புகள் உள்ளன. ஆசியாவிலேயே மிகப்பெரிய இரயில்வே அமைப்பினைக் கொண்ட நம்நாடு வளர்ச்சியுற்ற நாடுகளுக்குச்

சமமாக வளர்வதற்கு இன்னும் பல வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு இணையாகத் தொழில் நுணுக்க வளர்ச்சியடைய வாய்ப்புகள் பல உள்ளன. பாதுகாப்புத் திறமை இவைகள் தடைப்படா வண்ணம், இரயில்களின் வேகத்தினை அதிகரிக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். அண்மையில் சில பகுதிகளில் இரயில்வேக்களில் வேகம் தற்போதைய உச்ச வேகமான மணிக்கு 80 கிலோ மீட்டர்கள் என்பது 120 கிலோ மீட்டர்களாக உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற வேண்டுமென்றால், இரட்டை இரயில் பாதைகள் அமைத்தல் வேண்டும். மேலும், சக்தி வாய்ந்த எஞ்சின்களும் திறமையான சிக்னல் (Signal) முறையும் கொண்டு வரப்படுதல் வேண்டும். இதற்கு முயற்சிகள் எடுத்துவரப்படுகின்றன. விபத்துகளைக் குறைப்பதும், காலதாமதமின்றி இரயில்கள் ஓடச்செய்வதும் உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இவைகள் நிறைவேற்றப்படுமானால், இந்திய இரயில்வேக்கள் மிகவும் சிறப்பாக அமையும். சாலைப் போக்குவரத்து இரயில்வேக்களுக்குக் கடுமையான போட்டியினை அளிக்கின்றது. சிறந்த நிர்வாகமும் நிறைந்த வசதிகளும் அமையாவிட்டால், இரயில்வேக்கள் இப்போட்டியினைச் சமாளிக்க இயலாது. சரக்குப் போக்குவரத்தினைப் பொறுத்தவரையில் இரயில்வேக்களின் பணிவு அவ்வளவு திறமையாக இல்லை. பொது வருவாய்க்கு இரயில்வே அளிக்கும் பங்கு 1950–51-ல் ரூ. 33 கோடிகளாக இருந்தது. 1971–72 பட்ஜட் ஆண்டில் ரூ. 174 கோடிகளாக உயர்ந்துள்ளது.

ஆயினும், மொத்தமுதலீட்டைப் பார்க்கையில் இவ்வருமானம் மிகவும் குறைவே. நட்டத்தில் உள்ள இரயில்வே பாதைகளை எடுத்துவிடுவதன் மூலம் நட்டத்தைப் போக்கி இவ்வருவாயை உயர்த்தமுடியும். சரக்குப் போக்குவரத்தில் கட்டண விகிதங்களை மாற்றியமைப்பதன் மூலமும் வருமானத்தைப் பெருக்க வாய்ப்புண்டு. டிக்கட் இல்லாப் பிரயாணத்தைத் தடுப்பதன் மூலமும் சீசன் டிக்கட்டுகள் இரயில்வே பாஸ்கள், சாமான்கள் திருடுபோதல் முதலியனவற்றைக் குறைப்பதன் மூலமும் இரயில்வேக்களின் வருமானத்தை நிச்சயமாகப் பெருக்க முடியும். ஆயினும், இத்துணிவான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் அஞ்சுகிறது. இரயில்வேக்களை வணிக ரீதியான நிறுவனங்கள் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். வணிக ரீதியில் நடத்தினால்தான் பொது மக்களும் மகிழ்வர். இரயில்வே நிறுவனமும் வளர்ச்சியடைய இயலும். இப்பெரிய ஸ்தாபனத்தில் உள்ள லட்சக் கணக்கான எல்லாச் சிப்பந்திகளும் முழுத்திறமையுடன் பணிபுரிவதற்கு முன் வரவேண்டும்.

(2) சாலைப் போக்குவரத்து முறை

இரயில்வே போக்குவரத்து முறையோடு ஒப்பிடுகையில், சாலைப் போக்குவரத்து மிகவும் அனுகூலமானதே. முதலாவதாக, இரயில்வே அமைப்பிற்குப் பெரும் மூலதனம் தேவைப்படுகின்றது. அந்நிய செலாவணியும், அந்நிய நாட்டுப் பொருள்களும் தேவைப் படுகின்றன. சாலைப் போக்குவரத்திலோ, மூலதனச் செலவு மிகவும் குறைவு. அந்நிய செலாவணியும் தேவையில்லை. சாலைப் போக்குவரத்து இரயில்வேக்களைக் காட்டிலும் விரைவான பயணத்தையும் குறைந்த தூரப் பயணத்தையும் அளிப்பதால், கால மிச்சமும், பண மிச்சமும் கிட்டுகின்றன. மக்கள் வசிக்கும் இடங்களின் அருகே சாலைகள் செல்வதால் பல நன்மைகள் உள்ளன. கிராமங்கள் நிறைந்த இந்தியா முழுமைக்கும், இரயில்வேக்களை அமைப்பதும் சுலபமன்று. இரயில்வேயும், 'சாலைப் போக்கு வரத்தும் எதிரிடையான போட்டியுடையது' என்று கூறுவதைக் காட்டிலும், அவைகள் ஒன்றுக்கொன்று துணையானவை என்பதே சரியாகும். எவ்வாறெனில், சில பகுதிகளை இரயில்வேயின் துணை கொண்டு கடக்க இயலாது. அவ்விடங்களில் சாலைப் போக்கு வரத்து மிகவும் உதவுகின்றது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் அன்றும் இன்றும் சாலைப்போக்குவரத்தே மிகவும் உதவியா உள்ளது. நாட்டின் பாதுகாப்பிற்கும் சாலைப்போக்குவரத்து முறையின் வளர்ச்சி மிகவும் அவசியமான தொன்றும்.

பிரிட்டிஷார் காலத்தில் 'ரெயில்வே வளர்ச்சியைத் தவிர வேறெந்த வகையான போக்குவரத்து முறை வளர்ச்சியும் கவனிக்கப்படவில்லை' என்று கூறலாம். பாதைகளும் நெடுஞ்சாலை களும் அமைத்தவில் அவர்கள் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. சிலர் ஓரளவு சாலைப்போக்குவரத்து முறை வளர்ச்சிக்கு உதவினர். பெண்டிங் பிரபு நெடுஞ்சாலை அமைப்பதில் ஈடுபட்டார். அவர் நெடுஞ்சாலை மூலம் வட இந்திய நகர்களான கல்கத்தா, பம்பாய், டெல்லி, பெஷாவர் ஆகியவைகளை இணைக்கப்பாடுபட்டார். டல்ஹௌசி பிரபு மிகவும் திட்டமான நெடுஞ்சாலைக் கொள் கையை அமைக்க எண்ணி மத்திய பொதுப்பணி இலாக்கா (Central Public Works Department) ஒன்றை 1855-ல் நிறுவினர். நாளடைவில், இரயில்வே அமைப்பு வேலைகள் தொடங்கியவுடன், அவைகளை இணைப்பதற்குப் பாதைகள் போடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அரசு ரெயில்வேக்களை அதிகம் ஆதரித் தமையாலும் நகராட்சி மன்றங்களின் நிதி வசதியின்மையாலும் சாலை போடும் வேலை தடைபட்டது. முன்னாள் இந்திய அரசினரின் சாலைகள் கட்டுப்பாடு அதிகாரியாக இருந்த சர்கென்னத் மிட்சல்

(Sir Kenneth Mitchell) வைத்த குறிக்கோளாகிய 1000க்குக் குறையாது மக்கள் தொகையுள்ள கிராமம் ஒவ்வொன்றும் நெடுஞ்சாலை ஒவ்வொன்றுக்கும் அரைமைல் தூரத்தில் அமைய வேண்டும் என்ற திட்டமும் இலட்சியமும், பிரிட்டிஷார் காலத்தில் நிறைவேற்றப்படவில்லை.

1948ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடியச் சாலைகளின் மொத்தநீளம் 2,48,914 மைல்களாகும். முதல் ஐந்தாண்டுத்திட்ட ஆரம்பத்தில் கப்பி போடப்பட்ட சாலைகள் 97,000 மைல் களாகவும், சாதாரண சாலைகள் 1,51,000 மைல்களாகவும் இருந்தன. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சாலைகள் வளர்ச்சிக்கென ரூபாய் 135 கோடிகள் ஒதுக்கப்பட்டு அவையாவும் செலவிடப்பட்டன. புதியதாக 24,000 மைல்கள் கப்பி போடப் பட்ட சாலைகளும், 41,000 மைல்கள் சாதாரண சாலைகளும் அமைக்கப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தின் போது, சாலை வளர்ச்சிக்காக ரூபாய் 228 கோடிகள் ஒதுக்கப் பட்டன. இதன் காரணமாக இரண்டாவது திட்ட முடிவில் சமமாக்கப்பட்ட சாலைகள், சமமாக்கப்படாத சாலைகள் யாவும் சேர்ந்து மொத்தச்சாலை மைல்கள் 3,94,000 ஆக நீண்டது. திட்டமிட்டதற்கு மேலாகவே வளர்ச்சி ஏற்பட்டது என்று கூறலாம். 1959ஆம் ஆண்டு மாநிலங்களின் தலைமைப் பொறி யாளர்கள் மத்திய அரசு பிரதிநிதிகள் ஆகியோர் ஐதராபாத் திட்டத்தினை மேற்கொண்டனர். 20 ஆண்டுகளுக்குத் திட்டமிடப் பட்டது. இத்திட்டத்தின்படி, திட்ட முடிவில், சமமாக்கப்பட்ட சாலைகளின் நீளம் 2,52,000 மைல்களாகவும் சமம் செய்யப் படாத சாலைகளின் நீளம் 4,05,000 மைல்களாகவும் அமையும். ஒவ்வொரு கிராமமும், 4 மைல் தூரத்திற்குள் நல்ல கம்பிச்சாலை யுடனும் 1.5 மைல் தூரத்திற்குள் ஏதாவது ஒரு சாலையுடனும் இணைக்கப்படுதல் வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தினை நிறைவேற்றும் ஒரு பகுதியாக மூன்றாம் திட்டத்தில் ரூபாய் 324 கோடி சாலை வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டது. கிராமப் புறங்களில் சாலைகள் அமைக்க மிகவும் கவனம் செலுத்தப்பட்டது. மூன்றாவது திட்டக் காலத்தில் சீனாவின் படையெடுப்பின் காரணமாக, சாலை வளர்ச்சிக்காக மேலும் ரூபாய் 125 கோடிகள் ஒதுக்கப்பட்டன. 1966–69ல் மூன்று வருடாந்திரத் திட்டங்களில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 308 கோடிகளாகும். நான்காவது திட்டத்தில் சாலைகள் அமைக்க ரூபாய் 880 கோடிகள் ஒதுக்கப்பட்டன.

அட்டவணை 54

சாலை அமைப்பு வளர்ச்சி (000 கிலோ மீட்டர்களில்)

துறை	1951	1956	1961	1966	1969
தளமிடப்பட்ட சாலைகள் (Surfaced)	157	183	231	293	325
தளமிடப்படாத சாலைகள் (Unsurfaced)	243	315	448	552	647
மொத்தம்	400	498	679	835	972

SOURCE : India 1970.

இதர நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிட்டு நோக்குகையில், இந்திய சாலைகள் மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளன என்பதைக் அட்டவணை 52-லிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம். முதல் பகுப்பு நாட்டின் பெயரினையும், இரண்டாம் பகுப்பு ஒவ்வொரு நாட்டிலும் 100 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும் எவ்வளவு தூரம் (கிலோ மீட்டர்களில்) சாலைகள் போடப்பட்டுள்ளன என்பதைக் காட்டியுள்ளோம்.

சாலை வளர்ச்சியின் காரணமாக, 1939ஆம் ஆண்டிலிருந்து மோட்டார் வாகன போக்குவரத்து நல்ல முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாகப் பண்டங்களை ஏற்றிச் செல்வதில் மோட்டார் வாகனங்கள் முன்னிலையில் உள்ளன. 1948–49ஆம் ஆண்டில் சரக்குகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை 73,000-ஆக இருந்தது. 1960–61-ல் இவ்வெண்ணிக்கை 1,67,600 ஆகவும் 1965-66–ல் 265600 ஆகவும் உயர்ந்துள்ளது. பிரயாணிகள் வண்டிகளைப் பொறுத்தவரையில் இத்தகைய வளர்ச்சி 1960ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்கள் தயாரிப்பு மிகவும் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. போக்குவரத்து வளர்ச்சியின் வேகத்தைக் கருத்தில் கொண்டு நான்காம் திட்டக் காலத்திற்குள் 4,70,000 சரக்கு வாகனங்கள் உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டம் இடப்பட்டுள்ளது. பஸ்களின் எண்ணிக்கை 85,000 இருந்து 1,15,000 ஆக உயர்த்தப்படும். பிற வணிக வாகனங்கள்

உற்பத்தி 1968–69-ல் இருந்து 35,000 எண்ணிக்கையிலிருந்து திட்டக்கால முடிவில் 85,000 வாகனங்களாக உயர்த்தப்படும்.

அட்டவணை 55

குறிப்பிட்ட சில நாடுகளில் சாலை வளர்ச்சி

நாடு	சாலை நீளம் (கிலோ மீட்டர்) ஒவ்வொரு 100 ச. கி. மீட்டர் பரப்பிற்கும்
பெல்ஜியம்	300.4
ஜப்பான்	267.6
பிரான்சு	261.4
மேற்கு ஜெர்மனி	164.4
இங்கிலாந்து	142.5
அமெரிக்கா	63.6
சிலோன்	56.4
இந்தியா	27.1

SOURCE: Commerce Annual Number - 1969.

சாலைப்போக்குவரத்து வளர்ச்சிக்குப் பல தடைகள் உள்ளன. சாலைப் போக்குவரத்தும், இரயில்வே போக்குவரத்தும் போட்டி மனப்பான்மையுடனேயே நடந்து வருகின்றன. அட்டவணை 56 லிருந்துஒரு டன் சரக்கினை ஏற்றிச் செல்ல இரண்டு முறைகளிலும் ஆகும் செலவினைக் காட்டுகிறது.

இரயில் போக்குவரத்தைக் காட்டிலும் சாலைப்போக்குவரத்து முறை உபயோகம் சிக்கனமாகவே உள்ளது. ஆயினும், இச் சிக்கனத்தைப் பயன்படுத்திக் கொண்டு சாலைப்போக்குவரத்து முறையினை வளர்ப்பதற்குப் போதுமான வணிக ஊர்திகள் (LoRies) இந்தியாவில் இல்லை. மேலும், இப்போக்குவரத்து முறையில் போட்டி மிகவும் கடுமையாக உள்ளது. சாலைப்போக்குவரத்தை நடத்துவோர்களான 48,000 பேர்களில் 46,000 பேர்கள் 5 அல்லது அதற்கும் குறைவானவாகனங்களையே வைத்திருக்கின்றனர்.

இதன் காரணமாக நிர்வாகத் திறமை குறைந்து விடுகிறது. சாலைப்போக்குவரத்தின் மற்றொரு குறை மிகவும் அதிகமான வரிச்சுமையும் மோட்டார் வாகனச் சட்டங்களின்கீழ்ப் பின் பற்றப்படும் தேவையற்ற கட்டுப்பாடும் ஆகும். இப்போக்கு வரத்து முறை சுங்க வரியினாலும், அக்ட்ராய் வரியினாலும் மிகவும்

அட்டவணை 56

ஒரு டன் சரக்கு ஏற்றிச்செல்ல சாலை-ரயில் போக்குவரத்தில் ஆகும் செலவு - 1968-69 (ரூபாய்களில்)

தூரம் (கிலோ மீட்டர்களில்)	இரயில்		சாலை
	நீராவி	டீசல்	
50	21.35	20.72	10.35
100	23.67	22.35	15.75
200	35.28	32.65	26.50
300	48.71	44.76	32.19
400	56.27	51.11	40.39
500	69.53	62.95	49.23
800	90.77	78.59	70.73
1000	102.86	92.85	87.58

SOURCE : Commerce Annual Number 1969

பாதிக்கப்படுகிறது. திரு. மசானியின் தலைமையில் அமைக்கப் பட்ட சாலைப் போக்குவரத்து மறு நிர்மானக்குழு (The Road Transport Reorganisation Committee) மோட்டார் போக்கு வரத்தின் மேலுள்ள கடுமையான வரிச்சுமையைக் குறைப் பதற்குப் பல வழிகளைக் கூறியுள்ளது. இத்துடன் தேசியமய மாக்கப்படும் என்ற பயத்தின் காரணமாகவும் மோட்டார்ப் போக்குவரத்தின் வளர்ச்சித் தடைப்பட்டுள்ளது.

ஆயினும், பல்வேறு இன்னல்களிடையே சாலைப்போக்கு வரத்துத் துரித வளர்ச்சியை அடைந்து வருகிறது. வளர்ச்சிக் கான வாய்ப்புகள் வளர்ந்து கொண்டே வருகின்றன. பல நபர்

களுக்கு வேலையளிக்கும் இப்போக்குவரத்துத்துறை மற்றும் சாலை வளர்ச்சி, அரசாங்கத்திற்கு எப்பொழுதுமே உதவியாகத்தான் இருக்கும். பொருளாதார மந்த காலங்களிலும், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கும் போதும் அரசாங்கம் முதலீடு செய்து மக்களின் வாங்கும் சக்தியினை உயர்த்த அரிய வாய்ப்பினை இத்துறை அளிக்கின்றது. கிராமங்கள் நிறைந்த நம் இந்தியாவில் சாலைப்போக்குவரத்துத் துறையைத்தான் சிறப்பான போக்குவரத்து முறையாக அமைக்க முடியும். எனவே, சாலைப்போக்குவரத்தின் குறைகளை நீக்கி அவைகளின் வளர்ச்சியைத் தூண்டுவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

(3) கப்பல் போக்குவரத்து

இந்தியக் கப்பல் போக்குவரத்து இன்னும் தன்னுடைய குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. இதற்குக் காரணம் இதனுடைய வளர்ச்சி யெல்லாம் சுதந்திரத்திற்குப் பின்னால் ஏற்பட்டதே. சுதந்திரத்திற்கு முன்னால் இந்தியக் கப்பல் கம்பெனிகள் அரசாங்கத்தின் ஆதரவு இன்மையாலும், பிற நாட்டுக் கப்பல் கம்பெனிகளின் கடும் போட்டியினாலும் வளர்ச்சி யடைய முடியவில்லை. இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் மொத்தம் 42 கப்பல்கள், 1,00,000 டன்களுக்கும் குறைவான சுமை தாங்கும் சக்தியினையே பெற்றிருந்தன. இந்தியாவின் வெளி வர்த்தகத்தில் 2 சதவிகிதமே இந்தியக் கப்பல்களால் ஏற்றிச் செல்லப்பட்டன.

சுதந்திர இந்தியாவின் வெளி வர்த்தக வளர்ச்சியின் காரணமாக இந்தியக் கப்பல் துறை பெரிதும் வளர்ச்சியடைந்தது. 1947ஆம் ஆண்டு இந்தியக் கப்பல்களின் சுமைதாங்கும் சக்தி 1.92 லட்சம் டன்கள்தான். வர்த்தகமும் அண்மை நாடுகளான பர்மா, சிலோன் ஆகியவற்றுடன்தான் நடைபெற்றது. இன்றோ சுமைதாங்கும் சக்தி 23,00,000 டன்களாக உயர்ந்துள்ளது. உலகின் வணிகக் கப்பல் படை வரிசையில் 17-வது இடத்தை எட்டியுள்ளது. இந்தியாவிலிருந்து உலகின் எல்லாப் பாகங்களுக்கும் முறையான கப்பல் வசதிகள் உள்ளன. இந்தியக் கப்பல் போக்குவரத்து வளர்ச்சியினை மேல் வரும் அட்டவணையில் காணலாம்.

'இவ்வளர்ச்சி போதுமான அளவில் உள்ளது' என்று கூறஇயலாது. இதற்குக் காரணம் இந்தியக் கப்பல் துறை வளர்ச்சித்

துறைமுக வசதி, கலங்கரை விளக்கங்கள் வசதி ஆகியவற்றின் வளர்ச்சியினையும் பொறுத்துள்ளது. முதல்-இரண்டாவது திட்டங்களின் பொழுது நாட்டின் முக்கியமான துறைமுகங்களைப் பழுது பார்க்கவும், நவீனமயமாக்கவும் ரூ. 75 கோடிகளுக்குத் திட்டமிடப்பட்டது. பளுவான கப்பல்கள் துறைமுகத்துள் நுழையச் செய்யவும் சரக்குகளை அதிக அளவில் விரைவில் கப்பலில் ஏற்றி முடிப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டன. மூன்றாவது திட்டத்தின் பொழுது ரூ. 55 கோடிகள் ஒதுக்கப்பட்டன. நான்காவது திட்டம் கப்பல்களை வாங்குவதற்கு மட்டும் ரூ 135 கோடிகளை ஒதுக்கியுள்ளது. நான்காம் திட்டமுடிவில் பதிவு செய்யப்பெற்ற சுமைதாங்கும் சக்தி 3.5 மில்லியன் ஜி. ஆர். டி (G. R. T.) டன்களாக அமையும்.

அட்டவணை 57

சுதந்திரத்திற்குப்பின் இந்தியக் கப்பல் துறையின் வளர்ச்சி

காலம்	கப்பல்களின் எண்ணிக்கை	மொத்த சுமை தாங்கும் சக்தி டன்கள் (லட்சம் டனகளில்)
15.8.1947-ல்	59	1.62
முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில்	94	3.72
முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில்	126	4.80
இரண்டாம் திட்ட முடிவில்	172	8.58
மூன்றும் திட்ட முடிவில்	221	15.40
1-10-1869-ல்	257	22.84

SOURCE : Commercen Anual Number 1969

துறைமுக வளர்ச்சியைப் பொறுத்த வரையில் மூன்றாவது திட்டம் முக்கியமான பணிகள் பலவற்றை மேற்கொண்டது. கல்கத்தாத் துறைமுகத்திற்குத் துணைத்துறைமுகமாக ஹால்டியா துறைமுகம் கட்டப்பட்டது. கல்கத்தாத் துறைமுகத்தைக் காக்க வேண்டிக் கங்கை நதியில் பராக்கா என்னுமிடத்தில் நதியின் ஓட்டத்தைத் தடை செய்யும் சுவர் ஒன்று எழுப்பப் பட்டுள்ளது. எல்லாப் பருவக்காலங்களிலும் துறைமுக வேலை தடைபடா வண்ணம், புதிதாகத் தூத்துக்குடி, மங்களூர், பரதீப் ஆகிய துறைமுகங்கள் நவீன மாக்கப்பட்டுள்ளது. பம்பாய்த் துறை

முகத்தைத் திருத்தியமைக்கவும், நவீன மயமாக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. சென்னைத் துறைமுகமும் ஆண்டுதோறும் வளர்ச்சியடைந்து வருகிறது. இத்துறைமுக வேலைகளில் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாகச் சீரமைப்பு வேலைகள் விரைந்து முடிப்பதற்கு இயலவில்லை. துறைமுக அதிகாரிகளுக்கு அதிகாரச் சுதந்திரம் அளிப்பதன் மூலம் இச்சிக்கல்களைப் போக்க இயலும். துறைமுகத் தொழிலாளர்களும் ஒத்துழைப்பை அளிக்க முன் வருதல் வேண்டும். கப்பல்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும் பணியினைச் செய்யும் தொழிலாளர்கள் அடிக்கடி வேலை நிறுத்தங்கள் செய்வதனால், துறைமுக வேலைகள் பெரிதும் தடைபடுகின்றன. இவ்வேலைகளை இயந்திர மயமாக்குவதால் மட்டும், இச்சிக்கலை தீர்த்து விட இயலாது. இயந்திர மயமாக்குதலை நமது வேலையாட்கள் எப்பொழுதுமே எதிர்த்து வந்துள்ளனர். பெரும் அளவில் இயந்திர மயமாக்குதலை மேற்கொண்டால், தொழிலாளர் அமைதியின்மை ஏற்பட்டுத் தொழில் வளர்ச்சி, வணிகம் ஆகியன பாதிக்கப்படும்.

வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்துடன் ஒப்பிடும்போது நமது சக்தி மிகவும் குறைவாக உள்ளது. இதனைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 58

உலகக் கப்பல் போக்குவரத்தில் இந்தியாவின் நிலை 1969ஆம் ஆண்டு மொத்த நீராவிக் கப்பல்களும் மோட்டார்க் கப்பல்களும்

நாடு	எண்ணிக்கை	மொத்த டன்கள்	உலகச் சுமை தாங்கும் சக்தியில் பங்கு சதவிகிதம்.
1. லைபிரியா	1731	29,215	13.8
2. ஜப்பான்	7665	23,987	11.3
3. இங்கிலாந்து	3858	23,844	11.3
4. அமெரிக்கா	3146	19,550	9.2
5. ரஷ்யா	5622	13,705	6.5
6. மேற்கு ஜெர்மனி	2768	7,027	3.3
7. இந்தியா	397	2,238	1.1

SOURCE : Commerce Annual Number 1969

இந்தியக் கப்பல் போக்குவரத்தில் 'சுமை ஏற்றிச்செல்லும், சக்தி மிகவும் குறைவாக உள்ளது' என்பது மேலே உள்ள அட்டவணையிலிருந்து தெளிவாக விளங்கும். நல்ல வளர்ச்சியினை அடைய இன்னும் 20 ஆண்டுகளாவது செல்லும் எனத் தெரிகிறது. கப்பல்கள் கட்டுவதற்கும் தேவையான அந்நிய செலாவணியும் கிட்டவில்லை. இறக்குமதியாகும் பொருள்களின் விலையும் மிக அதிகமாக உள்ளது. இச்சிக்கலைப்போக்கத் தற்போது நீண்ட காலத் தவணைமுறையில் வெளிநாடுகளில் இருந்து கப்பல்கள் வாங்கப்படுகின்றன. இந்திய கப்பல் தொழில், மாலுமிகளின் உயர்ந்த சம்பளம், மிகவும் அதிகமான பராமரிப்புச் செலவு காரணமாக, மிகுந்த நிர்வாகச் செலவினை உடையதாய் உள்ளது. இதனுல், நமது கப்பல் துறையினர் போட்டியிடும் சக்தி மிகவும் குறைந்து விடுகிறது. இத்துடன் நிலையான வளர்ச்சியடைந்த பலநாட்டுக் கப்பல் கம்பெனிகளுடனும், போட்டியிட வேண்டியுள்ளது. இந்திய அரசாங்கம் இச்சிக்கல்களை நன்கு அறிந்துள்ளது. ஆயினும், அரசாங்கத்தின் முயற்சியினுல் மட்டும் இந்திய கப்பல் போக்குவரத்தினை வளர்ச்சியடையச் செய்ய இயலாது. நமது நாட்டின் அயல் நாட்டு வாணிபம் வளர்ச்சியடைவதன் மூலமும் தனியார் துறையின் தொழில் வளர்ச்சியின் மூலமும் துறைமுகத் தொழிலாளர்களின் ஒத்துழைப்பின் மூலமுமே இந்திய கப்பல் போக்குவரத்துத் துறை வளர்ச்சியடைய இயலும்.

(4) விமானப் போக்குவரத்து

இந்தியா, பூகோள ரீதியில் உள்நாட்டு, வெளிநாட்டு விமானப்போக்குவரத்தை நன்கு வளர்க்கும் வகையில் அமைந்துள்ளது. இதன் உள்நாட்டில் விமானப் போக்குவரத்து மேற்கொள்ள அதிக நீளமுள்ள தூரமும், ஆண்டின் எல்லாப் பருவக் காலத்திலும் சீராகப் பறக்கும் நிலையுள்ள காரணத்தால் உள் நாட்டுப் போக்குவரத்திற்கு ஆகாய விமானப் பணி விரும்பத் தக்கது. ஏறத்தாழ, இந்நாட்டிலுள்ள முக்கிய வர்த்தக நகரங்களும் தலைநகர்களும் ஆகாய விமானப் போக்குவரத்தினுல் இணைக்கப்பட்டுள்ளன. அயல்நாட்டுப் போக்குவரத்தில் கீழ் நாடுகளையும், மேற்கத்திய நாடுகளையும் இணைக்கும் மையப் பகுதியை இந்தியா பெற்றுள்ளதால், உலக விமானப் போக்கு வரத்தில், இது ஒரு முக்கிய கேந்திரமாக இருக்கின்றது. பன்னுட்டு விமானப் போக்குவரத்திற்கேற்ப, சீரிய முறையில் விமான தளங்களை வைத்திருக்க வேண்டியுள்ளது. அயல்நாட்டு விமான

போக்குவரத்தினை இந்தியாவும் நடத்தி வருகின்றது. இந்திய விமானங்கள் மேற்கிலும் கிழக்கிலும் சென்று வருகின்றன. சிவில் விமான சர்வீஸ் இந்திய நாட்டின் தற்கால நிலைமைக்குப் போதிய அளவு பலனுறும் வகையில் பணியாற்றி வருகிறதெனலாம்.

இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஆகாய விமான சர்வீசுகள் நடத்தப் புதிய கம்பெனிகள் தோன்றின. யுத்தத்தின் பின்விளைவாகப் பொருளாதார ஏற்றத்தினாலும், விலைகள் ஏறிய நிலையில் இருந்த காரணத்தாலும், ஆகாய விமானத் துறையில் வர்த்தகம் புரிவதாலும் பெரு இலாபம் கிடைக்க வழியிருந்தது. மேலும், போரின்போது உபயோகப்பட்ட பழைய விமானங்கள் மிகவும் மலிவான விலைக்குக் கிடைத்த காரணத்தால் இத்துறையில் பலர் ஆர்வம் காட்டினர். எனவே, பல புதிய கம்பெனிகள் உள் நாட்டு விமானப் போக்குவரத்தை மேற்கொள்ள முன்வந்தன. இவைகளில் பெரும்பாலான கம்பெனிகளின் செல்வ நிலை மிகவும் மோசமாக இருந்தன எனலாம்.

1953ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஆகாய விமானக் கார்ப்பரேஷன் சட்டப்படி இந்நாட்டில் ஆகாய விமானப் போக்குவரத்தைத் தேசிய மயமாக்கினர்: உள்நாட்டுப் போக்குவரத்தை நிர்வாகம் செய்ய இந்திய ஆகாய விமானக் கார்ப்பரேஷனை (Indian Airlines Corporation) அமைத்தும், இந்தியாவின் மீது வெளிநாடுகளுடன் நடத்தும் ஆகாய விமானப் போக்குவரத்தினை, 'ஏர் இந்தியா இண்டர் நேஷனல் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தை அமைத்தும் நடத்தி வருகின்றனர். புதிய விமான சர்வீசுகளைத் திறப்பதற்கும், பயனற்ற சர்வீசுகளை மூடுவதற்கும் மத்திய அரசாங்கம் உத்திரவிடும். அதன்படி, இந்தக் கார்ப்பரேஷன்கள் நடக்கவேண்டும். கால அட்டவணையைத் திருத்தியமைப்பதற்கும் மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. மேலும், ஆண்டுதோறும் ஒவ்வொரு கார்ப்பரேஷனும் விமானத்துறையில் செய்துள்ள மாற்றங்கள், நீக்கங்கள், மொத்த வருமானம், விமான வளர்ச்சிகள், எண்ணிக்கைகள், தேய்மானம், கட்டண வரவு இவை சம்பந்தமான ஆண்டறிக்கையொன்று தயாரித்து அதை நாடாளுமன்றத்தில் பரிசீலனை செய்ய அனுப்பி வைக்கவேண்டும். நிதி ஆண்டின் முடிவில் ஆகாய விமானக் கார்ப்பரேஷன்களின் அறிக்கைகளைப் பாராளுமன்றம் பரிசீலித்து அதன்மீது விவாதித்துப் புதிய ஆண்டிற்கான கொள்கைகள் எவ்வாறு அமைத்தல்வேண்டும் என்று முடிவு செய்வார்கள்.

தேசிய மயமாக்கப்பட்ட பின்னர், எல்லா வழிகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய விமான தளங்கள் கட்டப்

பட்டுள்ளன. உள்நாட்டு வெளிநாட்டுச் சர்வீசுகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, சிவில் விமானப் போக்குவரத்து வளர்ச்சிக்கென ரூபாய் 7.2 கோடிகளும் இரண்டாம் திட்டத்தின்போது ரூபாய் 15.9 கோடிகளும், மூன்றாவது திட்டத்தில் 25.4 கோடிகளும் ஒதுக்கப்பட்டன. நான்காவது திட்டத்தில் சிவில் விமானப்போக்குவரத்து வளர்ச்சிக் கென, ரூ. 202 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்க தாகும்.

இந்திய சிவில் விமானப்போக்குவரத்தின் வளர்ச்சியினைக் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 59

ஏர் இந்தியாவின் வளர்ச்சி 1958—1968

ஆண்டு	பறந்த கிலோ மீட்டர்கள் மில்லியன் களில்	ஏற்றிச் சென்ற பிரயாணிகள் (000)	ஏற்றிச் சென்ற சுமை (000 டன்கள்)	தபால்கள் (டன்களில்)
1958–59	11.0	83.9	1.9	814
1962–63	13.9	165.7	5.1	1274
1966–67	18.8	254.7	9.7	1411
1967–68	22.9	285.5	10,5	1516

அட்டவணை 60

இந்தியன் ஏர்லைன்ஸ் வளர்ச்சி 1958—68

ஆண்டு	பறந்த கிலோ மீட்டர்கள் (மில்லியன் களில்)	ஏற்றிச் சென்ற பிரயாணிகள் (000)	ஏற்றிச் சென்ற சுமை (000 டன்கள்)	தபால்கள் (டன்களில்)
1958—59	31.4	653.5	50.8	5.6
1962—63	31.2	703.0	46.8	6.0
1966—67	34.9	1409.5	19.5	9.1
1967—68	37.3	1657.7	21.3	9.9

SOURCE : Commerce Annual Number, 1969.

இந்திய சிவில் விமானப்போக்குவரத்து மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. தற்போது அதிக நபர்களை ஏற்றிச் செல்லக்கூடிய போயிங், 'ஜம்போ ஜெட்' விமானங்களை இந்தியா வாங்கியுள்ளது. விமானத்தில் பயணம் செய்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இந்தியாவில் தற்போது மொத்தம் 69 விமான தளங்கள் உள்ளன. இவற்றில் பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை ஆகிய நான்கு தளங்களும் சர்வதேச விமான தளங்களாகும். இந்தியா சிவில் விமானப்போக்குவரத்துப் பாதுகாப்பான பயணத்திற்குப் பெயர் பெற்றதாகும். உள்நாட்டு விமானப்போக்குவரத்து மேலும் வளர்ச்சி பெற்று வசதிகள் யாவும் நம் நாட்டில் நிறைவு பெறச் செய்யவேண்டும்.

12. வணிகம்

(1) உள்நாட்டு வர்த்தகம்

அந்நிய ஆட்சியில் நாம் இருந்ததால் நம் உள்நாட்டு வியாபாரம் வளர வில்லே. ஆங்கிலேயர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு இந்தியாவைச் சந்தையாகக் கருதினர். அவர்களுடைய எண்ணமெல்லாம் மூலப் பொருள்களேக் குறைந்த விலேயிலே வாங்கி அதனே நுகர்வோ பொருள்களாகவும், மூலதனப் பொருள்களாகவும் மாற்றி நம் நாட்டில் விற்பதிலேயே இருந்தது. இதனுல் நம் நாட்டில் உள்நாட்டு வியாபாரம் வளர வில்லே.

ஆனுல் நாடு விடுதலேயடைந்த பின்னும் உள்நாட்டு வியாபாரம் பெருகாததற்குக் காரணம் என்ன? என்ற வினு நம் முள்ளத்தே எழுகிறது. நம் நாட்டின் இன்றைய அரசியல் வாதிகள் அன்று மூலப் பொருள்களேக் கொண்டு செல்வதைத் தடைசெய்ய வேண்டும் என்று கூறியவர்கள், இன்று நம் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு அன்னிய செலாவணித் தேவையெனக் கூறி மூலப் பொருள்கள் ஏற்றுமதியை அனுபவிக்கின்றனர். 'மர்கெண்டலிச' வாதிகளால் உருவாக்கப்பட்ட, வெளிநாட்டு வியாபாரமே ''முதலும் முடிவும்'' என்னும் தத்துவம் இன்றும் நம் நாட்டில் இருப்பதே உள்நாட்டு வியாபாரம் பெருகாமைக்கு முக்கிய காரணமாகும். அன்னிய செலாவணி அதிக அளவில் இல்லாமலேயே வளர்ச்சியடைந்த நாடுகள் வரலாற்றில் இல்லாமல் இல்லே. ரஷ்யாவும் ஜப்பானும் வெளிநாட்டு வணிகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமலேயே இன்று பொருளாதார முன்னேற்றத்தை யடைந்துள்ளன. அமெரிக்க நாடும், உள்நாட்டு வியாபாரத்தையே தன் பலதரப்பட்ட பொருள்களே விற்பனே செய்ய நம்பியுள்ளது.

நம் நாட்டின் உள் நாட்டு வர்த்தகம் இவ்வளவு எனக் கண்டு பிடிப்பதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. மொத்த உற்பத்தியி

லிருந்து, ஏற்றுமதியைக் கழித்து, எஞ்சியிருப்பது உள் நாட்டு வர்த்தகம் எனக் கணக்கிடுவது எளிதில் புலப்படக் கூடியதாக இருப்பினும், அது சரியான அளவைக் காட்டாதெனக் கூறலாம். ஏனெனில், உற்பத்தியின் ஒருபகுதியை உற்பத்தியாளர்களே தமது நுகர்விற்கென எடுத்துக் கொள்கின்றனர். இரயில்வே கட்டண வருமானத்தைக் கணக்கெடுத்து இந்த அடிப்படையில் உள்நாட்டு வர்த்தகத்தைக் கணக்கெடுக்கலாம். ஆனால், இங்கு நீர் மூலமாகவும் சாலைகள் மூலமாகவும் நடைபெறும் வர்த்தகத்தின் சரியான புள்ளி விவரங்கள் கிடைக்காமையால் உள்நாட்டு வர்த்தகம் எவ்வளவு என இறுதியாக அறுதியிட்டுக் கூற முடியவில்லை.

உள் நாட்டு வணிகத்தை ஐவகையாக விரிக்கலாம். 1. இரயில் வழி வணிகம் 2. நீர்வழி வணிகம் 3. கரையோர வணிகம் 4. லாரி மற்றும் வண்டிகள் வழியாக நடக்கும் வணிகம் 5. விமான வழி வணிகம் எனப்படும். ஆனால், இவைகளைப் பற்றி சரியான புள்ளி விவரங்கள் கிடைக்க வில்லை.

இரயில் மற்றும் நீர்வழி வணிகம்

இவ்வழியாக நடக்கும் வணிக அளவை இரயில்வேயின் ரசீதுகளிலிருந்து கணக்கிடுகின்றனர். பின்வருகின்ற அட்டவணை ரயில்

அட்டவணை 61

இரயில் மற்றும் நீர்வழி வணிகம்

தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள்

	1955–56	1960–61	1965–66	1968–69
நிலக்கரி மற்றும் கோக் கரி	21,66,34	31,47,96	33,19,19	37,30,62
சச்சா பருத்தி	35,07	37,19	31,43	37,18
பருத்தித் துணிகள்	32,60	26,43	25,63	16,89
அரிசி	1,64,07	2,22,83	1,68,98	1,72,56
கோதுமை	82,74	3,06,42	4,59,59	5,32,25
கச்சா சணல்	35,39	40,15	46,15	38,12
இரும்பு & எஃகு உற்பத்தி பொருள்	1,91,65	3,70,25	7,34,32	7,68,07
எண்ணெய் வித்துக்கள்	94,55	95,09	77,96	97,30
உப்பு	1,24,08	1,35,39	2,08,06	2,44,68
சர்க்கரை	82,93	91,06	1,04,92	67,43

மற்றும் நீர்வழி நடக்கும் சில முக்கிய பொருள்களின் வணிகத்தைக் காட்டுகிறது.

கரையோர வணிகம்

கரையோர வணிகம் பற்றிப் புள்ளி விவரங்கள் தயாரிக்க 12 கடல் வணிகப் பகுதிகளாக நம் நாடு பகுக்கப்பட்டுள்ளது.

பின் வரும் அட்டவணை கரையோர வணிக மதிப்பைக் காட்டுகிறது.

அட்டவணை 62

விவரம்	1960-61	1965-66	1968-69
இறக்குமதி			
இந்திய வியாபாரப் பொருள்	209,89	240,55	173,90
அந்நிய நாட்டுப் பொருள்	6,61		
அருங்கலைச் செல்வம்	...	...	...
மொத்த இறக்குமதி	216,50	240,55	
ஏற்றுமதி			
இந்திய வியாபாரப் பொருள்	215,05	240,55	173,90
அந்நிய நாட்டு பொருள்	7,83	...	...
அருங்கலைச் செல்வம்	...	...	...
மொத்த ஏற்றுமதி	222,88	240,55	173,90
மொத்த வணிகம்	439,38	281,10	347,30

நாட்டின் வர்த்தகத்தில் எடைகளையும் அளவு முறைகளையும் சீராக்க அரசாங்க 1956ஆம் ஆண்டுச் சட்டப்படி மெட்ரிக் முறையை அமுல் செய்தது.

உள்நாடு வணிகத்திற்குத் தேவையான நிதி வசதியை வர்த்தக பாங்குகள் அதிக பற்று (Over draft) பொருள்களின் மீதான

அடமானக் கடன் (Key Loan) குடறந்தகாலக் கடன் ஆகியவை களை அளிக்கின்றன. ஆனல் வர்த்தக பாங்குகள் வணிகத்திற்குத் தேவையான முழு நிதி வசதியை அளிக்க முடியவில்லை. வர்த்தகர் கள் கட்டமையக பணச்சந்தையில் (Unorganisned money market) உள்நாட்டு வணிக பில்கள் மூலம் பெறுகின்றனர். ஆனல் இவ் வகையில் பெறும் பெறும் கடன்களுக்கு வட்டி அதிகம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, வர்த்தகம் செலுத்த வேண்டுமானல், பணச் சந்தையை மையப் பாங்கின் கட்டுப்பாட்டின் கீழ் கொணர்ந்து உண்மையான வர்த்தகத் தேவைக்கு நிதி அளித்தால் உள்நாட்டு வணிகம் பெருகும் என்பதில் ஐயமில்லை.

(2) இந்தியாவில் அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை

அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலையை (i) நடப்புக் கணக்கு அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையெனவும், (2) மூலதனக் கணக்கு அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையெனவும் இருவகை யாகப் பிரிக்கலாம். நடப்புக் கணக்கில் பொருள் இறக்குமதி, ஏற்றுமதி, புலனுகா. ஏற்றுமதி, இறக்குமதி, வெகுமதிகள் ஆகிய வைகள் சேரும். மூலதனக் கணக்கு, நடப்பு மாற்றங்களால் (Current Transactions) ஏற்படும் அயல்நாட்டுக் கொடுக்கல் வாங்கல் நிலையில் ஏற்படும் மாற்றத்தைக் காண்பிக்கும்.

அட்டவணை 63

இந்திய விடுதலைக்குப்பின் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
(நடப்புக் கணக்கு)

ஆண்டு	வர்த்தக எச்சம்	நிகரப் புலனுகா ஏற்றுமதி	(ரூ. கோடிக்கணக்கில்) அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
1948–49	— 283.8	+ 31.7	— 252.1
1949–50	— 89.9	+ 42 8	— 47.1
1950–51	— 3.5	+ 42.4	+ 38.9
	— 377.2	+ 116.9	— 260.2

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முந்திய மூன்று ஆண்டு களில் அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை சாதகமாக இல்லை. வர்த்தகத்தினுல் நாம் அயல்நாடுகளுக்குத் தரவேண்டிய தொகை ரூ. 377.2 கோடியாக உயர்ந்தது. ஆனுல், புலனுகா ஏற்றுமதி 116.9 பெருக்கியதால் தரவேண்டிய தொகை ரூ 260.3 கோடியாகக் குறைந்தது.

இறக்குமதிப் பெருக்கத்திற்குக் காரணம், உலகப் போரின் பொழுது மக்கள் தங்கள் தேவையைக் குறைத்துக் கொண்டு வாழ்ந்தமையால், மக்கள் பல பொருள்களை அயல்நாடுகளிலிருந்து வாங்கத் தொடங்கியதாலும், நாட்டின் பிரிவினையால் ஏற்பட்ட உணவுப் பொருள்கள் மற்றும் மூலப் பொருள்கள் பற்றுக்குறையே இறக்குமதி பெருகிப் ''பாதக அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை'' ஏற்படக் காரணமாகும். இந் நிலையைச் சீர்செய்ய 1949 ஆம் ஆண்டு இந்திய அரசு நாணய மதிப்பைக் குறைத்தது. நாணய மதிப்புக் குறைப்பும், கொரியாப் போரால் ஏற்பட்ட தேவைப் பெருக்கமும் நம் நாட்டின் ஏற்றுமதியைப் பெருக்கி 1950-51 சாதக அயல்நாட்டுச் செலுத்து இருப்புநிலை ஏற்பட உதவியது. 1951-52லிருந்து 1955-56 முதல் திட்டக்காலம்.

முதல் திட்டக்காலத்தில் அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை

அட்டவணை 64

ஆண்டு	வர்த்தக எச்சம்	நிகரப் புலனுகா ஏற்றுமதி	ரூ. கோடிக்கணக்கில் அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
1951–52	— 232.8	+ 70.2	— 162.6
1951–53	— 31.1	+ 91.3	+ 60.2
1953–54	— 52.1	+ 99.5	+ 47.2
1954-55	— 93.1	+ 99.1	+ 6.0
1955–56	— 132.8	+ 139.5	+ 6.7
மொத்தம்	— 541.9	+ 499.6	— 42 3

முதல் திட்டக் காலத்தில், அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை, கொரியாப் போர் பணவீக்கத்தாலும், 1953 அமெரிக்கப் பொருளாதாரப் பின்னிறக்கத்தாலும், பெரிதும் பாதிக்கப் பட்டது. ஆனால், உள்நாட்டில் பருவக் காற்றுச் சாதகமாக இருந்தமையால் விவசாயம் மற்றும் தொழிற் பொருள்களின் உற்பத்தி பெருகுகிறது.

முதல் திட்டக்காலத்தில், அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலை திருப்திகரமாக இருந்த போதிலும் ஐந்தாண்டுகளுக்கும் மொத்தமாகப் பார்க்கும்போது, பாதக அயல் நாட்டுச் செலுத்து இருப்புநிலை ரூ.42 கோடியாகத்தான் இருந்தது. 1956–57 லிருந்து 1960–61 வரை இரண்டாவது திட்டக்காலம். 1956–57, 57–58-ல் நம் நாட்டில் இறக்குமதி ஏற்றுமதியைவிட முறையே ரூ. 467 கோடியும், ரூ. 639 கோடியுமாக உயர்ந்தது. இவ்வாண்டுகளில் புலனாகா ஏற்றுமதியின் மூலம் நமக்குக் கிடைத்தது முறையே ரூ. 154 கோடியும், ரூ. 133 கோடியுமாகும். இதனால், நம் நாட்டில் அந்நிய செலாவணி நெருக்கடி தோன்றியது.

இரண்டாவது திட்டக்காலத்தில் அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலை

அட்டவணை 65

ஆண்டு	வர்த்தக எச்சம்	நிகரப் புலனாகா ஏற்றுமதி	அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
1956—57	— 466.9	+ 154.1	— 312.8
1957—56	— 639.0	+ 133.2	— 505.8
1958—59	— 453.0	+ 126.0	— 327.0
1959—60	— 304.9	+ 119.3	— 185.6
1960—60	— 475 2	+ 82.3	— 392.4
மொத்தம்	— 2339.0	+ 615.4	— 1721.6

இதனைத் தவிர்க்கக் கடினமான இறக்குமதிக் கொள்கையைப் பின்பற்றி இறக்குமதிகளைத் தடைசெய்தது. ஆனால், இரண்டாம் திட்டக்காலத்தில் இறக்குமதி இதுவரை காணாத அளவில்

ரூ. 1,233 கோடியாக 1957-58-ல் உயர்ந்தது. ஆனால், ஏற்றுமதி முதல் திட்டத்தைவிடச் சற்று குறைவாகவே இருந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் ஆண்டுச் சராசரி இறக்குமதி ரூ. 1080 கோடியாகும். ஆனால், ஏற்றுமதி ஆண்டுச் சராசரியோ ரூ. 613 கோடிதான். இதனால் இரண்டாவது திட்டக் காலத்தில் ரூ. 1722 கோடி அயல் நாடுகளுக்கு நாம் கொடுக்கவேண்டிய நிலையிலிருந்தோம். இதற்குக் காரணங்கள் (1) நம் நாட்டின் கனரக மற்றும் அடிப்படைத் தொழில்களின் முன்னேற்றத்திற்கான மூலதனப் பொருள்களின் இறக்குமதி பெருகியது. (2) விவசாயம் குன்றியது. அதனால், மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்பட்ட உணவுத் தேவைப் பெருக்கமும் வளர்ச்சியடைகின்ற தொழில்களின் மூலப்

அட்டவணை 66

மூன்றாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலும் அதற்குப் பிறகும் இந்தியாவின் அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலை (நடப்புக் கணக்கில்

ஆண்டு	வர்த்தக எச்சம்	நிகரப் புலனாகா ஏற்றுமதி இறக்குமதி	ரூ. கோடிகணக்கில் அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
1961—62	—377.7	+31.3	—306.4
1962—63	—415.9	+61.9	—354.0
1963—64	—443.4	+94.0	—349.0
1964—65	—619.9	+167.9	—452.0
1965—66	—566.7	+77.9	—489.8
மொத்தம்	—2383.6	+432.0	—1951.2
1966—67	—806.3	—6.6	—812.9
1967—68	—788.2	—16.1	—804.3
1968—69	—373 1	+7.9	—365.2
1969—70	—178.4	—38.6	—217.0
	—2146.0	—53 4	—2199.4

பொருள்கள் தேவைப் பெருக்கமும் முறையே உணவு மற்றும் மூலப்பொருள்களின் இறக்குமதியைப் பெருக்கியது. (3) நாட்டின் ஏற்றுமதியைப் பெருக்க இயலாமை. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கான பராமரிப்பு இறக்குமதி செய்யவேண்டியதன் தேவை.

இக்காரணங்களால் நாட்டின் இறக்குமதி பெருகியது. அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையில் நம் இருப்புக் குறைந்து நாம் 1961-62 லிருந்து 1965-66 வரை செலுத்த வேண்டிய நிதி அதிகமாகியது.

மூன்றுவது திட்டக்காலத்தில் பாதக அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை தொடரக் காரணம், பாதக வணிக இருப்பு நிலையே யாகும். மூன்றுவது திட்டக் காலத்தில் புலனுகாதவை. நடப்புக் கணக்கில் சாதகமாக, இருந்தமையால் பாதக அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையைச் சற்றுக் குறைத்தது.

1966-67 லிருந்து 1969-70 வரை

இக்காலத்தில் நாம் முன்பு பெற்ற கடன்களுக்கு வட்டி செலுத்த வேண்டிய நிலை மேற்பட்டது. முதலீட்டு வருமானமாக ரூ. 608.5 கோடி நாம் கொடுக்க வேண்டியிருந்தது. இதனுல், புலனுகா ஏற்றுமதியில் கிடைத்த எச்சம் இல்லாமல் போய்ப் புலனுகாதவை வகையிலும் நாம் அயல் நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய நிலையேற்பட்டது. 1968-69, 69-70 ஏற்பட்ட உணவு உற்பத்திப்பெருக்கம் உணவு இறக்குமதியைக் குறைத்து, வாணிபக் கொடுக்கல் நிலையில் சற்றுக் குறைவு ஏற்பட்டது.

13. மக்கள் தொகை

1. இந்தியாவின் மக்கள் தொகை அளவும், வளர்ச்சியும்

நம் நாட்டில், உலகநிலை அளவில் நாம் 2.4 சதவிகிதமும் 14 சதவீத உலக மக்கள் தொகையும் கொண்டுள்ளோம். எனவே நாம் குறைந்த அளவு நிலப்பரப்பைக் கொண்டு அதிக அளவு மக்களைக் காக்க வேண்டிய நிலையில் உள்ளோம். நாம் 1871ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 55.4 கோடி மக்களையே கொண்டிருந்தோம்.

அட்டவணை 67

இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கம் 1901—1971

கணக் கெடுப்பு ஆண்டு	மக்கள் தொகை (கோடி கணக்கில்	பத்தாண்டுகளில் ஏற்பட்ட உயர்வு அல்லது குறைவு (கோடி)	பத்தாண்டுகளில் ஏற்பட்ட உயர்வு அல்லது குறைவு சதவிகிதம்
1901	23.6	0.0	0.0
1911	25.2	+ 1.6	+ 5.7
1921	25.1	— 0.6	— 0.3
1931	27.9	+ 2.8	+11.0
1941	31.9	+ 4.0	+14.2
1951	36.1	+ 4.2	+13.3
1961	43.9	+ 7.6	+21.5
1971	54.7	+10.8	+21.6

1921ஆம் ஆண்டு வரை மக்கள் தொகைப் பெருக்கம் மிகக் குறைவாகவே இருந்தது. 1931ஆம் ஆண்டினை மக்கள் தொகை மிகப் பெருமளவில் பெருகிய ஆண்டெனச் சென்சஸ் கமிஷனர் குறித்துள்ளார். 1921–61க்குள் நாற்பதாண்டுகளில் இந்திய மக்கள் தொகை 25 கோடியிலிருந்து 44 கோடியாக, 76 சதவிகித உயர்வு ஏற்பட்டுள்ளது. 1971ஆம் ஆண்டின் தற்காலிக மதிப்பீட்டின்படி இன்றைய மக்கள் தொகை 54.7 கோடியாகும்.

இந்தியாவின் மக்கள் தொகை அளவும் உற்பத்தியும்

மக்கள் தொகை அடர்த்தி என்பதன் மூலம், நாம் சராசரி கிலோ மீட்டருக்கு வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கையைக்

அட்டவணை 68

இந்திய மாநிலங்களின் மக்கன் தொகையும், மக்கள் தொகை அடர்த்தியும் 1961

மாநிலம் / மைய அரசு ஆளுகைக்குட் பட்ட பகுதி	மக்கள்தொகை (மில்லியன்களில்)	அடர்த்தி (சதுர கிலோ மீட்டருக்கு)
டெல்லி	2.66	1793
கேரளா	16.90	435
மேற்கு வங்காளம்	34.93	399
பீகார்	46.46	267
தமிழ் நாடு (மதராஸ்)	33.69	259
உத்தரப் பிரதேசம்	73.75	251
பஞ்சாப்	20.31	166
இந்தியா	439.23	138
ஆந்திரப் பிரதேசம்	35 98	131
மகாராஷ்டிரா	39.55	130
மைசூர்	23.59	123
ஒரிஸா	17.55	113
குஜராத்	20.63	110
மத்தியப் பிரதேசம்	32.37	73
அஸ்ஸாம்	12.21	69
இராஜஸ்தான்	20.51	59
ஜம்மு காஷ்மீர்	3.56	26

குறிக்கிறேம். 1961ஆம் ஆண்டில் நம் நாட்டில் மக்கள் தொகை அடர்த்தி (Denselt) சதுர கிலோ மீட்டருக்கு 138 பேர்கள் ஆகும். 1969–70-ன் மையக் காலத்தில் எரிக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு 169 பேர் ஆகும். ஆனுல் இந்த மக்கள் தொகை அடர்த்தி அளவு மாநிலத்திற்கு மாநிலத்துற்கு வேறுபடுகிறது.

ஜம்மு, காஷ்மீர் மக்கள் தொகை அந்நியர் ஆளுகையிலுள்ள மாநிலப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தொகையைத் தவிர்த்தது. ஆதாரம் : –

மாநிலத்துக்கு மாநிலம் மக்கள் தொகை அடர்த்திப் பெருமளவு மாறுபடுகிறது என்பதை அறிகிறேம். 1971ஆம் ஆண்டில் தேசிய சராசரி மக்கள் அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு 182 ஆகும். ஆனுல், கேரளா மாநிலத்தில் மக்கள் தொகை அடர்த்தி 548. தமிழ் நாட்டில் 1971–ல் மக்கள் தொகை அடர்த்தி 316 ஆகும். 1968 இங்கிலாந்தில் சதுர கிலோ மீட்டருக்கு மக்கள் தொகை அடர்த்தி 227. இது நம் நாட்டைவிட அதிகமெனினும், இங்கிலாந்து தொழில் துறையில் முன்னேறியுள்ளமையால், அதிக மக்களேக் காக்க முடிகிறது.

(2) மக்கள் தொகைப் பெருக்கமும் பொருளாதார முன்னேற்றமும்

மக்கள் உழைப்புச் சக்தியைக் கொண்டு, நாட்டின் இயற்கை வளங்களேப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் தான் பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும். மக்கள் சக்திதான் உற்பத்தியைப் பெருக்கி, முன்னேற்றத்திற்கு வழி கோலுகிறதென்ற போதிலும் மக்கள் தொகை அதிக அளவில் பெருகினுல் அதுவே பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாக அமைகிறது. நாம் முதலில் மக்கள் தொகைப் பெருக்கம் பொருளாதார முன்னேற்றத்திற்கு எவ்வாறு முட்டுக் கட்டையாக அமைகிறது என்பதைக் காண்போம்.

முதல் மூன்று திட்டக் காலத்தில் (1650-66) நம் நாட்டு வருமானம் 63.7 சதவிகிதம் உயர்ந்தது. அதே காலத்தில் மக்கள் தொகை 35 சதவிகிதம் உயர்ந்தது. அதனுல், தலா சராசரி வருமானம் 20.4 சதவிகிதம் தான் உயர்ந்தது. நாட்டு வருமான ஆண்டுச் சராசரி உயர்வு 3.3 சதவிகிதம். ஆனுல், தலா சராசரி வருமான உயர்வோ 1.2 சதவிகிதமே. இதனுல், நாம்

அறிவது யாதெனின், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தினுல் அன்றி, தலா சராசரி வருமானத்தில் கணிசமான உயர்வு அடைய முடியாது.

மக்கள் தொகை பெருக அம்மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்திப் பெருக வேண்டும். மேலே நாடுகளில், புரட்சியால் மக்கள் தொகைப் பெருக்கத்தைவிட, விவசாயப் பொருள் உற்பத்திப் பெருக்கமும், மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவை யான மற்ற பொருள்களின் பெருக்கமும் இருந்தபடியால் அந் நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு பிரச்னேயாக இல்லே.

ஆனுல், நம் நாட்டில் தலா சராசரி பயிர் செய்த நில அளவு 1921-ல் 111 செண்டாக இருந்தது. 75 செண்டாக 1961-ல் குறைந்து விட்டது. 1949-61 இடையே உணவு உற்பத்திக் குறியீட்டெண் 32 சதவிகிதம் உயர்ந்தது. மக்கள் தொகை 23 சதவிகிதம் உயர்ந்தது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நம் உணவு உற்பத்தி 17 மில்லியன் டன் உயர்ந்தது. அதனுல் மக்கள் தொகைப்பெருக்கத்தால் தலா சராசரி உணவு கிடைக்குமளவு 12.8 அவுன்சிலிருந்து 12.4 அவுன்சாகக் குறைந் தது. மேலும், மக்கள் தொகைப் பெருக்கம் பெருமளவில் கிராமங் களிலேயே இருப்பதால் இப்பொழுது கிடைக்கின்ற விற்பனேக்குரிய எச்சமும் குறையும். எனவே, மக்கள் தொகைப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினுல்தான் நாடு விரைவான பொருளாதார முன்னேற்ற மடைய முடியும்.

இந்தியாவின் மக்களே இரு பெருங் கூறுகளாகப் பிரிக்கலாம். அவை, உற்பத்தி செய்து உண்போர் (Pnoductive Consumer) உற்பத்தி செய்யாமலே உண்போர் ((Unproductive Corsumer) என இருவகைப்படும். உற்பத்தி செய்து உண்போர் தங்கள் உழைப்பால் நாட்டு வருமானத்தைப் பெருக்கும் திறனுடையார். நாட்டிலுள்ள தொழிலாளர்கள் அனேவரும் 'உழைத்து உண் போர்கள்' எனப்படுவர். உழைக்காது, உற்பத்திப் பெருக்காது இருப்போர் 'உழைக்காது உண்போர்' எனப்படுவர். குழந்தை கள், முதுமையடைந்தவர்கள் 15-59 வயதுடைய மக்கள் தொகை யில் வேலே எதுவும் செய்யாமல் இருக்கும் ஒரு பகுதியினர் ஆகி யோர் உற்பத்தி செய்யாமலே உண்போர் எனப்படுவர். 1951-ல் 139,5 மில்லியன்களாக இருந்த உற்பத்தி செய்து உண்போர் (38. 6%) அளவு 1961-ல் மில்லியன்களாக உயர்ந்தது. 1951-ல் 221.5 (42.7°/₀) மில்லியன்களாக இருந்த உற்பத்தி செய்யாமல் உண்போர் தொகை 251 (57.3°/₀) மில்லியனுக உணர்ந்தது.

1951க்கு இடையில் உற்பத்தி செய்யாமல் உண்போர் விகிதம் 61.4°/₀ லிருந்தது. 57.3°/₀ குறைந்த போதிலும், உழைக்காமல் உண்போர் தொகை 221.5 மில்லியன்களிலிருந்தது. 251 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. உழைக்காது உண்போரில் பெருமளவு குழந்தைகளாய் இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு அளிக்க வேண்டிய சத்துணவு, மருத்துவ வசதி, கல்வி, பொதுச் சுகாதார வசதி ஆகியவைகளுக்கு நிறைய முதலீடு செய்ய வேண்டியிருப்பதால், மற்றும் உற்பத்தித் துறைகளில் பெருமளவு முதலீடு செய்ய முடிவதில்லை. இது பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக உள்ளது.

மக்கள் தொகைப் பெருகப் பெருக வேலையில்லாதோர் எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் தலை விரித்தாடத் தொடங்குகிறது. சான்றாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேலையற்றோர் எண்ணிக்கை 7 மில்லியனாக இருந்தது. அப்பொழுது நிறையிலா வேலை வாய்ப்புடையோர் அளவு 15–18 மில்லியனாக இருந்தது. ஆனால், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உருவான கூடுதல் தொழிலாளர் அளவு 17 மில்லியனாகும். மூன்றாவது திட்டக் காலத்தில் 14 மில்லியன் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்ட போதிலும் வேலையற்றோர் எண்ணிக்கை 9 மில்லியனாக உயர்ந்தது. 1966-67, 68-69-ல் ஏற்பட்ட வரட்சியினாலும் பொருளாதார மந்தத்தினாலும் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படாமையால் வேலையற்றோர் எண்ணிக்கை 22 மில்லியனாக உயர்ந்தது. எதிர்காலத்தில் நாம் மக்கள் தொகைப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தினாலொழிய இப்பிரச்னையின் அளவு உயர்ந்து கொண்டேதான் செல்லும். எனவே, பெருகி வரும் மக்கள் தொகை விரைவான முன்னேற்றத்திற்குத் தடை என்பதில் ஐயமுண்டோ?

மக்கள் தொகை பெருகப் பெருக அவர்களுக்கு அளிக்க வேண்டிய கல்வி மருத்துவ வசதி, வீட்டு வசதி ஆகியவைகளுக்கான செலவும் அதிகரிக்கிறது. கல்விக்கு அரசு செலவழிக்கின்ற செலவு எதிர்காலத்தில் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்குமெனினும், இரண்டுக்கும் இடையே இருக்கின்ற கால இடைவெளி மிக அதிகம். நம் நாட்டில் 5–14 வயதுடையோர் 21–5 மில்லியன்களாக இருப்பதால், அவர்கள் கல்விச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 213 கோடியாகும். பல்கலைக்கழகக் கல்விச் செலவையும் கணக்கிட்டால் இன்னும் செலவு அதிகமாகும். மேலும், மருத்துவ வசதி, பொதுச் சுகாதாரம் ஆகியவைகளுக்கு ஆகின்ற செலவும் அதிகமாகும். எனவே, அரசின் செலவு உடனடி

உற்பத்தித்தராத துறைகளில் செலவிட வேண்டியுள்ளதால் நாட்டின் முன்னேற்றம் தடைபடும்.

மேலும், நாட்டின் தலா சராசரி வருமானத்தை நிலையாக வைத்திருக்க மக்கள் தொகை பெருகுவதால் நாம் 10 சதவிகிதம் நாட்டு வருமானத்தைச் சேமித்து முதலீடு செய்ய வேண்டும். எனவே, நாடு வளர்ச்சியடைய வேண்டுமெனில் மக்கள் தொகைப் பெருக்கத்தை நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுக்குச் செய்கின்ற ஒவ்வொரு ரூ. 50 செலவும், பொருளாதார முன்னேற்றத்திற்குச் செய்கின்ற ரூ. 500 செலவுக்குச் சமம் என மக்கள் தொகை ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளனர். எனவே, மக்கள் தொகை அளவிற்குமேல் மிஞ்சினால் நாம் பெறுவது முன்னேற்றமில்லை. அது, முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகத்தான் இருக்கும்.

உற்பத்தித்திறன் பெருக்கமும் ஐந்தாண்டுத் திட்டங்களும்

பொருளியலார், 'உற்பத்தித் திறன் பெருக்கமே மூலதனப் பெருக்கத்தைவிட இன்றியமையாதது' என்று கருதுகின்றனர். இதைச் சிலர் ஒப்புக்கொள்ளாவிடினும் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயிற்சி பெற்றுத் தேர்ந்த தொழிலாளர்கள் முக்கிய தேவை என்பதை மறுப்பதற்கில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் இதனை உணர்ந்தே இப்போதைய இன்றியமையாத உடனடித்தேவை பயிற்சி பெற்ற மக்கள் சக்தியே எனக் கூறியுள்ளது. நாடு முன்னேற, முன்னேற, திறனற்றோர் அரைத் திறனுடையோர் தேவை குறைந்து திறனுடையோர் தேவை பெருகுகிறது.

நம் நாடு விடுதலையடைவதற்கு முன், திறனுடையோர் சில தொழில்களுக்கு மட்டும் குறிப்பாகப் பருத்தி நெசவுத்தொழில், சணல், தேயிலை, தீக்குச்சி உற்பத்தி ஆகியவைகளுக்கு மட்டும் தேவைப்பட்டனர். ஆனால், நாட்டுவிடுதலைக்குப்பின், ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பெருமளவில் தொழில் துறையில் முதலீடு செய்தால் திறனுடைய தொழிலாளர் தேவை அளிப்பை விட அதிகமாகியது. புதிதாகத் துவக்கப்பெற்ற இரும்பு எஃகுத் தொழில், இயந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யும் தொழில், மின்சாரச் சாதனங்கள், உற்பத்தி செய்யும் தொழில் ஆகியவைகளுக்கும் பெருமளவில் திறனுடைய தொழிலாளர் தேவைப்பட்டனர் மேலும், நம்முடைய] பரம்பரைத் தொழில்களிலும் திறனுடையோர் தேவை பெருகியது. சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தேசிய விரிவாக்கப் பணிக்கும் (National Extersion Service) திறனுடையோர் தேவை பெருகியது. மேலும், சமுதாயம், தொழிலாளர் நலம் பெருக்க, சமூக, சேவை

ஊழியர்கள் தொழிலாளர் நல அதிகாரிகள் ஆகியோர் தேவையும் பெருகின. சுருங்கச்சொல்லின், பொறியியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம், விவசாயம் கிராம முன்னேற்றம், கல்வி, சுகாதாரம், சமூக நலம், புள்ளி விவர இயல், நிர்வாகம் ஆகிய துறைகளில் திறனுடையோரைப் பெருக்குவது பெருமளவில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

முதல் மூன்று திட்டக் காலத்தில், பொறியியல் பட்டப்படிப்பு வசதிகள் 6 மடங்கு பெருகின. பொறியியல் டிப்ளமோ படிப்பிற்கான வசதிகள் 8 மடங்கும், கைவினைஞர்கள் பயிற்சி வசதிகள் 10 மடங்கும் பெருகின,

1960–61-ல் 70,000 மாக இருந்த டாக்டர்கள் எண்ணிக்கை 1968-69-ல் 1,02,000 ஆக உயர்ந்தது. விவசாயப் பட்டதாரிகள் எண்ணிக்கை 1960-61-ல் 14,000 லிருந்து 32,000 ஆக 1965-66-ல் உயர்ந்தது. கால் நடை மருத்துவப் பட்டதாரிகள் எண்ணிக்கை 1960–61–ல் 5000 லிருந்து 1965-66-ல் 9,300 ஆக உயர்ந்தது.

1950-69 முடிய, கடந்த பதினெட்டு ஆண்டுகளில் பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை 7.5 லட்சத்திலிருந்து 22 லட்சமாக உயர்ந்தது. பயிற்சி பெறாத ஆசிரியர்கள் எண்ணிக்கை 3.2 லட்சத்திலிருந்து 5.5 லட்சமாக 1968-69-ல் உயர்ந்தது. நான்காவது திட்டக் காலத்தில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இப்பொழுது கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறையுள்ளது. எனவே, இத்துறைகளில் ஆசிரியர்களைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திறன் பெருக்கத்தின் முக்கிய நோக்கமே, நாட்டின் தேவைக்கேற்ப மனித சக்தியைப் பயன்படுத்தப் பயிற்சி அளிப்பதேயாகும். எனவே, இதற்குப் பெருமளவு முதலீடு தேவை. ஆனால், முன்னேறாத நாடுகளில் இவ்வகை முதலீடுகளை மேற்கொள்வதில் சிறிது போட்டியும் தடையும் காணப்படுகின்றன. மக்களில் சிலர் உடனடியான பயன் தரும் முதலீட்டையே விரும்புகின்றனர். எனவே, நம்நாடு தேவையான அளவு திறனுடையாளரைப் பெற இன்னும் பல ஐந்தாண்டுத் திட்டங்களில் சீரான முதலீடும், மக்கள் சக்தி பெருக, திறனுடையோர் அளிப்புப் பெருக்கமும் மிக அவசியம். மேலும், தொழில் நுட்பத் திறனுடையாரைப் பெருக்க அயல் நாட்டு உதவியும் நாம் பெற வேண்டும். நாட்டின் மூலதனம் பெருக, உற்பத்தித் திறன் பெருக்கப் பெரிதும் உதவும். உற்பத்தித் திறன் பெருக்கம் ஒரு முக்கிய பாதை. மூலதனப் பெருக்கம் நாம் அடைய வேண்டிய இடம். பாதை சீரானால், நாம் அடைய வேண்டிய இடத்தை விரைவில் அடையலாம் என்பதில் ஐயமுண்டோ?

14. தொழிற் சங்கங்கள்

தொழிலாளர் நல முன்னேற்றத்தில் தொழிற்சங்கங்களும் தொழிலாளர் சட்டங்களின் பங்கும்

தொழிலாளர்களின் பிரச்சனைகள் இன்று மிகவும் முக்கியத்துவம் அடைந்துள்ளன. செய்தித் தாள்களில் தினந்தோறும் தொழிலாளர் கூலிச் சிக்கல்கள், போனஸ் சிக்கல்கள் வேலை நிறுத்தங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் (Social Security Schemes) போன்றன வெளிவந்து கொண்டே இருக்கின்றன. தொழிலாளர்களின் கூலி உயர்வுப் போராட்டங்கள் பிற சமூகத்தையும் பாதிப்பதாக அமைகிறது. தொழிற் சங்கங்களின் போட்டிகள் அரசியல் கலப்படைந்து மிகவும் முக்கியத்துவம் அடைகின்றன. அதே சமயம் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகின்றது. இத்தகைய பல சிக்கல்களும் தொழிலாளர் நல முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதாக அமைவதால் தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களின் உரிமைக்காகப்போராட வேண்டியுள்ளது. அரசாங்கமும் சில சட்டங்கள் இயற்றி அவர்களது நலங்களைக் காக்க வேண்டியுள்ளது.

தொழிற்சங்க வளர்ச்சி

தொழிற்சங்கங்கள் என்பன ஊதியம் பெறுவோர் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும் மேம்பாடு அடையவும் அமைத்துக் கொண்டுள்ள "தொடர்ந்து இயங்கும் சங்கங்கள்" என்று சிட்னி வெப் (Sydney webb) என்பாரும் பீட்ரைஸ் வெப் (Beatnice webb) என்பாரும் தொழிற் சங்கங்களில் சரித்திரம் என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளனர். தொழிற்சங்கங்களைக் குறிக்கப் பலவிளக்கங்கள் உள்ளன. நடைமுறையில் தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் நலனைக் கூட்டு முயற்சியில் காக்கவும் பெருக்கவும் அவர்கள் ஆர்வத்துடன்

ஏற்படுத்தப்படும் நிறுவனங்களாக உள்ளன. தொழிற்சங்கங்களின் சரித்திரம் இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது. தொழிற் புரட்சி ஏற்பட்டவுடன் தொழிலாளர்கள் மிகவும் அல்லலுறவே. மறைமுகமாக அவர்கள் நலனுக்காகப் பாடுபட, சில தொழிற் சங்கங்கள் தோன்றின. ஆலை உற்பத்தி முறை, கைநுட்பமுடைய தொழிலாளர்களின் வேலை பறிமுதல், திறனுடைய, திறனற்ற தொழிலாளர்களிடையே ஊதிய வேறுபாடின்மை ஆகியன, தொழிற்சங்கங்கள் தோன்றிக் காரணமாகும். மறைமுகமாகத் தோன்றிய சங்கங்கள், பின்னர் அரசாங்கம், அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்று, வெளிப்படையாக அமைக்கப்பட்டன.

இந்தியாவில் தொழிற்சங்கங்கள் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஏற்பட்டன எனலாம். ஆயினும் 1875ஆம் ஆண்டின் முதல் பம்பாய்த் தொழிற்சாலைக் கமிஷன் (First Bombay Factory Commission) அமைக்கப்பட்டபோது திரு. எஸ். எஸ். பெங்காலி மற்றும் திரு. என். எம். லோகாண்டே (S. S. Bengalee and N. M. Lokhande) இருவரும் சமூக ஊழியர்கள் சிலருடன், அப்போதைய தொழிலாளர்களின் மோசமான நிலைமையினை அரசின் கவனத்திற்குக்கொண்டுவர ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். 1881ஆம் ஆண்டு தொழிற்கூடச் சட்டத்தின் குறைகளும் எடுத்துரைக்கப்பட்டன. மாநாடு ஒன்றும் நடத்தி, மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 1889-ம் ஆண்டில் தொழிற்கூடங்களுக்கு வாராந்திர விடுமுறை அளிப்பதில், லோகாண்டே கொண்ட முயற்சி வெற்றியடைந்தது. இந்த வெற்றியின் பின்விளைவாக, 1890-ம் ஆண்டு பம்பாய் மில் தொழிலாளர் சங்கம் (Bombay Mill-hands Association) அமைக்கப்பட்டது. அதிகாரிகள் முதலாளிகள் கவனத்திற்கு, தொழிலாளர்களின் குறைகளைக் கொண்டுவர 'தீன பந்து' என்ற பத்திரிக்கையினையும் லோகாண்டே துவங்கினுர். இவ்வாறே கல்கத்தாவிலும் தொழிலாளர் சங்கங்கள் சில தோன்றின. 1897-ல் இந்தியா மற்றும் பர்மா ரெயில்வே ஊழியர்களின் இணைக்கப்பட்ட சங்கம் (Amal garmated Society of Railway servants of India and Burma) துவக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டு சுதேசி இயக்கம் தோன்றிய பின்னர் நாட்டின் பல பகுதிகளிலும் சிறு சிறு தொழிலாளர் சங்கங்கள் தோன்றின. 1908ஆம் ஆண்டு டாக்டர் ஜி. என். நாயர் என்னும் தொழிற்கூட விசாரணைக்குழு உறுப்பினர் தொழிலாளர் இயக்கத்திற்குப் பெரிதும் பாடுபட்டார். ஆயினும், இம்முயற்சிகள் யாவும் உருவான, வலுவான தொழிற் சங்கங்களைத் தோற்றுவிக்க இயலவில்லை.

முதல் உலகப்போர் முடிவின்போதுதான் தொழிற்சங்க இயக்கம் நிலையாக வேரூன்ற முடிந்தது. 1914ற்குப் பின் ஆண்டின்

பின்னர், இந்தியத் தொழிலாளர்கள், சலுகை பெறுதல், ஊதிய உயர்வு மற்றும் வேலை செய்வதற்கான சூழ்நிலைத் திருத்தம் ஆகியவற்றை அடைய வேலை நிறுத்தங்களே சிறந்த வழி என்று கண்டனர். தொடர்ச்சியான பல வேலை நிறுத்தங்கள் அறிவிக்கப்பட்டன. பல வேலை நிறுத்தங்களின் வெற்றியான பல வேலை நிறுத்தங்களின் வெற்றி பல தொழிற்சங்கங்களைத் துவக்கி வைத்தது. 1920-ம் ஆண்டு ஆல் இந்தியா டிரேட் யூனியன் காங்கிரஸ் என்னும் மாபெரும் அமைப்புத் தொழிலாளர்களின் குறைகளுக்காகப் போராடவும், சிறு தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை ஒருமைப்படுத்தவும், தொழிற்சங்கங்கள் துவக்கப்படா இடங்களில், தொழிற்சங்கங்களைத் துவக்கவும் ஆகிய இவ்வெல்லாப் பணிகளுக்காகவும் துவக்கப்பட்டது. துவக்ககாலத்தில் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நாடு முழுவதும் பெரிய, சிறிய தொழிற் சாலைகளிலும், தொழிற்சங்கங்களை அமைக்க இவ்வமைப்புப் பெரிதும் பாடுபட்டது. 1926ஆம் ஆண்டுத் தொழிற் சங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்நாட்டின் தொழிற் சங்க இயக்கம் சரித்திரத்தில் முக்கியமான கட்டமாகும். இதன் பின்னர் தொழிற்சங்கங்கள் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஸ்தாபனமாக அமைந்து சட்ட அனுமதி பெற்ற பின்னர் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பெரிதும் உயர்ந்தது. முதலாளிகளும் தொழிற்சங்கங்களை மதிக்கத் தொடங்கினர்.

1930ஆம் ஆண்டின் முடிவில் தொழிற்சங்க வளர்ச்சிக்காகச் சூழ்நிலை நாட்டில் அமையவில்லை. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் நாட்டின் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியது. அமைதியான முறையில் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்பதில் கருத்து வேறுபாடுகளும் தோன்றின. சிலர் வன்முறையினால் தான் சிக்கல்களைத் தீர்க்க முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். 1929ஆம் ஆண்டு அமெரிக்காவில் தோன்றிய பெரும் பொருளாதார மந்தம் உலகம் முழுதும் பரவி இந்தியாவிலும் பரவி நின்றது. அந்நிலை தொழிலாளர்களுக்கோ, தொழிற் சங்கங்களுக்கோ, ஆதரவாக அமையவில்லை. இந்நிலையில்தான் வன்முறையில் வேலை நிறுத்தங்களில் தீவிர நம்பிக்கை கொண்ட, கம்யூனிஸ்டுகள் இந்திய தொழிற்சங்கச் கூட்டமைப்பினைத் (A.I.T.U.C.) தங்கள் வசம் பற்றிக் கொண்டனர். மிதவாதிகள் அவ்வமைப்பிலிருந்து வெளியேறி, புதிய மத்திய அமைப்பு ஒன்றை 'ஆல் இந்தியா டிரேட் யூனியன் பெடரேஷன்' என்ற பெயரில் துவக்கினர். தலைவர்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின்மையாலும் நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்பட்ட மந்தம்

காரணமாகவும், பல வேலை நிறுத்தங்கள் தோல்வியடைந்தன. மீரட் சதி வழக்கில், கம்யூனிஸ்ட்டுகள், தண்டனை பெற்றதும் 1929-ம் ஆண்டுப் பம்பாய் நெசவாளர் வேலை நிறுத்தம் தோல்வி யடைந்ததும் தொழிற்சங்க இயக்கத்தில் தேக்கநிலை ஏற்படக் காரணமாயிற்று. தொழிற்சங்கங்கள் பலவற்றில் பிளவுகள் ஏற்பட்டன. இந்நிலை இரண்டாவது உலகப்போர் வரை நீடித்தது. இதனிடைகில் 1938-ம் ஆண்டு பிளவுபட்ட இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் இந்தியத் தொழிற்சங்கப் பெடரேஷன் ஆகிய இரண்டினையும் இணைக்கும் பணியில் திரு. வி. வி. கிரி வெற்றி கண்டார்.

இரண்டாவது உலகப்போர் பொருளாதாரத் தேக்கநிலையைப் போக்கியதாலும், தொழில் உற்பத்திப் பொருள்களுக்கு அதிகத் தேவையினை ஏற்படுத்தியதாலும் தொழிற்கூடங்கள் குழு அளவில் உற்பத்தியினைத் தொடங்கின. இந்தியா உலகப்போரில் ஈடுபடுவது குறித்துத் தொழிற்சங்கத் தலைவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. உருஷ்யக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியினைப் பின்பற்றி இந்தியக் கம்யூனிஸ்டுகள், நாஜிகளை முறியடிக்க இங்கிலாந்திற்கு உதவ விரும்பினர். ஆனால், தேசியத் தலைவர்களோ, இந்தியாவி லிருந்து பிரிட்டிஷாரை விரட்ட இதுதான் தக்க தருணமென்று தேசிய இயக்கத்தைத் தீவிரப்படுத்த விரும்பினர். கருத்து வேற்றுமை காரணமாகத் தலைவர்களிடையே ஏற்பட்ட பிளவு தொழிற்சங்க இயக்கத்தை மீண்டும் பிளவு படுத்தியது. விலைவாசி உயர்வின் காரணமாகத் தொழில் அமைதியின்மை ஏற்பட்டது. அரசாங்கம் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி வேலை நிறுத்தங்களைத் தடை செய்தது. ஆயினும், தொழிலாளி களின் மோசமான வாழ்க்கைத்தரம், முறையான தொழிற்சங்க வளர்ச்சியின் அவசியத்தை எடுத்துக்காட்டித் தொழிலாளர் களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்தியது.

1946-ம் ஆண்டிற்குப்பின்னர் இந்தியப் பொருளாதாரத்தைப் புனரமைக்கு வேண்டிய அவசியமும், நாட்டின் பிரிவினையும், இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சியில் பெருமாறுதலை ஏற்படுத் தியது. காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், தொழிலாளர் முன்னேற் றத்தின் அவசியத்தினை உணர்ந்தவர். 2946-ம் ஆண்டு நவம்பர் மாதம், காந்தியக் கொள்கைகளுடன் இயங்கிவந்த ஹிந்துஸ்தான் மஸ்தூர் சேவக் சங்கம், தன்னுடைய உறுப்பினர் சங்கங்களை இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸுடன் இணைந்து கொள்ளக் கேட்டுக் கொண்டது.

இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸின் கொள்கைகளை மாற்ற நடைபெற்ற முயற்சிகள் தோல்வியடையவே, காங்கிரஸ் கட்சியின் தூண்டுதலின் காரணமாக, இந்துஸ்தான் மஸ்தூர் சேவக்சங்கம், மாநாடு ஒன்றை நடத்தி, 1947ஆம் ஆண்டு மே மாதத்தில், புதியதாக இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் (All India Notional Trade Union Gongres) என்ற அமைப்பைத் துவக்கியது. இதுவே, காங்கிரஸ் கட்சியின் ஆதரவுள்ள, இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸின் ஆரம்பமாகும். காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட பிளவின் காரணமாக வெளியேறிய பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸிலிருந்தும் வெளியேறி, 1948ஆம் ஆண்டு, 'இந்துமஸ்தூர் சபா' என்னும் புதிய தொழிற்சங்க மத்திய அமைப்பு ஒன்றை நிறுவினர். 1949ஆம் ஆண்டு தீவிரவாதிகள் (Radicalets) சிலர், யுனைடட் டிரேட் யூனியன் காங்கிரஸ் என்ற மற்றொரு அமைப்பு ஒன்றை நிறுவினர். தற்போது மொத்தம் நான்கு தொழிற்சங்க மத்திய அமைப்புகள் நாட்டில் உள்ளன. இவைகள் தொழிலாளர் நல முன்னேற்றத்திற்குப் பாடு பட்டாலும், இவைகளிடையே ஒற்றுமையில்லை. பொதுவான கருத்துக்களையோ கொள்கை களையோ பின்பற்றுவதும் இல்லை.

இந்தியத் தொழிற்சங்க மத்திய அமைப்புகள் தொழிற்சங்கங் களின் வளர்ச்சியினைப் பின்வரும் அட்டவணைகளில் காணலாம்.

அட்டவணை 69

இந்தியத் தொழிற்சங்க மத்திய அமைப்புகளின் உறுப்பினர்கள்

	இணைந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை	1967–68 உறுப் பினர்கள் எண் ணிக்கை (இலட் சங்களில்)
ஐ.என்.டி.யூ.சி (INTUC)	2,000	18.9
ஏ.ஐ.டி.யூ.சி (AITUC)	1,971	15.2
எச்.எம்.எஸ் (IIMS)	397	7.7
யூ.டி.யூ.சி (UTUC)	354	2.0

SOURCE : Times of India, Directory and year Book - 1970

அட்டவணை 70

இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சி

ஆண்டு	பதிவு செய்யப் பட்ட தொழிற் சங்கங்கள்	அறிக்கைகள் சமர்ப்பிக் கும் சங்கங்களின் உறுப் பினர் எண்ணிக்கை (இலட்சங்களில்)
1927–28	20	1
1987–38	420	4
1951–52	4,620	20
1960–61	11,200	40
1965–66	13,000	36

SOURCE : The Indian Labour year Book - 1967

இவற்றிலிருந்து தொழிற்சங்கங்களின் வளர்ச்சி நன்கு விளங்கும், தற்போது இந்தியத் தொழிற்சங்கங்கள் ஆணிவேர் விட்டு ஊன்றி வலுவாக நிற்கின்றன. அமைப்பு முறைகளிலும் பல தீவிர மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தியாவில் இன்னும் குறைபாடுக ளற்ற தொழிற் சங்கங்கள் அமையவில்லை. இன்றைய தொழிற் சங்கங்களின் குறைகளாகத் திரு. வி. வி. கிரி மூன்றினைச் சுட்டிக் காட்டுகின்றார். முதலாவதாகத் தொழிற் சங்கங்களின் சிறிய அளவு மொத்த சங்கங்களில் முக்கால் பகுதிக்குமேல் 500க்கும் குறைவான உறுப்பினர்களையே உடையன. இரண்டாவதாகச் சிறிய அமைப்பின் காரணமாகவும் குறைந்த சந்தாத் தொகையின் காரணமாகவும், தொழிற்சங்கங்களின் பற்றுக்குறை நிதி நிலைமை. மூன்றாவதாக ஊதியம் பெறும் முழு நேரப் பணிபுரிபவர்கள் இல்லாமை. இக்குறைகளின் காரணமாக, இந்திய தொழிற்சங்க இயக்கம் வலுவற்று உள்ளது. இக்குறைகள் அல்லாமல் இன்னும் சில குறைகள் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியினைத் தடைப்படுத்துவதாகவும், தொழிற்சங்கங்கள் தங்கள் குறைகளை நீக்கமுடியாமலும், மேலும் பொதுமக்களிடையே தொழிற்சங்கங்களின் நன்மதிப்புக் கெடும் வண்ணமும் அமைந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கது. தொழிற்சங்கத் தலைமையினை, அரசியல் கட்சித் தலைவர்களில் யாரேனும் ஏற்றுத் தங்களின்

கட்சி நலனுக்காக, தொழிற்சங்கங்களை நடத்திச் செல்லுதல் தொழிற்சங்க வளர்ச்சியின் ஆரம்பக் காலத்தில், அரசியல் கட்சியினர் தலைமை, தொழிற்சங்கங்களுக்குத் தேவையாய் இருந்தது. ஆனால், இன்றுள்ள நிலைமை வேறு. ஒரே தொழிற்சாலையில் இரண்டு கட்சிகளைச் சார்ந்தே இரண்டு சங்கங்கள் அல்லது பல சங்கங்கள் இயங்குவதால், தொழிலாளர்களின் ஒற்றுமைக்கு ஊறு நேரிட்டு, அவர்கள் தங்களின் கோரிக்கைகளைப் பெற இயலாது போகின்றது. மேலும், அரசியல் கட்சித் தலைவர்களுக்கு, ஒவ்வொரு தொழிற்சாலையின் அமைப்பு முறை, உற்பத்தி முறை, அவற்றில் ஏற்படும் சிக்கல்கள், தொழிலாளர்களின் நியாயமான குறைபாடுகள், அவற்றை அகற்றுவதற்கான சீரான நடவடிக்கைகள் தெரிய நியாயமில்லை. எனவே, தொழிலாளர்களின் நேர்மையான கோரிக்கைகள்கூட நிறைவேற்றப்படுவதில்லை. அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றமும் பெற முடிவதில்லை.

அடுத்து இன்றைய தொழிற்சங்கங்கள் பலவேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள் செய்வதில்தான் நாட்டமுடையனவாக உள்ளனவேயன்றி, தொழிலாளர்களின் நாணயம், உழைப்பில் நாட்டம், உண்மையான உழைப்பு, சார்ந்த தொழிலின்மேல் பற்று ஆகியவற்றை வளர்ப்பதாக இல்லை. பெரும்பாலான சங்கங்களின் நிதிநிலைமை திருப்திகரமாக அமையவில்லை. உள்ள நிதியும் தேவை இல்லாப் போராட்டங்களுக்கே செலவிடப்படுகின்றது. தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி நோய்க்கால உதவி, நோயுற்றோரின் குடும்பத்தாருக்கு உதவி, கல்வி மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் முதலியவற்றில் ஈடுபடுவதில்லை. எனவே, தொழிற்சங்கங்களின் மூலம், தொழிலாளர்களுக்குத் தொடர்ந்த உதவிகள் பல கிட்டுவதில்லை. போராட்டங்களுக்குத் தான் உதவிகள் கிடைக்கின்றன.

கடைசியாக, தொழிற்சங்க இயக்கம், நம் நாட்டுத் தொழிலாளர்களின் இயற்கையான குணங்களினாலும் பெரிதும் அல்லலுறுகின்றது. எடுத்துக்காட்டாக, நமது தொழிலாளர்களின் அறியாமை, கல்லாமை, அவர்களது இடம் பெயரும் தன்மை, மொழி, மத, சாதி, பழக்க வழக்க வேறுபாடுகள், குறைந்த ஊதியம் மற்றும் தொழிற்சங்கச் சந்தா செலுத்த இயலாமை முதலியன யாவும் தொழிற்சங்கங்கள் திறமையுடன் இயங்குவதைப் மிகவும் பாதிக்கின்றன.

தொழிலாளர் நலம் வளர வேண்டுமானால், மேற்சொன்ன குறைகள் நீக்கப்படுதல் வேண்டும். சங்கங்களின் மூலம் தான்,

தொழிலாளர்கள் கூட்டாகப் பேரம் பேசித் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். தொழிலாளர் நலன்களைக் காக்கவும், தொழில் உற்பத்தியினைப் பெருக்கவும், வலுவான தொழிற்சங்கம் தேவையாகும். விவசாயத்தைப் பேரளவில் நம்பிக் கொண்டிருக்கும் நம்நாட்டில் பொருளாதார முன்னேற்றம், தொழில் வளர்ச்சியிலும், விவசாயத்தை அண்டியிருக்கும் தொழிலாளர்கள் மற்ற தொழில்களுக்குச் செல்வதிலும்தான் உள்ளது. அவ்வாறு பிற தொழில்களில் குறிப்பாக ஆலைத் தொழிலில் தொழிலாளர்கள் ஈடுபட, அத்தொழிலில் தொழிலாளர்களுக்கு நாட்டம் ஏற்படும் வண்ணம், அவர்களை ஈர்க்கும் வகையில் நிலைமை அமைத்தல் வேண்டும். இச் சூழ்நிலையைத் தொழிற்சங்கங்கள்தான் அமைத்துத் தரமுடியும். தொழிற்சங்கங்களிடையே ஒற்றுமை தேவை. அரசியல் தலையீடு ஒழிக்கப்பட்டு, புதிய தலைவர்கள் தொழிலாளி வர்த்தகத்திலிருந்து தோன்ற வேண்டும். தங்கள் கடமையினை உணர்ந்து, தொழிற்சங்கங்களின் அவசியத்தினையும் பணியினையும் அறிந்து, தொழிற்சங்கத் தலைவர்கள் பாடு பட்டால் தொழிலாளர்கள் புதிய வாழ்வினைக் காணலாம்.

தொழிலாளர்களுக்கான சட்டங்கள்

தொழிலாளர்களின் நலம் பேணி, தொழிலில் வளர்ச்சி காண்பதில், தொழிற்சங்கங்களின் பணி ஐயத்திற்கப்பாற்பட்டது. தொழிலாளர்கள் உழைப்பதற்கேற்ற சூழ்நிலையினைத் தொழிற் சங்கங்கள் போராடிய பின்தான் பெற்றுள்ளன. அதனால், தொழிலாளர்களின் உழைப்புத் திறன் அதிகரித்துத் தொழில் உற்பத்தியும் பெருகியுள்ளது. தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியத்தினைக் கோரிப் பெற்று அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அதன்மூலம் அவர்கள் உழைப்புத் திறனில் வளர்ச்சி காண்பதிலும் தொழிற்சங்கங்கள் வெற்றி கண்டுள்ளன. நம் நாட்டுத் தொழிலாளர்களின் இடம் பெயரும் தன்மைக்கான காரணங்களை அகற்றி நிலையான தொழிலாளர் படையினைத் தொழில்களுக்கு அளித்ததன் மூலமும், தொழிற்சங்கங்கள் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன. ஆயினும், தொழிற்சங்கங்களே, தொழிலாளர்களின் எல்லாக் குறைகளையும் போக்கி விட இயலாது. அரசாங்கமும் தொழிலாளர் நலன்களுக்கெனப் புரியும் உணர்ச்சியைக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான், சட்டங்களின் மூலமான பாதுகாப்புத் தொழிலாளர்களுக்குக் கிட்டும். தொழிலாளர் சட்டங்கள் பல நம் நாட்டில் இயற்றப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்க சில சட்டங்களைப் பார்ப்போம்.

தொழிலகத் தகராறுகள் வட்டம்

'இந்தியாவில் உள்ள தொழிலியல் உறவுகளில் சீர் செய்யப் பெற்ற நிறுவன அமைப்பு அவசியம் இருக்க வேண்டும்' என்பதை அடுத்தடுத்துத் தோன்றிய வேலை நிறுத்தங்கள் மெய்ப்பித்திருக் கின்றன. இந்தியாவில் 1947ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட தொழில் தகராறுகளின் எண்ணிக்கையைக் கீழே அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 71

தொழில் தகராறுகள்

ஆண்டு	தகராறுகளின் எண்ணிக்கை	ஈடுபட்ட தொழிலாளர் தொகை (இலட்சங்களில்)	இழந்த வேலை நாட்கள் இட்சங்களில்
1947	1811	18	166
1951	1071	7	38
1961	1357	5	49
1965	1835	10	65
1967	2815	14.9	171

தொழிலியல் தகராறுகளுக்கான காரணங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், தொழிலாளர் பற்றி இராயல் கமிஷன் பின் வருமாறு கண்டறிந்துள்ளது. ஊதியம் அல்லது போனஸ் பெறும் கோரிக்கைகளை முன் வைத்த தகராறுகள், தனிப்பட்ட நபர் அல்லது நபர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்வது அல்லது விடுமுறையைக் காரணமாக வைத்த தகராறுகள் மற்றும் தெளிவாக வரையறுத்துக்கூற இயலாத காரணங்களைக் கொண்ட தகராறுகள். இத்தகராறுகளைத் தடுக்க மற்றும் தீர்த்து வைக்க. பணிக்குழுக்கள் (Works Committees) நியமிக்கப்பட்டுள்ளன. சட்ட முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1929ஆம் ஆண்டுத் தொழில் தகராறுகள் சட்டம் (The Trade Disputes Act of 1929) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் தொழில் தகராறு களுடன் தொடர்புடைய எந்தச் சிக்கலையும் ஒரு விசாரணை மன்றத்திடம் ஒப்பிவிக்க வேண்டும், அல்லது அந்தச் சிக்கலை ஒரு சமரச மன்றத்திடம் தீர்ப்புக்கு விடவேண்டும்; ஒரு தகராற்றைப் பொறுத்தமட்டில் இருதரப்பினரும் விண்ணப்பித்துக் கொண்

டால், இத்தகைய நடவடிக்கையே மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான, அதிகாரங்களைத் தல அரசுகளுக்கும் (Local Governments) மத்திய அரசுக்கும் வழங்கியது. விசாரணைமன்றம், சமரச மன்றம் (Board of Conciliation) ஆகிய மன்றங்களின் உறுப்பினர்கள் 'யார் யார் இருத்தல் வேண்டும்' என்பதனையும் இச்சட்டம் கூறியுள்ளது.

1947ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம், தொழில் தகராறுகள் சட்டம் 1929-ஐத் தொழிலகத் தகராறுகள் சட்டம், 1947 (Industrial Disputes Act 1947) மூலம் மாற்றியமைத்தது. சட்டம் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியாக அமுலாகவும் வகை செய்துள்ளது. தொழில் தகராறுகள் ஏற்படா வண்ணம் தடுக்கவும், ஏற்பட்டால் தீர்த்து வைக்கவும் ஆகிய இருகாரியங்களுக்கும் ஏற்ற அமைப்பை நிறுவுவதற்கு இச்சட்டம் அனுமதியளிக்கிறது. மத்திய அரசாயினும் சரி மாநில அரசாயினும் சரி, அதன் ஆட்சி எல்லைக்குள் அடங்கிய எல்லாத் தொழிலக நிறுவனங்களும், அவை 100-க்கு மேற்பட்ட நபர்களை வேலைக்கு அமர்த்தியிருந்தால் பணிக்குழுக்கள் அமைத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தும் அதிகாரத்தைப் பெற்றன. அன்றாட வேலை முறையில், தொழிலாளர் முதலாளிகளிடையே ஏற்படும் மனக்கசப்புக்குரிய காரணங்களை நீக்க உதவும் வகையில், இரு சாராரும் சமமான பிரதிநிதித்துவம் பெறும் முறையில் இப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னர், தொழிலாளர் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு தகராறுகள் ஏற்படாமல் தடுக்கும் ஒரு வகை அமைப்பாக இது விளங்கியது. அப்படியும் தகராறுகள் ஏற்பட்டு விட்டால் அவற்றைத் தீர்ப்பதற்காக மத்தியஸ்த அதிகாரிகளையும் நடுவர் கழகங்களையும், விசாரணை மன்றங்களையும், தொழிலகத் தீர்ப்பு மன்றங்களையும் (Industrial Tribunals) நியமிப்பதற்கும் இச்சட்டம் வகை செய்துள்ளது. 1950ஆம் ஆண்டு இச்சட்டம் திருத்தப்பட்டு, தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்காக மத்திய மாநில அரசுகளால் நியமிக்கப்பட்ட தொழிலகத் தீர்ப்பு மன்றங்கள் சட்ட பூர்வமாக அமைந்த இதர குழுக்கள் ஆகியவற்றின் முடிவுகளுக்கோ, தீர்ப்புகளுக்கோ மாறாக எழும் மேல் முறையீடுகளை (Appeals) விசாரிப்பதற்காகத் தொழிலாளர் மேல் முறையீட்டு மன்றங்களை (Labour Appellate Tribunals) நிறுவுவதற்கு வகை செய்யப் பெற்றது. 1953ஆம் ஆண்டு இச்சட்டம் மீண்டும் திருத்தப்பட்டது. தீர்ப்புக்கோ மத்தியஸ்தத்திற்கோ விடுவதில் உள்ள இடர்ப்பாடான நடைமுறைகளை இத்திருத்தச் சட்டம் எளிதாக்கியது. தொழிலாளர், மேல்

முறையீட்டு மன்றத்தையும் கலைத்து விட்டது. அதற்குப்பதிலாக, ஒரு தொழிலாளர் விசாரணைமன்றம், தனிப்பட்ட வழக்கு மன்றம் தேசீய வழக்கு மன்றம் கூடிய மூன்றடுக்கு அமைப்பு ஏற்படுத்தப் பட்டது.

குறைந்த பட்சக் கூலி

நிர்ணய சட்டம் : சில நாடுகளில், சமீப ஆண்டுகளில் கூட்டுப் பேர முறையுடன் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்கும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதுபோன்ற சட்டங்களை இங்கு இயற்ற வேண்டுமெனப் பல மாநிலங்களில் பிரேரபணைகள் கொணரப்பட்டுள்ளன. இது குறித்துக் கான்பூர் தொழிலாளர் விசாரணைக்குழு, மாதம் ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்தது. தொழிலாளர் பற்றிய இராயல் கமிஷன் சில குறிப்பிட்ட வகையைச் சார்ந்த ஒழுங்குபடுத்தப்படாத ஆலைகள், தொழிற் சாலைகளுக்குப் பொருந்தும் வகையில் சட்டபூர்வமான குறைந்த பட்சக் கூலி நிர்ணயக் குழு ஒன்றை அமைக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்தது. ஆயினும், ''சறுக்குவீதக் கூலி'' அளவுகளையோ (Sliding Scale) அல்லது குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தையோ ஏற்றுக்கொள்ள இருப்பதாக இந்திய முதலாளிகள் ஒருபோதும் தெரிவிக்கவில்லை. குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பதோ அல்லது சறுக்கு வீதக்கூலியை வற்புறுத்துவதோ தொழிலை மிகவும் பாதிக்கக்கூடும் என முதலாளிகள் விவாதித்தனர். 1928ஆம் ஆண்டு சர்வதேசத் தொழிலாளர் மாநாடு ஒரு மரபை மேற் கொண்டது. இதில் பங்கு கொண்ட மாநிலங்கள், மிகக்குறைவான கூலி விகிதங்கள் அளித்து வந்த கூட்டமைப்புடன் அமையாத சில வகைத் தொழில்களில் குறைந்த பட்சக் கூலி விகிதங்களை நிர்ண யிக்க ஒப்புக் கொண்டன. குறைந்த பட்சக் கூலி நிர்ணயிப்பிற் கான இந்தப் பின்னணியில்தான் 1945–ம் ஆண்டு முக்கூட்டுத் தொழிலாளர் மாநாடு நடைபெற்றது. 1956–ல் மசோதா ஒன்றும் கொணரப்பட்டது. நாட்டுப்பிரிவினை காரணமாகப் பல அரசியல் சட்ட மாறுதல்களைச் செய்ய வேண்டி இருந்ததால் அது சட்டமாகாமலே தாமதத்திற்குள்ளாகியது. கடைசியாக இந்தியச் சட்ட முறையின் புதிய மைல் கல்லாக விளங்கும் குறைந்த பட்சக் கூலிகள் சட்டம் மத்திய சட்டசபையில் 1948-ல் நிறைவேறிற்று.

ஜம்மு, காஷ்மீர் தவிர, இதர இந்திய மாகாணங்கள் அனைத்தும் இச்சட்டவரம்பிற்குள் அடங்கியுள்ளன. இச்சட்டத்தின் பின்னிணைப்பாகத் தொகுக்கப்பட்டுள்ள தொழில்கள் அனைத்

திற்கும் இச்சட்டம் பொருந்தும். மத்திய மாநில அரசுகள் இப்பட்டியலை விரிவாக்கிக் கொள்ள உரிமை உண்டு. முதலில் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி விகிதங்கள், ஐந்தாண்டுக்கு மேற்படாத காலங்களில் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

குறிக்கப்பட்ட தொழில்களில் வேலை பார்க்கும் தொழிலாளிக்கு என வரையறுத்து நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலி விகிதத்திற்குக் குறையாத அளவில் ஒவ்வொருவருக்கும் முதலாளி கூலி அளிக்க வேண்டுமெனச் சட்டமியற்றப்பட்டது. குறைந்த பட்சக் கூலி நிர்ணயிப்பதற்கான அந்தந்த அரசாங்கங்கள் தமது அரசிதழின் மூலம் தனிப்பட்ட குழுக்களை நியமிக்க வேண்டும். அந்தக் குழுக்களின் ஆலோசனைகளின் மேலோ, பிரேரணைகள் அடிப்படையிலோ குறைந்த பட்சக் கூலிகளை அவ்வரசாங்கங்கள் நிர்ணயிக்க வேண்டும். இதற்காக ஒரு தனிப்பட்ட மத்திய ஆலோசனைக் குழுவை மத்திய அரசாங்கம் இச்சட்டப்படி நிறுவ வேண்டும். குறைந்த பட்சக் கூலிகளை நிர்ணயிப்பது, திருத்தி அமைப்பது பற்றி ஆலோசனை கூறுவதும் மாநில ஆலோசனைக் குழுக்களின் நடவடிக்கைகளோடு இணைந்து இயங்குவதும் மத்திய ஆலோசனைக் குழுவின் செயல் முறைகளாகும்.

தொழிற்கூடச் சட்டங்கள்

கடந்த நூற்றுண்டின் பிற்பகுதியில்தான் இந்தியாவில் பஞ்சு ஆலைகள் நிறுவப்பட்டன. இவ்வாலைகளில் பெண்களையும் குழந்தைகளையும் வேலைக்கமர்த்திக் கொண்ட முறையும் நிலைமைகளும் நாளடைவில் பொதுமக்களது கவனத்தைத் திருப்பின. இந்திய அரசாங்கம் 1881ஆம் ஆண்டு முதல் ஆலைகளுக்கான சட்டம் இயற்றித் தொழிலாளர்களது நலம், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு வசதி செய்கிறது. குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது பற்றியும், பெண்களை வேலையில் அமர்த்திக்கொள்வதில் எவ்வித ஒழுங்கு முறையும் இல்லாமல் அதிருப்திநிலை ஏற்பட்டதால் மீண்டும் கிளர்ச்சி தலையெடுத்தது. இதற்கேற்ப இச்சட்டம், 1891, 1911, 1922, 1934 மற்றும் 1948-ல் திருத்தியமைக்கப்பட்டது. இறுதியாக 1948-ல் நிறைவேற்றப்பட்ட சட்டம் அதுவரை நடைமுறையில் இருந்த சட்டங்களைத் திருத்தியமைத்தது. இச்சட்டத்தின் நோக்கம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைக் கொண்டு மின்சக்தியால் இயக்கப்படும் தொழிற்சாலைகளுக்கும் அவ்வித மின்சக்தியில்லாமல் 20 அல்லது அதற்கும் மேற்பட்ட வேலையாட்களைக் கொண்ட தொழிற்சாலைகளைக் கட்டுப்படுத்துவதே. இச்சட்டம் தொழிற்சாலைகளில் உள்ள கழிவுப்பொருள்களையும் வடிகால்களையும் நீக்கிச் செம்மைப் படுத்துதல், தூசி

புகை முதலியவற்றைப் போக்கும் சாதனங்களை அமைத்தல், வெப்ப நிலையைச் சமப்படுத்திக் கோடைக் காலங்களில் குளிர் நீர் வழங்க வகை செய்தல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இச் சட்டம் அமலுக்கு வந்த பின்னர் நிறுவப்படும் ஆலைகளில் ஒரு நபருக்கு 500 கன அடி வீதம் குறைந்த பட்ச இடவசதி இருக்க வேண்டுமென நிர்ணயித்தது. அபாயகரமான இயந்திரங்கள், அபாயமான புகைகள், வெடிமருந்துகள் ஆகியவற்றிலிருந்து பாது காப்பு அளிப்பதற்கு மேற்குறித்த சட்டம் வகை செய்திருக்கிறது. மேலும், துணி துவைக்குமிடங்கள், முதல்உதவி மருந்துகள், சிற்றுண்டிச்சாலைகள், ஓய்விடங்கள், வேலைபார்ப்போரின் சிசுக் களுக்காகப் பராமரிப்புச் சாலை முதலிய வசதிகளை ஏற்படுத்துவதற் கும் இச்சட்டம் இடம் அளிக்கிறது. இவை தவிர, 1934ஆம் ஆண்டின் ஆலைச்சட்டப்படி, இளைஞர்கள் வேலை பெறுவதற்கான உயர்ந்த பட்ச வயது வரம்பு 18 ஆக உயர்த்தியது இதில் அடங் கும். வேலை நேரங்கள், ஊதியத்துடன் விடுமுறை அளித்தல், தொழில்துறை வியாதிகள் ஆகியன குறித்தும் சட்டத்தில் ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டன.

தோட்டத்தொழிலாளர் சட்டம்

இந்தியாவில் கட்டமைப்புடன் நிறுவப்பெற்ற ஆரம்பக் காலத் தொழில்களில் ஒன்றாக விளங்குவது தோட்டத் தொழில். இத் தொழிலில் ஈடுபட்டுள்ள, முதலாளிகள் தொழிலாளிகளிடையே உள்ள உறவை ஒழுங்கு படுத்துவதற்காகச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தோட்டத்தொழிலாளர் சட்டம், 1951 தோட்டத்தொழிலாளர்களின் வேலை நிலைமைகள், வேலையளித்தல் முதலியவற்றை முதன் முதலில் ஒழுங்கு செய்தது. மத்திய அரசாங்கத்தின் இசைவுடன் இச்சட்டம், தேயிலை, காப்பி, இரப்பர், கொயினா முதலிய தோட்டத்தொழில்களுக்கே செல்லு படியானாலும், இச்சட்ட விதிகளை இதர தோட்டத்தொழில்களுக் கும் விரிவாக்கும் அதிகாரம் மாநில அரசாங்கங்களுக்கு அளிக்கப் பட்டிருந்தது. வேலை நேரங்களை நிர்ணயம் செய்தது. இச்சட்டப் படி எல்லாத் தோட்டங்களும், தம்மிடம் வேலைபார்க்கும் தொழி லாளர்களுக்கும், அவர்கள் குடும்பங்கட்கும் உரிய வீட்டு வசதிகளை அளிப்பதுடன், மருத்துவ, மருந்தக வசதிகளுக்கும் ஆவன செய்ய வேண்டும்.

இந்தியச் சுரங்கங்கள் சட்டம்

முதலாவது இந்தியச் சுரங்கங்கள் சட்டம் 1901-ல் நிறை வேற்றப்பட்டது. பின்னர் இது 1923 1935, 1937 மற்றும் 1952ஆம் ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. 1952ஆம்

ஆண்டுச் சுரங்கச் சட்டம், தரைமட்டத்திலும் சுரங்கத்திலும் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் வேலை நேரத்தை 48 மணியாகக் குறைத்ததுடன், தரை மட்டத்தில் ஒருநாளைக்கு 9 மணிக்கு மேலும், சுரங்கத்தில் ஒரு நாளைக்கு 8 மணிக்கு மேலும் வேலை செய்ய அனுமதிக்கக்கூடாது என்றும் விதித்தது. இச்சட்டம் இளைஞர்கள் வேலைபார்க்கும் வயதை 17லிருந்து 18ஆக உயர்த்தியதுடன், 'சுரங்கத்திற்குள் வேலை பார்க்கும் தகுதியுண்டா?' என மருத்துவச் சோதனை செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தியது. குடி தண்ணீர், கழிப்பறைகள், சிறுநீர்ப்புரைகள், முதலுதவி முதலியவற்றிற்கான அந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தியது. குடி தண்ணீர், கழிப்பறைகள், சிறு நீர்ப்புரைகள், முதலுதவி முதலியவற்றிற்கான தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்றும் கட்டாயப்படுத்துகிறது. இச்சட்டம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு அளிக்க வேண்டும் என்றும், நிரந்தர வேலையாட்களுக்கு ஆண்டிற்கு 14 நாட்களுக்கு முழுச் சம்பளத்துடன் விடுமுறை அளிக்க வேண்டுமென்றும் நிர்ணயித்திருக்கிறது.

தொழிலாளர் நலச்சட்டங்கள்

தொழிலாளர் நலம், தொழிலாளர்களின் உழைப்புத்திறனை உயர்த்துகிறது என்று முன்பே கூறினோம். தேசிய அரசாங்கம் ஏற்படுவதற்கு முன்னரே, இரயில்வேக்கள், டாடா இரும்பு எஃகுக் கம்பெனி, சென்னையில் உள்ள பக்கிங்காம் ஆலை, நாகபுரியில் உள்ள எம்பிரஸ் ஆலை முதலியன தம்மிடம் வேலைபார்க்கும் தொழிலாளர் நலம் பற்றிய நடவடிக்கைகளை அனுபவம் பெற்ற சேம நல அதிகாரங்களைக் கொண்டு செயற்படுத்தி வந்தன. இந்திய மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பின்னர், தொழிலாளர் சேமநல நிதியினை அரசாங்கம் ஒதுக்கத் தொடங்கியது. தொழிற்சாலைச்சட்டம் 1948 சுரங்கச் சட்டம் 1952, தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951 போன்றவற்றில், தொழிலாளர் நலன்களுக்கான விதிமுறைகள் புகுத்தப்பட்டன. விடுதலை பெற்ற பின்னர், ஆக்க நல அரசை (Welfare-State) அடிப்படை நோக்காகக் கொண்டு இந்தியக் குடியரசு அமைக்கப்பட்ட பின்னர், இத்தகைய சேமநல முயற்சிகள் விரிவடைந்து வருகின்றன. தொழிலாளர்களின் உடல் நலனைக் கருதிக் கொண்டு வரப்பட்ட வேலையாட்களின் மாநிலப் பாதுகாப்புறுதிக் கூட்டு மசோதா, 1948ஆம் ஆண்டு வேலையாட்களின் மாநிலப் பாதுகாப்புறுதிக் கூட்டுச் சட்டமாக (Employee's State Insurance Act) அமலுக்கு வந்தது. ரூபாய் 500 வரை மாதச்சம்பளமோ, கூலியோ பெறும் வேலையாட்களுக்காக இது நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டப்படி சரி

வர நடத்திக் கொடுக்க அரசினர் ஆணை பெற்ற ஒருகுழு அமைக்கப் பட்டுள்ளது. இதன் பெயர் வேலையாட்களுக்கான மாநிலப் பாது காப்புறுதிக் கூட்டு நிறுவனம் ஆகும் (Employee's State Insurance Corporation). இவ்வமைப்பு அரசினர், வேலைகொடுப்போர், தொழி லாளர் பிரதிநிதி ஆகியோர் மூவரும் அடங்கியதாகும். உதவித் தொகையின் மூலம் இது நடத்தப்பட்டு வருகிறது. திறக்கப்பட்ட முதல் ஐந்தாண்டுகளுக்குள் ஏற்பட்ட செலவில் 2/3 பங்கை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இத்திட்டத்தில் அளிக்கப் படும் வசதிகளாவன: 1. வியாதிக் காலத்தில் வசதி 2. பிள்ளைப் பேற்றின் போது உதவி 3. உடலின் ஊனத்திற்காக உதவி 4. இவரது ஆதரவில் இருப்பவர்களுக்கான வசதி 5. மருத்துவ வசதி குறிப்பிட்ட சில இடங்களில் தொடங்கித் தற்போது இத் திட்டம் தொழிற்சாலைகள் உள்ள நகரங்கள் எல்லாவற்றிலும் அநேகமாகச் செயல்பட்டு வருகின்றது.

வேலையாட்களின் விபத்துதவி சட்டம்

வேலை பார்க்கையில் விபத்து, மரணம் அல்லது குறிப்பிட்ட வேலையின் பயனாக வியாதி என்பது இன்று தொழிற்சாலைகளில் (சாதாரணமான) ஒன்றாக இருந்து வருகின்றது. விபத்தின் போது வேலையாட்களுக்கு, உழைப்புச் சக்தியைப் பாதிக்கும் வண்ணம் காயங்களோ அன்றி மரணமோ ஏற்படுமானால், வேலை யாட்களின் குடும்பம் அல்லலுற நேர்கின்றது. விபத்துகள், தொழிலுக்குத் தொழில் மாறுபட்ட தன்மை உடையனவாக உள்ளன. முதலாளி அல்லது மேலாண்மையினர் விபத்துகளுக்கு நேரிடைப் பொறுப்பாக மாட்டார். ஆயினும், மனிதாபிமானத் துடன் இப்பிரச்சினையை அணுகவேண்டும். பெரும்பாலான விபத்துகள், வெளியாரின் கவனத்திற்கு, அரசினரின் கவனத் திற்குக் கொண்டு வரப்படாமலேயே மறைக்கப்பட்டு விடு கின்றன. இதனைப் போக்க, தொழிலாளிக்கு விபத்துதவிப் பாது காப்பு அளிக்க, 1923ஆம் ஆண்டு வேலையாட்களின் விபத்து தனிச் (பாதுகாப்பு) சட்டம் (Workmen's Compensation Act, 1923) இயற்றப்பட்டது. இச்சட்டம் பன்னாட்டுத் தொழிலாளர் சங்க அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க, 1926, 1929ஆம் ஆண்டு களில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. தற்போது இச்சட்டத்தின் அம்சங்கள் தொழிலாளர் மாநிலப் பாதுகாப்புத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு ஒரு சிறந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டு வரு கின்றது. தொழிலாளர் மாநிலப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறை வேற்றப்படாத இடங்களில் இச்சட்டம் அமுலில் இருக்கும்.

இச்சட்டத்தின் நோக்கம், முதலாளிகளை விபத்துதவிப் பணம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்துவதே ஆகும். இவ்விபத்துதவிப்

பெறுவதற்குத் தொழிலாளி வேலையில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்பட்ட விபத்தாக இருக்கவேண்டும். மரணமோ அல்லது பாதி ஊனமோ ஏற்பட்டால் உதவி கிடைக்கும். மரணமாக இருப்பின், இறந்தவரின் குடும்பமும், ஊனமாக இருப்பின் ஊனமுற்றோரும், ஈடுகொடுக்கும் விபத்துதவிப் பணம் பெறுவார்கள். மரணமாய் இருப்பின் விபத்துதவிப் பணம் ரூபாய் 1000 லிருந்து 10,000 வரை இறந்தவரின் வருமான அடிப்படையில் அளிக்கப்படும். முழு ஊனமுற்றோர்களின் குறைந்த விபத்துதவிப் பணம் ரூபாய் 1400 ஆகவும், உயர்ந்த பட்ச உதவிப்பணம் ரூபாய் 14,000 ஆகவும் இருக்கும். ஓரளவு ஊனமுற்றோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் அரை மாதச் சம்பளத்தைத் தொடர்ந்து பெற வகை உண்டு. இச் சட்டம் எல்லா வகைத் தொழிற்சாலைகளிலும் ரூ. 500க்கு மேற்படாத மாதச் சம்பளம் வாங்குவோருக்குப் பொருந்தும். ஜம்மு, காஷ்மீர் தவிர, இந்தியாவின் இதர பாகங்களில் இச்சட்டம் அமுலில் இருக்கும். இச்சட்டத்தினை அமுல் செய்வதற்குக் கமிஷனர்கள் மாநிலந்தோறும் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். தொழிற்கூட ஆய்வாளர்கள் விபத்து உதவிப்பணம் அளிக்கப்படுகின்றதா என்பதனைப் பார்வையிடுவர். 'இச்சட்டம் திறம்பட இயக்கப்படவில்லை' என்று கூறப்படுகிறது. சிறிய ஆலைகளில் ஏற்படும் விபத்துக்கள் அறிவிக்கப்படுவதில்லை. பெரும்பாலான, வேலையாட்களுக்கு இச்சட்டம் இருப்பதே தெரியாது. முதலாளிகளும், சட்டப்படி விபத்துதவிப்பணம் கொடுக்காது, வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்று அச்சுறுத்தி, ஓரளவிற்கு மருத்துவ உதவிப்பணம் மட்டுமே அளிக்கின்றனர். உயிரிழந்த வேலையாட்களின் குடும்பத்தினர் கிராமங்களில் வசிப்பதால், அவர்கள் தங்களுடைய கல்வியறிவின்மையாலும் பிற தொல்லைகள் காரணமாகவும் இச்சட்டத்தின்படி பணம் பெற முடிவதில்லை. இச்சட்டத்தின் விதிகள் தொழிற் கூடங்களில், மாநில மொழிகளில் அறிவிப்புப் பலகையில் எழுதுவதன் மூலமும் தொழிற் சங்கங்கள் விளம்பரம் செய்வதன் மூலமும் இக்குறையினை ஓரளவிற்காவது நீக்கமுடியும்.

இவை தவிர, இன்னும் பல சட்டங்களும் தொழிலாளர் நலன், பாதுகாப்பு, தொழிற்சாலைகள் விதிமுறைகள் குறித்து இயற்றப்பட்டுள்ளன. ஆயினும், சட்ட ரீதியாக மட்டும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பும் நலனும் அளித்துவிட இயலாது. நமது நாடு பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியுள்ள நாடு. வேலையில்லாத் திண்டாட்டம் நடத்துவது சரியா என்றும் சிலர் வாதிக்கலாம். ஆயினும், தொழிலாளர்கள் என்று தனியான வர்க்கம் ஏதும் கிடையாது. மக்கள் யாவருமே தொழிலாளிகள்தான்.

ஏதோ ஒரு தொழிலை எல்லோரும் செய்து வருகின்றனர். தரத்தில் வேண்டுமானால் மாறுதல்கள் இருக்கலாம். ஆனால், உழைக்காமல் யாரும் உண்பதில்லை (ஒரு சிலர் இருக்கலாம்). உழைப்பினால் தான் உற்பத்தி பெருகுகின்றது. உற்பத்தி பெருகினால்தான் நாட்டு வளம் பெருகி, மக்கள் வாழ்க்கைத்தரம் உயர முடியும். எனவே, தொழிலாளர் நலன், சட்டப் பாதுகாப்பு என்பன, உழைப்பினைப் போற்றும் முறையாகும். அதன் பலனை உழைப்பாளிகளான (தொழிலாளிகளான) மக்கள் யாவருமே பெறுகின்றனர். குறை நீக்கித் தொழிலாளர் நலன் பெருக்குவது அரசின் கடமையாகும்.

BIBLIOGRAPHY

1. Higgins : Economic Development
2. Agarwal and Singh : Approaches to the Problems of Under-development
3. Myrdal : Asian Drama
4. United Nations : 1. Measures for the Economic Development of under-developed countries.
   2. World Economic Survey
   3. Statistical Year Book, 1969.
5. D. R. Gadgil : The Industrial Evolution of India
6. Jawaharlal Nehru : Discovery of India
7. Reddaway : The Development of the Indian Economy
8. Planning Commission : The First Five Year Plan
   The Second Five Year Plan
   The Third Five Year Plan
   The Fourth Five Year Plan
9. Lewis, A : Theory of Economic Growth
10. Hirschman, A. O. : The Strategy of Economic Development
11. Cairncross, A. K. : Factors in Economic Development
12. First Report of the National Income Committee, April 1951.
13. Final Report of the National Income Committee, Feb. 1954.
14. S. N. Agarwala : India's Population
15. Census of India, 1961, Paper No . 1, 1962
16. Fact Book on Man power, prepared by the Institute of Applied Man power Research, New Delhi, 1968.

17. Chandrasekar, S : How India is tackling her population Problem, AICC Economic Review, January 26, 1969.

18. Nurkse. R : Problems of Capital Formation in under-developed Countries.

19. D. S. Nag : Problems of under-developed Economy.

20. Bauer and Yamey : The Economics of under-developed Countries.

21. Kuchhal, S. C. : Industrial Economy of India

22. Hazari, R. K. : Industrial Planning and Licensing Policy.

23. Govt. of India : Report of the Industrial Licensing Policy Inquiry Committee, July 1969.

24. Malen Baum, W : Prospects of Indian Economic Development

25. K. N. Raj : Indian Economic Growth

26. The Govt. of India : Economic Survey of 1970—71

27. Nanavathi & Anjaria : The Indian Rural Problems

28. Wadia & Merchant : Our Economic Problems

29. H. Venkatasubbiah : Indian Economy since Independence

30. Baljit Singh : Next step in Village India

31. S. K. Dey : Community Development of a bird's-eye-view

32. M. L. Dantwala : India's Food Problem

33. Venkatappiah Committee on Food Zones Policy

34. G. Rosen : Industrial change in India

35. Dhar and Lydall : The Role of Small Enterprises

36. Dhar, P. N. : Small scale Industries

37. V. V. Giri : Labour Problems in Indian Industry

38. S. D. Punekar : Trade Unionism in India
39. V. B. Singh : Industrial Labour in India
40. Dr. V.K.R.V. Rao : Agricultural Labour in India
41. S. K. Srivastava : Transport Development in India
42. Manmohan Singh : India's Export trends
43. S. K. Verghese : India's foreign trade
44. Prof. M. Visvanathan : Economic History of India & U.K.
45. Elenar Hough : Co-operative Movement in India
46. Dr. Bright Singh : Economic Development

கலைச்சொற்கள்

(ஆங்கிலம் - தமிழ்)

A

Absentee land lord	—	தலத்திலில்லா நிலக் கிழார்
Agrarian revolution	—	விவசாயப் புரட்சி. வேளாண்மைப் புரட்சி
Agricultural depression	—	விவசாய மந்தம்
Agricultural produce	—	விவசாய விளையுள்
Agricultural holding	—	விவசாய நில உடைமைகள்
Agricultural, commercial	—	வாணிக விவசாயம்
Agricultural labourers	—	விவசாயத் தொழிலாளிகள்
Amount demanded	—	தேவை அளவு, தொகை
Arable land	—	சாகுபடி நிலம்
Artisan	—	கை வினைஞன்
Authorised capital	—	அனுமதித்த மூலதனம்

B

Balance of trade	—	வாணிபக் கொடுப்பல் நிலை
Balanced growth	—	சரிசம வளர்ச்சி
Balance of trades, favourable	—	சாதக வாணிக இருப்பு நிலை
Unfavourable		பாதக வாணிக இருப்பு நிலை
Balance of payments	—	அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
Barter	—	பண்ட மாற்று
Base year	—	அடிப்படை ஆண்டு
Boom	—	பொருளாதார வீக்கம்
Board of Directors	—	இயக்குநர் வாரியம்
Bonds	—	பத்திரங்கள்
Bounty	—	அரசாங்கக் கொடை
Boycott	—	புறக் கணிப்பு
By laws	—	துணை விதிகள்

C

Called up Capital	—	அழைத்த மூலதனம்
Capital	—	முதல், மூலதனம்

Capital market — மூலதன மார்க்கட்டு
Capital formation — முதல் ஆக்கம்
Capital, subscribed — ஒப்பிய மூலதனம்
Capital, paip up — செலுத்திய மூலதனம்
Capital goods — முதற் கருவிப் பொருள்கள்
Capital, human — மனித முதல்
Capital, floating — சுழல் முதல்
Capital, nominal — பெயரளவு மூலதனம்
Capital, real — மெய்ம் முதல்
Capital, Social — சமுதாய முதல்
Capitalistic methods production — முதல்மய உற்பத்தி முறைகள்
Capital, out put ratio — முதல் உற்பத்தி விகிதம்
Collateral security — துணை ஈடு
Collective action — கூட்டுச் செயல்
Collective Bargaining — கூட்டுப் பேரம்
Communication — தொடர்பு வசதிகள்
Commercial policy — வாணிகக் கைக்கோள்
Commodities — பண்டங்கள்
Conciliation — சமரசம்
Conformity — உடன் பாடு
Consolidation — ஒருங்கிணைப்பு
Consolidation of holdings — நில உடைமை ஒருங்கிணைப்பு
Consumer — நுகர்வோர்
Concentration of industry — தொழில் குவிவு
Consumer's goods }
Consumption goods } — துய்ப்புப் பொருள்கள்
Co-operation — கூட்டுறவு
Co-operative Credit Society — கூட்டுறவுக் கடன் சங்கம்
Costs, of marketing — விற்பனைச் செலவுகள்
Cottage Industry — குடிசைத் தொழில்
Craft — கைவினைத் தொழில்
Cultivation, extensive — பரந்த வேளாண்மை
Cultivation, intensive — செறிந்த ,,

D

Dear money policy — அரும்பணக் கைக்கோள்
Debentures — கடன் பத்திரங்கள்

Depreciation	—	தேய்மானம்
Depreciation fund	—	தேய்மான ஈட்டு நிதி
Discriminating protection	—	தேர்ந்தளி தொழிற் காப்பு
Dividend	—	இலாப ஈவு
Dry land	—	புன்செய்
Dry farming	—	புன்செய்ப் பண்ணை

E

Economic development	—	பொருளாதார வளர்ச்சி
Economy, mixed	—	கலப்புப் பொருளாதாரம்
Economic structure	—	பொருளாதாரக் கட்டமைப்பு
Economiets	—	சிக்கனங்கள்
Economic inequality	—	பொருளாதார ஏற்றத் தாழ்வு
Economical	—	செட்டான, சிக்கனமான
Employer	—	வேலையளிப்போன்
Employee	—	வேலையாள்
Employment	—	வேலை, வேலைவாய்ப்பு
Employment, full	—	நிறைவுடை வேலை வாய்ப்பு
Employment, under	—	நிறையிலா வேலை வாய்ப்பு
Exchange account	—	நாணய மாற்றுக் கணக்கு
Exchange control	—	நாணய மாற்றுக் கட்டுப்பாடு
Exchange, foreign	—	அயல்நாட்டு நாணய மாற்று
External Economies	—	புறச் சிக்கனங்கள்

F

Factors of production	—	உற்பத்திக் காரணிகள்
Farm	—	பண்ணை
Farm out - put	—	பண்ணை உற்பத்தி
Factor cost	—	காரணிச் செலவு
Fiscal policy	—	அரசிறைக் கைக்கோள்

G

Gross National product	—	நாட்டின் மொத்த ஆக்கம்
Gross National income	—	நாட்டின் மொத்த வருமானம்

H

Handicraft	—	கைவினைத் தொழில்
Hoarding	—	குவிப்பு
Hours of work	—	உழைப்பு நேரம்

I

Immobility	—	இடம் பெயராமை
Immobility of labour	—	பாட்டாளி இடம் பெயராமை
Index numbers	—	குறியீட் டெண்கள்
Industry	—	தொழில்
Industrial location	—	தொழில் இடப்பாடு
Industry, localisation of	—	தொழில் ஓரிடப்பாடு
Industry, concentration of	—	தொழிற் குவிவு
Industrial centre	—	தொழில் மையம்
Industrial finance	—	தொழில் நிதியம்
Industrial monopolies	—	தொழில் முற்றுரிமைகள்
Industrialization	—	தொழில் மயமாக்கல்
Industry, large scale	—	பேரளவுத் தொழில்
Industry, small scale	—	சிற்றளவுத் தொழில்
Industry, medium scale	—	நடுத்தரத் தொழில்
Industry, heavy	}	கனரகத் தொழில் கனவினத் தொழில்
Industrial organisation	—	தொழிலமைப்பு
Inequality		ஏற்றத் தாழ்வு
Inequality of wages	—	கூலி ஏற்றத் தாழ்வு
Institutions	—	நிலையங்கள், நிறுவகங்கள்
Investment	—	முதலீடு
Invisible export	—	புலனாகா ஏற்றுமதி
,, import	—	,, இறக்குமதி

J

Joint stock Companies	—	கூட்டுப் பங்கு கம்பெனிகள்
Just price	—	நியாய விலை

K

Key Industry	—	ஆதாரத் தொழில், மூலத் தொழில்

L

Labourer	—	தொழிலாளி
Labour saving equipment	—	உழைப்புக் குறை தள வாடங்கள்
Labour legislation	—	தொழிலாளர் சட்டம்

Labour market	—	உழைப்புச் சந்தை
Labour movement	—	தொழிலாளர் இயக்கம்
Land lord	—	நிலக்கிழார்
Land revenue	—	நில வருவாய்
Liability	—	பொறுப்பு
Levy	—	வரி, வரி விதிப்பு
Licensing Acts		அனுமதிச் சட்டங்கள்
Limited Liability	—	வரையிட்ட பொறுப்பு
Loans	—	கடன்கள்

M

Manual labour	—	உடல் உழைப்பு
Mature economy	—	முதிர்ந்த பொருளாதாரம்
Minimum wages	—	குறைந்த பட்சக் கூலி
Monetary policy	—	பணவாக்கக் கைக்கோள்

N

National income	—	நாட்டு வருமானம்
National capital	—	நாட்டின் முதல்
Nationalizational	—	நாட்டுடைமையாக்கல்

O

Objective	—	குறிக்கோள்
Obsolete	—	வழக்கற்ற
Occupancy right	—	இருப்புரிமை
Optimum population	—	உத்தம மக்கள் தொகை
Over time	—	மிகை நேரம்
Over time wages	—	மிகை நேரக் கூலி

P

Paid-up capital	—	செலுத்திய முதல், செலுத்தப்பட்ட முதல்
Population	—	மக்கள் தொகை
,, Growth	—	மக்கள் தொகை வளர்ச்சி
Power-loom	—	விசைத் தறி
Prosperity	—	செழுமை, வளம்
Producers' goods	—	உற்பத்திக் கருவிப் பொருள்கள்

R

Rationalisation	—	(தொழில்) சீரமைப்பு
Reorganisation	—	திருத்தியமைத்தல்

Replacement cost — ஈடுசெய் செலவு
Rotation of crops — மாற்றுப் பயிர் முறை

S

Selective credit control — தேர்வுக் கடனளிப்புக் கட்டுப்பாடு
Shares — பங்குகள்
Share capital — பங்கு முதல்
Sinking Fund — கடன் கழிவு நிதி
Skilled worker — திறம்பெற்ற தொழிலாளி
Speculative motive — ஊக லாப நோக்கம்
Stabilization — நிலை பேருக்கம்
Stabilization of price — விலைவாசி நிலை பேருக்கம்
Strategy — தந்திரம்
Strucutre of Industry — தொழிலின் அமைப்பு
Subsistense wages — பிழைப்புக் கூலி
Subscribed capital — ஒப்பிய முதல்

T

Table — அட்டவணை
Technology — தொழில் நுண்ணியல்
Technological development — நுட்பத்தொழில் வளர்ச்சி
Trade — வர்த்தகம், வாணிபம், வணிகம்

U

Unemployment, technological— நுட்பத் தொழிலால் வேலையின்மை

V

Volume of out put — உற்பத்திப் பருமம்

W

Wage — கூலி
Worker — பாட்டாளி, உழைப்பாளி
Working capital — நடை முறை முதல்
Work, conditions of — வேலை நியதிகள்
Work house — தொழிலகம்
Workman's compensation — வேலையாள் நட்ட ஈடு